# அக்கரைப்பற்று வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏயாரெம் சலீம்
ARM. SALEEM

வகுப்பு எண்: இ954.93 வரவுப்பதிவு எண்: 26273

2510

## பொது நூலகம்

**சட்ட திட்டங்கள், விதி முறைகள் முழுவதும் அடங்கிய ஆவணங்களை பார்வைக்காக மட்டும் பெற்றுக் கொள்ளலாம்.**

இரவல் பெறுவோருக்கு இரு அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படும். இவற்றிற்கு ஒரு முறையில் இரண்டு புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

விலாசத்தில் ஏதும் மாற்றங்கள் ஏற்படின் ஒரு வாரத்துக்குள் அறியத்தரல் வேண்டும்.

இரவல் பெறும் புத்தங்கள் 14 தினங்களுக்குள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்கு மீள ஒப்படைக்கப்படாத புத்தங்களுக்கு கீழ் காணப்படும் முறையில் தண்டப் பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01 முதல் 30 நாட்கள் வரை | - | ஒரு நாளுக்கு ஒரு புத்தகத்திற்கு 25 சதம். |
| 31 முதல் 90 நாட்கள் வரை | - | ஒரு புத்தகத்திற்கு ரூபா. 20/= ப்படி. |
| 91 முதல் 180 நாட்கள் வரை | - | ஓர புத்தகத்திற்கு ரூபா. 30/= ப்படி. |
| 181 க்கு மேல் நாட்கள் வரை | - | ஒரு புத்தகத்திற்கு ரூபா. 50/= ப்படி. |

வேறு ஒருவரால் கோரப்படாதவிடத்து, இரவல் பெற்ற எந்தவொரு புத்தகத்தையும் நூலகரின் அனுமதியுடன் மேலும் 14 நாட்களுக்கோ அல்லது அதற்குக் குறைந்த காலத்துக்கோ காலக்கெடு பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு காலக்கெடு பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நூலை நூலகத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

இரவல் பெறுவோர் புத்தகங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இவற்றில் பக்கங்களை மடித்தல், பென்சில் போன்றவற்றால் குறியீடுகள் இடுதல் கூடாது. நூல்களைப் பெற முன்பு அவற்றிற்கு ஏதும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டு பிடித்து அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்காது குறைகளுடன் எடுத்துச் செல்லும் புத்தகங்களுக்கு இரவல் பெறுவோரே பொறுப்பாளியாவார். மாரி காலங்களில் புத்தகங்களை பாதுகாப்பாக எடுத்துச் … ருதல் வேண்டும்.

… ம் பகுதி புதன்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் மு. … பி. ப. 7.00 மணி வரை திறந்திருக்கும். அரச விடுமுறை … அதிகாரிகள் முடிவு செய்யும் எந்தவொரு தினத்திலும் … மூடப்படும்.

…4.93

இரவல் பெறுவோரால் எந்தவொரு புத்தகமும் வெறொருவருக்கும் கைமாற்றம் செய்யக் கூடாது. தொற்று நோயாளிகள் எவரும் புத்தகங்களை இரவல் பெறக் கூடாது. அவ்வாறானவர்களுக்கு எந்தவொரு நபரும் நூலகத்தின் எந்தவொரு புத்தகத்தையும் பாவிப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

ஏதும் ஒரு நூல் தொற்று நோய் பீடிக்கப்பட்ட ஒருவ… வனையில் இருந்ததெனத் தெரிந்தால் … ளூராட்சி அதிகாரிக்கு அறிவிக்கவும். உள்ளூராட்சி அதிகாரிகளால் அவை அழித்தொழிக்கப்படும். அவ்வாறு ஒழிக்கப்பட்டால், இரவல் பெற்றவர் புத்தகத்தின் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUBLIC LIBRARY

## LENDING LIBRARY

Please check the condition of the books you select and inform the Officer-in-charge if any pages or plates are missing or the books are otherwise damaged, before handing your tickets.

See Rules and Regulations. Extract on page opposite.

This book must be returned on or before the date marked below.

128 L.—

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

2142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கையி (ஸ்ரீ லங்காவி)ல் மக்கள் குடிவரவும்,


ளர்ச்சி வடிவங்களும்'' எனும் தொடரில் வெளியிடப் படும்-முதல் நூல் (1)

# அக்கரைப்பற்று வரலாறு

අක්කරපත්තු ඉතිහාසය

## HISTORY OF AKKARAIPATTU

C. M. C.
PUBLIC LIBRARY




ஏயாரெம் சலீம்

ARM. SALEEM

திரு பப்ளிகேஷன்ஸ்

அக்கரைப்பற்று - 02.

HIRAA PUBLICATIONS

AKKARAIPATTU - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று வரலாறு
Akkaraipattu Varalaaru
(A True History of Akkaraipattu)

நூலாசிரியர்: ஏயாரெம் சலீம்
Author: ARM. Saleem

முதல் பதிப்பு : 31.12.1990
First Edition:

வெளியீடு: ஹிறா பப்ளிகேஷன்ஸ்
Published By: Hiraa Publications

தலைமைச் செயலகம்: ''நஸ்லின் வில்லா''
21, மத்திய வீதி,
அக்கரைப்பற்று - 02.

Head-office: "Naslin Villa"
21, Central Road,
Akkaraipattu - 02.

அட்டை அமைப்பு: M.I. லியாக்கத் அலி
Cover Design: M.I. Liyagath ali

புகைப்படம்: வி.பி. சிவப்பிரகாசம்
photographs: V.P. Sivapiragasam

அச்சு: ஒப் செற் வடிவமைப்பு முறை
Print: offset Process

லிலக்ஸ் கிராபிக் மீடியா

Printed at:
Peacock Printers (Pvt) Ltd.
33, School Lane, Colombo 9.
Phone: 698975

வரைபடம்: ஏ.எல். முகைதீன்பாவா
(நில அளவையாளர்)

Plan : A.L. Mohideen Bawa (Surveyor)


உதவியாளர்கள்: செல்வி. பாத்திமா றெமீலா சுலைமான்
Assistants: Miss. Fathima Remeela Sulaiman
செல்வி. ஜெனோகிறேஸ் ஏன்ஜலினா
Miss. Jeno Grace Angelina
ஏ. சி. எம். பதுர்தீன்
A. C. M. Badurdeen
எம். எஸ். ஐ. சிறாஜுதீன்
M. S. I. Sirajudeen

பக்கங்கள் 328
படங்கள் 118
விலை ரூ 150/=

954.93
26273
2510

Copy- Right Reserved

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்றின் முதற்பள்ளி வாசல் இலுக்குப் புல்லால் வேயப்பட்டது. தற்போதைய எழில் தோற்றம் கீழே காண்பது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைவு

எனது மூத்த மச்சான்
அல்ஹாஜ். மௌலவி
செய்யது முஹம்மது இப்றாஹீம் (பாக்கவீ)
இப்னு
முஹ்யித்தீன் அப்துல்காதிர்
அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்புமிகு பிரதமராயிருக்கும் போது, தற்போதைய ஜனாதிபதி மேதகு ரணசிங்ஹ பிரேமதாஸ அவர்களுக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகிறார். முன்வரிசையில் ஜனாப் M.I. உதுமாலெப்பை MP, திருமதி ரங்க நாயகி பத்மநாதன். M. P, திரு. C. அம்பலச்சாமி M.P. ஜனாப் றிஸ்வி சின்னலெவ்வை M.P. - பின்வரிசையில் ஜனாப் M.I. அபூ அஸீஸ், அதிபர்



மாண்பு மிகு பிரதமர் 1988 ரணசிங்ஹ பிரேமதாஸ அவர்களை, மருத வெட்டுவான் மைதானத்தில் வரவேற்க, அக்கரைப்பற்று மத்திய கல்லூரி ''பேணட்'' வாத்தியக் குழுவினர் தயார் நிலையில் வைக்கப்படுகின்றனர். வலது பக்கத்தில் பொறுப்பாசிரியர் A.F ஷரிபுத்தீன் அவர்கள் காணப்படுகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ இராஜாங்க அமைச்சர்
அல்-ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர், எம்.பி
அவர்களின் அரசியல் வாழ்வுக்கு
அக்கரைப்பற்றுவின் பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ நான்கு தசாப்தங்களுக்கு முன் அக்கரைப்பற்றுவில் அந்த மாபெரும் சனத்திரள், அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் கூட்டம் என்பதாலும் தலைவர் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் (தற்காலம் தேசமான்யர் கலீல்) சமுகந் தருகிறார் என்பதாலும் ஒரு முக்கியத்துவம் பெற்றிருந்தது அது.

தலைவரவர்கள் ஆங்கிலத்திலேயே சரளமாகப் பேசிப்பழகியவர். அக்கரைப்பற்றுப் போன்ற ஊரில் முழுக்கவும் தமிழ் பேசுகின்ற மக்கள் மத்தியில் தம் கருத்துக்கள் தமிழிலேயே சென்றடைய வேண்டுமென்ற சிந்தனை வயப்பட்டவராகப் பயண ஒழுங்குகளை மேற்கொண்ட வண்ணமிருந்தார். மதிப்பிற்குரிய டாக்டர் கலீல் அவர்கள்.

அப்போது இளைஞரான முஸ்லிம் லீக் அபிமானி ஒருவர் அவர் நினைவில் வந்தார். அவரே ''அப் துல்ஹமீத் முஹம்மத் அஸ்வர் ஆவார். (இன்றைய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்)

அவரோ அச்சமயம் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கற் ஆட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். அவர் அங்கிருப்பதை டாக்டர் அவர்கள் அறிய வந்ததும் தமது பழைய ஹம்பர்காரில் மைதானம் நோக்கி விரைந்தார். அவரைக் கண்டு அப்படியே ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

கூட்டம் ஆரம்பித்தது. பெரும் அறிஞர்கள், ஆசிரியர் மணிகள், பிரமுகர்கள், போடிமார், உலமாக்கள் மற்றும் சாமானியர்கள் குழுமியிருந்தனர்.

தலைமை வகித்த டாக்டர் கலீல் அவர்களின் ஆங்கிலப் பேச்சைப் பாடசாலை மாணவரான, ஒரு சுட்டி இளவலான ஏ.எச்.எம். அஸ்வர் மொழிபெயர்த்தார். இது அவ்விளைஞரது கன்னி மொழி பெயர்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது உரைத்திறனைச் சபையோர் ஆர்வாரித்துக் கைகொட்டி வரவேற்றனர். அம்மேடை அக்கரைப்பற்றுவின் முஸ்லிம் லீக் கூட்டமேடை, அஸ்வர் அவர்களின் அரசியல் வாழ்வின் அடித்தளமாக அமைகின்றது.

''விளையும் பயிரின் மணியான முளை'' அக்கரைப் பற்று மண்ணில் அன்று ஊன்றப்பட்டு விட்டது.

அதற்குமுன் தனக்கு இப்படியானதொரு திறமை இருப்பதாக அவர் அறியாதிருந்ததால், மக்களின் பாராட்டு வாயிலாக ஓரளவு அவரால் அறிய முடிந்தது.

''அன்றிலிருந்து அவரின் மொழிபெயர்ப்புத்திறன் பிரகாசிக்கத் தொடங்கியது. நூற்றுக் கணக்கான மேடைகளில் டாக்டர் கலீலுடன் சென்றார் தம் வித்துவச் சிறப்பை மக்கள் வியந்தேற்றும் பாணியில் வெளியிட்டார்.

அண்மைக் காலங்களில் மேதகு ஜனாதிபதி அவர்களின் ''தமிழ்க்குரலாக'' ஒலித்தார். அதன் காரணியால் மக்கள் மத்தியில் உயர்த்தப்பட்டார். அவர் அரசியலில் எதிர்பாராத விதமாய் அணைக்கப்பட்டார்.

அல்லஹ்வின் அருளும், தலைவரின் ஆசிகளும், சாமான்ய மக்களின் பிரார்த்தனைகளும் திரண்ட ஒரு சக்தி, ''அக்கரைப்பற்று மண்ணில் கௌரவ அமைச்சர் அவர்களின் அரசியல் நுழைவுக்கான'' முதல் வாயிலைத் திறந்து விட்டிருந்தது.

இதை சமயம் கிடைக்கும் போதெல்லாம் கௌரவ அல்-ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் (எம்.பி, இராஜாங்க அமைச்சர்) அவர்கள் மிகவும் நன்றிப் பெருக்குடன் நெஞ்சம் நெகிழ நினைவு கூறுகின்றார்.

அக்கரைப்பற்றுக்கும், தமது அரசியல் வாழ்வுக்குமான பிணைப்பை கௌரவ அமைச்சர் இப்படிக் கருதுவதாக அறியக் கிடக்கின்றது.

தமது அரசியல் வாழ்வின் உயர்வு சிறப்புக்கு அதுவே உரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சமூகத்துக்கும், ஏனைய மக்களுக்கும் சேவையாற்றக் கூடிய முனைப்பை, முயற்சியை முன்கூட்டியே வழங்கிய முத்தான மண்.

ஆகவே அன்னாரது அரசியல் சித்தாந்தத்துக்கு, அடிநாதமாக இருந்தது பற்றிய மகிழ்வில் அக்கரைப்பற்று ஒருபடி மேலோங்கி நிற்கின்றது, அதன் வரலாற்றுச் சிறப்பு நூலுக்கு ஒரு தனித்துவத்தையும் அப்பிணைப்பு வழங்கியுள்ளதுபற்றியும் அது ஆனந்தமடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று மண்ணும்

அவர்களும்



இன்றைய முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரும், தினகரன் வாரமஞ்சரியில் ''லைட் ரீடிங்'' பகுதியை ஜனரஞ்சகமாக மிகக் காத்திரமான வழியில் வழங்கி பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் நெஞ்சத்தில் நிறைவிடம் பெற்றவருமான வஞ்சமிலாத் தம்பி மானா மக்கீன் அவர்களுக்கும் அக்கரைப்பற்றுக்குமிடையே மிக நீண்ட காலத் தொடர்புகள் உண்டு.

இன்னூரின் மூத்த எழுத்தாளர்களான ஜனாப்கள் அ.ஸ. அப்துஸ்ஸமத், ஏயாரெம் சலீம் ஆகியவர்களோடு பாசப் பிணைப்புக் கொண்டு நெருக்கமான தொடர்புகளைத் தனது சிறுவயதிலிருந்தே கொழும்பிலிருந்து ஏற்படுத்திக் கொண்டவர்.


அவர்களிருவரினதும் எழுத்துப் பணிக்குத் தன்பத்திரிகை வாழ்க்கையில் நல்லூக்கம் கொடுத்திருக்கிறார். கலை, இலக்கியம், பத்திரிகை என எந்த வொரு முயற்சிக்கேனும் செயலுருவம் கொடுக்கும் போது இவர்களே மானா அவர்களின் முன்வந்து நிற்பர்.

கலைத்துறையிலோ, இலக்கிய, சமூகத்துறைகளிலோ பெரும்பாலும் மூவரும் ஒரே கருத்தைக் கொண்டிருப்பதுவே வியக்கத்தக்கதாகும். 'மானா'வுக்காக எந்த இடத்திலும் தலையை நுழைத்துக் கொள்பவர் 'ஆனா சானா' என்று கூறுகிறார். அவரது கூடப்பிறக்காத உடன் பிறப்பாக மானா அவரைக் கருதுகிறார்.

கடந்த பல வருடங்களுக்கு முன் இந்தியாவில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் நிகழ்ந்த பல தில்லுமுல்லுகளின் மத்தியில் அக்கரைப்பற்று எழுத்தாளர் இருவரும் அழைக்கப்படாத பொழுது அதனை நெஞ்சுரத்தோடு எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியவர் ''மானா'' அச்சமயத்தில் சாஹித்திய மண்டலப் பரிசில் பெற்ற முதல் முஸ்லிமான ஏயாரெம் சலீம் அவர்களைப் பற்றி எழுத்தில் எழுதி அடையாளம் காட்டியவர்.

மேலும் ''ஏயாரெம்'' அவர்களின் நான்கு தசாப்த காலக் கிராமிய இலக்கியச் சேகரிப்பிலும் அதை வானொலி, நாழிதழ்கள், வார, மாத சஞ்சிகைகள் வாயிலாக மக்கள் இனங்காணச் செய்வதிலும் அதிக பங்களிப்பைச் செய்தவர். இயற்கையாகவே நாட்டார் வாழ்வியலிற் தம் இதயத்தைப் பறிகொடுத்த அவர் அக்கரைப்பற்றிலுள்ள கல்லா மகளிரின் அருஞ் செல்வங்களான கவிகள் எனும் கருவூலங்களை அச்சுருவில் கொணர்ந்து அழியாச் செல்வங்களாகக் காத்திடல் வேண்டுமென அவரை அடிக்கடி தூண்டிக் கொண்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந் நூலாசிரியர்

தாயார் : முஹம்மது ஷரீபு மரைக்காயர்,
சபிய்யா உம்மா

தந்தையார் : அல்லாமா முஹம்மதபூபக்கர்
லெப்பை ஆலிம் (பாக்கவீ)
அப்துற்றஷீத் (சீனி) ஆலிம்(பஹ்ஜி)

பிறந்த நாள் 18.11.1927

- ஆசிரியர், அதிபர், பிரபல எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், பத்திரிகை நிருபர், பாடகர், நூலாசிரியர், வானொலிக்கலைஞர், பேச்சாளர் —

- ஸ்ரீ லங்கா சாஹித்திய மண்டலப்பரிசில் பெற்ற முதல் முஸ்லிம் கலைஞர். பொலன்னறுவ மாவட்ட அதிபர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாடு ஆகியவற்றின் செயலாளர். அக்கரைப்பற்று அதிபர் சங்கத்தலைவர். அ. ப. கிளை முஸ்லிம் ஆசிரியர் சங்கச் செயலாளர் —

- பொத்துவில் கல்விப் பணிமன்றம், கண்டிமாநில எழுத்தாளர் பேரவை தலைவர். மலைவிளக்கு மாசிகை ஆசிரியர் —

- தக்கியா (தைக்கா) நகர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர், இக்கிராமத்துக்கு இப்பெயரைச் சூட்டியவர் —

- தக்கியாநகர், அக்கரைப்பற்று அல்பாத்திமிய்யா, சின்ன உல்லை (அறுகம்ப) பாடசாலைகளின் ஸ்தாபகர் —

- அருகி வரும் ஆசாரங்கள், இலக்கியம், கிராமியக்கலை, சரித்திரம், மற்றும் பழையகால மானிட வாழ்வியல் விழுமியங்களின் திரட்டுநர், ஆய்வாளர், தொகுப்பாளர் —

- இலங்கை அரசு - யாழ்ப்பாணம், அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்- யாழ்ப்பாணம் - மத்திய மகாவித்தியாலம்- அக்கரைப்பற்று, அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்- கொழும்பு ஆகிய இடங்களில் ஒழுங்குசெய்யப்பட்ட பாராட்டுவிழாக்களில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டவர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களனிவித்தியோதய பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் மேதகு தேசாதிபதி வில்லியம் கொபல்லாவ அவர்களாலளிக்கப்பட்ட பணப் பரிசில் பெற்றவர் —

அக்கரைப்பற்று ஆசிரியர் மன்றம், வணிகர்சபை, இளைஞர் முன்னணி, கிண்ணியா கலாசாரப் பேரவை, தும்புளுவாவ உலமாசபை, ஆசிரியர் மன்றம், பொது மக்கள், பொத்துவில் சகாய நிதி சொசைற்றி, மற்றும் சில பொதுக் கழகங்களால் வழங்கப்பட்ட பாராட்டுகள்; பரிசில்களைப் பெற்றவர் —

இலைமறை காயாக இருக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட இவரால் கல்வி, இலக்கியம், எழுத்து, பொதுப்பணித் துறைகளில் உருவாக்கப்பட்ட பலர், தமது உயர்மட்டப்பங்களிப்புகளைச் செய்து இவருக்கு நன்றிக்கடன் செலுத்தி வருவது பலரறிந்த உண்மையாகும்.

V.P.சிவப்பிரகாசம்
பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிச் செய்தியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மக்கள் பணியாளர் - ஜனாப் ஏ. எல். எம். ஜமால்தீன்

இவர் பொதுப்பணிகளில் அதிக ஆர்வங்காட்டி உழைத்து வருகிறார். கற்கும் காலங்களில் வட்டார மட்டத்தில் நடைபெற்ற தேர்வுகளில், அதிக புள்ளிகள் பெற்றுப் பரிசில்கள் வாங்கியுள்ளார். அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட (ரவீந்திர நாத்) தாஹூர் கழகம், மகாகவி இக்பால் நினைவு மன்றம், விஞ்ஞான வளர்ச்சி வட்டம் ஆகியவற்றின் செயலாளராகவிருந்து பல அரிய பணிகளைச் செய்து நன்மதிப்பைப் பெற்றுள்ளார். ஏ எஸ் ஏ விளையாட்டுக் கழகத்தின் உயர்வுக்காக உழைத்தவர். ஏஸ் விளையாட்டுக் கழகத்தின் 25 வருடகால உழைப்பாளி. இலங்கை இராணுவத்தின் உதைபந்தாட்டக் கழகம், சங்கீதக்குழு இவற்றைத் தருவித்து, பல நிகழ்வுகளை நடாத்திக் காட்டியவர், அத்தோடு, பல வெளியூர்களின் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து வெற்றிகளைப் பெற்ற சாதனையாளர். ஜனாப் அஹ்மத் லெவ்வை ஆலிம், ஜனாபா கைரூன் உம்மா ஆகியோரின் புதல்வர். சித்தி நபீஸா ஆசிரியை இவரது துணைவியார் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்புமிகு பிரதமராய் இருந்த தற்போதைய ஜனாதிபதி மேதகு R. பிரேமதாஸ இப்பகுதிக்கு ஹெலிக் கொப்டரில் வருகை தந்தபோது இப்படிக் காட்சி தருகிறார். அவரருகில் டொக்டர் M. A. M. ஜலால்தீன் (Ex. m.p) கௌரவ M. A. M. அப்துல் மஜீத் M. P. ஆகியோர் காணப்படுகின்றனர்.



பள்ளிக்குடியிருப்பு பாவையர்கள் தண்ணீரின்றித் தவித்துப் பூவல் (நீர்க் கேணி) களை நாடி வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடய வேர்கள்

| தொடரெண் | பக்கவெண் |
|---|---|


01. ஊரின் வரை படம்
02. வெளியீட்டாளர் விளம்பல்
03. இந்நூலின் கதை 1-8

04. முதல் அதிகாரம் :- அறிமுகம் .........9-48

தமிழ் மக்களின் முதல் வரவு-கந்தப்போடியின் ஆக்கொத்து கோயில் பரிபாலனம்-முஸ்லிம் மக்களின் மூலவரவு-சிங்களக் கிராமத்திலிருந்து வருகை - ஐயமும் தெளிவும் - மற்றுமோர் கருத்து.

05. இரண்டாம் அதிகாரம் :- சிங்கள மக்கள் வருகை ..........49-58

குறவர்குலம், ''கூவேட்'' வழக்கம் - குறவரின் பேச்சு வழக்கு - பெருங்காயச் சடங்கு-பருவக் கன்னியர் பக்குவம்.

06. மூன்றாம் அதிகாரம் :- புவியியலமைப்பு ............59-76

நிலவமைப்பு-விஸ்தீரணம்-மழை வீழ்ச்சி-தென்னந் தோட்டம் - குறிச்சி - வீடும் வேலியும் - கிணறு - வீச்சு மரம் - துலாக்கோல் - வளவுவேலி - தமிழ் முஸ்லிம் மக்களின் உறவு -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்க நிலைப்பாடு-பெரிய களப்பும் முகத்து வாரமும் -''நக்கறா'' - நால்வகைத் திரவியங்கள் - கடல், காடு, நிலம், நீர் தருந்திரவியங்கள் - கால் நடை வளர்ப்பு

07. நாலாம் அதிகாரம் :-கிராம மக்களின் விழுமியங்கள்...77-96

கடின உழைப்புங்கருணையும் - உள்ளத்திலூறி மலர்ந்த உணர்ச்சிக் கவிகள் - வீரம், பெருநகை, அச்சம், அற்புதம், இளிவரல், வெகுளி, கருணை, அவலம், சிருங்காரம் - நுளம்பு, காகம், நாய், கிரட்டை, எலி, மூட்டை, எறும்பு, பூனை

08. ஐந்தாம் அதிகாரம் :- மக்களின்சமூக, கலாசாரம்.....97-118

ஆடைகள், அணிகலன்கள் - சிறு உணவுகள் - விருந்துபசாரம் - பட்டக் கல்யாணம் - ஹதீது சொல்லல் - மவ்லிது ஓதுதல் - நேர்ச்சை வைத்தல் - கந்தூரி வகைகள் - பள்ளி, வட்டை, பலாய், வலீமார், மழைக் கந்தூரி- கத்னாச் சடங்கு - இறக்காமம் பள்ளி வாசல் உலா - சில செயற்பாடுகள் - செய்வினையும், அச்சிரமும் - பால், குறிபார்த்தல் - சூனியம் - மந்திரவகை - ஊரோடி - கபுறாளிகளின் குற்றம் - தாய் மாருக்குச் செய்தல் - பூப்பு(னித) நீராட்டல் - மற்றமொரு சம்பிரதாயம்

09. ஆறாம் அதிகாரம் :-வேளாண்மைச் செய்கை :.....119-150

நல்லநாட்பார்த்தல் - ஏ நாள் கொத்தல் - நிலப்பண்பாடு, சமன்பாடு - விதைப்பு வேலை - நெல்வகைகள் - முளை வண்டியும் கவிகளும், விதைத்தல் - வட்டைவேலி - வேலிக்காவல் - வட்டை வளைத்தல் - பயிர் நோயும் சிகிச்சையும் - காவல் - விளைவு ஆரம்பம் - மகளிர் பணிகள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிருண்ணல் - விளைவு நிய்யத்து - உணவுப் பெருக்கம் - உணவும் சுவையும் - அரிவி வெட்டல் - சூடுபோடல் - பொலிப்பாடல்கள் - பணியும் பயனும் - நிம்மதியும் நிறைவும் - அட்டுவம் - கொட்டு - பட்டறை - சூட்டுக்களவட்டிச் சங்கேதச் சொற்கள் - சில சம்பிரதாயங்கள் - போடியார், வெளியான் உறவு - போடியாரின் தாராளம் - ஏர்ப்பாடல்கள் - கடாக்களும் உழவரும் - மண்வளச் சொற்கள் - எளிமையும் இனிமையும் -வட்டைகளின் தொன்மை - நெற்காணிகளின் பெயர்கள் - புராணக் குளங்கள் - செலவு வகைகள்

10. ஏழாம் அதிகாரம் :- வித்தியாலயங்களின் விபரம்.......151-166

அஸ்ஸிறாஜ் - அல் பாத்திமிய்யா - அல் பத்ர் - அல் முனவ்வறா அல்ஹிதாயா - ஷெய்க்சிக்கந்தர்வலீ - ஆயிஷா பாலிகா (மகளிர்) மகா - ஆண்கள் - அல்ஹுதா - சம்சுல் உலூம் - ஆறாங் குறிச்சி முஸ்லிம் - ஹிஜ்றா - பனங்காடு பாசுபதேசுபவர் - கோளாவில் விநாயகர் - ஆலயடிவேம்பு திருநாவுக்கரசு - அளிக்கம்பதமிழ் கண்ணகி - முஸ்லிம் மத்திய கல்லூரி - ஸ்ரீ தம்மரத்ன சிங்கள மகா - இராம கிருஷ்ண மிஷன் மகா - வித்தியாலயங்கள்

11. எட்டாம் அதிகாரம் :- போக்குவரத்துச் சாதனங்கள்.....167-174

தலைச்சுமை - மாட்டரவம் - காட்டுவழி - வயல், குளக்கட்டுகள் - தவளமாடும் அடப்பையும் - மணல், களி, கருங்கல், கிறவல், தார்ப்பாதை - மாட்டு வண்டி - வில்லுக் கரத்தை - தோணி, ஒற்றைக் கரத்தை, கைத்தள்ளு - மர ஓடம் - பைசிக்கில் - வாகனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஒன்பதாம் அதிகாரம் :- தொழில் வாய்ப்புகள்...........175-190

வணிகம் - சந்தை ஆரம்பம் - கொட்டிலமைப்பு - விசாலிப்பு நிருவாகம் - நன்கொடைகள் - எரிப்பும் இடப்பெயர்வும் - ஊர்க்கடைகள் - மீன்பிடித்தல் - தச்சுவேலை - சேனைப்பயிர் - சேனைகளின் பகுப்பு - களிமண் பாத்திரங்கள் - பன்வேலை - பீடிசுருட்டுதல் - நீறு சுண்ணாம்பு உற்பத்தி - அரிசிகுற்றல்

13. பத்தாம் அதிகாரம் :- கல்வியின்வளர்ச்சிப் படிமங்கள் ...191-208

ஆரம்ப நிலை - கல்விமான்கள் - கல்வியிற் பின்னடைவுக் காரணிகள் - ஒல்லாந்தரும் கல்வியும் - மிஷனரிப் பாடசாலைகளும் பணியும் - கருங்கொடித்தீவுக் கல்விப் பரம்பல் - ஓதற் பள்ளிக் கூடம்.. (மத்றஸா) - வணக்க வழிபாட்டுத் தலங்களின் கல்வி - முதற் பாடசாலை-
அரசு பாடசாலைகளின் தோற்றம் - மிஷன் பாடசாலைகள் சுவீகரிப்பு - பாடசாலைகளின் பெருக்கம் - ஆங்கில மொழி - சிங்கள மொழியறிவு - அறபுமொழியின் அவசியம் - வளர்ச்சி வடிவங்கள் - கேள்வி ஞானக் கல்வி - முறைசார்ந்த கல்வி - கலாசாலைக்கல்வி - பல்கலைக் கழகக் கல்வி - பொதுக் கணிப்பீடு

14. பதினோராம் அதிகாரம் :- புலவர் பெருமக்கள் ..........209-234

சேகுமதார்-முஹம்மது றாபி - மொட்டை வேலாப் போடியார் - தாண்டவர்வேலன் - வள்ளி நாயகி - அபூபக்கர் லெப்ப ஆலிம் - முஹம்மது ஹஷிம் (மூத்த) ஆலிம் - அப்துற்றஷீது (சீனி) ஆலிம்-முஹம்மது ஹஸன் - புகாரி (அபூபக்கர்) ஆலிம் - ஷெய்கு இஸ்ஸுத்தீன் - அக்கரைப்பாக்கியன் - ஏ. இக்பால் - அக்கரை மாணிக்கம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பன்னிரண்டாம் அதிகாரம் :- தகவற் களஞ்சியம் ........235-304

பொது விபரம் - கிராமங்கள் - மக்கள் கொங்கிரஸ் - பெரிய, சின்னப் பள்ளி வாசல் - பெரியார், பிரமுகர், திறமையாளர் - M. R. M. அபூபக்கர் - M. I. அலி உதுமான்ட M. S. தருமரத்தினம் - M. I. M. அப்துல் மஜீத் - ஊராட்சி மன்றத் தவிசாளர் - வேலன் பரிகாரி காரணி - வெள்ளையன் - முறிவு வைத்தியர் - கிராம சேகவர் பிரிவு - ஆனரவரானர் அப்துஸ்ஸமத் - புதுப்பள்ளி - பள்ளி வாசல்கள் - பள்ளிவாசல் பணிகள் - அரும் பணிக்கான அமைப்புக்கள் - மக்கள் ஒன்றியம் - பிரதேச சபை - முஸ்லிம் வாலிபர் முன்னணி - முஸ்லிம் மகளிர் முன்னணி - அரசு உதவியதிபர் பணியகம் - முதலிடம் வகிப்போர் பட்டியல் - பல்துறைத் தகைமையாளர் -

மன்ப உல்கைறாத் அறபிக் கல்லூரி - அனைத்துப் பள்ளி வாசல்களின் சம்மேளனம் - அஸ்ஸாஹிறா வித்தியாலயம் - புட்டம்பை முஸ்லிம் வித்தியாலயம் - ஏ. கே. முஹம்மதிஸ்மாயில் லெவ்வை - எஸ். எல். சேகு இப்றாஹிம். ஏ. ஜி. ஏ - எம். பௌசர் - நூல் ஆசிரியர் வெளியிட்ட நூல்கள் - வெளிவரவிருக்கும் நூல்களிற் சில - கருங்கொடித்தீவு மான்மியம் - ஆய்வுக்குட்படுத்திய நூல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டாளர் விளம்பல்

நேற்றைய நிகழ்ச்சிகள் இன்று சுவடுகளாகி நாளை சரித்திரமாக மாறுகின்றன. ஒவ்வொன்றுக்கும் வரலாறுள்ளது. அந்த வகையில் நகரப்பாங்கான கிராமமாகிய அக்கரைப்பற்றின் வரலாறு உங்கள்முன் மலர்ந்துள்ளது. ஈழத்திலுள்ள எந்தவொரு ஊரினதும் வரலாறு இவ்வளவு ஆழமாக, சிறப்பாகப் படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வூரின் வரலாறு எழுதப்படவேண்டுமெனக் கடந்த பல ஆண்டுகளுக்குமுன், ஜனாப் M.S.M. முஸ்தபா உடையார், ஜனாப் M.I.M. முஹ்யித்தீன் குவாஸி, 4 ஆங் குறிச்சி விதானை (முன்னாள்) ஆகியோர் கொண்ட ஒரு குழுவினர் பெருமுயற்சி எடுத்தனர். ஜனாப் M.I. உதுமாலெப்ப M.P. யும் பலமுறை முயன்றார். வேறு சிலரும் தெண்டித்தனர். ஆனால் எதுவுமே நிறைவேற வில்லை.

வரலாறு எழுதுவதற்குரிய, தரமான, தகுதியான, விடயங்களைச் சேகரிக்கக்கூடிய ஆற்றல் மிக்கோர் கிடைக்காததே அதன் காரணியாகும்.

நாடறிந்த எழுத்தாளரான ஏயாரெம் சலீம் அவர்கள் 1947 களிலிருந்து மறையும் நிலையிலுள்ள பல்துறை அறிவுப் பொக்கிஷங்களைத் தேடிப் பல இடங்களில் அலைந்தும், அதிக பணத்தைச் செலவிட்டும் பெரும் பணியொன்றைத் தொடர்ந்தார். கிடைத்தற்கரிய ஒளிப்படங்களையும் சேகரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கவனித்து வந்த நாம், எமது வெளியீட்டுப் பணியகத்தின் வாயிலாக அன்னாரைக் கொண்டு ஒரு நூலைத் தயாரித்து வெளியிடத் தீர்மானித்தோம்.

அவரிடம் இவ்வேண்டுகோளை விடுத்த போது, அவர் ஏற்கனவே இப்பணியை ஆரம்பித்திருப்பதையறிந்து மகிழ்வெய்தினோம். தொடங்கலைத் தூண்டியதன் பயனாய் உருப் பெற்றிருப்பதே இந்நூல். எல்லோருக்கும் இக்கால கட்டத்தில் அத்தியாவசியமாய்த் தேவைப்பட்ட இது, வெளியிடப்படுவதையிட்டு ''அக்கரைப்பற்று மண் பெருமைப்படுகின்றது-பேரானந்தமடைகிறது''

சகல தகுதிகளுமுள்ள இந்நூலாசிரியர் திரட்டும் மகரந்தச் சேர்க்கையால், மக்கள் சமூகம் வற்றாத அறிவுத் தேனைச் சுவையாகப் பருகி மகிழலாம்-மனம் நிறையலாம் என்கிறோம்.

எதிர் காலத்தில் இந்நூலாசிரியர் பலதரப்பட்ட அறிவுக் கருவூலங்களை, மக்களுக்கு அள்ளித் தந்திட எல்லாம் வல்ல இறைவன் அன்னாருக்கு அருள வேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டுகின்றோம்.

நன்றி

அக்கரைப்பற்று -02
15-12-1990

நிருவாகம்
ஹிறா பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்
எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே!
அவனது திருத்தூதர் முஹம்மத் (ஸல்)
அவர்கள் மீது அவனது சாந்தியும்
கருணையும் பொழியட்டும்!

## இந்நூலின் கதை

"அறிவுடையோருக்கு அவர்களின் வரலாறுகளில் நல்லதொரு படிப்பினை நிச்சயமாக இருக்கின்றது." என்று புனித அல்குர்ஆன் அறை கூவுகின்றது.

"லக்கத்து கான பீகஸஸிஹிம்
இப்றதுல்லி உலில் அல்பாப்"

(அல்குர்ஆன் 12வது அத்தியாயம் 111வது வசனம்)

இப்படியாக நம்மிறைவனே கூறுமளவிற்கு வரலாறு வலுவுள்ளதாக விளங்குகின்றது.

பண்டு தொட்டுக் "கருங் கொடித்தீவு" என அழைக்கப்பட்டுப் பின்னர் "அக்கரைப்பற்று" வெனப் பெயர் வழங்கப்பட்டு வரும் எழில் வளமும் இயற்கைச் சிறப்புங் கொண்ட இவ்வூரின் தோற்றம் வளர்ச்சிகள் பற்றி அறிய அடியேன் ஆவல் கொண்டேன்.

அது சம்பந்தமாகப் பல முதியோர், மூத்தோர், கல்விமான்கள், கனவான்கள் மற்றும் தகவலாளர் ஆகியவர்களோடு எனது தொடர்பு தொடர்ந்தது.

நான்கு தசாப்த (40 வருட)ங்களாக சரித்திரம், இலக்கியம், கிராமியப் பாடல், மானிட வாழ்வியல், ஆசாரங்கள், பண்பாடு, மற்றும் பல அம்சங்களையிட்ட சிறப்புக்களைத் தேடியலைந்து திரட்டினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களை ஆராய்ந்து செவ்வை பார்த்துச் சரிசெய்து கொண்டேன். எனது தேடலின் பயனாக அருகியும், அல்லாடியும் பேரழிவின் பிடியிற் சிக்கிக் கொண்டிருந்த அரிய புராதன தகவற் புதையல்கள் பல உயிர்ப்புப் பெற்றனவெனலாம்.

அவற்றைப் பின் வரும் பகுப்புக்களில் அடக்கலாம். அவையாவன:-

01. இதயமுருகும் இலக்கியப் பாடல்கள்.

02. ஓதாதார் கவிகளின் ஒன்பான் சுவைகள்.

03. நாட்டார் வாழ்வில் காணப்பட்ட நயமான, சோகமான, சந்தோசமான, சங்கடமான மற்றும் புதுமையான, புகழ்பெற்ற சம்பவங்கள்..

04. இதய தாபங்களின் எழுச்சி வடிவங்கள், ஏக்கப்பெருமூச்சுக்கள், உறவாடல், உரையாடல், உளப்பாங்குகளின் உள்ளோட்டங்கள்.

05. வரலாற்றை ஆற்றுப்படுத்தும் வலுவான, வரையறையான, வளமான சம்பவங்கள், பழமொழிகள், பரிதாபக் கதைகள், பல்வகைச் சம்பிரதாயங்கள்.

06. மண்வளச் சொற்செறிவு, பிரதேச செயற்பாடு, மரபுவழிப் பாரம்பரியச் சடங்குமுறைகள்.

07. அந்தரங்கச் செயற்பாடு, ஆசைக் கனவு, ஆதங்கம், அலைச்சல், பல்வகை விழுமியங்கள்.

08. கல்வியின் வெறுமையும், விடியாமையும், வளர்ச்சிச் சிறப்பும், வளமும்.

09. மக்களின் கலை, கலாசார, நம்பிக்கை, சமயம், சல்லாபங்கள்.

10. கண்ணியமான களவொழுக்கம், கல்யாணம், பெருவாழ்வு, நிறைவு, நிம்மதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையான அனேக வாழ்க்கைச் சம்பவங்கள், தரவுகள், தாரதம்மியங்களாகவே அவற்றின் வடிவங்கள் தெளிபடுகின்றன.

தனிமனிதன் முயற்சியாக (அல்லாஹ்வின் துணையோடு மாத்திரம்) வேறு துணையின்றி தமியேன் மேற் கொண்ட இந்தப் பாரிய சேகரிப்புப் பணியின் போது, ஏற்பட்ட சிக்கல்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள், இழப்புக்கள், எதிர் விளைவுகள் முதலியன எழுத்தில் வடிக்க முடியாதன.

"இது ஒரு புராதன காலப்புதையல் எடுக்கும் முயற்சி போன்றது." கொடுத்த பலிகள், வைத்த மடைகள், ஏற்பட்ட இழப்புகள், ஏராளம்! ஏராளம்!!

எங்கிருந்து எப்படியான இடர்கள் வந்து தாக்கிய போதிலும், எனது திரட்டுப்பணியும், நூலாக்க முயற்சியும் தொடர்ந்தே வந்துள்ளது.

உடைவுகள் ஊக்கியாகவும், முறிவுகள் முயற்சியாகவும் மாறின. இந்நூலை ஆக்குவதற்குச் சில காரணிகள் உள, அவையாவன:

01. சிறியேன் பிறந்த மண்ணின் வரலாறு படைக்கப்படல் வேண்டுமென்ற வற்றாத ஆசை.

02. நம் மூதாதையரின் வாழ்கை விழுமியங்களை, அவர்தம் பாரம்பரிய ஆசாரங்கள், அறிவாற்றல் களைப் பிற்சந்ததியினர் அறிந்தொழுக வேண்டு மென்ற ஆவல்.

03. அருகி வரும் இலக்கியம், வரலாறு, மானிட வாழ்வியல் முதுசொம்களை அறிமுகஞ் செய்து வைக்க வேண்டுமென்ற அகவுணர்வு, ஆர்வம்.

04. புதிய வடிவங்களைப் படைக்க வேண்டுமென்ற பேராவல் - என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டிய சம்பவங்களின் யதார்த்தத்தையறியவும, இடைச்செருகல்களைத் தவிர்த்தும் தக்க ஆதாரங்களுடன் இந்நூலை வெளிக் கொணரவும் பெரிதும் முயன்றுள்ளேன்.

ஐம்பதுக்கும் மேற்பட்டோரின் பல்வகைத் தரவுகள், கையேட்டுக்குறிப்புக்கள், அரசு ஆவணங்களின் வரைவுகள், வணக்க வழிபாட்டுத்தலங்களின் புராதன சம்பவத்திரட்டுப் பதிவுகள், உசாத்துணை நூற்களின் தகவல்கள், வரைபடங்கள், புகைப்படங்கள் முதலியன இந்நூலாக்கத்திற்குப் பெரிதும் உதவின.

அக்கரைப்பற்றி (கருங்கொடித்திவி)ன் சிறப்பும், செழிப்பும், இயற்கை வளமும், கலைஞானத் தெளிவும், கவிகளின் உணர்ச்சிப் பிரவாகமும், மதப்பற்றும், மனித நேயமும், விழுமிய ஆசாரச் சடங்குகளும், மற்றும் விருந்தோம்பலும் பலவூர் மக்களும் பாராட்டிப் புகழ்ந்த அம்சங்க ளாகும்.

வனப்புற்று விளங்கும் வரலாற்றுச் சுவடுகளை முத்திரையாகப் பதித்துக் கொண்ட, இவ்வடியேன் பிறந்த மண்ணை, எம்தாயகத்தை, கருங்கொடித்தீவு எனும் கலையகத்தை, அக்கரைப்பற்று என்னும் அன்புசால் அறிவகத்தை, பல்வளமும், பல்நெறியும்செழித்தோங்கும் பண்புசால் பணியகத்தை இந்நூலின் வாயிலாகச் சமகால, எதிர்காலச் சந்ததியினர் அறிந்து பலன் பெறலாம். படிப்பினைகளைப்பெறலாம், படியேறலாமென எண்ணுகின்றேன்.

நிகழ்வுகள் வரலாற்றுச் சுவடுகளாகின்றன. அவை எழுத்துருவில் இடம்பெறல் ஏற்றமாகும். பழமைக்கும் புதுமைக்கும் இணைப்புப் பாலமாக வரலாறுகள் அமைந்துள்ளன. இவற்றின் பங்களிப்புப் பலமான மனித வள மகிமைக்கு உந்து சக்தியாய் உதவுகின்றதெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகம் அதன் முன் வாழ்ந்த ஐந்து பரம்பரையினரது சம்பவங்களை அறிந்திருத்தல் அவசியமென வரலாற்று வல்லுனர் பலர் கூறுகின்றனர். அப்படியில்லாவிட்டாற் தனக்கென ஒரு தலைமையைத் தேர்வு செய்வதிலும். சிலமிகு சிரான வாழ்க்கையொன்றுக்குத் தம்மைத்தயார் செய்து கொள்வதிலும் தயக்கங்காட்ட வேண்டிடும் என்பதும் அவர்கள் கருத்தாகும்.

வாழ்வைப் பூங்காவாக்கிப், புலனின்பத்தைப் பூமணக்கும் தென்றலாக்கிப். பாடிப் பணி செய்து பண்புடன் திகழ்ந்தவர்கள் எமதூர்க் கிராம மக்கள். இது மற்றைய நாடு, காடுகளிலுமுள்ள நன் மக்களுக்கும் பொருந்துவதாகும்.

அந்த வகையில் இந்நூல்:-

* நமது இதிஹாசம்
* நமது முன்னோரின் கதை
* எமது ஊரின் உயிரோவியம்
* எமது மண்ணின் - தாயகத்தின் வரைவு
* வளரிளவல் மகன்மார், மகள் மாரின் வருங்கால வாழ்வியல் வழிகாட்டி
* ஏனைய மக்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் எதிர்கால ஏடு.

உண்மையான, தரமான நிகழ்வுகள் எதுவும் விடுபடக்கூடாதென்பதில் மிகுந்த கவனமெடுத்துள்ளேன்.

என்றாலும் நூலாக்கக் கொடுப்பனவுகள் மேலுயர்ந்து செல்வதால் சில சம்பவங்களை இதிலடக்க முடியாத நிர்ப்பந்தம் தவிக்க முடியாது போயிற்று. தவிர பிந்திய விடயங்களையும் சேர்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளேயும், மேலும் கிடைத்துக்கொண்டிருக்கும், சேர்க்க வேண்டியிருக்கும். அனைத்துக் குறிப்புக்களேயும்.

''கருங்கொடித்தீவு மான்மியம்'' எனும் புத்தகத்திற் திரட்டித் தரவிருக்கின்றேன். (இன்ஷா அல்லாஹ்)

எல்லோரிடமிருந்தும் மேலும் இந்நூலுக்கான விடயங்களே எதிர் பார்க்கின்றேன். கிடைக்கும் தகவல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுச் செவ்வையானவை சேர்த்துக் கொள்ளப்படும்.

உற்பத்திச் செலவைப் பார்க்கிலும் இந்நூலின் விலே குறைவாகவே குறிக்கப்பட்டுள்ளது. எல்லாத் தரத்தினரும் இதைப் பெற்று, வீட்டுக் கொரு புத்தகமாவது வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எமது விருப்பத்தின் பேரில், இவ்வாறு விலேகுறைப்புச் செய்யப்பட்டது.

யார்போற்றினும், எவர் தூற்றினும் வரலாற்றில் யதார்த்தத்தை மறைத்திடல் ஆகாது என்பது ஒரு சரித்தர மாணவனின் சத்தியப் பிரமாணமாகும். அதை அடியொற்றியே இந்நூல் எழுதப்பட்டிருப்பதைப் படிப் போருணர்வர்.

மிக நீண்டகால அலேச்சல், அசௌகரியம், அவதிகள் மத்தியில், பல சம்பவங்களேத் திரட்டி, ஆய்ந்து பெரும் பணச் செலவில் இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது பலரறிந்த உண்மையாகும். மக்கள் இதனைப் படித்து மனநிறைவு பெறுவார்களேயானல் அதுவே எனது அவலங்களுக்கு மருந்தாய் விளங்கும்.

இதிற் காணப்படும் குறைகளேச் சுட்டிக்காட்டுங்கள். மறு பதிப்பிற் திருத்திக் கொள்வேன்.

உள்ளடக்க அதிகாரங்களேப் பற்றி அடியேன் சிலாகித்துக்கூற விரும்பவில்லே. வாசகர்களின் விமரிசனத்திற்காக அவ்வகளே விடுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை உருவாக்கப் பலதுறைகளிலும் ஈடுபட்டுள்ள இனிய நெஞ்சங்கள் உதவினர். செவ்வியளித்த ஐம்பதுக்கும் மேற்பட்டோர், விசேடமாக இதிற் குறிப்பிட்டுள்ளோர், கையேடுகள் தந்தோர், ஆவணங்களை அளித்தோர், கண்டி, பதுளை, மட்டக்களப்பு, அம்பாறைக் கச்சேரி அலுவலர், பணியாளர், அக்கரைப்பற்று உதவி ஆணையாளர் உதவி அரசு அதிபர் ஜனாப் A. அப்துல் மஜீத் (B.Com) S.L.A.S., பிரதம எழுதுநர் ஜனாப் M.I. சலாவுத்தீன், புகைப்படங்களைக் கலையழகோடு எடுத்து வழங்கிய சிவா ஸ்ருடியோ உரிமையாளர் திரு. V.P. சிவப்பிரகாசம், ஊர்ப்படத்தை வரைந்துதவிய ஜனாப் A.L. முகைதீன் பாவா (நில அளவையாளர்) அட்டைப்படம் வரைந்து கொம்பியூட்டர் ஓப் செட் வடிவமைப்பு முறையில் இரவு பகலாக ஒப்பு நோக்கி உருவாக்கிய Milaksh Graphic media நிறுவகத்தார் — ஜனாப் M.I. லியாக்கத் அலி, நூலைவெளியிடுவதிலார்வங்காட்டியுழைத்த S. S. Siva, ஜனாப்களான Z.A.M. முனீர், M.I.M. இஸ்மாயில் (கட்டடக்கலைஞர்), சித்திக் காரியபபர் ஆகியோருக்கு என் உளமூறும் நன்றியை உரித்தாக்கிக் கொள்ளுகின்றேன்.

எண்ணங்களுக்கு உருக்கொடுக்கும் ஏக இறைவனே எல்லா அறிவுக்கும் பிறப்பிடமானவன். அவனுக்கே அனைத்துப் புகழும் உரியன - நன்றி.

இறையடியான்
ஏயாரெம் சலீம்

"நசூஹா இல்லம்"
19, மத்திய சாலை
அக்கரைப்பற்று - 02.
அம்பாறை மாவட்டம்
ஸ்ரீ லங்கா
31.07.1991

இறையருள் பொழிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அதிகாரம்

## அறிமுகம்

அனைத்துலகப் பரப்பிலும் பலகோடிவருடங்களாக வாழ்ந்து மறைந்தவர்களினதும், இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களினதும் வரலாற்றை நாம் நோக்குவோமாயின் அங்கே அடர்த்தியான பல்வகைப்பட்ட சம்பவங்களைக் காணமுடியும். வருக்கம், மதம், நிறம், பிராந்தியம் மற்றும் தேசம் என்பவற்றின் பேரால் உருப்பெற்ற விரும்பத்தகாத செயற்பாடுகள், மிலேச்சத்தனத்தின் வடுக்களாகத் தெரிவதைக் காணலாம்.

கோரயுத்தங்கள், கொடுமைப்படுத்தப்பட்ட மக்களின் கூக்குரல்கள், ஒடுக்கப்பட்டோரின் ஏக்கப் பெருமூச்சுகள், பிறபட்டோர் பிழிந்தெடுக்கப்பட்டதாலெழுந்த பேரவலங்கள், உரிமைகள் மறுக்கப்பட்டதால் உலைக்களங்களாகி விட்ட நெஞ்சங்களின் வெஞ்சினங்கள் மற்றும் விடுதலை வேட்கையின் வீரக்குமுறல்கள் ஆகியன பல வரலாற்றேடுகளில் வரைவு பெற்றுக் காணப்படுகின்றன.

என்றாலும் இவற்றின் நடுவண் மக்கள் மனங்களில் மகிழ்ச்சி கூட்டிய, மனித நேயமுத்திரைகளின் சுவடுகளும் அவைகளின் காத்திரமான பங்களிப்புகளும், ஆரோக்கியமான நிலைப்பாடுகளும், பனிமூட்டங்களின் வெளிச்சங்காட்டிகளாய் அமையவும் தவறவில்லையெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரமென்பது எதிர்காலத்தில் நம்மைச் சூழவரும் சிக்கல்களைச் சமாளிக்க, ஓர் அனுபவ ரீதியான எச்சரிக்கை என்பதும், மக்கள் இடறி விழாதிருக்க ஒரு படிப்பினை என்பதும், கண்டறியப்பட்ட ஓர் உண்மையாகும். எந்த ஒரு சமூகம் சரித்திரக் கணிப்பீடுகளிற் செல்வாக்குப் பெறவில்லையோ அதன் விழுமியங்கள் போற்றிப் பாதுகாக்கப்படவில்லையோ அது ஒரு சுறுசுறுப்பற்ற சமூகமாகவே கருதப்படும். மனிதனது தொன்மையும் துரித வளர்ச்சியும் உலகியலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதும், அதன் மூலம் அவன் சந்ததியின் எழுச்சிக்கு ஊடகமாக அமைந்துள்ள ஏதுக்கள் எவை என்பதும் கவனத்திற் படவேண்டிய கருமங்களாகும்.

ஆதிமனிதன் விட்டுச் சென்ற மிச்சசொச்சங்களை அரசுகளும், அறிவியலாளரும் அரும் பொருளாக உரிய சாலைகளில் வைத்துப் பாதுகாத்து வருவதும், அகழ்வாராய்ச்சிகளின் மூலம் அவற்றின் உண்மையான நிலைப்பாடுகளை நிறுவிக் காட்டுவதும் வரலாற்று நிகழ்வுகளுக்கு வளங்கூட்டும் பணிகளாகும். வரலாற்றுப் பீடங்களின் ஆய்வுப்படிமங்கள் பெரும் பணச் செலவின் உள்ளாக்கப்பட்டு, மனித நாகரிகத்தின் அடிநாதங்களை மீட்டி எழுச்சி பெறச் செய்வதும் இதன் பாற்படுவனவாகும்.

ஆகவே இவற்றைக் காலாகக் கொண்டு நாமும் ''அக்கரைப்பற்று'' எனும் இயற்கையழகும், இனிய வளமும் கொண்ட நமதூரின் வரலாறுகளையும், இதன் வளர்ச்சி வடிவங்களையும் இந்நூலின் கண் காணப்போகின்றோம். இதன் ஆதிப் பெயர் ''கருங் கொடித்தீவு'' என்பதாகும். இப்பகுதியில் காடுகள் மண்டிக்கிடந்ததுமல்லாமல் ''கருங் (கறுப்பு வெற்றிலைக்) கொடிகளும் பின்னிப் பிணைந்திருந்தன. (கருங்கொடி - கறுப்பு வெற்றிலைக் கொடி - மதுரைத் தமிழ்ப் பேரகராதி. பக்கம் : 522)


அகில இலங்கைச் சோனகர் சங்கத்தின் பெருந்தலைவர் அல் - ஹாஜ் சேர்றாஸிக் பரீத் வரவேற்கப்பட்டபோது பிரபல எழுத்தாளர் ஜனாப் அ. ஸ. அப்துஸ்ஸமத் வரவேற்புப் பத்திரம் வழங்குகிறார். (1983-1-16)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## தகவல் : 01 தமிழ் மக்களின் முதல் வரவு

இப்பகுதியில் பூர்வீகக் குடிகளாக வாழும் தமிழ் மக்கள் எப்போது இவ்வூரிற் குடி வந்தனர் என்பதைத் திட்டமாக வரையறுத்துக் கூறல் முடியாதுள்ளது. என்றாலும் கிழக்கு மாநிலத்திலுள்ள திருப்படைக் கோயிலில் முதன்மை பெற்றதும், தொன்மைப்புகழ் வாய்ந்ததும், மட்டக்களப்பின் எட்டுப்பகுதிக்கும் சொந்தமாயுள்ளதும் அதாவது தேசத்துக்கோவில் எனச் சிறப்புப் பெற்றதுமான அக்கரைப்பற்றிலிருந்து எட்டுமைல் தெற்கேயுள்ள திருக்கோவிலெனும் பழம்பதியில் அமைவு பெற்றுள்ள ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி திருப்பதியிற் காணப்படும் வரலாற்றுச் சாசனங்கள் சில தகவல்களைத் தருகின்றன. அன்றியும் இங்குள்ள சிலரிடம் காணப்படும் ஏட்டுச் சுவடிகளிலும் சில குறிப்புகள் உள. இவற்றைக் கொண்டே காலவரையறையை நாமறிதல் சாலும். அவையாவன : கலிபிறந்து 2800 இல் (கி.மு. 301) மட்டக்களப்பை வந்தடைந்த பரிதிகுல மகிபர்கள் அக்கரைப்பற்றிலுள்ள களப்புமுனையிலிருந்த இலுப்பமரச் சோலைக்கடர்ந்த கோளாவில் எனும் கிராமத்தையடைந்தனர். அங்கு அந்நேரம்



ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலின் பழைய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனங்காடு ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலயம்

மழுவரசனெனும் வேந்தன் திருநாம திப்பரிதி குலமுதல்வர்களை அம்மன்னனோடு உறவு கொண்டாடினார். நாகர்முனை (திருக்கோவிலுக்குப் பண்டைய பெயர் ''நாகர்முனை'' என்பதாகும்)த் திருப்பதிக்குச் சென்று கந்தர் பாணந்துறை கந்தமூர்த்திக்கு முன்வீடாகினார். அதன்பின் தமது தாயகத்துக்குத் திருமுகம் விளக்கி உறவினர், குருமார், சிறைக்குடிகள் ஆகிய முத்திறத்தாரையும் இங்கு வருவித்துக் ''கருங்கொடித் தீவு'' எனும் கிராமத்திற் குடியமர்த்தினர்.

''நகமுடன் கிழ்ச்சதைபோல் மானவர் கலிங்கர்
மல்லிகார்ச்சுன மறையோர்
செகம்புரளக் கப்பல் வழி கொண்டு வந்து
சேர்த்த பின் செப்பேடு பட்டயங்கள்''

எனும் தலபுராணச்செய்யுள் இச் செயலைத் திட்டப்படுத்துகின்றது. மேலும் கீழ்வரும் பாடலும் இவண்கண் நோக்கத் தக்கது.

''கோங்கு வங்காளம் கோசலம்
அயோத்தியாதேசம் ஐம்பத்தாறும்
துய்யதோர் குடைக்குள் துரைத்தன
மியற்றியோன்..... வலியனும் பரிதிகுல மகிபனும் குகனும்
கலியுக வாண்டோராயிரத் தெண்ணூறில்
சித்திர வேலாயுதர் திருச்சந்நிதிக்காய
முத்தமிழ் வழங்கும் முன்னீடுமாகிய பின்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுறவு கொண்டாடிய கோளாவிலில் இவர்கள் தமக்கென ஒரு விநாயகர் ஆலயம் அமைத்தனர். அதன் பின் ஏற்கனவே கருங்கொடித்தீவில் நிறுவப்பட்டிருந்த ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் இப்பகுதி மக்களுக்காயிற்று.

தோமஸ் கத்தோலிக்க மிஷன் தேவாலயம்

N6273




இவ்வாலயம் கி.மு. 295 ஆம் ஆண்டின் பின் (2284 வரு:) அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இக்கோயிலைக் கூத்திகன் எனும் மன்னன் செப்பனிட்டு கலியுகித்து 2840 இல் குடமுழுக்குச் செய்து பரிபாலித்துள்ளானெனவும் கூறப்படுகின்றது. அதன்பின் துட்டகாமினி மன்னன் இப்பகுதிக் குருமாருக்கு ஆலையடி வெளி தெற்காணியையும், ப.ராமாசிய வயலையும் குருக்கள் குடாக் காணியையும் மான்யமாக வழங்கினான்.

அதன்பின் (கி.மு. 180 இல்) மனுநேய கயவாகு மன்னன் அந்தணர் (பிராமணர்)களைத் தம்பட்டைப் பதியில் குடியிருத்தினான். அவனது மனைவியான "தம்பதி" என்பாளின் நினைவாக அங்குள்ள காடு, களனிகளைத் திருத்தி மேலும் பலரை அங்கு வதியவைத்தான். அப்போது அப்பகுதிக்குத் "தம்பதிவில்" எனப் பெயரிட்டான். இப்பெயர் நாளடைவில் மருவித் "தம்பிலுவில்" என வழங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பரம்பரை வழிதொடர்ந்த திருக்கோவில் (நாகர் முனை) ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி திருப்படைக்கோயில் முன்னீடு, தொடர்ந்து அக்கரைப்பற்றுப் பணிக்கனுகுடி, மழுவரசன்குடிகளிலும் தம்பிலுவில் கண்டன்குடியிலுமுள்ள முதல்வர்களிடமிருந்து வருவது இன்றும் காணக்கூடியதாயுள்ளது. கி.மு. மூன்றும் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே கலிங்க மன்னனது கட்டளைப்படி சீர்வளர்வேதம், நம்பிதிருப்பாட்டு ...... படையாட்சி கலிங்கன், சிங்கன், பணிக்கன் ஆகியோரோடு எழுவர் சமகாலத்தில் இங்கு இருத்தப்பட்ட பொருந்தும் அழகும், சிறப்பும், அக்கரைப்பற்றைத் தவிர வேறெங்குங் காணமுடியாத மேலான திகழ்வாகும்.



நாம் மேலே காட்டிய குடிவழிவந்த மக்கள் வாழ்ந்த அடிச்சுவட்டாகத் ... தெரு, பண்டாரத்தெரு, வெள்ளாளர் தெரு, சோனகர் தெரு, நாவிதர் தெரு, பற்மகாரன் தெரு, சுண்ணாத் தொழிலாளர் தெரு, மாலிகார் தெரு, வெட்டியான்தெரு, முக்குவர் (முக்குகர், முற்குகர் - அரசர்; தெரு, வெற்றிகொல்லர் தெரு, கரும் பொன் தொழிலாளர் தெரு, கன்றார் தெரு, சான்றோர் தெரு, (இதிற் சில தெருக்களின் பெயர்கள் மக்களுக்கு மனமுறிவு ஏற்படத்தக்க வகையில் அக்காலத்திற் பெரும்பாலும் அழைக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளன. எனவே அப்பெயர்களைத் தவிர்த்து அகராதியில் உள்ளவாறு மாற்றுப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன) என்று அழைக்கப்பட்டு வந்துள்ள பெயர்களால் இன்றும் காணப்படுகிறது. இப்பெயர்களுக்கமைய பிரிந்து மக்கள் இவ்வெல்லைகளில் வதிவிடமமைத்து வாழ்வதை நாம் காணுகின்றோம்.

கி.பி. 119 இல் இப்பகுதி மக்கள் பின்பற்றிய பட்டிநகர் பத்தினித் தெய்வ வழிபாட்டிற்காக கி.பி. 199 இல் அக்கரைப்பற்று, கோளாவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த பணிக்கனுகுடி, மழுவரசன்குடிப் பிரதிநிதிகள் முன்னிட்டாக இருந்து வந்ததும், கல்முனை மாவட்ட வழக்காடு மன்று 17/எம். ஐ. என். இலக்க வழக்கு மூலம் இதை ஏற்றுக் கொண்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவுமில்லாமல் திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய மாபுவழிப் பாரம்பரிய திருவாகத்தை, ஒரு குழுவினர் கொச்சைப்படுத்தி, வரன்முறைக்கு மாறுகச் செயற்பட்டனர்.

இதை மறுக்கும்படி கோரி மட்டக்களப்பு மாவட்ட வழக்கு மன்றில் முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டது. அம்மன்றளித்த 886/எம். ஐ. என். இலக்கத் தீர்ப்பில் முன்னுருத்தாளரே ஆலயப்பணிகளைச் செய்யத் தகுதி பெற்றவர் என்ற உரித்தாவணம் வழங்கப்பட்டது. இதனுல் வாழையடி வாழையாக வழிவந்த ஆலய உரித்துத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியால் வழக்காடியோர்களது உரித்து இடையில் வந்ததென்ற வாதம் வலுவற்றதாயிற்று.



அம்பாரை மாவட்ட நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் திரு செந்தில் நாதன் புலமைப் பரிசில் பெற்றுவெளிநாடு சென்று திரும்பிய போது அன்னாருக்கும் துணைவியாருக்கும் பணிமனை உதவும் வரவேற்புபசாரணை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் மட்டக்களப்பின் தென் பகுதியான கரைவாகு, சம்மாந்துறை, உன்னரசுகிரி (உன்னரசு கிரி பாணமையிலிருந்து தெற்கே மாணிக்க கங்கை வரையும், மேற்கே லகுகலையையுமடக்கிய நிலப்பரப்பு) பாணமை ஆகிய பகுதிகளுக்கு அதிகாரஞ்செய்வோராக (பாணமைப்பற்றுக்கு வன்னுமையாக - வன்னியனுர்) பணிக்கனுர் குடியைச் சேர்ந்த கந்தப்போடி என்பவரை 1766.11.06 இல் ஒல்லாந்தர் நியமித்ததிலிருந்து அவ்வூர்ப் போடியார் பதவி நிலை வழிவழி மருமக்கட்தாயுகமாக வந்து 1990 ஆம் ஆண்டாகிய இற்றைவரை திரு. ச. சம்புநாதப்போடி வரை தொடர்ந்துள்ளது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

கந்தப்போடியை 1766 கார்த்திகை மாதம் 06 ஆந் திகதி பாணமைப்பற்றுக்கு நிலைமைப் போடியாக (வன்னுமை) ஒல்லாந்தர் நியமித்ததாக மேற்குறிப்பிட்டோம். கீர்த்திஸ்ரீ ராசசிங்கன் (1747 - 1782) கண்டிக்கு அரசனுக இருந்தபோது மட்டக்களப்புக்கு நிலைமை வகுக்க வேண்டியிருந்ததால், ஒல்லாந்தர் மட்டக்களப்பை இருபகுதியாகப் பிரித்து வடக்குப் பிரிவுக்கு அறுமக்குட்டி என்னும் முற்குகரையும், தெற்குப பகுதிக்குக் கந்தப்போடி எனும் முற்குகரையும் நிலைமைப் போடிகளாய் (வன்னுமை) நியமனஞ் செய்தனர். இந்தச் சக்கரவர்த்தியின் பெயர் கோலாண்தொர் என்பதாகும். இன்னும் பிரதான அலுவல்களான மெஸ்தர்குமான், வெல்லம்பல்க், அர்த கோராதபயன, அங்கலவெல்க், அதிரியானிஸ், புவானிஸ், மற்றும் பிறன்ஸ்கே




முதலாவது பிரதம அமைச்சர் கௌரவ D. S. சேனநாயக்க கல்லோயாத் திட்டத்தைத் தொடக்கி வைக்க அக்கரைக்கு வந்தபோது பிடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரும் இவர்களுக்குக் கொடுத்த ஆக்கொத்து (உரித்தாவணங்)களில் கைச்சாத்திட்டுள்ளனர். இவ்விருவரும் நிலைமைப்பதவியை ஏற்றுக் கந்தப்போடி கரவாகு, சம்மாந்துறை, பாணமை, உன்னரசுகிரி ஆகிய பகுதிகளையும், அறுமக்குட்டிப்போடி மட்டக்களப்பு, எருவில், போரமுனை நாடு, மண்முனை, கோறளை என்னும் பிரிவுகளையும் நிலைமைப் போடியெனும் தத்தமது அதிகாரங்களின் கீழ்க் கொண்டு வந்தனர்.

ஒல்லாந்தரால் இவ்விருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள ஆக்கொத்து (உரித்தாவணம்)ப்பிரதிகளில் தெற்குப் பாகத்துக்கு நிலைமைப் போடியாய் உரித்தளிக்கப்பட்டுக் கந்தப்போடிக்கு வழங்கிய ஆக்கொத்தின் பிரதி இங்கு தரப்பட்டுள்ளது. அக்கால (1766)த் தமிழ் நடைக்கும் இது எடுத்துக் காட்டாக அமைந்துள்ள தெனலாம். இந்த ஆக்கொத்தில் ஆங்காங்கே தமிழ் வழக்குகளும் தென்படுகின்றன. இது வருமாறுகும். :-


''கந்தப்பெடி சாதி முக்குவன் எங்களிடத்திலே பாணமைப் பகுதிக்குப் பெடியாய் இருக்கக் கெட்டபடியால் அதற்கு நாங்கள் நிர்ணயித்துப் பார்த்துத் தன்னுடைய நல்ல நடவடிக்கையைக் கெட்டுத் நீர்மானித்து முன் சொல்லப்பட்ட பாணமைப் பகுதிக்குப் பெடியாகக் கற்பிக்கிறோம். அது கூடக் கொடுக்கப்பட்டது தமது தொழிலுக்கடுத்த சங்கையும் புரோசனமும் பெரியவர்களுக்கு நடக்கும் பூச்சியமும் பொது கிடைத்திருந்த படிக்கு இப்பொவும் அந்தப் பிரகாரந்தான் இதிற் கட்டளை பண்ணுகிறோம். இதிலடங்கிய சகலமான பேரும் இந்தக் கந்தப்பெடியைப் பெடியாக அறிந்து உண்டான படிக்குச் சங்கிக்கவெணும், இதற்கு அடையாளம் திட்டப்படுத்தி வளமையான முத்திரையும் வைத்துக் கையொப்பம் பொட்டுக் கொடுத்தோம். இப்படிக்கு இலங்கைத் தீவிற் கொழும்புக் கோட்டைய்

766 ஆ. கார்த்திகை மீ 6 யிலே

கையொப்பம் வைத்தது இமான் வெல்லம்பல்க்

இலங்கை நயில் முத்திரை வெத்த லாகிரியாலே வைத்தது.

சங்கை போந்த யுத்த மக கிய கொலொன்தொர் இமான் வெல்லம்பல்க் ப்படிக்கு

மேலான த்தது ககாராசா மெல்தர் அவர்கள் கட்டளை

கீழே கைபொப்பம் வைத்தது யோகான் கொஸ்தன் அங்கலவெல்க் சக்கடத்தார் சரிவரக்கண்டது. அதிரியானிஸ்யுவாஸிஸ்பிறுன்ஸ்கெ

தொலுக்கரித்தது வைத்தக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்த ''ஆக்கொத்து'' பாணையைப்பற்று றட்டே மஹராத்துயாவாகவிருந்த (1858 - 1869) முதியான்சலாகே முத்து பண்டாவின் வாரிசான ஓப்பேகொட தர்மதாஸ விடமிருந்து பெறப்பட்டது).

இப்பகுதி கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் முன் கண்டி மன்னராட்சிக்குட்பட்ட பிரதேசங்களுக்கு வன்னுமைகள் திறை செலுத்த வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன் காரணியால் கண்டி மன்னருகளிருந்த தூல சிங்கன் (2ஆம் குமாரசு) என்பான் தனது பிரதாவிகளுடன் கி.பி. 1469 இல் திம்மகொல்லைக்கு [illegible] சுற்றுலா வந்தான். இச்சுற்றுலாவின்போது மிக மகிழ்வுடன் மன்னன் முன் ஓடிவந்து ஒருவர் மங்களச் சங்கை ஊதினார். அதைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் அச்சங்கையூதியவருக்கு வெகுமதியாக ஒரு காணியை வழங்கினார். அது ''சங்கு ஓடிப்பத்து'' என அழைக்கப்படுகின்றது. (''சி. மாரைப்ப போடி அவர்களின் (அக்கரைப்பற்று - 07) பதிவேட்டிலிருந்து'')

தகவல் - 02. முற்காலத்தில் அயோத்தியை ஆண்ட சூரிய குலத்து இளவரசர்கள் ஒற்றர்கள் மூலம் தேவநாடான அழகாபுரி (இலங்கை)யின் வளத்தையும் வனப்பையும் விழுமியங்களையுமறிந்து இங்கு வந்து குடிபுக எண்ணினர். அதற்கு தன் பரிவாரங்களுடன் குதிரைகள் மீதமர்ந்து திக்விஜயமொன்றை மேற்கொண்டு தில்லைவனத்தையடைந்தனர். அங்கு தில்லைக்கொற்றவையை வழிபட்டு விட்டு அங்கிருந்து தென்னிந்தியக் கரையிலுள்ள மருவிப்பட்டணத்துக்கு வந்து படகுகளிலேறி ஆற்று வழிப் பயணத்தைத் தொடர்ந்தனர் அப்படகுகள் ஒரு மட்டமான களப்பையடைந்து அங்கு ஆழமில்லாத இடமொன்றிற் தரை தட்டின. மட்டமான களப்பு மட்டக்களப்பென இன்று பெயர் பெற்றுள்ளதெனத் தெரிகிறது. அவர்களின் நடமாட்டங்கண்ட திமிலர் தலைவனான புலியன் என்பான் அவ்விளவரசர்களையும், கூட்டத்தினரையும் எதிர்த்துப் போராடினான்.

இவர்கள் தாமதியாது காயற்பட்டனத்திலிருந்து இவ்விடம் வந்திருந்த பட்டாணியரின் உதவியுடன் புலியனையும், அவனுடைய கூட்டத்தினரையும் அடித்துத் துரத்தினர். திமிலர் குலத்துக் கன்னியர் சிலர் வென்றவர்களாற் சிறைபிடிக்கப்பட்டனர். இத்திமிலர் இளம் மகளிரைப் பட்டாணியரான முஸ்லிம்கள் திருமணஞ் செய்யவேண்டுமென இளவரசர்கள் கேட்டுக்கொள்ள முஸ்லிம்கள் சம்மதித்து மணந்து கொள்ளலாயினர். பின்பு அவர்கள் முற்குகக் குமரிகளையும் வதுவை செய்தனர். ஏறாவூரில் இவர்களைக் குடியேற்றிய இளவரசர்கள் தாம் வெற்றிக்கொடியேற்றிய பகுதிக்குத் தம்முடனிணைந்து வந்த கலிங்க இளவலை (வீர நாரணன் போலும்) அதிகாரத்தில் இருத்தி விட்டு, தென்திசைபால் சென்றனர். அங்கு கொங்கு காமொப்பன் புட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டணையூடாக கொக்குநெட்டிச் சோலை, மண்ணேற்றிமுனை, சப்புப்பன்துறை, மண்கற்புட்டி ஆகிய இடங்களுக்கு விஜயஞ் செய்தனர்

அங்கிருந்து பட்டிப்பளையாறு, சதுப்பு நிலப்பரப்புகள் ஆகியவற்றைக் கடந்து ஒரு புட்டியைச் சென்றடைந்தனர். (இது தக்கியாவடிக்கு மேற்கிற் காணப்படும் முல்லைத்தீவென்பர்) அவ்விடத்தில் வைத்து அரசன் அக்கரைப்பட்டோம். இனி எதிர்ப்பில்லை நமக்கு எனக் கூறியதாகத் தெரிகிறது. இதனால் அக்கரைப்பட்டவூர் என அவர்களால் அழைக்கப்பட்ட இவ்வூர் காலக்கழிவிற் திரிவுபட்டு "அக்கரைப்பற்று" என வழங்கலாயிற்று என்பாரும் இங்குளர். அன்றியும் ஆலையடி வேம்பு, கள்ளியந்திவு, கோரக்களப்பு, சல்லித்திவு (மங்கை மாரியம் தோட்டம்) புளியடிப்புட்டி (தற்போது குடிவதிவாரில்லை) பட்டியடிப்புட்டி ஆகிய பகுதிகளும் இவ்வூரை உள்ளடக்கியதாகும். பொதுவாக இதை அக்கரைப்பற்று என்று நாம் கூறினும், சிறப்பாகக் கருங்கொடித்தீவுக்கே இந்நாமம் மிகப்பொருந்துவதாகும். கடந்த நாற்பது வருடங்களுள் பட்டியடிப்புட்டி, பள்ளிக்குடியிருப்பு, காதிசிய்யாத் தோட்டம், முருவோடை, பதுர்நகர், ஆலிம் நகர், எசங்கணிச்சீமை, இலுக்குச் சேனை, அம்பலத்தாறு (வேலமரத்துவெளி) நாற்பதாம் கட்டை (பொத்துவில் வீதியில்) கண்ணகிபுரம், அமரசூரியா தோட்டம், வடிச்சலடி, உப்புக்கரச்சி, புட்டம்பை, அளிக்கம்பை, கவடாப்புட்டி (நீத்தையாறு) மற்றும் சாகாமம் ஆகிய பகுதிகளில் மக்கள் புதிதாகக் குடிவந்த கிராமங்கள் காணப்படுகின்றன.

பட்டிநகர் அம்மன் மழைக்காவியத்தில் "மாமேவு மக்கரைப்பற்று நகர் மானிடர் எனவும், பொற்புரு வந்த காவியத்தில், "கங்கை சூழ் அக்கரைத்தேசம்" (பரிதி குலத்தரசர் எழுவர் இங்கு வசித்த பின்னணி) ஏழும் வாழி" எனவும், வேறு சில காவியங்களிலும் அக்கரைப்பற்றுப் பற்றிய தரவுகள் உள.

சீதவாக்கை (1521-1594) யிலிருந்து வந்த நிலைமையான சிறுளை என்பார் இங்கொரு பகுதியிற் கருந்தெகிளம்கொடியெனும் ஒருவகை காட்டுக் கொடிகளை வெட்டி ஊர் முளைப்புட்டியமைத்து அவ்விடத்தில் வசித்ததாக ஒரு சிலர் கூறுகிறுர்கள். இதற்காதாரமாக ஈசுர, பிலவ ஆகிய இரு வருடங்களைக் கூறி மூப்பது வருட இடையீடு காட்டுகின்றனர். அக்கால கட்டத்தில் கலிசகாப்தம், கி.மு., கி.பி. எனும் ஆண்டுகளில்லை.

"கங்கை வளைந்து வந்து கார் கடலிற் சங்கமித்து
பொங்கு மட்டற்றுழை பூப்பெய்து நன்கு
இருந்து களையாற்றும் இன்முகத்து நன்மாதர்
விருந்தோம்பும் "கருங்கொட்டியூர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பழந்தமிழ்ப் பதிச் சிறப்புப்பாடும் வெண்பாவொன்றும் இவ்வூர் பற்றிய பண்டு நிலையைப்பற்றிப் பகர்கின்றது. இது தவிர இயற்கை எழிலும், இனியவளங்களும் நிறைந்த இப்பகுதி நான்கு பக்கத்தாலும் நீராற்சூழப்பட்ட ஒரு தீவாகும். கடல் தவிர்ந்த (கிழக்குப் பாகம்) மற்றும் மூன்று பக்கங்களிலுமுள்ள நீரேந்திய நிலப்பரப்பெங்கும் பரவலாகக் ''கருங்கொட்டி'' எனும் ஒரு வகை நீர்த்தாவரம் காணப்பட்டதாகவும், அது பூத்துக்குலுங்கி அழகு காட்டிய நேரம், கலிங்க மன்னன் அதைக்கண்டு ஆனந்தமுற்று இப்பிரிவைக் ''கருங்கொட்டித்தீவு'' எனவழைத்தானெனவும் செய்தி கூறுவாருளர். கொட்டிக் கிழங்கும் அதன் பூவும், காயும் இங்குள்ள மக்களின் சுவை விருந்தாக அக்காலத்தில் இருந்துள்ளது. ஒருகாட்டிலோ, நீர் நிலையப் பரப்பிலோ பல்வகைக் கொடிகளும், செடிகளும் காணப்படுவது இயற்கையான ஒரு நிலையாகும் என்பதை நாம் இதயத்திற் கொள்ளுதல் வேண்டும்.
(''சி. மானுகப் போடி அவர்கள் அக்கரைப்பற்று -07) பதிவுக் குறிப்பிலிருந்து'')




கௌரவ பிரதமர் டட்லி சேனாநாயக்க அரசடிச் சந்தியில் வைத்து ஜனாப் M. M. முஸ்தபா M. P., திரு. தங்கராசா சி. ச. உ. ஆகியோரால் M. P. வரவேற்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் : 03 பண்டை தொட்டு இலங்கைக்கும் பாரத நாட்டிற்கும் நெருங்கிய தொடர்புஇருந்து வந்துள்ளது. அக்காலத்தில் தென்னிந்தியாவில் திமிலரெனும் மீனவர் வர்க்கத்தினர் வசித்தனர். அவர்கள் மட்டக்களப்புக்கு வந்து தம்தொழிலுக்கு இது ஏற்ற இடமெனக் கருதி அங்கு பாதுகாப்பரண் அமைத்து வதியத் தொடங்கினர். இவ்விடமே திமிலதீவாகும். இந்நிலையில் இலங்கையின் செல்வச் செழிப்பையறிந்த முற்குகர் எனும் சாதியினர் வட இந்தியாவிலுள்ள அயோத்தி நகரிலிருந்து இவ்விடத்துக்குப் படைகொணர்ந்தனர்.

அந்நேரம் இப்பகுதி வனாந்தரமாக விருந்தது. இக்காட்டினுள் காணப்பட்ட சதுப்பேரியினூடாகத் தமது ஓடத்தைச் செலுத்தினர். வாவி எல்லையில் ஓடஞ்சென்றதும் அதற்குமேல் ஓடத்தை ஓட்டமுடியவில்லை. இந்தக் களப்பு இதுவரை மட்டுமே என்று அவர்கள் கூறி அவ்விடத்துக்கு மட்டக்களப்பு என்ற பெயரைச் சூட்டினர். இப்பரப்பிற்கு ஏழு அரசர்கள் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அரண்மனையையும் ஒவ்வொரு கோயிலையுங் கட்டி அங்கு நிலைகொண்டனர்.

தமக்கு வேண்டிய பணியாளர்களை இந்தியாவிலிருந்து கொணர்ந்து வைத்துக் கொண்டனர். கி.மு. 103 இல் வந்த சோழ நாட்டு மன்னர்கள் திருக்கோயிலைக் கட்டிமுடிப்பதற்கு இந்தியாவிலிருந்து கற்கள் மற்றும் பொருள்களைத் தருவித்துக் கட்டினார்களெனவும் கோயிற்பதிகக் குறிப்பிற் காணப்படுகின்றது. (''வித்துவான் F. X. C. நடராசா - மட்டக்களப்பு மான்மியம்)



மாண்புமிகு பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க ஒரு சிறுமியிடருந்து மலர்ச் செண்டு பெறும் வரவேற்பு. இடப்புறம் சேர் முதலியார் M. S. காரியப்பர் காணப்படுகின்றார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தகவல் :- 04.** கலி பிறந்து 3110 ஆம் வருடம் புவனேகபாகுவெனும் கலிங்க மன்னன் தம் மனைவி தம்பதி நல்லாளொடு வந்து மட்டக்களப்பை அரசுபுரிந்து பிரசன்ன சித்துவிடம் உறவாடி இருந்தான். அவர்களுக்குத் துணையாகப் பணியாளர்கள் வந்தனர். இவ்வுறவின் போது பிரசன்னசித்து புவனேகபாகுவிடம் நாகர்முனை (திருக்கோவில்)யில் சிதைவுற்றிருந்த ஆலயத்தைச் செப்பனிட்டுத் தந்துதவுமாறு வேண்டினன். அதற்கமைய புவனேகபாகு தன் மாமனை திருச் சோழனுக்கு ஓலையனுப்பிச் சிற்பிகளையும், திரவியங்களையும் அங்கிருந்து வருவித்தான். பின் ஆலயம் செப்பனிடப்பட்டுப் புவனேகபாகுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின அந்தணர்களின் ஆலோசனைப்படி அபிசேகஞ் செய்யப்பட்டுத் திருக்கோயிலென நாமஞ் சூட்டிப் பிரசன்னசித்துவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இது நிகழ்ந்து பல வருடங்களின் பின்பு புவனேகபாகுவின் மகன் மேகவர்ணன் (மனு நேயவாகு) உன்னரசுகிரிக்குப் பட்டஞ் சூட்டப்பட்டான். இவ்வைபவம் கலிபிறந்து 3150 ஆம் வருடம் நடைபெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (''வித்துவான் F.X.C. நடராசா மட்டக்களப்பு மான்மியம்)

**தகவல் :- 05.** மட்டக்களப்பை ஆட்சி செய்த நாசகனை மேகவர்ணன் சிநேகம் பிடித்துத் தனது தந்தை செப்பனிட்ட நாகர் முனை (திரு)க்கோயிலை மேலும் சிறப்பிக்க எண்ணி சோழநாட்டுச் சிற்பிகளை வரவழைத்துத் தருமாறு வேண்டினன். அதற்கிசைந்த நாசகன் சோழ தேசத்துச் சிற்பிகளை மீண்டும் வரவழைத்து மேகவர்ணனிடம் ஒப்படைத்தான். கோயில் புனரமைக்கப்பட்டு அபிஷேகஞ் செய்யும் தினம் குறிக்கப்பட்ட திருமுகம் அனுப்பப்பட்டது.



திரு. அநுரா பண்டாரநாயக்க வரவேற்கப்படுகிறார். அவரது இடப்பக்கமாக பிரபுகர் (அல்பர்ட்) சாரபாக காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைகேட்டறிந்த சோழமன்னர்கள் இரத்தினம், முத்து, மாணிக்கம், நாகமணி, தங்கத்தட்டு, சரிகைப்பட்டு, பாரிசாதம் இவைகளை ஏழு மன்னர்களிடம் சேர்த்து நாற்பது திறைக்குடிகளையும் நாகர்முனைக்கு அனுப்பினர். அவர்கள் [illegible] கோரைக் களப்பை அடைந்தனர் (திருக்கோயிலின் தென்பக்கக் களப்பு) நாசகன் மனுநேயவாகுவின் பிரதானிகள், அந்தணர்களாகியோர் வந்தவர்களை வரவேற்று நன்றிகூறினர். பின் திருப்பணிக்குச் சென்று திரவியங்களையும், தம்பதி நல்லாளின் உறவினர் கொடுத்த பத்திரங்களையும் மனுநேயகயபாகுவிடம் கொடுத்து நின்றனர். கயவாகு அவர்களை வாழ்த்தி அறுசுவை உணவுகளளித்து அபிசேகஞ்செய்து, ஆறுகாலப் பூசை நடக்கும்படி ஏழு இராசர்களையும் படையாட்சி குடியிலுள்ள மூன்று வன்னிமைகளையும் தெரிந்து பிரசின்னசித்துவின் சந்ததிகளே சடங்குகளின் முதன்மையாளராய் வரவேண்டுமென விதித்தான். பின் திருப்பணிக்கு ஆதாரமாக ஏரிகள், களனிகளை உண்டாக்கக் கருதி சங்கு மண்கண்டு (சங்கமன்கண்டி) தொடக்கம்

ஜனாப் M.I.M. [illegible] M.P [illegible]



தாடைகிரிவரை இருபத்து நான்கு ஏரிகள் ஒன்றுக அமைத்தனர். முப்பத்து நான்கு மதகுகள் அமைக்கப்பட்ட ஓரேரியும் தோண்டப்பட்டது. இவற்றை நாகர்முனைத் திருப்பணிக்காக நன்கொடையளித்தனர். அந்தணர்களை அப்பிராந்தியத்திற் குடியமர்த்தி அவ்விடத்திற்குத் ''தம்பட்டார் ஊரென'' நாமஞ்சூட்டப்பட்டது. மன்னனின் தாயான தம்பதி நல்லாள் பெயரில் ஒரு வாவியமைத்து அதற்குத் ''தம்பதிவில்'' எனப் பெயரும் சூட்டப்பட்டது. (''வித்துவான் F.X.C. நடராசா - மட்டக்களப்பு மான்மியம்)

இப்பிராந்தியத்தில் நாகர் இனத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் பண்டு தொட்டு வாழ்ந்து வருகிறார்கள். 1ஆம் விஜயபாகுவின் காலத்தில் தம்பிலுவில் அம்மன் கோயிலுக்கு அரசமானியம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்விபரம் கி.பி. 1075 ஆம் ஆண்டிற்குரிய கல்வெட்டிற் குறிக்கப்பட்டுள்ளது.

(''அ.ஸ. அப்துஸ்ஸமத் (B.A. Hons) நூலகத் திறப்பு விழா மலர்'')

## கோயில் பரிபாலனத்தில் பரம்பரைச் சம்பிரதாயத் தாக்கம்

கலியப்தம் 2800 ல் வந்து திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் பெருமானுக்கு முன்னீடாகித் தனது ஆணைக்கமைய அழைத்து வரப்பட்ட நற்குடிகள் கருங்கொடித்தீவில் குடியமர்த்தப்பட்டனர். கிராம பரிபாலனம், தேசபரிபாலனம், ஆலயபரிபாலனம் செய்து வந்த சீர்மையை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய வரலாற்றுடன் கருங்கொடித்தீவிலுள்ள பகுதிக் கோவிலான ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய நடவடிக்கைகளும் எடுத்துக் காட்டுகின்றன. முற்கால முறைப்படி கோயிலில் நீதிமன்றமமைத்து (பன்குடாவெளி அப்பிலான் துறை ஆகியவற்றுடன் தொடர்பிருந்ததாகக் கூறுவர்) சபை கூடிப்பரிபாலனஞ் செய்தது. மணவினைகள் தொடர்பாலும் வேறு ஏதுக்களாலும் நிலைமை கண்ணப் போடியார் நிருவாகத்தின் போது பின் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு மாறியதென்று வரன்முறையாகப் பலர் கூறி வருகின்றனர்.

குருக்கள் குடியெனும் வேதியர் குலமும், பணிக்கனார்குடி, மழுவரசன்குடி, காலிங்காகுடி, படையாண்டகுடி, உலகிப் போடிகுடி, சங்குபசரித்தான்குடி, சட்டிலான்குடி ஆகிய கலிங்க மன்னர் மரபுவழி என்பவற்றுடன் கண்டங்குடி முதலான வேளாளர் செட்டி, சிர்பாதர், பரவர், கம்மாளர், சான்றோர் இவர்களுடன் நலமான நாவிதன், நன்மை தீமைக்கோலை சொன்னபடி எழுதும் மோட்சன், கோயிலார், பள்ளியார், பூமாலைக்காரர், வாணிபர், குயவர், கூறைகறைபோக்குபவர் ஆகிய ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் வரன்முறையாகத் தலைவர் தேர்வு பெறுவர். அதன்பின் தலை முதல்வர்கள் யாவரும் பணிக்கனகுடியில் சொல்லப்பட்ட முறைப்படி கும்பவரன் முறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ப்போடியார் (குறுநில மன்னர் - தேசத்து வன்னிமை) தலைமையின் கீழ் ஒன்று கூடுவர். இக்கூட்டலின்போது கூறைகளை போக்குபவர்களின் தலைவன் ஊர். குரு, நிலைமை தலைமை எனக்கூறி மூன்று வெள்ளைத் துணிகளை மூன்று இடங்களிலிடுவர். அதன்பின் குருவும் ஊர்ப் போடியாரும் அமர இலங்கைத் தொடர்ந்து மற்றையோர் அமர்வர்.



நாடாளுமன்றத்தின் பொத்துவில் தொகுதி உறுப்பினர் கௌரவ M. I. உதுமாலெப்பை வரவேற்கப்படுகின்றார்

வாரமொருமுறை வெள்ளிக்கிழமை தோறும் ஆலய முன்றிலில் ஒன்றுகூடும் இச்சபையில், ஊர்ப் போடியார் தலைவர் செயலாளராகவும், உலகிப் போடியார் குலத்தவர் கணக்குப்பிள்ளையாகவும். மழுவரசன் குடியில் வண்ணக்க (நடைமுறைப் படுத்துபவ)ராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் பொருளாளராகவும் பணி செய்வர். இச்சபையில் நிலைமை தலைமையாக கிராம விதானை, மழுவரசன் குடியில் ஒரு பெரியார், கிராமத்தில் மதிப்புயர்ந்த வைத்தியரொருவர், மாந்திரீகர் உட்பட மூன்று பேர் ஆகியோர் உத்தியோகப்பற்றற்ற கௌரவ பார்வையாளராக கலந்து கொள்வர்.

கிராமத்து நலன்கள், ஆலய ஆராதனை ஒழுங்குகள், வரவு செலவுக்கு ஆள் பற்றி ஆலோசிக்கப்படும். அத்தோடு குடும்பக் குலவுச் சிக்கல்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களுக்கிடையிலேற்படும் மனமுறிவுகள், கொடுக்கல் வாங்கல், காணிப் பிரச்சினைகள், எல்லைப் பிரச்சினை, சண்டை சச்சரவுத் தாக்கங்கள் மற்றும் கடன் கெடுபிடிகள் போன்றவை விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும்.

சிலவேளைகளில் கிராம வழக்கு மன்றுகளிலிருந்து வழக்குகள் இந்த ஆலயத்துக்கு, விசாரித்துத் தீர்ப்பளிக்கும் படி அனுப்பப்படுவதும் உண்டு. சபையின் நீதிபதியாக ஊர்ப்போடியார் கடமையாற்றுவார். சில சந்தர்ப்பங்களில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினரின் ஆலோசனை பெறப்படும். கிராமங்களிலேற்படும் திருமணம், மரணம் மற்றும் முக்கிய நிகழ்வுகளில் இம்மன்றத்தினர் பங்குபற்றிச் சிறப்பிப்பர். தேவையான பணியாளர்களையும் அவற்றிற்குக் கொடுத்துதவுவர். (மிகப்பரந்த அளவில் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இவ்வழக்கம் இன்று கருங்கொடித்தீவு எல்லைவரை குறுக்கம் பெற்றுள்ளது.)

அயற் கிராமங்களிலேற்படும் சமயவிழாக்கள், மற்றும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளுக்குச் சேவை செய்யும் தகைமையாளர்கள் தேவைப்படுமிடத்து உரியவர் வந்து ஊர்ப்போடியாரிடம் விண்ணப்பிப்பர். ஊர்ப்போடியார் உரிய குல முதல்வருக்கு அறிவிப்பார். அத்தலைவர் கொடுக்கும் தகைமையாளர்களை உரியவர் அழைத்துச் செல்வார். இவ்வூழியர் நன்கு மதிக்கப்படல் வேண்டும். அதற்கு மாற்றமாய்ச் செயற்பட்டால், அதைச் சபையின் கவனத்துக்கு ஊர்ப்போடியாரிடம் கொண்டுவரும் உரிமை அவருக்குண்டு.

கிராமங்களுக்கான பொது அறிவித்தல்கள், சபையின் விசேட ஏற்பாடுகள், ஆலய விசேடங்கள் என்பன சபையின் முடிவிற்கமைய ஊர்ப் போடியாரின் ஆணைப்படி நாவிதர் பகுதிக்குரிய தலைவர் (முல்லைக்காரன்) சந்திகள், வீதிகள், முக்கிய இடங்கள் என்பனவற்றில் நின்று இரவு ஒன்பது மணிக்குள் விடயத்தை விளக்கிச் சொல்லி மக்களுக்குக் கேட்கும்படி பெருங்கூக்குரலால் ''கூய்'' யிட்டுத் தெரிவிப்பர். இதையறிந்த மக்கள் அதன்படி செயற்படுவர். இப்படியானதொரு வரன்முறை ஆளுமை வழக்கம் (முஸ்லிம்களும் இதே போன்ற முறையைப் பள்ளி வாசல்களில் அமுலாக்குகின்றனர்) கோயிற்பரிபாலன சபையின் சேவையாகக் கொள்ளப்பட்டது. ஆட்சிமாற்றங்கள், சனநாயகத்தாக்கம், மனித சிந்தனையின் திருப்பம், ஆலய மறுசீரமைப்புப் போன்ற இன்னோரன்ன விடயங்களால் இவ்வரன் முறையில் சில திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

பழைய வரன்முறைகள் மக்களின் வாழ்வின் சிறப்பையும், செழிப்பையும், மனநிறைவையும் எடுத்தோதுவனவாக விருப்பதால், அம்முறைகளை மீண்டும் நடைமுறைப்படுத்த. தற்போதைய ஊர்ப்போடியாரான திரு. த. சம்புநாதபிள்ளை J.P. ஆவன செய்து வருதல், குறித்துரைக்கப்பட வேண்டியதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் மக்களின் மூல வரவு

முஸ்லிம் மக்களின் முதல் வரவுபற்றிய வரையறையான ஆண்டு பற்றித் திட்டமாய்க் கூற முடியாதுள்ளது. கருங்கொடித்தீவின் தோற்றம்பற்றியும், குடியமர்வு பற்றியும் ஆதாரபூர்வமான ஆவணங்கள் கிடைத்தில. அப்படியிருந்தாலும் இவ்விரு விடயங்கள் பற்றியும் சில தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டே நமது முடிவெடுப்பை நிறுவ வேண்டியுள்ளது.

**தகவல் : 01.** போர்த்துக்கீசரின் ஆட்சியின்போது முஸ்லிம்கள் பலவழிகளிலும் துன்புறுத்தப்பட்டனர். அவர்களின் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன. வணக்க வழிபாடுகள் தடுக்கப்பட்டன. போர்த்துக்கீசர் முஸ்லிம்களின் கறுவா வியாபாரத்திற் திட்டமிட்ட சதியை மேற்கொண்டு, அவர்களை நட்டப்படுத்தியும், இஸ்லாம் சமயத்தை இழித்துரைத்தும் வந்தனர். இதையறிந்த முஸ்லிம்கள் அவர்களோடு மிகக் கடுமையாக நடந்து கொண்டனர். அதனுல் தேசாதிபதியான அசிவிடோ (உல்வீஸ்) 1603 இல் முஸ்லிம்களை வேறிடங்களுக்குத் துரத்தினுன்.


என்ன செய்தாலும் முஸ்லிம்கள் நெஞ்சுரத்தோடு போர்த்துக்கீசரை எதிர்த்தே வந்தனர். 1612 இல் அசிவிடோ கோவைக்கு இராசப்பிரதிநிதியாகச் சென்றதும் முஸ்லிம்களின் நிலையிற் சில மாற்றங்கள் ஏற்பட்டன. இவர்கள் கண்டி மன்னனுன சேனரதன் என்பானை ஆதரித்ததும் அசிவிடோவின் பகைக்கு மற்றுமொரு காரணமாகும். பின் 1618 இல் கொன்ஸ்தாந்தைன் டீசா (கொன்சுதாந்தினே தசத நொரஞு) தேசாதிபதியாக நியமனம் பெற்றுன். இவன் முஸ்லிம்களை மாத்திரமல்ல தமிழர்களையும் கொடுமையாக நடத்தினுன். யாழ்ப்பாண அரசன் சங்கிலி எனும் செகராச சேகரனேடு பொருதி அவனைக் கைது செய்து கோவைக்கு அனுப்பிவைத்தான்.

1621 இல் டீசா அனுப்பியபடை யாழ்ப்பாணத்தையும், நல்லூரரையும் கைப்பற்றியது. இச்சந்தர்ப்பத்தில் இவன் தனது இராச்சியத்திலிருந்த முஸ்லிம்களைத் துரத்தவே அவர்கள் சேனரதனுடைய ஆதரவில் கண்டி இராச்சியத்திற் குடியேறினர். சேனரதன் முஸ்லிம்களை ஆதரித்தது டீசாவுக்குக் கோபத்தை மூட்டியது. இதன் காரணத்தாலும், சேனரதன் ஒல்லாந்தருடன் உறவுகொண்டிருந்ததாலும் டீசா கண்டி மீது படையெடுத்துச் சென்றுன். தவிர இலங்கையின் தென்மேல் பகுதிகளில் இருந்த முஸ்லிம்களும் போர்த்துக்கீசரால் பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். அதனுல் முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1627 இல் இப்படி வெளியேறிய முஸ்லிம்கள் கூட்டத்தினருள் பருவவனப்பு மிக்க சில மங்கையரைக் கண்ட போர்த்துக்கீச வீரர்கள், அவர்களைக் கெடுக்க முயன்றனர். மாவனல்லை என்ற இடத்தில் இதன் காரணமாய் நடைபெற்ற சமரில் மூன்று முஸ்லிம்களும் ஐந்து தளபதிகளும் கொல்லப்பட்டனர். நிலைமையை அறிந்த கண்டி மன்னனான செனரத் (செனரதன் - ஆட்சிக்காலம், கி.பி. 1605-1635) ஏறத்தாழ நாலாயிரம் முஸ்லிம்களை கல்முனை, மட்டக்களப்பு உட்பட வேறு சில பகுதிகளிலும் குடியேற்றினான். (போர்த்துக்கீசர் வருகை 1635-1658 ''புதுமுறைச்சரித்திரம்'' - திரு. V.S.S.ராம், M.A., T.V.K.மூர்த்தி, B.A. (Hons.)*

*தகவல் : 02 அதன்பின் இப்பகுதியைப் பரிபாலித்திருந்த வன்னிமை எனும் அரசாங்க உறுப்பினரின் உதவியைக் கொண்டு கண்டி மன்னன் முஸ்லிம்களிற் சிலரைப் பரமன் சேனை, பாலமுனை எனுமிடங்களிற் குடியேற்றினான். அக்காலத்தில் கரையோரப் பகுதியில் போர்த்துக்கீசரும், மத்திய மலைநாட்டில் சிங்கள மன்னர்களும் ஆதிக்கம் பெற்றிருந்தனர். கண்டி மன்னனின் கிழக்கு மாகாணம் இருந்தது. இது பகுதி மன்னரால் நேரடியாகப் பரிபாலிக்கப்படாமல் வன்னிமை (றட்டே மஹாத்தயா) எனும் பிரதானிகள் மூலமாகவே பரிபாலிக்கப்பட்டது.*



*இந்திய முஸ்லிம் [illegible] [illegible] [illegible] [illegible] ஆசிரியர் மதிப்பிற்குரிய ஜனாப் ஆ. கா. அப்துஸ்ஸமத் MA, MLA இவர்களும் இங்கு காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரின் ஆணைப்படி இங்கு குடியேறியவர்களுக்கு மானியமாகக் காணிகள் வழங்கப்பட்டன. அவக்கி (அபூபக்கர்) என்பவரது தலைமையிலுள்ள குழுவினருக்கு இப்படி மானியமாக வழங்கப்பட்ட வயல்கள் இன்னும் ''அவக்கிர கித்து'' அவக்கன் வட்டி, அனுக்கன் வெளி எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இவ்வாறு குடியேறியோர் இங்கிருந்த பொன்னாச்சிக்குடி, இராசாம்பிள்ளைகுடி, கிளிக்கருடன்குடி, வரிசைநாச்சிகுடி, அரசனாச்சிகுடி மற்றும் முகாந்திர நாச்சிகுடி ஆகிய மக்களுடன் உறவு கொண்டாடி அவக்கியும், அவரைச் சார்ந்தோரும் சிறைக்குடிகளனைத்தையுங் கேட்டுப் பெற்று, அக்குடியார்களுடன் கலந்து வாழத்தொடங்கினர். அத்தோடு இருதிறத்தினரும் சமய விழாக்களிலும், சமூகச் சடங்குகளிலும் ஒருவருக்கொருவர் உறுதுணையாய் இருந்து வருவதெனவும் ஒப்புதல் காணப்பட்டது.

இந்நிபந்தனைகளுக்கமைவாகவே பள்ளி வாசல்களில் நடைபெறும் பெரிய கந்தூரிகளுக்கு முரசறைய ஊர்ப்போடியார் அனுமதி வழங்குவதும், ஊர்ப்போடியாரும், பிரதிநிதிகளும், பிரமுகர்களும் கந்தூரி வைபவங்களில் இன்றுவரை பங்குகொண்டு சிறப்பிப்பதும், இம்மரபினையொட்டி வந்த வழக்காறுகக் காணப்படுகின்றது. இதேபோன்று அக்கரைப்பற்றின் பகுதிக்கோவிலான ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனரமைப்புப் பணிகளின் போதும், விழாக் (உற்சவங்கள்)கள், இன்னும் வைபவங்களின் போதும் பெரிய பள்ளி வாயல் மரைக்காயர் (நம்பிக்கையாளர்)மார்களும் பிரதிநிதிகளும், பிரமுகர்களும் கலந்து மகிழ்வதும் தொன்றுதொட்டு இப்பகுதியில் காணப்படும் விழுமிய வழக்கமாகும். தமிழ், முஸ்லிம் மக்கள் பிட்டும் தேங்காயும் போல் சேர்ந்து உரையாடி, உறவாடிவரும் தோழமைப் பண்பை நாம் வேறெங்கும் காணல் அரிதெனலாம். (அக்கரைப்பற்று திரு. சி. மானகப்போடியாரின் பதிவேட்டிலிருந்து)

தகவல் 03 :

சிங்களக் கிராமங்களிலிருந்து முஸ்லிம் மக்கள் வருகை :

அக்காலத்தில் மாடுகள் பெருஞ்செல்வமாகப் போற்றப்பட்டன. அதன்காரணமாக முஸ்லிம்கள் காட்டு (குழு) மாடுகளைப் பிடித்துப்பழக்கி வந்தனர். சிங்களக் கிராமங்களான வெல்லஸ்ஸ, பக்னிகஹவெல, கொட்டபோவ, பங்கரகம்மன ஆகிய இடங்களிலிருந்து மாடுகளைப்பிடிப்பதற்காகப் பல முஸ்லிம்கள், கிழக்கு நோக்கி வரலாயினர். அந்நேரம் சிங்கள நாட்டுப்பகுதிகளிலிருந்து ஆனை அகரொன்று இங்கினியாகலப் பக்கமாகப் பெரும் வனந்தரத்துக் கூடாக வந்து, களிகாமத்துமலை, படிப்பனை ஆறு இவைகளை ஊடறுத்து வளவாய் துவரங் (படைவெட்டின) குடா மூலமாக முல்லைத்தீவுப் பாதை வழியாய் அட்டாளைச்சேனையையடைந்தது. (இந்தப் பாதை பற்றிய குறிப்பு அறிமுகம் தகவல் : 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இது பண்டு தொட்டுப் பிரபலமான வனப்பாதையாக உபயோகிக்கப்பட்டு வந்துள்ளதெனத் தெரிகிறது) இவ்வீதியூடாகவே சிங்களப்பகுதியிலிருந்து பெரும்பாலும் மாடு பிடியாளர்கள் இங்கு வந்துள்ளனர்.

காட்டுமாடுகள் பெருந்தொகையாகக் கூடித்திரியும்போது மான்தோலாற் திரிக்கப்பட்ட (வெவ்ர்) கயிறு கொண்டு மாடுகளை இவர்கள் பிடிப்பர். இம்மாடுகள் அங்கு கொண்டு செல்லப்பட்டு அவற்றைப் பழக்கி எடுப்பர். பழக்கப்பட்ட மாடுகள் பால் கறப்பதற்கும், பொதிசுமக்கவும், வயல் விதைப்பு, சூடு மிதித்தல் முதலான பல தொழிற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படும். பெண்களே மாடுகளில் பால்கறப்பது வழக்கமாகும். ஒரு முஸ்லிம் தாய் பங்கரகம்மன (கம) என்ற கிராமத்தில் ஒரு காலை நேரம் பால் கறந்து கொண்டிருக்கும் போது நிகழ்ந்து முடிந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சியை இவ்விடத்தில் நாம் குறிப்பிடுதல் மிகப் பொருந்துவதாகும்.

கண்டி மாநிலத்தை ஆண்ட இரண்டாவது இராசசிங்கன் (1629-1687) கரையோரப்பகுதியை ஆண்ட போர்த்துக்கீசரோடு உறவறுப்புப்பகை பாராட்டினுன். அதனுல் போர்த்துக்கீசரும் அவனும் நேரில் ஒரு நாள் மோதிக் கொண்டனர். மோதலில் மன்னன் தோற்கவே அவ்விடத்திலிருந்து ஓடிப்போய்ப் பலாமரமொன்றிலிருந்த ஆளுயரப் பொந்தொன்றில் ஒழிந்து கொண்டான். அவனைத் துரத்திச் சென்ற போர்த்துக்கீசத் தளபதிகள் அவனைக் காணுது திகைத்தனர். மன்னன் ஒழிந்ததை அவ்விடத்தில் "பால் கறந்து கொண்டிருந்த ஒரு முஸ்லிம் தாய் கண்டும் காணுதவள் போலிருந்தாள். மன்னன் ஒழிந்த இடம் இப்பெண்ணுக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமென்பதை யூகித்து அவனைக் காட்டுமாறு துன்புறுத்தினர். அத்தாய் அவ்வளவு கொடுமையையும் வேதனையுடன் தாங்கிக் கொண்டாளேயொழிய மன்னனைக் காட்டித்தரவில்லை. அதனுல் வெஞ்சினங் கொண்ட வீரர்கள் அத்தாயை வெட்டிக் கொன்றனர். அத்தாய் கொல்லப்பட்டதை அறிந்த மன்னன் அப்பெண்ணின் இரத்தத் துளியை எடுத்துத்தன் நெற்றியிற் திலகமிட்டுப் பேரொலி கிளப்பி "மாரக்கலே" என்று கூறினுன். "என்னை வந்து காத்த இரத்தம்" என்பது இதன் கருத்தாகும். இவ்வரலாற்றுச் சம்பவத்தால் முஸ்லிம் சிங்கள உறவு வலுப் பெறத் தொடங்கியது.

இதன் மூலம் அப்பகுதி முஸ்லிம் பெண்கள் மாடுகளில் பால்கறப்பதைத் தொழிலாகக் கொண்டனர் என நாமறிந்த தரவுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. காலக்கழிவில் குழு மாடுகள் அட்டாளைச்சேனைக் கோணவத்தையை அண்டிய பகுதிகளில் தமது இளைப்பாறுதலை வைத்துக கொண்டன. இதன் காரணத்தால் மாடுபிடிப்பவர்கள் அந்தச் சூழலிலேயே காலத்தைக் கடத்த வேண்டியதாயிற்று. பின் வாழ்க்கை வசதிக்கேற்ற இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள் அப்பகுதிகளில் காணப்பட்டதால் இவர்கள் நிரந்தரமாகவே அங்கு வதிவிடங்களை அமைத்துக் கொண்டனர்.

அந்நேரம் அருகுள்ள உயர்ந்த மரமொன்றில் சேனைக் காவலுக்குரிய ''அட்டாளை'' கட்டப்பட்டிருந்தது. சேனைப் பயிர்கள் செழிப்பாய்த் தெரிந்தன. இவர்களைப்பின்பற்றிச் சிலர் சேனை செய்வதில் ஈடுபட்டனர். அப்பகுதியில் அட்டாளை கட்டிய சேனையிருந்ததால் ''அட்டாளைச்சேனை'' என்ற பெயர் வழங்கியதாகத் தெரிகிறது.

இவை இருந்தவாறாக, போர்த்துக்கீசர் 1627 இல் தாம் வசமிருந்த கரைநாடுகளை நான்கு திசாவனிகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு திசாவனியும் கோறளைகளாகவும் ஒவ்வொரு கோறளையும் பல பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டன. கோறளையின் அதிகாரி ''கோறளை'' எனப்பட்டான். உதவியாளர்கள் ''அக்குறுக்கோறளைகள்'' எனப்பட்டனர். ஒவ்வொரு பற்று என்ற பிரிவிலும் ''விதானை''மார் ஆட்சி புரிந்தனர். வசூலித்த வரிக்கணக்குகளைப் பதிவு செய்யும் ஏடு ''தோம்பு'' என வழங்கப்பட்டது.

பின்வந்த காலகட்டத்தில் மட்டக்களப்பு மாநிலத்தில் சில அரசியல் நிர்வாக மாற்றம் ஏற்பட்டது. அதற்குச் சில வருடங்கள் கழித்து இப்பகுதியிலும் நிருவாகச் சீர்திருத்தங்கள் கைக் கொள்ளப்பட்டன. அதன் காரணமாய்த் தமிழ்மொழியிற் பரிச்சயமுள்ள காசியப்பர் என்பவரை ''வன்னியராகக்'' கல்முனைக்கும், கோபாலன் என்பவரை ஆராச்சி (விதானை)யாக நிந்தவூருக்கும், சேகுலெவ்வை என்பவரை அட்டாளைச்சேனைக்கு ஆராச்சியாகவும், அப்போதிருந்த தேசாதிபதியனுப்பினான். இவர்கள் கடமையேற்று நிர்வாகம் நடாத்திக் கொண்டு வருகையில் இப்பகுதியிலுள்ள (அட்டாளைச்சேனைப்பகுதி) சில காடுகள் வெட்டப்பட்டன.

ஒரு நாள், கோபாலன ஆராச்சியின் மகன் சின்னலெவ்வை ஆராச்சியும், சேகுலெவ்வை ஆராச்சியின் மகன் அகமதுப் போடியும் செல்லப்புள்ளையும் பாலிகட்டடம் பள்ளவெளிப்பக்கமாய் மோட்டு வெளியூடாக வரும்போது கிழக்குப் பக்கமாக ஆலை அருவி (அருவி) ஒன்று செல்வதைக் கண்டு அதனூடே நடந்து வந்தனர். முன்பக்கமாக ஒரு சேனை தெரிந்தது. அங்கு சென்று பார்த்ததும் அழகிய அந்தச் சேனையில் குடும்பமொன்று வசிப்பதைக் கண்டனர். சேனைக்காரரான பரமன் அவர்களை முகமன் கூறி வரவேற்றுச் சேனையிலுள்ள வாடிக்கு அழைத்துச் சென்றார். இருவரும் குசலம் விசாரித்து ஒருவரையொருவர் அறிந்து கொண்டனர். சேனை வெட்டி இருப்பவரின் பெயர் பரமன் என்றும் அவர் தம்பிலுவில் என்ற ஊரில் விவாகஞ் செய்திருப்பதாகவும் அறிந்தனர். தவிர இச்சேனையின் கிழக்குப் பக்கமாகப் பாலன் என்பவரும், தெற்குப் பக்கமாகப் பையன் என்பவரும் சேனை செய்து குடும்பத்துடன் குடியிருப்பதாகவும் சொல்லப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான பல உரையாடல்கள் மூலம் பரமனுடன் உறவாடிவிட்டு இவர்கள் வீடு திரும்பினர். பரமனிருக்கும் பகுதி நீர்வள, நிலவளம் மிக்கதாயும், மிகச் செழிப்பாகவும் இருப்பதால் நாமங்கு குடியேறினுலென்ன என்ற ஒரு உணர்வோட்டம் இவர்களுக்கேற்பட்டது. இவர்களிருவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்தபின் இன்னுஞ் சிலருடன் மீண்டும் பரமனின் சேனைக்குச் சென்றனர். பரமன் இவர்களைக் கண்டு வரவேற்று உபசரிக்கப் பேச்சுத் தொடங்கியது.

சின்னலெவ்வை ஆரச்சியும், அகமதுப்போடியும் தமது கருத்தைப் பரமனிடம் தெரிவித்தனர். பரமன் அதற்கு இசைவுபட்டுப் பாலனிடமும், பைனனிடமும் வந்தவர்களை அழைத்துச் சென்று விடயத்தைக் கூறினுர். பாலன் அதற்கு ஒப்புதல் தந்தாராயினும் பைனன் பூரண சம்மதத்தைத் தெரிவிக்கவில்லை. என்ருலும் இருதிறவருக்குமிடையில் ஓர் ஒப்பந்தமேற்பட்டது. பரமன் வெட்டிய சேனைப்பரப்பு அளவு தென்பக்கமாக முஸ்லிம்கள் காடுகளை வெட்டிப் புதுச்சேனை உண்டாக்கித் தருவதாகவும், காடுகளின் மத்தியிலுள்ள பரமனின் சேனையை முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுப்பதாகவுமே இவ்வொப்பந்தத்தின் சாராம்சம் காணப்பட்டது. முஸ்லிம்கள் ஒருபக்கமாக வதிவிடமமைக்கக் கருதியதே இதன் காரணமாகும்.

ஒத்துக் கொண்டபடி காடுகளை அழித்துப் பரமனுக்குச் சேனையும் செய்து இவர்கள் கொடுத்தார்கள். வாடியும், பரணும் அத்துடன் கட்டப்பட்டு நீர்க்கேணியும் (துரவு) தோண்டிக் கொடுக்கப்பட்டது.

சில நாட்களின் பின் அட்டாளைச் சேனையிலிருந்து சின்ன லெவ்வை ஆரச்சி, அகமதுப் போடி ஆகியோருடன் சிலர் சேர்ந்து வந்து பரமனின் சேனையோடு சேர்த்து அங்கு மண்டிக் கிடந்த ''கருங்கொடி'' படர்ந்த காடுகளை வெட்டிக் குடில்கள் அமைத்துக் குடி வந்தனர். தற்போது பெரியபள்ளி வாசலின் அண்மையிலிருக்கும் ஆர்.சி.எம். பாடசாலை (அல்ஹிதாயாவித்) யின் வடக்குப் புறப் பொதுவில் மேற்கான் இருவரினதும் குடில் அமைவு பெற்றிருந்ததாகவும் அவர்களை வளைத்து மற்றையோர் குடிசைகள் அமைத்துக் கொண்டதாகவும் தெரிகிறது. காலக் கழிவில் தொழுகைக்கான பள்ளிவாசல் அமைக்கப்பட்டது. இது சிறிய, கூரை இலுக்குப்புல்லால் வேய்ந்த ஒரு அமைப்பாகக் காணப்பட்டது.

பாலனும் சேனைப்பகுதியில் முஸ்லிம்கள் குடியேறினர் பைனன் தனது சேனையை அகமதுப்போடிக்கு விற்றுவிட்டு பதுளைக்குச் சென்றுவிட்ட ஒரு தரவும் உண்டு.

(1. ஜனாப் கலந்தர் லெவ்வை உடையார் - அட்டாளைச்சேனை.
2. ஜனாப் எம்.பி.எச். அப்துற்றஸீத் மௌலவி முன்னாள் கிராமத்தலைமையாளர்
3. திரு. கனகபதி ஆசிரியர் - அக்கரைப்பற்று.
4. திரு. மு. இ. க. முகம்மதிஸ்மாயீல் - புதுக்குடியிருப்பு ஆகியோரின் தகவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சிலரினதும் குறிப்புகள், பதிவேடுகள், தரவுகள் ஆகியவற்றிலிருந்து.)

தகவல் :04. பக்கீர் மிஸ்கீனலிஷா மாபூத் வலி (றழி) அவர்கள் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்திய வட நாடான அஜ்மீர் ஷரீபிலிருந்து இலங்கைக்கு வந்தார். இவரது நோக்கம் ஆதம் மலை, (Adam's Peak) தப்தர் ஜெய்லானி ஆகிய இடங்களைத் தரிசிப்பதாயிருந்தது. இவருடன் மூன்று பீர்பாய் சகோதரரும் வந்தார்கள். இவர்கள் ஜெய்லானி மலைக்குகையில் தவமிருந்து வெளியாகிக் காட்டினூடாக இங்கு வந்தார்கள். அவர்கள் இவ்வூரில் முஸ்லிம்கள் வாழ்வதாகவும் இதன் பெயர் கருங்கொடித்தீவு எனவும் அறிந்தே வந்தனர். அப்போது இங்கே ஒரு சிறிய ஜும்ஆப்பள்ளிவாசல் குடிசை உருவில் இருப்பதைக் கண்டனர். மிஸ்கீனலிஷா வலி (றழி) அவர்கள் அங்கு தங்கினார். ஒரு நாள் ஜும்ஆத்தொழுகை முடிந்ததும் மக்களுக்கு ஆத்மீக உரையொன்றை ஆற்றினார். அங்கு மிகக் குறைந்த முஸ்லிம்களே குடியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கீர் மிஸ்கீனலிஷா மாபூத் வலி (றழி) அவர்களின் தர்ஹா சரித்திரம் என்ற நூலில் இருந்து உதவியவர் : ஜனாப் P.C. பக்கீர் ஜபார் B.Sc. (Hons) கல்வித்துறை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட)

தகவல் :05. அக்காலத்தில் இப்பகுதியில் வலிமாரின் நடமாட்டம் கணிசமான அளவு இருந்துள்ளது. அதற்கமைய, ஹயாத்து கலந்தர் வலீ (றழி) அமீர் அலி வலீ (றழி) ஆகிய இரு வலீமார்களும் தமது சமயப் பணிக்கான சுற்றுலாவின்போது பெருங்கானகத்தை ஊடறுத்து கருங்கொடித்தீவுக்கு வந்துள்ளனர். அவர்களும் இங்கு தரித்திருந்து விட்டு வேறிடத்துக்குப் பிரயாணஞ்செய்து சில காலத்தின்பின் இப்பகுதிக்கு மீண்டுள்ளனர். அதன்பின் அவர்களைப்பற்றிய சரித்திரம் சரிவர அறிய முடியாதுள்ளது. அவர்கள் இருவரும் மவுத்தானபின் அம்பலத்தாறு எனும் பிரிவிலுள்ள வேல மரத்து வெளி எனும் இடத்தில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளனர். அந்த இரு சமாதிகளும் அருகருகே உள்ளன. அவற்றை உள்ளடக்கி ஒரு பள்ளி வாசல் கட்டப்பட்டுள்ளது. அவ்லியா கபுறடி என்று அதற்குப் பெயர் வழங்குகின்றது. அவர்களைப் பெரிய பள்ளிவாசல் ஜமா அத்தார்களே அவ்விடத்தில் அடக்கஞ்செய்ததாக நமது செய்தியாளர்கள் கூறுகின்றனர். என்றாலும் அவர்கள் அவ்விடத்தில் ஏன் அடக்கஞ்செய்யப்பட்டனர் என்ற காரணத்தைக் குறிப்பிட்டோர் சரியாக அறிந்திருக்கவில்லை. வேறுசிலரும் இதுபற்றிக் குறிப்பிடுகிறார்களெனினும். தெளிவான விளக்கத்தைப் பெற முடியவில்லை. இவ்விருவரினதும் தலைமாடுப் பக்கத்திலுள்ள கல்வெட்டில் கி.பி. 1652 ஆம் ஆண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது. - (இற்றைக்கு 338 வருடங்கள்) இக்குறிப்பு இன்றுமுள்ளது.

1. ஜனாப் மு.இ.ல. முஹம்மதிப்றாஹிம் - தங்கப் புள்ளப் பெத்தா - மகன்.
2. ஜனாப் மு. அகமது லெப்பை - பெரிய பள்ளி பிரதம மரைக்காயர் ஆகிய

இருவரும் கூறியவற்றிலிருந்து.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் : 06 கோழியன் ஆரச்சி, சேகுலெவ்வை ஆரச்சி இருவருக்கும் அடுத்தபடியாக தம்பிக்கண்டு ஆரச்சி என்பவர் இப்பகுதிக்கு நியமிக்கப்பட்டார். இவருக்கும் முன்னைய ஆரச்சிகளுக்கு வழங்கியது போல முந்நூறு தொடக்கம் ஐந்நூறு ஏக்கர் காணிகள் நிந்தமாகக் கொடுக்கப்பட்டன. குடி மக்கள் இதில் பயிர் செய்து ஆரச்சிமாரிடம் விளைவுத் தானியங்களை ஒப்படைப்பர். அவர்கள் மக்களுக்குக் கூலியாக விளைவுப் பயனின் ஒரு பகுதியை வழங்கினர். ஆரச்சி உதவியாக முகாந்(மோந்)திரம் என்பவர்கள் நியமிக்கப்பட்டனர். இதில் ஆதம் மோந்திரம், அகமது மோந்திரம், இஸ்மாயில் மோந்திரம் என்போரடங்குவர். அரிசிப் பொரி மோந்திரம் என்பவர் நிந்தவூர்ப் பகுதியை ஏற்றார்.

சேகலெவ்வை ஆரச்சி வமிச வழியாக பக்கீர் பொலிசான முகம்மதுத் தம்பி வட்டைவிதானை ஆராச்சிப்போடியார், சரீபு (3 ஆங்குறிச்சி) விதானை, முஸ்தபா உடையார் ஆகியோரும், கோழியன் ஆரச்சி வமிசத்தில் அகமதுப்போடி, முனையதீன்வாவாப் போடி, சீனி உடையார் முதலியோரும் அவர்களின் மகன்மார், மகள்மார், பேர்த்திமார், கொள்ளுப்பேத்திமார் மற்றும் இவர்களின் சந்ததியினரும் இங்கு வாழ்ந்துள்ளனர், வாழுகின்றனர்.

கோழியன் ஆரச்சி பெரும் நிலச் சுவாந்தராய் இருந்துள்ளார். பள்ளவெளி வட்டை, சம்புக்களப்பு, மொட்டையான்வெளி, மோட்டுவெளி, கருங்கொடித்தீவு வட்டை, படுவான்கரை மேல்கண்டம், கோளியன், ஏத்தாலை முதலியவை இவருக்குச் சொந்தமாகும். சேகுலெவ்வை ஆரச்சிக்கு இப்றுஹிம் பள்ளம், கனையான்குழி, வளலவாய், முல்லைத்தீவு ஆகிய காணிகள் உரித்தாய் இருந்தன. இக்காணிகளிலெல்லாம் ஊர்மனைகள் (வாடிகள்) அமைக்கப்பட்டு மக்கள் பயிர் செய்தனர்.

ஆரம்பகால கட்டத்தில் காத்தான்குடியில் குடியிருந்த முஸ்லிம் பட்டாணியர் பட்டுச்சீலை குதிரை முதலிவற்றை விற்பதற்காகக் காட்டரவங்களினூடே தென்பகுதியை நோக்கி வந்தனர். அவற்றைக் கண்ட திருக்கோவிற் பகுதி மக்கள் அவர்களோடு உறவாடி பொருள்களை விற்பதற்கு உதவினர். அந்நேரம் மட்டக்களப்புப் பகுதியிலிருந்து துரத்தப்பட்ட திமிலர் சிலர் இப்பகுதிக் காடுகளில் கரந்து வாழ்ந்தனர். பழமையான பகையின் காரணமாக மூர்க்க குணமுள்ள இவர்கள் திருக்கோவில் பகுதி மக்களைத் துன்புறுத்தினர்.

இங்கு தற்காலிகமாக வியாபார நோக்கத்துக்காக வந்து தங்கிய முஸ்லிம் வியாபாரிகளிடம் ஆயுதங்கள் இருந்தன. திமிலரை எதிர்க்க அங்குள்ளவர்களோடு இவர்களும் சேர்ந்து கொண்டனர். திமிலர் வடக்கே ஓடிப்போய்த் திரும்ப வந்து முள்ளிக் குளத்து மலை எல்லைப்பகுதியில் இவர்களை எதிர்த்தனர். அப்போது துவரங்குடா என்றழைக்கப்பட்ட இவ்விடத்திற்கு இந்நிகழ்வின் பின் படை வெட்டினகுடா எனப் பெயர் வழங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீயினர் தாக்கப்பட்டனர். சிலர் பெண்களும் போது வெட்டப்பட்டனர். எனினும் இவர்கள் மீண்டும் வந்து தாக்கக்கூடும் என்ற பயம் இவர்களுக்கு இருந்தது. டீயினரிடம் ஆயுதங்கள் இருந்தன. அவை விடச் சிறந்த ஆயுதம் பட்டாணியரிடம் இருந்தது. ஆகவே இப்பகுதி மக்கள் ஆயுதபலமில்லாமல் இருந்தனர். பட்டாணியரின் நாணயம், மதப்பற்று, தோற்றம் ஆகியன இப்பகுதி மக்களைக் கவர்ந்தன. தவிர இரு திறத்தவரும் மிக நெருக்கமாகவும், இசைவோடும் உறவுகொண்டிருந்ததால் ஒருவரைக்கொருவர் பிரிந்து வாழ்வ மனதை உறுத்தியது. அன்றியும் இங்குள்ள மக்களுக்குத் டீயினர் தாக்கவரலாம் என்ற ஆதங்கமும் மேலெழுந்திருந்தது.

இப்படியான பல காரணிகளால் இப்பகுதிக் கன்னியர் சிலரை இந்தப் பட்டாணியர் விவாகஞ்செய்தனர். பட்டாணியர் துலுக்கர் என அழைக்கப்பட்டனர். இதன்மூலம் சில குடிகளின் தொடர்பும், உதவியும் துலுக்கருக்குக் கிடைத்தது. பிற்காலத்தில் இந்தப்பட்டாணியர் குடும்பத்துடன் வந்து கருங்கொடித்தீவிற் குடியிருந்தனர். ஐங்காலத்தொழுகை, ஜும்ஆத்தொழுகை, நோன்புகால வணக்கங்களுக்குப் பள்ளிவாசல்கள் அப்பக்கத்தில் இல்லாததால் இங்கு குடிவந்தனர் எனத்தெரிகிறது. இவர்கள் பெரிய பள்ளிவாசல் புனரமைப்பில் பங்கு கொண்டதுமல்லாமல் நன்கொடைகளை வழங்கியதாகவும் கூறப்படுகிறது. இந்த இடத்தில் இலங்கையின் பல பகுதிகளிலும் இன்று பல்வேறு விதமாய்க் காட்சிதரும் பள்ளிவாசல்களிற் பல இந்தியாவிலிருந்து இங்கு வந்த முஸ்லிம் வணிகர்களால் சிறிய, பெரிய அளவுகளில் கட்டப்பட்டவை என்பதை நாம் கருத்தில் கொள்ளுதல் மிக முக்கியமாகும்.

(1 ஜனாப் M.I.M முஹம்மதின் - முன்னாள் குவாஸி J.P., ஓய்வு பெற்ற கிராமத்தலைமைக்காரர் - அக்கரைப்பற்று - 04
2. ஜனாப் M.M. இஸ்மாயில் -முன்னாள் ஆசிரியர் - அக்கரைப்பற்று - 02.
3. கேற்முதலியார் M.S. காரியப்பர் (கல்முனை) ஆகியோரின் செவ்விக்கருக்கள்)

தகவல் :07. பசப்பி எனும் ஒரு முஸ்லிம் மாது வட்டுகெதர எனும் ஊரிலிருந்து இரண்டாவது விமலதர்மசூரியன் (1687-1707)ன் ஆட்சிக் காலத்தில் தனது மக்களுடன் குடி எழும்ப வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானாள். மன்னனின் சில பிரதானிகள் அழகுமிக்க சில முஸ்லிம் மங்கையரிடம் அடாவடித்தனமாய் நடந்து கொண்டதே இப்படிக் குடி எழக்காரணம் என்று கூறப்படுகின்றது. அம்மாது தமது மகன்மார்களான இனிய உடையார், இலங்கை சுத்துப் மன்னவன், மகள்மார்களான சாறு, ஜொஹறா என்பவர்களுடன் குடிபெயர்ந்து சிலரின் துணையுடன் வரிப்பத்தான் சேனைக்கு வந்தாள். அங்கு ஒரு சிலருடன் சில நாட்களைக் கழித்து விட்டுக் கருங்கொடித்தீவுக்கு வந்து குடியேறினாள். அந்நேரம் இப்பகுதி வனாந்தரமாகவிருந்தது. இடையிடையே காடுகள் வெட்டப்பட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசைகள் கட்டப்பட்டிருந்தன. மிகக் குறைந்த தொகையினரே இங்கு வசித்தனர். பெரிய மடுக்கள் தோண்டப்பட்டு அதில் நீர் சேமிக்கப்பட்டிருந்தது. நீர் அழிந்து போகாமல் பாரிய மரக்கட்டைகளைப் போட்டு நெருப்புத் தணலை உண்டாக்கினர். அவர்களை இங்கேயே தங்குமாறு அக்குடிகள் கேட்டு அவர்களுக்கு வசதியான வாழ்விடத்தை அமைத்துக் கொடுத்தனர். வட்டுக்கெத்து (வட்டுக்கெதர) க்குடிக்கும் இவர்களுக்கும் ஏதும் சம்பந்தம் உண்டா என்பது விளங்காதுள்ளது.

(1. ஜனாப் M.A.L.M. ஹுசைன் (லெப்பையின் மகன்) அக்கரைப்பற்று - 01
2. ஜனாப் M. முகம்மது முஸ்தபா - அக்கரைப்பற்று - 02 ஆகியோரளித்த செவ்விக்குறிப்புகள்)

**தகவல் : 08.** பண்டு தொட்டே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் கலை, கலாசாரத் தொடர்புகள் தொடர்ந்து வந்துள்ளன. தென்னிந்தியாவிலிருந்து திமிலர் என்றொரு சாதியார் இலங்கைக்கு வந்து மட்டக்களப்புப் பகுதியில் வாழ்ந்தனர். அவர்கள் மீனவராகும். மீன்பிடித்தற்கு ஏற்ற இடமொன்றைத் தெரிவு செய்து அவ்விடத்தில் இவர்கள் உறைவாராயினர். அவ்விடம் திமில(ர்) தீவு எனப்பட்டது. அவர்கள் தாம் பிடித்த மீன்களை உணக்கி அநுரதபுர, பொலன்னறுவப் பக்கம் கொண்டு சென்று விற்றனர் எனத் தெரிகிறது. இவர்களைப் போன்றே முற்குகர் (முக்குவர்) எனும் ஒரு சாதியார் இலங்கையின் செல்வச் செழிப்புகளைக் கேள்வியுற்று இங்கு வந்து குடியிருந்தனர். அங்கு காணப்பட்ட ஏரி மூலம் (மட்டக்களப்பு வாவி) இவர்கள் படகைச் செலுத்தி வரும்போது வாவியின் எல்லைக்கரை வரை படகு சென்று தரைதட்டியது. அப்பால் செல்ல முடியாமற் போகவே ''இது மட்டும் மட்டடா மட்டக்களப்படா'' (இது வரையுந்தான் இக்களப்புள்ளது.) என்று சொல்லி அவ்விடத்துக்கு ''மட்டக்களப்பு'' என நாமமிட்டனர்.

அந்நேரம் மட்டக்களப்பு என்ற பெயர் இருந்ததாகச் சாசனங்களில் காணப்படவில்லை. இது பெரும் காடடர்ந்த வனமாகவே இருந்ததெனத் தெரிகிறது. அப்போது இங்கு மரவியாபாரம் நடைபெற்று வந்துள்ளது. கண்ட பாணத்துறையில் இவர்கள் தங்குவது வழக்கமாம். முற்குகக் குலத்தவரான அரசர்கள் ஏழுவர் ஏழுகோயில், ஏழு அரண்மனை ஆகியவற்றை நிறுவி தமக்கு வேண்டிய குடிமைகளை இந்தியாவிலிருந்து வரவழைத்துப் பரிபாலனஞ் செய்தனர். இடையிடையே போர்க்குணமும், பொல்லாப்புங் கொண்ட திமிலர்களால் இவர்கள் துன்புறுத்தப்பட்டனர். திமிலரை வெற்றி கொள்ளுதல் இவர்களுக்கு முடியாக் காரியமாக இருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் ''அபுகானிஸ்தானிலிருந்து சில பட்டாணியர்'' பட்டு, குதிரை முதலியவற்றை விற்பதற்காக இப்பகுதிக்கு வந்தனர். அவர்களிடம் போராயுதங்கள் இருந்தன. முற்குகர் இவர்களின் உதவியை நாடிப்பெற்றுத் திமிலரை வெட்டித் துரத்தி வெருகலுக்கப்பாலுள்ள வாகரைக்கப்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர். அங்கு ஒரு கல்நட்டு இவ்வெல்லையைக் கடந்து வரக் கூடாதென ஆணையிட்டுத் திரும்பினர். இதையறியாத பத்தி எனும் கர்ப்பமுடையான ஒரு திமில மாது நடக்க முடியாது எதிர்த்து வரக் கண்ட முக்குகர் தம் கட்டளையை மீறியதென்று நம்பத்தின் மேல் அவ்விடத்திலிருந்த பாலைமரமொன்றில் அவளைத் தூக்கிலிட்டுக் கொன்றனர். அம்மரம் பத்தியைத் தூக்கிய பால மரமெனப் பெயர் பெற்றது.

("மட்டக்களப்பு மான்மியம்" வித்துவான் F.X.C. நடராசா)

தகவல் 09. மட்டக்களப்பிலுள்ள மகிழூருக்கு முனையில் சில பட்டாணியரும், அரேபியருமாகிய முஸ்லிம்கள் வியாபார நோக்கமாகப் படகிலேறி வந்திறங்கினர். (இவ்வரலாறு 1612 இல் நடந்ததாக காத்தான்குடி சின்னப்பள்ளிவாசல் கல்வெட்டில் இன்றும் காணப்படுகின்றது). அவர்கள் பட்டு, அணிகலன்கள், பாத்திரவகைகளை வைத்திருந்தனர். இவர்கள் படுவான்கரைப் பக்கம் சென்றதும் அன்று அங்குள்ள கோயிலொன்றில் உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. முஸ்லிம்கள் வாள், கேடயம், கவசம் முதலிய போராயுதங்கள் வைத்திருந்தனர். அவர்களைக் கண்ட கோவில் நிருவாகத்தினர் அவர்களை உபசரித்தனர். திமிலர்கள் அடிக்கடி அவ்விடம் வந்து அங்குள்ள சேனைகளை அழித்தும், தம்மைத் துன்புறுத்தியும் தமது கன்னியரைக் கடத்திச் செல்வதும் தமக்குப் பெரிய வேதனையாயிருக்கின்றதென அம்மக்களால் முஸ்லிம்களுக்குக் கூறப்பட்டது. அம்முறைப்பாட்டைக் கேட்டறிந்த முஸ்லிம்கள் திமிலரைத் தாம் அடக்குவதாக வாக்களித்தனர்.

முஸ்லிம்கள் எழுவான்கரையிலுள்ள காத்தான் என்பவரது சேனையிற் தங்க ஆவன செய்யப்பட்டது. ஒரு நாள் திமிலர் படுவான்கரைக் கிராமத்துக்குட் புகவரும் போது அறிவித்தல் கிடைத்ததும் அங்கு விரைந்து சென்று திமிலரோடு பொருதி அவர்களை விரட்டியடித்தனர். முஸ்லிம்களின் பதிலடியின் தாக்கம் திமிலருக்குப் பெரும் அச்சத்தை உண்டாக்கியது. கிராமத்து மக்கள் அதன் பின் நிம்மதி பெற்றனர். இச் செயலுக்கு நன்றிக் கடனாக அக்கிராமத்தில் வசித்த இளம் மகளிர் சிலரை முஸ்லிம்களுக்கு மணம்செய்து வைத்து காத்தான் சேனைப்பக்கம் அவர்கள் குடியிருக்க வழிசெய்தனர். இவ்விவாகத் தொடர்பின் மூலம் தாய் வழிக் குடி வழக்கம் தலைமுறை பரம்பரையாக வந்திருக்கலாம்.

(1. ஜனாப் K.L.M. பீர்சாஹிபு போடியார் - அக்கரைப்பற்று - 02

2. ஜனாப் A.M அகமது முகைய்தீன் - கொம்பு தேர், பிறப்பு, இறப்புப் பதிவாளர் - அக்கரைப்பற்று-04. ஆகியோரின் பதிவுக் கொப்பிகளில் இருந்து பெற்றது

3. ஜனாப் M.C.H அப்துற்றஷீத் வ.வி. முன்னை கிராமத் தலைமைக்காரர் அளித்த செவ்வியில் இருந்து எழுதியது.)

தகவல் : 10. மட்டக்களப்பின் ஆதிக் குடியினர் திமிலர் ஆவர். இவர்களை இயக்கர் என்றும் குறிப்பிடுவர். இவர்கள் மட்டக்களப்பு வாவிக்கரையோரங்களில் மீன்பிடித்து வாழ்ந்தனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலையில் முக்குவர் என்ற சாதியினர் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். அவர்களை புளாவுண்டு கோயில் பிராந்தியத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கின்றனர் என்று அங்கிருந்து அகற்றப்பட்டனர். அவர்கள் மட்டக்களப்பில் வந்து குடியேறினர். இவர்களும் வாணிகத்தையே மீன்பிடித்தொழில் இவர்களுக்கிடையில் பிணக்கு ஏற்பட்டது. இவ்வேளை மட்டக்களப்புத் துறைமுகத்தில் வந்திறங்கிய அராபியக் கடலோடிகளின் உதவியை முற்குவர் நாடினர். அவர்கள் திமிலர்களை அடித்துத் துரத்தினர். இந்த உதவிக்குப் பிரதியுபகாரமாக மண், பெண், பொன் என்பவற்றில் ஒன்றைக் கொடுக்க முற்குவர் முன் வந்தனர். சோனகக் கடலோடிகள் பெண்களையே விரும்பிப் பெற்றனர். முற்குகர்கள் தமக்குள்ளிருந்த ஏழு குடிகளிலிருந்தும் ஏழு பெண்களை விவாகஞ் செய்து கொடுத்தனர். அவர்களது பரம்பரை நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கரைப்பற்று முதலிய கிராமங்களில் வாழ்ந்தனர்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சோனக மக்கள் சந்தேகமின்றி தங்கள் உடம்பில் அறபு உதிரம் ஓடுவதைக் கொண்டவர்களே இதனை அவர்களது நீண்டு உயர்ந்த ''செமிட்டிக்'' நாசியைக் கொண்டு அவதானிக்கலாம்.

("Mr பொலினல் தம்பிமுத்து'', வரலாற்று ஆய்வாளர் - த சிலோன் டெய்லி நியூஸ் - 1965 நவம்பர் 13)

தகவல் : 11. மலபார் கரையிலிருந்து பிரயாணஞ் செய்து கொண்டிருந்த சோனகர்கள் தங்கள் கப்பல் சேதமுற்றதால் மட்டக்களப்புக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள பொன்னுச்சி முனை என்ற இடத்தில் இறங்கினர். அங்கு காத்தான் எனும் வேடுவத் தலைவன் ஒருவனின் குடியிருப்பையடைந்தனர். புதுப்பிராந்தியம் வனப்பும், வளமும் கொண்டதாக விளங்கிற்று ஆதலால் அவர்கள் அங்கு குடியேறி வாழத் தொடங்கினர். இந்த ஆரம்பக் குடிகளில் வழிவந்தவர்களே மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் காணும் சோனகராவார்.

("Mr. P.R. சிற்றம்பலம்'', வரலாற்று ஆய்வாளர் - த சிலோன் ஒப்சேவர் - 1853 மார்ச் 31)

தகவல் : 12. புத்தளத்தில் ஒரு கிராமத்திலுள்ள முற்குவர் பெண்ணொருத்தியை அடுத்த மாவட்டத் தலைவரான மாணிக்கத் தலைவர் கைப்பிடிக்க எண்ணினார். முற்குவர் தலைவன் இவ்வேண்டுகோளை ஏற்கவில்லை. மாணிக்கத் தலைவன் தனது படைகளுடன் அக்கிராமத்தை நோக்கிச் சென்றான். முற்குவர் தலைவன் அப்படையை எதிர்க்கச் சக்தியற்றவனாக இருந்த வேளை யாத்திரிகரும், வரலாற்றாசிரியருமான இப்னு பதூதா (1327) புத்தளம் கடலில் ஓர் அறபிக் கூட்டத்துடன் தங்கியிருந்தார். முற்குவர் தலைவன் அவர்களிடஞ் சென்று உதவிகோரினான். அவர்கள் உதவ முன்வந்தனர். மாணிக்கத் தலைவன் சிரச்சேதம் செய்யப்பட்டான். அவனது படைகள் துரத்தியடிக்கப்பட்டன. இதற்குப் பிரதியுபகாரமாக முற்குவர் அனைவரும் இஸ்லாமைத் தழுவ வேண்டுமென்று இப்னுபதூதா கேட்டுக் கொண்டார். அவர்களில் அநேகர் இஸ்லாமை ஏற்றனர். கிழக்கு மாகாண முஸ்லிம்களும் அங்கிருந்து வந்த முஸ்லிம் பரம்பரையினரே முற்குவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலிருந்த பதின்மூன்று பிரிவில் ஏழு குடிகள் கிழக்கு மாகாணத்திலிருந்தனர். இவர்களில் அனேகர் கல்முனைப் பிரதேசத்தில் வாழ்கின்றனர்.

(Mr. M.D. ராகவன் - தேசிய அரும்பொருளக இனவரலாற்று வல்லுனர் - சிலோன் ஒப்சவர் - 1953 பெப்ரவரி 15)

தகவல் : 13. கலி 4640 எதிர் மன்னசிங்கன் என்பான் மட்டக்களப்புப் பிராந்தியத்தை ஆட்சிசெய்தபோது. நாப்புட்டிமுனை. கிட்டங்கி ஆகியன சிறந்த வியாபார கேந்திரங்களாக இருந்தன. அப்போது பட்டாணி, கல்நான், சிக்கந்தர் ஆகியோர் தங்கள் குடும்பங்களுடன் வந்து தங்கியிருந்து இப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

(வித்துவான், பண்டித V.C. கந்தையா B.O.L. — ''மட்டக்களப்புத் தமிழகம்'')

தகவல் : 14. ஈசுர வருஷம் தைமாதம் 20 ஆந் திகதி சேதவாக்கை எனுமிடத்திலிருந்து இராஜபக்ஷ முதலியாரும் அவன் குடும்பத்தினரும் இறக்காமம் நோக்கி வந்தனர். அவர்களுடன் வந்தவர்களிலொருவன் வலிப்பத்தன். அவன் காடுவெட்டிக் குடியேறிய இடம் ''வலிப்பத்தன் சேனை'' (வரிப்பத்தன் சேனை) இவர்களுக்குக் கூட வந்தவர்கள் பள்ளவெளி, உசரவேகாமம், கொன்றை வட்டான், கடவத்தை, திவிளானை, பொத்தானைவெளி, மற்றும் வம்மியடி வயல் முதலாமிடங்களில் காடுவெட்டி வெளியாக்கிக் குடியிருந்து வேளாண்மை செய்தனர்.

(''வித்துவான் F.X.C. நடராசா - மட்டக்களப்பு வளமும் வாழ்வும்'')

தகவல் : 15. ராஜபக்ஷ முதலியார் பட்டங்கட்டிய முதலியாரோடு கடமை செய்தது கண்டியரசன் காலமாகும். (1750-1815) இக்காலத்தில் ராஜபக்ஷ முதலியாரோடு சம்பந்தமான மூன்று சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ராஜபக்ஷ முதலியாரைத் தொடர்ந்து பொன்னுச்சி குடியைச் சேர்ந்த அபூபக்கர் தலைமையில் வரிசைநாச்சி குடியார், முகாந்திர நாச்சி குடியார், மாலை கட்டிக்குடியார், கிணிக்கருத்தன் குடியார், பணிய வீட்டுக் குடியாரென்ற ஏழு குடிகளும் வந்து சேர்ந்தனர். அப்பொழுது கண்டி மகாராசன் கீர்த்திசிறீ என்பான் இப்பகுதியிலுள்ள மக்களையும், விகாரைகளையும் காண்பதற்கு வந்தான். ராஜபக்ஷ முதலியார் அரசனை வரவேற்று நாடுகாடு காண்பித்தான். அப்போது அபூபக்கர் தனக்கும் தமது ஏழு குடியாருக்கும் வாழ்க்கை வசதியில்லை எனக் குறிப்பிட்டுப் பயிர் செய்ய நிலந்தருமாறு கேட்டார். அந்நேரம் சபையோரிடம் தனது குதிரையோடு ஓடி முந்தக் கூடியவர் யாரும் இருக்கிறீர்களா என்று கேட்டான். யாரும் முன்வரவில்லை.

அபூபக்கர் மட்டும் முன்வந்து குதிரையோடு ஓடி முந்தினர். மன்னன் அபூபக்கரை வெகுவாகப் பாராட்டி சங்கத் துறை முத்தெட்டு ஒன்றுக்குச் சீட்டெழுதிக் கொடுத்தான். அதனை வாங்கிய அபூபக்கர் பட்டிப்பளைக்குப் போய் சிங்காரவத்தையிலிருக்கும் ஏழு வன்னியரிடத்தும் சமர்ப்பித்தார். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்கருக்கும் குடியார்களுக்கும் இன்னுயமுங்கொடுத்து, அனுக்கன் என்னுமிடத்தில் காணியும் கொடுத்து அனுப்பினர்.

(''வித்துவான் F.X.C. நடராசா - மட்டக்களப்பு வளமும் வாழ்வும்'') நாடு காட்டுப் பரவணிக் கல்வெட்டுக் குறிப்பு

தகவல் : 16. ராஜபக்ஷ முதலியார் இங்கு வருவதற்கு முன்பே முஸ்லிம்கள் இங்கிருந்தனர். நாடுகாடு காணவந்த கண்டியரசன் ஒரு நாள் மாறுவேடம் பூண்டு நகர் சோதனைக்குப் புறப்பட்டு பக்கிரிச்சேனை எனும் இடத்திலுள்ள பள்ளி வாசலுக்கு வந்தான். பள்ளியிலுள்ள மு அத்தின் அவனை வரவேற்றுபசாரஞ் செய்தார். அதனால் மகிழ்ச்சியடைந்த மன்னன் இதனை ராஜபக்ஷ முதலியாருக்கு அறிவித்து அப்பள்ளி வாசல் முஅத்தினுக்கு ஒரு இலவசம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அதன்படி பத்திப்போடி வெளியிலிருந்து ஓர்லவசம் கொடுக்கப்பட்டது. (இங்கு குறிப்பிட்ட பக்கிரிச் சேனை வரிப்பத்தன் சேனையாக இருக்க வேண்டும்.)

(''மட்டக்களப்பு வளமும், வாழ்வும் - வித்துவான் F.X.C. நடராசா) பரவணிக்கல்வெட்டுக் குறிப்பு

தகவல் : 17. (பட்டிமேடு (புட்டம்பை) அம்மன் கோயில் காலத்தால் மிக முந்தியதாகும். ராஜபக்ஷ முதலி இக்கோயிலில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான்.)

கண்ணகை அம்மன் கோயிற் திருப்பணியில் ஈடுபட்டிருந்த சின்னத்தம்பிப் போடி என்பவர் போராடைக்கல் என்னுமிடத்திலிருந்து அம்புத்தெய்வம், கொம்புத்தெய்வம், வில்லுத்தெய்வம், அம்மானைத் தெய்வம் என்பனவற்றைக் கொண்டுவந்து பூசை கட்டினன். இக்கோயிலில் பூசை செய்கிறவருக்கு ராஜபக்ஷ முதலியார் சுட்டாடியாவெளியை இலவசமாகக் கொடுத்துதவினர்.

(''வித்துவான் F.X.C. நடராசா - மட்டக்களப்பு வளமும் வாழ்வும்'') பரவணிக் கல்வெட்டுக் குறிப்பு

தகவல் :18. இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப்பேராசிரியர் கலாநிதி K.W. குணவர்த்தன கூறும் செய்தியொன்று நாம் உன்னிப்பாக நோக்கத் தக்கது. இச்செய்தியை மட்டக்களப்பு வளமும் வாழ்வும், மட்டக்களப்புத் தமிழகம், மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல்களும் எடுத்துக் கூறுகின்றன.

போர்த்துக்கேய ஆள்புலத்திலிருந்து எல்லாச் சோனகர்களும் செ வேண்டுமென கெப்டன் ஜெனரல் கொன்ஸ்டான்ரைன் டீச

பிறப்பித்தான். கோட்டை ராஜ்ஜியத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியே, ப ஒரு நூற்றாண்டுக்குப்பின் 1626 இல் மீண்டும் போர்த்துக்கேயர், சோனகர் தம் ஆள்புலத்திலிருந்து வெளியேறி விடவேண்டுமெனக் கட்டளையிட்டனர். கண்டியை ஆண்ட செனரத் மன்னன் இவர்களைக் கையேற்று அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ்ஜியத்தின் துறைமுகப் பிரதேசங்களில் குடியமாத்திஞன். மட்டக்களப்பில் மாத்திரம் 4,000 பேர் குடியமர்த்தப்பட்டனர். தற்போது கிழக்கிலங்கையில் பல இடங்களில் சோனகர் செறிந்து காணபதற்கு இக்கால கட்டத்தில் செனரத் மன்னனது அகதிகள் குடியேற்றமே காரணமாக இருந்திருக்கலாம்.

*(''அல்-இஸ்லாம் - 1967 ஜனவரி'')*

*(மேற்றரப்பட்ட பதினெட்டுத் தகவல்களில், தரவு 10 இல் இருந்து 18 வரையுள்ளவை அக்கரைப்பற்று பொதுசன நூலகத்திறப்பு விழாச் சிறப்பு மலரிலிருந்து பெறப்பட்டவை. தொகுத்தெழுதியவர், ஜனுப் அ.ஸ. அப்துஸ் ஸமத் B.A. Hons., விரிவுரையாளர்)*

நாம் இப்பகுதியிற் தந்துள்ள தமிழ் மக்களின் முதல்வரவு என்ற பிரிவில், நான்கு தகவல்களும், முஸ்லிம் மக்களின் மூலவரவு எனும் அலகில் பதினெட்டுத் தகவல்களும் குறிக்கப்பட்டுள்ளன. கருங்கொடித்தீவுப் பூர்வீகக் குடியேற்றம் பற்றிய ஐயப்பாடுகள், கலக்கங்கள், முரண்பாடுகளோ, இந்த இருபத்திரண்டு தகவல்களையும் ஆய்வுக்குட்படுத்துவோமாஞல், ஒரு இசைவான அடைவுக்கு வருதல்சாலும்.

## ஐயமும் தெளிவும்

1. கி.மு. 295 இல் கோளாவிலில் ஒரு விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டதாக தரவு 01 இல் குறிக்கப்பட்டு, அதன்பின் கருங்கொடித்தீவில் இதற்கு முன்னரமைக்கப்பட்டிருந்த ஸ்ரீ சித்தி விநாயகராலயம் இங்குள்ள மக்களுக்காயிற்று என்றிருப்பதால், தமிழ் மக்கள் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இப்பகுதியில் குடியேறியிருக்கலாம் என்ற கருத்துப் பெறப்படுகிறது. தவிர கலியுதித்து 2840 இல் கூத்திக மன்னன் ஆலயத்துக்குக் குடமுழுக்குச்செய்ததும், துட்டகாமினி மன்னன் மானிய நிலங்கள் வழங்கியதும் மேலும் இதை உறுதிப்படுத்துகிறது. வழக்காடு மன்றுவின் 17/MIS, 886/MIS இலக்க வழக்குகள் உறுதியான சான்றளிக்கின்றன.

2. அயோத்தியிலுள்ள சூரியகுலத்து வேந்தர்கள் இலங்கைக்கு வந்த வரலாற்றுடன் முல்லைத்தீவுக்கு வந்து நாம் அக்கரைப்பட்டோம். இனிப்பயமில்லை என்று சொன்ஞன் என்று தரவு 02 இல் உள்ளது. அதஞல் இது அக்கரைப்பட்டூர் அல்லது அக்கரைப்பட்டலூர் என அழைக்கப்படலாயிற்று என்ற செய்தியும் உள்ளதால் இதைப்பற்றிக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

அக்கரைப்பற்று என்ற பெயரும், கருங்கொடித்தீவு என்ற நாமமும் வந்தவிதம் பற்றிய கருத்துகள் வேறுவிதமாகவும் கூறப்படுகின்றன. அவையாவன :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) களி ஓடை ஆற்றில் தோணிப் போக்குவரத்துச் செய்தகாலத்தில் ஆற்றுக்கு அப்பால் நின்ற ஒருவர் அக்கரையில் எத்தனை ஊர் என்று கேட்டதாயும் அதற்குப் பதில் சொன்னவர் பத்து ஊர் என்று சொன்னதாகவும் ஒரு கதை இருக்கிறது. ஒலுவில், பாலமுனை, மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை, கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில் மற்றும் திருக்கோவில் ஆகியவையே அப்பத்து ஊர்களுமாகும்.

இதனால் ''அக்கரைப்பத்தூர்'' என்றாயிற்று. இது காலக் கழிவில் மருவி ''அக்கரைப்பற்று'' என்றானது. இது ஒரு சாரார் கூற்று. ஆபத்தான எல்லையைக் கடந்து மன்னனொருவன் வந்து சேர்ந்ததும், அக்கரைப்பட்டஊர் அல்லது அக்கரைப்பட்டூர் என்று சொல்லி நிம்மதி பெற்றான் என்பது (அல்ஹாஜ் அ. பக்கீர் தம்பி விவாகப்பதிவுகாரர் அவர்களும் வேறு சிலரும் - அட்டாளைச்சேனை) இன்னொரு சாரார் கருத்து.

இவை பற்றிய சில விளக்கங்களை நாமறிதல் வேண்டும். போர்த்துக்கேசர் 1627 இல் தம்வச மிருந்த கரை நாடுகளை நான்கு திசாவனிகளாக, திசாவனிகளைக் கோறளைகளாக, கோறளைகளைப் பற்றுகளாகப் பிரித்தனர். (ஆதாரம்: புதுமுறைச் சரித்திரம்) என்று ''முஸ்லிம் வரவு தகவல் 03 இல் குறிப்பிட்டிருந்தோம். அதன்படி கிழக்கு மாநிலம் கல்முனைப்பகுதி நாடுகாடு சம்மாந்துறைப்பற்று, கரைவாகுப்பற்று, நிந்தவூர்ப்பற்று, ''அக்கரைப்பற்று'' பாணமைப்பற்று என்று பிரிக்கப்பட்டதாக அறிய வருகிறது. ''அக்கரை'' என்ற சொல் நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனை ஆகிய ஊர்களில் இன்றும் வழக்கிலுள்ள சொல்லாகும். ஒலுவிலில் ''அக்கரைப் பாடசாலை'' இருக்கிறது. அட்டாளைச் சேனையில் கோணாவத்தைக் கப்பால் கடற்கரைப்பகுதி ''அக்கரை'' எனப்படும். அதே போன்று நிந்தவூர் மக்கள் களியோடைக்கப்பாலுள்ள தென்பகுதியை அக்கரை என்று சொல்வது வழக்காகும். பற்றுகள் கல்முனையிலிருந்து தொடங்கிப் பாணமை வரை பிரிக்கப்பட்டதால், நிந்தவூருக்கு அடுத்த பற்று களியோடைக்கு அக்கரையிலுள்ள பற்று எனப் பொருள்படும். ''அக்கரைப்பற்று'' எனப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதே பொருத்தமானது எனக் கருதலாம்.

இப்பற்றுப்பிரிவுகள் ஒரே காலத்தில் பிரிக்கப்பட்டதா அல்லது தேவைக்கேற்பக் காலத்துக்குக் காலம் வகுக்கப்பட்டதா என்பதில் கருத்துப் பரழுவுண்டு.


(''இவ்விளக்கம், கேற் முதலியார் M.S. காரியப்பர் (கல்முனை) அவர்களால் சொல்லப்பட்டது'')

3. ''கருங்கொடித்தீவு'' என்ற பெயரைப் பற்றிய சர்ச்சையும் விளக்கப்படவேண்டியதொன்றாகும். இங்கு கருங்கொடி அடர்த்தியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிக் கிடந்ததால் "கருங்கொடித்தீவு" என்றும், கருங்கொட்டி என்றொரு வகைக் கொட்டிச்செடி வளர்ந்திருந்ததால் "கருங்கொட்டித்தீவு" எனவும் "கருந்தெகிளப்" எனும் கொடிகளை வெட்டிக் குடியமர்ந்ததால் "கருங்கொடித்தீவு" என்று பெயரிடப்பட்டதாகவும் மூவ்வையான கருத்துகள் உள்ளன.

ஒரு நாடு காட்டுப் பகுதியில் பல்வகைச் செடிகொடிகள் வளர்வது இயற்கையின் நியதியாகும். இங்கு கொட்டிச்செடி வளர்ந்திருந்தும், அதன் கிழங்கு (கொட்டிக் கிழங்கு) பூ, காய்களை மக்கள் உண்டு வந்ததும் உண்மையே. நம் முன்னோர் குளத்துக்குள் குடி இருந்ததாகத் தெரியவில்லை. அதற்காக கொட்டிச் செடிகளை அகற்றியதாகவுமில்லை. மற்றும் முற்கால அரசு ஆவணங்கள், உறுதிகள், பிறப்பு, இறப்புப் படிவங்கள் மற்றும் ஏனைய பதிவுகளில் கருங்கொட்டித்தீவு என்ற பெயர் காணப்படவில்லை. அடுத்தாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கருந்தெகிளங்கொடி '' பற்றிய செய்தி வருகிறது. தமிழகத்திலும் ஈழத்திலும் இன்று உயர்தரத்தில் கணிக்கப்படுவது ''மதுரைத் தமிழ்ப் பேரகராதி'' யெனும் சிறந்த அகராதியேயாகும். அதிற்கூடக் ''கருந்தெகிளம் கொடி'' காணப்படவில்லை தெகிள் என்ற ஒரு தனிச் சொல்லுக்கும்தேட்கொடுக்கிக்கொடி என்றும் கொடிப்புன்கு எனவும் தெகுளம் ('தெகிள'மல்ல) என்றால் நிறைவு, பெருக்கம் என்னும் கருத்தும் காணப்படுகின்றது.

எனவே ''கருந்தெகிளம்'' என்றொரு கொடிக்குப் பெயருண்டா என்ற ஐயமும் இதன்கண் பிறக்கின்றது. இன்னும் ஆதிதொட்டு கருங்கொடி வெட்டிக்குடியேறிய கதையைத் தவிர (இப்படிக்கூறும் மிகச் சிலரைத்தவிர்த்து) வேறு கதை இங்கு கூற நாம் கேட்டறியோம். இப்படிப்பட்ட சில தரவுகளை நாம் நமது எண்ணக் கருக் கூட்டலில் நுணுகி ஆராய்வோமானால் ''கருங்கொடித்தீவு'' என்ற ஆதிப் பெயரும் ''அக்கரைப்பற்று'' எனும் இடைநுழைவுப் பெயருமான இருகாரணப் பெயர்களுமே இவ்வூருக்குரிய இசைவுக்கான பெயர்களாகும் என்று கூறுவதில் தவறில்லை போல் தெரிகிறது. 1867 இல் நிறுவப்பட்ட மெதொடிஸ்த மிஷன் பாடசாலைப் பதிவிலும் 123 வருடங்களுக்கு முன்பிருந்தே ''கருங்கொடித்தீவு மெ.மி.க. பாடசாலை'' என்று பதியப்பட்டிருக்கும் நிதர்சனமான ஒருண்மையும் இதற்குச் சான்றளிப்பதை நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

4. கொன்ஸ்தாந்தைன்டீசா எனும் போர்த்துக்கேய தளபதி முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தியதால் செனரத் மன்னன் (1605-1635) கிழக்கு மாநிலத்தில் அவர்களைக் குடியேற்றினான். (மட்டக்களப்பு, கல்முனை) என தகவல் 01 இல் கண்டோம். இங்கு கால எல்லையான 1605க்குப் பிற்பட்ட காலம் கவனிக்கத்தக்கது.

5. தகவல் 03 இல் போர்த்துக்கீசர் காலத்தில் பற்றுகள் பிரிக்கப்பட்டதும், தகவல் 04 இல் மின்கினிஷா மாபூத்தின் வரலாற்றுக்காலமும் (சுமார் 300 வரு.) சில விளக்கங்களைத் தருகிறது. தகவல் 09 இல் குறிக்கப்பட்ட வலிமாரின் காலம், கருங்கொடித்தீவுக்கும் அவர்களுக்குமுள்ள தொடர்பு சரியாக இற்றைக்கு 338 வருடங்களாகின்றன என்ற சம்பவமும் கவனத்தில் படுகிறது.

6. தகவல் 07 இல் உம்மா பசப்பி என்ற முஸ்லிம் தாயின் வரவும், விமலதரும சூரியனின் ஆட்சிக்காலமும் 1687 க்குப் பிறகுள்ள வரையறையும் காலநிர்ணயத்தின் படிக்கட்டாகக் காணப்படுகிறது. தகவல் 09 இல் பட்டாணியரின் வருகை, அதனாலேற்பட்ட விளைவுகள் காத்தான்குடி சின்னப்பள்ளிவாசல் கல்வெட்டு, 1612 இல் முஸ்லிம்கள் இங்கு வந்ததாகத் தெரிவிப்பது போன்ற தரவுகளை நாம் மிகக் கவனமாக சீர்தூக்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போமேயானல் ''கருங்கொடித்தீவு''க் கிராமத்தின் மூலவரன்னரின் கால எல்லையைப் பெரும்பாலும் சாத்திரமான ஒரு அளவிட்டில் கொண்டுவரலாம்.

ஆதியோடந்தமான தகவல்களின்படி இவ்வூரில் முஸ்லிமகள் குடியேறிய காலம் சற்றேறக் குறைய 350 (முந்நூற்று ஐம்பது) வருடங்களைக் கருத்தில் காட்டுகின்றன என்பதைச் சொல்லக் கூடியதாக உள்ளது.

ஆனல் எந்த ஆண்டில் குடியேறினர்கள் என்றே, தரவுகளிற் தரப்பட்டுள்ளபடி, பல்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபல கிராமங்களிலுமிருந்து வந்த முஸ்லிம்களில் முதன்முதல் கருங்கொடி வெட்டி வதிவிடமமைத்தோர் யார்? என்பதையோ அறுதியிட்டுக் கூறுவதில் தயக்கமேற்படுகின்றது.

மற்றுமோர் கருத்து

7. மட்டக்களப்பில் குடியேறிய முஸ்லிம்கள் முற்குவர் குலத்தின் ஏழுதாய்மார்களுக்கும் அராபிய தந்தையருக்கும் பிறந்த சந்ததியினரே. குடிமுறை முற்குவர் இடத்திலிருந்த வழக்கமாகும். மட்டக்களப்பு முஸ்லிம்களிடமும் குடிவழிமுறை இன்றுவரை மாறுமல் இருப்பதைக் காண்கிறேம். தரவு 01 இல் பொலினஸ் தம்பிமுத்துவின் கூற்றுப்படி அவர்களில் ஒரு பகுதியினர் அக்கரைப்பற்றில் குடியேறியிருக்கின்றனர். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சந்தேகமின்றி தங்கள் உடம்பில் அறபு இரத்தம் ஓடுவதைக் கொண்டவர்களேயென்று அவர் கூறுவது நோக்கத் தக்கது.

8. தரவு 03 இல் M.P. ராகவன் புத்தளத்தில் மதம் மாறிய முற்குவரில் ஒரு பகுதியினர் கல்முனைப்பகுதியிலும் குடியேறினர் என்கிறர். அவர்களில் ஒரு பகுதியினர்தான் பரவணிக் கல்வெட்டில் கூறப்படும் அபூபக்கரும் ஏழு குடியாருமாக இருக்கவேண்டும். அவர்கள் இறக்காமத்துக்கும் களியோடை ஆற்றுக்குமிடையில் அணுக்கன் வெளியை யொட்டிக் குடியமர்ந்திருக்கின்றனர் என்பதால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்றுப் பகுதியில் அவர்கள் குடியேறி இருக்க வேண்டும். அக்கரைப்பற்றுப் பெரிய பள்ளிவாசல் ஜமா அத்தில் பணியவீட்டுக்குடியினர் அதிகமாகச் செறிந்திருப்பதும், பொன்னுச்சி குடியினர் இங்கு காணப்படுவதும் மனங்கொள்ளத் தக்கது.

9. தரவு 06 இல் வலிப்பத்தன் சேனை வெட்டிய வரலாறு கூறப்படுகின்றது. அவருக்குக் கூட வந்தவர்கள் பள்ளவெளி, உசரகாமம், கொன்றை வெட்டுவான், கடவத்தை, தில்லாவெ முதலிய இடங்களில் காடுவெட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியமர்ந்த வரலாறு கூறப்படுகிறது. இது 1750 க்கு முன்பென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1750 ராஜபக்ஷ முதலி இங்கு வந்த சந்தர்ப்பமாகும். பரவணிக் கல்வெட்டில் கூறும் இச்செய்தி தமிழ் மக்கள் 1750க்கு முன்னமே இப்பகுதியில் பரவலாகக் காணப்பட்டனர் என்பதைக் காட்டுகின்றது

10. தரவு 08 இல் கண்டியரசன் நாடு காடு பார்க்க வந்தபோது வலிப்பத்தன் சேனையில் ஒரு பள்ளிவாசல் இருந்த விபரம் கூறப்படுகின்றது. எனவே கண்டியரசன் (1750-1815) வருகைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு முஸ்லிம்கள் நிலை கொண்டுள்ளனர் என்பதும் தெளிவாகின்றது. இதுபோலவே தரவு 09 இல் பட்டிமேடு கண்ணகி அம்மன் கோயிலும் ராஜபக்ஷ முதலி இங்கு வருவதற்கு முன்னமே நிலைபாடாயிற்று.
11. கட்டாடியா வெளிவைக் கோயில் பூசகருக்கு இலவசம் கொடுத்த வரலாறு ராஜபக்ஷ முதலியோடு தொடர்பாயிற்று. எனவே திருக்கோயிலில் இருந்த நாக இலத்தவரின் ஒரு பகுதியினரே இங்கு குடிபெயர்ந்து வந்திருக்க வேண்டும். பரவணிக் கல்வெட்டு செய்தியின்படி இதற்கு முன்னர் ஒரு பகுதித் தமிழ் மக்கள் இங்கு வந்து காடு வெட்டிக் குடியமர்ந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
12. தரவு 10 இல் ஜெனரல் கொன்ஸ்டன் டிசா வெளியேற்றிய சோனக மக்களின் பெரும்பாலானோர் புத்தளப் பகுதியில் உள்ளவராவர். அவர்கள் இப்னு பதூதாக் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியோராவர். கொன்ஸ்டன் டிசா வெளியேற்றிய 4000 முஸ்லிம்களும் மட்டக்களப்பில் குடியேறிய சம்பவம் முஸ்லிம்கள் குடியேற்றத்தின் இறுதிக்கட்டமாகும். இவர்கள் 1626 இல் இங்கு வந்தனர். அவர்களில் ஒரு பகுதியினரும் இங்கு வந்திருக்கலாம்.

அக்கரைப்பற்றின் முஸ்லிம்களும், தமிழர்களும் குடியேறிய வரலாற்றை தீர்மானிக்க உதவும் சான்றுகளுள் ஒன்று கருங்கொடித்தீவு என்ற இதன் நாமமாகும். அவர்கள் ஆரம்பத்தில் குடியேறிய இடம் அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலுக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு மிடைப்பட்ட பரப்பாகும். இங்கு கருந்தெகிளம் என்ற ஒரு வகைக் கொடி படர்ந்து காடு மண்டிக் கிடந்தது. அதனை வெட்டித்துப்புரவாக்கி பள்ளிவாசலுக்கும் கோயிலுக்குமென இரு இடங்களை ஒதுக்கி இரு சாகியத்தினரும் குடியமர்ந்தனர். இக்குடியிருப்புப் பகுதியைச் சூழவர தில்லையாறு, சம்புக்களப்பு, மருதவெட்டுவான் என்னும் நீர்நிலைகளும் கிழக்கே கடலும் இருந்ததாலும், கருந்தெகிளம் கொடி வெட்டிக் குடியமர்ந்ததாலும் அவ்விடத்துக்குக் கருங்கொடித்தீவு எனப் பெயர் வரலாயிற்று. பள்ளிவாசலுக்கும் கோயிலுக்கும் ஒரே நாளில் கால்கள் நாட்டப்பட்டன. பின்னர் இது கற்கட்டிடமாக மாறிய வருஷம் 1691 என்று முதியவர்கள் கூறுகின்றனர். ஆக இக்கிராமம் உருவாகி 350 வருடங்களே ஆகின்றன. இக்கிராமத்தின் முதல் பள்ளிக்கூடம் (தற்போது அழிவுபட்டுக் கிடக்கும்) மெ.மி. பாடசாலையாகும். இதை மிசனரிமார்கள் 1870 ல் ஸ்தாபித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்துக்கு அக்கரைப்பற்று எனும் பெயர் பிரிட்டிஸார் காலத்தில் ஏற்பட்டதாகும். அப்போது ஒலுவிலில் அமைந்துள்ள களியோடை ஆறு இப்போதைய பாலமின்றி தோணி வழியாக இருந்தது. ஒரு நாள் ஆற்றுக்கு அப்பால் நின்ற ஒருவர் அக்கரையில் எத்தனை ஊர் என்று கேட்டார். அதற்குப்பதில் சொன்னவர் அக்கரையில் பத்து ஊர் என்றார். இந்தப்பத்து ஊர்களும் வருமாறு : 1. ஒலுவில். 2. பாலமுனை 3. மீனோடைக்கட்டு 4. அட்டாளைச்சேனை 5. கருங்கொடித்தீவு 6. கோளாவில் 7. பனங்காடு 8. தம்பட்டை 9. தம்பிலுவில் 10. திருக்கோயில். இந்தப்பத்து ஊர்களுக்கும் தலைமையான ஊராகவும், மத்திய ஸ்தானமாகவும் நீர்வளம், நிலவளம் செழித்த ஊராகவும் கருங்கொடித்தீவு இருந்ததால் நாட் செல்லச் செல்ல கருங்கொடித்தீவுக்கு அக்கரைப்பற்று என்னும் பெயர் நிலைப்பாடாயிற்று.

இதுகாறும் நாம் கூறியவற்றுள் ''ஐயமும் தெளிவும்'' என்ற பகுதியில் ''மற்றுமொரு கருத்து'' என்ற கூறுக்குள்ளடங்கிய 07-12 வரையுள்ள குறிப்புகளின் கருத்துகள் ''ஜனாப் அ.ஸ. அப்துஸ்ஸமத் (B.A. Hons) அவர்கள் அக்கரைப்பற்று பொதுசன நூலகத் திறப்பு விழாச் சிறப்பு மலரில் எழுதியவையாகும்.)

இதுகாறும் நாம் கூறிய செய்திகளில் மேலும் சில விளக்கங்களைத் தெளிய வேண்டியுள்ளது.

13. அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கும், பெரியபள்ளி வாசலுக்கும் ஒரே தினத்தில் கால்கோள் வைபவம் நடந்ததாகப் பலமான ஒரு செய்தி உண்டு. இதில் இவ்விரண்டையும் புதிதாகக் கட்ட அன்று தொடங்கியதாக ஒரு கருத்து நிலவுகிறது. அதிலுள்ள உண்மை என்னவெனில் பெரிய பள்ளிவாசல் கட்டிடம் கட்ட அன்று ஆரம்பச் சடங்குகள் நடைபெற்றதென்பதும், கோயிலைப் புனரமைப்புச் செய்ய அதே தினத்தில் ஆவன செய்யப்பட்டது என்பதுமே. ஏனெனில் அக்கோயில் பெரிய பள்ளிவாசலின் ஆரம்பக் குடிசை அமைப்புக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டதாகும். கோயில்கள் தேவைக்கேற்பப் புனருத்தாரணம் செய்யப்படும்போது, அதற்கான சமயச் சடங்குகள் சிறப்பாகச் செய்யப்பட்டு வருவது ஒரு மரபுப் பாரம்பரியமாகும்.

14. முஸ்லிம்கள் எந்த வருடத்தில் இங்கு குடிவந்தனர் என்பது நிரூபிக்க முடியாததொன்றாக இருப்பதுபோல், பரமன் பாலன் - பைனன் குடியமர்ந்த ஆண்டையும் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. ஆனால் தமிழர் இப்பிரதேசத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே தொல்குடிகளாய் வாழ்ந்து வருகின்றனர் என்ற உண்மை உறுதிப்படுத்தப்பட்டதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கருங்கொடி, கருங்கொட்டி, கருந்தெகிளம் கொடி ஆகிய மூன்று தாவரங்களின் சர்ச்சை பற்றிக் கூறினேம். அக்காலத்தில் வேளாண்மை உப்பட்டி கட்டுதல், வேலிகட்டுதல், வரிதல் ஆகியவற்றுக்கு இக்கொடி உபயோகிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதன் இலை வெற்றிலை இலையைப் போன்றதே. ஆயின் சற்று ஒடுங்கி இருக்கும் என்முர்கள். அதன் உட்பொருள் என்னவெனில், மிகக் கடுமையான பச்சை நிறம் என்பதாகும். நன்கு பசளை தூவப்பட்ட வேளாண்மை நல்லாக் கறுத்திருக்கிறது என்று சொல்லும் வழக்கம் நம்மிடையே இப்போதும் நடைமுறையிலுள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். மதுரைத் தமிழ்ப் பேரகராதி 522 ஆம் பக்கத்தில் ''கருங்கொடி.'' என்பதற்குக் ''கறுப்பு வெற்றிலைக் கொடி'' என்ற கருத்துக் கொடுக்கப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

ஊடகத S தர்மரத்தினம்
MSC 1937 - 1947



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அதிகாரம்

## சிங்கள மக்கள் வருகை

அக்கரைப்பற்றில் சிங்களவர் குடிவருகை என்று கூறக்கூடிய அளவுக்குப் பெரிதாக எதுவும் சொல்வதற்கில்லை. என்றாலும் அவர்கள் இங்கு பல வருடங்களாக வாழ்ந்து வரும் ஒரு வகுப்பினர் என்ற வகையில் பல விடயங்களைக் கூறிவைக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

இங்குள்ள மக்கள் மிக நீண்ட காலமாக இவ்வூரின் எல்லைக் கிராமங்களான பாடாவோடை, தமனே, பக்மிட்டியாவ, தொட்டம ஆகிய சிங்களக் கிராமங்களோடு வர்த்தகத் தொடர்பு வைத்துள்ளனர். இதை ஈரோட்டு வியாபாரம் என்று சொல்வார்கள். இங்கிருந்து உப்பு, கருவாடு, புடைவை, பாத்திரங்கள், அணிகலன்கள் முதலிய பொருட்களைக் கொண்டு போய்க் கொடுத்து அங்கிருந்து தேன், கோழிகள், குரக்கன், சோளம், பழவகை, வாழைக்குலைகள், கருப்பட்டி, கொச்சிக்காய் முதலிய பொருள்களைப் பண்டமாற்று அடிப்படையில் முற்காலத்தில் பெற்று வந்தனர். அந்நேரம் நடையிலேயே காட்டரவங்களினூடாகச் செல்ல வேண்டியதாயிருந்தது.

இவ்வூருக்கும் மேற்காண் கிராமங்களுக்குமிடையில் இருந்த தொடர்பு மிக நெருங்கிய அயல் வீட்டுத் தொடர்புபோன்றதாகும். பின் சந்தை ஆரம்பித்ததும் இக்கிராமங்கள் உட்பட தொம்பகஹவெல (தும்பக்காவெளி) மொனருகல (முப்பன) கோங்கஹஸ் பிடிய (கோங்காபிப் புட்டி) சியம்பலாந்துவ, அம்பகாவய, மற்றும் ஹிங்குரானை ஆகிய இடங்களுக்கும் பொருட்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்யச் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. தலைச்சுமையிலும் காற்றுடியால் காவியும் முற்காலத்தில் சாமான்களைக் கொண்டு வரும் வழக்கமிருந்தது. இவ்வியாபார வழக்கம் சில மாற்றங்களுடன் இன்றும் தொடர்ந்து கொண்டு வருகிறது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த குல்லாட மக்கள் என்போர் சுமார் 150 வருடங்களுக்குமுன் தொட்டம், தமனை, பாடாவேரைப் பகுதிகளில் பச்சவட்டு, ஈரோட்டு வியாபாரம் செய்து வந்ததாகவும், அவர்கள் அக்கிராமங்களில் காட்டிய ஹாஸ்யச் செயல்கள் மிகவும் நகைப்பூட்டுவனவாக இருந்ததாகவும் இன்றும் மக்களிடையே கதைக்கப்படுகின்றது. இக்கதைகள் தெனாலிராமன், அபூநவாஸ், அந்தரே போன்றோரின் சிரிப்புக் கதைகள் போன்றனவாய்த் தென்படுகின்றன. அவற்றில் கிரைபிடுங்கி அடித்த கதை, கொச்சிக்காய் அளந்தகதை, ஒரு குடிசையில் பெருமழையின் போது இராத் தங்கியகதை, புட்டுப்பொறுத்த கதை, அறபு, தமிழ் மந்திரங்கள் சொல்லி ஊதிப் பார்த்தகதை போன்ற பல கதைகள் விசேடம் பெற்று விளங்குகின்றன.

இப்படியான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டு சிலர் பொதிமாடுகளில் தேன், மரக்கறி வகைகள், மிளகாய் வற்றல், தானியங்கள், மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு சிங்கள நாடுகளிலிருந்து இங்கு வருவது வழக்கமாகும். கி.பி. 1860க்குப் பின் கல்முனையைச் சேர்ந்த ஒரு பெண்ணை விவாகம் முடித்திருந்த வில்லியத்தார் (விக்கிரமசிங்கம்) என்பவர் இவ்வூருக்கு ஆரம்பமாகக் குடிவந்தார். இவர் ஓர் அரசு ஒப்பந்தக்காரராகும்.

அவர் வந்தபின் வணிக முயற்சியின் காரணமாக, இந்திரிக்கப்பு, எந்திரி சில்வா எனும் சகோதரர்களும் ஜோன், விக்றர் சில்வா ஆகிய சகோதரர்களும் இங்கு வதிவிடங்களை அமைத்துக் கொண்டனர். சிலகாலங்களின் பின் வோமிஸ் அப்பு, யுவானிஸ் அப்பு (வெள்ளச் சிங்களவர்) துவானிஸ் அப்பு, விஜய சூரிய (திருகையர்) சாமுவலப்பு, ஜேமிஸ் அப்பு, வச்சியப்பு, K.D. மெண்டிஸ் அப்பு, G.M. சைமன் சில்வா, Y.G. ஹின்னி அப்புஹாமி, அஞோரிஸ் சில்வா, தொடந்துவ தினசாமி, அனுமானிஸ் அப்பு, D.B. உபாசகப்பு ஆகியோர் வந்து தங்கினர்.

இவர்களில் வோமிஸ் அப்பு, யுவானிஸ் அப்பு, துவானிஸ் அப்பு, விஜயசூரிய, சாமலப்பு, வச்சியப்பு, K.D. மெண்டிஸ், Y.G. ஹின்னி அப்புஹாமி ஆகியோர் இவ்வூர்த் தமிழ் மங்கையரைத் திருமணஞ் செய்தனர். திரு. K.P. பியசிறி என்பவர் இப்பகுதி அறிந்த ஒரு பிரமுகராகும். அல்பர்ட் சரணபால என்பவர் இங்குள்ள சிங்கள மக்களுக்காக ''சரணபாலபுர'' எனும் ஒரு குடியேற்றத் திட்டத்தைப் பொத்துவில் வீதிக்கு வடபக்கமுள்ள 1ஆங் குறிச்சித் தோட்டப் பகுதியில் ஆரம்பித்தார். பல சிங்கள மக்கள் அங்கு குடியேறினர். என்றாலும் சொற்பகாலமே அம்மக்கள் அங்கு வசித்தனர். அதன்பின் பலமாறுபட்ட வசதியீனங்களால் அவர்களெல்லோரும் அவர்களின் இருப்பிடங்களை மற்றவர்களுக்கு விற்றுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து வெளியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் சரணபாலபுர எனும் பெயர்கொண்ட தோட்டக் குடியிருப்பு ''பதுர் நகர்'' எனப் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டது. அக்கரைப்பற்றில் 02-02-1942 இல் ஒரு சிங்களப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது மகாவித்தியாலயமாகத் தரம் உயர்ந்துள்ளது. இங்கு ஒரு விகாரை (Pagoda) இருக்கிறது. 1947 இல் G.M. சைமன் டீ சில்வா என்பவர் கார்டியா மோட்டார் கம்பனி (Gardia Motor Company) எனும் ஒரு பஸ் கொம்பனியை நடாத்தினார். அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் வரை அந்தப் பேருந்துகள் போக்குவரவில் ஈடுபட்டன.

சந்தைப் பகுதியில் Y.G. ஹின்னி அப்புஹாமி என்பவர் ஒரு மாடிக்கட்டடம் கட்டினார். அது தற்போது ஜெயசேகர என்பவருக்குச் சொந்தமாயுள்ளது. சைமன் டீ சில்வாவுக்குச் சொந்தமான ஏழு அறைகள் கொண்ட கடைக்கட்டடமும் ஊர் மக்களுக்கு நீண்ட காலத்துக்கு முன் விற்கப்பட்டது. அக்கரைப்பற்றுச் சந்தையில் Y.G. ஹின்னி அப்புஹாமி, D.B. உபாலசுப்பு, சார்லிஸ் சில்வா (சாரு), முதலியோர் பெரிய கடைகள் வைத்து நடாத்தினர். அவர்கள் மரணித்ததும் அவைகள் மூடப்பட்டு விட்டன. அவர் தேடிய ஆதனங்களும் மற்றவர்களுக்குக் கைமாறின. கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் செயலதிபரான திரு. Y.G. எட்வேட் அப்புஹாமியின் புதல்வராவர். அவரும் ஒரு தமிழ்ப் பெண்ணை வதுவை செய்துள்ளார்.

பழைய நிலைமுறையொன்றின் நினைவாக திரு. L.H. விக்டர் சில்வா, திரு. ஜெயசிங்ஹ (பொடிபாஸ்) திரு. K.P. பியசிறி போன்ற ஒரு சிலரே இன்றுள்ளனர். மற்றையோரின் சந்ததியினர் பலர் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் இந்து சமயக் கோயில்களில் நடைபெறும் உற்சவங்கள், சடங்குகள், வழிபாடுகள் ஆகியவற்றில் பங்கேற்க என்றும் தவறியதில்லை. இங்கு வாழ் சிங்கள மக்களனைவரும் முஸ்லிம், தமிழ் மக்களுடன் என்றும் நெருங்கி உரையாடி, உறவாடி வருவது ஒரு சிறப்பான பாரம்பரியமாகும்.

கோங்காசிப் பிட்டி எனுமூரிலிருந்து வந்த சிங்களப் பெண்களிற் சிலர் கிடுகு இழைப்பதில் ஈடுபட்டனர். ஆண்கள் போறணைகளில் உணவுப் பதார்த்தங்களைச் செய்து பக்குவப்படுத்துவதில் கைதேர்ந்தவராவர். இவர்கள் சமூகச் சூழலிலிருந்து ஒதுங்கி வாழவே விரும்பும் ஒரு கூட்டத்தாராகும்.


**பறங்கியர் குடிவரவு**

கடந்த 1880 அளவில் மட்டக்களப்பிலிருந்து ஓரபிடிலிமா எனும் பறங்கி ஒருவர் இங்கு வந்து வசித்தார். அவர் இங்கு தமிழ் மங்கையொருவரை விவாகஞ் செய்ததன் மூலம் நிரந்தரமாய் இங்கேயே தங்கி வாழ்ந்தார். அவரைத் தொடர்ந்து அவரது மருகர் பொடியர் டிலிமாவும் இங்குவந்திருந்து இங்கேயே திருமணமும் செய்தார். இவர்களின் வாரிசுகளே இங்கு இப்போதுள்ள பறங்கியவராவர். கடந்த பல வருடங்களாக பொத்துவில் வீதியிலுள்ள 40 ஆம் கட்டை என்னுமிடத்தில் வாழ்கின்றனர். இவர்களும் எல்லோரிடமும் நேசம் பாராட்டி நடக்கத் தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரின் பெருந்தலைவரும், அரும் பணிகள் செய்து அனையாப்புகள் பெற்றவருமான மேதகு எஸ். தருமரத்தினம் அவர்களின் ஏக புதல்வியரான திருமதி ரஞ்சனி சோமசுந்தரம், சித்தி விநாயகர் கோயில் சமய நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்ற மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார்.





பௌத்த விகாரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறவர் குலம்

ஏறத்தாழ 150 வருடங்களாக இப்பிரதேசத்தில் வாழ்ந்துவரும் பழங்குடி வகுப்பினர் குறவர்களாகும். இவர்கள் இந்தியாவிலுள்ள ஆந்திர (தெலுங்கு) தேசத்திலிருந்து இலங்கையில் குடியேறிய ''யெரக்காவர்'' வம்சத்தைச் சேர்ந்தவர்களாவர். அக்கரைப்பற்றுக்கு மேற்கேயும் தெற்கேயும் அடர்ந்து கிடந்த பெருங்காடுகளில் குடிசைகட்டி வாழ்ந்தனர். இக்குடிசைகள் கம்புகள், இலுக்குப்புல், இலைகுழைகளைக் கொண்டு அமைக்கப்பட்டவையாகும்.

இங்குள்ள காட்டுப் பகுதிகளான கஞ்சங்குண்டு, புளியடிப்பட்டி, மொட்டையாண்ட வெளி, முள்ளிக்குளம், அம்பலத்தாறு, ஓடிய வெளி, வெல்வெந்தா, பனையறுப்பான் கேணி மற்றும் ஹிங்குருவைப் பகுதிகளில் காலத்துக்குக் காலம் மாறிமாறி வாழ்ந்துள்ளனர். அந்நேரம் இவர்களிடம் ஏராளமான மாடுகள், ஆடுகள் இருந்தன. ஒருவரிடம் ஒரு [illegible] வேட்டை தாமொன்றை மாற்றுகம் பெறும் ஒரு வழக்கம் இருந்தது. மந்தைகளுக்கான புல், தண்ணீர் உள்ள இடங்களிலேயே தம் இருப்பிடத்தை மாற்றிக் கொள்வர்.

நிந்தவூர்ப் பகுதியிலுள்ள பெரிய விசாறு, சின்ன விசாறு, சங்கமித்த குளம், கைக்கேணி, கந்தம் வெளி முதலிய இடங்களிலும் முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் இப்பகுதிக்கு இடம் பெயர்ந்து வந்துள்ளனர். இவர்களுடைய வாடிகள் அருகருகே அமைந்திருக்கும். வாடிக்குள் தலையை மாத்திரம் வைத்து மற்றப்பகுதி வெளியில் இருக்கக்கூடியதாய் உறங்குவர். நாய், மாடு, ஆடு, பாம்பு, பாம்புப் பெட்டி, ஊதுகுழல், சட்டி, வெள்ளெரிக்கிலேனோர் என்பன இவர்களின் பெருஞ் சொத்தாகும்.

ஆண்கள் இடுப்பிலிருந்து முழங்காலுக்கு மேல் வரை ஒரு சீலைத் துண்டைக் கட்டிக் கொள்வர். பெண்கள் சீலை கட்டுவார்கள். சட்டை போடுவதில்லை. கைவிரல்களிலும் காலவிரல்களிலும் மோதிரம் அணிவதுடன் மணிக்கட்டிலிருந்து முழங்கை வரைக் காப்புகளும் அணிவர். மூக்குத்தி, கழுத்து நிறைய மாலை, காதணிகள் என்பனவும் இவர்களது அணிகலன்களாகும். இவைகள் பூச்சிமணி, சிறுமணிகளாகவும், றப்பர் காப்புகளாகவும் மற்றும் வெள்ளி, செம்பால் அணிகலன்களாகவும் இருக்கும்.

சில முதுவயதுப் பெண்கள் ஆண்களைப் போலக் கோவணங்கட்டி மேற்துண்டு போட்டுக் கொள்வர். நாவற்பழம், உடும்பு இறைச்சி, தேன், கிழங்குவகைகள் மற்றும் குரக்கன், தானியவகைகளை உண்பர். பன்றிகளை வேட்டையாடுவர். சேலை, கோவணம் இன்றும் பயிர்ச்செய்கைகளுக்குக் காவலாக இவர்களை இருத்துவதுண்டு. சட்டி இவர்களின் பிரதான ஆயுதமாகும். சிறுவர் தொடக்கம் முதியவர் வரை வெற்றிலை இன்றும் வழக்கமுள்ளவர்களாவர். சிறு வயதிலிருந்தே சாராயம் குடிக்கும் பழக்கத்தை மரபாகக் கொண்டுள்ளனர். சிறுவர் சிலர் சாராயம் குடிக்காமல் அடம்பிடித்தால் அவர்களை ஆக்கினை பண்ணிக் குடிக்க வைப்பார்கள். இளம் வயதில் இப்படிச் செய்யாவிட்டால் வளர்ந்ததும் சாராயத்தைத் தொட மாட்டான் என்று சொல்வார்கள். சாராயம் குடிப்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டாயக் கடமை போல் கருதுகின்றனர். மரத்தைக் குடைந்து பொந்து உண்டாக்கி அப்பொந்துக்குள் இறைச்சி, தேன் ஆகியவற்றை நிறைத்து ஊறவைத்துச் சிலநாட்களின் பின் சுவைத்துண்பர். வள்ளியையும் முருகக் கடவுளையும் வழிபடுகின்றனர்.

ஆனால் அக்காலத்தில் இவர்களுக்கென ஆலயங்கள் இருக்கவில்லை. வருடா வருடம் ஆடித்திருவிழா நிகழ்ச்சியை மிகக் கோலாகலமாய்க் கொண்டாடுவர். அந்த உற்சவத்தின் போது சாராயம் அருந்தி குறத்தி, குறவர் நடனமாடுவர். இந்நிகழ்ச்சி ஒரு கிழமைக்குத் தொடரும். வாலிபர்களெல்லோரும் குடியிருப்புக்குச் சற்றுத் தூரத்திலமைக்கப்பட்டிருக்கும் நீளமான கொட்டகையில் இருந்து இராத்தங்க வேண்டும். எந்தக் காரணங்கொண்டும் தன்சொந்த வீட்டுக்குக் கூட விடியுமுன் இவர்கள் வரக்கூடாது என்பது இவர்களது சமூகக் கட்டுப்பாடாகும். பூப்பெய்திய கன்னியரைக் காக்கவே இந்தமுறை.

பருவப் பெண்கள் ஆண்களோடு பேசவோ ஆண்கள் பெண்களோடு பேசவோ முனைவது ஆகாத செயலாகக் கருதப்படுகிறது. காதல் மணம் என்பது இவர்களிடமில்லை. பெற்றோர் பெரியவர்களாலேயே கலியாணம் தீர்மானிக்கப்படும். கலியாணப் பேச்சுவார்த்தை முடிந்து திருமணம் தீர்மானிக்கப்பட்டதும் அரிசி, பருப்பு, மரக்கறி வகைகள் சேர்ந்த விருந்து அங்குள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும். தாராளமாக மதுபானம் ஊற்றப்படும். சிலர் பெரும் வெறியில் மிதப்பர். ஆடல், பாடல்களுக்குக் குறைவிருக்காது. பின் மாப்பிள்ளையைக் கூட்டிப் போய்ப் பெண் வீட்டில் விடுவர். கீரை மணியால் பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி கட்டுவார். பின் இரு நாட்களால் மாப்பிள்ளை பெண்ணையழைத்துக் கொண்டு தம் வீட்டுக்கு வருவார்.

பூதில் இரு சம்பந்திகளும் கலந்து மது அருந்துவர். புதுத் தம்பதிகளுக்கு ஒரு குடில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும். சடங்குகள் முடிந்ததும் தம்பதியர் அக்குடிலில் குடி புகுவர். அன்றிலிருந்து தனிக்குடித்தனம் தொடங்கும்.

மணமகனுக்குச் சீதனமாக ஒரு பாம்பு, பெட்டி, ஊதுக்குழல், ஈட்டி, இரு வேட்டைநாய்கள் என்பன வழங்கப்படும். பெண்ணின் பெற்றோர் மருமகனுக்கு சறுமன் மோதிரம் போடுவது வழக்கம். குழந்தை பிறந்ததும் காட்டுப்புல், மூலிகை வகைகளின் சாறு பிழியப்பட்டு அத்தாய்க்குக் கொடுப்பார்கள். இலை, தழைகளால் பந்தலொன்று அமைக்கப்படும். அதனுள் பெரியார்கள் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு விருந்தளிக்கப்படும். குழந்தையின் தலைமயிர் சிரைக்கப்படும் நாளில் இவ்வைபவம் நடைபெறும்.

பஞ்சாயத்து நிருவாகமுறையொன்று மிகப் பழங்காலந்தொட்டே மரபுவழிப் பாரம்பரியமாக இவர்களால் கைக் கொள்ளப்பட்டு வருகின்றது. பஞ்சாயத்துத் தலைவரை ஏஜண்டு என்றும் உதவியாளரை விதானை என்றுஞ் சொல்கிறார்கள். பாரம்பரிய வழக்கங்களை மீறலுக்கு 250 ரூபா தண்டமும் ஏனைய குற்றங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் [illegible] வகித தண்டனைகளும் வழங்கப்படும். பெண்களும் ஆண்களும் ஆசா [illegible] கொண்டால் கடுந்தண்டனை வழங்கப்பட்டு அவ்விருவருக்கும் கலியாணம் செய்து வைக்கப்படும். எந்தக் காரணங் [illegible] இந்த ஆடவன் வேறு [illegible] வைக்கவோ அந்தப் பெண் மாற்று ஆண் [illegible] வைக்கவோ முடியாது. இவர்களின் [illegible] யான சமூகக் கட்டுப்பாட்டுடன் [illegible] யான நிலையில் அரிதாகவே நடக்கிறது.

[illegible] முறையானவர்களுடன் பெண் [illegible] காரணத்தைக் கொண்டும் பேசுவதோ கொடுக்கல் வாங்கல் செய்வதோ தடை செய்யப்பட்ட விடயமாகும். திருமணமான, திருமணமாகாத இருவகைப் பெண்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். விவாகஞ் செய்த பெண் வேறு ஆடவனோடு சோரம் போனால் அவளின் கணவன் அவளை ஏற்க மறுக்கும்பட்சத்தில் சோர நாயகனே அவளை ஏற்றல் வேண்டும். இதில் எந்தவித விதிவிலக்குமில்லை. இவர்களின் விவாகம் உட்பட எந்த நிகழ்ச்சிகளுமே பதியப்படுவதில்லை. பிறப்பு இறப்புகள் கூடப் பதிவில்லாத பழைய வழக்காறு தொடர்ந்து வந்திருக்கிறது. ஆனால் எந்தப் பொது விசேடங்களுக்கும் மூன்று பேர் சாட்சியாக இருப்பர்.

கிணறு கட்டும் வழக்கம் இவர்களிடம் இல்லை. நீர்க்கேணி (பூவல்) ஆறு, குளங்கள், மடுக்களிலிருந்தே நீர் பெறுகின்றனர். இவர்களின் தண்ணீர்ப் பாத்திரத்துக்கு "நாடன் குடுகு" எனப் பெயர். இவர்கள் தமக்கிடையே தெலுங்கு மொழியில் பேசிக் கொள்கின்றனர். இப்பகுதியில் அதை "குறப்பாச" என்று சொல்லப்படும். அக்காலத்தில் வழக்குகளை விசாரிக்கும் குழுவினர் அக்கரைப்பற்றுப் பொதுச் சந்தைக்கு வருவதும் அதனோடு ஒரு குறவர் கூட்டம் வருவதும் செயலிலிருந்தது. சுமார் 50 வருடங்களுக்கு முன்புள்ள இவ்வழமை படிப்படியாக மாற்றம் பெற்று தற்போது குறவர் வாடிகளிலேயே விசாரிப்பு நடந்து வருகிறது.

குறப்பெண்கள் சந்தைக்கு வந்தால் புகையிலைக்காம்பு, அழுகிய வெற்றிலை, கிழங்கு வேர் ஆகியவற்றைச் சேகரிப்பதில் மும்முரமாய் ஈடுபடுவர். தமிழ் மொழியில் திருத்தமின்றிக் கதைப்பார்கள். சிங்களத்திலும் சிலருக்குப் பரிச்சயமுண்டு. ஊர்களுக்குள் பாம்பாட்டிப் பணம் வசூலிப்பதும் பல குறவர்களின் தொழிலாகும். கணவனை முருடு என்றும் மனைவியை நாலிர என்றும் சொல்வார்கள். [illegible] என்றால் [illegible] என்றும் தாலி என்றால் புள்ள (பிள்ளை) என்றும் கருதப்படும். இவர்கள் பக்கத்து ஊர்களுக்கோ வயல்களுக்கோ பெரும்பாலும் கூடியே செல்வர். முதியவர் சிலர் தனித்துச் செல்வதுமுண்டு. இவர்களிடையே [illegible] யானவர்களான ஆடவரை மலைன்னு, துப்பட்டன்னு, கல்கட்டி, பிச்சிலோடு, தொரோடு, வெல்லேலி, தாலன்னு என்றும் மகளிரை அம்மக்கா, பகலுக்கா, மறுகம், பெரம்ம, மதுராம்பா, கிரமணிமா என்றும் சொல்வர்.

பருவப்பெண்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் மிக முக்கிய நாள்களில் இருக்கும். அவர்கள் சேர்ந்து விருந்து சமைத்துண்டு கிராமிய நடனமாடியும் பாடியும் மகிழ்வதுண்டு. குறவர் குழுக்களை அடிக்கடி அக்கரைப்பற்று, திருக்கோயில் சந்தைகளில் காணலாம். பாடசாலைச் சுற்றுலாவின் போது குறவர் வாடிக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதும் அவர்கள் ஆடல்பாடல்களின் மூலம் மாணவர்களை மகிழ்விப்பது ஒரு அருமையான நிகழ்ச்சி இப்பகுதியில் பலவருடங்களின் காணப்பட்டது.

இங்கு வாழ்ந்த ஆதிகாலக் குறவர்கள் காட்டுக் கிழங்குகள் கல்லுதல், பழங்கள் சேகரித்தல், வேட்டையாடல்களைத் தவிர வேறு முயற்சிகளில் ஈடுபட்டிலர். மரவுரி, கொம்புக் குழைகளையே ஆடையாக அணிந்துள்ளனர். விருந்தினருக்கு தேன், தினைமா இவைகளைக் கொடுத்து உபசரிப்பர். புலித் தோலில் மட்டுமே படுப்பார்கள். மலைப்பாறைகளில் குடிபுகுந்து உரலாகப்பாவித்தனர். அங்கயற்கண்ணி, கண்ணகி வழிபாடு பழங்கால வழக்கமாக இருந்தது. சில்வலையும், பல்வாருமம் இறப்பில் செருகி இருக்கும் வருடமொருமுறை கும்ப முனிக்கும் அபிசேக வல்லிக்கும் விழாவெடுத்து குறிஞ்சி மலரை முல்லைக் கொடியில் கொடுத்த மாலையையணிவித்து வணங்குவர். வள்ளி, தெய்வானை [illegible] ''பொக்காவர்'' என்ற பகுதியினர் கைக் கொள்ளுவர்.

பழங்குடி மக்களிற் பலர் விநோதமான பல ஆசாரங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அந்த வகையில் குறவர்களிடமும் சில புதுமையான பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. அதிலொன்று ''கூவேட் (Couvade) என்னும் நூதன முறையாகும். இதை ''ஆண்களின் பிரசவப்படுக்கை'' என்று சொல்லலாம். மனைவியின் பிள்ளைப்பேறு காலத்தில் கணவன் நோயாளி போல் படுத்துக்கிடப்பதும் மருந்துகள் உட்கொள்வதும் இவர்களிடம் காணப்படும் பாரம்பரியமான பழக்கமாகும். இப்பழக்கத்தைத்தான் மானிடவியலாளர்கள் ''கூவேட்'' என்று குறிக்கின்றனர்.

இந்தப் பிரெஞ்சு சொல்லுக்கு அடைகாத்துக் குஞ்சு பொரித்தல் என்ற பொருளுண்டு. கி.பி. 1030 இல் வசித்த ''அல்பெருனி'' என்ற பெரும் பயணி குறவர் குலத்திலுள்ள இவ்வழக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மனைவியின் ஆடையைப் போர்த்திக் கொண்டு அவள் பக்கத்தில் கணவன் படுத்துக் கொள்ளல் கூவேட்டின் ஒரு முறையாகும். இச்சம்பிரதாயத்தை மீறுபவர்கள் கடுந்தண்டனைக்குள்ளாக வேண்டி வரும். இப்படிச் செய்யாவிட்டால் தேவதைகள் தம்மைத் தண்டிக்குமெனவ இவர்கள் நம்பினார்கள். தவிர பிறக்கும் குழந்தைக்கு ஏதும் தடங்கல் ஏற்படலாமென்பதும் அவர்களின் கருத்தாகும்.

யெரக்காளர் குலத்தில் இவ்வழக்கம் பண்டு தொட்டு இருந்து வருவதாக ரெவ். ஜே. கெய்ன் என்பார் கூறுகிறார். கூவேட் முறையில் பல பிரிவுகள் இருப்பதாகவும், ஆண்களின் பிரசவப் படுக்கைமுறை அவற்றிலொரு பிரிவாகுமெனவும் மானிடவியலறிஞர் ''எஹ்ரேன் பெல்ஸ்'' தெரிவிக்கின்றார். (ஆதாரம் : 1. Truibner India Oriental Service, 2. Edgar Thurston Castes and Tribes of Southern India 3 Baron Umar Rolf Ehrenfels Mother Right in India)

அது ஒரு புறமிருக்க, பண்டையக் குறவர்குல வழக்கங்களில் பிரசவத்தின போது பெருங்காயச் சடங்கொன்று நடைபெறுவது தவிர்க்க முடியாதது. பிரசவத்தாய் பேறு நோவால் துன்புறும் போது, ஒரு சிரட்டையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைக்கப்பட்ட பெருங்காயத்தைச் சமமாகப் பிரித்து அவளுக்கும் கணவனுக்கும் கொடுக்கப்படும். பெருங்காயத்தைக் குடித்ததும் கணவன் வலியால் கஷ்டப்படுவதுபோல் முனகுவான். குழந்தை பிறக்கும் வரை இவனின் முனகல் சத்தம் நிறுத்தப்பட மாட்டாது. மிகப்பழைய காலந்தொட்டு ''குறத்தி பிள்ளைப் பெறக் குறவன் காயம் தின்பான்'' என்ற ஒரு பழமொழி இப்பிராந்தியத்தில் வழங்கி வருவதும் மனங்கொள்ளத் தக்கது. இது கூவேட்டின் (Couvade) ஒரு பிரிவாக இருக்கலாம்.

குறவர்களைக் கண்ட சிறுவர் சிலர் அவர்களைப் பார்த்துப் பெருங்காயம் என்று சொல்வதும் அதைக் கேட்ட அவர்கள் சிறுவர்களைச் சினந்து திட்டுவதும் நாமறிந்த உண்மையாகும். பெருங்காயம் என்ற சொல்லை அவர்களால் ஜீரணிக்க முடியாது. கூவேட் முறையை ஆண்கள் செயற்படுத்தும் போது, பெருங்காயம் குடிக்கக் கொடுப்பதால், அந்நிகழ்ச்சியை மற்றவர்கள் கேலி செய்கிறார்கள் என்று எண்ணுவதே, அவர்களின் சினத்துக்குக் காரணமாக அமைந்துள்ளதெனலாம்.

நிலையான வதிவிடங்களின்றி அலைந்து திரிந்த இவர்களைக் கடந்த 30 வருடங்களுக்குமுன் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றஞ் செய்ய வண. பிதா குக் சுவாமியவர்கள் பெரும் முயற்சி எடுத்தார். குறவர் குழுவினருக்குப் பல பரிசுகள் நன்கொடைகள் வழங்கப்பட்டன. என்றாலும் இவர்கள் தமது பழைய வணக்க வழிபாடுகளை விடுவதற்கு மறுத்து வந்தனர். காலக்கழிவில் பலர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்க்கப்பட்டனர். வேறு சிலர் சேர மறுத்துப் பிரிந்து சென்று காஞ்சிரங்குடா, தாமரைக்குளம் பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்கள் வள்ளி, தெய்வானை வழிபாடுடையோராவர். தற்போது சுமார் 35 குடும்பங்களில் 150 பேர் வரை வாழ்கின்றனர்.

அளிக்கம்பை (தேவபுரம்) எனுமிடத்தில் ஏறத்தாழ 75 குடும்பத்தில் 300 பேர்வரை இருக்கின்றனர். அளிக்கம்பையில் இவர்களுக்கென குடியேற்றத் திட்டத்தில் சிறிய கல்வீடுகள் 50 அளவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. வாடிகளும் அதிகமுண்டு. பாடசாலைக் கட்டடம், தேவாலயம், ப.நோ.கூ.ச. கிளை (கூப்பன் கடை) என்பன அங்குள்ளன. குறவர் குலப்பிள்ளைகளான 54 ஆண்களும் 50 பெண்களும் தமிழ் படிக்கின்றனர்.

இவர்களின் பழைய வழக்கங்களில் சில மாற்றங்களைக் காணக்கூடியதாயுள்ளது. தற்போது பெரும்பாலான மகளிர் சட்டை போடுகின்றனர். உள்ளாடைகள் பிராக்களை உபயோகிக்கின்றனர். ஆண்களில் வாலிபர்கள் ஓரளவு நல்ல உடையில் காணப்படுகின்றனர். உழவுப் பொறிச் சாரதிகளும் உள்ளனர். அதிகமானோர் வேளாண்மை செய்கின்றனர். பெண்கள் வயல்வேலைகளில் ஈடுபட்டு உழைக்கின்றனர். அக்கால மரபுப்படி கோழி, ஆடுகள் வெட்டிப்பலியிடும் வழக்கமொன்றும் இவர்களிடமுண்டு. அப்போது பேயாட்டச் சடங்கை நடத்துவர்.

கன்னிப் பெண்களை மிகப் பாதுகாப்புடன் வளர்க்கின்றனர். அவர்கள் அதிகம் பேசுவதில்லை. அந்நியர் யாருக்கும் பருவ மங்கையர் பேட்டியளிப்பதில்லை. அமைதியான போக்கைக் கடைப்பிடிப்பர். அதனால் பெரும்பாலும் அவர்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் சச்சரவுகள் நடைபெறுக ஒரு நிலைமை உள்ளது. குறிஞ்சி நிலக்குறவர், பாலை நிலக்குறவர் என்று இக் காரணிகளைக் கொண்டிருந்த பழங்காலக் கூட்டுக் குடும்பமே (Inhabitant of Hills or Deserts) இக்குறவர்களாம். மானிடவியலாளர் இவர்களைக் குறச்சாதி (a member of the Kurava tribe) என்றே பல இடங்களிலும் குறிப்பிடுகின்றனர். குறவர், குறவர், குறமலை, வலைசர், அரவர், பொரக்காரர், தும்பர், காடவர் மற்றும் குக்கார் எனப்பல பிரிவுகள் இவர்களிடையே இருந்தாலும் "குறச்சாதி" (குலம்) என்ற பெயராலேயே இவர்கள் அழைக்கப்படுகின்றனர். அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

குறவரின் பேச்சுவழக்குச் சொற்கள்

சில எடுத்துக்காட்டாக இங்கு தரப்பட்டுள்ளன.

ஆண் - மகபரா
பெண் - ஆண்டிமடாய்
தாய் - அம்மா
தகப்பன் - அப்படு
அண்ணன் - அண்ணடு
தம்பி - தம்பிடு
அக்கா - அக்கா?
தங்கச்சி - பிடா
மாமா - மாமா
மாமி - அத்தா
மச்சான் - வதுலு
மச்சாள் - மர்தால்
ஆச்சி - அவாடு
அப்பச்சி - தாத்தா
மாப்பிள்ளை - பவிச்சி
மணப்பெண் - பெங்கி
குழந்தை - சின்னபரா
கறி - புலுச்சு
தண்ணீர் - நீழ்
மீன் - சாபலு
இறைச்சி - நந்தில்
கிணறு - பாவு
பாம்பு - பாம்பு
ஊதுகுழல் - நாசரம்
பெட்டி - பாம்பெற்ற
நாய் - குக்கா
மாடு - ஆங்
ஆடு - நாரா
வீடு - இல்லு
சீலை - பத்த
பாவாடை - கிந்துகடபட்டா
சட்டை - அங்கி
வெளிச்சம் - அக்கி
சூரியன் - சுக்கா
சந்திரன் - என்னரா
காடு - அடிவி
பழம் - பந்து
காசு - யக்கா
பேய் - பிசாஸி
புற்று - புத்தால்
மரம் - மாறு
தலைவர் - ஏஜன்சடு
பூப்பெய்தல் - சமர்தா
சந்தோஷம் - பாகுண்டம்
துக்கம் - துக்கா
நோய் - வரத்தம்
மரம் - மாறு
நான் - சேனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றும் அதிகாரம்
## புவியியல் அமைப்பு

அக்கரைப்பற்றின் எல்லையாக வடக்கு தக்கியா, தெற்கு முகத்துவாரம், கிழக்கு கடல் மேற்கு தில்லையாறு (பட்டியடிப்பிட்டிப் பகுதி) என்பன உள்ளன. இவற்றை முற்கால எல்லையாகக் கொள்ளலாம். இவ்வெல்லைகள் பற்றி சேகு மதார்ப்புலவர் இப்படிப் பாடியுள்ளார்:

''மேற்கினில் நதியுஞ் செந்நெல் விளைநிலங்கிழக்கில்வாரி
நோக்கிடில் வடக்குத் தைக்கா நுவல் தெற்கில் முகத்துவாரம்
காக்குமிவ்வெல்லை மத்தி கருங்கொடி பெரியபள்ளி
ஆக்குமங்கடங்கும் செய்னுல் ஆபிதீன் வலியுல்லாவே''

பீஸபீல் வலிகாவியத்தில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. அக்காலக் கருங்கொடித்தீவின் எல்லையாகவே இதைக் கொள்ளல் வேண்டும். மேற்பக்கத்தில் சனப்பரம்பல் காணப்பட்டதால் நிலப்பரப்பும் விரிவடைந்தது. அதன் காரணமாகப் பட்டியடிப்பிட்டி, பள்ளிக்குடியிருப்பு, எசங்கணிச்சீமை, ஆலிம் நகர், இலுக்குச் சேனை ஆகிய கிராமங்கள் உருவாக்கப்பட்டு மேற்கெல்லைப்பரப்பும் விஸ்தரிக்கப்பட்டது. தெற்குப்பக்கத்தில் அம்பலத்நாறு (வேலமரத்துவெளி) புட்டம்பை, கண்ணகிபுரம், அளிக்கம்ப (தேவபுரம்) சாகாமம், கவடாப்புட்டி ஆகிய புதுக்குடிவரவுப் பிரிவுகள் தோன்றி அப்பீக்க எல்லையும் விரிவடைந்தது. வடக்கெல்லையில் இருந்து அட்டாளைச்சேனை ஆரம்பிப்பதாலும் கிழக்கில் கடலிருப்பதாலும் இவையிரண்டும் மாற்றமடையாமல் அப்படியேயுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்முயற்சி, வாழ்க்கை வளம், இயற்கைச் சூழல், நீர் நிலைகளின் சாதகம் என்பவற்றின் கவர்ச்சிக் காரணங்களால் எல்லைகள் விரிவாக்கம் பெற்றன. குடியேற்றங்களினதும் போக்குவரவுப் பாதைகளினதும் இணைப்புகளால் எல்லை வரம்புகள் இன்று பின்வருமாறு உள்ளன:

வடக்கே தக்கியாக் கடற்கரை (அக்கரைப்பற்று-அட்டாளைச்சேனை) எல்லை வீதி, தெற்கே சாகாமம், கிழக்கே கடல், மேற்கே இலுக்குச் சேனைப்பிரிவு.

பாரம்பரிய உடையில் திருமதிகளான சலீமோனா, மீஸ்டா, லீஸ்லி, சம்பியா ஆகியோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில அமைப்பு, விஸ்தீரணம், மழை வீழ்ச்சி

01. நில அமைப்பு: இப்பகுதி நிலப்பரப்புகள் பெரும்பாலும் சமதரையாகக் காணப்படுகின்றன. இவ்வெல்லைக்குள் மொட்டையாகல்மலை கூளாவடிக்கண்ணையில் வயற்பரப்பிலும் கரடிமலைபுட்டம்பைப் பிரதேசத்திலும் உள்ளன. நீத்தைக்குளம், இலுக்குச் சேனைக்குளம், வம்பியடிக்குளம் எனும் நீர்ப்பாய்ச்சல் குளங்களும் உள்ளன. பல புராதனக் குளங்கள் இங்கு தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அனேகமானவை விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. பின்வருவன இவற்றிலடங்கும்: அகத்திக்குளம், சின்னகத்திக்குளம், மன்னன்குளம், பெரியகுளம், முள்ளிக்குளம், ஓடாமல் எடுத்தான்குளம், ஏத்தாலைக்குளம், ஆலையடிக்குளம், கருங்கொடித் தீவுக்குளம் (பள்ளியடிக்குளம்) அம்மாள்ளகுளம், வேப்பயடிக்குளம், முருங்கைவட்டிக்குளம், மருதவெட்டுவான் குளம், மலையடிக்குளம் மற்றும் பறவைக்குளம், ஆலைவிழுந்தகுளம், முதலியனவாகும். கடற்கரைக்கு அணித்தாயுள்ள பகுதி, மன்னன்குளப்பகுதி, முருகோடைப் பகுதி ஆகியன தென்னந் தோட்டங்களாகும்.

சுமார் 40 வருடங்களுக்குமுன் சின்ன மருதவெட்டுவான் குளப்பகுதியில் கிடைச்சிச் செடிகளும் பெரிய மருதவெட்டுவான் பக்கத்தில் பூவா, பாலைச்சை மரச் சோலைகளும் காணப்பட்டன. உப்பளத்தையண்டிய நீர் நிலைகளில் சாப்பைப்புற்களும், குற்பல், கிராம்பன் புற்களும், செழித்து வளர்ந்திருக்கும். மேற்கில் வயல்களும் காடுகளும் தெற்கிலும் வயல்கள் காடுகளுமாயுள்ளன. மண்வளம் களி, இருவாட்டி, மணல், உப்புச் செறிந்த மண், வயலில் மிகச் சிறிய பரப்பில் கக்குமுட்டைக்களி அறுக்கன் பட்டி, சேறு மற்றும் கரு மண் அமைப்புகளைக் கொண்டதாகும். கிழக்குப் பகுதி கடற்கரை மண்மேடாயுள்ளது.

02. விஸ்தீரணம்: முற்கால எல்லைக்கமைவான நிலப்பரப்பு வடக்குத் தெற்காக மூன்று மைல்களும் கிழக்கு மேற்காக இரண்டு மைல்களுமாக ஆறு சதுரமைல் பரப்பைக் கொண்டதாகும். அதன்பின் எல்லை விரிவாக்க விசாலிப்புக்கமைய 64 மைல்கள் பரப்பைக் கொண்டதாயுள்ளது. நிலம் நீர்ப்பரப்பு மொத்தம் 150.0 சதுரக் கிலோ மீற்றர் (94 மைல்). சனத்தொகை சுமார் 49000. அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு அரசாங்க உதவி அதிபர் பிரிவுகள் 33 கிராமங்களைக் கொண்டவையாகும். இங்கு 14000 பேர் உழைப்பு முத்திரை பெறுகின்றனர். 23000 ஏக்கரில் நெற் செய்கை நடைபெறுகின்றது. 17142 ஏக்கருக்கு பெரிய நீர்ப்பாசனம் உதவுகிறது. சிறிய நீர்ப்பாசனம் 316 ஏக்கருக்குண்டு. 5297 ஏக்கரில் மானாவாரி நெற்பயிர் செய்யப்படுகின்றது. 9000 குடும்பங்கள் வாழ்கிறார்கள்.

இப்பகுதி மத்திய கோட்டுக்கு வடக்கில் 5.55° இலிருந்து 9.50° அகலக்கோடு வரையிலும் 79.42° இலிருந்து 81.53° கிழக்கு நெடுங்கோடு வரையிலும் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மழைவீழ்ச்சி: சராசரியாக 63"--67" வரை மழைவீழ்ச்சியும் வெப்பநிலை, நில அமைப்பு, நீர்ப்பாசனம் என்பவற்றையும் இப்பகுதி கொண்டுள்ளது. இவை பொருந்தும் காரணிகளாய் இருப்பதால் மக்கள் பெரும் பான்மை விவசாயிகளாக உளர், அதிக நெல் விளையும் உச்சப்பகுதியை இவ்வூர் சார்ந்துள்ளது. நவம்பர், டிஸம்பர் மழைவீழ்ச்சி கூடுதலாக இருப்பதால், மாஞவாரி நெற்செய்கை, ஏக்கர் எண்ணிக்கையில் கூடுதலாக உள்ளன. ஏப்ரல், மே மாதங்களில் குறைந்த மழை பெய்வதால் நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் பரவலாக வேளாண்மை செய்யப்படும்.

தென்னந்தோட்டம்: கடற்கரையை அண்மித்துள்ள பகுதிகளில் தென்னஞ்சோலைகள் அடர்ந்து காணப்பட்டன. அவைகளைப் பரிபாலிக்க மிக ஆர்வங்காட்டப்பட்டது. துப்பாக்கியேந்திய காவற்காரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். முட்கம்பி வேலிகளும் முட்கள்ளிச் செடிகளும் தோட்டங்களைச் சுற்றிக் காணப்பட்டன. அனுமதியின்றி தோட்டங்களுக்குட் புகுந்தவர்கள் பிடிக்கப்பட்டு, தென்னை மரத்தில் கட்டப்பட்டு ஆக்கினை செய்யப்பட்டனர்.

இரவில் புகுந்தோர் சுடப்பட்டனர். தக்கியாவடியிலிருந்து சின்னமுகத்துவாரம் வரை செழிப்புற்றோங்கிய தோட்டங்கள் காணப்பட்டன. கொப்பரு எடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. சந்தையில் ஏராளமான தேங்காய்க்குவியல் தென்படும். எம்.எஸ். தருமரெத்தினம் அவர்களின் (தற்போது நாருவியாத்தோட்டம்) தோட்டத்திலுள்ள தேங்காய்களைச் சேகரிப்பதற்காக யானைவண்டி உபயோகிக்கப்பட்டது. மிக உயரமான பாரிய யானையொன்று தோட்டத்தில் கட்டப்பட்டிருக்கும்.

இத்தோட்டங்களின் உரிமையாளர்களாக திருவாளர்களான முத்தையா, M.S. தருமரெத்தினம், மு. மாணிக்கம், கே. சுப்பிரமணியம், S.A. செல்வநாயகம் புரோக்கர், அமரசூரியா, Y.G. ஹின்னி அப்புஹாமி, ஜனாப்களான சின்னலெவ்வை வன்னுமை, இப்ருன்சா, கலந்தர் போடியார், யூசுப் மரைக்காயர், உ.போ. முகம்மது மீரா சாகிபு, பிச்சைராவுத்தர் மற்றும் சம்மாந்துறை லெப்பை ஆகியோர் இருந்தனர்.

சில தோட்டங்கள் ஆங்கிலேயர்களால் உண்டாக்கப்பட்டுச் சிலருக்கு விற்கப்பட்டது. இவற்றை உண்டாக்கக் கேரளத்திலிருந்து கூலியாட்கள் கொண்டுவரப்பட்டனர். நாற்றுக்கான தேங்காய்கள் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து தருவிக்கப்பட்டன. இக் கூலிச்சனங்கள் மாந்தரீகம் கற்றவர்களாக இருந்தனர். சிலர் மனநோய்க்குச் சிகிச்சையளித்தனர். அக்கரைப்பற்று, கோளாவில் பகுதிகளில் இவ்வைத்தியங்களில் கை தேர்ந்தவர்கள் இவர்களால் உருவாக்கப்பட்டவர்களின் பரம்பரையினரேயாகும். மலையாள மாந்தரீகத்தில் சிறப்புப் பெற்றோர் இன்றும் இப்பகுதிகளில் உளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிச்சி (Village) களின் பிரிவு: முற்காலத்தில் கருங்கொடித் தீவிலுள்ள முஸ்லிம், தமிழ்ப் பகுதிகள் ஒரு குறிச்சாகவே இருந்தன. 1885 க்குப் பின் இந்நிலப்பரப்பு எட்டுக் குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டது. 1 தொடக்கம் 6 வரையுள்ள குறிச்சிகள் முஸ்லிம் பகுதிகளாகவும் 7, 8 ஆம் குறிச்சிகள் தமிழ்ப் பிரிவுகளாகவும் இருந்தன. சில வருடங்களுக்கு முன் 9 ஆம் குறிச்சி என்றொரு புதுப்பிரிவு தமிழ்ப் பகுதியில் சேர்க்கப்பட்டது. இவை தவிர கோளாவில், ஆலையடி வேம்பு, பனங்காடு, கண்ணகிபுரம், அளிக்கம்பை, கவடாப்பிட்டி, பட்டியடிப்பிட்டி, பள்ளிக்குடியிருப்பு எசங்கணிச்சேனை, என்பன சிறு, சிறு கிராமங்களாய் இருந்தன. ஆலிம்நகர், வேலமரத்து வெளி, இலுக்குச் சேனை, புட்டம் பை, மூன்றும் கட்டை பதுர் நகர், மற்றும் நாற்பதாம் கட்டை என்பனவும் புதுக்குடிகளின் பகுதிகளாயுள்ளன. கண்ணலிலை நரும் பறங்கியரும் பொத்துவில் வீதியிலுள்ள 40ஆம் மைற்கல்லில் வாழ்கின்றனர். கவடாப்பிட்டியில் சில நாடோடிகளும் அளிக்கம்பையில் குறவரும் குடியிருக்கின்றனர்.

முதலாங்குறிச்சிப் பகுதியில் உப்புக்கரச்சி எனும் உவர் நிலத்துண்டுகள் உள. சுமார் 50 வருடங்களுக்கு முன் இவற்றிலுள்ள வெண்நூரி மண்ணை வழித்தெடுத்து உப்புக்காய்ச்சினர். அதற்குத் தூரிப்பு என்று சொல்லப்படும். இக்கரச்சிப் பகுதி குண்டும் குழியுமாக இருந்ததால் நீர் தேங்கி நிற்கும். இதில் மீன்பிடிக்கப்படும். இம்மீன் மிகச்சுவையாயுள்ளது. உப்புக்கரச்சிப்பனையான், செத்தல் மீன்களுக்கு நல்ல மவுசு காணப்பட்டது. தற்போதைய பொதுச் சந்தைக்கு வடக்கே நண்டுக்குழி என்ற நீர்த்தேக்கங்கள் காணப்பட்டன. இதிலும் மீன்பிடிக்கப்படுவது வழக்கம்.

கடந்த நாற்பது வருடங்களுக்கு முன் இப்பகுதியில் பரவலாகப் பல பாழ் வளவுகள் காணப்பட்டன. வீட்டு வேலிகளில் பாக்குப்பட்டை, முள்முருக்கை, பூவரசு, ஆமணக்கு, வெல்ல, அத்தி, இத்தி, நறி விலி, வம்பி, வாகை, மற்றும் இலவு போன்ற மரங்கள் நடப்பட்டிருந்தன. பொன்னவரை, தகர, அம்புத்தகர, முடுதும்ப, முதலிய செடிகள் வளவுகளில் பரவலாகக் காணப்பட்டன. கறிவாழை, மொந்தன் வாழை, இதர வாழை, கோழிச்சூடன், கதலி வாழை முதலியன அதிகமாகச் செய்கை பண்ணப்பட்டன.

அதிகமான மூலிகைச் செடிகள் வளவுகளிலும் கிணற்றடிகளிலும் வளர்க்கப்பட்டன. மருதோன்றிச் செடி, மாதுளஞ்செடிகள் பாதுகாக்கப்பட்டன. வளவுகளெல்லாம் பச்சைப்பசேலெனக் காணப்பட்டன பல்லிதக் கொடிகளும் எங்கும் படர்ந்து செழித்திருந்தன.

வீடும் வேலியும்: அக்கால வீடுகள் பெரும்பாலும் வைக்கோல், இலுக்குப்புல், தளப்பத்து, கிடுகுகளால் வேயப்பட்ட குடிசைகளாகவே இருந்தன. காலஞ்செல்லச் செல்ல மண்குடிசைகளாகப் புதிய வீடுகள் மாறின. பின்னர் மூன்று அறைகளைக் கொண்ட மண்வீடுகள் உருப்பெற்றன. வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குநோக்கிய முன் பக்கத்தைக் கொண்டதாகவே முற்றிலும் கட்டப்பட்டன. தென் பக்கத்து அறை சாப்பு அல்லது மஞ்சி என்றும் நடுஅறை உள்வீடு என்றும் வடக்கு அறை ஆல வீடு எனவும் அழைக்கப்பட்டன. பின்புறத்தில் நீண்டு ஒடுங்கிய கோடித்திண்ணையும் முன்பக்கத்தில் திண்ணையும் கொண்டவைகளாகவே அனைத்து வீடுகளும் காணப்பட்டன.

ஒரு வீட்டைப் பார்க்க மற்ற வீடு வேறு வடிவத்தைக் கொண்டது என்று சொல்ல முடியாதவாறு எல்லா வீடுகளும் ஒரே மாதிரி வடிவமைப்பை யுடையனவாயிருந்தன. சுவர்களுக்குக் சுதிகால் கம்புகள் நடப்பட்டு வரிச்சி எனும் மெல்லிய கம்புகளை அடுக்கடுக்காய்த் தட்டிபோல் வைத்து நவ்வக்கொடி, வெல்ல நார் முலியவற்றால் வரிந்து கட்டுவர். அவ்வரிச்சியின் மேல் களி மண் உருண்டைகளை எறிந்து அப்பி இரு பக்கமும் மெழுகுவார்கள். சுவர்கள் சமனில்லாது சிறிது உயரம் பள்ளமாய் இருக்கும். அதன்மேல் சிவப்புக் களி பூசி சிரட்டை அல்லது சில்லாங்கொட்டையால் மினுக்குவர். இதேபோன்று வீட்டறைகள் களியினால் மெழுகி மினுக்கப்படும்.

கூரைக்கு மாங்குக் கம்பு அல்லது வெட்டுக்கைமரம் போடப்பட்டு வரிச்சிக்கம்புகள் பரவப்பட்டுக் கொடிகளால் வரியப்படும். கீழ்ப்பகுதியில் இரண்டு அடி அகலத்துக்குப் பலகை அடிக்கப்படும். இதற்கு மல்லப்பலகை எனப்படும். கூரை வைக்கோல் அல்லது தென்னங்கிடுகுகளால் வேயப்படும். முன் திண்ணையின் நீளத்துக்குப் பலகை சாத்தி நிலம் மட்டம் வரை அடிக்கப்படும். இதற்குத் திண்ணை (நின்ன)க் கட்டை என்று பெயர். கோடித்திண்ணையிற் தட்டுமுட்டுச் சாமான்கள் வைக்கப்படும். அனேகமாய்ச் சாப்புக்குக் கதவிருக்காது. ஆலைக்கிடுகு கட்டப்பட்டிருக்கும். கூரையின் அந்தம் எறப்பு எனப்படும். அதில் சில சாமான்களைச் சொருகி வைப்பது வழக்கம். கட்டிலில் படுக்கும் வழக்கம் முற்காலத்தில் இல்லை. பாயிற் படுத்துறங்குவதே பெரும்பாலும் வழக்கம்.

உள்வீட்டின் வடக்கு, மேற்குப் பக்கத்தில் ''ட'' உருவில் அரை அடி உயரத்துக்குக் களிமண் கட்டு அமைக்கப்பட்டு அதன்மேல் ஐந்து அல்லது ஆறு வட்டமான பரந்த பள்ளங்கள் செய்யப்பட்டு அவற்றின் மேல் மிடா (முடா) எனும் பெரிய மண் பானைகளை அடுக்கிவைப்பர். உள்வீட்டுக்குக் குறுக்கே போடப்பட்டிருக்கும் ஐந்தாறு விட்டக்கம்புகளில் பல நிறங்களில் இழைக்கப்பட்ட உமல்களை வரிசை வரிசையாகத் தூக்கி இருப்பார்கள். அவற்றிற்குப் பெட்டி உமல் என்று பெயர். சுவர்களில் ஆணி அறையப்பட்டு வண்ணத் தட்டுகளும் கிண்ணிகளும் கொழுவப்பட்டிருக்கும். தட்டுகள் பெரிய, நடுத்தர, சிறிய அளவுகளில் காணப்படும்.

படுக்கையறையில் குத்துவிளக்கொன்று வைக்கப்பட்டிருக்கும். அதன் பக்கத்தே வெண்கல வட்டா, சேவரக்கால், வட்டி மற்றும் செம்புக் குடம் என்பன வைக்கப்படும். பல நிறச் சரிகைகளாற் செய்யப்பட்ட ஆரத்தி (ஆலாத்தி) நடுப்பகுதியை அலங்கரிக்கும். நீலம், சிவப்பு, வெள்ளை, பச்சை நிறச் சாயங்களூட்டப்பட்ட பன் தாருவைகளால் இழைக்கப்பட்ட பாய்கள் அழகாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கப்பட்ட ஒரு பாயசவும் அங்கு காணப்படும். தவிர கூட்டப்பாய், பெரிய தோட்டுப்பாய், சிறிய தடுக்குப்பாய், சபைப்பாய் முதலியன பெரிய அசவுகளில் அடுக்கப்பட்டிருக்கும். பல அறைகளைக் கொண்ட கறிச்சரக்குகள் வைக்கப்படும் இரு தட்டுகளையுடைய பனையோலைப் பெட்டி குசினி உபயோகத்துக்காக இருக்கும். அதற்குக் ''கொச்சிக்காய்ப் பெட்டி'' என்ற பெயருண்டு. இவைகளெல்லாம் அக்காலத்து வீட்டலங்காரப் பொருள்களாகக் கொள்ளப்பட்டன. குசினி ஆலவீட்டுக்குப் பக்கத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும்.

**கிணறு:**

கழிவறைகள், குளியலறைகளை அவர்கள் அறிந்திலர். நடு வீட்டுக்கு நேரே மரக்கொட்டுகள் பதிக்கப்பட்டுக் கிணறாகப் பாவிக்கப்பட்டது. இக்கிணற்றுக் கொட்டியில் விளக்கு வைத்தால் அதன் வெளிச்சம் உள்வீட்டுக்குள் விழ வேண்டுமென்பது அக்காலத்து நம்பிக்கையாகும். அதன்படி அக்காலக் கிணறுகளெல்லாம் உள்வீட்டின் முன்பாக அமைக்கப்பட்டன. தண்ணீர் அள்ளுவதற்கு மரப்பட்டை வாளி உபயோகிக்கப்பட்டது. இவ்வாளியைப் பொதுவாகப் ''பட்டை'' என்றழைப்பர். இச் சொல் இன்றும் வழக்கத்திலுள்ளது. மரத்தில் குடைந்தெடுக்கப்பட்ட வட்டவடிவான இப்பட்டையின் நடுவில் நீண்ட கம்பை நீரொழுகாதவாறு பொருத்தி அதன் மூலம் தண்ணீர் அள்ளினர்.

**வீச்சு மரம், துலாக்கோல்:** இப்பகுதியில் தண்ணீரைக் கிணற்றிலிருந்து அள்ளுவதற்காக உபயோகிக்கப்படும் மரக் கருவிகள், ஒரு புதிய வடிவமைப்பைக் கொண்டனவாகும். முதிரை அல்லது திருக் கொண்டை மரங்களின் கப்பிட்ட வைரங்களைக் காலாக நடுவர். இதற்கு துலாக்கோல் (திலாக்கால்) என்று பெயர். அக்கம்புகளின் நடுவே வைரமான இவ்வகை மரத்துண்டொன்றைக் குறுக்கே வெட்டிப் பதிப்பார்கள். அதற்கு அச்சுலக்கை (அச்சொலக்க) என்று சொல்லப்படும். அதன் மேல் நீண்ட ஒரு மரத்தை வைப்பர். அது வீச்சு மரம் எனப்படும். அச்சுலக்கையின் மேலால் வீச்சு மரத்தையும் இணைத்து சற்று விளைவான ஒரு மரத்துண்டு பொருத்தப்படும். அதற்கு''குரங்கொட்டி'' எனப்படும். வீச்சு மரத்தின் நுனியில் வெல்ல நார்க் கயிறு கட்டப்படும். அக்கயிற்றில் பட்டை பொருத்தப்பட்ட கம்பைக் கட்டினால் இலகுவாக இழுத்துத் தண்ணீரை மொண்டெடுக்கலாம். கிணற்றைச் சுற்றியுள்ள பகுதியில் பலவித மூலிகைச் செடிகளையும் மாதுளை, மல்லிகை, கற்றாழை, மருதோன்றிச் செடிகளையும் வளர்ப்பர். கமுகு மரங்கள் கிணற்றைச் சுற்றி நிறைய நடப்பட்டிருக்கும். அவற்றை வளைத்து வேலி கட்டியிருப்பர். அதற்குக் ''கிணற்றடி வேலி'' என்று பெயர்.

**வளவு வேலி:** இங்கு 16 பாகம் நீளம் 15 பாகம் அகலமுள்ள குடியிருக்கும் நிலத்துக்கு ஒரு வளவு என்று சொல்லப்படும். பெரும்பாலும் ஒரு வளவுக்குள் ஒரு வீடு கட்டப்படும். அக்காலத்தில் ஒரு குடும்பத்துக்கு எட்டு, அல்லது பத்து வளவுகள் இருக்கும். ஆகக்குறைந்தது மூன்று வளவாவது இருக்கும். குடியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவுக்கு நாற்புறமும் வேலி அடைக்கப்படும். ஒருவருடைய வீட்டுக்கு வேலி கட்ட வேண்டுமானால் பக்கத்திலுள்ளவர்கள் வண்டிகளை எடுத்துக் காட்டுக்குக் கொண்டு போய்த் தேவையான கம்புத்தடிகளை வெட்டிக்கொண்டு வந்து அவ்வளவுக்குள் அடுக்கி வைப்பர். பின் அவர்கள் சேர்ந்து கம்பு, கட்டைகளுக்குக் கூர்போட்டுக் கம்புகளை வரிசையாக நடுவர். இடையிடையே ஒரு பாகத்துக் கொன்றாக வைரக் கட்டைகளை நடுவர். இந்த நாட்டுக் கம்புகளுக்கு மேலால் மூன்று மாவரை வைத்து நல்வக் கொடி, வெல்ல நார் இவற்றால் வரிந்து கட்டுவர். அதன்பின் கிடுகுகளை அதன் மேல் வைத்துக் கட்டுவர். ஒரே அளவாக வெட்டப்பட்ட காய்ந்த தென்னோலைகளைக் கிடுகுகளின் மேற் சாத்திக் கட்டுவர். அதன் மேல் மூன்று, நான்கு மாவரைக் கம்புகளை வைத்து வேலிகட்டும் பெரிய மர ஊசியால் குத்திக் கட்டுவார்கள். இதற்காக உள்ளும் புறமும் இருவர் நிற்பர். அதன் பிறகு வார்ய்க்கிடுகு எனப்படும் அகலமான கிடுகுகளை நிலத்திலிருந்து சுமார் ஏழடி உயரத்தில் வைத்து அதன் மேல்கமுகஞ் சலாகை அல்லது சிறிய நீளமான கம்புகளை வைத்து இறுக்கிக் கட்டுவார்கள். இவ்வேலி அழகாகவும் உறுதியாகவும் காணப்படும்.

கலியாணத்துக்கென விசேடமாக எல்லோரும் சேர்ந்து, பல வடிவ அமைப்பில் கிடுகு, ஓலைகளை வைத்து வேலி கட்டுவது வழக்கமாகும். அதற்குக் கலியாண வேலி அல்லது தட்டுவேலி எனப்படும். வீதிப் பக்கத்து வேலியமைந்துள்ள இடைவெளியில் வண்டிப் போக்குவரத்துக்காக உழலை (குறுக்குமர)க் கடப்பு எனும் தடுப்பைக் கட்டியிருப்பர். வேறுவகையான வாசல் அமைப்புகள் அக்காலத்தில் இல்லை.

**தமிழ், முஸ்லிம் மக்களின் உறவு:** இக்கிராமத்துத் தமிழ், முஸ்லிம்கள் ஆகிய இருதிறத்தவரும் தமக்குள் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தனர். சகோதர வாஞ்சையோடு பழகினர். விசேட தினங்கள், திருமண வைபவங்கள், உற்சவங்கள், மற்றும் இன்ப, துன்ப நிகழ்வுகளின்போது இரு சமூகத்தவரும் உரிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி உரையாடி, உறவாடி ஒருவருக்கொருவர் ஒத்தாசை புரிவது வழக்கமாகும். சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் வீட்டில் தமிழர்களும் தமிழ் மக்கள் வீட்டில் முஸ்லிம்களும் இராத் தங்குவது உண்டு. இரு பிரிவினரினதும் சமூக, கலாசார, பாரம்பரியங்கள் மற்றும் விழுமியங்கள் இரண்டறக் கலந்த நேசப் பிணைப்பாக நெஞ்சங்களை நிறைத்திருந்தன. ஒருவரையொருவர் கண்ணியப்படுத்துவதிலும் உதவி செய்வதிலும் உளம் பூரித்து நின்றனர். தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாகக் கல்வி கற்று, விளையாடி, விருந்துண்டு மகிழ்ந்திருந்தனர்.

கண்ணகியம்மனைக் குளிரச் செய்யவும் மழை வேண்டியும் தமிழ் மக்களாற் கைக்கொள்ளப்பட்டு வந்த கொம்பு (முறித்தல்) விளையாட்டிலுங்கூட அக்காலத்தில் முஸ்லிம் மக்கள் கலந்து சிறப்பித்தனர் என்ற இனிப்பான செய்தியும் சிறப்பாகக் குறிப்பிடப்படல் வேண்டும். இவ்வாறான நெருக்க உறவின் காரணியால் தமிழ் மக்களின் சமூகச் சடங்குகளான தாலிகட்டல், பூரணகும்பம் வைத்தல், சாமர்த்தியச் சடங்கு, அம்மனுக்குப் படைத்தல், சேவற்கோழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்து பலியிடல் மற்றும் தாய்மார் எழுப்பிக் கேட்டல் முதலாம் சடங்குகள் முஸ்லிம்கள் மத்தியிலும் கைக் கொள்ளப்பட்டன.

இதே போல் முஸ்லிம்களிடையே நடைமுறையிலிருந்த விருந்து வைபவங்கள், பேச்சு வழக்கிலே காணப்படும் மகரிப், பாங்கு, ஹறும், அசறு போன்ற அறபுச் சொற்கள், சில பழக்கவழக்கங்கள் தமிழரிடையே காணப்பட்டன. பள்ளி வாசல்களில் எழுப்பப்படும் பாங்கிஓசைக்கு அக்காலத் தமிழ்ப் பெரியார்கள் மௌனமாக இருந்து மதிப்பளித்து வந்தனர். சின்னத்தம்பி, பெரிய தம்பி, தங்கம்மா, சீனித்தம்பி, வெள்ளையன், செய்யது போன்ற பெயர்கள் இரு திறத்தாரினதும் பொதுப் பெயராகக் கொள்ளப்பட்டு வந்ததும் நல்லுறவின் சிறப்பம்சமாகும்.

முரசொலிப்போர் பள்ளிவாசல் எல்லையை அண்மியதும், அவ்வொலியை நிறுத்தி, எல்லை தாண்டியதும் முரசறைந்து மரியாதை செலுத்தினர்.

தொடக்க நிலைப்பாடு: இங்கு குடிவந்த மக்கள் பெருமளவில் சேனை (Chena)ச் செய்கையிலீடுபட்டதுடன் தேன் சேகரித்தல், கமஞ் செய்தல், காடுபடு திரவியங்களை எடுத்துவரல் ஆகியவற்றிலும் அக்கறை காட்டினர். பெண்கள் வீட்டுப்பணிகளைத் திறம்படச் செய்தனர். நெற்குற்றல், விறகு சேகரித்தல், கொச்சிக்காய் அரைத்தல், மாவிடித்தல் முதலான பல வேலைகளில் ஈடுபட்டனர். தந்தமது கணவன்மாருக்கும் பளுவான தொழில்களில் உதவி வந்தனர். ஓய்வு நேரங்களில் பன்வேலை, ஓலைவேலைகளில் கவனஞ் செலுத்தினர்.

பருவமடைந்த மங்கையொருத்திக்கு விவாகம் முடித்து வைக்கும் விடயத்தில் மற்றவர்களுக்கு அதிக அக்கறை இருந்தது. பெண்ணின் பெற்றோருடன் சேர்ந்தும் தனித்தனியாகவும் இதில் உதவி வந்தனர். சீதனமாக நெல், மாடு, வீடுவளவு மற்றும் நெற்காணிகள் கொடுக்கப்பட்டன. பொதுவாக ஒரு அவணம் நெல், ஒரு பசுவும் கன்றும், இரு எருமை மாடுகள், மூன்று வளவுகள், குடியிருக்கும் வீடு மற்றும் வீட்டுக்கடங்கிய பொருள்கள் என்பவைகளே சீதனமாக வழங்கப்பட்டன.

பால்ய விவாகம் சர்வசாதாரணமாக நடைபெற்றது. மட்டை வீடு கட்டி விளையாடிய சிறுமிக்கு அன்றிரவே விவாகம் முடிக்கப்பட்ட நடைமுறையும் தாராளமாகக் கைக்கொள்ளப்பட்டது. இளமகள்கள் சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்கும் போது, அதிலொருத்தியைக் கூட்டிப்போய்த் தலைக்குத் தண்ணீரூற்றித் திருமணம் செய்வித்ததும், அவ்விளமகள் மாப்பிள்ளை தாலிகட்ட வரும் போது கீரிட்டுக் கத்தி அழுது புலம்பியதும் நடைபெற்ற ஒரு சம்பவமாகும். இப்படிச் சுவையான கலியாணக் கதைகள் பலவற்றை நாம் அறிதல் கூடும்.

நம்முன்னோர் மத, கலாசார, பண்பாடு, பாரம்பரிய மரபுகள் ஆகியவற்றை மிகவும் பேணுதலுடன் செயற்படுத்தி வந்துள்ளனர். சிறிய வாழ்க்கையில் முன்னேறிவந்த அவர்கள், பெரியார்கள், மூத்தோரின் சொற்களைத் தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காகக் கருதித்தொழுவினர். செல்வச் செழிப்பும், சிறப்பான அமைப்பும், அமைதியான குடிசை வாழ்வும், கள்ளங் கபடமற்ற தோழமையுணர்வும், விருப்புடன் நடைபெற்ற விருந்தோம்பலும், மற்றும் இறைபக்தியும் கருங்கொடித்தீவு மக்களின் அணிகலன்களாய் இருந்தன. அதனால் அவர்களடைந்திருந்த நிம்மதி, பெற்ற ஆனந்தம் என்பன உளமாரக்கிடைத்த உச்சப்பயன்களாய் அமைந்தன. இப்படியான தொரு இனிய வாழ்க்கையை நாம் எப்போது அடையப் போகிறோம் என்ற ஆதங்கமே இன்று எம் முன் மேலோங்கி நிற்கின்றது.

பெரியகளப்பும் முகத்துவாரங்களும்: கருங்கொடித்தீவுக்கு தெற்கே கோளாவில், பனங்காடுகளுக்குக் கிழக்கே பரந்து காணப்படும் நீர்ப்பரப்பே பெரிய களப்பாகும். மாரி கலத்தில் வெள்ளம் பெருக்கெடுக்கும் போது பெரிய முகத்துவாரம், சின்ன முகத்துவாரம் ஆகியவற்றுக்கும் கடலுக்குமிடையே காணப்படும் மணற் திட்டுகள் நீரினால் முறிக்கப்பட்டுத் தண்ணீர் வேகமாய் ஓடிக் கடலோடு கலக்கும். இவ்வெள்ளம் வடக்கே ஓடிவந்து மன்னன்குளம், உப்புக்கரச்சி, நண்டுக்குழி வழியாக பாலனோடை (பாலாமடை)க்கு வந்து, சின்னப்பள்ளிக்கு மேற்கிலுள்ள வடிச்சற் கால்வாய் வழியாக ஓடி மருதவெட்டுவான் ஊடாகக் குடாக்கரைக்குள் சங்கமிக்கும். அந்நேரம் வெள்ளப் பெருக்கில் அள்ளுப்பட்டு வரும் முதலைகள், மீனினங்கள் என்பன மன்னன்குளம், உப்புக்கரச்சி, நண்டுக்குழி, பாலனோடை, மருதவெட்டுவான் குளம், குடாக்கரை ஆகிய நீர்நிலைகளில் தங்கி விடுவதுண்டு. இவ்விடங்களில் மீன்கள் பிடிக்கவும் முதலை வேட்டையாடவும் சனங்கள் கூடி நிற்பர்.

அக்காலத்தில் பிரதிவருடமும் செப்ரெம்பர் தொடக்கம் பெப்ருவரி வரையுள்ள ஆறு மாதங்களும் மழை பெய்துள்ளது. ஊர் முழுவதும் மோக்கையும் தவளையும் பேரொலி எழுப்புவது ஒரு புதினமாயிருக்கும்.

நக்கரா: இங்குள்ள சின்ன (பட்டண)ப் பள்ளிவாசலில் கடந்த சில வருடங்களுக்கு முன் ''நக்கரா'' எனும் ஒரு முரசு ஐவேளை ''பாங்கு'' சொல்வதற்கு முன்பு கொட்டப்பட்டு வந்தது. பெரும்பாலும் ''முஅத்தின்'' இரு குறுந்தடிகளால் அம்முரசில் மாறி மாறிக் கொட்டுவார். அதைக் கேட்ட சனங்கள் தொழுகைக்காக ஆயத்தப்படுவார்கள். அதன் பின்னர் பாங்கு சொல்லப்பட்டுத் தொழுகை ஆரம்பமாகும். இது நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்து சில வருடங்களுக்கு முன் நிறுத்தப்பட்டுள்ளது. லுஹருக்கு அடித்து விட்டதா? சுபஹுக்கு நக்கரா (நகரம்) அடித்து விட்டதா? என்று ஒருவரிடம் மற்றவர் கேட்கும் வழக்கம் இன்றும் மாறாமல் உள்ளது. இவ்வூரைத்தவிர இலங்கையின் ஏனைய பகுதிகளில் ''லுஹற''ருக்கு ''பாங்கு'' சொல்லிவிட்டதா? சுபஹுக்கு பாங்கு சொல்லிவிட்டதா? போன்ற கேள்விகளே கேட்கப்பட்டு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நால்வகைத் திரவியங்கள்

இங்கு கடல், காடு, நிலம், நீர் என்பனவற்றிலிருந்து பல பொருள்கள் பெறப்படுகின்றன. இவ்வூரின் தனித்தன்மைக்கும் செல்வச் செழிப்புக்கும் காரணிகளாக மற்ற வளங்களுடன் இவையும் சேர்ந்து சிறப்பளிக்கின்றன. இயற்கையின் இதய மலர்ச்சி இப்பகுதி யெல்லாம் இன்பம் பாய்ச்சுவது நமக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளது.

கடல்தரும் திரவியங்கள்: இக்கிராமத்தின் கிழக்குப் பக்கத்தே கடற்பரப்புக் காணப்படுகின்றது. கடலலை நீர் பரவும் பக்கம் வரை மக்கள் குடியேறியுள்ளனர். கடற்காற்றின் இதமான மென் தழுவலில் இம் மக்கள் இதயம் பூரிக்கின்றனர். பருவகாலங்களில் இக்கடற் பிராந்தியத்தில் பல்வகையான மீன்கள் பிடிக்கப்படும். அறுக்குளா, தோரு, சுறு, பாரை, சூடை, சூரை, கெளவல்லு, கீரி, சாளை, அளகொடுவா, முரல், கொடுவா, சீலா, வாளை, காரல், வண்ணாத்தி, கலவா, தளப்பத், திருக்கை, நெத்தலி, கடற் கெளுத்தி, கும்புளா, கடல் விரால் (வரால்), குருவிலி, கடற் செத்தல், கண்ணாடிப்பாரை மற்றும் சூரல் போன்ற மீன்கள் இக்கடலிற் காணப்படுகின்றன.

சிப்பி, முருகைக்கற்கள், கணவா, நண்டு, சுண்ணக்கல், மற்றும் ஊரி என்பன இங்கு பெறப்படுகின்றன. சுண்ணவினை ஞர்களுக்கு இவற்றின் மூலம் நல்ல வருமானமுண்டு. கடற்கரை மணல்கள் பெருமளவில் பெறப்படுகின்றன. கட்டடத் தேவைகள், பள்ளங்களை உயர்த்தல் ஆகிய தேவைகளுக்கு இவை உபயோகிக்கப்படும். கடற்கரை தாவரங்களான தாழம்பூ, தாழை மடல், தாழம் பழம் முதலியன வாசனைத் தைலங்கள் காய்ச்ச உபயோகிக்கப்படுகின்றன. மூலிகைச் செடிகளும் பிரண்டை, முல்லை, காரை, குறிஞ்சாச் செடிகளும் மக்களுக்கு உபயோகமாகவுள்ளன.

முகத்துவார மணற்றிடல்கள் முறிந்து கடல் நீரும் நன்னீரும் சங்கமமாகும் போது அதிகமான மீன்கள் பிடிக்கப்படுவதுடன் மட்டை இருல், வெள்ளிருல், மணலிருல், சிங்கி இருல், முட்டையிருல், மற்றும் நண்டுகள் முதலியனவும் பெறப்படுகின்றன. கடற்குளிப்புக்காகப் பலர் செல்வர். கடற்கரைகளில் தென்னந் தோப்புகள் செழித்துக் காணப்படும். முகத்துவாரம் முறிந்த பருவத்தில் மக்கள் உல்லாச விருந்துண்ண அப்பகுதிக்குச் செல்வர். கடந்த நூறு வருடங்களாக சின்னமுகத்துவாரத்தினருகில் ஒரு ஓய்வகம் (Rest House) உபயோகத்திலிருந்தது. இது அயலவர்களுக்கு மிகவும் உறுதுணையாய் இருந்துவந்தது. 1983, ஜூலைக் கலவரத்தின் எதிரொலியாக இவ்வோய்வகம் உடைக்கப்பட்டு தரைமட்டமானது. தற்போது சிறு சிறு குடிசைகள் அவ்விடத்திற் கட்டப்பட்டு மக்களின் வதிவிடங்களாக மாற்றப்பட்டுள்ளது.

காடுதரும் திரவியங்கள்: இக்கிராமத்துக் கண்மையில் தெற்கிலும் மேற்கிலும், மிகவும் அடர்ந்த சோலைக்காடுகள் வளர்ந்திருந்தன. பட்டிபடிப்பிட்டி, காட்டுக் குடுப்புப்பகுதிகளில் இற்றைக்குச் சற்றேறக்குறைய 45 வருடங்களுக்கு முன் மான், மரைகள் வேட்டையாடப்பட்டன. யானைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசாதாரணமாகத் திரிந்தன. காலக்கழிவில் இப்பகுதிக் காடுகள் அழிக்கப்பட்டு வயல் நிலங்களாகவும் குடியிருப்புப் பகுதிகளாகவும் மாற்றம் பெற்றன. வளுந்தரமாக இப்பிரிவு காணப்பட்ட காலத்தில் அதிக மழை வீழ்ச்சி இருந்தது.

நல்ல வைரமான பெறுமதி மிக்க மரங்களான முதிரை, கருங்காலி, திருக்கொன்றை, சமுளை, முளை, விழினை, வெள்ளைக்கருங்காலி முதலிய மரங்களும் பாலை, கரபுன்னை, நரிப்பசறி, நொறு, விண்ணுறங்கு, காட்டுத்தென்னை, கல்லொலிய, மற்றும் கீழ்ப் பனிச்சை மரங்களும் இக்காடுகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டன. முற்கால வீடுகள் காட்டுக்கம்பு, தடிகளால் கட்டப்பட்டிருந்தாலும் சுமார் 40 வருடங்களாக வீடுகள் புதிய அமைப்பில் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. 1957 இல் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாக இங்குள்ள மண் வீடுகள் முற்றாக அழிந்து போக, அதற்குப்பதிலாகக் கட்டப்பட்ட வீடுகள் சிறப்பானவையாகக் காணப்பட்டன. சுவர்கள் கல்லாற் கட்டப்பட்டு நிலை, கதவு, சன்னல்கள் முதிரை மரத்தாற் செய்யப்பட்டன. கூரைக் கோப்பிசம் சமுளை மரத்தால் அமைவுபெற்றன. முதிரை, சமளை, முளை மரங்களைத் தவிர ஏனைய மரங்கள் வீடுகட்ட உபயோகிக்கப்படுவதில்லை. பிற்காலத்தில் மரத்தட்டுப்பாடு காரணமாக ஏனைய அனைத்துத் தரங்குறைந்த மரங்களாலும் வீடுகள் கட்டப்பட்டன. தற்காலம் எல்லை மீறிய தட்டுப்பாடுகளால் தென்னை மரத்தாற் கூட வீட்டுக் கூரைகள் அமைக்கப்படுகின்றன.

வீரைக் கொள்ளிகள், அடுப்பெரிக்க உபயோகப்பட்டன. தற்போது விறகு பற்றாக்குறையால் உமி, மரத்தூள், தவிடு ஆகியவற்றைப் பாவிக்கிறார்கள். காடுகளில் தேன், விளாம்பழம், பாலைப்பழம், கடுபுளியம்பழம் முதலியன சேகரிக்கப்பட்டன. தரமான மூலிகை வகைகளான மலைவேம்பு, பேப்புடலை உட்படப் பல மருந்துக் கொடி வகைகளும் காணப்பட்டன. மான், மரை, முயல், மர அணில், புலுட்டு உடும்பு, காட்டெருமை, காட்டுக் கோழிகள் வேட்டையாடப்பட்டன. புலிகள் சுடப்பட்டு தோல் எடுக்கப்பட்டது. மருந்துக்காகப் புலி இறைச்சி பாவிக்கப்பட்டது. புலி நகமும் வைத்திய தேவைக்காகப் பெறப்பட்டது. காடுகளிலுள்ள மலைகளில் கருங்கற்கள் சிறிய, பெரிய அளவுகளில் உடைத்தெடுக்கப்பட்டுக் கட்டடங்கள், மற்றும் தேவைகளுக்கு உபயோகப்பட்டன.

காட்டில் எதேச்சையாகத் திரிந்த குழு மாடுகளை நம்முன்னோர் பிடித்துப் பழக்கிப் பால் கறந்ததுமல்லாமல், வயல் வேலைகளிலும் ஈடுபடுத்தினர். யானை, புலி, கரடி, பன்றி, முட்பன்றி, நரி முதலியன ஏராளமாகக் காணப்பட்டன. வன விலங்குகளின் தாக்கம் அந்நேரம் அதிகமாகக் காணப்பட்டது. கொம்பன் யானைகளுக்குச் சாகாமம், வம்மியடிக்குளம் ஆகிய பகுதிக் காடுகள் பிரசித்தமாய் இருந்தன. சிலர் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 1943 இல் இங்கு சீனி ஆலிம் அவர்கள் வீட்டில் இப்படியான ஒரு யானை கட்டப்பட்டிருந்தது. அந்நேரம் யானை பிடிக்கும் அனுமதிச் சான்றிதழ் ஒரு யானைக்கு ஐம்பது ரூபா என்ற கட்டணத்தின் அடிப்படையில் மட்டக்களப்புக் கச்சேரியிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது. இந்நடைமுறை 1950 இல் நிறுத்தப்பட்டது. கறிவேப்பிலை, நன்னாரி, லாமிச்சை எனப்படும் வாசனைச் செடிகள் அதிக அளவில் வளர்ந்திருந்தன. மரப்பட்டைகள், இலைகள், கொடிவகைகள் பல அருமருந்துகளாயின.

காடுகளிடையே அனேக ஆறைப்பற்றைகளில் தண்ணீர் ஓடிக்கொண்டே இருந்தது. இவற்றிலிருந்து பயிர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டன. காட்டுக்குச் சென்றவர்கள் இவற்றிலிருந்தே குடிக்கவும் வேறு தேவைகளுக்கும் நீரைப்பெற்று வந்தனர். இப்படியாகக் காட்டு வளங்கள் வீட்டுக்கும், இறைச்சிக்கும், மருந்துக்கும், பாதைகளுக்கும், உணவுக்கும் மற்றும் தேவைகளுக்கும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

*தமிழ் சிங்களப் புத்தாண்டில் மகளிர் றபான் கொட்டுகிறார்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தரும் திரவியங்கள்: இவ்வூர் நிலங்கள் களி, மணல், கிறவல், சேறுகளிலான அமைப்பைக் கொண்டன. மட்பாண்டங்கள் செய்யவும் செங்கல், ஓடு, கைப்பணிப்பொருள்கள், மனித, மிருக, பறவை, பழங்கள் மற்றும் உருவங்கள் ஆக்கவும் களியை உபயோகிக்கின்றனர். வீடு கட்டவும் நிலச்சமன்பாடுகளுக்கும் மணல் உதவுகிறது. மணல் நிலத்தைத் தோண்டி ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறுகள் அமைத்துக்கொள்ளவும் மணல் நிலம் சாதகமாய் உள்ளது. கிறவல், பாதைகள் போடத் தேவைப்படுகின்றது. சேற்றுநிலங்கள் பயிர்கள் வளரக்கூடியனவாகும். தாமரை, ஒல்லி, அல்லி, நேரை, பன்புற்கள் ஆம்பல் ஆகியன நிறைந்து காணப்படும். கொட்டி, சுக்கட்டி, தாமரை, முள்ளி, நேரைக் கிழங்குகள் சுவையுள்ள உணவுகளாகும். நெற்பயிர் சேனைச்செய்கைகளுக்கும் கடற்கரைப் பகுதிகளில் தென்னைச் செய்கைக்கும் வாய்ப்பான நிலங்களுள. மேட்டுப் பகுதியில் சோழச் சேனையும் மணற் பகுதியில் கிழங்குச் சேனையும் பெரும்பரப்பிற் செய்யப்பட்டன. வாழைத்தோட்டங்களும் மிகுதியாகக் காணப்பட்டன. புற்றரைகளும் ஆங்காங்கே உள. கணிசமான அளவு மாந்தோட்டங்களும் பலாமரச் சோலைகளும் உற்பத்தியாயின. நீர்த்துறைகளில் பூலாப்பற்றை, கிடைச்சிச் செடிகளும் பனிச்சை மரங்களும் வளர்ந்திருந்தன. கடற்கரையில் காணப்பட்ட சுந்தக் கம்புகள் வீட்டுக்கும் வேலிக்கும் உதவின. முகத்துவாரப் பகுதிகளில் கண்ணாப்பற்றைகள் செழித்திருந்தன.

நீர்தரும் திரவியங்கள்: இவ்வூர்க் கிழக்கெல்லையில் கடலும் மற்றும் மூன்று எல்லைகளும் தொடர்ச்சியாக நீர்நிலைகளும் காணப்பட்டன. பெரியகளப்பு, சாகாமக்குளம், நீத்தைக்குளம், இலுக்குச் சேனைக்குளம், உப்பளம், தில்லையாறு, மருதவெட்டுவான் குளம், சம்புக்களப்பு, உப்புக்கரச்சி, நண்டுக்குழி, மன்னன்குளம்பட்டியடிப்பிட்டி, நீத்தையாறு, அம்மான்ன குளம் முதலியன நீர்த்தேக்கங்களாகும். (தற்போது சில மூடப்பட்டு வேறு அமைப்பிலுள) இவ்விடங்களில் அதிகமாக மீன்கள் பிடிக்கப்பட்டன. மணலை, கைமீன், பேய் மணலை, செத்தல், கொக்கிச்சான், பனையான், பொரிகெழுத்தி, சள்ளல், மஞ்சச் சள்ளல், சள்ளல் பொட்டு, சுங்கான், வரால் (விரால்) குறட்டை, பொட்டியான், மண்ணா, ஊடகம், சிலுந்தல், உளுவை, ஒட்டி, கொடுவா, தெரளி, தெத்துக்கொறட்ட, ஒட்டி, ஓரா, முரல், கிளக்கன், விலாங்கு, ஆரல் (ஜூரல்), அவல் பனையான், களிக்கெழுத்தி, மாம்பழக் கெழுத்தி, தேறகம், கனையான், கரிமுரல், தோலி, மசறி, ஈரிச்சுங்கான், பாலாம்பறவ, ஆற்றுவாளை, சுச்சப்பொட்டியான், பொடி, சேங்கணன், சாவாள, கொய், கால, மொறுக்க, மஞ்சப்பாரை, கல்லுளுவை, கீளி, ஜயாமாசி, எருமை நக்கி, இருவிரால் இன்னும் வண்ணாத்தி என்னும் மீன்கள் இந்நீர்ப்பரப்புகளிற் காணப்படுகின்றன. கடல் மீன், ஆற்று மீன், குளத்து மீன் என்று இம்மீன் வகைகளைப் பிரித்துக் கூறுவர். பருவ காலங்களில் பெண்கள் கூனிவடிப்பார்கள். ஜயாமாசி மீனும், சென்னக்கூனியும் சில காலங்களில் பெறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளைமத்துக்குளத்து, சம்புக்களப்பு வரால், நீத்தையாற்றுக் கொக்கிச்சான், உப்பளம், உப்புக் கரச்சிப் பனையான், கோணுவத்தைச் செத்தல், நண்டுக்குழிச் சுங்கான், தாலி போட்டாறு வாளை எனும் மீன்கள் மிகச் சுவையும் பெரிதுமாக இருப்பதால் இவ்வூரில் அவற்றிற்கு நல்ல சந்தை வாய்ப்புண்டு. இவை கூடிய விலை கொடுத்து விருப்புடன் மக்களால் வாங்கப்படும். இந் நீர்ப்பரப்புக் கரைகளில் செழித்து வளர்ந்திருக்கும் வெருகு, அறுகு, சாப்பைப் புற்களைத் தின்பதற்காக அடிக்கடி அவ்விடங்களுக்கு யானைகள் வருவது வழக்கமாகும். சில சமயங்களில் காட்டு மாடுகளும் வருவதுண்டு. காளுன், வக்கா, கொக்கு, சாம்பல் நாரை முதலிய பறவைகள் நீர்த்தாவரங்களிலும் நீர்க்கரையிலிருக்கும் மரங்களிலும் கூடு வைத்துக் குஞ்சு பொரிக்கும். கிச்சான், மணற்புளு, மணிப்புறா, நாரா, கடற்காகம், நெருங்கிளாத்தி, மணல் வாரி, குட்டாப்பட்டி, மொட்டத்தலையன், வயற் (நீர்க்) கோழி, ஆக்காட்டி, கிலித்துர்ரா, செம்பகவக்கா, கொச்சிப்புழுத்தான் முதலிய பறவைகள் இங்கு காணப்படுவனவாகும். தேசாந்தரம் திரியும் பறவைகளான புள், கினைப், கோட்டான் என்பன ஆவணி, புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இப்பகுதியிற் தென்படும்.

இப்பகுதியில் குளங்கள் வற்றும் காலத்தில் மீன்கள் அதிகமாகப்பிடிக்கப்பட்டுக் கருவாடு போடப்படுவது போல், குளங்களிலுள்ள மரங்களில் வைக்கப்பட்டிருக்கும் அனேக பறவைக் கூடுகளை எடுத்து அப்பறவை இறைச்சியைக் காயவைத்துச் சாக்குகளில் கட்டும் ஒரு வழக்கமும் கைக்கொள்ளப்பட்டது. பறவைகளைக் கண்ணிவைத்தும், வலைகட்டியும், துவக்காற் சுட்டும், கூடுகளைக் கலைத்தும் பிடிப்பதுண்டு. பெருங் குளங்களிலுள்ள பறவைகளைத் தோணிகளிற் சென்று பிடிப்பர்.

பறவை இறைச்சி வற்றல்களை உள்ளடக்கிய சாக்குகளைக் காற்சுடியிற் கட்டித் தோழிளுற் காவி வருவர். பொன்னாங்காணி, வள்ளலைக்கறி, திராய், குப்பைக் கீரை, கும்பட்டிக்கீரை, கொச்சி, மரவள்ளி, பசளிக்கீரை, சிறுகீரை, முள்ளுக் கீரை என்பன நீர்த்தாவர இலைக்கறிகளாகும். தாமரைப்பூ, தாமரைக்கிழங்கு, தாமரைக்கொட்டை, தாமரைப்புனல், ஒல்லிஅரிசி, ஒல்லிப்பூ, அல்லிமலர் என்பனவும் கிடைக்கின்றன. சேற்றுப்பாங்கான நீர்த்தரைகளில் இவை செழித்து வளரும்.

## கால்நடை (மந்தை) வளர்ப்பு

இப்பகுதி வருவாயிலும், செல்வச் செழிப்பிலும், பழுவான பணிகளிலும் கால்நடைகளுக்கு விசேடமான இடமுண்டு. அக்காலத்தில் பெரும்பாலாேருக்கு மாட்டுப்பட்டிகள், ஆட்டுப்பட்டிகள் இருந்தன. சிலருக்கு எருமை மாடுகளும் இன்னுஞ்சிலருக்குப் பசுமாடுகளும், வேறுசிலருக்கு எருமை, பசு ஆகிய இருவகை மாடுகளும் பெருந்தொகையாக இருந்தன. பலர் ஆடுகளை வளர்த்தனர். விலங்கு வேளாண்மையின் வருவாய்களால் பலர் கணிசமான முன்னேற்றமடைந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிமேடு, கல்காரை, [illegible]காமம், தோணிக்கல், வெல்வெந்தா, அளிக்கம்பை, பனங்காடு, கோளாவில், சாம்பல்மாரி, புட்டம்ப, இலுக்குச்சேனே, நீத்தை, எசங்கணிச்சேனே, பட்டியடிப்புட்டி மற்றும் கணங்குண்டு எனுமிடங்களில் பெருந்தொகையாக மாடுகள் கட்டப்பட்டன. மாட்டுக்காலேகளும் கன்றுக்காலேகளும் அதிகமிருந்தன. பசு மாடுகளில் கறந்த பால் குடிக்கவும் நெய்யுருக்கவும், எருமை மாட்டுப்பால் தயிர்போடவும், புக்கை ஆக்கவும், நெய்யுருக்கவும் உபயோகிக்கப்பட்டது. பசுமாடுகள் இறைச்சிக்காக பயன்பட்டன. எருமைக் கடாக்கள் வயல் உழவும், சேறுழக்கவும், பலகையடிக்கவும், போர (சூ'_)டிக்கவும் உதவின. பசு நாம்பன் மாடுகள் வண்டி இழுக்கப் பயன்பட்டன. கடாக்கள் பொதி சுமக்கவும் தாவள மாடுகளாகவும் உதவின.`




முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்களத்தின் அக்கரைப் பற்று வலயக் கலாசார செயலகத்தை கௌரவ M. A. M. அப்துல் மஜீத் M. P. திறக்கிறார். அருகில் கலாசார அலுவலர் ஜனாப் SLAM. ஹபீபுல்லாஹ், கௌரவ M. I. உதுமாலெப்பை M. P. ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருமைத் தயிர் பெரிய அள் உமல்களிற் போடப்பட்டுக் காலையடியிலிருந்து காற்றுடியாற் காவிவரப்படும். தயிரைக் காசுக்கு விற்கும் வழக்கம் அக்காலத்திலிருக்கவில்லை. தேவையானவர்களுக்கு அன்பளிப்பாகவே கொடுப்பர். சிலர் தயிரைச் சீலையிற் போட்டு வடிகட்டிக் கட்டித் (முழி) தயிராகப் பாவிப்பர். சில வேளைகளில் மீதியான தயிரை நிலத்துட் புதைத்து விடுவதுண்டு. உணவுப் பெருக்கமும் சனக்குறைவுமே இதன் காரணமாகும். பசுநெய் மருந்துக்கும் எருமை நெய் சாப்பாட்டிற்கும் பயன்பட்டது. பால் முட்டிகளும் பாற்குடங்களும் காற்றுடியாற் காவி வரப்பட்டன. நிய்யத்துக்காகப் பாற்புக்கை ஆக்க விரும்புவோர் காலையடிக்குச் சென்று தேவையான எருமைப் பாலை இலவசமாகவே பெற்றுவருவர். தயிரிலிருந்து ஆடை, வேது, மத்துத் தண்ணீர் ஆகியவற்றைப் பெறுவர். குறவர்கள் மத்து நீரைப்பெற்று நாய்களுக்குக் கொடுத்து அவற்றைக் கொழுக்கச் செய்வர்.

நம்மூதாதையர் சோறு கரைப்பதில் பெரும் விருப்புடையோராய் இருந்துள்ளனர். பெரிய கொட்டுப் பீங்கானில் தயிர் உமலைக்கவிழ்த்துக் கொட்டிச் சோறும் போட்டு உருண்டைப் பனங்கட்டி, தேன், கோழிச்சூடன் வாழைப்பழம், கற்கண்டு ஆகியவற்றைச் சேர்த்துக் கரைத்து மிகவும் சுவையுள்ள இனிப்புக்கரைசலை உண்டு மகிழ்வர். உணவுக்குத் தக்க கடின உழைப்பாளராகவும் அவர்கள் தொழிற்பட்டனர்.



வனக் குறவர் குடும்பமும் குடிசையும் ஒரு குறவர் பாம்புகளை மகுடி ஊதி ஆடச் செய்கிறார்.

முஸ்லிம்களின் திருமணம், கத்னா (விருத்தசேதன)ச் சடங்கு, கத்தம், பாத்திஹா, கந்தூரி வைபவம், உழ்ஹியாக்கொடுத்தல், சதக்கா (தருமம்)க் கொடுத்தல், நேர்ச்சைகள் நிறைவேற்றல், பெருநாள் விருந்துகள் அகியவற்றிற்கு மாடுகள் அறுத்தல் வழக்கமாகும். கடைகளில் இறைச்சி விற்கும் வழக்கம் முன்பு இருக்க வில்லை. இங்கு முதலாவது இறைச்சிக்கடை பிரதான வீதியில் 1945 இல் முகுத்தார் எனும் ஒரு இந்திய வியாபாரியால் ஆரம்பிக்கப்பட்டது.

ஆடுகள் இறைச்சிக்காக வளர்க்கப்பட்டன. வெள்ளாட்டினமே ஆரம்பகாலத்திலிருந்து வளர்க்கப்படுகிறது. ஆட்டிறைச்சிக்கு அதிக மவுசுண்டு. ஏறத்தாழ நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு ஒரு எருமை மாடு பத்து ரூபா, பசுமாடு 15 ரூபா, ஒரு கோழி 25 சதம் என்ற அளவில் விற்கப்பட்டது. மேச்சற்றரைப் பற்றாக்குறை அந்நேரமில்லை. பார்க்குமிடமெல்லாம் புற்களும் பற்றைகளும் செழித்திருந்ததால் மந்தைகள் தம் விருப்பப்படி சுதந்திரமாய் மேய்ந்தன. பிற்காலத்தில் நெற்செய்கை, பயிர்ச் செய்கைகள் அதிகமான நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டதாலும் புதிய கிராமங்களின் உருவாக்கத்தாலும் கால்நடைகள் மேய்வது கஷ்டமாயுள்ளது. இதனால் அவைகளின் பெருக்கம் தடைப்பட்டதுடன், மக்களும் இவ்வளர்ப்பில் அதிக அக்கறை காட்டமுடியாதுள்ளது. மந்தை வளர்ப்பு இப்பகுதியில் இன்று பெருஞ் சவாலாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் அதிகாரம்

## கிராம மக்களின் வாழ்க்கை விழுமியங்கள்

இப்பகுதி மக்கள் கிராமங்களிலேயே வதிவிடங்களை அமைத்துக்கொண்டனர். இவை குக்கிராமம், பட்டிக்காடு, கிராமப்புறம், சிற்றூர், காட்டூர், நாடுகாடு, நாட்டூர் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டன. போலி நாகரிக மயக்கமோ கண்டதேகாட்சி, கொண்டதே கோலம் எனும் கன்முடித்தனமான போக்கோ அவர்களிடம் காணப்படவில்லை. இயற்கையோடிசைவான இன்பமும் மனநிறைவுமான எளிய வாழ்க்கையில் அவர்களது காலங் கழிந்தது. உழைப்பை ஒய்வாகக் கண்ட மக்கள் அவர்கள். சோம்பலிற் சுகங்காணாத மக்கள் சுறுசுறுப்புடன் செயற்பட்டுத் தம் வாழ்க்கை வளங்களைப் பெருக்கிக்கொண்டனர். ஆடம்பரத்தை அரவணைக்கத் தயங்கினர். விருந்தோம்பி, வேண்டியோருக்குதவி வெற்றியீட்டினர்.

நானென்று நீயொன்று என்றிராமல் நீயும் நானும் ஒன்று என்ற நிலையைக் கடைப்பிடித்தனர். அன்பை அணிகலன்களாகவும் அறநெறிகளை உயிர் மூச்சாகவும் கொண்டனர். அவர்களின் சீவியநிலை பல்வகைத்துறைகளிலும் மேம்பாடுள்ளதாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டப்பம் பரண் வாடி, செத்தை, குடில், புரை, என்ற அமைப்புகளில் அக்கால வசிப்பிடங்கள் காணப்பட்டன. வளைத்துவரக் கட்டைகள் நடப்பட்ட கொத்து வேலி, மரவேலி எனும் ஒரு அடைப்புக்குள் சிறிய மண்வீடுகள் கட்டியே பெரும்பாலானோர் வாழ்ந்திருக்கின்றனர். உழலை (குறுக்குமர)க் கடப்புகள் முன் வேலியில் அமைக்கப்பட்டிருக்கும். வேலி நிறைய பயிற்றை அவரை, பீர்க்குப் போன்ற கொடிகள் படரவிடப்பட்டிருக்கும். வேலிகளின் இடையிடையே முருங்கை, பூவரசு, ஆமணக்கு, பொன்னவரை ஆகிய மரங்களும் தென்படும். வெள்ளைக்குருத்து மணல், அல்லது கடற்கரை மணற் பரப்பப்பட்ட முற்றம், அதனொருபால் திருக்கொன்றை, முதிரை வைரங்களாலான ஒருஞ்சல், பக்கத்தே வாழைப்பற்றைகள், இருபது முப்பது தென்னைகள், குடிநீர் நிரப்பப்பட்டு மூடிவைக்கப்பட்ட பெரிய மட்குடங்கள், பக்கத்து மரங்களிலே படரவிடப்பட்ட நாடங்கொடி, வீட்டுக் கூரையில் விடப்பட்டிருக்கும் கரைக்கொடி, மரங்களிலே தொங்கும் கோழிக்கூடு, மரக்கொட்டுப் பதித்த கிணறு, துலா, வீச்சு மரத்தில் கட்டப்பட்டிருக்கும் பத்திக் கையில் ஒழுகாதவாறு பொருத்தப்பட்ட வட்டவடிவான மரப்பட்டை, கிணற்றடியில் நடப்பட்டிருக்கும் மல்லிகை, கற்றுளை, பல்வகை மூலிகைச் செடிகள், பக்கத்தே மருதோன்றி மரம், கிணற்றை வளைத்து வைக்கப்பட்டிருக்கும் கமுகுச் சோலை, மலர்கள் விரிந்துள்ள மாதுளைமரம், தோடை, எலுமிச்சை, கறிவேப்பிலை மரங்கள், சில மாமரங்கள், கொய்யா மரங்கள், நறுவிலி, வம்மிகள், வீட்டினுள் தென்படும் பாற்சட்டிகள், நெய், தேன் வைக்கப்பட்ட மண் சாடிகள், குரக்கன், நெல், சோழம், இறுங்குச் சாக்குகள், தயிர்ப்பானைகள் அடுக்கப்பட்ட கயிற்று உறிகள், பன்னிரெண்டு பின்னித் தூக்கப்பட்ட பாயசவு, இரண்டு மூன்று உரல், உலக்கைகள், கொச்சிக்காய் அம்மி, மருந்தரைக்கும் அம்மி, குரக்கன் அம்மி, உடைகளைத் தொங்கவைக்கும் மான் கொம்புகள், மான்தோல்கள், முற்றத்தில் விரிக்கப்பட்டிருக்கும் புலித்தோல்கள் இத்தியாதி அமைப்பைக் கொண்டவைகளே அக்காலத்து வளவுகள், வீடுகளாகும்.

தவிர சில வீடுகள் சோழச் சேனைகளின் மத்தியிலும் வேறுசில கிழங்குச் சேனை, தினைச்சேனை, இறுங்குச் சேனை, கொச்சிக்காய்ச் சேனை மற்றும் பல்வகைப் பயிர்ச்சேனைகளின் நடுவிலும் கட்டப்படுவது வழக்கமாகும். குடும்பத்திலுள்ள ஆண்கள், பெண்கள் அனைவரும் இச்சேனைச் செய்கைகளில் ஈடுபடுவர். கொடிமல்லிகைப் பந்தலொன்று பலரது வீட்டு முற்றத்தில் போடப்பட்டிருக்கும். அதை வளைத்து முதிரை மரங்கள் போடப்பட்டு, மணல் பரப்பப்பட்டிருக்கும். அம்மணலின் மேல் உட்கார்ந்து வீட்டவரும் அயலவரும் உரையாடும் வழக்கம் ஒரு சிறப்பான அம்சமாகும்.

தேநீர், கோப்பி குடிக்கும் பழக்கம் அப்போதில்லை. வந்தவர்களைப் பால், தயிர், இளநீர், கொடுத்து உபசரிப்பர். பலகாரம் சுடவும் கறி சமைக்கவும் எருமை நெய் உபயோகிக்கப்பட்டது. சில வேளைகளில் சுடு சோற்றில் நெய்யைத் தாராளமாக ஊற்றிச் சாப்பிடும் வழக்கம் எல்லோரிடமுங் காணப்பட்டது. சில வேளைகளில் தேவைக்கேற்ப நெய் விளக்கை எரிப்பர். உள்வீட்டுக்குள் இருக்கும் குத்து விளக்கு நெய்யினாற் தினந்தோறும் எரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்காலத்தில் நெய் தண்ணீர்பட்ட பாடாய் இருக்கும். ஒரு மூலையைத் தனியாக அடைத்து கொச்சி, வெண்டி, தக்காளிச் செடிகளை நட்டிருப்பர்.

கடின உழைப்பும் கருணையும்: மக்கள் கடினமாக உழைத்தனர். அவர்களின் உணவுகள் மிகையாகவே இருந்தன. அவர்களின் உழைப்புக்குத் தக்க உணவு தேவைப்பட்டதால் அதிக அளவில் உருசியாகச் சமைத்து உண்டனர். ஒருவர் தூரக் காட்டுக்குப் போய், 21 அடி நீளமான பெரிய முதிரை அல்லது திருக்கொண்டை வீச்சு மரத்தின் இருபக்கத்திலும், இரு மரக் கொட்டுகளை நுழைத்துக் காவி வருவது அவருக்குச் சர்வசாதாரணமான ஒரு காரியமாகும். அதிக எண்ணிக்கையில் பலசாலிகள் அப்போது வாழ்ந்துள்ளனர்.

மான், மரைகளைப் பொல்லால் எறிந்து பிடிப்பதும், காட்டெருமைகளைக் கம்பால் அடித்து மடக்குவதும், கரடியை அடித்துக் கொல்வதும், பெரிய காட்டுக்கம்புகள் பலவற்றைக் கட்டிக் காட்டிலிருந்து தோழிற் சுமந்து வருவதும் அவர்களின் நெஞ்சுரத்துக்கும் வீரத்துக்கும் சான்றளிக்கின்றன. குஞ்சிப்பிள்ளை அதிகாரி என்பவர் ஒரு யானையின் வாலை இறுகப்பற்றி, அதன் பின்னங் காலிரண்டிலும் தனது காற் பாதங்களை ஊன்றி, அப்படியே குத்தாக நின்று யானையைத் திரும்ப விடாது விரட்டிய வீரச் செயலையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நாம் அதிசயிக்கத்தக்க அனேக அசாதாரணமான செயல்கள் அப்போது நிகழ்ந்துள்ளன.

இறைபக்தியும் கருணைகாட்டலும் நம்முன்னோரின் விழுமியங்களாகும். யாருக்கும் மனமுறிவை ஏற்படுத்தாது, அவர்களுக்கு உதவியொத்தாசையாய் வாழ்ந்து அவர்கள் நிறைந்துள்ளனர். மனைவிடென்றாலும்சரி, மரணவீடென்றாலுஞ் சரி எல்லோரும் சேர்ந்து பங்குபற்றி இரவுபகலாக உழைத்து வந்துள்ளனர். பிறரின் இன்பத்தில் மகிழ்வதும்,துன்பத்தைக் கண்டு கலங்கி அழுவதும் அவர்களின் பண்பாக வளர்ந்திருக்கிறது.

மற்றவர்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்ற நல்லெண்ணம் அவர்களோடு தோழமையை நெருக்கமாக்கி, மனங்கோணாது வாழ்ந்த மனப்பாங்கு மிகவும் பாராட்டத்தக்கது.

## உள்ளத்தில் ஊறி மலர்ந்த உணர்ச்சிக்கவிகள்

கிராம மக்களின் வாழ்வோடியைந்த கவிகளுக்கு எங்கும் அதிக செல்வாக்குக் காணப்படுகின்றது. மனிதநேயத்தின், அவர்தம்விழுமியத்தின், உள்ளத்தெழும் உணர்ச்சிகளின் ஊடக வெளிப்பாட்டின் கருக்களாக இக்கவிகள் தென்படுகின்றன. கல்லா மாந்தரின் கபடமற்ற தன்மைகள், இறையச்சம், எல்லோருக்கும் உதவும் மனப்பாங்கு, மற்றவர்களை மதித்துப் போற்றும் மரபு, துன்பத்திற் துவண்டுதுடிக்கும் பரிதாபம், அறநெறியிற் தவறக்கூடாதே என்ற ஆதங்கம் என்பன போன்ற பல்வேறு உணர்ச்சிகளின் வடிவங்களே அக்கவிதைகளின் தொனிப்பொருள்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் நினைப்பது போல், எழுதுவது போல், சொல்வது போல் கிராமியக் கவிதைகள் காதலைவடித்துக் காட்டும் கலையம் சத்தை மாத்திரம் கொண்டவையல்ல. அதற்கும் மேலாகத் தரமுயர்ந்து ஒன்பான் சுவைகளான வீரம், பெருநகை, அச்சம், பெருமிதம், இளிவரல், வெகுளி, கருணை, அவலம் மற்றும் சிருங்காரம் ஆகிய சுவைகளையும் சாரமாகக் கொண்டுள்ளன என்பதைப் பின்வரும் சில எடுத்துக்காட்டுகள் மூலமாக நாம் நன்குணரல் சாலும். அவையாவன:

### 1. வீரம்

1. கத்தி உனக்குக் கையில் இருக்குமெண்டால், - எனக்கித் துவக்கு இரிக்கி, - இப்பநாள் பறக்கப் போகிறது
2. சண்டித்தனத்தைச் சந்தியிலே கொண்டு வெச்சுப், - பல்லை உடைப்பேன் - அதைப் பார்த்திடுவார் ஊர் முழுவதும்
3. பிங்கான் எறிஞ்சி பீரிசி கோப்ப ஒடச்சிச் சண்டை புடிக்காய், - ஒண்ட தலை ஒடச்சிப் போட்டுடுவன்
4. சாறனைக் கட்டிச் சண்டித்தனம் காட்டுறுயே, - பயப்படமாட்டேன் .- ஒடம்பல் லொடைப்பேன் வந்தாயெண்டால்
5. என்னை மானங்கொறச்சி மதிப்பில்லாமல் செய்ய, - கச்சை கட்டி நிக்காய் ,- அது கைகூடிவாறதில்லை

### 2. பெருநகை

6. மொட்டத்தலையில் மூணுமயிர் மிஞ்சிரிக்கி, - மண்ணெண்ணெய் போட்டு, - வாந்துழ்டி என்ராசாவே
7. காக்காயைப்போல கரிக்குருவி தார்போல,- சோக்கான பொம்புளையை .- மாமி சோடிச்சி வெச்சிரிக்கா
8. பால்புளிக்குமெண்டார் பழம் புளிக்கும் வேணுமெண்டார் .- தேன்கசக்குமெண்டார்- அவரத்தின்னச் சென்னதாராங்கா
9. இளைய மதினி இயினா கதச்சகத - ஈரலியே வாள்பூட்டி இழுத்தறுத்தாப் போலிரிக்கி
10. மூக்குத்திக் காறி பெத்த மூக்கொடஞ்ச கொம்பனொண்டு கால்தவறிப் பாஞ்சி - கடப்படியில் கத்தினதாம்

### 3. அச்சம்

11. அல்லாடசோதனைக்கு அடிபணிஞ்சி போனேனுமெண்டால் நன்மை கிடைக்கும் - அதில நலவிரிக்கிப் பார்ராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அடியாள் சிறியவள் நான் ஆகிறத்து வேளையிலே - கொடி நிழலைத்தந்து - குளிரவைப்பாய் யாறருமான்
13. பொன்றைல் கொடிப்பறந்து புகழ் வீசி நிண்டாலும் - அல்லாட கட்டளைக்கு - அடிபணிஞ்சி போக வேணும்
14. நாம்பமெண்டு வந்து நடுச்சாமம் வாளி பாஞ்சி - போனதை அவரறிஞ்சால் பெரும் பொல்லாங்கு வந்திடுங்கா
15. ஆக்காட்டிசுத்தி அல்லேயிலே கொண்டுழுந்து - துடிச்சிப்பதறுதுகா - என்ன தொல்லை வரப் போகிறதோ

4. அற்புதம்

16. காலம்முழுக்கக் கச்கிசங்கள் பட்டழுத் - பாத்தும்மா மாமி - இப்ப பணக்காறியாய் இரிக்கா
17. வாழையிலே ரெண்டுகுலை வருக்கையிலே தேன்பருவம் - சோலையிலே கிளியுழுந்து - அங்கே சுத்துறதின் மாயமென்ன
18. போனவருசம்போனதென்ன காடுவெட்ட - இந்த வருசம் - எடுப்பெடுக்கும் மாயமென்ன
19. ஆலரசம்பூவே அல்லி ஒல்லி தாமரையே - இப்ப அன்பு கொறஞ்சி - அயத்திரிக்காய் ஏன் கிளியே
20. காசால் பறந்து கணக்கயெல்லாம் கூத்தாடி - அதிகாரம்செஞ்சவரை - இப்ப ஆரும் மதிக்கிறல்ல

5. இளிவரல்

21. செத்த முகமும் செகிழுழுந்த கால்தலையும் - பாம்புநடையும் பார்க்கவொண்ணுகாமதிலி
22. அல்பப்பசிசி அறவே எணக்கமில்ல - வீருப்புப் பேசி - ே கந்தோரிலே

6. வெகுளி

26. ஒண்ட ஓடர்படிக்கி ஒரு நாளும் நான் நடவேன் - என்னை அடிபை எண்ணுறிதே - அதுநடக்கா வீண்கனவு
27. கல்லாவெறிஞ்சிக் கதிர்த்தலையாலே அடிச்சி - செல்லம் விளையாட - அந்தச் செங்கொரங்கு பாயிறென்ன
28. காட்டுப்பருவாம் கன்னி இளம் மயிலாம் - இப்ப போட்டுட்டுப் போனதென்ன - அவர்ர புத்தி செட்ட மாதிரி தான்
29. நீ கணக்கக்கதச்ச தாலே எணக்கிக் காய்ப்பேறிப் போயிரிக்கி - களவில நானும் - ஒன்னக்காவறது தப்பாது
மாமி எனக்கி மருந்தரச்சி மந்திரிச்சிப் - போடஇரிக்காவாம் - அவட புத்தி கட்ட மாதிரிகான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கருணை

31. மனமிரங்கி நானும் மன்டாடிக் கேட்டிரிக்கேன் - ஒங்குட வருத்தங் கொணமாகி - வந்து சேர வேணுமெண்டு
32. ஏழைகளென்டால் எங்களுக்கு ஒண்டுமில்ல - ஒங்குட அன்பு மட்டும் போதும் - அதுபெரிய சொத்துகள் தான்
33. பகலிரவு பாக்காமல் பலபாடும்பட்டு வந்து - நொந்து கெடக்கிறயள் - நம்முட நாயகனும் ஆதரிப்பான்
34. ஏழைக்கிரங்கி எளியவரைத் தூக்கி - நாமவாழவேணும் - நம்முட நாயகனும் ஆதரிப்பான்
35. கூடவருவேன் பெரம்புக்கூடையிலே மீன்சுமப்பேன் - தேத்தண்ணி வெப்பேன் - ஊரில் தெரியவந்தால் தூருகும்

## 8. அவலம்

36. ஏழைக்குமிருந்து ஏங்கியழுகிறதை - எனக்கிப் பாக்க வொண்ணு மாமி - பெரும் பரிதாபமாயிரிக்கி
37. வயசேறிப்போச்சி வாழ வழியுமில்லே - என்னைச் சோதிக்காய் ஆண்டவனே - நான் சுகப்படுவதெப்போது
38. வயல்தான்டு ஊரழிஞ்சி வந்த வெள்ளம் வத்தயில்ல - சாமான் ஒறுப்பு - எனக்கிச் சள்ளெடுக்கக் கூடாது
39. தாயில்லா மான்கள் தவிச்சழுது போறதுபோல் - இப்ப நானுமிரிக்கேன் - ஒன்ட நாட்டமென்ன யாறகுமான்
40. சின்ன வயசில் சீரழிஞ்சி என்வாழ்வு - பெரும் அத்தலஞ்சி போயிரிக்கி - என்ன ஆதரிக்க ஆளுமில்ல

## 9. சிருங்காரம்

41. வாசலேத் தூத்தேன் மணல்ப் பரப்பி வெசசேன - என்ர ஆசியப்பூமாலே - ஒங்குட அடியழகைப் பாப்போமெணடு
42. ஆடுகொடிகட்டி அரவமெல்லாம் மந்து வெச்சிக் - காடுங்கலேச் சேன் - என்ர கண்மணியைக் காணயில்ல
43. ஆத்துக்குமக்கரையால் ஆசைக்குழல் ஊதுறது - தாங்குதில்ல என் மனது - நான் தன்னியள்ளப் போய்லெரட்டா
44. கட்டிலுக்குக் காவிணக்கம் கடதாசிக்கு மைமிணக்கம் - நாகயவ்ளி நாம்பறுக்கு - நாவிணக்கம் போதாதோ
45. அப்பந்தருவேன் அதில தொடத்தேன் தருவேன் - கைகழுகப்பால்தருவேன் - நம்முட காரியத்தில் வெத்தி கண்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காண் ஈரடிக்கவி பழைமையான அமைப்பைக் கொண்டது. இதிற் பத்துச் சொற்களுள. அவற்றுள் காய்க்கிறது, தெளிவு எனும் இரு சொற்களையுந் தவிர ஏனைய எட்டுச் சொற்களும் செந்தமிழ்ச் சொற்களாக மாற்றப்பட்டுள்ளன. இப்படிச் செய்து கிராமியக் கவிகளின் இயல்பான தன்மையும் ஓசையும் மாற்றப்பட்டுள்ளது. கட்டுக்கோப்பான ஒரு யாப்பினுள் இக்கவியை நாம் அடக்கிவிட்டோம் என்று இதை மாற்றிய அறிஞர் மனம் மகிழலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரையில், அவர் செய்திருக்கும் திருப்பணி, கிராமியக்கவிகளின் இயற்கையான தனித்தன்மையை இழிவுபடுத்தியிருக்கிறது என்ற உண்மை, இம்மாற்றத்தின் மூலம் தெரிய வந்திருக்கின்றதெனலாம்.

02. கிராமங்கள் தோறும் சில பேச்சுவழக்குகள் கருத்துப் பிறழ்வோடு காணப்படல் இயற்கையாகும். தவிர ஒரு சில மரபுவழிப் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவற்றின் யதார்த்த நிலையையறிய வேண்டுமாயின், கிராமிய மக்களோடு நீண்ட காலமாக உறவாடிய பழக்கமும் அவர்தம் இன்பதுன்பங்களிற் கலந்து பெற்ற அனுபவமும் இன்றியமையாதது. விசேடமாக மக்களோடு மக்களாகக் கலந்து வாழ்ந்து வல்லமை பெற்றவர்களாலேயே அவற்றின் நெளிவுசுளிவுகளை அறியமுடியும்.

இவற்றை விளங்கிக்கொள்ளாத சிலரும், விளங்க விரும்பாத வேறு சிலரும் கிராமத்து வாடையே வீசாத இடங்களிலிருந்து இவற்றின் தனித்தன்மையை விளங்காது விரும்பியபடியெல்லாம் எழுதியும், பாடியும், பேசியும் வருகின்றனர். இதற்குப் பின்வரும் கவி சான்றளிக்கும்:

"ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரக் கண்டாச் செல்லிடுகா -
நம்முட மாதாளங் கன்னி - மடல் விரிஞ்சி போச்சி, தென்டு".

இக்கவி கடந்த பல வருடங்களுக்கு முன் பெரும் சர்ச்சையைக் கிளப்பி, நாழிதழ்களில் முக்கியத்துவம் பெற்றதொன்றாகும்.

இதை எடுத்தெழுதிய அறிஞர் இருவிதமான தவறுகளைச் செய்திருக்கிறார். கவியையும் அதன் கருத்தையும் திரித்துக்கூறியதன் மூலம் அழகும் ஆனந்தமும் மிக்க கவியுலகில் ஓர் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். விபரம் வருமாறு:

"ஆதம்காக்கா ஆதம்காக்கா அவரைக் கண்டாற் சொல்லிடுக - நம்முட மாதுளங் கன்னி - மடல் விரிந்து போயிற்றென்று". இது மாற்றப்பட்ட...ம். இதில் இனிய ஓசைநயம் ஒறுத்துக் காணப்படுவது மல்லாமல் கவியின் ...ப் பாதிக்கப்பட்டுள்ளது.

...ாலாக, தாய் பூப்பெய்திய செய்தியை ஆதங்காக்கா மூலம் வயலில் இருக்கும் தம கணவனுக்குச் சொல்லியனுப்பியதாக ஒரு பண்டிதர் குறிப்பிட்டெழுதிய மேற்காண் கவிதை பெரும் வாதப் பிரதிவாதத்துக்குள்ளானது. இளம் பெண்கள் பருவமடைவதற்கு முன் வதுவை செய்து கொடுத்தல் அக்கால வழக்கமாகும். கலியாணத்தின் பின்னே பலர் சாமர்த்தியப்படுவர். இக்கருத்திலே தான் அவர் நிலைப்பாடு கொண்டுள்ளது விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. தம் மகள் பூப்பெய்திய செய்தியை ஆதங்காக்கா மூலம் கணவனுக்கு அவள் சொல்லியனுப்பினாளென்பதே யதார்த்தமாகும். இவ்விருவிதமான பிழைகளும் ஏற்பட்டதன் காரணம் கிராமியச்சூழலில், உறவாடலில், செயற்பாட்டில் அவர் கால்கொள்ளாதிருக்கவில்லை எனலாம்.

03 சிலர் கவிகளின் அடிதலையை மாற்றி எழுதுகின்றனர். இதுவும் கவிகளைக் களங்கப்படுத்தும் செயலாகும். ஒரு சரியான கவிவடிவத்தைப் பார்ப்போம்.

''வெட்டயக்கல்லோ வேல மரத்து வெளியோ. மானுரிச்ச கல்லோ — என்ர மயிலழுது போறதிப்போ''

இதைச்சிலர் அடிதலைமாற்றி இப்படி எழுதுகின்றனர்.

''வெட்டயக்கல்லோ வேலமரத்து வெளியோ -

விரமுனைக்கல்லோ - ஒண்டும் விளங்குதில்ல எங்களுக்கு

''ஆனை நிற்கும் காடோ அளிக்கம்பைபட்டிமோடோ மானுரிச்சகல்லோ

- என்றமயிலழுது போறதிப்போ''

இவ்வாறு எழுதுபவர்கள் ஏதோ தாம் பெரும் இலக்கியகர்த்தா என்ற மயக்கத்திலிருப்பினும், இவர்களது போலிப்புழுகுகளை கிராமியச் சூழலிற் பரிச்சயமுள்ளோரறிந்து நகைத்தல் கூடும்.

04. இன்னொருவகையான கவிதை மோசடியையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஒருசிலமேதாவிகள் கிராமியக்கவிதைகள் என்றபோர்வையில் தாமே பல கவிதைகளை யாத்து வானொலியிற் பேசியும் எழுதியும் வருகின்றனர். இப்போலி மினுக்குக் கிராமிய மண்வளப் பயிற்சியனுபலமுள்ளோருக்கு முழு அம்மணமாகவும் அருவருப்பாகவும் தெரிவதை இந்த இளிச்ச வாயர்களறியார் போலும்.

நாம் இதுவரை கூறிய விளக்கங்கள் மிகச்சுருக்கமானவைபூரணவிளக்கங்களை இனிமேல் தருந்த முறையில் தரவிருக்கிறோம். கிழக்கிலங்கையிற் கிராமியக் கவிகள் பாடிச் சிறப்புப் பெற்றவூர் அக்கரைப்பற்றாகும். சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், பொத்துவில், இறக்காமம் மற்றும் கல்முனைப் பகுதிகளுக்கும் இதிற் கணிசமான பங்குண்டு. ஒரு கவியைப்பாடும் போது இது எந்தவூரைச் சேர்ந்த பாடல் என்பது கிராமியக் கலைகள் பற்றிய ஆய்வாளருக்குத் தெளிவாகத் தெரியும். ஏனைய பம்மாத்துக்காரர்கள் இவற்றின் ஆழத்தையும், நுட்பத்தையும், விழுமியங்களையும் உணர்ந்து நடைமுறைப்படுத்தலே தக்க முறையாகும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம். கடந்த காலங்களில் நாட்டுப் பாடல்கள் பற்றியதொரு விழிப்புணர்வு கற்றோர், மற்றோரிடையே காணப்பட்டு வருகிறது. இதையறிந்த பலர் இத்துறையிற் செயற்பட்டு வருவது கண்கூடாகும்.

இவர்களின் ஆர்வம் அத்துறையை அழிக்கும் முனைப்பாகவும் மாறுபட்டுப் பல சந்தர்ப்பங்களிற் காணப்படுவது தவிர்க்கப்படல் நல்ல ஆரோக்கியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகுறியாக அமையும். கிராமிய இலக்கியத்துறையில் முஸ்லிம் மாதரின் பங்களிப்பு மிக உயர் நிலையிற் காணப்படுகிறது. கிராமியக் கவிகளின் அடிநாதமே கொச்சைச் சொல்லும் குமுறிப்பாயும் உணர்ச்சிகளுமாகும். அவற்றில் ஒரு எழுத்தையேனும் நாம் மாற்றியமைக்க எமக்கு அருகதையில்லை.


சில நியதிகளைக் கருத்திற் கொண்டு நாட்டார் இலக்கியங்களை, கவி, பாடல், இலக்கியம், மாலை, கிஸ்ஸா, விளக்கம், நாமா வென்ற சில பிரிவுகளில் அடக்கி ஆராய வேண்டியிருக்கிறது. கிராமியக்கலைகள் பற்றிய விரிவான ஆய்வொன்றுக்கு நாம் ஏற்கனவே தயாராகியுள்ளோம். ஆனால் மிகப்பெரிய அளவில் இது ஆராயப்படல் வேண்டும். அதற்குப் பணவசதியுள்ள நிறுவனங்களின் ஆதரவும் நவீன விஞ்ஞானக் கருவிகளின் துணையும் மிகுதியும்

தேவைப்படும். இவற்றின் பக்கபலத்துடன் சமூகவியல், கிராமிய இலக்கிய ஆய்வொன்றினைச் செய்துகொள்ளக் கூடிய அரிய வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும். எம் இலக்கிய பாரம்பரிய முதுசொத்தின் வெளிச்சங்காட்டிகளாகக் கிடைக்க விருக்கும் ஆய்வாளர்கள் இத்துறையிலீடுபடுத்தப்பட்டால் நம் இலக்கியச் சீர்மைக்கும் செழுமைக்கும் அது உரமாக அமையும். இவ்விலக்கிய இன்பத்தில் இதயத்தைப் பறிகொடுத்து, அவற்றின் விழுமியங்களை அவதானமாய் நுணுகிப்பார்ப்போர், ஆய்வின் அடைவுகளைக் கண்டு நமக்களித்தல் கூடும். ஒருவரின் தனிப்பட்ட முயற்சியும் பல தரவுகளைத் தரமுடியுமாயினும், கூட்டுமுயற்சியின் மூலமே ஆய்வின் உச்சப்பயனைப் பெறலாமென்பது வெளிப்படை.

கிராமியக் கவிகளின் பல்வேறு துறைகளையும், வடிவங்களையும், சிறப்புகளையும் காட்டும் பொருட்டு, மிகக்குறைந்த எண்ணிக்கையிற் சில கவிகளை இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

அழிந்தும் அருகியும் வரும் கிராமிய இலக்கியக் கருவூலங்களைத் திரட்டி ஆய்ந்து, ஒத்துப் பார்த்துத் தொகுத்து வெளியிடும் பணியை, எதிர்காலத்தில் ஏற்றுச் செயலாற்றுமாறு, அறிஞர் பெருமக்களை அன்புடன் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. செத்தையிலே தங்கிச் செரிசாமம் நியரண்டு—என்ரரெத்தங்குடிக்க—நீ இரஞ்சி வந்தாயா நொளும்பு

2. சட்டி நெருப்புத் தலமாட்டில் கொண்டு வெச்சி—விடியுமட்டும் வீசினேன் நான்—இப்ப விலகுதில்லையே நொளும்பு

3. நித்திர கொண்டால் நெடுகச் செரியுமில்ல—ஒன்னமுழிப் பாட்டவேணுமெண்டு—நான் முணுமுணுக்கேன்கா ராத்தா

4. காட்டில் விறகெடுத்து கலிதிரப் பத்த வெச்சித்—தின்னஇல்லச் சோறுந்கி—எங்களைச் சிரழிச்சாயே நொளும்பு

அவடத்த எனக்கி அறவே அடைய ஒன்னு—சின்னவன் ஒங்கூட—செத்தையிலே தங்கியிருந்தேன்

## 02. காகம்



6. எட்டிமட்டுபோட்டு என்ன எதிர்த்து வெடிச்சுட்டாலும்—ஒன்ட அவிச்ச நெல்லைச் சீயாமல்—நான் அறவே பறவேன்கா ராத்தா

7. நாகம் தம்பிறது கோளாவில் என்ர சம்பாதிப்புக் காடுவளம்—மாரகெண்டக்குமெஞ்சடால்—நான் என்வாறேன்கா ராத்தா

8. முக்காலிபோட்டு மூணுபோர் ஆன்டிப்பிக்—கரையேத்திவந்த நெல்லு—ஒனக்குக் கவலையில்லையா காகம்

9. அந்த குப்படி வெசிறி நான் அள்ளாமத்தான் போறன்—பசிருகிற நேரம்—என்ர பங்கை வைப்பாயோ 'ராத்தா

10. பத்த பசிக்காலம் பாடுபடவொண்ணாத நேரம்—ஏன் வந்தாய் காகம்—ஒன்ன ஆரு வெரக்காட்டினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. நாய்



11. நாயே ஒனக்கு நல்லறிவு உண்டுமெண்டால்—என்ர
பாணைக்கள வெடுத்துப்—பாச்சலிலே ஓடுவாயோ

12. திருக்கோயில் யாபாரி மின்னப்
பணக்காறி—சோறுகறியில்லாம—என்னைத்துயரடையச் செய்திரிக்கா

13. என்ன வளத்தவளும் தள்ளிவிட்டாள் ஒண்ட வாசலுக்கு
ஓடி வந்தேன்—என்ர காவ முறிக்க—நீ காத்திருந்தாயோ ராத்தா

14. ஒண்ட ஊட்டுக்குக் காவல்காக்க உள்ள நாளும் நான் வெருமேலன்—எனக்கு
அடிப்பாயா ராத்தா—அனியாயஞ் செஞ்சிடாதே

15. குமரிக்கி என்டு குசேச்சால் பாயிதா கிடைக்கும்—அதை அறிஞ்சி
நானும்—ஒன்ன அண்ட வந்தேன்கா ராத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



04. சிரட்டை

16. அடிப்பேன் நகைப்பேன் அடுப்பில் மாட்டுவேன்
உள்ளம செல்செரட்டை—எனக்கு (உள்ளம)

அலியார் நின்டாரோ அசனார் நின்டாரோ
உள்ளம செல் செரட்டை (எனக்கு உள்ளம)

17. கத்தியால் சீவுறன் புத்தியிருந்திட்டால்
உள்ளம செல் செரட்டை—இப்பநீ (உள்ளம)
குத்திப் புடுங்கி நான் கழ்காச்சி ஊத்துறன்
உள்ளம செல் செரட்டை (இப்பநீ உள்ளம)

18. கடுதண்ணி காச்சி ஒன் சொத்தையில் ஊத்துறன்
உள்ளம செல் செரட்டை—ஒழிக்காம (உள்ளம)
அடுப்படுச் செத்து நீ அனல் வாயில் போகுறன்
உள்ளம செல் செரட்டை ஒளிக்காம உள்ளம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. கொச்சிக்காயைக் கிள்ளிக்கொட்டுமுன் கன்னியிலே
உள்ளம செல்செரட்ட—மறுக்காமல் (உள்ளம)
புச்சிக்குடிலிலே புள்ளைகள் வெட்டுமுன்
உள்ளம செல்செரட்ட (மறுக்காமல் உள்ளம)

20. கன்களைத் தோண்டி நான் கட்டுவேன் வன்டிலும்
உள்ளம செல் செரட்ட—பயராமல் (உள்ளம)
மணவாளர் மீட்கொட்டக் குழந்தைகள் தேடுமுன்
உள்ளம செல்செரட்ட (பயராமல் உள்ளம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. எலி



21 பொடவவெழுத்துப் பொட்டியிலே வெய்க்க உடா—
பொட்டியறுத்து—எலி பூருதிரி பொண்டுகளே

22. எலிக்குப் பொறிவெச்சி அதை இடுப்படியாலே முறிச்சி—
காக்காய்க்கு உட்டெறிவேன்—எலிகள்ளவேல செஞ்சால் நீ

23. மகரிபட்டுதெண்டால் பெரும் மளமளப்பு வூடுமுழுதும்—எலிப்பொறியை
வாங்கி—அதை ஏத்திவைகா நாகூரும்மா

24. முப்பது சதக்காசி ஒரு முழுத்தேங்காய் விக்கிறது—அதைக்கடிச்சித்
தின்ன—நீ அரவ்டு வாறுய் ஏன் எலியே

25. எலியே ஒனக்கு எவ்வளவும் புத்தியில்ல—பொழுது பட்ட நேரம்
பெராட்டுருயா பானசட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. மூட்டை



26. படுக்க உடயும் மாட்டாய் பட்டுமெத்தைக்குள்ளிருப்பாய்—என்ர ரெத்தங்குடிக்க—நீ எங்கிருந்து வந்தாய் மூட்ட

27. குத்தூசி கொண்டு குத்துருயே என் ஒடம்ப—நான் சுடுதண்ணி காச்சி—ஒண்ட சொத்தயிலே ஊத்திடுவன்


28. நீரெத்தங்குடிக்காய் இடுக்குகளில் தங்கிரிக்காய்—ஒனக்குப் பித்தம் புடிச்சிப்—பெரிய நாசம் தான் வெரட்டும்

29. புதுப்பொண்ணும் மாப்புளேயும் போயிரிக்கும் பாய்களிலே—சந்திமானமாகச்—சட்டென நீ குத்துருயே

30. கோதுகெடந்து குட்டிபோடும் ஒங்குகள் குலம்—எரியும் நெருப்பால்—எரிஞ்சழிஞ்சி போயிடுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. எறும்பு



31. எறும்பு மெலிஞ்சி இரவில் படுக்க உடா—அது கடிக்குப் கொடுமை—நீ காணயில்லையோ றகுமான்

32. எறும்பு கடிச்சால் சதிரம் எல்லாமே நோகுறதான்—கடியன் கடிச்சால்—நெருப்புக்கனல் தெறிச்சாப் போலிரிக்கும்.


33. கருவாடு மாசி வெச்சிக் கறியாக்கித் தின்னவொண்ணு —இந்த எறும்பு அழிய—எப்ப காலம் வாறதுவோ

34. கூனிபலகாரம் கொட்டுண்டு போச்சி தெண்டால்—அவடத்து நாயிருந்து—ஆட்சி செய்யக் கூடுதில்ல

35. தேயிலசீனி தினமும் புழங்கி வந்தா—எறும்புக்குச் சந்தோசம—நாம என்ன செய்யப் போகிறோம்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. பூனை



36. பூனையே நீயும் புறாக்குஞ்சைத்
குஞ்சுபில்ல—சாவலைத் திண்டு—பெருஞ் சச்சரவு செய்யிறியே

37. ஒரு சட்டிக் கறியைப் புண்டுமுட்டாமல் திண்டு—ஓடியே போறாய்—நீ
ஒழுங்கான பூனையில்லை

38. எலிபிடிக்காய் என்று ஏமாந்து நானிருந்தேன்—காஞ்செறச்சிக்
கட்டைக்—காலொடித்துத் திண்டிருக்காய்

39. எருக்கலம்பலால் காச்சின சனத்தில் வைத்து வெச்சேன்—அந்தப்பாலைக்
குடிச்சிட்டு—பயமற்றுப் போயிருக்காய்

40. ஒன்னை வளர்த்தால் ஒண்டும் மிஞ்சாது—ஒமலில
கட்டி—ஓடையோரம் போடலிக்கேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் நடந்த தேசாதிபதி வில்லியம் கொபல்லாவ அவர்களால் வழங்கப்பட்ட சாகித்தியப் பரிசினை ஆசிரியர் [illegible] [illegible] பெறுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இங்கு குறிப்பிட்ட உதாரணத்துக்கான கவிகளைப் போல், அனேக கவிகள் எம்மால் திரட்டப் பட்டன. அவைகளிற் காணப்படும் உணர்ச்சிப்பிரவாகம், கவியழகு, சொற்சிலம்பம் மற்றும் ஓசைநயம் என்பன படிப்பார் நெஞ்சம் பாகாயுருகுமாறு செய்யும் பாங்குள்ளனவாய்த் திகழ்கின்றன. இவற்றின் தனித்தன்மைக்கு ஈடோ இணையோ இல்லை எனலாம். கிராமியக் கவிகளின் சிறப்பைப் பற்றிச் சுருக்கமாய் விளக்க முடியாது. (இன்ஷா அல்லாஹ் நாம் எழுத விருக்கும் ''கிராமியக் கவிகளின் பல்வேறு வடிவங்கள்'', ''கிராமிய இலக்கியக் கருவூலம்'' எனும் நூல்களின் வாயிலாகத் தருந்த பல ஆய்வு விளக்கங்களை அறிதல் சாலும்).

இனிக் கிராமியக்கவிகளும் கிராமிய இலக்கியங்களும் படும் அவதியைக் கவனிப்போம். கிராமிய இலக்கிய, கவியுலகம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. அதன் தோற்றம் இயற்கையுணர்வின் மூலகத்திலிருந்து உருவாகி வருவதாகும். இவற்றையறியாத பலர் கிராமிய இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபோகிறோம் என்ற நினைப்பில் அக்கலைக்குக் குழிபறிக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும்.

கடந்தகால நிகழ்வுகள் பல எமது இக்கூற்றை உண்மைப்படுத்துவதாக அமைந்துள்ளன. பீடாதிபதிகள் பேராசிரியர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் நூல்களை வெளியிட்டும், கட்டுரைகள் எழுதியும், வானொலியில் பாடியும் பேசியும் இன்னோரன்ன வழிகளில் கிராமிய இலக்கியத்துக்கு வளங்கூட்ட முயன்றுள்ளனர். ஆனால் அவர்களுடைய முயற்சி எவ்வளவு தூரம் இதன் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறது என்பதை நாம் தெரிதல் வேண்டும். முஸ்லிம் கிராமியக் கவிகளைப் பொறுத்தவரை அவர்களின் முயற்சிகள் பல வடுக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை வருத்தத்தோடு சொல்லவேண்டியுள்ளது. அவையாவன:

01. பழங்காலத்திலிருந்து வழங்கிவரும் ஈரடிக்கவிகளினதும், மற்றும் இலக்கியப்பாடல்களினதும் மொழிநடை, படியாத பாமர மக்கள் தாம் இயல்பாகப் பேசும் பேச்சு (கொச்சை) மொழியிலேயே இருப்பது மரபாகும். இதைவிடுத்து அக்கவிதைகளைச் செந்தமிழ்ச் சொல்வாக மாற்றி இலக்கண வரம்புக்குள் இழுத்து விடுவது இழி செயலாகும்.

மாதிரிக்காக ஒன்றைக் கவனிப்போம்.

''ஊடுமொசரம் ஓசந்த தென்ன காய்க்கிறது - தவ்வணி தெளிவு -
ஒங்குட சமுசாரம் குத்தமில்ல''.

இப்பாடல் எழுத்தறியா மக்களின் இதய உணர்வின் வெளிப்பாடாகும். இக்கவியைச் சிலர் இப்படி மாற்றிவிட்டுள்ளனர்: ''வீடுயரம் உயர்ந்த தென்னை காய்க்கிறது - தண்ணீர் தெளிவு - உங்களின் சம்சாரம் குற்றமில்லை''.

(ஊடு - வீடு, ஒசரம் - உயரம், ஓசந்த - உயர்ந்த, தென்ன - தென்னை, தவ்வணி - தண்ணீர், ஒங்குட - உங்களின், சமுசாரம் - சம்சாரம், குத்தமில்ல - குற்றமில்லை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் அதிகாரம்
## மக்களின் சமூக, கலாசார, பண்பாடு, மரபு வழிப் பாரம்பரியங்கள்

மனநிம்மதியில்லாத வாழ்வென்பது, மிகவும் வேதனையான பரிதாப நிலையாகும். நமது முன்னோர் பலவிதமான கட்டுப்பாடு, ஒழுங்குமுறை, செயற்றிறன்களை நடைமுறைப்படுத்தியதால் பெரும்பாலும் மன ஆறுதலான வாழ்க்கையில் ஆனந்தங் கொண்டனர். அவர்கள் சிறந்த பண்பாடுகளைக் கொண்டிருந்ததாற் தான் நமது பெருமை பாதுகாக்கப்பட்டது. அவர்களின் சமய நம்பிக்கை, சமய ஒழுக்கம், மக்களை மதித்தும் போற்றும் மரபு என்பன மிக உயர்நிலையில் இருந்தன.

நவீன நாகரிகம், போலிப்புகழ், புதுமை, மேலாதிக்கம், அடாவடித்தனம் ஆகியவற்றின் பிடியிலிருந்து நாம் விடுபட்டாலொழிய வாழ்வு சிறக்காது என்ற உண்மையை உணர்ந்து அதற்கேற்ப ஒழுகினர். முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தம் என்பவற்றின் பெயரால் நமது விழுமியங்கள் விணடிக்கப்படக்கூடாது என்ற ஆதங்கம் அவர்களுக்கிருந்தது. ஒழுக்கமில்லாத ஒரு சமூக அமைப்பு, உணர்ச்சிபூர்வமான தொழிற்பாட்டில் இருக்குமேயன்றி, அறிவோடிசைவு பெற்ற மேலாண்மைக் குழுமமாக உயர முடியாதென்பது உலகறிந்த உண்மையாகும்.

இந்த அடிப்படையிலமைந்த கட்டுக்கோப்பான ஒரு பஞ்சாயத்தின் மேற்பார்வைக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டிருந்தனர். தலைவரின் ஆணைக்கு அடிபணிந்தனர். பள்ளிவாசல், ஆலயங்கள் போன்ற வணக்கத்தலங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களை உருவாக்கும் களங்களாக இருந்தன. சமயச்சான்றோர், வணக்கத் தலங்களின் செயலவையினர் ஆகியோரிணைந்த ஒரு ''சமரச சன்மார்க்க சபை''யினரின் ஆளுமையின் கீழ்க் கிராமச் செயற்பாடுகள் இருந்தன. பலவித முரண்பாடுகள், முறைப்பாடுகள், வழக்குகள் இன்னோரன்ன பிற அம்சங்களில் இச்சபைகள் மூலம் இணக்கங் காணப்பட்டது.

இச்சபை நீதிமன்றாகவும், இணக்க சபையாகவும், பொதுநல அமைப்பாகவும், தேவைக்கேற்பத் தொழிற்பட்டது. சமூகக் கட்டுப்பாட்டை மீறியோர், பல்வகைக் குற்றஞ் செய்தோர், விரோதச் செயற்பாட்டினர் ஆகியோர் தண்டிக்கப்பட்டனர். தண்டனைகள் பல வடிவங்களில் இருந்தன. திருமணமென்றாலென்ன, ஏனைய விசேடங்களென்றாலென்ன இப்பஞ்சாயத்தின் அனுசரணையுடனேயே அவை நடைபெறுவது வழக்கமாகும். கிராமத்துக்குச் சேவை செய்வதில் பஞ்சாயத்தினர் பேரூக்கங் காட்டினர். அதனால் மக்கள் அவர்களுக்கு உச்ச மதிப்பை அளித்திருந்தனர். ஒரு குடும்பத்தில் மணப்பருவமடைந்த ஆண் அல்லது பெண் இருந்தால் அவர்களுக்கு உரிய துணையைத் தேடுதல் இவர்களின் பொறுப்பிலிருந்தது. பிள்ளையைப் பெற்றவர்களைப் பார்க்க இப்பஞ்சாயத்தினர் இப்படிப்பட்ட விடயங்களில் அதிக கரிசனை செலுத்தினர்.

இன்ன பெண்ணுக்கு இன்ன மாப்பிள்ளை அல்லது இன்ன மாப்பிள்ளைக்கு இன்ன பெண் என்ற முடிவை இவர்களே கட்டுவர். இம்முடிவுக்கு மாற்று முடிவிருக்காது. தோதுக்கேற்றாற்போல் திருமணம் நடைபெறும். மணவிலக்குகள் மிக மிக அரிதாகவே காணப்பட்டன. எந்த விவாக வீடோ, மரண வீடோ, வருத்த வீடோ கிராமமே அங்கு திரண்டு வந்திருக்கும். ஒவ்வொருவரினதும் உள்ளத்திலே தத்தமது வீட்டில் இந்நிகழ்வுகள் நடைபெறுவதாக எண்ணிச் செயற்படும் தோழமை உணர்வு அந்நேரம் உயர்ந்து நிற்கும். திருமணத்துக்கு உபயோகப்படும் தளபாடங்கள், பொருள்களை அக்கிராமத்து மக்கள் தாமாகவே முன்வந்து கொடுப்பர். மணம் முடித்து பத்து நாட் கழிந்ததும் உரிய பொருள்களை அவரவரே தத்தமது வீட்டுக்குக் கொண்டு செல்வது வழக்கமாக இருந்தது.

ஆடைகள், அணிகலன்கள்: பெண்கள் உடல்முழுவதையும் மூடக்கூடிய ஆடைகளை அணிவர். ஏழுவயதுப் பெண்பிள்ளைக்கு கம்பாயம் உடுத்தி, சட்டை அணிவிப்பர். பழையகாட் கம்பாயம் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தது. மெல்லிய ஆடைகள் அணியும் பழக்கம் அக்காலத்திலில்லை. இருதுண்டுச் சீத்தைகளைச் சேர்த்துச் சட்டை தைத்து அணிவர். அதற்குப் ''போறம் போட்ட சட்டை'' என்று பெயர். பாவாடை, உள்ளாடை, பிரா (மார்க்கச்சு), கிமோனு, சல்வார் மற்றும் மெக்ஸி போன்ற உடைகளை அக்கால மக்கள் அறியார். சீத்தை, சோமன், வெள்ளைச்சீலை பச்சைவடம், கருக்குப்பணி எனும் புடைவை வகைகள்

உபயோகத்திலிருந்தன. அவை பால் சோமன், வாப்புனச் சித்தை, மாடாவன்னைச் சோமன், நாரப்பட்டுச் சோமன், கோப்பிக் கொட்டைச் சித்தை, அத்திராசிப் புடவை, அத்திராசிச் சித்தை, எழுடுக்குச் சோமன், பச்சவடச் சோமன், தோம்பு (பிலப்பு)ப் புடவை, கருக்குப் பணிச் சோமன், நிறப்பணிச் சோமன், டிங்கிரிச் சேலை, காரைக்கால் சோமன், அரையடுக்குச் சோமன், முக்காலடுக்குச் சோமன், சந்திரப்பட்டுச் சோமன், அறுமணமுட்டுச் சோமன், சட்டின் சித்தை மற்றும் பூச்சி சில்க் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டன.

பெண்கள் ஏழுவயது தொடக்கம் முக்காடு போடும் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தனர். வீட்டிலும் முக்காடு போட்டுக்கொண்டே தம் வேலைகளைச் செய்யும் மரபினராய்க் காணப்பட்டனர். சேலையை அணியும் போது பெரிய மடி வைத்துக் கொள்வர். காசுகளைத் தம் முந்தானைத் தொங்கலில் முடிந்து வைத்துக் கொள்வர். முதுமகளிர் பெரும்பாலும் மான்பட்சி, அப்பிள் மார்க் அறக்ஸ் எனும் வெள்ளைச் சேலைகளையே அணிந்து வந்தனர். அத்தோடு வெள்ளைச் சட்டையை முழுங்கைவரை போடுவதும் வழக்கிலிருந்தது.

அக்காலப் பெண்கள் பெரும் நகைப்பிரியர்களாய் இருந்தார்களென அறியக் கிடக்கின்றது. பூட்டுக்காப்பு, கொம்புக்காப்பு, உறுட்டன், அடுக்குக்காப்பு, கைக் கட்டு, தாவத்துக் கொடி, பட்டினக்காப்பு, மேல் வேலைக்காப்பு, மூக்குத்தி, அல்லுக்குத்து, கொப்புறுவாளி, வாழைப்பூவாளி, சிமிக்கி, கொண்டைக்குத்தி, கால் மோதிரம், கை மோதிரம், தட்டுமோதிரம், குத்து மணிக்கோர்வை, பூச்சிமணி, காமரங்காய்மணி, சவுக்க மணி, கரச மணி, பவள மணி, கால் தண்டை, (சிலம்பு) கறளை, கொலிசம் (பாதசரம்) உருண்டைக்கொடி, சவடி, உட்கட்டு (மகளிர் குழுத்தில் அணியும் மணிவடம்) கல்லையாளி மோதிரம், தட்டை மோதிரம், பூமோதிரம், மற்றும் சங்கிலி என்பவற்றை அணிவர். சிலர் கொண்டைப்பூ, மூக்குத்தி, மயிர் மாட்டி என்பவற்றையும் அணிவதுண்டு.

சிறு பெண்குழந்தைகளுக்கு அரைமூடி, சலங்கை கட்டுவர். ஆண்குழந்தைகளுக்கு அரைஞாண் (அறுணாக்கொடி) கட்டுவர். தங்கத்தின் புழக்கம் மிகக் குறைவாகவே இருந்தது. வெள்ளி, பொன், சறுமன், ஐம்பொன் ஆகியவற்றாலான நகைகளே காணப்பட்டன. ஏறத்தாழ நூறு வருடங்களுக்கு முன் உபயோகத்திலிருந்த நகைகள் பெரும்பாலும் சறுமனாலேயே செய்யப்பட்டவையாய் இருந்தன. (தட்டானிடத்தில் நான் போய்ச் சறுமன் கொடுத்தேன். அதை வாங்கியே தட்டான் நாளை வாவென்று சொன்னான்......1906 கந்தூரி அலைந்த காதை முகம்மது ருலிப்புலவர்)

ஆண்களில் முஸ்லிம்கள் சாறன் சட்டை, சால்வைகளை அணிவர். தமிழ் மக்கள் எட்டுமுழ வேட்டியும், ஆறுமுழச் சால்வையும், வாலா மணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞரஸ்சால்வை, போனகரிச் சாறன், ஆரணியம் சால்வை, பளைய காட்சாறன், மோகினிப் பட்டுச்சாறன், கோர்த்து வாங்கி லேஞ்சு, பூவரசம் பட்டுச் சாறன் மற்றும் சல்லாச்சாறன் ஆகியவை பிரபல்யமாய் இருந்தன. இடுப்புப்பட்டியாக மெரினோவார், குண்டுவார், பூச்சிவார், பொட்டிவார் என்பன உபயோகிக்கப்பட்டன. குண்டு மிதியடிக் கட்டை, வார் மிதியடிக்கட்டைகளே பாதணிகளாய் இருந்தன. மாட்டுத் தோலில் வார் மாட்டிய செருப்பு, கயிறு கட்டிய செருப்புகள் சிறிதளவு காணப்பட்டன. சிலர் தலைப்பாகை அணிவர். வேறுசிலர் கம்பிலேஞ்சியைத் தலையிற் கட்டிக் கொள்வர். இன்னுஞ்சிலர் தொப்பியணிவர். பெரும்பாலும் வயல் வேலைகளில் ஈடுபடுவோர் சிறுவால் அணிவர். சில தொழிலாளர் கோவணங்கட்டுவர். வேறுசிலர் கொடுக்குக்கட்டுவர். பெனியன் அணிவது பெருவழக்காயிருந்தது. சிறுவால் பச்சைவடம் எனும் சிவப்பு நிறத்துணியாலும், பெனியன் வெள்ளைச் சீலையாலும் தைக்கப்பட்டது. காரிக்கன் எனும் மங்கல் வெள்ளைச் சீலை உடைகள் கூட வழமைப்பில் உபயோகிக்கப்பட்டன. சிலர் காதுக்குக் கடுக்கன் அணிவர். அவர்களைக் கடுக்கொண்டாப் போடியாரென அழைப்பர்.

சிலர் தலையை மொட்டையடித்தும், வேறுசிலர் சிகைவளர்த்தும், இன்னுஞ்சிலர் குடுமிகட்டியும் இருந்தனர். ஆண் சிறுவர்களுக்கு கழுத்தில் வெள்ளிக் காறையும் கையில் காப்புகளும் போடுவர். தாம்பூலம் தின்னும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. வெற்றிலை வட்டா, சுண்ணாம்பு வைக்கும் கிள்ளவடு, பாக்குவெட்டி என்பன எப்போதும் தயாராய் இருக்கும். காசு வைப்பதற்குச் சீலையாற் தைத்த பை உபயோகிக்கப்பட்டது. அதற்கு வல்லுகம் என்று பெயர். பனையோலையால் இழைக்கப்பட்ட வெற்றிலைக் குட்டான் எல்லோர் வீட்டிலும் வைக்கப்பட்டிருக்கும்.

ஒரு ரூபாவை ஒரு உறுவா என்றும், 50 சததைச் சிலின் என்றும், 25 சதம் நாலுபணம் என்றும், 75 சதம் முக்காறுவா என்றும் ஆறுசதம் ஒரு பணம் என்றும், 10 ரூபாவை ஒரு பவுண் என்றும் கூறுவர். ஒரு பவுண் தங்கக் காசு அந்நேரம் 10 ரூபாவாக இருந்தது. ஒரு ரூபா, 50 சதம், 25 சதம், 10 சதம், மற்றும் ஐந்து சதங்கள் (குத்திக்காசு) என்பன சுத்த வெள்ளி நாணயங்களாக இருந்தன. இரண்டு சதம், ஒரு ச, ம், அரைச் சதம் (சல்லிக் காசு) என்பன பித்தளை, செம்பு நாணயங்களாக இருந்தன. முக்காற் சதம் ஒரு துட்டு எனப்பட்டது. ஒரு சல்லிக்குக் கொச்சிக்காய், ஒரு சல்லிக்கு மல்லி, மிளகு என்ற ரீதியில் சாமான்கள் விற்கப்பட்டன. ஐந்துபேர் கொண்ட குடும்பமொன்றுக்குப் 10 சதம் நாளொன்றுக்குப் போதுமானதாய் இருந்தது. 1907 இல் ஒரு மரைக்கால் நெல் 25 சதமாக (1 புசல் 1 ரூபா)வும், 1937 இல் 50 சதமாகவும் இருந்தது. சினட்டி எனும் வாலுள்ள நெல்லைப்பெரும்பாலும்உணவுக்குப் பயன்படுத்த மாட்டார்கள். புகைவைக்க மாத்திரம் அந்நெல் பாவிக்கப்பட்டது. இற்றைக்குச் சுமார் 80 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட காணி உறுதிகளில் ஏக்கர் பரப்புக் குறிப்பிடாமல் அவணத்தரை எனக்காட்டப்பட்டிருந்தது. (உ + ம் மூன்று அவணம் விதைக்கும் தரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1900 ஆண்டுக்கு முன் எழுதப்பட்ட வளவு உறுதிகளில் கருங்கொடித்தீவு ஒரு குறிச்சியாகவே பிரிவிடாது குறிக்கப்பட்டுள்ளது. அந்நேரம் ஒரு ஏக்கர் வளவு 60, 80, 120 ரூபா எனும் கணிப்பில் உறுதி முடிக்கப்பட்டுள்ளது. காட்டுவளவு எனும் அரை ஏக்கர் வளவுக்கு 15 ரூபா விலை மதித்து 1891 ஆம் ஆண்டு உறுதி எழுதப்பட்டுள்ளது. (இல. கரு 2)

அடகுவைத்த சில வளவுகள் உரியவரினால் குறிப்பிட்ட தவணைக்குள் மீட்கப்படாமல் ஏலத்தில் விற்கப்பட்ட பரிதாபமும் அக்காலம் நிகழ்ந்துள்ளது. இப்படியாக அனேக வளவுகள் கைமாறியுள்ளன..

சிறு உணவுகளும் பலகார வகைகளும்: அரிசிமாவினால் செய்யப்பட்ட பலகார வகைகளே பெரும்பாலும் பந்திகளில் பரிமாறப்பட்டன. வீட்டுப் பாவனைக்கு குரக்கன். சோழம் ஆகிய மாவினங்கள் பாவிக்கப்பட்டன அரிசிமா முழுவதும் தவிட்டுப் பற்றுள்ளதாக விருந்தது. எருமை நெய், பசு நெய்கள் பலகாரங்களுக்கு உபயோகிக்கப்பட்டன. பிற்காலத்தில் தேங்காய் நெய் சேர்க்கப்பட்டது. எண்ணெய்ப் பணியாரம், எள்ளுப்பணியாரம், வாரப்பம், குலுக்கச்சுப் பணியாரம், சிப்புப்பணியாரம், குழல் பணியாரம், சோவிப் பணியாரம், இடியப்பப்பணியாரம், காப்பணியாரம், தன்பாகு, காய்ந்த பணியாரம், சக்கரப்பணியாரம் மற்றும் கொண்டைப்பணியாரம் என்பன சிற்றுண்டிகளாய்க் கொடுக்கப்பட்டன.

அரிசியால் வெண்சோறு, நெய்ச்சோறு, பாற்சோறு, புறியாணி, பாற்புக்கை என்பன சமைக்கப்படும். பிட்டு, ரொட்டி, பாலப்பம், இடியப்பம், உதிர்களி, வண்டப்பம் ஆகியனவும் தயாரிக்கப்படும். அரிசியும் ஒல்லியரிசியும் கலந்து ஒல்லிச் சோறும் ஆக்கப்படும். தேங்காய்ப்பாற் கஞ்சி, குறுணற் கஞ்சி, நோன்புக் கஞ்சி, மாப்புக்கை, பாணி, அவல் கஞ்சி, கொட்டைப்புக்கை என்பனவும் அரிசிமாவினாலான உணவுகளாகும்.

குரக்கன் களி, குரக்கன் கூழ், பிட்டு, குரக்கன் ரொட்டி, சோழகக் களி, சோழகப்பிட்டு, சோழக ரொட்டி, சோழக்குலை அவியல், சோழப் பொரிப் பிடி என்பனவும் உண்டிகளாய் உதவின. உணவுக்கேற்ற கறிவகைகளைத் தெரிந்து அவைகளைச் சேர்த்து உருசியாக உண்டு மகிழ்ந்தவர்கள் நம்முன்னோர். அவர்களது தெரிவிற் சிலவற்றை மாதிரிக்காகத் தருகிறேன். இடியப்பமும் இறால் சொதியும், பாலப்பமும் தேனும் (அப்பந்தருவேன் அதில தொடத் தேன் தருவேன்...
என்ற கவியை நோக்குக).

சோழப்பிட்டும், ரொட்டியும் சுரைக்காயும் இறாலும் சேர்த்த கறியும், சோறும் வெள்ளவிலைக்கறி இலை,விளாங்காய், சுங்கான் கருவாடு சேர்ந்த கடையலும். புறியாணியும் ஆட்டிறைச்சியும் சோறும் கட்டித்தயிர், பனங்கட்டி, இதரவாழைப்பழம், தேன் சேர்த்த கரையலும், சம்பா அரிசியும் எருமைப்பால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயறு, சீனி, கற்கண்டு சேர்த்து ஆக்கிய புக்கையும் சோறும் இறுல் நாடங்காய், வெண்டிக்காய், கத்தரிக்காய் சேர்ந்த கறிகளும் இன்னோரன்ன நளபாகத்தை நன்கு தெரிந்து வைத்திருந்து அவற்றைத் தம் சந்ததியினருக்கும் காட்டிக்கொடுத்த சிறப்பு நம் மூதாதையரைச் சாரும்.

பச்சை அரிசித் தவிட்டால் தவிட்டுக் கொழுக்கட்டை அவித்து அவற்றைத் தம் பிள்ளைகள் வேண்டிய நேரம் எடுத்துத் தின்னக் கூடியதாக பெரிய மிடாவில் போட்டுவைப்பர். பிள்ளைகளின் உடல் நலத்திற்கான உணவு இது என்பது முற்றிலும் பொருத்தமானது. பெண்களின் கர்ப்ப காலத்தில் உறவினர்கள் குறுனல்சோருக்கி, பொடிக் கருவாடு, புளியம்பூச் சேர்த்த சுண்டலுடன், கமுகம் கோப்பத்தையிற் கட்டி அவர்களுக்கு உண்ணக்கொடுப்பதும் ஒரு மரபாகக் கொள்ளப்பட்டது. சூலுற்ற பெண் இக்காலகட்டத்திற் கொண்டிருக்கும் பிரத்தியே கப் பெருவிருப்பான உணவாக இந்தச் சோறும் சுண்டலும் கருதப்படுகிறது. தவிர, குடும்ப இசைவும், நெருக்கமும், வாஞ்சையும் இதன் மூலம் வளர்க்கப்படுவ தும் பிறிதொரு காரணியாகும். இதைத்தவிர பலர் கருவுற்ற பெண்ணுக்கு வகைவகையான தீவனங்களையும் கொண்டு வந்து கொடுத்து மகிழ்விப்பர். அவை அப் பெண்ணின் மசக்கை கால உணவாதலால் அவை சுவையிலும் மணத்திலும் கூடிய தரமுள்ளவையாக இருப்பதும் ஒரு விசேடமாகும்.

விருந்துபசாரம்: கலியாணம், சுத்னு (விருத்த சேதன)ச் சடங்கு, மவ்லூது (நபிகள் நாயகம் ஸல் அவர்களின் சிறப்புப் பாடல்) கத்தம் பாத்திஹா, தலைப்பாத்திஹா, நேர்ச்சை ஆகியவற்றின் போது விருந்துபசாரம் அளிக்கப்படும். அவை சில வீடுகளில் பெரிய அளவிலும் வேறுசில வீடுகளில் சிறிய, நடுத்தர அளவுகளிலுமிருக்கும். அவைதவிர ஏழைகள், அனாதைகளுக்கும் விருந்தளிக்கப்ப டும். மரண வீடுகளுக்கு உறவினரால் ஏழு நாட்களுக்கு உணவு சமைத்துக்கொண்டு கொடுப்பதும் வழக்கமாகும். மரண வீட்டில் மூன்றும், ஏழாம், 20ஆம், 31ஆம், 40ஆம், 100ஆம் நாள்களில் மற்றவர்களுக்கு உண்டியளிப்பர். 40ஆம் நாளில் பெரிய அளவினதான ரொட்டியும், எண்ணெய்ப் பணியாரமும் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படும். 100ஆம் கத்தத்தன்று பெரு விருந்து படைக்கப்படும். தம் வீடுதேடி வருவோரை வரவேற்று அவர்கள் சுவையான உணவை வயிறார உண்ணச் செய்யும் மரபு வாழையடி வாழையாக இங்கு பேணப்பட்டு வந்துள்ளது.

சின்ன முகத்துவாரம முறிந்து களபபு நீர் கடல்நீரோடு வேகமாய்பபாய்ந்து கலக்கும் வெள்ளப் பெருக்குக் காலங்களில் பலகுடும்பத்தார் ஒருங்கிணைந்து வண்டிகளில் சென்று அங்கிருந்த பெரும் பற்றைக் காடுகளுக்குள் உணவு சமைப்பதும் மகிழ்ச்சியான சிறு உலாவாகக் கொள்ளப்பட்டது. அங்கு பிடிக்கப்படும் பெரிய மணலை, செத்தல், முருக்கை, பாலை, கொக்கிச்சான் ஆகிய மீன்கள் கறி சமைக்கவும் உளுவை மீன் சுண்டலுக்கும் உபயோகிக்கப்படும். அந்நேரம் கடற் குளித்துவிட்டு இவ்விசேட உணவைக் கூட்டாக உண்டு மகிழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன முகத்து வாரம் முறிந்தோடும் சந்தர்ப்பம் மிகக்குதூகலமாய் இருக்கும். அங்கு பல இடங்களில் வண்டிகள் காணப்படும். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் கடற்கரையில் ஓடி விளையாடுவதும், தோணிகளில் உல்லாசமாய் போவதும், ஏராளமான மீன்பிடிகாரர் ஆங்காங்கே வலைகளை வீசி மீன்பிடித்துக் கொண்டிருப்பதும், மீன்கள் வீதிகளிலே துள்ளிக்குதித்து சப்புத்தண்ணியில் சிறு நீச்சலடிப்பதும்கண் கொள்ளாக்காட்சியாகும். களப்பு நீரோடும் ஒலி, கடலின் கொந்தளிப்புச் சத்தம், காற்றின் பலமான ஓசை, பிள்ளைகளின் ஆரவாரமான ஆனந்தக்குரல் ஆகியவை ஆங்காங்கு கேட்டவண்ணமிருக்கும். சிறுவர்பலர் வரிசையாகக்களப்போரங்களில்நின்று தூண்டில் போட்டுக் கொண்டிருப்பதும் அழகான காட்சியாகும். மீன் விற்பனையாளர் முகத்துவாரத்தில் மீன்களை வாங்கிக் கூடைகூடையாகக் காவி வருவதையும் பெரும்பாலும் அங்குகாணலாம். சிறுவர் கடற்கரை மணலில் சிற்றில் அமைத்து, விளையாடி மகிழ்வர்.

இப்படியான உல்லாச உணவுகளை உண்டும் இடங்களாக வயல்கள், சாகாமம்குளம், இறக்காமம் வில் கடற்கரை, காடுகளிலுள்ள ஆற்றோரங்கள், ஆரைப்பற்றை யோரங்கள், இலுக்குச் சேனைக்குளம் மற்றும் இயற்கை யெழிற் காட்சிச் சூழல்கள் ஆகிய இடங்களை நாம் முன்னோர் பயன் படுத்தியுள்ளனர். தாமும் தம் சுற்றமும், அயலவரும், மற்றோரும் உண்டு, உடுத்து, இறைவழிபாட்டில் நின்றொழுகி மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதில் அவர்கள் காட்டிய அக்கறையும், அவர்தம் செயற்பாடுகளும் நமக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

பட்டக்கலியாணம் :- கல்வித்துறையில் பட்டதாரிகளாக வெளியேறுபவர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடைபெறுவது வழக்கம். முற்காலத்தில் வேறொருவகையான பட்டம் பெற்ற விழா நடைபெற்று வந்துள்ளது. அதற்குப் பட்டக்கலியாணம் என்று பெயர். ஒரு பிள்ளை மார்க்கக் கல்வியைக்கற்று, குர்ஆன் முப்பது ஜுஸ் (அதிகாரம்) வையும் ஓதிமுடித்து, மூன்று மவ்லிது, தலைப்பாத்திஹா, புர்தா, வித்ரிய்யா, தொழுகையடவு ஆகியவற்றைப் பாடமிட்டுத்தேறிய போது,

சீனடி, சிலம்படியில் தேர்ச்சிபெறும் போது, களினம்பு (பொல்லடி) விளையாட்டு, வைத்தியத்துறைத் தேர்ச்சிகள் பெற்ற போது படடக்கலியாணம் எனும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை நடாத்துவர். தவிர தென்னைமரத்திலிருந்து முதற்பாளை வெளியாகும் போது, ஒருவர் கல்வீடுகட்டி முடிக்கும் போது, வேறு செயற்கரிய செயல்களைச் செய்யும் போது, பல்வகைப் புலமை தேர்ச்சியின்போதும் இந்நிகழ்ச்சி நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் அழைக்கப்பட்டு அவர்களுக்கு விருந்து வைபவம் நடைபெறும். விருந்துண்டோர் உரிய திறமையாளரை வாழ்த்தி அவருக்குப் பலபரிசில்களையும் வழங்கி மகிழ்விப்பர்.

அக்காலத்தில் கல்வீடுகள் இல்லை. தப்பித்தவறி யாராவது மூன்றறைகளில் ஒரு வீட்டைக் கட்டினால் அது செயற்கரிய செயலாகக் கருதப்பட்டு அன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பரிசிலாக வீட்டுபயோகப் பொருள்கள், தளபாடங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. தென்னை மரம் பாளை தள்ளினால் அப்பாளைக்கு மணிக் கோர்வை அணியப்படும். பாளையின் மேல் மஞ்சள் பூசப்பட்டுப் பெண்கள் சேர்ந்து ஆரத்தியெடுத்து, குரவையிட்டு, வெடி சுட்டுச் சிறப்புச் செய்வர். ஒருவர் முதன்முதல் வண்டி மாடுகட்டிக் காட்டுக்குப் போய்க் கம்பு, மரம் என்பவற்றை ஏற்றிவந்தாலும் அப்படிப்பட்டவருக்கும் இச்சடங்கு நடைபெறும். அக்கம்புகளை அல்லது மரத்தை ஒரு சொந்தக்காரர் கூடிய பணங் கொடுத்து வாங்கி அவரை ஊக்குவிப்பார்.

பெரும்பாலும் சிறப்புக்குரியவர் மீது ஆலங்காய், அரசங்காய் எனும் சிறு அளவாகச் சுடப்பட்ட பலகாரத்துடன், நெற்பொரி, தென்னம் பூ, கொடிமல்லிகைப் பூ, சரிகைக் கடதாசித் துண்டுகளைச் சேர்த்து அவரது தலையிற் சொரிவர். அந்நேரம் உறவுமுறையான பெண்ணொருவர் அவருக்கு ஆரத்தி சுற்றுவார். குரவைகளும் முழங்கும்.

பெண்மாப்பிள்ளைக் கலியாண விளையாட்டும் நடைபெற்றது. சீலைத்துண்டுகளால் பெண்ணும், மாப்பிள்ளையும் செய்யப்பட்டுக் கண்களுக்குக் குன்றி (குண்டு) மணி பதிக்கப்படும். சுற்றத்தார் சேர்ந்து இவ்வைபவத்தில் கலந்து சிறுவர்களை மகிழ்விப்பர். சிற்றுண்டியும் வழங்கப்படும். பெண் குழந்தைகளுக்குக் காதுகுத்தும் சடங்கும் அக்காலத்தில் நிகழ்ந்துள்ளது. இதிற் சுற்றஞ்சூழப் பலர் கலந்துகொள்வர். முதுமகளொருவரால் குழந்தைக்குக் காதுகள் குத்தப்படும்

ஹதீது (சமயச் சொற்பொழிவு) சொல்லல்: பெரும்பாலும் நோன்பு காலங்களில் (றமழான் மாதம்) ஹதீது வைபவம் நிகழும். மார்க்க அறிஞர்கள் சமய சம்பந்தமான கடமைகள், இஸ்லாமிய வாழ்க்கை முறைகள், வரலாறுகள், இம்மை, மறுமை வாழ்வு பற்றிய விபரங்கள், ஹறும், ஹலால் சம்பந்தப்பட்ட விளக்கங்கள் ஆகியனபற்றி விளக்குவார்கள். அதிக அளவில் பெண்கள் திரண்டு வருவர். ஆண்கள் பைத்துகள் படிப்பார்கள். பள்ளிவாசல், வீடு பொதுநிலையம் மற்றும் . அறபு மத்ரஸாக்களில் ஹதீது நடைபெறும். சில பெண்கள் நேரகாலத்தோடு சமுகந்தந்து ஹதீதுக்களரிக்குப் பாய் விரித்தல், ஆலிமின் மேசைக்கு வெள்ளை விரித்தல் போன்ற சபையலங்கார வேலைகளைச் செய்வர். றமழான் தலைப்பிறையிலிருந்து 26 வரை இது நிகழும். ஒரு ஆலிம் ஹதீது சொல்லும் இடத்துக்கு வேறு பல உலமாக்கள் இடையிடையே சமுகந்தந்து அவருக்கு உதவியாகச் சில நேரம் ஹதீது சொல்லி அவரைக் களைப்பாற்றுவர்.

ஆண்கள் பெண்களைப் பிரித்துத்.திரைச் சீலை கட்டப்பட்டிருக்கும். திரைநடுவில் ஆலிம் நின்று மார்க்கவுரை நிகழ்த்துவார். இடையிடையே பைத்துப் படித்தல், ஸலவாத்துச் சொல்லல், பதங்கள் படித்தல் நடைபெறும். காலை ஒன்பது மணியிலிருந்து ஒரு மணிவரை இது நடைபெறும். றமழான் 13 அல்லது 14இல் பரிசுத்த நாயகி பாத்திமா (றழி) அவர்களின் வரலாறும் வபாத்தும் (மரணம்) பற்றிய கதை சொல்லப்படும். அன்று சபையோரிடம் காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிக்கப்படும். பெண்களே மறுமையில் ஷபாஅத் செய்யும் உரிமையைப் பாத்திமா நாயகி (றழி) பெற்றிருப்பதால் மகளிர் பலர் மிக ஆர்வத்தோடும் பயபக்தியுடனும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வர். பெரும்பாலானோர் வபாத்துப்பற்றிய செய்தி சொல்லும் போது அழுது வடிப்பார்கள்.

அன்று ''மணமங்களமாலை'' எனும் நூலின் சில முக்கிய பகுதிகள் படிக்கப்படும். இதற்கெனச் சிலர் சமுகமளிப்பார்கள். கடந்த பல வருடங்களின் முன்பு ஹதீதுக் களரியில் மணமங்கல மாலை பாடுவதில் பிச்சைராவுத்தர், பெரிய மனுசர் என்பவரது மகன் இப்றுஹிம் சாகிபு, சீனி முகம்மது, ஓடாவியார் மீ.ம. பிச்சக்கவியார் அப்துல்கபூர், முகம்மது ஷரீப் வைத்தியர் (சரிவுப்பரிகாரி) சள்ளல் போடியார் மகன் முஸ்தபா, மு.இ.க. முகம்மதிப்றுஹிம் (தங்கப்புள்ளப் பெத்தாட மகன்) மு. முகம்மது மீராசாகிபு (குங்குமர் பரிகாரி மகன் மூத்தவர்) இ.மு. முகம்மது மீராசாஹிப் (சீனிமுஹமத் மனேஜர்) ஆதம் கண்டு ஹாஜியார் முகம்மது தம்பி, செ.அ.ம. அப்துஸ்ஸமது மவ்லானா (மவ்லானாத் தம்பி) ஆகியோர் மிகவும் பெயர் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். விசேட அழைப்பின் பேரில் அவர்கள் ஹதீதுக்களரிக்குச் சென்று மாலை பாடுவர்.

ஹதீதுகள் பல இடங்களிற் சொல்லப்படும். ஒரு இடத்தில் ஹதீது முடியும் நாளில் மற்ற இடங்களில் ஹதீது சொல்லப்படமாட்டாது. எனவே பல இடங்களிலும் அதுவரை பிரிந்து கேட்டவர்கள் திருக்கலியாணம் என்று சொல்லப்படும் கடைசி நாளன்று எல்லோரும் ஒரு இடத்திற் கூடி அந்நிகழ்ச்சியிற் பங்குகொள்வர். ஒரு இடத்தில் ஹதீது முடியும் நாளன்று பெருங்கொண்டாட்டமாய் இருக்கும். அவ்விடத்தைச் சுற்றி மிட்டாய்க் கடைகள், பாத்திரக்கடைகள், விளையாட்டுப் பொருட்கள் என்பன காணப்படும். அன்று அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மறுமை நாளில் நடைபெறவிருக்கும் திருக்கலியாணம் பற்றிய விவரங்கள் சொல்லப்படும்.

இச்சொற்பொழிவின் நடுவில் இடையிடையே திருக்கல்யாணப் பாடல்களான சுந்துசுஇஸ் தபறக்கினுல்...., சோடித்தாடையாபரணஞ் சூட்டுவார் மறியம் ஆசியாதமை ... என்னும் பாடல்களும் மணமங்களமாலை, சீருப்பாடல்கள், தக்பீர், ஸலவாத்துகள் முழங்கும். ஹதீது நிறைவு நாள் சிறப்பும் மகிழ்வும் மிக்க பெருநாள் போன்றிருக்கும். இறுதிக்கட்டத்தில் காணிக்கை அறவிடப்படும். பள்ளிவாசல் மரைக்காயர்மார், ஊர்ப் பிரமுகர்கள், ஆலிம்கள் முதலியோர் சமுகமாயிருப்பர். ஹதீது சொன்ன ஆலிமுக்கு சாறன், சால்வை,வெள்ளைச்சேலை, சாரி என்பன அன்பளிப்பாகப் போடப்படும். அரிசியும் சேரும், சிலர் மாடு, ஆடுகளும் அன்பளிப்பாக வழங்குவர். ஈற்றில் துஆ ஓதியதும், ஸலவாத்து ஒலியுடன் இவ்வைபவம் நிறைவுறும். அங்கு சேர்ந்தவற்றை ஓலைப்பெட்டியில் வைத்து வெள்ளைத்துணியால் மூடி அங்கு சமுகந்தந்த மக்கள் சேர்ந்து ஆலிமை அவர் வீட்டிற்குக் கண்ணணியத்துடன் பைத்துகள் பாடிக்கூட்டிச் செல்வர்.

அங்கு வைத்து எல்லாவற்றையும் ஆலிமின் வீட்டில் ஒப்படைப்பார்கள். கூட்டிச் சென்றவர்கள் ஆலிமிடம் விடைபெற்றுத்திரும்புவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால மக்கள் சமயத்தை அறிந்து கொள்வதிற் காட்டிய அக்கறை, அதற்காக அவர்கள் பட்ட சிரமங்கள், சமய குரவரைக் கண்ணியப்படுத்துவதில் அவர்கள் பெற்ற பூரிப்பு என்பன அம்மக்களின் செழுமையான விழுமியங்களை எடுத்துக்காட்டும் இது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி செவியேறல் கல்வியும் வளர்ச்சிபெற அவை வாய்ப்பாகவும் அமைந்துள்ளன.

மவ்லிது ஓதுதல் :- றபீஉல்அவ்வல், றபீஉல் ஆகிர், ஜமாதுல் ஆகிர் மாதங்களில் முறையே சுப்ஹான மௌலிது, முஹ்யித்தீன் மவ்லிது, மீராசாஹிப் ஆண்டகை மவ்லிது என்பன வருடந்தோறும் பள்ளிவாசல்களில் ஓதப்பட்டு வந்துள்ளது. அவை மூன்று மவ்லிதும் தலைப்பிறையிலிருந்து 12, 11, 10 நாள்கள் என்ற அடிப்படையில் ஓதப்பட்டன. தலைப்பிறைக்கு முதனாள் பள்ளிவாசல் அதிகாரி ''ராவைக்கு நாயகத்திர மவ்லூதாம்: எல்லோரையும் அவரவர் நார்சாக்களுடன் பள்ளிவாசலுக்கு வரட்டாம் கூய்... என்று பெருஞ்சத்தமாய்க் கூவிடல் மூலம் அவ்வப்பள்ளி ஜமாஅத்தாருக்கு அறிவிப்பர். மவ்லிது கடைசியிலும் கடைசி நார்சாபற்றி இப்படியானதொரு அறிவித்தல் கொடுக்கப்படும். தலைப்பிறை, கடைசிப்பிறைகளில் ஊர் நார்சாக்களான ரொட்டி, பலகாரம், நெய்ச் சோறு என்பன பகிரப்படும். ஏனைய நாள்களில் குடிமரைக்காயர்மாரால் அவரவருக்கு ஒதுக்கப்பட்டதினங்களில் நார்சா வழங்கப்படும். மஃறிப் தொழுகைக்குப்பின் மவ்லிது ஓதத்தொடங்கி இஷாவுக்குப் பின்முடிப்பர். இஷாத் தொழுது முடிந்ததும் நார்சா பங்கிடப்படும்.

கவ்துல்அஃலம் முஹ்யித்தின் அப்துல் காதிறு ஜீலானி (கத்தசல்லாஹு சிற்றுஹுல் அஸீஸ்) அவர்களின் பேரால் ஓதப்படும் மவ்லிது முடிந்து பதினோராம் நாள் பகலில் அன்னாரின் பேரால் கத்முல்குர் ஆன் ஓதித் தாமாம் செய்யப்படும்.

முற்காலத்தில் றபீஉல் அவ்வல் மதம் பன்னிரண்டு நாள்களும் அதிகமான வீடுகளில் மவ்லிது ஓதும் பழக்கமும், வேறுசிலர் பெருவிருந்தளித்து ஓரிரவில் ஓதும் வழக்கமும் இருந்தது. அதே போன்று சாதாரண அளவில் மற்று மவ்லிதுகளும் சில இடங்களில் ஓதுவார்கள். பெரும்பாலும் ஏதாவதொரு வில்லங்கம் நீங்க வேண்டு மென்று நேர்ச்சை செய்பவர்கள் இவற்றை நடைமுறைப்படுத்துவர்.

நேர்ச்சை வைத்தல்: நோய்கள் தீர, வழக்குகளில் வெற்றிபெற, வேறும் துன்பங்கள் தீர நேர்ந்து வைத்து ஸலாத்துந்நாரிய்யாவை 4444 தரம் 11 உலமாக்களைக் கொண்டு ஓதுவிப்பார்கள். நேர்ச்சை செய்யும் வழக்கம் முற்காலத்தில் பெருமளவில் காணப்பட்டன. ஒரு வழக்கு நீதிமன்றில் ஏறியதும் வழக்கு வென்றால் மாடு அறுத்து சதக்காக் கொடுப்பதாகவும் நோய்களுக்கு கோழி, ஆடு, மாடுகள் நேர்ந்து அவற்றை ஏழைகளுக்குக் கொடுப்பதாகவும் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களுக்கு பலியிடுவதாகவும் நேர்ந்துவிடுவர். ஹயாத்து (ஹலிறுந்) நபி (அலை) அவர்களுக்கு நேர்ந்து நிய்யத்து (பாற் புக்கை) ஆக்கிக் கொடுத்தல், ஸெய்ன் மவ்லானா, பீசபீல் அவ்லியா, முஹ்யித்தீன் ஆண்டகை ஆகியோருக்கு நேர்ந்து ரொட்டி, பலகாரம், பழவகைககள் கொடுத்தலும் இப்பகுதி மக்களின் வழமையாகும்.

சிலர் இறைநேசர்களான வலிமார்களின் கபுறடிக்குச் சென்று நேர்ச்சையை நிறைவேற்றுவர். கபுறடியிலுள்ள விளக்குக்குத் தேங்காய் நெய்யூற்றல், கொடிமரத்துக்கு மண்கூட்டிவிடல், கபுறடியில் உருளுதல், எரியும் விளக்கிலுள்ள நெய்யை எடுத்துத் தலைக்குத் தேய்த்தல் என்பன போன்ற செயல்களும் இடம்பெற்றுள்ளன. சிலர் மரங்களில் முதன்முதற் காய்த்த காய்கள், கனிகளை நேர்ந்து கொடுத்துவிடுவர். அம்மனுக்கும் படையல்கள் படைத்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவோருமுளர். சமய அறிவுக் குறைவினாலும் போலி நம்பிக்கையினாலும் சில முஸ்லிம் மக்கள் சமய முரண்பாடான சில நேர்த்திக்கடன்களைக் கொடுத்துவந்துள்ளதும் இங்கு சுட்டப்படுகின்றது..

கந்தூரி வகைகள்: காலத்துக்குக்காலம் தேவையான சந்தர்ப்பங்களில் இங்கு கந்தூரி (பேரன்னதானம்) கொடுப்பது வழக்காகும். பள்ளிக்கந்தூரி, வட்டைக்கந்தூரி, பலாய்க் கந்தூரி, வலிமார் கந்தூரி, மழைக் கந்தூரி என இவைகள் பலதரப்பட்டனவாக இருக்கும். கந்தூரித் தினத்தன்று ஊரில் பெருநாட் கொண்டாடுவது போன்ற சிறப்புகள் காணப்படும். எங்கும் மக்கள் மகிழ்ச்சியோடு வேலைகளில் ஈடுபடுவர்.

பள்ளிக் கந்தூரி: பிரதி வருடமும் குத்புல் அக்தாப் கவ்துல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸல்லாஹு சிர்ரஹுல் அஸீஸ்) ஆண்டகை அவர்களின் பெயரில் இக்கந்தூரி கொடுக்கப்படும். நீண்டகாலமாக பெரிய பள்ளிவாசல், சின்னப்பள்ளிவாசல்களிலேயே கந்தூரி கொடுபட்டு வந்தது. சில வருடங்களின் பின் புதுப்பள்ளிவாசலும் சேர்ந்து மூன்று பள்ளிவாசல்களிலும் கொடுக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட தினத்தில் பள்ளிவாசல் மரைக்காயர்மார் சபையின் தீர்மானப்படி மாடுகள் அறுக்கப்படும். ஏற்கனவே இதற்கென்று பள்ளிவாசல்களில் பலபேர் சேர்ந்து எண்ணெய்ப்பணியாரம் சுடுவர். பல பெண்கள் பயபக்தியுடன் இதில் ஈடுபடுவர். விறகுக் கட்டைகள் பல வண்டிகளில் ஏற்றிவரப்படும். வாழைக்குலைகளும் ஏராளமாகச் சேகரிக்கப்படும். கந்தூரியின் ஆரம்பமே அலாதியானது. கந்தூரி கொடுக்கத் தீர்மானித்ததும் கோளாவிலிலிருந்து பறை (முரசு) கொட்டுவோர் தருவிக்கப்படுவர். அவர்களுக்காக அமைக்கப்பட்ட குடிசையிற் தங்கிப் பறைகொட்டுவர். இவர்கள் வருகையிலிருந்தே ஊர்கலகலக்க ஆரம்பிக்கும். அரிசி, தேங்காய், காணிக்கைகள் சேர்க்க மரைக்காயர்மார்களோடு அவர்கள் முரசடித்துச் செல்வர். தெருத் தெருவாய்ப் பறை கொட்டி வலம் வருதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயமாகும். சேகரிக்கப்பட்ட பொருள்கள் பள்ளிவாசலில் வைக்கப்படும்.

கந்தூரி தினத்தில் பள்ளிவாசல்களுக் கருகில் மிட்டாய்க் கடை, பாத்திரக்கடை, விநோதப் பொருட்கடை மற்றும் பல்வேறு சாமான்களைக் கொண்ட கடைகள் அலங்காரமாய்க் காட்சியளிக்கும். அதிக மாடுகள் அறுக்கப்பட்டுக் கறி சமைப்பதுடன், அவணக் கணக்கில் சோறாக்கப்படும். மக்கள் சாரிசாரியாய்த் திரள்வர். அயலூர்ச் சனங்களும் வருகை தருவர். லுஹர் தொழுகைக்குப்பின் நார்சா வழங்கல் ஆரம்பித்து முடிவுறும். நார்சாக் கொடுப்பதற்கென ஏராளமான தாமரை இலைகள் வண்டிகளிலேற்றி வரப்படும். இந்தச் சோறுகறிகளை எல்லோரும் விரும்பி உண்பர். அடுத்த நாள் முஹ்ரிபுக்குப்பின் ஆண்டவர் பெயரில் கத்முல் குர்ஆன் தமாம் செய்யப்பட்டு பலகாரம், வாழைப்பழம் மற்றும் பலகாரவகைகள் பங்கிடப்படும். பெரியோர், சிறியோரென்ற பேதமில்லாமல் எல்லோரும் இவ்வைபவங்களின் போது பெரு மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

பறைகொட்டும் வழக்கம் 1947 இல் நிறுத்தப்பட்டது. அதன்பின் சின்னப்பள்ளிவாயலில் இருந்த ''நக்கரு'' என்னும் பெரிய முரசை வண்டியில் ஏற்றி இரு தடிகளால் அதைக் கொட்டி ஓசையெழுப்பித் தெருத் தெருவாய்ச் சுற்றிவந்து கந்தூரிக்குப் பொருள், பணம் ஆகியன வற்றைச் சேகரிக்கும் ஒரு வழக்கமும் பிற்காலத்தில் இருந்தது. சின்னப்பள்ளி ஜமாஅத்துக்குட்பட்ட பகுதிகளில் மாத்திரமே நகரா ஊர்வலம் சென்று வந்தது. பொதுவாகக்கூறின், சோறுகறிகளின் மணமும், மக்களின் கலகலப்போசையும், சிறுவர்களின் குழலூதும் ஒலியும், பொருள்கூறி விற்போரின் பெருஞ்சத்தமும் கந்தூரி முடிவுறும் வரையும் அநுபவித்து ஆனந்தப்படக்கூடியதாய் அமைந்திருக்கும்.

பொருள்கள் எஞ்சியிருந்தால் அவற்றை ஏலத்தில் விற்றுப் பள்ளிவாசற் கணக்கில் பணத்தைச் சேர்த்துக் கொள்வார்கள்.

வட்டைக் கந்தூரி: வேளாண்மை விளைந்ததும் வயற் சொந்தக்காரப் போடிமார்கள் எல்லோரும் சேர்ந்து பணஞ்சேகரித்து வட்டையிலுள்ள புரையொன்றில் சோறு, கறி சமைத்துக் கந்தூரி கொடுப்பர். பெரும்பாலும் மர்ன், மரை இறைச்சியே இதற்கு உபயோகிக்கப்படும். மவ்லூது ஓதியபின் இக்கந்தூரி பகிரப்படும். வயலில் வேலை செய்வோர், பொதுமக்கள் ஆகியோர் இதிற் பங்குபற்றுவர்.

பலாய்க் கந்தூரி:சில காலங்களில் ஊர் மக்களிற் பெரும்பாலானோர் காய்ச்சல், வைசூரி, சீதபேதி முதலான நோய்களாற் பீடிக்கப்பட்டு வந்துள்ளனர். இதை பலாய் (பெருங்கேடு) என்று சொல்வர். இது அகல வேண்டிப் பலர் சேர்ந்து சிறிய அளவில் ஒரு கந்தூரி கொடுப்பர். பெரும்பாலும் பள்ளிவாசல்களிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்ச்சி நடைபெறும். இரவு நேரங்களில் தெருத் தெருவாய்ப் பல பாடல்களைப் பாடிக்கொண்டு சனக்கூட்டம் வரும். இப்பாடல்கள் பலாய் நீங்கும் பிரார்த்தனைகளைக் கருவாகக் கொண்டிருக்கும். ஏறத்தாழ ஒரு கிழமை இப்பிரார்த்தனை நீடிக்கும். ஈற்றில் ஒரு பகல் நேரத்தில் நார்சா வழங்கப்படும். காகங்களுக்கும் ஓரளவு இச்சோறு போடப்படும். காகங்களுக்கு உணவூட்டினால் மிடி நீங்கும் என்றொரு ஐதீகம் மக்களிடையே அக்காலத்தில் இருந்தது.

வலிமாரின் கந்தூரி: அக்கரைப்பற்றுப் பெரியபள்ளிவாசலில் அடங்கப்பட்டிருக்கும் பீஸபீல் (செய்னுல் ஆபித்தீன்) வலி (றஹ்), சின்னப்பள்ளிவாசலில் அடங்கப்பட்டிருக்கும் சின்ன மவ்லானா (அப்துஸ்ஸமத்) வலி (றஹ்), பட்டியடிப்பிட்டிப் பள்ளிவாசலில் அடங்கப்பட்டிருக்கும் முஹம்மத் மவ்லானா வலி (றஹ்) ஆகியோர் பேரில் காலத்துக்குக்காலம் கந்தூரி கொடுக்கப்பட்டு வந்தது. இவர்கள் பேரில் கத்தம் ஓதி தமாம் செய்யப்பட்டு ஈற்றில் விருந்து வழங்கப்பட்டது.

மழைக் கந்தூரி: வேளாண்மை மழையின்றி வாடிக்கொண்டிருக்கும் போது போடிமார் சேர்ந்து வயலுக்குள் கந்தூரி கொடுப்பர். அதற்காக இங்கிருந்து பள்ளிவாசல் கத்தீப், லெப்பை, முஅத்தின், பொதுமக்கள் ஆகியோர் வட்டைக்கு வரவழைக்கப்பட்டு மழை பைத்து, மவ்லூது என்பவை ஓதப்பட்டு மற்றும் பிரார்த்தனைகளும் செய்யப்படும். பிரார்த்தனை முடிவில் பெரும்பாலும் மழை சோனாமாரியாய்ப் பெய்வதும், அதைக் கண்டு மக்கள் மெய்சிலிர்த்து அல்லாஹ்வைத் துதித்துக் கதறியழுவதும் சிறப்பான ஒரு நிகழ்வாகும். அந்த மழை வட்டை விளைவதற்குப் போதுமானதாயிருக்கும்.

கத்னாச் சடங்கு: இதைச் சுன்னத்துக் கலியாணம் (Circumcision) என்பர். இது ஒரு இஸ்லாமிய மதச்சடங்காகும். இவ்வைபவத்தைச் சில அம்சங்கள் தவிர்ந்த கலியாண வைபவம் போல் நடத்துவர். சுன்னத்துச் செய்யும் உஸ்தாமாமா என்பவர் உரிய சிறுவர்களை மாப்பிள்ளை போற் சோடிப்பார். முதலில் தண்ணீர் வார்க்கப்பட்டு பட்டுச் சாறன், பட்டுச் சேட், சரிகைத்தொப்பி என்பன சிறுவர்களுக்கு அணிவிக்கப்படும். பளபளக்கும் டங்காத் தாளாற் செய்யப்பட்ட கைவிசிறியொன்று இவர்களுக்குக் கொடுக்கப்படும். கண்ணுக்குச் சுறுமா இட்டப்படும். பெரும்பாலும் வெட்டியான்களின் முரசொலியின் மத்தியில் இச்சடங்கு நடைபெறும். விருந்துகள், சிற்றுண்டிகள் வழங்கப்படும். தேநீர், மற்றும் குடிப்புகள் அக்காலத்தில் இல்லை. காலை தொடக்கம் மாலை வரை உணவு மாத்திரமே கொடுக்கப்படும்.

ஆரத்தி, மருதோண்டி என்பவற்றை மச்சிமுறைக்காரப் பெண் வீட்டிலிருந்து கொண்டுவருவர். சுன்னத்து மாப்பிள்ளைக்கு அம்முறைப் பெண் மருதோண்டி போடுவார். அந்நேரம் ஆலாத்தி எடுக்கப்படும். ஒரு திரியை மாப்பிள்ளை வாயினால் ஊதி அணைப்பார். முறை மங்கையர், மற்றோர் சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரவையிடுவார்கள். வெடிகள் அதிரும். அதன் பின் மாப்பிள்ளையை வெள்ளை போட்ட ஆசனத்திலிருத்திச் சுற்றிவளைத்து உறவினரும் குடும்பத்தவரும் நின்று வெகுமதியளிப்பர். அதன்பின் நான்கு மணியளவில் மாப்பிள்ளையை வண்டியில் போடப்பட்டிருக்கும் இருக்கையில் இருத்திப் பள்ளிவாசலுக்குச் சென்று காணிக்கை போட்டு, துஆ ஓதி வருவர். சுன்னத்து வீடுகள் முரசொலி, குரவையொலி, பட்டாசு வெடியொலி, பிள்ளைகளின் ஆரவாரம், உறவினரின் மகிழ்ச்சியோசை ஆகியவற்றால் எந்நேரமும் கலகலப்பாய் இருக்கும். மாலையானதும் சுன்னத்து வைக்கும் நிகழ்வு ஆரம்பமாகும். அந்நேரம் கோலாட்டம் (பொல்லடி), சீனடி, செலம்படி, தக்பீர் முழக்கம் என்பன நிகழ்ந்துகொண்டிருக்கும்.

சுன்னத்து முடிந்ததும் பிள்ளைகளை, வெள்ளைச்சீலை தொங்கவிடப்பட்டு அதற்குள் படுக்கவைத்து நெஞ்சுவரை சீலையால் மூடுவர். அதிலிருந்து பிள்ளைகளின் புண் தாக்கப்படாமல் விடிய விடிய பலநாட்களுக்கு விழித்திருப்பார்கள். விழிப்பின் சோர்வு தெரியாமலிருக்கவும், பிள்ளைகள் தூங்காமலிருக்கவும் பஜனை, கொட்டிப்படித்தல், பாட்டுக்கச்சேரி, சிறுப்புராணப்பாடல், மணமங்களமாலை பாடல் போன்ற நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அதிற் கலந்து கொள்ளும் பங்காளருக்கும் பார்வையாளர்களுக்கும் பிட்டு, இடியப்பம் மற்றும் உறிர்களி எனும் உணவுகள் வழங்கப்படும்..

மூன்று நாட்களின் பின் எண்ணெய்ச் சீலை கழற்றல் எனும் ஒரு கருமம் நிகழும். அறுப்பு நுனியில் இச்சீலைத் துண்டு சுற்றப்பட்டிருக்கும். புளிய மரத்தின் இலையைக் கொதிக்க வைத்த நீரால் இச்சீலையை இளகச் செய்து மெல்ல மெல்லக் கழற்றி எடுப்பர். அக்காலத்தில் இதற்குரிய மருந்துகளில்லாததால் உள்ள செயல்முறை இதுவாகும். தண்ணீர்ச் சுரம் கட்டிப் புண் ஆறுதலிடும் என்ற காரணத்தால் மிக அரிதாகவே கொஞ்ச நீரும் பத்தியச் சோறுகறியும் கொடுக்கப்படும். சிரந்தியுணவுகள் முற்றாக நீக்கப்படும்.

பொதுவாகப் புண் ஆறியதும் ஏழாம் நாட் கழித்துக் குளிக்கவைப்பார்கள் பின் அதற்கெனச் சிறிய அளவில் பலகாரஞ் சுட்டுப் பள்ளிவாசலுக்குப் பிள்ளைகளைக் கூட்டிப் போய்ப் பாத்திஹா ஓதித் திரும்புவர். இப்பலகாரத்துக்கு அசர்ப்பணியாரம் என்று சொல்லப்படும். சுன்னத்தின் பின் பிள்ளைகள் தொழுகை, நோன்பு மற்றும் சமயக்கடமைகளைத் தவறாது கைப்பிடித்தொழுகுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்காமம் பள்ளிவாசல் உலா: இங்குள்ளவர்கள் பண்டு தொட்டு இறக்காமத்திலுள்ள சேகு அவ்லியா (றஹ்) அவர்களின் ஸியாறத்துக்குச் செல்லும் வழக்கமுடையோராய் இருந்துள்ளனர். அக்காலத்தில் பிணிதீர்க்கும் மருந்துகளில்லாமையும், தம் வாழ்நாளில் எதுவிதத் தடங்கலுமின்றி மகிழ்ச்சியாய் வாழவேண்டுமென்ற அவாவுமே பல வலிமாரின் அடக்கத்தலங்களுக்குச் செல்லும் காரணிகளாய் அமைந்துள்ளதாகத் தெரிகிறது. தவிர இவற்றிற்காகவும், வழக்காடு மன்ற வழக்குகளிலிருந்து விடுதலை பெறவும், மாடறுத்து சதக்காக் (தருமம்) கொடுத்தல், ஆவத்து ரொட்டி சுட்டுப் பங்கிடல், கத்தம், பாத்திஹா, மவ்லிது ஓதுதல், ஹயாத்து நபி அப்பா (ஹிழ்று நபி) அவர்களுக்குப் பல விதப் புக்கை ஆக்கிப் பகிர்தல் என்பன போன்றவற்றையும் செய்து வந்தனர்.

இறக்காமத்துப்பள்ளிக்குப் போகவென்று பெண்கள் ஏதாவதொரு காரணத்தைக் காட்டி நேர்ந்து வைப்பர். அந்நேர்ச்சையைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லாவிட்டால் நம் வாழ்வில் முறிவுகள் ஏற்படுமென்றும் தத்தமது கணவன்மாரை நம்பச் செய்வர். அதன்பின் பூரண நிலாக்கால இரவில் இறக்காமத்துப் பள்ளி செல்லும் சடங்கு ஆரம்பிக்கும். ஏற்கனவே நேர்ந்து வைத்திருந்த பல குடும்பங்கள் கூடி நாளொன்றைத் தேர்ந்து உலாவுக்குரிய ஏற்பாடுகளைக் கவனிப்பர். நார்சாச் சோறுகள், பலகாரவகைகள், அவல், பெரிய வாழைக்குலைகள், ரொட்டிகள் எனப் பல்வகை உணவுப் பதார்த்தங்களை இவர்கள் பெட்டிகளில் நிறைப்பர். பல வண்டிகள் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். பெரும்பாலும் கூடார வண்டிகளாகவே இவை காணப்படும். மாடுகளில் சலங்கை (சதங்கை)களும், மணியும் கட்டப்பட்டிருக்கும். பால்நிலவில் வெட்டியான்கள் பறையொலி யெழுப்பிக்கொண்டு முன் செல்ல அதையடுத்து வண்டிகள் வரிசையாகச் செல்வதுடன் உலா ஆரம்பிக்கும்.

அக்காலம் அக்கரைப்பற்றிலிருந்து இறக்காமம் செல்லும் வீதி வண்டி வழியாக மணல் வீதியாகவே இருந்தது. பெரியபள்ளிவாசலுக்கு அண்மையிலிருந்து இருபுறமும் அடர்ந்த காட்டினூடே இவ்வண்டிகள் செல்லும். மாடுகளின் மணி, சதங்கையோசை, பறையோசை, குருவிகளின் குரலோசை, சில்லூறு வண்டின் கடின ஓசை மற்றும் வண்டிக்காரர் மாறிமாறிப் படிக்கும் கவியோசை என்பன இவ்வுலாவைச் சோபையுறச் செய்துகொண்டிருக்கும். கருங்கொடித்தீவிலிருந்து எசங்கணிச் சேனையூடாகக் கலியாணப்பாலையடி நாவடி வில் எனும் இறக்காமம் நீர்த்தேக்கத்தை வளைத்துப் பள்ளிவாசலை யடைவதே முற்கால வழியாகும். கருங்கொடித்தீவுக் கவிஞர்களாகிய பெண்கள் பாடிய கிராமியக் கவிகளையும் இங்கு குறிப்பிடல் பொருந்துவதாகும்.

1. ''கச்சக்கொடித்தீவு கலியாணப் பாலையடி— வில்லூ வளைச்சி—வெருவேன் ஒண்ட மாளிகைக்கு''
2. சேகவுலியாவே செப்பமுள்ள சீமானே—அவர்ர வருத்தங்கள் தீர—வழிவகைகள் செஞ்சிடுங்கோ''
3. உசிருக்கு உசிர் வாங்கி ஒங்குட மாளிகைக்குக் கொண்டு வந்து—கட்டி இரிக்கேன்—நாதா என்ர கவலைகள் தான் தீருமெண்டு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எறக்காமத்து அவுலியாவே இரக்கமுள்ள சீமானே—எனக்கிக் குழந்தை கிடைக்க—கிருபை செஞ்சி காட்டிடுங்கோ''
5. என்ர சின்னவன் காக்காட செய்வினைகளையறுத்து—சுகம் காட்டும் சேகொலியே—அவர்ர தொல்லைகளும் நீங்கிடட்டும்.''

இப்படிப்பட்ட இன்னோரன்ன கவிகளும், வண்டிகளுக்குள்ளிருக்கும் பெண்கள் வழியிலே இடையிடையே ஒலி செய்யும் குரவைகளும் பிரயாணத்தை மேலும் உற்சாகப்படுத்துவனவாகவே அமையும்.

பள்ளிவாசலுக்குச் சென்றதும் பாத்திஹா ஓதி புாற்சோறு வழங்கப்படும். பாலை பழுக்குங் காலங்களில் அதிகமாக இப்பிரயாணத்தை ஒழுங்கு செய்வர். அங்கிருந்து வீடு திரும்பும் போது தாம் கொண்டு சென்ற ஓலைப்பெட்டிகளில் பாலைப்பழங்களை பறித்து நிறைத்து வருவர். இது தவிர கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல், அட்டாளைச்சேனை மஸ்தான் சாஹிபு கபுறடி, மல்கம்பிட்டிப் பள்ளி, அளுப்பத்தை (எபியாறம்), தப்தர் ஜெய்லானி, பாவாதமலை (Adam's Peak), கதிர்காமம், காத்தான்குடி குழந்தம்மா கபுறடி மற்றும் செய்ன் மவ்லானா (றஹ்) கபுறடி முதலியவற்றிற்கும் அவர்கள் சென்று வரல் ஒரு முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. அக்கால மக்களின் பாரம்பரிய ஆசாரங்களில் சமய சம்பந்தமான பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் இவ்வாசாரங்கள் மூலமாக அம்மக்கள் மகிழ்ச்சியான பொழுதுபோக்கு, தோழமையுணர்வு, பக்திப்பரவசங்கள், கட்டுப்பாடான ஒழுக்கநெறி மற்றும் விழுமியங்கள் நிறைந்த விருந்தோம்பல் ஆகியவற்றை வளர்த்து வந்துள்ளதை நாம் அறிந்து கொள்ளல் சாலும்.

சில செயற்பாடுகள்: வேளாண்மை விளைந்து முதன்முதல் எடுத்து வந்த நெல்லைக் குற்றிய அரிசியில் சோறாக்கி, அல்லது புக்கை ஆக்கிப் பலருக்கு உண்ணக் கொடுத்துக் கத்தம், பாத்திஹா ஓதிய பின்பே மற்ற அரிசிகளை உபயோகிப்பர். இதற்குப் ''புதிர்படைத்தல்''என்று பெயர். அதே போன்று மரங்களின் முதற் காய், முதற் பழங்களைக் கொடுத்துப் பாத்திஹா ஓதிய பின்பே மற்றவைகளைப் பாவனைக்குக் கெடுப்பார்கள். ஹயாத்துநபிக்கு ஏழு இனிப்புக் கூட்டி நிய்யத்துக் கொடுப்பர். ஏழு கிணற்றில் கொஞ்சங் கொஞ்சமாக நீர் சேகரித்து மந்திரித்து நோயாளிக்குக் கொடுப்பர்

அடிக்கடி ஏழு, 10, 12 பேருக்கு அன்னதானம் வழங்குவர். கெடுதிகள் விலகவும், நோய் திரவும், ஆபத்துக்கள் நீங்கவும் இப்படிச் செய்யப்படும். அதற்கு ''மிஸ்கீன் சோறு கொடுத்தல்'' என்று சொல்லப்படும். சிலநோய்களுக்கு ஏழு வெற்றிலை, ஏழு பாக்கு, ஏழு பூக்கள், ஏழு சல்லி (அரைச்சதம்) க்காசு, மூன்று நிற நூற்கள், மற்றும் சாமான்கள் சேகரிக்கப்பட்டு மடைவைப்பர். இம்மடைகள் மூன்றும், நாலாம் சந்திகளில் வைக்கப்படும். எலுமிச்சங் காய்கள் ஏழு வெட்டிக் கழிப்புக்கழிக்கும் வழக்கமும் இருந்தது. கரையாக்கன் பேய்க்கும் மடைவைப்பர். குமாரசாமிக்கு வண்டிக்கணக்கில் பெரிய வாழைப்பழம், பூக்கள், மோதகம், கொழுக்கட்டைகள் கொண்டு போய்க் கடற்கரையில் கழிப்புக்கழிப்பர். அந்நேரம் யந்திரவாதிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர ஓசையும், சடங்குகளும் அச்சந் தருவனவாக இருக்கும். கெட்ட ஆவிகள், பேய்களின் சேஷ்டைகளினால் மக்களுக்கு நோய் உண்டாகின்றன என்பதும் இப்படியான சுழிப்புகள் மூலம் நோய் நிவர்த்தி காணலாம் என்ற ஒருவகையான நம்பிக்கையுமே இச்சடங்குகளின் காரணிகளாகும்.

தண்ணீர் ஓதிக் குடித்தல், முகத்திற் தெளித்தல், குளித்தல் என்பனவும் நோய் நிவாரணியாகக் கருதப்பட்டது. கரையாக்கன், குறும் பறையன், கடலை வைரவன், கங்கை வைரவன், மோகினி, பேச்சி, நீலி, குழந்தை கொல்லி, இருளி மற்றும் பிணந்தின்னி ஆகிய பசாசுகளின் தொல்லைகளால் சிலருக்கு வருத்தம் வருவதாகவும் அதற்குரிய மந்திரச் சடங்குகளின் மூலம் நிம்மதி காணலாமெனவும் நம்பிக்கையுடையவர்கள் அதற்காகப் பெருமுயற்சி யெடுத்துப் பணத்தை வாரியிறைப்பதும் காணக்கூடிய அம்சமாகும்.

காடுகளிற் தொழில் செய்வோர், வயல் வேலை செய்வோரைப் பாம்பு தீண்டாமல் காப்பதை தேடி செய்யும் மன்லாறு (றஹ்) அவர்களுக்கும், பிள்ளைவேண்டுவோர் குழந்தும்மா வலி (றஹ்) க்கும், காயங்கள் சுகமாக பீசபீல் வலி (றஹ்) க்கும் பலர் நேர்ச்சை செய்து கருமமாற்றுவர். தமது எண்ணங்கள் நிறைவேறினால், நோன்புகள் பிடிப்பதாகவும், வைவாத்துன்னூரிய்யா ஓதுவதாகவும் நியத்து வைப்போரும் இருந்தனர். குழந்தைகளைக் கபுறடிகளில் உருளச் செய்தல், தோப்புக் கரணம் போடுதல், கை, கால், காது, போன்ற உறுப்புகளை வெள்ளியினாற் செய்து பெரியார்களின் வியாறத்தில் வைத்தல், குத்துவிளக்கில் நெய்யூற்றி வைத்தல் முதலிய செயல்களும் நிகழ்ந்துள்ளன. ஸபர் மாத இறுதியில் வரும் புதன் கிழமையை ஒடுக்கத்துப் புதன் என்றும் அந்நாளில் கெட்ட ஆவிகள் பூமியில் பரவுவதால் தங்கடங்கள் நேருமென்றும் ஒருசாரார் கூறி மாவிலையில் இசும் எழுதிக் கரைத்துக் குடிப்பர். கொஞ்ச நீரைக் கிணற்றுக்குள்ளும் ஊற்றுவர். ஒரு கருமம் நிறைவேறத் தட்டில் அரிசியள்ளி வைத்தல், சீலைத்துண்டில் காசுமுடிந்து கட்டல், ரொட்டியை நோயாளியின் தலையைச் சுற்றித் துண்டாக்கிப் பகிர்தல், மரணித்தவர்களின் 40-ம் நாளன்று பெரிய வெள்ளைச் சீலையால் அவரது கபுறை மூடிக் கத்தம் ஓதுதல், வீட்டுக்கு வலை ஏறும்போது அதில் மஞ்சள் பூசி, சீலையால் மூடுதல், வீட்டுக்கு அத்திவாரக்கல் வைக்கும் போது அக்குழிக்குள் நவதானியங்கள், பொற்றுண்டுகளைப் போடல் என்பனவும் சில நடைமுறைகளாகும்.

வீடு, கிணறுகள் கட்டுவதற்கு குருக்களைக் கொண்டு நிலம் எடுத்தல், அந்நிலத்தின் தென்மேற்குப் பகுதியில் ஒரு சிறு நுண்ணைட் சாமூலை என்று கழித்து விட்டு வீடுகட்டல் எனும் ஒரு சம்பிரதாயமும் செயற்பட்டது.

செய்வினையும் அச்சிரமும்: ஒரு கணவன் மனைவியை அல்லது ஒரு காதலன், காதலியை இறுக்கமான அன்பினால் பிணைத்து விடுவதற்குச் சில மந்திரவாதிகள் (வைத்தியர்களுட்பட) சில கிரியைகளைச் செய்வர். அதற்குச் ''சேர்த்திக்குச் செய்தல்'' எனவும் அவர்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்திப் பிரித்து விடச் செய்வதற்குப் ''புறிவுக்குச் செய்தல்'' எனவும் சொல்லப்படும். இவற்றிற்காக இசும், அஸ்மாக்கள், அச்சிரம் கட்டல், எண்ணெய் ஓதல், சீனி ஓதல் மற்றும் மந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் செய்தல் நடைபெற்று வந்தது. இச் செய்கையாளர்களை மக்கள் எக்காரணங் கொண்டும் பகைத்துக் கொள்வதில்லை. தமக்கு ஏதும் வினைசெய்து விடுவார்களோ என்ற பயமே அதன் காரணமாகும். ஒருவரை நோயாளியாக நீண்ட காலம் பாயில் கிடக்கச் செய்வதும் உண்டு. அதற்கு ''அழுந்தச் செய்தல்'' எனப்படும்.

குடியிருக்கும் வீடு, வளவுகளைக் காவற்பண்ணினால் நோய், சனி, பீடைகள் பிடிக்காது என்றும் பெரும்பாலானோர் எண்ணிக் காவல் பண்ணினர். முட்டைக்கோது, செப்புத்தகடு, ஈயத்தாள்களில் இசும், அஸ்மாக்களை, மந்திரங்களை எழுதிப் பானைக்குடுவைகள் ஐந்தில் வைத்து தண்ணீர் புகாமல் மூடி வளவுகளின் நான்கு திசைகளிலும் நடுவிலுமாகப் புதைத்து வாடுவர். வீட்டுச் சுவர்களிலும் நான்கு மூலைகளில் அச்சிரத் தகடு அடிக்கப்படும். இச்செய்கைக்கு ''வளவு காவற் பண்ணுதல்'' என்றும் பெயர். சில வருத்தங்களுக்கு ஓதி ஊதுதலும் உண்டு. அதற்கு ''ஊதிப்பார்த்தல்'' எனப்படும்.

பால் பார்த்தல்: தஸ்பீஹ் மணிக் கோவை, நூல், நாடா மற்றும் சீலைக்கரைகளைச் சிலர் முகத்துக்கு நேரே பிடித்து மந்திரித்துக் குறிபார்ப்பர். நோய், களவு, துன்பம் ஆகியவற்றின் நிலைப்பாட்டையறிய இம்முறை கையாளப்படும். உரிய நிவாரணம் இவர்களாற் கூறப்படுவதுண்டு.

குறிபார்த்தல்: குருக்கள் மார், மாந்திரீகர், வாசலாத்துவானவர், வைத்தியர்கள் மற்றும் ஆவேசம் பிடித்தோர் ஆகியோரிடம் சென்று தத்தமது நட்டம், துன்பம், நோய், விவாகப் பொருத்தம் மற்றும் பல்வகைப்பட்ட தேவைகளுக்கு நிவர்த்தி காணப்பலர் உரிய வழியைக்கூறுமாறு கேட்பர். அவர்கள் வில்லங்கங்களின் வகை, அவை ஏற்பட்ட காரணம், தற்போதைய நிலைப்பாடு , சிகிச்சை ஆகியவற்றைக் கூறுவர். அவற்றைக் கேட்போர் தம் மனதில் ஏற்பட்ட ஒரு திருப்தியுடன் அச்செய்திகளைச் சுமந்து வந்து வைத்தியர்கள் சொன்னபடி ஆக வேண்டிய கருமங்களைச் செய்வர். அதற்குக் ''குறிபார்த்தல்'' எனப்படும்.

சூனியம்: தம்மோடு எதிராடும் ஒருவரை அல்லது ஒரு குடும்பத்தை, நோயில் வீழ்த்தவும், அக் குடும்பத்தினருக்குத் தொடர்ந்து பல வில்லங்கங்கள், வீழ்ச்சிகள் உண்டாகவும் ஒரு மோசச் செயல் செய்வதுண்டு. அதற்குச் ''சூனியம் செய்தல்'' எனப் பெயருண்டு. சுடலைச் சாம்பல், மண்டை ஓடு, கழுவெண்ணெய், உடுத்தாடைச் சீலை, காலடி மண், தலைமயிர் முதலியவற்றைக் கொண்டு இவ்வினை செய்யப்படும். யாரை அழிக்க வேண்டுமோ அவர் உபயோகிக்கும் இப்படிப்பட்ட பொருள்களில் சிறிதளவு அவருக்குத் தெரியாமல் ஒற்றர் மூலம் களவாக இவை சேகரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வினைப் பொருள்கள் ஒரு கலத்திலிடப்பட்டு அவர் வளவில் புதைக்கப்படும். அதிலிருந்து அவருக்கு நோய் ஏற்பட்டுக் கஷ்டகாலம் ஆரம்பிக்கும் என்பது மந்திரவாதியினதும் செய்விப்பாளரதும் நம்பிக்கையாகும்

சூனியம் எடுத்தல்: தமக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக் கெல்லாம் யாரோ செய்த சூனியந்தான் காரணம் என்று அக்காலத்தில் பலர் நம்பினர். அதற்காகச் சூனியம் எடுக்கும் ஒரு சடங்கும் நடைபெற்று வந்தது. வைத்திய ரொருவர் வரவழைக்கப்பட்டு அவரால் சூனியம் செய்திருப்பது உறுதி செய்யப்படும். அதன்பின் வைத்தியர் குறிப்பிட்ட இடத்தை மண்வெட்டியால் வெட்டிப்பார்த்தால் சூனியச் சாமான்கள் காணப்படும். அதை வைத்தியர் எடுத்து எரித்தவுடன் சூனிய நிவாரணச் சடங்கு ஆரம்பிக்கும். மடை, காய்வெட்டல், மந்திர உச்சாடணம் என்பன ஆரம்பிக்கப்படும். இப்படியான மந்திரங்கள் அக்காலம் உபயோகத்திலிருந்தன.

1. ''ஓம்! எரியெரிசக்கரம், எதிரேறு சக்கரம், அரியெனும் சக்கரம், அரியாத சக்கரம், ஆகாயத்தைப் பிளந்த சக்கரம், பேச்சியையும் நீலியையும் பொலியெடுத்த சக்கரம் இத்தனை சக்கரத்துடன் உப்போதிக் கொடுத்ததுவும், உள்மருந்து கொடுத்ததுவும், கடுகோதியெறிந்ததுவும், சருகோதிப் பிரித்ததுவும், பேச்சியையும், நீலியையும் பிடித்துவைத் தாட்டியதும், பெருஞ்சாமி குமாரர் பேரிலே சாட்டியதும், ஒப்பாரி வைக்க ஓதி மண் எறிந்ததுவும், அழுந்திக்கிடந்து, ஆழப்புதைத்துவிட, செய்வினைகள் செய்து, செயலிழக்கச் செய்ததுவும், பெரிய அருஞ்சக்கரத்தால் பிளநது அழிந்திடவே பெருமானின் காலடிக்குப் பெருந் தொண்டு செய்வாக, சொட்டுச் சொடக்கு சோவெனவே மல்லாட்டம், கொட்டி விழுந்திக் குரல்வளைக்கு வாளேந்த, மட்டையடியில் மண்டை பிளந்திடவே, பெம்மானே மேலோய் பெருமானே சாட்டிவிட்டேன். சுவாஹாசு.

2. அல்லாவுக்கே பந்து, றசூலுக்கே பந்து, தர்வேஸ் முகையித்தீனுக்கே பந்து, நாகூர் மீரானுக்கே பந்து, பந்து பந்து, ஆகாசம் கட்டினேன், பூமி கட்டினேன். பூமிபாதாளம் கட்டினேன். எட்டுத்திக்குப் பதினாறு கோணங்களையும், இதற்குள்ளடங்கிய பேய், பசாசு, பில்லி, வஞ்சனை, சூனியங்களையும் கட்டினேன். எல்லா ஜின், செய்த்தானையும், இடக்கர், துடுக்கர்களையும் கட்டினேன். சுலைமான் நபியின் சூக்குமத்தால் கட்டினேன். ஈசா நபியின் ஏக சக்தியால் கட்டினேன். வினைகள் எரிய, வெண் சாம்பலாய்ப்பறக்க, முனகும் கொடுக்குகளை முறித்தெறிந்து தூளாக்க, பொல்லாத பெருவினைகள், பேரழிவு பெற்றமிழ, எவ்வினையுமில்லாது ஏகி மனங்குளிர . . . சுவாஹா! சு

3. ஓம் றீம் கறீம் முஹாசே சப்பன்ஞ சதுரி மல ஹிங்கே மாக்தாவி, சம்ஹாரம் சாமாறி உபல் முங்ஹா, பாரீத வித, பத்திரா பறிஞ்ஞுமான மேதாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணமி, அதாவாதிகாமனே முகாரி மூத்தே, சபன்ஞ சபன்ஞ சபன்ஞ சம்ஹார ரோத்தே எஹி அக்னி மருமஞ்சா தாபரூப சக்ரா மஹீம் மஹீம் மஹீம் . . . சுவாஹா! சூ.

ஊரோடி: இது ஒரு கெட்ட ஆவியாகக் கருதப்படுகிறது. சிறு பிள்ளைகளுக்குக் காய்ச்சல், கொப்புளம், வயிற்ருேட்டம் என்பன இதன் சேட்டையால் வருவதாகப் பலர் நம்புகின்றனர். இந்நோய்கள் நீங்க ஓதி ஊதுவதும் அச்சிரங் கட்டலும் நடைபெறும். நோய் நிவாரணப் பாடல்களும் பாடப்படும்.

கடுறு எளிகளின் குற்றம்: சிறுவர்களுக்கு வருத்தங்கள் ஏற்பட்டால், பிறந்த குழந்தை கண் திறவாமல் இருந்தால், கதை சொல்லேயாய் இருந்தால் மற்றும் பிள்ளைகள் ஓரே ஓயாமற் கத்திக்கொண்டிருந்தால் இவை மரணித்த குடும்பத்தவரின் கோபத்திஞல் ஏற்பட்டவையெனச் சிலர் நம்பினர். இவைகளின் நிவர்த்திக்காக அன்னவரின் பேரில் அன்னதானமளித்து கத்தம், பாத்திஹாக்களை ஓதி வந்தனர்.

தாய்மாருக்குச் செய்தல்: வருடாவருடம் வழக்கமாகத் தாய்மாருக்குச் செய்தல் (அம்மனுக்குப் படைத்தல்) எனும் ஒரு சடங்கைச் சிலர் செய்வர். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மச்சம், மாமிசம், ஒறுத்து மிகப் பயபக்தியாக வெள்ளைச் சீலையால் வாயைக்கட்டிக் கொண்ட பெண்கள் பணியாரம், கொழுக்கட்டை புக்கைகளைத் தயார் செய்வர். இவற்றைச் செய்யும் போது கதைக்காமற் செய்ய வேண்டு .மென்பதற்காகவே இந்த வாய்க்கட்டு. இவை தயாரானதும் வாழைப்பழங்களுடன் உள்வீட்டின் நடுவில் அவைகளைப் பரப்பி ஊதுபத்தி எரித்து மும்முறை அப்படையல்களைச் சுற்றி வலம் வருவர். பின் வாய்க்கட்டை அவிழ்த்து விட்டு மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பர். இப்படிச் செய்யாவிட்டால் அம்மனின் சீற்றம் தமக்கேற்பட்டு அதன்மூலம் தடங்கல்கள் வரலாமென்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

பூப்பு(னித) நீராட்டல்: இள மகளொருத்தி பருவமடைந்ததும் பெற்ருேரும் குடும்பத்தினரும் பெரிதும் மகிழ்வர். இங்கு பருவமடைதலைப் புத்தியறிதல், பெரியபுள்ள (பிள்ளை) யாகுதல், பக்குவப்படல், பெரிய மனுஷியாகுதல், பி(ப)ராயப்படல், வயதுக்கு வரல், சமைதல், மற்றும் பூப்பெய்தல் எனும் பல்வகைப் பெயர்களால் அழைப்பர். உற்ருர் உறவினர் இப் பூமகளைப் பார்க்க வரும் போது கோழிமுட்டை, நல்லெண்ணெய் (எள்நெய்) ஆகியவற்றை அன்பளிப்பாகக் கொண்டு வந்து கொடுப்பர்.

குடும்பத்தார் சேர்ந்து மாவிடித்து பிட்டு, இடியப்பம் அவித்து மற்றவர்களுக்கு உண்ணக் கொடுப்பர். சிலர் பூப்பெய்தும் விடயத்தை மற்றவர்களுக்குத் தெரியாமல் வீட்டோடு மட்டும் அடக்கி விடுவர். வேறுசிலர் குடும்பத்தார் மட்டத்தில் நிறுத்தி விடுவர். இன்னுஞ் சிலர் இதுபற்றி அழைப்பிதல்கள் மூலம் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தி ஒரு வைபவமாகக் கொண்டாடுவர். சுபநேரமொன்றில் இச்சிறுமிக்குத் தண்ணீர் வார்க்கப்படும். பின் வண்ணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாடைகள் அணிவிக்கப்படும். அதன்பின் அப்பருவ மகளின் வெளித் தொடர்புகள், விளையாட்டுகள் என்பன பெற்றோரின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்படும்.

மற்றுமொரு சம்பிரதாயம்: சிறுமிகள் பக்குவப்பட்டதும் மாலைவெள்ளி தெரிந்த பின் முழுக்காட்டுவார்கள். இது முதலாம் தண்ணீர் வார்த்தல் எனப்படும். பூப்புக்குறி கண்ட நாள், நேரம் ஆகியவற்றைக் குருக்களிடஞ் சொல்லி சுபதினம், நேரம் பார்ப்பார்கள். அதன்பின் உற்றார் உறவினருக்கு விருந்தளிக்கப்படும். அதையடுத்து குறிப்பிட்ட சுப நேரத்தில் இரண்டாம் தண்ணீர் வார்க்கப்படும். இம்மங்கள நேரத்தில் குடும்பத்தார், நண்பர்களால் பூப்பெய்திய இளமகளுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படும். அந்நேரம் சிற்றுண்டி வழங்கப்படும். உறவுப் பெண்கள் மத்தியில் இந்நிகழ்ச்சிகள் மங்களமான மஞ்சள் விளையாட்டாகக் கொள்ளப்படும். குருக்களிடம் கணித்துப் பெறப்பட்ட தெளிவான சோதிடக் குறிப்பில் அம்மங்கையின் எதிர்கால வாழ்க்கைக் குறிப்பு இடம்பெற்றிருக்கும். விசேடமாக அவளுக்கு வரவிருக்கும் வரன் பற்றிய குறிப்பு, எதிர்கால நன்னிமித்தங்கள், இல்வாழ்க்கைச் சிறப்புகள் மற்றும் குழந்தைப் பாக்கியங்கள் என்பன வரைவு பெற்றிருக்கும். மகளின் புது மாற்றங்கண்ட பெற்றோர் அவளின் ஒவ்வொரு அசைவிலும் அதிக ஆனந்தங் கொண்டிருப்பர்.

இதுபற்றிய குறிப்புகள் பழந்தமிழிலக்கியங்களிற் காணப்படுகின்றன. இதை ''முதுக்குறைதல்'' எனப்படும். புத்தியறிதல் என்ற கருத்தில் இக்குறிப்பு உள்ளது. பின்வரும் சங்கச் செய்யுள் இப்படிக் கூறுகிறது:



திரு. V. P. சிவப்பிரகாசம்
இளைஞர் திருப்பர்,

''முதுக்குறைந்தனளே முதுக்குறைந்தனளே
மலையனொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந்தனளே''

பராயப்பட்ட இளமகள் ''பெரிய பிள்ளை'' எனப் பெயர் பெறுகிறாள். மணப்பருவமெய்திய ஆண்களுக்கு அம்பட்டரைக் கொண்டு முதன் முதலில் முகத்து மயிர்களை அகற்றலும், ''கடுக்கன்'' பூணலும் இத்தகைய ஒரு சடங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாப் A. L. முஹியித்தீன் பாவா நில அளவையாளர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் அதிகாரம்

## வேளாண்மைச் செய்கை

கருங்கொடித்தீவு ஒரு நெற்களஞ்சியக் கூறுகும். நமது முன்னோர் மிகச் சிறந்த விவசாயிகளாகவும் பெரும் பாட்டாளிகளாகவும் விளங்கியுள்ளனர். நாம் சேற்றில் கால் புதைத்தாற்றான், நமது பிள்ளைகள் சோற்றில் கை வைக்கலாம் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருந்தனர். கமச் செய்கை அவர்களுக்குக் கைவந்த கலையாகவிருந்தது. அக்காலத்தில் கால (மாரிப்) போக வேளாண்மை மாத்திரமே செய்யப்பட்டது. மூன்று, நாலு மாதத்தான் (மாத்தையான்) நெற்கள் விதைக்கப்பட்டன. விதைப்புக்கும் சூடு போட்டு நெல்லேற்றி வருவதற்குமிடைப்பட்ட காலம், ஐந்து மாதங்களாக இருந்தன. ஒரு ஏக்கருக்கு ஆகக்கூடிய விளைவு ஐந்து அவணங்கள் (37.5 புஷல்கள்) மாத்திரமே. கிருமிநாசினி தெளித்தல், வளமாக்கி (பசளை) தூவல், களை (புற்) பிடுங்கல், அதிக விதை விதைத்தல், அறுவடை செய்தவுடன் சூட்டோடு சூட்டாய்ச் சூடு போடுதல் (போரடித்தல்) என்பன அக்காலத்தில் கிடையாது. நம்முன்னோர் உழவுப் பொறியையறியார். உழவு இயந்திரம் செய்யும் வேலைகள் கடாக்களைக் கொண்டு செய்யப்பட்டன. பயபக்தியோடு இப்பணிகளைத் தொடர்ந்தனர்.

01. நல்லநாள் பார்த்தல் : ஏர் (ஏ) நாள் பார்த்து வயலுக்குள் இறங்கியது முதல், நெல்லேற்றி வரும்வரை பழைய சம்பிரதாயச் சடங்குகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் வாழந்த முற்குகரின் சம்பிரதாயங்களை அவர்கள் கடைப்பிடித்ததால் அவைகளுக்கு ''முக்குவர் கட்டுப்பாடு'' எனப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஏநாள் கொத்தல் : சமயகுரவரொருவரிடஞ் சென்று வயல்வேலை ஆரம்பிக்க சுபநேரம் பார்ப்பர். இச்சுபநேரம் உள்நாளில் இருக்கத்தக்கதாய்க் கணிக்கப்படும். புறநாள் என்பது தகாத நாளாகும். குறிப்பிட்ட நேரத்தில் மண்வெட்டியால் கொத்தியதும் வேலை ஆரம்பமாகி விட்டது எனக் கொள்ளப்படும். இதற்கு "ஏநாளுக்குப்போற" (போகிறது) எனப்படும்.



சூடுமிதித்து முடிந்ததும் களத்துநிலத்தில் குவிக்கப்பட்டிருக்கும் வைக்கோல்களில் விடுபட்டிருக்கும் நெல்மணிகளைப் பிரித்தெடுக்க இவ்வாறு கோலைத் தாய்க்குலம் உதறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. **நிலத்தைப் பண்படுத்தல்** :சேறுள்ள வயலானால் கடாக்களைக் கொண்டு நிலத்தை உழக்குவர். புழுதி வயலானால் கடா மாடுகளை ஏரிற் (மேழி) பூணைகட்டி உழுவர். நிலத்தைப் பண்படுத்திய பின் வரம்புகள் உயர்த்திக்கட்டப்படும். பெரிய பகுதிக்குக்கீத்து என்றும் சிறிய பகுதிக்கு வரவை என்றுஞ் சொல்லப்படும். வரம்புகளில் நீரோடி வடியக்கூடிய அளவுக்கு வெட்டுப் போட்டுச் சிறுகடப்பு எடுத்திருப்பர். அக்கடப்புகளும் கட்டப்படும். அவற்றிற்கு ''வக்கடை'' என்று பெயர். சில வரம்புகள் சற்று அகலமாய் இருக்கும். அதற்கு ''நடைவரம்பு'' எனப்படும். வயலின் எல்லை வரம்புகள் ''அடையா வளஞ்சான் வரம்பு'' என்று பெயர் பெறும். ''கீத்து வரம்புகள்'' உறுதியாகக் கட்டப்படும். சில வயல்கள் களி நிலமாகவும், வேறு சில இரு மண் நிலமாகவும் இன்னுஞ் சில மணல் நிலமாகவும் இருக்கும்.

04. **நிலச்சமன்பாடு** : சமனில்லாத நிலம் வரவைக்கு வரவை சமன் செய்யப்படும். உயரத்திலும் பள்ளத்திலும் வரவையெங்கும் ஒரே சமனாக நீர் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதே அதன் காரணமாகும். அப்படியில்லாவிட்டால் வேளாண்மை மேடு கருகியும் பள்ளம் அவிந்தும் விடும். தேவையான நேரம் வரவை வடிச்சல் நீரைத்திறந்து விடுவதற்காக வரம்புகளிடையே சிறுசிறு மடைகளை வெட்டி வைப்பது வழக்கம். இந்த மடை (வக்கடை)யை நோக்கி நிலத்தில் மேலாளமாகக் கீறிவிடுவர். இதற்கு ''அலை'' என்று பெயராகும். நீரோடாமற் தேங்கி நிற்கும் குண்டுப்பள்ள நீரை ஏற்றி (ஏத்து)னால் (நீரிறைக்கும் பாத்திரம்) இறைத்து வற்றச் செய்வர் .



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. விதைப்பு வேலை : சேற்று விதைப்புக்காக நிலம் ஓரளவு ஆல்வாடிய (காய்ந்த)தும் விதைப்பு ஆரம்பமாகும். நன்கு உள்ளீடுள்ள, நோயற்ற, பாரமுள்ள நன்கு வெளிச்சமான நெல் முளைக்காகத் தேர்வு செய்யப்படும். அந்நெற்களை நீரிற் கொட்டி முளையாக்கி, அம்முளையை விதைப்புக் கெடுப்பர். முளையாத நெற்கள் ''வந்த நெல்'' எனப்படும். அவல் இடிக்க இதைப் பாவிப்பர். இந்த அவல் ''வந்தவல்'' எனப்படும். முளைக்கப் போடுவதற்கு ''நெல்லுக் கட்டுதல்'' என்று சொல்லப்படும். நெல்லுக் கட்டுகிறவர்களுக்கு பெரும்பாலும் வந்த நெல்லைக் கொடுப்பது வழக்கம். பல ஏழைப் பெண்கள் இதை ஒரு தொழிலாகவே செய்தனர்.

06. நெல் வகைகள் : புழுதி விதைப்புக்கு நன்கு காய்ந்த நெல் விதைக்கப்படும். நொறுங்கன், பச்சப்பெருமாள், பெருநெல், குருவிச் சம்பா, இளங்கலையன், அவரம்பூச் சம்பா, முத்துச் சம்பா, சீரகச் சம்பா, முருங்கைக்காயன், வெள்ளைவாலன், வெண்ணெல், ஈர்க்கில் சம்பா, சீனட்டி, வால்சீனட்டி முதலிய நெற்கள் அக்காலத்தில் விதைக்கப்பட்டன. களி நிலத்தில் விளைந்த நெல் விளைந்தவுடன் பொன்னிறமாகவும், மணல் நிலவாரி மறையாகவும், இருமண் விளைவு மங்கலாகவும் காணப்படும்.

07. முளைவண்டியும் கவிகளும் : முளை நெல் வண்டிகள் பல சேர்ந்து (பட்டிமேட்டு வயற்பக்கம் போகிறவர்கள்) சின்னப்பள்ளிக்கு முன் வீதியில் வரிசையாக நிற்கும். நள்ளிரவிற்குப் பின் வண்டிகள் நகரத் தொடங்கும். வண்டியிலுள்ளோரில் முதல் வண்டிக்காரர் கிராமியக் கவியைப் பாடத் தொடங்குவார். இரண்டு, மூன்று என்ற வரிசையில் கவிகள் படிக்கப்பட்டுக் கடைசி வண்டியை நோக்கிக் கவியோசை தொடர்ந்து வரும். இப்படியே பாடிக் கொண்டு பனங்காட்டை அடைந்ததும் தில்லையாற்றினருகில் வண்டிகள் நிற்கும். கடந்த 45 வருடங்களுக்கு முன் இவ்வாற்றைக் கடக்கப் பாலங்கள் போடப்படவில்லை. மர ஓடம் (Ferry) ஒன்று மாத்திரமே சேவையிலீடுபட்டிருந்தது. பனங்காட்டைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவரின் கட்டுப்பாட்டில் இவ்வோடம் இருந்தது. அதை மக்கள் ''பாதை'' என்றழைப்பர். இந்தப் பாதை மூலம் இவ்விரு வண்டிகள் வீதம் அனைத்து வண்டிகளும் அக்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டதும் மீண்டும் வண்டியணிப் பிரயாணம் தொடரும்.

08. விதைத்தல் : வண்டிகள் வயலையடைந்ததும் காலையில் வயல் வி...
ஆரம்பிக்கப்படும். போடியார் வீட்டிலிருந்து கட்டிச் சென்ற காலையுணவை உண்ணக் கொடுப்பர். சாக்கிலிருந்த முளையைக் கைப்பெட்டியில் அள்ளியெடுத்ததும் முதியவரொருவர் முளையெறிய ஆரம்பிப்பார். மற்றவர்களும் எறிவார்கள். மூலைகாலைகொத்தி அவ்விடங்களில் முளை எறிவார்கள். வடிச்சல் அளை போட்டதும் விதைப்பு முடியும். புழுதி விதைப்புக்கு நெல் விதைக்கப்படும். முளை, நெல் இவற்றைப் புரு, தாரா, கொக்குகள் தின்னுமற் காவல் காக்கப்படும். நெற்பயிர்ப் பருவங்கள் ஊசிப்பயிர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிலைப்பயிர், கரண்டிக்கால் பயிர், புருமறையும் பயிர், எசாப் பருவம், குடலை, வாயால் கக்கிய பருவம், பூ, காய், பழம், விளைவு எனப் பல பெயர் பெறும்.

09. வட்டைவேலி : பயிர் முளைத்ததும் வட்டை வேலி நடவெ (வேலிகுத்த) ளியார் மார் சேர்ந்து பக்கத்துக் காடுகளில் கட்டைகள், கம்புகள் தறித்து வருவர். வெல்லநார், நவ்வக்கொடிகளும் சேகரிக்கப்படும். ஒவ்வொரு வட்டைகளின் அமைப்பைப் பொறுத்து தனியாகவும் சேர்ந்தும் வட்டைகளை வளைத்து வேலி கட்டுவார்கள். அதற்கு அடையா வளைஞ்சான், வட்டைவேலி எனப்பெயர்கள் வழங்கப்படும்.

10. வேலிக்காவல் : வேலி வேலை முடிந்ததும் ஒவ்வொரு வெளியான் மாரும் அவரவருக்கு அளந்து குறிப்பிட்டபடி உரிய இடத்தில் காவற் பரண் (Watch Tower) களைக் கட்டிக் கொள்வர். பயிர் நன்கு வளர்ந்ததும் யானை, மாடு, பன்றிகளிலிருந்து பயிரைக்காக்கக் கடுங் காவல் இருப்பர். வயல்களை அடுத்துப் பெருங்காடுகள் இருந்ததால் மிருகக் காவல் மிகவும் பலமாக இருந்தது. ஒவ்வொரு இரவும் உரிய வட்டை விதானை (வட்டான)யும், அதிகாரியும் வெளியான்மாரைக் கூட்டிக் கொண்டு வட்டை வளைப்பர். அதற்குமுன் ஒரு மணியைக் கம்பில் கட்டி ஒரு பரணிலுள்ள வெளியான் அடுத்த பரணுக்குக் கொண்டு போய்க் கொடுப்பார். அதற்கு "உடுகு மணி" விடல் எனப் பெயர். இப்படியே எல்லாப் பரண்களுக்கும் அம்மணி கொண்டு செல்லப்பட்டு வளைத்து வரும்.




சூட்டுக் களவெட்டியில் மிதிக்கப்பட்ட நெற்கதிர்களை உதறுதல் வழக்காறாகும். உதறுவோரின் பின்பக்கமாக சூடும்; காவற் பரணும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*11.* **வட்டை வளைத்தல் :** அதன்பின் வட்டை வளைத்தல் ஆரம்பிக்கப்படும். வட்டை விதானையும் அதிகாரியும் ஒரு பரணுக்கு வருவார்கள். அப்பரண்காரர் ஓலைப்பந்தம் கொழுத்தி இருவரோடும் சேர்ந்து அடுத்த பரணுக்குப் போகவேண்டும். அடுத்த பரண்காரர் அதற்கடுத்த பரணுக்கு இவர்களைக் கூட்டிச் சென்றதும், முதலாமவர் தனது இடத்துக்குத் திரும்பி விடுவர். இப்படியாகத் தினமும் வட்டை வளைத்துக் காவல் காக்கப்படும். யாரும் நித்திரை செய்தால் அதிகாரி வைத்திருக்கும் பிரம்பால் அவருக்கு அடி விழும். அவருக்குரிய வேலியில் கடப்புக்கிடந்தால் அவரைக் குப்புறப்படுக்க வைத்து பித்தட்டில் அடி விழும். அதனால் காவற்காரர்கள் தூங்கிவிடாமல் கவனமாக இருப்பர்.

*12.* **பயிர் நோயும் சிகிச்சையும் :** மாட்டுப் பட்டிகள் ஏராளமாக அக்காலத்தில் இருந்தபடியால், பகலில் மாட்டுக்காவல் இருக்க வேண்டியிருந்தது. சில பட்டிகள் வயலுக்கருகிலும் இருக்கும் குடலை, காய்ப்பருவங்களில் ஈப்பூச்சி, பனிப்பூச்சி, இலைசுருட்டி நோய்கள் ஏற்படும். இவற்றிற்கு இசும், மந்திரம் எழுதிக் கட்டடல், வணக்கத்தலங்களின் கிணற்று நீர், மண், சாம்பல் ஆகியவற்றை ஓதி, மந்திரித்துத் தெளித்தல், தூவல், நோய் அதிகமானல் வைத்தியர், மந்திரவாதிகள், சமயகுரவர் போன்றவர்களை வட்டைக்கு அழைத்துப் போய்ப் பயிர்க்காவல் செய்தல் போன்ற சில மரபு வழிப்பாரம்பரியச் சடங்குகளைத் தவிர வேறு எவ்வகையான சிகிச்சை முறைகளும் அப்போதிருக்கவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. காவல் : வேளாண்மை சோண (சோவென)ப் பறிந்து காய்த்துச் சவண்டதும் (காய்சவளுதல்) குருவிகள் அவற்றை உண்பதற்காகப் பாட்டம் பாட்டமாகப் பறந்து வட்டைக்குள் விழும். அண்மைக்காடுகளில் இவை தங்கியிருந்து வருவதால் அவற்றின் நெருக்கம் மிகக் கூடுதலாய் இருக்கும். இக்காலத்தில் ஒரு விடலைப் பையன் குருவிக்காவலுக் கென்று பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்டுக் குருவிக் காவல் காக்கப்படும். அவனுக்கு ஒரு வரவை மூலையில் விளைந்த பகுதி ஒதுக்கப்படும். அதற்குக் ''குருவிமூலை வரவை'' எனப்படும். கால்மாட்டு வரவை, தலைமாட்டுவரவை, தாருப்புட்டி என்பன வரவைகளின் வகைகளாகும். குருவிப்பையனுக்குக் கொடுக்கப்படும் உப்பட்டிக்குக் ''குருவிக்கட்டு'' என்று சொல்லப்படும்.

14. விளைவு ஆரம்பம் : குடலைபூத்து ஒரு கிழமையின் பின் காய்க்கும். காய்த்து ஏழு நாள்களின் பின் பழுக்கும். பழுத்து ஒரு வாரத்தின் பின் அறுவடைக்குத் தயாராகும். அந்நேரம் தங்க நிறக்கதிர்கள் தாழ்ந்து வளைந்து கிடக்கும். அதற்கு ''வட்டை விளைவு'' என்பர். அக்கால கட்டத்தில் வட்டைகளில் சனநடமாட்டம் காணப்படும். பின் சனப்புழக்கம் அதிகரிக்க வயல்கள் கலகலப்பாயிருக்கும். பெண்கள் அப்பக்குடில்களை அமைத்தும் புளிச்சப்பணியாரம் எனும் பாலப்பஞ்சுடத் தொடங்குவர். காலை உணவாக இந்த அப்பத்தையும் எருமைப்பாலையும் சேர்த்து உண்பது வழக்கமாகும். ஆங்காங்கே தேநீக்கடைகளும் சிறிய பலசரக்குக் கடைகளும் அமைக்கப்படும்.

15. மகளிர் பணிகள் : அறுவடை ஆரம்பித்ததும் எங்கும் ஒரே கலகலப்பும் பெருநாள் போன்ற ஆரவாரமும் இருக்கும். முற்காலத்தில் வேளாண்மை வேலைகள் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை ஆண்கள் மாத்திரம் சம்பந்தப்பட்டதாக இருந்தது. பெண்கள் கதிர் பொறுக்கவும் களவெட்டிப் பிச்சைக்காகவும் மாத்திரமே சென்று வருவர். காலக்கழிவில் இவ்வழக்கம் மாறி புற்பிடுங்கல், உட்பட்டி புரட்டல் என்பனவற்றைச் செய்து வந்தனர். அத்தோடு சில பெண்கள் சூடு போடுபவர்களுக்குச் சமைத்துக் கொடுத்தல், அரிசி குற்றி அங்குள்ளவர்களுக்குக் கொடுத்தல், மாவிடித்தல் மற்றும் அவலிடித்தல் என்பவற்றையும் செய்தனர். ஏழை மகளிர் வட்டை விளைவை ஒரு புதையலாகவே கருதி வந்தனர். திருமணம் முடித்தல், வீடுகட்டல், காணி வாங்கல், நகை செய்தல், சமயச் சடங்குகள் செய்தல், மவ்லீது ஓதல் மற்றும் விருந்து கொடுத்தல் போன்றவை வட்டை விளைவின்பின் நிகழும் சம்பிரதாயங்களாகும். மகளிர் ஆற்றும் பணிகளுக்குக் கூலியாக நெல் கொடுக்கப்படும். சிறந்த பணியாற்றிய ஊக்கமுள்ள பெண்கள் மேலதிகமாகவும சன்மானமாக நெல் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயலில் நெற்போர் (சூடு) வைக்கப்பட்டுள்ளது. பக்கத்தில் ஒரு கந்து. (கைச்சூடு)

**16. புதிருண்ணல் :** வட்டையில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் புரைகள், வாடிகள், பரண்கள், குடில்களில் தொழிலாளர் தங்கி நிற்பர். உப்பட்டி புரட்டும் பெண்களுக்குக் கூலியாகப் பெரும்பாலும் சில உப்பட்டிகள் (நெற்கற்றைகள்) வழங்கப்படும். அவற்றை அவர்கள் கால்களால் மிதித்துத் துவைத்து நென்மணிகளை எடுப்பர். அவைகளே வட்டையில் முதன்முதல் குற்றப்படும் நெற்களாகும். இவைகள் சமைக்கப்பட்டுப் புதிர் எனும் முதல் உணவாகவும் கொள்ளப்படும். முற்றிய காய்ப்பருவ நெல்லை அவலிடிப்பார்கள். அதற்குப் ''பச்சைக்காய் அவல்'' என்று சொல்லப்படும். இந்த அவல் மொறுமொறுப்பாகவும், வாசமும், சுவையுமுள்ளதாகவும் இருப்பதால் அதை எல்லோரும் விரும்பி ஆசையோடு உண்டு மகிழ்வர்.

**17. விளைவு நிய்யத்து :** ''வட்டை விளைந்த நிய்யத்து'' எனப்படும் ஒரு பாற்புக்கைச் சடங்கு நடக்கும். போடிமார்கூடி அதற்கான ஆயத்தங்களைச் செய்வர். ஒவ்வொரு வரிசையிலும் வயலில் ஒரு மூலைத்துண்டிலுள்ள வேளாண்மையை அரிந்து துவைத்து அதிற்குற்றிய அரிசி, எருமைப்பால், சீனி, கற்கண்டு, பயறு, ஈச்சம்பழம் என்பவற்றைச் சேர்த்துப் பெரிய மிடாப்பானையில் புக்கை ஆக்கி வட்டையிலுள்ள அனைவருக்கும் கொடுப்பார்கள். அதன்பின் நபிஹிலிறு (அலை) (ஹயாத்து நபி) அவர்கள் பேரில் பாத்திஹா ஓதப்படும். இச்சடங்கின் பின்பே வட்டையின் பொது அறுவடை ஆரம்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. உணவுப் பெருக்கமும் பயன்பாடும் : ஆண்கள் வலைகள், அத்தாங்குகள் கொண்டு அங்குள்ள குளம், வாய்க்கால், கேணி, குட்டை ஆகியவற்றில் மீன் பிடித்து வந்து அவரவர் வதியும் வாடிகளில் குவிப்பர். விரும்பியவர்கள் கறி சமைக்க அம்மீன்களை எடுத்துச் செல்வர். மீன், இறைச்சிகள் முற்காலத்தில் காசுக்கு விற்கப்படுவதில்லை. பால், தயிர், நெய் தேவையானோர் காலையடிக்குச் சென்று இலவசமாகப் பெற்று வருவர். சிலர் பக்கத்துக் காடுகளில் வேட்டையாடி மான், மரை, காட்டெருமை, முயல் ஆகியவற்றின் இறைச்சியை அங்குள்ளவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பர். அதிக இறைச்சி இருந்தால் அவற்றை உணக்கி (காயவைத்து) எடுப்பர். இந்த இறைச்சியைக் கம்பு பரவிய தட்டில் பரவி அதன் கீழ் நெருப்புப்பற்ற வைத்து இறைச்சி வெந்து வரும்போது ''பன்னக் கொத்து'' எனும் ஒரு வகை இலைக் கொத்தை இறைச்சியின் மேல் தாறுமாறாக அடிப்பர். உப்புநீர் அதன் மேல் தெளிக்கப்படும். அவ்விறைச்சி காய்ந்ததும் மிக உருசியும் வாசமுமுள்ளதாக விருப்புடன் உண்ணக்கூடியதாக இருக்கும்.

19. உணவும் சுவையும் : அறுவடை காலத்தில் புரைகளில் ஆக்கப்படும் கறிமணம், தாளிக்கும் நெய்மணம், சுடப்படும் பாலப்பத்தின் தேங்காயப்பால் மணம், என்பன மூக்கைத் துளைத்துக் கொண்டிருக்கும். மீன்கறி, இறைச்சிக் கறி, பொன்னாங்காணியும் சிறு மீனும் சேர்த்துக் காய்ச்சிய பாலாணம், வள்ளலக்கறி, சுங்கான், எளாங்காய்போட்டாக்கிய கடையல், இத்தியாதி கறிகளுடன் குருவிச் சம்பா அரிசிச் சோறும் சேர்த்து உண்ணும் சுவைக்கு ஈடேது இணையேது. வட்டைச் சோறு கறி அலாதியான சுவையுள்ளது. அங்குள்ள நிலத்தன்மை, தண்ணீர், மரக்கறிகளின் செழிப்பு என்பனவும் அமைதியான சூழல், மகிழ்ச்சியான மனப்பாங்கு, தோழமை உணர்வு மற்றும் எல்லோரும் ஒருங்கிணைந்துண்ணல் போன்றனவும் உணவின் பிரத்தியேகமான சுவைக்குக் காரணியாய் உள்ளன போலும்.

செலவு குறைந்த சிறுகறிகள் சத்தும், வாசமும், சுவையுமுள்ளனவாகும். அந்த வகையில் காரை, காஞந்தி, முல்லை, முசுட்டை இலைகளை ஒருங்கு போட்டுக்காய்ச்சிய சொதி, நற்சீரகம், பெருஞ்சீரகம், வெள்ளைப்பூடு, மிளகு, பழப்புளி சேர்த்துக் காய்ச்சிய புளியாணம் என்பவற்றைக் குறிப்பிடலாம். மருந்துச் சரக்குகளான இவைகளோடு, வெள்ளைப்பூடும் சேர்த்த பலகறிகள் வட்டையில் சமைக்கப்படும். வயிற்றுக் கோளாறு ஏற்படாமல் இருப்பதற்காக இந்தச் சமையல் முறைகளைக் கையாண்டுள்ளனர்.

20. அரிவி வெட்டல் : அரிந்த வேளாண்மைக்கு உப்பட்டி என்று சொல்லப்படும். உப்பட்டிகளைப் புரட்டிக் காயவைத்துப் பெரிய கட்டுகளாகக் கட்டித் தலையிற் சுமந்து சென்று களத்து மேட்டி (களவட்டியி)ல் வட்டமாகக் குவிப்பர். அதற்குச் ''சூடு'' (போர்) என்று பெயர். பெரிய சூடு வைக்கக் காணமல் எஞ்சியிருக்கும் கட்டுகளைச் சூட்டுக்குப் பக்கத்தில் குவிப்பர். அதற்குக் ''கந்து'' என்றும் ''கைச்சூடு'' என்றும் பெயர். பின் சூடுகளை வளைத்துக் காவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலி கட்டிப் பரணும் கட்டப்படும். சூடு மிதிக்கு மட்டும் வெளியான் இப்பரணில் காவல் இருப்பது கட்டாயமாகும். இரவில் மாத்திரமே சூடடிக்கும் வழமை இருந்தது. எந்தக் காரணங்கொண்டும் பகலில் சூடு போடுவதில்லை.



வேளாண்மை அறுவடை செய்யப்படுகின்றது.

பிரபல பிரமுகர் திரு S. மாணாகப் போடியும் அண்ணாவியார் வேலுப்பிள்ளை உபாத்தியாயரும் காணப்படுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. சூடு போடல் : சூடு தள்ளுமுன் களவெட்டிக்குள் இசும், அச்சிரம் புதைக்கப்படும். இதற்கு அரக்குப் புதைத்தல் எனப்படும். எருமைக் கடாக்கள் பிணைக்கப்பட்டு ருள்ளிய வேளாண்மையின் மீதேற்றி அவைகளை வளைத்து, வளைத்துச் சாய்த்துச் சூடு மிதிப்பார்கள். களவட்டியின் நடுவில் நிற்கும் முதல் மாட்டுக்கு ''அரக்கு மாடு'' எனப்படும். சூடு தள்ளும் கம்புக்கு ''வேலைக்காரன் கம்பு'' என்று பெயர். முதலில் நெல் பிரிக்கப்பட்ட வைக்கோலை இரண்டாம் முறையும் கடாக்களைக் கொண்டு மிதிப்பர். கடாக்களைச் சாய்க்கும் போது பின்வருவன போன்ற பொலிப்பாடல்களைப் பாடி அவற்றைச் சாய்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



22. பொலிப்பாடல்

1. ''பொலி! பொலி!! பொலி!!! பூமி பொலி
பூமாதேவியம்மா பொலி
ஆத்தப் பொலி தூத்த (ற்ற)ப் பொலி
ஆசனங்கட்டி அளக்கப் பொலி
பொன்னின் கலமே மாதாவே தாயே பொலி
தம்பிரானே பொலி வாரிசொரியப் பொலி
பொலி பொலி பொலியம்மா பொலி ஓஓஓ ...

வாரிக்காலா வளைஞ்ச கொம்பா ஓஓஓ ...
வைக்கலைப் பெருக்கிப் பொலிய வரவிடடா ஓஓஓ ...
நாளது கேட்டு நாட்கம்பு வெட்டி ஓஓஓ ...
நல்ல கடாக்கள் தெரிந்து பிணைத்து ஓஓஓ ...
ஏரது பூட்டி இடமது வலமாய் ஓஓஓ ...
எண்ணெண்ணாத செந்நெல் விளைத்து ஓஓஓ ...
பாண்டியன் எருதுகள் பன்னீராயிரம் ஓஓஓ ...
சோழ னெருதுகள் தொள்ளாயிரம் ஓஓஓ ...
கடலும் திடலும் கோணியலாக ஓஓஓ ...
இரவும் பகலும் ஏற்றி இறக்கப் பொலி ஓஓஓ ...
பொலி பொலி பொலி பொலியம்மா பொலி ஓஓஓ ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புழுதியிலை கிடப்புக்காக வயல் கலப்பையால் உழப்படுகிறது.

இன்னொரு விதமான பாடல்

௨. தாயே! பொலி தம்பிரானே பொலி
பூமிபொலி பூமாதேவித்தாயே பொலி
மண்ணின் களமே மாதாவே மனைவிளக்கே பொலி ஓஓஓ ...
பொன்னின் களமே பொலி பொலி ஓஓஓ ...
முன்னங்கால் வெள்ளையல்லோ பொலி மன்தாயே ஓஓஓ ...
முகம் நிறைந்த சீதேவியே பொலிமன்தாயே ஓஓஓ ...
வெள்ளி வெளிச்சத்திலே - நீ ஓஓஓ ...
விளையாடி வா பொலியே ஓஓஓ ...
வாரிசொரியப் பொலிமன் தாயே ஓஓஓ ...
வளநாடு பொன் சொரியப் பொலி நிறை தாயே ஓஓஓ ...
பொலி பொலி பொலி பொலியம்மா பொலி ஓஓஓ ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு பாட்டு

3. கண்டுப்பனை ஓலை பொலி தன்மதாயே - உனக்குக்
கணக்கெழுத நல்லோலை பொலிமன் தாயே ஓஓஓ ...
மாவிலுப்பைத் தோணி வெட்டி - கலந்தர் ஓஓஓ ...
மாமாங்கம் போருராம் ஓஓஓ ...
சங்கின் (ற)ட முத்தோ பொலிதன்மதாயே ஓஓஓ ...
சமுத்திரத்தின் ஆணி முத்தோ பொலிதன்மதாயே ஓஓஓ ...
சங்கு முழங்கு தல்லோ பொலிமன் தாயே ஓஓஓ ...
சங்கரனார் கோயிலிலே பொலிதன்ம தாயே ஓஓஓ ...
வாட்டிவலமாக வளஞ் சொரியும் பொன்னுக ஓஓஓ ...
பொன்குவியல் கண்டு மனம் பொங்கி நிறைவு கொள்ள ஓஓஓ ...
பொலி பொலி பொலி பொலியம்மா பொலி

இப்படியான பொலிப்பாடல்கள் இவ்வூர் மக்களிடம் வேறும் பலவுள. இப்பாடல்களைக் கேட்ட கடாக்கள் அவ்வசையின் காரணத்தால் தம் நோ மறந்து பணி செய்யும். சூடடிப்போரும் இவ்விசை இன்பத்தால் உற்சாகத்துடன் இயங்குவர். இதற்குக் ''குரக் (குரற்) காட்டுதல்'' என்றும் சொல்லப்படும். பொலி என்ற பதம் நெல்லைக் குறிக்கும். பொலிவு என்பது நெல் அதிகமாக இருப்பதையுணர்த்தும். பல வட்டைகளில் ஏககாலத்தில் சூடு மிதிக்கும்போது ஒவ்வொரு களவட்டிகளிலும் இவ்விசை ஒலிக்கும். அவை மாறி மாறிக் கேட்பவர்களின் செவிக்குப் பெரு விருந்தாகும்.

23. பணியும் பயனும் : இப்பாடல்கள் இடத்துக்கிடம் திரிபுபட்டுக் காணப்படுகின்றன. சூடுபோடும்போது சூடு தள்ளுதல், சூடு கெ(க)ல்லுதல், சூடு கிளறுதல், திர(ரை) வெடுத்தல் போன்ற பல்வகை வேலைகள் நடைபெறும். நெல் உதிராத கதிர்களிலிருந்து வைக்கோலைப் பிரித்தெடுப்பதைத் திரை வெடுத்தல் என்பர். சூடுபோட்டு முடிந்ததும் நெல்லைக் குவித்து வைத்துப் பதர் நீக்குவர். இதற்காகக் கட்டை மிலாறு பாவிக்கப்படும். பொலி தூற்றுவதற்காக வைக்கோலால் சேர்த்துக் கட்டப்பட்ட உயர்ந்த முக்காலி பாவிக்கப்படும். இதற்கு அவு(வ)ரி எனப்படும். அவுரியின் மேல் ஒருவர் ஏறி நிற்க இன்னொருவர் களவட்டியில் குவிக்கப்பட்டிருக்கும் நெற்குவியலிலிருந்து கைப்பெட்டியால் அள்ளி அவரிடம் கொடுப்பார். மேலே நிற்பவர் காற்றடிக்கும் திசைக்கேற்பத் தூற்றலை மேற்கொள்வார். நெல்லை வைரப் பொலி (நல்ல நெல்) சந்து முறி (இரண்டாந்தெரிவு) அரை வயி(கு)றன் (பாதியளவு உள்ளீடு கொண்டது) பதர்க் (பதக்)கடை (அறவே உள்ளீடற்றது) என நாலு பிரிவுகளாக வகுப்பர். தரத்துக் கேற்பச் சாக்குகளில் நெல் அளந்து கட்டப்படும். ஒரு சாக்கில் பத்து மரைக்கால் விதம் கட்டுவது அக்கால வழக்கமாகும். இறுதியில் நெல் மூடைகள் வண்டிகளிலேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூட்டின் அடியைக் கூட்டி எடுக்கும் நெல்வெளியானுக்குரியது. களத்தைக் கூட்டுவதற்குக் கட்டை மிலாறு (பெரிய இடை வெளியுள்ளது) கோலம் (கோலத்து) (மிலாறுகளைச் சேர்த்து நெருக்கமாகக் கட்டியது) என்பன பயன் படுத்தப்படும். சூடு மிதித்து இறுதி நாளன்று களவட்டியில் ஏழைகளுக்கு நெல் வழங்குவது மரபாகும். அன்று களவெட்டிகளில் சனத்திரளைக் காணமுடியும்.



...காபம் குளம் 16 அடித் தண்ணீர் தேக்கக் கூடிய நீர்ப்பாசன வசதி இருக்கின்றது.

24. நிம்மதியும் நிறைவும் : விதைப்பு நெல்லேற்றி வரும்போது என்ன முறையைக் கையாண்டார்களோ அதே பாணியில் விளைவு நெல்லையும் ஏற்றி வரும்போது கவிகள் பாடிக் களிப்புடன் வருவர். கடைசி வண்டியில் அவரவருக்குரிய வேலியின் கம்பு தடிகள், உரல் உலக்கை, தட்டு முட்டுச் சாமான்கள் மற்றும் மீதிப்பொருள்களை ஏற்றிக்கொண்டு வீடு வருவர். அன்றைய தினம் எல்லோருக்கும் போடியார் வீடுகளில் பெருவிருந்து படைக்கப்படும். ஊருக்குள் நெல் வந்தவுடன் ஊர் முழுவதும் உழைப்பின் பயனைப் பெற்ற ஆனந்தத்தில் மலர்ச்சியாகக் காணப்படும்.

நெல் மூடைகளை நீண்ட காலத்துக்கு அடுக்கிவைக்கும் வழமை அக்காலத்திலில்லை. அட்டுவம், பட்டறை, கொட்டு என்பவற்றில் நெல்லைக் குவியலாய்ச் சொரிந்து மூடிப் பாதுகாப்பதே வழக்கத்திலிருந்தது. நெல்லேற்றி வருதலை ''நெல்லுப் பிடித்தல்'' என்பர்.


எ7—இப் புறச் சூழலில் நீளமான வாடி ஒன்றில் கிடைப்பது
வாடுகள் சோரகக்குடிப்பகள்

25. அட்டுவம் : நான்கு அடி உயரமான பெரிய முதிரைக் கால்களை நட்டு நான்கு பக்கமும் நீள் சதுரமாய் வளைகளைப் பொருத்தி அதன்மேல் நடுத்தரக் கம்புகளைப் பரவிப் பாதுகாப்பான ஒரு தட்டார்க நெல் கீழே சிந்தாதவாறு அமைப்பர். அதன் மேல் நெல்மூடைகள் குவியலாகச் சூடுபோல் சொரியப்படும். அவற்றின் மேல் வைக்கோலால் வேய்ந்து தண்ணீர் புகாதவாறு பாதுகாப்பர். இந்த அட்டுவம் பெரும்பாலும் வீட்டின் முன்புறத்தே நிறுவப்படும். இந்த நெல்லை நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பர். குறிப்பாக அடுத்த வேளாண்மைக்குரிய விதை நெல் வெளியானுக்குரிய சோற்று (சோத்து) நெல், அப்போகத்துக்குரிய செலவு என்பவற்றைக் கருத்திற் கொண்டே இந்நெல் சேமிக்கப்படும். ஒவ்வொரு கிழமையும் அல்லது மாதமும் வேளாண்மை செய்யும் வெளியானுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு நெல் அவரின் குடும்பச் செலவுக்காகப் போடியாரால் கொடுக்கப்படும். அதுவே சோற்று நெல்லாகும். சேகு முல்லைக் காரன் என்பவரது அட்டுவத்தின் கீழ் பன்றிகள் குட்டியீன்று இருந்தது இவ்வூரின் பகிரங்கமான செய்தியாகும். இதனால் அக்காலத்தில் அட்டுவத்திலுள்ள நெல் அதிககாலம் பத்திரப்படுத்தப்பட்டிருந்தது என்பதையும் காடுகளினிடையே வீடுகள் அமைந்திருந்தன என்பதையும் நாமறியக் கூடியதாயுள்ளது.

26. கொட்டு :வீட்டுக்குள் கம்பு தடி, கிடுகு, வைக்கோல் முதலியன கொண்டு வட்ட வடிவினதாய் உயரமான கிணறு போன்ற அமைப்பாக இது இருக்கும். இதற்குள் அவ்வப்போது எழும் தேவைக்காகப் பயன்படுத்த வேண்டிய குறிப்பிட்டளவு நெல் பாதுகாக்கப்படும். இது வைக்கோலால் மூடப்பட்டு அதன்மேல் கிடுகுகள் பரப்பிக் கட்டப்பட்டு உறுதி செய்யப்படும்.

27. பட்டறை :நீள் சதுரமாக இது வைக்கோல், கம்புதடி, கிடுகு கொண்டு கட்டப்படும். கொஞ்ச அளவான நெல்லைப் பாதுகாக்கவே ஆழங்குறைந்ததாய் இது தயாரிக்கப்படும். பெரும்பாலும் போடிமார் அட்டுவத்திலும், நடுத்தர வகுப்பார் கொட்டிலும் மூன்றும் படித்தரத்தினர் பட்டறையிலும் அவரவர் வசதிக்கேற்ப நெற் பாதுகாப்பை மேற்கொள்வர். பட்டறை பட்டடை என்பதின் திரிபாகும். நெற்கூடு என்றும் சொல்லப்படும்.

28. சூட்டுக்கள வட்டியும் குழூஉக்குறிச் சொற்களும்

சூடுபோட ஆரம்பித்ததும் களவட்டியில் குழூஉக்குறி (சங்கேதமொழி, பரிபாஷைச் சொல்) ச் சொற்களையே பாவிப்பார்கள். இது முக்குவர் கட்டு எனும் மரபு வழிப்பாரம்பரிய வழக்காறுகும். இச்சொற்கள் பொலிக்குரிய நன்னிமிர்த்த மங்களச் சொற்களாகக் கருதப்பட்டு வந்துள்ளன என்ற ஒரு குறிப்பு ''பொலிக்களப் புது மொழிகள்'' என்ற குறிப்பில் காணப்படுகின்றது. (மொழுகர் எனும் வித்தகர் எழுதிய ''வயல் வரம்பு'' எனும் கையேட்டின் 14 ஆம் பக்கம் பார்க்க) மறந்தேனும் இச்சொற்களைச் சொல்லாது உரிய சொற்களைச் சொன்னால் அவர் சூட்டுக்கள வெட்டிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்பது ஆதிமரபாகும். அப்படிக் குறிப்பிடும் சில சங்கேத மொழிகள் வருமாறுகும் :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாரிக்காலன்—சூடு மிதிக்கும் மாடு (கடா)
பொலி—நெல்
பொலிக்கொடி—வைக்கோல்
கணக்கன்—மரைக்கால்
குஞ்சுவாயன்—வாயொடுங்கிய பெட்டி (கைப்பெட்டி)
நெடுமுழவன்—கயிறு
கோலத்து—மிலாறுக்கட்டு
கலங்கல், வெள்ளம்—தண்ணீர்
வலிச்சான்—ரொட்டி
வெள்ளோடன்—தேங்காய்
கட்டு—வா, போ
பெருக்கம்—இல்லை
மின்னி—நித்திரை
நெடுமின்னி—மரணம்
வருணன்—மழை
கூழைக்கையன்—பேய்
பெருமான்—ஆண்
அடைக்கலச்சல்லி—பெண்
கடற்கரும்பு—மீன்
கைகாச்சி—நெருப்பு
கோணியல்—சாக்கு
வேலைக்காரன்—சூடுகிளறும் வளைகம்பு
போர்—கதிர்க்குவியல்
கரைஞ்சான்—வாழைப்பழம்
கூரைக்கோடு—வீடு
பெருவாயன்—கடகம், ஓலைப்பெட்டி
மின்னி கட்டுதல்—துயில் கொள்ளல்
வாட்டிகட்டுதல்—களத்து ஓரங்களைக் கட்டுதல்
கருங்காய்—பாக்கு
புகைஞ்சான்—புகையிலை
களப்பொலிவு—சூடு மிதித்து முடிதல்
பெரு வெள்ளி—வெளிச்சம்
பத்தினி—விறகு
பூரணி—இளமகள், மங்கை
கருமால்—யானை
தரும்பாய்—கோப்பத்தை
எறச்சான்—ஏத்து
மரங்குந்தி—குரங்கு
பேஞ்சான்—மழை
கமலத்தாய்—சரஸ்வதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்கம்—முரசு என்பன முற்காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பரிபாஷைச் சொற்கள் வழங்கி வந்ததாகவும் காலக்கழிவில் பல வழக்கிறந்து போயின வெனவும் தெரிகிறது.

29. வேறு சில சம்பிரதாயங்கள் : சிலர் நெல்லோடு வயலுக்குப் போய் நெல்லோடு திரும்பும் வழக்குடையவராக இருந்தனர். அதாவது முனை நெல்லோடுபோய்சூடுபோட்டு நெல்லேற்றிக் கொண்டு வருமட்டும் வயலிலேயே தங்கியிருப்பார். பெண்கள் பொலிக்களவட்டிக்குச் செல்லுதல், காலணியோடு செல்லல், நெருப்புக் கொண்டு போதல், புகைத்தல், அமங்கள வார்த்தை பேசல், பெருஞ்சிரிப்புச் சிரித்தல், போ, ஓடு, இல்லை போன்ற சொற்களை உபயோகித்தல் என்பன தடுக்கப்பட்டிருந்தன.

அரிந்த நெற்கற்றைகள் சில வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு துவைத்து நெல் பெறப்படும். இதைப் ''புதிரெடுத்தல்'' என்பர். அவ்வரிசியைக் கொண்டு சோறு சமைத்து, விசேடமான கறிகளுடன் உண்பர். இதைப் ''புதிர்ச்சாப்பாடு'' என்று குறிப்பிடுவர். ஏழைகளுக்கும் இதைக் கொண்டு உணவு கொடுக்கப்படும். நெற்கதிர்களைக் கட்டி வீட்டின் உட்புறத்தில் தொங்கவிடுவர். எல்லா நடவடிக்கைகளும் சமய சம்பந்தமான கிரியைகளோடு ஆரம்பிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*30.* **போடியார் வெளியான் உறவு :** இப்பகுதி மக்களின் வேளாண்மைச் செய்கைமுறை ஏனைய பகுதிகளின் செய்கையிலிருந்தும் பலமாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டதாகத் தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. வயற் சொந்தக்காரரைப் போடியார் என்றும், வயல் செய்பவரைச் செய்கைக்காரன் என்றும் வெளியான், வே(வெள்)ளாண்மைக்காரன், கமக்காரன் என்றும், போடியாரின் ஏவலின்படி கமக்காரர்களை மேற்பார்வையிட்டுச் செய்விப்போரை முல்லைக்காரன் என்றும் அழைப்பர். போடியாரின் வீட்டில் வேலிகட்டுதல், வீட்டுக் கூரைக்குக் கிடுகு கட்டுதல் மற்றும் இன்பதுன்ப நிகழ்வுகளை முன்னின்று நடாத்தல் போன்றவை வெளியான், முல்லைக்காரன் ஆகியோராலேயே நடைபெறும். போடியார் மனைவிக்கு ஒத்தாசையாக இவர்களின் மனைவி, மக்கள் செயற்படுவர். கொச்சிக்காய் அரைத்தல், நெற் குற்றல், மாவிடித்தல், வாசல், வளவுகளைப் பெருக்கித் துப்புரவு செய்தல், வீடு மெழுகுதல், விறகு பிளத்தல் முதலிய பணிகளை இப்பெண்கள் செய்துதவுவர். போடியாரிடம் தொடர்ந்து தொழில் செய்யவும், அவரினதும் குடும்பத்தினரதும் அன்பாதரவைப் பெறுதலுமே இப்படியான இறுக்கமான உறவுக்குக் காரணமாகும்.

*31.* **போடியாரின் தாராளம் :** போடியார் குடும்பம் இவர் செய்யும் வீட்டு வேலைகளுக்குப் பிரத்தியேகமான சன்மானத்தை வழங்குவதோடல்லாமல், இவர்களின் குடும்பத்தில் ஏற்படும் திருமணம், மரணம் மற்றும் வேறு விசேடங்கள் போன்றவற்றிற்குப் பண உதவி செய்வதோடல்லாமல், அவற்றை முன்னின்றும் நடாத்தி வைப்பார். இப்படியாக முதலாளி தொழிலாளிகளின் தோழமையுறவு பின்னிப் பிணைந்ததாக அக்காலத்தில் காணப்பட்டது. அதனுல் வர்க்க பேத முரண்பாடுகளும், மனித நேயத்தையரித்துக் கொண்டிருக்கும் பொருமைப் பூசல்களும் இவ்வூர் மக்களிடம் அக்காலத்தில் காண்பது அரிதாகவிருந்தது.

வயல்களிலே உழவு, மிதிப்பு என்பன மேற்கோள்ளும் காலங்களில் மாடுகளைக் கொண்டு பணிகொள்வோர் ''ஏர்ப்பாடல்'' களைப் பாடி வேலைகளில் வில்லங்கங்காணுமல் அவற்றை மகிழ்ச்சியாக மாற்றி வந்துள்ளனர். அப்படிப்பட்ட பாடல்கள் சில வருமாறுகும்.

ஏர்ப்பாடல்கள்

1. வரம்போ தலகாணி—தம்பி செல்லா உனக்கு
வாய்க்காலோ பஞ்சு மெத்தை
இந்த நடை நடந்தே—என் தம்பி செல்லா நாம்
எப்போ கரை சேர்வோமடா
ஓடி நட கண்டே—என் தம்பி செல்லா உன்
உறுதியுள்ள காலாலே
வெள்ளியினுற் கள்ளாணி—என் தம்பி செல்லா உனக்கு
வெண்கலத்தால் மதியாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டிப்பளை ஆற்றின் புதிய இரும்பு வாராவதி (Bridge)

இன்னொரு பாடல்

2. பட்டியிலே பால்குடித்து பலபேருடன் மேய்ந்து
வட்டியிலே உழவடித்து வந்த வெள்ள ஓடி நட
ஓடி நட ஓடி நட உன்னருமை நானறிவேன்
பொழுதுபடப் போகிறது பொன்னழகா ஓடி நட
ஆக்காட்டி கத்துறது ஆகாயம் கறுக்கிறது
ஆனமழை வருமுன்னே ஆணழகா ஓடி நட
விரால் பனையான் குறட்டைகளும் வரவைக்குள்ளே சுரி பாஞ்சி
கெடக்கிறது புடிக்க வேணும் கெதயாக ஓடி நட
உன்னால உலகமெலாம் உணவுண்டு வாழ்கிறது
பொன்னான என் செல்வா பொட்டகமே ஓடி நட
மண்ணாக இருந்த வயல் மணியாக நெல் சொரிய
கண்ணான என் செல்வா கலங்காமல் ஓடி நட
கறுவல் அதியாரியும் கலந்தர் போடிக்காக்காவும்
கண்மணியே உனைக் காணக் காத்திருக்கார் ஓடி நட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடாக்களும் உழவர் கருணையும் :இப்படியான பல பழைய ஏர்ப்பாடல், மிதி பாடல்கள் இல்லாதொழிந்துள்ளன. நம்முன்னோரின் கவிச் செல்வத்துக்கு இம்மறைவு பெருநட்டமாகும். இப்பாடல்கள் நமக்கு சில உண்மைகளை உணர்த்துகின்றன. உழவர்தம் கால்நடைச் செல்வங்களோடு மிக இரக்கமுள்ளவர்களாக இருந்துள்ளனர். அதனால் கறுப்பாகக் கடாக்கள் இருந்தும் உயர்வு நவிற்சியாக அவற்றை வெள்ளை, பொன்னழகன், ஆணழகன், பெட்டகம், கண்ணான செல்வன், கண்மணி என்றெல்லாம் பெயர் கொண்டு அழைத்துள்ளனர். உயிர்வாழ உதவும் உணவைப் பெருக்கும் இம் மாடுகள் மகத்தான பணி செய்வதால் அக்கால மக்கள் அவற்றை மிகவும் கருணையோடு போற்றி வந்துள்ளனர்.

விவசாயம்-மண்வளச் சொற்கள்

வட்டை—(வெட்டை) வயற்காணிகளின் பரப்பு

வெளி—வயல் நிலம்

அடையா வளஞ்சான்—வயலைச் சுற்றிக்கட்டப்பட்டிருக்கும் பெரிய எல்லை வரம்பு.

அளை—சிறிய நீர்க்கால்

புரன்—தரிசு நிலம்

தல மாடு—மேற்குப்புற வயல்

கால்மாடு—கிழக்குப்புற வயல்

வடிச்சல்—நீரை வெளியேற்றும் வடிகால்

வக்கடை—வெட்டப் படுவதும், அடைக்கப்படுவதுமான வரம்பு வழி (மடை) துவாரம்

தாயளை—பெரிய நீர்க்கால்

முறிவு—வெள்ளத்தால் வரம்பினிடையே ஓடிக்கொண்டிருக்கும் பேரோடை

வாய்க்கால்—வயலுக்குப் பாய்ச்சும் நீரைக் கொண்டு செல்லும் கால்வாய்

பாய்ச்சல்—வயலுக்குள் தண்ணீர் பாயும் மடை

வடிச்சல்—வயலிற் தேங்கிய நீரை வெளியேற்றும் மடை

நட்டுமை—வரம்பிலிருக்கும் கண்ணுக்குத் தெரியாத சிறுதுவாரம். இதன் மூலம் நீர்கசியும்.

நிலையெடுப்பு—ஆரம்ப உழவு

இரட்டிப்பு (இரண்டாமடி) மறு உழவு

சார்—கலப்பை சென்ற தடம்

பலகையடித்தல், பரம்படித்தல்—உழக்கிய சேற்று நிலத்தைச் சமன் செய்தல்

கங்களவு தண்ணீர் (தண்ணி)—இளம் நெற்பயிர் நீரில் மறையுமளவிற்குப் பாய்ச்சப்படும் தண்ணீர்

மாவக்கை—ஒரு பிடியளவு அரிந்த நெற்கதிர்க்கற்றை

உப்பட்டி—பலபிடி நெற்கதிர்களின் தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு—பல உப்பட்டிகளைச் சேர்த்து ஒரு ஆளின் தலைச் சுமைக்கேற்பக் கட்டப்படும் கதிர்க்கட்டு.
சூடு, போர்—பலநூறு கட்டுக்கதிர்கள் குவிக்கப்பட்ட குவியல்
கந்து—கைச் (சிறிய) சூடு
ஒட்டுத்தாள்—அரிவிவெட்டியபின் வரவைகளில் மீந்து நிற்கும் நெற்பயிரின் அடிப்பாகம்
தாள்—நெற்பயிரின் கீழ்ப்பகுதி
தா(ள்)க்கத்தி—அரிவி வெட்டும் கூன் கத்தி
வந்தை—முளைகளுக்குள்ளே கலந்து கிடக்கும் முளைக்காத நெற்கள்
மடி—சரம்பட்டுப் பழுப்பேறிப் பழுதுற்ற நெல்
மறை (ற) நெல்—மணல் நிலத்தில் விளையும் மங்கலான நெல்
வாரி—நல்ல நெல் விளைச்சல்
கோட்டை—நெற்கூடு (வைக்கோலைப் பரப்பி அதன் மேல் நெல்லைக் கொட்டி. மூடி, பெரிய கரைக்காயளவு வைக்கோற் புரியால் சுற்றிய கூடு.)
ஏற்று (ஏத்து—நீரிறைக்கும் நீள் மரக்கூடை
முக்காலி—மூன்று கம்புகளாற் கட்டப்பட்ட கருவி
அட்டாளை—உயர்ந்த பரண் (பெரும்பாலும் பெரிய மர உச்சியில் கட்டப்பட்டிருக்கும்)
புரை—வயல்களில் உயர்ந்த கால்களின் மேற்கம்பு பரவி, களியால் மெழுகிய ஓரளவு நிரந்தரமான வதிவிடம்
பரண்—பதிந்த காவலிடம்
திரும்பி—கைப்பரண் (சிறிய பரண்)
அவணம்—முப்பது மரைக்கால் கொண்ட அளவு (7.5 புஷல்)
ஒரு சாக்கு நெல்—பத்து மரைக்கால் அளவு நெல்
கோவங்காய்ப்பருவம்—நெல் முற்றிப்பழுப்பேறிவரும் பருவம்.
வரம்பறுத்தல்—வயலில் நீண்ட வரம்பிலுள்ள வளர்ந்த புற்களை அரிதல்
காலையடி—மாட்டுத் தொழுவம்

விவசாயிகளின் எளிமையும் இனிமையும்: நம்மூதாதையரின் உயிர்நாடியாக விளங்கிய வேளாண்மைத் தொழிலில் பல்வேறு தனிப்பட்ட செய்கை முறைகளும், மண்வளச் சொற்களும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இங்கு வாழ்ந்த அதிக எண்ணிக்கையிலடங்கிய விவசாயத் தொழிலர்கள் தம் வாழ்வில் வளமும், மகிழ்வும் பெற்று நிம்மதியான ஒரு நிலைப்பாட்டில் தம்மை இணைத்துக் கொண்டதை அவர்களின் செயற்றிறன்களிலிருந்து நாம் உணரக்கூடியதாக உள்ளது. அவர்களின் இசைவு பெற்ற எளிய, அமைதியான பண்பாடுகள் எமக்கும் பெருமை தருவனவாகக் காணப்படுகின்றன.

## வட்டைகளின் தொன்மையும் தோற்றமும்

தொடக்க காலத்தில் பட்டிமேடு, மொட்டையாகல், சேனைக்காடு, ஊரக்காய், பாவங்காய், இலுக்குச் சேனை, நீத்தை முதலிய வட்டைகளில் மாத்திரமே வேளாண்மை செய்யப்பட்டு வந்தது. சனப்பெருக்கத்துக்கும் தேவைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பப் படிப்படியாக பலவட்டைகள் உண்டாக்கப்பட்டன. இப்பகுதியிலுள்ள பெருங்காடுகளை வெட்டியழித்துத் திருத்தியே வட்டைகள் பெருக்கப்பட்டன. ஏறத்தாழ ஐம்பது வருடங்களில் நெற்காணிகள் பெருமளவில் சேர்க்கப்பட்டுள்ளன.

வட்டைகளின் கூறுகள் கண்டம், வெளி எனப்பட்டது. அக்காலம் வாழ்ந்த மக்களின் பேருழைப்பை இந்த நெற் காணிகள் மூலம் நாமறியக் கூடியதாயுள்ளது. சாகாமம், நீத்தை, இலுக்குச் சேனை என்னும் சிறிய கிராமக் குளங்கள் மூலமாக சிறிதளவே நீர்ப்பாசனம் வழங்கப்பட்டு வந்தது. நீத்தையாறு, அம்பலத்தாறு, தாலி போட்டாறு மூலம் ஆறுகளை மறித்துக் குறுக்கே அணைகட்டியும் வயல்களுக்கு நீர்ப்பாசனம் நடைபெற்றது. இயற்கையான சில வசதிகளைப் பயன்படுத்திக் கமக்காரர் தம் சரீர உழைப்பை எல்லை மீறிய நிலையிலும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மண்மூடைகள், கட்டைகள், கம்பு தடிகள், புற்கள் ஆகியவற்றைக் கொண்டு ஆற்றிற் குறுக்கணை கட்டுதல், மிதமிஞ்சிய உழைப்பின்பாற்படுவனவாகும். என்றாலும் எந்தவிதத்திலும் அவர்கள் சோர்ந்து போகாது பலப்பரீட்சை நடாத்தியுள்ளது அவர்களின் திட சித்தத்தைக் குறிப்பனவாகும். அவர்களின் உழைப்புச் சுவடுகளை பின்வரும் வட்டைகளில் நாம் காண்கிறோம்.

## நெற்காணிகளின் பெயர்கள்

1. பட்டி மோடு
2. மொட்டையாகல்
3. சேனைக்காடு
4. ஊரக்கை
5. பாவங்கை
6. இலுக்குச் சேனை
7. நீத்தை
8. களவெட்டியா
9. ஆலின்ரவட்ட
10. முதலைக்கல்
11. நரகக்குழி
12. பனையான் மடு
13. எலவரவெளி
14. தென்ன மரத்துப் பொரயடி
15. சொறியனூறு
16. சப்பாணித்துளாவ
17. ஆலிமுடகாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. எரிக்கிலங்காடு
19. மலையடிக்கண்டம்
20. தாவிபோட்டாத்துக்கண்டம்
21. சேனைக்கண்டம்
22. வட்டமடு
23. பொத்தான
24. முருணவட்டி
25. கல்காரை
26. பாலையடிமடு
27. கித்துப்பத்து
28. அளிக்கம்ப
29. மையான்ரகணத்த
30. நொறச்சோல
31. கிறவல்குழி
32. காட்டுக்கண்டம்
33. காடியன்ர கண்டம்
34. பனங்காட்டுவட்ட
35. அம்மாள்ள குளம்
36. புட்டம்ப
37. சோலைவட்ட
38. பொரன்வெளி
39. அம்மாள்ள கண்டம்
40. சிறு நீத்த
41. வேல மரத்து வெளி
42. அம்பலத்தாறு
43. கணங்குண்டு
44. கல்லடி
45. பெரிய முனங்கு
46. சின்ன முனங்கு
47. சுங்கான் குழி
48. சம்புக்களப்பு
49. முல்லைத்தீவு
50. பொரயடிக்கண்டம்
51. கொக்குப் பீச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. மலங்கு மகுலாஞ சேன
54. விளாவடிக்கண்டம்
55. ஒயித்தாடவட்ட
56. ரெண்டாந்துக்கப்பு
57. கருங்கொடித்தீவுவட்ட
58. தோணிக்கல்
59. வெல்வெந்தா
60. டிப்போமடு
61. ஓமரங்காய்
62. பள்ளச்சேனை
63. நெடுந்தோட்டம்
64. வன்னியன்ர கண்டம்
65. கறுப்பாவெளி
66. கல்மொனங்கு
67. உடுகுடமூல



[illegible] (Ferry [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. கிழவியூர்
69. பனையாமடு
70. கிவிழ்மடு
71. எசங்கணிச் சேனை
72. ஆலங்குளம்
73. ஆனைப்பாம் வெளி
74. பனங்காட்டான்ரவட்டை
75. சாம்பமாரி
76. விளாங்காட்டான்பட்டி
77. சந்திர காலப்புட்டி
78. கப்பல்லவெளி
79. கூப்பிடுகல்
80. செத்திர மகன்ரவெளி
81. கெறவக்குழி
82. அலியான்ரவட்ட
83. சேம்புக்குளம்
84. குடாக்கரவட்ட
85. ஈனுக்கானுடவெளி
86. விப்பனவட்ட
87. தாக்கத்திவெளி
88. எடயடிக்குளம்
89. வள்ளக்குண்டு
90. மோட்டுவெளி
91. சோப்பிரவட்ட
92. குருக்கள் வெளி
93. உகாமுனை
94. கூப்பிடுகல்
95. காலியுப்பட்டி
96. கப்பல்லபுட்டி
97. வெட்டுக்காடு
98. எசங்குச் சேனை
99. சல்லிரபுட்டி
100. சிப்பித்திடல்
101. பெரியகுளவட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. வாங்காமம்
103. வாணகமவட்டை
104. தொடரி வட்டை
105. ஆனசுட்ட குளம்
106. புளியடிவட்ட
107. மொட்டயான்ர வெளி
108. காட்டுக்குடுப்பு
109. மருதயடி ஓடவெளி
110. பெரியவெளி
111. ஆனக்காசின்ர புட்டி
112. கவடாப்புட்டி
113. பெரியபுதுவெளி
114. வாழையன்ர ஓட
115. சின்னப்புது வெளி
116. விப்பிரியா
117. கோழிக்காலே வெளி
118. பள்ளவெளி வட்டை
119. குருந்தங்குளம்
120. அல்மந்தா குளம்
121. சிங்கப்புற வட்டி
122. கொட்டப்பாக்குட காலேயடி
123. ஓடிய வெளி
124. ஆலேயடி வட்ட
125. சாகாமம்
126. வேப்பையடி வட்டை
127. கூனாவடிக்கண்டம்
128. அவக்கர்ரபுட்டி
129. அளுக்கன் வெளி
130. முப்பத்து மூணேக்கர்
131. கறுத்தார்ர வெளி
132. சங்கோடிப்பத்துவெளி
133. ஊறுயின்ர வெளி
134. சுங்கார்ர வெளி
135. பட்டியடி வெளி முதலியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட நெற்காணிகளின் பெயர் அவற்றை மக்கள் அழைக்கும் ஒலி வடிவத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. அக்காணிகள் தனிப்பெயராகவும், வட்டை, கண்டம், வெளி, காலை, குழி, பள்ளம், மேடு போன்ற சொற்களை அவற்றின் கடைசியிற் சேர்த்துச் சொல்வதும் பழங்காலத்து மரபாகும்.

**ஆனப்பாம் வெளி :** இதையிட்ட ஒரு சுருக்க வரலாறுண்டு. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியார் இவ்விடத்தில் (Elephant Farm) எலிபன்ற் பாம் என்று சொல்லப்படும் யானைப்பண்ணையை நடாத்தியதாகவும் அங்குள்ள யானைக்குட்டிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. அந்தப் பண்ணையில் சீனிப்பணிக்கர், ஆதம்பணிக்கர் என்போர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவஞானமூர்த்தி என்போரின் மேற்பார்வையில் இங்கு பணியாற்றியதாகவும் விளங்குகிறது. காலக்கழிவில் இப்பண்ணை மாட்டுப் பண்ணையாக மாற்றப்பட்டுள்ளது.

(ஆதாரம் : பெரிய பள்ளிவாசல் பிரதம மரைக்காயர் அஹமத் லெப்பையிடம் பெற்ற கையேட்டுக்குறிப்பு. சீனிப்பணிக்கரால் குறிப்பிடப்பட்டுள்ளது) Elephant—யானை, Farm—பண்ணை இதைத்தான் மக்கள் "ஆனப்பாம் வெளி" என அழைத்தனர். இதுபோன்று வடக்கு மாகாணத்தில் ஆனைப்பந்தி, ஆனையிறவு என்னும் பெயர்கள் இப்படிப்பட்ட காரணப் பெயராயிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.



பனங்காடு தில்லையாற்றின் மேலமைக்கப்பட்ட தற்காலிக மரப்பாலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புராணக் குளங்கள் :** கருங்கொடித்தீவில் அக்காலத்தில் பல சிறிய குளங்கள் இருந்துள்ளன. அவைகளிலிருந்து அவசியமேற்படுமிடத்து கொஞ்ச அளவு பரப்புள்ள வேளாண்மைக்கும், தோட்டப் பயிர்களுக்கும் நீர் பாய்ச்சியுள்ளனர். அவை அகத்திக்குளம், முள்ளிக்குளம், பெரியகுளம், ஓடம எடுத்த குளம், தாழங்குளம், ஏத்தாலைக்குளம், ஆலையடிக்குளம், கருங்கொடித்தீவு (பள்ளியடி)க் குளம், மருதவெட்டுவான் குளம், மன்னன் குளம், முருணை வட்டிக்குளம், பாலையடி மடுக்குளம், சேம்புக்குளம், ஆனைவிழுந்த குளம், அம்மாள்ளகுளம், சம்புக்களப்புக்குளம், சங்கரப்பத்தான் குளம், குடாவெளிக்குளம், சிறிய மருதவெட்டுவான் குளம், அவக்கர் குளம், சாம்பமாரிக்குளம் முதலியனவாகும். இக்குளங்களில் மீன்பிடித்தல், தாமரை இலை, பூ, காய், கிழங்கு, புனல் எடுத்தல், ஒல்லிக்காய் பறித்தல் என்பனவும் நடைபெற்றுள்ளன. குளங்களுக்குட் காணப்பட்ட மரங்களும் பட்ட மரக்கொப்புகளும் பறவைகளின் சரணாலயங்களாக இருந்ததுமல்லாமல் மிருகங்கள் நீரருந்தும் நிலையங்களாகவும் பயன்பட்டுள்ளன. குளங்களில் வசித்த பலவகை, பலநிறப் பறவைக் கூட்டங்கள், மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் எழிற் காட்சிகளாகத் தென்பட்டுள்ளன. அதிகமான மாட்டுக்காலைகள் குளங்களை அண்டியே அமைந்திருந்தன. இங்குள்ள சாகாமம் குளம் 16 அடி நீரைத் தேக்கிவைக்கக் கூடியதாகும். இலுக்குச் சேனை, நீத்தைக்குளங்கள் இதற்குக் குறைந்த நீரையே உள்ளடக்கியுள்ளன. வம்மியடிக்குளம் சாகாமக்குளத்தின் தாங்கியாகவிருப்பதால் இதிற் தேக்கப்பட்ட நீர் வால்காட் வழியாகக் குளத்துக்குட் பாய்ச்சப்படுகின்றது.

## செலவு வகைகள்

முற்காலத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் வேளாண்மை அறுவடை செய்து, வீட்டுக்கு நெல்லேற்றி வரும்வரை இருபது ரூபா அளவிற் செலவாகும். இது ஏறத்தாழ 75 வருடங்களுக்கு முன் 50 ரூபாவாகவிருந்தது. பின்படிப்படியாய்க் கூடி வந்து கடந்த சில வருடங்களுக்குமுன் 4000 ரூபா அளவில் காணப்பட்டது. இதன் விதா சாரம் கடந்த காலங்களில் மிகவும் அதிகரித்து வந்து 1990 இல் பின்வருமாறு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஒரு ஏக்கரின் செலவு ஆரம்பத்திலிருந்து வீட்டுக்கு நெல்லேற்றி வரும் வரை பின்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| குத்தகை | = | 2,000 ரூபா |
| உழவுப்பொறி | = | 800 ரூபா |
| விதைநெல் | = | 1,000 ரூபா |
| வரம்புகட்டல் | = | 200 ரூபா |
| விதைப்பாடு | = | 300 ரூபா |
| களைகொல்லி | = | 600 ரூபா |
| வளமாக்கி | = | 1,350 ரூபா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கிருமிநாசினி | = | 600 ரூபா |
| வெட்டுக்கூலி | = | 1,000 ரூபா |
| சூடுமிதிப்பு | = | 1,500 ரூபா |
| செய்கைக்காரர் | = | 2,000 ரூபா |
| பொதுச்செலவு | = | 150 ரூபா |
| மொத்தச் செலவு | = | 11,500 ரூபா |

இந்த 11,500 ரூபா செலவுக்கும் 10 அவணம் (75 புஷல்) நெல் செலவாகின்றது. அதற்கு மேல் நெல்விளைவு கண்டாற்தான் ஆதாயம் கிடைக்கும்.

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆந் திகதியிலுள்ள விலைப்படி பார்த்தால் நெல்லின் அரசு உத்தரவாத விலை ஒரு புஷலுக்கு 100 ரூபா. வெளிச் சந்தை வியாபாரிகளின் விலை 165 ரூபா. ஒருவர் தனியாருக்கு நெல்லை விற்பதன் மூலம் ஓரளவு தான் முதலீடு செய்த பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் எல்லோருக்கும் ஒரு ஏக்கர் வேளாண்மை விளைவில் பத்தவணம் நெல்லைப் பெற்றுக் கொள்ளல் சாத்தியப்படாது.

சராசரியாக ஒரு ஏக்கர் விளைவு எட்டு அவணமாகக் காணப்படுகின்றது. இப்போதுள்ள செலவுகளைப் பொறுத்தவரை இது கட்டுப்படியாகாது. சொந்தக் காணி செய்பவர் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம்.



அக்கரைப் பாக்கியன்



திருமதி ரட்ணம் சிவப்பிரகாசம். J.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி, உழவுப் பொறி ஆகியன சொந்தமாய் உள்ளவர்களும் விதைநெல் மற்றும் செலவுகளுக்கான காசு வசதியுள்ளவர்களுமே வேளாண்மை வகையில் முன்னேறக் கூடியதான வாய்ப்பு இருக்கிறது. இங்கு பெரும்பாலானோரிடம் காணிகள் உண்டு. ஏனைய வசதிகள் இல்லை. இப்படிப்பட்டோர் ஆரம்பத்திலிருந்து இறுதிவரையுமுள்ள பணத்தேவைகளுக்காக வட்டி, விளைச்சலுக்குக் கடன் வாங்குகின்றனர். இவர்களின் பெறுபேறு பாதகமாக அமைந்தால் அவர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டியுள்ளது. இப்படியானதொரு நிலை இரண்டு மூன்று முறை தொடர்ந்தால் தாம் வசிக்கும் வீடு, வளவுகளைக் கூட விற்றுக் கடனையடைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றனர்.

இவ்வூர் வாசிகளில் கணிசமான அளவு விவசாயிகளாக இருப்பதால் நட்டமோ நயமோ இத்தொழிலைச் செய்தே ஆக வேண்டிய இயற்கை நியதிக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அரசின் நெற்களஞ்சிய சாலைகளின் நோக்கம் தோல்வி கண்டுள்ளது. வெளியாரின் விலைகளும் கூடுதலாக இருப்பதால் நெல் முழுவதும் வெளிச் சந்தையிலேயே விற்கப்படுகின்றன. இப்பகுதியின் விவசாய விசாலிப்புச் செயற்பாடுகள் அறிவுபூர்வமான சரியான அணுகுமுறையில் இதுவரை அமுல் நடத்தப்படாமையே நெல்லுற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணியாகும். இதனால் இந்த நாட்டின் முன்னேற்றமுஞ் செழிப்பும் பின்தள்ளப்பட்டுள்ளதெனலாம்.



முற்கால உபயோகத்திலுள்ள சேரக் கால், வட்டி, செம்பு பலகைக்குற்றி கற்பன்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் அதிகாரம்

### வித்தியாலயங்களின் விபரம்
### (1989 இல் உள்ளபடி)

### அல் - ஸிறுஜ் வித்தியாலயம்

ஆரம்பம்: 1958-11-02

அதிபர்: அல்-ஹாஜ் எம்.ஏ. சாலிமு (B.A. DIP -in - Ed)

ஆசிரியர் குழுவினர்.

01. ஜனாப் வை.பி. அகமது
02. ஜனாப் எம்.ஜ.எம். முகையதீன்
03. ஜனாப் எம்.ஏ.எம். அமீர்
04. ஜனாப் எம்.ஏ.எம். முஸ்தபா
05. திருவாட்டி ஜே.ஜுனைதீன்
06. ஜனாப் ஏ.ஏ. கரீம்
07. ஜனாப் எஸ்.சரிபுத்தீன்
08. ஜனாப் ஏ.பி. சரிபுத்தீன்
09. ஜனாப் எம்.ஏ.ஏ. றஸ்ஸாக்
10. ஜனாப் எம்.எம். அலியார்
11. ஜனாப் எம். எம்.ஏ. பரீத்
12. திருவாட்டி ஏ.பி.எம். பாத்தும்மா
13. ஜனாப் எம்.எம்.எஸ். ஹமீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஜனாப் எஸ்.யு.எம். சகீத்
15. ஜனாப் கே.யு.சேகு இப்ருஹிம்
16. ஜனாப் எஸ்.ரி.எம் ஹனிபா
17. திருவாட்டி ஏ.என்.செய்னுதீன்
18. ஜனாப் எம். றஹ்மத்தும்மா
19. செல்வி எம்.சீனத்தும்மா
20. ஜனாப் ஏ.எல்.எம். ஸக்கரிய்யா
21. திருவாட்டி எம்.ஆர்.எம். ஹாஷிம்
22. திருவாட்டி ஜே.எம். சரீபு
23. செல்வி எம்.ஏ. சாலிஹா பீ.ஏ.
24. ஜனாப் எஸ்.எம்.ஹுஸைன் பீ. காம்
25. ஜனாப் எம்.ஏ. சுபைதீன்
26. செல்வி என்.எம். யூசுப்லெப்ப
27. ஜனாப் எம்.எம். ஹாஷிம்
28. ஜனாப் ஏ.எஸ்.ஏ. கியாஸ்
29. ஜனாப் எம்.ஏ. அலாவுத்தீன்
30. ஜனாப் எம்.ஐ.எம். இல்யாஸ்
31. செல்வி எம்.எம். றமீஸா

தொண்டர் ஆசிரியர்
01. செல்வி எம்.ஐ. அவ்வாக்குட்டி
02. செல்வி எம்.ஐ. சுபைதா
03. செல்வி எம்.ஏ. ஜமிலா
04. ஜனாப் எம்.ஏ. முபீஸ்

மாணவர் தொகை : 1100

### அல்-பாத்திமிய்யா வித்தியாலயம்

ஆரம்பம்:- 1968-03-15
அதிபர்:- ஜனாப் எம்.எம். ஏ. முஹ்யித்தீன்
ஆசிரியர் குழுவினர்

01. ஜனாப் எம்.ஏ. ஜஃபர்
02. ஜனாப் எம்.ஐ.எம். அபூபக்கர்
03. ஜனாப் எஸ்.எம். முஹிதீன்
04. ஜனாப் எஸ்.எம். அலியார்
05. ஜனாப் ஐ.எல்.எம். இப்ருஹிம்
06. ஜனாப் ஏ.எல். சரிபுத்தீன்
07. ஜனாப் எம்.ரி. ஜமால்தீன்
08. ஜனாப் எம்.எம். உதுமாலெப்ப
09. ஜனாப் எம்.ஐ.எம். மக்கீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஜனாப் எம்.பி.ஏ. மஜீத்
11. செல்வி எம்.ஐ. அல்வாநாச்சி
12. செல்வி எம்.ஐ. மர்ஜானி
13. ஜனாப் எம்.எச். பரீத்
14. ஜனாப் எஸ்.எம்.எம். இப்றுஹீம்
15. ஜனாப் எச். தாலிப்
16. ஜனாப் எம்.ஐ.எம். றஜாப்

மாணவர் தொகை:- 608

அல் - பத்ர் வித்தியாலயம்

ஆரம்பம்:- 1987-04-01
அதிபர்: ஜனாப் எம்.ஐ. அபூ அஸீஸ்
ஆசிரியர் குழுவினர்

01. ஜனாப் எம்.ஏ.ஙி.எம். இஸ்ஹாக்
02. ஜனாப் மௌலவி எம்.எஸ். அப்துல் ஜப்பார் (ருஸிக்)
03. எம்.ஐ.எம். முஸ்தபா

மாணவர் தொகை: 72

அல் - முனவ்வறு வித்தியாலயம்

ஆரம்பம்:- 1871 ஆவணி மாதம்
அதிபர்: ஜனாப் ஏ.ஜே.எம். ஷரீப்
ஆசிரியர் குழுவினர்

01. ஜனாப் ஏ.ஏ. முகையதீன்
02. ஜனாப் எம்.ஏ.ஏ. மீசா சாஹிப்
03. ஜனாப் எம்.எம்.எம். முகையதீன்
04. ஜனாப் என்.ஏ. கபூர்
05. ஜனாப் எம்.ஏ. மீரா முகையதீன்
06. ஜனாப் ஏ. இஸற். எம். இப்றுஹீம்
07. திருவாட்டி யூ.எஸ். முஹம்மத்
08. ஜனாப் எம்.பி.எம். முகையதீன்
09. ஜனாப் ஆர்.எம். பஷீர்
10. ஜனாப் எம்.எம். நஹ்மத்தும்மா
11. ஜனாப் எஸ்.யூ. ஆதம் லெப்ப
12. ஜனாப் என்.பி.எம். அமீர்
13. செல்வி எம்.ஐ. நஜிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் - ஹிதாயா வித்தியாலயம்

ஆரம்பம்:- 1907 இல்.

அதிபர்:- ஜனுப் ஏ. ஆதம் லெப்ப

ஆசிரியர் குழுவினர்

01. ஜனுப் எஸ். ஆதம் லெப்ப
02. ஜனுப் எம்.ஏ. மாக்கான்
03. ஜனுப் எம்.ரி.எம். ஹனியா
04. ஜனுப் ஏ.எம். கரீம்
05. திருவாட்டி ஆர்.யூ. அபுல்காசிம்
06. ஜனுப் எச்.யூ. லியாக்கத் அலி
07. ஜனுப் எஸ்.எம். ஆதம் லெப்ப
08. செல்வி ஏ.சி. செய்யதும்மா
09. செல்வி எஸ்.எம். மசாகிறு
10. செல்வி எம்.ஐ. செரீறு
11. செல்வி எம்.ஏ. நஜ்மா

மாணவர் தொகை:- ஆண்: 156

பெண்: 130

அம்பலத்தாறு ஷெய்கு சிக்கந்தர் வலி வித்தியாலயம்

ஆரம்பம்:- 1987-03-23

அதிபர்:- ஜனுப் எம். கலந்தர் லெப்ப

உதவி ஆசிரியர்: ஜனுப் எம்.ஐ. ஹுஸைன்தீன்

மாணவர் தொகை: ஆண் 25

பெண் 10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம்

ஆரம்பம்:- 1941-05-15

அதிபர்:- ஜனுப் எம்.ஐ. ஜுனைதீன்

துணை அதிபர்:- ஜனுப் ஏ.எல். இப்ருஹிம்

ஆசிரியர் குழுவினர்:-

01. திருவாட்டி ஏ.யூ.எம். இப்ருஹிம்
02. திருவாட்டி கே. ஜமால்தீன்
03. திருவாட்டி ஆர்.எப். காரியப்பர்
04. திருவாட்டி எல். கலந்தர் லெப்ப
05. திருவாட்டி ஏ.எம். ஹாஷிம்
06. ஜனுப் ஏ.எல். அலாவுதீன்
07. திருவாட்டி எப்.ஏ. கபூர்
08. திருவாட்டி எஸ். உதுமாலெப்ப
09. ஜனுப் எச்.என். உமறுலெப்ப
10. திருவாட்டி எஸ்.எவ். கலீல்
11. திருவாட்டி கே.யூ.ஏ. மஜீத்
12. திருவாட்டி எல்.பீ. றஹீம்
13. ஜனுப் மௌலவி எம்.ஏ.எம். சஹாப்தீன்
14. ஜனுப் எஸ்.என்.ஏ மஜீத்
15. ஜனுப் எஸ்.ஏ.சி. முஹம்மது அஷ்றப்
16. திருவாட்டி கே.எம். ஹாஷிம்
17. திருவாட்டி ஜே. அப்துற்றஷீத்
18. திருவாட்டி எஸ்.ஆர்.ஏ. குத்தூஸ்
19. திருவாட்டி எச். அலி உதுமான்
20. ஜனுப் எம்.ஏ.சி. அப்துல்ஹையூ
21. செல்வி எம்.எச்.எஸ். மர்ஜானு
22. திருவாட்டி ஏ.யூ. சம்சுதீன்
23. திருவாட்டி ஏ. ஜஃபர்
24. ஜனுப் எம்.பீ. அப்துல்ஹமீத்
25. செல்வி ஏ.எச். ஹஜ்ஜிநோனு
26. திருவாட்டி மல்லவியா சல்மா
27. ஜனுப் ஏ.ஜே.எம். சாலிம்
28. செல்வி ஏ.எல். நெம்சும்மா
29. திருவாட்டி எஸ்.எஸ்.எம். அமீன்
30. திருவாட்டி எப்.ஐ.எம். இப்ருலெப்ப
31. செல்வி எஸ்.எம். றெஸானு
32. செல்வி ஏ.எல். பஷீரு
33. ஜனுப் ஏ.எல். அத்துல்ஹமீத்
34. ஜனுப் எம்.எஸ். அபுல் ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஜனாப் எம்.எஸ்.எம். மஹ்ரூப்
36. செல்வி ஏ.எம். மஹ்பூபா
37. செல்வி எம்.பி. ஹயாத்து பீவி
38. திருவாட்டி. பி. மீராமுகையதீன்
39. செல்வி ஏ.ஜே. பஸீருஉம்மா
40. செல்வி எம்.எல்.எஸ். ஹஸீலா
41. செல்வி எம்.ஐ. ஜெமீலா பீவி
42. ஜனாப் கே.எம். நஜ்முத்தீன்
43. செல்வி ஏ.எம். இஸ்ஸத்துல் பரீனா
44. செல்வி எம்.ஐ. சித்திபரீதா
45. ஜனாப் எம்.ஏ.எம். இப்றுஹிம்
46. ஜனாப் எம். அன்ஸார் காரியப்பர்
47. ஜனாப் எஸ்.எல். சேகு இப்றுஹிம்

மாணவியர் தொகை: 1305

அடிப்படைத்தரவுகள்:

பாடசாலைதிறக்கும்போது நியமிக்கப்பட்ட ஆசிரியர்: திருவாட்டி. எம். கே. செல்லையா மாத்திரம்.

சேர்ந்த மாணவியர் தொகை: 08

உருவாக்க உழைத்த குழு:- கிராம முன்னேற்றச் சங்கம்

கடமையாற்றிய அதிபர்கள்

1941-05-15-1941-06-30 திருவாட்டி எம்.கே. செல்லையா
1941-07-01 1955-12-31 திருவாட்டி வீ. விஞசித்தம்பி
1956-01-01-1958-12-31 திருவாட்டி ஆர். காசிநாதர்
1959-01-01-1973-02-26 திருவாட்டி எஸ். மீரா
1973-02-26-1974-12-31 ஜனாப் ஏ.சி.எம். இப்றுஹிம்
1975-01-01-1979-09-18 ஜனாப் எம்.ஏ.எம். முகையதீன்
1979-09-19-1985-07-24 ஜனாப் எம்.ஐ.எம். நசீம்
1985-07-25- இற்றைவரை ஜனாப் எம்.ஐ. ஜுனைதீன்

முதலாம்வகுப்போடுஆரம்பித்துக.பொ.த.(சாதாரணதர)வகுப்புவரை 1963 டிஸம்பர்

க.பொ.த (உயர்தர) வகுப்பு:- கலை, வர்த்தகம்: 1984

க. பொ. த (உயர்தர) வகுப்பு:- விஞ்ஞானம்: 1989

க.பொ.த (உயர்தரம்) 1987 இல் முதன்முறை: 09/10 மாணவிகள்

சர்வகலாசாலை சென்றோர்: 10 மாணவியர்

அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டியில் (மனித உரிமை நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது) தமிழ் மூலம் முதலாமிடம் பெற்றது.

இவ்வித்தியாலயம் மத்தியத் தலமாக்கப்பட்டு நடைபெற்று வரும் வகுப்புகள்:-

1. சர்வகலாசாலைக்குத் தேர்வுபெற்றவர்கள் ஆங்கில வகுப்பு (GELT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆசிரியர், ஏனையோர்க்கான ஆங்கில வகுப்பு: (TACEP)
3. பாடசாலையிலிருந்து இடை நடுவில் சென்றோர்க்கான தொழிற் பயிற்சி வகுப்பு
4. அக்கரைப்பற்றுக் கோட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கான சகல சேவைக்காலப் புத்தூக்க வகுப்புகள்
5. க.பொ.த (சா/த) க.பொ.த (உ/த) பகிரங்கப் பொதுத் தேர்வுகளுக்கான மத்திய நிலையம்

வகுப்புகள்:- முதலாம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டுவரை

ஆண்கள் வித்தியாலயம்

ஆரம்பம்:- 1945-07-04

அதிபர்: ஜனாப் பி.எஸ். மீரா

ஆசிரியர் குழுவினர்.

01. ஜனாப் ஏ.எல். முகையதீன்
02. ஜனாப் ஐ.எம். அபூபக்கர்
03. ஜனாப் எச்.ஸி.எம். இப்றுஹிம்
04. ஜனாப் ஏ.எம். யூசுப்
05. ஜனாப் எம்.எம். ஆதம்லெப்ப
06. ஜனாப் எஸ். முஸ்தபாலெப்ப
07. செல்வி எம்.ஐ. சித்தி நபீஸா
08. செல்வி ஏ.எல். ருகிலா உம்மா
09. ஜனாப் எஸ்.ஏ. கமால்தீன்
10. ஜனாப் எஸ்.எல்.எம். இஸ்மாயீல்
11. திருவாட்டி யூ.எச். சீனிமுகம்மது
12. செல்வி எம்.ஏ. சுபைதா உம்மா
13. ஜனாப் எம்.எச். அப்துல் வஹாப்
14. ஜனாப் என்.எம். சமீம்
15. ஜனாப் எம்.ஐ. சாபி
16. செல்வி எம்.ஐ. ஹுசைமா
17. ஜனாப் எம்.வை.பி. ஆதம்லெப்ப
18. ஜனாப் மவ்லவி எம்.ஐ. சம்சுதீன்
19. ஜனாப் எம்.எஸ்.ஏ. நயீம்
20. திருமதி எஸ்.இஸற். நஜ்முத்தீன்

மாவணவர் தொகை: 553

வகுப்புகள்: ஆண்டு 1-8 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலுக்குச் சேனை அல்-ஹுதா வித்தியாலயம்

ஆரம்பம்:- 1987-03-24

அதிபர்:-அல்-ஹாஜ் எ.ஸ்.எம். ஷரீப் மவ்லவி

உதவியாசிரியர்:- ஜனாப் எம்.எல். சலீம்

இப்பாடசாலை அம்பாறை மாவட்ட மக்கள் கொங்கிரஸின் முயற்சியால் உருவாக்கம் பெற்றது.

### முறுவோடை சம்சுல்-உலூம் வித்தியாலயம்

ஆரம்பம்: 1978-02-09

அதிபர்: ஜனாப் எஸ்.யூ.எம். ஜமால்தீன்

ஆசிரியர் குழுவினர்

01. ஜனாப் ஏ.ஜி.ஏ. சமத் மவ்லவி
02. ஜனாப் எம்.ஐ. பாறூக்
03. ஜனாப் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அபூபக்கர்
04. ஜனாப் எம்.ஏ.ஏ. கனி
05. செல்வி எஸ். சனூறா

மாணவர் தொகை: 225

* இப்பாடசாலைக்கான வளவை தாவூது லெப்பை கனிமுகம்மது (சைக்கிள் கடை) அவர்களும்
* ஜனாப் ஐ.எல்.எம். முகையதீன் (ஷறீகிம் போடியார்) அவர்களும் நன்கொடையாய் வழங்கினர்.
* பாடசாலைக்காக தற்காலிகக் கட்டடம் அல்-ஹாஜ் எம்.ரி.எம் இப்றாஹிம் (மாணிக்க வணிகர்) அவர்களால் நன்கொடையளிக்கப்பட்டது.

### ஆறும் குறிச்சி முஸ்லிம் வித்தியாலயம்

ஆரம்பம்:- 1963-01-01

அதிபர்: ஜனாப் எம்.ஐ.ஏ. கமாலுத்தீன்

ஆசிரியர் குழுவினர்

01. ஜனாபா எம்.ஐ. ஆதம் லெவ்வை
02. ஜனாபா எம்.பீ. யூசுப்
03. ஜனாபா ஆர்.யூ. பாறூக்
04. ஜனாபா ஆர்.எல். அபூபக்கர்
05. ஜனாபா இஸற்.ஏ.எம். ஹாஷிம்
06. ஜனாபா எஸ்.ஆர். சரிபுத்தீன்
07. ஜனாபா ஏ.எல். நஜுமாபீவி
08. ஜனாப் எஸ்.எல். செய்னுலாப்தீன்
09. ஜனாபா எஸ்.எம். சக்கரிய்யா
10. ஜனாபா எஸ்.எச்.எம்.ஏ. காதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஜனுபா எப்.யூ.எம். இப்ருலெப்பை
12. ஜனுப் எச்.எம்.எம். பைஹேறான்
13. செல்வி எம்.ஏ.சி. சாபிரு
14. செல்வி ஏ.எல். சித்தி சபுரு
15. செல்வி யூ.எஸ். சமீனு

மாணவர் தொகை: 475

* அறுநூறு மாணவர்களையும் இருபது ஆசிரியர்களையும் கொண்டு வளர்ச்சியடைந்திருந்த இப்பாடசாலையின் ஆறும் ஆண்டு நீக்கப்பட்டதால் மாணவர், ஆசிரியர் தொகைகுறைந்தனர்.
* அல்ஹாஜ் எம்.ஏ.எம். முஸ்தபா அவர்களின் காலத்தில் இவ்வித்தியாலயம் சகல துறைகளிலும் முன்னேறியது.
* தற்போதைய அதிபரின் பெருமுயற்சியால் பௌதீகத் தேவைகள் நிறைவு பெற்றன.

ஹிஜ்ரு வித்தியாலயம்

ஆரம்பம்:- 1981-02-11

அதிபர்: ஜனுப் ஏ.எம். அபூபக்கர்

ஆசிரியர் குழுவினர்

01. ஜனுப் ஐ.எல். ஆதம்லெவ்வை
02. ஜனுபா எஸ்.ரி. மம்மதும்மா
03. செல்வி ஏ.பி. கரீமா பீவி
04. செல்வி எம்.ரி. சித்தி ஜெஸீலா

மாணவர் தொகை: 131

* இவ்வித்தியாலய ஆசிரியர்களினதும் பெற்றோரினதும் சொந்தச் செலவில் முன்பக்க மதிற் சுவர் கட்டப்பட்டது.

பனங்காடு வித்தியாலயம்

ஆரம்பம்: 1936.10.01

அலுவலர்கள்: 1. திரு க. தங்கவேலு (அதிபர்)
2. திரு. சீ. சபாரத்தினம்
3. திரு. ஆ. உலகராசா
4. திருமதி யூ. லோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திரு. வ. மாணிக்கவேல்
6. செல்வி இ. ஜானகி
7. திரு. தி.ச. சிவானந்தராசா

மாணவர் தொகை: 361. 8 ஆம் ஆண்டு வரை வகுப்புகள் உள்ளன.

### கோளாவில் விநாயகர் வித்தியாலயம்

ஆரம்பம்: 1951.05.03

அலுவலர்கள்:
1. திரு. க. காங்கேச பிள்ளை (அதிபர்)
2. திரு. க. காசிக்குட்டி
3. திருவாட்டி ம. சோமசுந்தரம்
4. திரு. ம. கணபதிப்பிள்ளை
5. திருமதி எம்.என். உலகராசா
6. திருமதி ஆர். இராஜரட்ணம்
7. திரு. ஈ. கனகசபை
8. திரு. பி. பேரின்பம்
9. திரு. எம். தங்கவேல்
10. திரு. சி. கணேசன்
11. திருமதி பி. சாமித்தம்பி
12. திரு. பி. கணேசபிள்ளை
13. திரு. பி. இலட்சுமி
14. திரு. ரீ. அல்லிராஜா
15. திரு. பி. தணிகாசலம்
16. திருமதி பி. தர்மதாஸ
17. திரு. க. பாக்கியராசா
18. திரு. பி. சற்குணாநந்தம்
19. திரு. சி. நடேசன்
20. திருமதி ரீ. தங்கவேலு
21. திரு. எஸ். இராசமாணிக்கம், B.A. (Hons.)

மாணவர் தொகை ஆண்கள்: 334
பெண்கள்: 316

* ஆண்டு 01 இல் இருந்து 12 வரையுண்டு.

இவ்வித்தியாலயம் கட்டப்பட்டிருக்கும் வளவை 1949 இல் அறவியார்-ஹாஷிம் என்பவர் (சேகு அகமது அதிபரின் தந்தை) திருசங்கர தாஸ் சாண்டோ அவர்களின் வேண்டுகோளின் பேரில் நன்கொடையாக வழங்கினார். பால் விற்ற முருகன் என்பவர் அறவியாருக்கு அவ்வளவைக் கிரயமாக விற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலையடி வேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயம்

ஆரம்பம்: 1952.05.16

அலுவலர்கள்: 1. திரு. மு. கருணாநிதி (அதிபர்)
2. திருவாட்டி செல்வநேசம் சபாரத்தினம்
3. திரு. சி. சிவஞானமூர்த்தி
4. திருமதி சிவநேசம் குணரத்னம்பிள்ளை
5. திரு. ச. காசிபதி
6. திரு. க. யோகராசா
7. திரு. சா. புண்ணியமூர்த்தி
8. செல்வி ச. கருணையம்மா

இங்கிருந்து 12 பிள்ளைகள் 5 ஆம் வருடப் புலமைப் பரிசிற் தேர்வில் 1976 இல் இருந்து சித்தி பெற்றுள்ளனர்.
மாணவர் தொகை: 340

ஒவ்வொரு விஜயதசமியிலும் பெருமளவில் அன்னதானம் கொடுக்கப்படும்.

### அளிக்கம்ப (தேவகிராமம்) வித்தியாலயம்

ஆரம்பம்: 1964.07.14

அலுவலர்கள் 1. திரு. சி. பொன்னம்பலம் (அதிபர்)
2. திரு. மா. கணபதிப்பிள்ளை
மாணவர் தொகை: ஆண்கள் 54
பெண்கள் 50

### கண்ணகிபுரம் கண்ணகி வித்தியாலயம்

ஆரம்பம்: 1970.05.01

அலுவலர்கள் 1. திரு. க. கார்த்திகேசு (அதிபர்)
2. திரு. வே. சந்திரசேகரம்
மாணவர் தொகை : 225
ஆண்டு 1-5 வரை வகுப்புகள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் மத்திய கல்லூரி

**Muslim Central College**

TUTORIAL STAFF - 1990

01. Mr. M.A. Uthumalebbe, Pr., B.A. Dip-in-Ed
02. Mr. A. Umarlebbe, Dep. Pr., B.Sc.
03. Mr. S.L. Barakathali
04. Mr. S.L.A. Shukkoor
05. Mr. I.M. Aboobucker Mowlavi
06. Mr. A.L. Abul Cassim, Dip-in-Com.
07. Mr. M.M. Khalid, B.Sc.
08. Mrs. U.H.A. Azeez, Dip-in-agri.
09. Mr. S. Abdul Majeed, B.Dev.
10. Mr. M.M.A. Abdul Latheef
11. A.L. Abdul Rauf
12. Mr. K.L.A. Rasheed
13. Mrs. N.B.A. Rasheed, B.Sc.
14. Mr. M.L.M. Ismail
15. Mr. A.L.A. Rasheed
16. Mr. S.T.K. Muhammed, B.A.
17. Mr. M.A. Abdul Majeed
18. Mr. U.L.M. Hashim, B.A.
19. Mr. M.I.M. Ameertheen, B.A.
20. Mr. M.L.M. Ibrahim, B.A.
21. Mr. M.I.M. Sahabdeen, B.Com.
22. Mr. A.M. Hassan.
23. Mr. A.L.A. Salam, B.A.
24. Mr. M.S.M. Raheem
25. Mr. M.A. Athamlebbe
26. Mr. M.A. Abul Thahir
27. Mr. A. Kalanther
28. Mrs. A.B.P. Jaufer
29. Mr. M.J. Kariapper
30. Mr. M.I. Junaideen
31. Mr. M.A.L. Aboosalih
32. Mr. A. Athamlebbe, B.A.
33. Mr. M.B.A. Azeez, B.Sc.
34. Mr. A.B. Jamaldeen
35. Mrs. S.M. Razeen, B.Sc.
36. Mr. M.I.M. Ameer, B.A.
37. Mr. I.L.M. Meerasahib
38. Mr. M.S. Jabeer
39. Mr. M.M. Yoosuf
40. Mr. S.A. Aboothahir
41. Mr.M. Jazeem
42. Mr. A.R.A. Abdul Jawath

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. Mr. A.R.A. Bishrulhafi
44. Mr. M.C. Kaleelur Rahman, B.Com.
45. Mr. S.S. Seyad Hussain
46. Miss M.Y. Iynul Hinaya, B.Com.
47. Miss M.M.M. Pathummah
48. Mr. M.A. Abdul Razeek, B.Com.
49. Miss M.J. Sarooza
50. Mr. M.M.M. Bazeer
51. Mr. H.C. Thangaraja
52. Miss M.I. Arifa Ummah
53. Mr. M.I. Irshath
54. Mr. A.M. Aboobucker
55. Mr. M.M.M. Razeen, B.Sc.
56. Mrs. S.S.K. Muhamed
57. Mr. S. Elankanathan, B.Sc.
58. M.C.L. Uthumalebbe
59. Mr. M.I. Naimudeen, B.A.
60. Mr. A.L. Naufer
61. Mr. A.L.A.M. Yoosuf, B.Sc.
62. Mr. M.M. Sams Rafa
63. Mr. M.M.M. Ismail
64. Mr. M.A.M. Hussain, B.A. Dip.-in-Ed
65. Mr. Z. Thajudeen, B.A.
66. Miss M.S. Rasheeda Ummah, Dip-Music.
67. Miss H.L.M. Ibrahim
68. Mr. A.G. Anver
69. Mr. M. Jiffri, B.Com.
70. Mr. A. Mohammed Nafeel

**Sri Damma Ratna Sinahal Maha Vidyalaya.**
**Estd. 1942.02.02**

Tutorial Staff:
01. Mr. D.R.D. Senavi Ratna (Principal)
02. Mr. S.D. Gamini Jeya
03. Mr. Sayiman Wijeya Raja
04. Mrs. Samuda Janaki Thaluwatha
05. Miss Aneesa Junaideen
06. Miss Pushpa de Gamage
07. Mr. Manal Dhalaya Retna
08. Miss Sriyani Amarakoon
09. Miss Sriyanandani
10. Miss Ghandi Swarna Latha

Student No. on roll: Boys - 92
Girls - 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம்

**Ramakrishna Mission Maha Vidyalayam**
**Estd : 1944 Tutorial Staff:**

01. Mr. C. Thachanamoorthy, Pr. B.A. (Dip-in-Edu)
02. Mr. E. Nadaraja (Principal) Primary Section
03. Mr. M. Loganathan
04. Mr. V. Rajendran, B.Sc.
05. Mr. S. Thachanamoorthy, B.A. Dip. S.A.
06. Mr. Kunalan. B.A.
07. Miss S. Kasupathy, B.A.
08. Miss P. Amirthambikai, B.Sc.
09. Miss K. Yogeswari, B.Sc.
10. Rev. Sister Mery Jonina
11. Mr. K. Nawa Ratnam
12. Miss P. Sorna Jothi, B.Sc.
13. Mr. S. Gopalapillai, B.A.
14. Mr. M. Manogaraja, B.A.
15. Mrs. T. Loganathan, Dip-in-Dance
16. Mr. K. Loganathan, B.A.
17. Mr. K. Kamalanathan, B.Sc.
18. Miss K. Kalaimathi, B.Sc.
19. Mrs. N. Karunanithi
20. Mrs. M.S.R. Kanaga Sooriyam
21. Mr. J.P. Shandra Sri
22. Mr. T. Sintha Turai
23. Mrs. P. Kannamuthu
24. Mrs. M.A.V. Paddrik
25. Mrs. S.L. Lovanatha Sri
26. Mrs. M. Maha Deva
27. Mrs. K. Kanaga Sabai
28. Miss C. Kusalakesari, B.A.
29. Mr. P. Thambi Pillai, B.Com.
30. Mr. E. Sundra Moorthy
31. Mr. S. Velupillai
32. Mr. E. Logidaraja
33. Mrs. S. Thanga Vadivel
34. Mrs. L. Gopalapillai
35. Mrs. S. Yoogarajah, B.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. Mrs. S. Perinparajah
37. Mrs. Y. Pirapukumar
38. Miss V. Meenambigai
39. Miss A. Subramaniyam
40. Mrs. E. Rajendran
41. Miss A. Parameswary
42. Mr. M. Kirupai Raiah
43. Miss M. Kamaleswari
44. Mr. S. Sivanesadurai
45. Mr. V. Ramanathan
46. Mr. S. Sridaran
47. Mr. P. K. Siva Sarma
48. Miss M. Kamaleswari
49. Miss K. Gunasundari
50. Miss K. Nirmala
51. Miss C. Suriyakala
52. Miss S. Sandarani
53. Mrs. S. Nirmaleswaran
54. Miss K. Kamala Devi



விளைந்த வட்டைக்குள் கதிர் பொறுக்கிய பெண்கள் அந் நெற்கதிர்களைக் காலாற் துவைத்து நெல் மணிகளை வேறாக்குகின்றனர்.



ஸ்ரீ லங்கா சாஹித்தியப் பரிசுபெற்ற அறிஞர் ஜவருடன் ஏயாரெம் சலீம் அவர்கள், பக்கத்திற் தேசாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் அதிகாரம்

## போக்குவரத்துச் சாதனங்கள்

அக்காலத்தில் முறையான போக்குவரத்துச் சாதனங்கள் இருக்கவில்லை. கால்நடையாகவே பெரும்பாலும் சென்று வந்தனர். எங்கும் வனந்தரங்களாகவே காணப்பட்டன. யானை அதர் (அதழ்) மாட்டதர்கள் என்பனவே ஒற்றையடிப்பாதைகளாய்க் காடுகளின் மத்தியில் குறுக்கும் நெடுக்குமாகக் காணப்பட்டன. இதனூடாகவே கால்நடை. தொடர்ந்தது. எவ்வளவு நெடுந்தூரமென்றாலும் நடந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை. அநுராதபுரம், திருக்கோணமலை ஆகிய இடங்களில் அக்காலம் வழக்காடு மன்று நிறுவப்பட்டிருந்தது. இங்குள்ளவர்கள் நடந்து அவ்விடங்களுக்குச் சென்று வந்தனர். பீஸபீல்வலி அவர்களை வெட்டிக் கொலை செய்ததுக்கு திருக்கோணமலையிலும் வெல்லையார் என்பவரை இந்திரிக்கப்புக் கொலை செய்த வழக்கு அநுராதபுரத்திலும் நடைபெற்றது. சேகுமுல்லக்காரன், சம்புக்களப்பு வட்டை விதானையின் தகப்பன், கொக்குக் கொத்தியார், குல்லாப் போடியார் முதலியோரும் இவ்வழக்காடு மன்றுகளுக்குப் போய் வந்துள்ளனர். நடைபாதையினிடையே காடுகளில் உணவு சமைத்துண்டு, அங்கேயே உறங்கிப் பிரயாணஞ் செய்த செய்திகள் நமக்கு வியப்பையளிக்கின்றன.

காட்டுமரங்களைத் தோழிற் சுமந்து கொண்டு காட்டதர்களினூடாக நடந்து வந்துள்ளனர். கருங்கொடித்தீவு மக்கள் வியாபார நோக்கத்துக்காகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களான தொட்டம, தமண, பக்மிட்டியாவ, பாட ஓட, தொம்பகஹவெல மற்றும் மாந்தோட்டம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று வந்துள்ளனர். அதுபோற் சிங்கள மக்களும் இங்கு வந்துள்ளனர். பண்டமாற்று அடிப்படையிலேயே வணிகந் தொடர்ந்துள்ளது. அங்குள்ள மரக்கறி, தேன், கருப்பட்டி, கித்துல்பாணி, கோழி, குரக்கன், சோழம், வெற்றிலை, வாழைக்குலை, பழவகை, கொச்சிக்காய், இறுங்கு, பலாக்காய், சுரைக்காய் மற்றும் தானியவகைகளுக்குப் பதிலாக இங்கிருந்து உப்பு, கருவாடு, சீலை, பாத்திரங்கள், அணிகலன்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், கறிச்சரக்குகள் மற்றும் அத்தர் வகைகள் என்பன பண்டமாற்றுச் செய்யப்பட்டன. கஞ்சாச் செடிகள் காடுகளில் வளர்க்கப்பட்டன. அதைக் காசுக்கோ பண்டங்களுக்கோ கொடுப்பதில்லை. விரும்பியோர் பறித்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. வைத்தியர்கள் கஞ்சாச் செடிகளைத் தாம் குடியிருக்கும் சூழலிலேயே பயிரிட்டனர். கஞ்சா வளர்ப்புக்கு எதுவிதத் தடையுமிருக்கவில்லை.

மாடு, ஆடு, மான், மரைகளின் ஈரல், மாங்காய்களையும் பச்சைக் கஞ்சா இலைகளையும் சேர்த்துச் சுண்டியெடுத்த ''வங்கு'' எனும் அவியலுக்கு அக்காலத்தில் நல்ல வரவேற்பிருந்தது. கஞ்சாச் செடியின் சாற்றுடன் சில பழச்சாற்றையும்சேர்த்துத் தயார்செய்த ''சமிசி'' எனும் கரைசலையும் அக்கால மக்கள் விரும்பிக் குடித்தனர். அவர்கள் செய்யும் மிகக் கடினமான வேலைகளிலும் பளுவான சுமைகளின் போதும் அவற்றின் நோ தெரியாமல் இருப்பதற்காகவே இந்த ''வங்கு'', ''சமிசி''கள் உட்கொள்ளப்பட்டன. மருந்துகளிலும் கஞ்சா பெருமளவில் சேர்க்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் தலைச்சுமையாகவே பொருள்கள் கொணரப்பட்டன. பின் காற்ருடியாற் காவி வரும் வழக்கமேற்பட்டது. அதன்பிறகு இங்குள்ள முஸ்லிம் வியாபாரிகளால் தவளம் (தாவளம்— பொதிமாடு) எனும் ஒரு புதுப் போக்குவரத்து முறை அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டது. இலங்கையில் முஸ்லிம்கள் பொருளாதாரச் செழிப்புக்கு வழிகாட்டியாய் இருந்துள்ளனர். அவர்களின் தொண்டில் கணிசமான அளவு கருங்கொடித்தீவு முஸ்லிம்களுக்கும் பங்குண்டு என்பதை ''தவள'' முறை கோடிட்டுக்காட்டுகிறது. போக்குவரத்துச் சாதனங்களே இல்லாத காலத்தில் முஸ்லிம்கள் காட்டித் தந்த இம்முறைக்காக ஈழம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

தொடர்பற்றுக்கிடந்த கிராமங்களை இணைக்கவும் பண்டங்களைக் கொண்டு போகவும் இம்முறை பெரிதும் பயன்பட்டது. முஸ்லிம்கள் இந்நாட்டின் வளத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்திருப்பதாகவும், போக்குவரத்துச் சாதனங்கள் அனைத்தும் இவர்களது கட்டுப்பாட்டின் கீழேயே இருந்ததாகவும் வரலாற்ருசிரியரான திரு. எம்.டி. ராகவன் கூறுகின்ருர். இதன்பின் வந்த மாட்டு வண்டிமுறை டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) காலத்தில் ஏற்பட்டதென்றும் அதற்கு முன்னுேடியாகத் தவளம் முறை அமைந்ததென்றும் டாக்டர் பாலேந்திரா கூறுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் வயலிலுள்ள களவெட்டியிலிருந்து நெல் மூண்டைகள் தவளமாட்டில் ஏற்றப்பட்டுப் போடியாரின் வீட்டுக்குக் கொண்டுவரப்படும். பணியாளர்களுக்கு அன்று சுவையான விருந்து கொடுக்கப்படுவதுமல்லாமல் பொதி மாடுகளுக்கு நிறையத் தவிடும் வாழைப்பழங்களும் கொடுக்கப்படும். ஆறு, எட்டு, 10 என்ற வகையில் தவளத்துக்காகப் பெரிய எருமைக் கடாக்கள் பயன்படுத்தப்பட்டன. அம்மாடுகளின் கழுத்தில் பெரிய மணிகள் கட்டப்படும். பொதிகளை மாடுகளின் முதுகிலேற்றி இருவிலாப்பக்கங்களிலும் தொங்கவிடுவர். இப்பொதியை ''அடப்பை'' என்றும் அழைத்தனர். பெருங்கானகத்தினூடே மாடுகள் செல்லும் போது மணி பெருஞ் சத்தத்தோடு ஒலிக்கும். அதைக்கேட்ட வனமிருகங்கள் பயந்தொதுங்கிவிடும்.

இப்பகுதியில் ஆதிக்குடியினர் வெல்லஸ்ஸ, பங்கரகம்மனகம, கொட்டேபோவ முதலிய கிராமங்களிலிருந்து வந்து காட்டெருமைகளைப் பிடித்துப் பழக்கித் தவளமாடாகப் பாவித்தனர். தென்னிந்திய வர்த்தகர்கள் காலக்கழிவில் இப்பகுதி வியாபாரத்திற் தலையிட்டதால் இம்முறை பொலன்னறுவை, தம்பன்கடவை வரை வடக்குப் பாகத்தில் வியாபித்தது. இப்பிராந்தியத்திலிருந்து பொலன்னறுவை மாவட்டம் வரை அடர்ந்திருந்த காடுகளில் ஏராளமான புளியமரங்கள் காணப்பட்டன. புளிரசம் (புளியாணம்) உட்கொள்வதில் பெரும் விருப்புடையோராயிருந்த தென்னிந்திய முஸ்லிம் வணிகர்கள், தாம் சென்ற தவள மாட்டுப் பாதைகளின் இருமருங்கிலும் தாம் சமைத்துண்ட இடங்களில் புளியம் விதைகளை ஊன்றி விடும் வழக்கமுடையோராய்க் காணப்பட்டனர் இன்றும் அதன்பலனாக ஏராளமான புளிய மரங்கள் பாரிய தோற்றத்தோடு காணப்படுவதாகவும், தம்மாங்கட நாடுகாட்டுக் காவியத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் விசேடமாக இவ்வியாபாரிகள் கருங்கொடித்தீவிலிருந்து வந்தவர்களாகவே குறிக்கப்பட்டுள்ளது. (ஆதாரம் : தம்மாங்கடவ நாடு காட்டுக் காவியம் - மு. முகம்மதுக் காசீம் மரைக்காயரின் ஏடு - 1843)

இனிக்காவியத்தைப் பார்ப்போம்.

1. ''வதனமார் பால் சொரிய வருங்கள்ளவதனன்
வழியெலாம் பால்முட்டி வழிந்தோடக்கண்டு
அடம்பிடித்தாட்டவே அங்குநான் செல்ல
அடர் காட்டில் தாவளம் அணிவந்திருக்க''

2. ராவுத்தர் கல்தான் நெய்னு மீரானும்
ராவு பகலில்லாமல் தாவளஞ் சாய்க்க
வழியெலாம் புளி மரங்கள் வரிசையாய்க் காண
வந்தாரே பொருளுடன் வனவாசஞ் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. களியோடைக் கங்காலே கருங்கொடித்தீவு
கணக்க நாள் நாணங்கு தங்கியே வந்தேன்
அழிவிலாப் பாக்கிசங்கள் அனேகப் பொருள் கட்டி
அணியாக தாவள மாடுகளிலேற்றி

4. திருக்கோணமலை கோடு போகவே வந்த
திசகாமி வெல்லையார் மகனேடு நானும்
அரவத்தால் வரும்போது காடுகளிலெங்கும்
ஆனைகள் தவள மாடாக்களுடன் சேர்ந்தோம்



பிரபல விஷ வைத்தியர்
திருமதி வே. காரனி - (கோளாவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காவியங்கள் மூலமாக அக்காலத் தாவளம் முறையின் உபயோகம் பற்றி அறிய முடிகிறது. வதனமார் காவியம், தம்பன்கடவ நாடு காட்டுக் காவியம் ஆகியவற்றைப் பாடிய முகம்மதுக் காசிம் மரைக்காயர் (1843) கருங்கொடித் தீவிற் சிலகாலம் வசித்துள்ளதாக அறியக்கிடக்கின்றது.

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் இங்கு இரட்டை மாட்டு வண்டிமுறை புகுத்தப்பட்டது. ஆரம்பகாலத்தில் சிறுவண்டியில் பொருள்களை வைத்துத் தள்ளிக்கொண்டுபோகும் ''தள்ளுவண்டி'' முறையிலிருந்து, பின் அது ''ஒற்றை மாட்டு வண்டி''யாக மாற்றப்பட்டது. ''வில்லுக்கரத்தை'' எனும் நூதனவகை அமைப்புக் கொண்ட கரத்தையும் (பக்கி) இரும்பும் பலகையும் சேர்த்துச் செய்யப்பட்டுக் கனவான்களும் தனவந்தர்களும் பிரயாணஞ் செய்ய உபயோகிக்கப்பட்டது. குதிரை மீதமர்ந்து அரசு மேலாளர்கள் பிரயாணஞ் செய்துள்ளனர்.

அக்காலம் கருங்கொடித் தீவுக்கு வருபவர்கள் வடக்கிலுள்ள களியோடை ஆறு, தெற்கு பனங்காட்டிலுள்ள தில்லையாறு, மேற்கில் பட்டியடிப்பிட்டியாறு, கிழக்கில் சின்ன முகத்துவாரம் (கழிமுகம்) ஆகிய நான்கு நீர்நிலையங்களையும் கடக்கத் தோணிகளை உபயோகித்துள்ளனர். வற்றுக்காலங்களில் அவற்றை நடந்துசென்று கடப்பதுண்டு. இப்பாதைகள் இங்கிருந்து முறையே, கல்முனை, சாகாமம், இறக்காமம், பொத்துவில் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பாதைகளாகும்.

பண்டுதொட்டு இங்கிருந்து மட்டக்களப்புக்கு ஒரு பழமையான பாதை இருந்தது. அப்பாதை தம்பிலுவில் ஊரிலிருந்து தொடங்கித் தம்பட்டைமுனையூடாக வந்து பனங்காடு மேற்காய்க் காட்டுக்குடுப்பு, புல்மேடு, பட்டியடிப்பிட்டி, மொட்டயான்ரவெளி, முள்ளிக்குளத்து மலை, காக்காத்திப்புட்டி, மல்லிகைத்தீவு, மல்வத்த, சவளக்கடை, கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா ஊடாகச் சென்று மட்டக்களப்புப் படுவான்கரையை யடைந்திருந்தது. பல ஆறுகள் குறுக்கிட்டதால் மட்டக்களப்புக்கும் கருங்கொடித்தீவுக்குமிடையில் முற்காலத்தில் கரையோரப் பாதைகள் உபயோகத்திலிருக்கவில்லை.

எங்கும் தாறுமாறுக ஒழுங்கற்ற மணற்தெருக்களே காணப்பட்டன. இற்றைக்குச் சுமார் நூறு வருடங்களுக்கு முன் ஒரு களிமண் வீதியாவது இங்கு கிடையாது. பனங்காட்டிலுள்ள தில்லையாறு ஆழமாய் இருந்த படியால் தோணிப் போக்குவரத்துடன் வாகனங்களை ஏற்றிச் செல்ல மர ஓடம் (Ferry) ஒன்றும் சேவையிலீடுபடுத்தப்பட்டது. இதை மக்கள் ''பாதை'' என்று அழைத்தனர். பின் 1945 இல் இப்பகுதியின் அரசமன்ற உறுப்பினராய் இருந்த திரு. எம்.எஸ். தருமரெத்தினம் அவர்களின் உதவியால் தில்லையாற்றின் மேலால் தற்காலிக மரப்பாலமொன்று கட்டப்பட்டது. அதன்பின் அவ்விடத்தில் இரும்பு வாராவதி (Bridge) யொன்று கட்டப்பட்டு இன்றும் உபயோகத்திலுள்ளது. அதேபோன்று பட்டியடிப்பிட்டியிலும் மரப்பாலம் அமைக்கப்பட்டு அதன்பின் தற்போது உபயோகத்திலுள்ள இரும்பு வாராவதி கட்டப்பட்டது. இங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிமேடு, மொட்டையகல், சாகாமம், சேனைக்காடு ஆகிய வயல்களுக்கும் மேற்கே இலுக்குச் சேனை, நீத்தை, களவெட்டியா, வாங்காமம் முதலிய வயல்களுக்கும் செல்பவர்கள் வயலரவம், காட்டரவம், மணற்கட்டு, வரம்புகள் ஆகியவற்றினூடே மிகச் சிரமத்துடன் நடந்து செல்ல வேண்டியிருந்தது. இங்கிருந்து இறக்காமப் பாதையிலுள்ள மூன்றுங்கட்டை எனுமிடத்திலிருந்து புட்டம்பை வரை ஒரு இருமண்பாதை சாம்பல்மாரியையூடறுத்துச் செல்கின்றது. இது பழைய ஒரு காட்டரவமாகும். இப்பாதை 1985 இல் இருமண் பாதையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டது.

சிறுவர்களைத் தலையிலும் தோளிலும் சுமந்து தூர இடங்களுக்குக் கொண்டு செல்வர். மணம் முடித்த புதுத்தம்பதியர் கூடார வண்டியிற் பிரயாணம் செய்தனர். நாடுகாடுகளிலுள்ள வைத்தியர்களிடம் நோயாளரைக் கொண்டு செல்லக் கம்புகள் பரப்பிக் கட்டப்பட்ட தட்டிகள் உபயோகிக்கப்பட்டன. தட்டிகளின்மேல் இலுக்குப் புற்களைப்பரவி அதன் மேல் நோயாளி கிடத்தப்பட்டுக் காவிச் செல்வது வழக்கமாகும்.

1910 இல் துவிச்சக்கரவண்டி (Cycle) இப்பகுதியிற் புழக்கத்துக்கு வந்தது. அதுவரை வண்டிகளே செல்வாக்குப் பெற்றிருந்தன. 1912 இல் மட்டக்களப்பிலிருந்து தனியார் பஸ் ஒன்று முதன்முதற் சேவையிலீடுபடுத்தப்பட்டது. கம்மல்துரை, சொளுக்கார், கண்டக்டர், புகாரிக்காக்கா, மெரண்டா என்பவர்களால் காலத்துக்காலம் ஒவ்வொரு சிறிய பஸ் விதம் போக்குவரத்துக்கு விடப்பட்டது. அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் வரை தனியார் வேன்கள், றக்குகள் என்பன ஓடின. பின் இப்பாதையில் திரு. ஜி.எம். சைமன் சில்வா என்பவரால் ''காடியா மோட்டார் சேவிஸ் கம்பனி'' என்ற பெயரில் ஒரு பஸ் சேவை நடாத்தப்பட்டது. அதன்பின் ''ஈஸ்ரன் பஸ் கொம்பெனி'' என்ற ஒரு வாகன சேவை இப்பகுதியில் நடைபெற்றது. அக்கரைப்பற்று-மட்டக்களப்பு பஸ் கட்டணம் 1915 இல் 20 சதமாகும். அக்கரைப்பற்று-பொத்துவில் கட்டணம் 12 சதமாகும். சாகாமம், இறக்காமப் பாதையில் இக்கால கட்டத்தில் வண்டிச் சேவைகளைத் தவிர வேறு வசதிகள் இருக்கவில்லை. பெரும்பாலும் இவ்விரு பாதைகளிலும் கால்நடைப் பிரயாணங்களே தொடர்ந்துள்ளன.

1928 இல் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குப் புகையிரதம் வந்தது. அதை அக்கரைப்பற்று வரை நீடிப்பதற்காக கல்லடிப்பாலம் கட்டப்பட்டு 1931 இல் முற்றுப்பெற்றது. அரசியற் குரோதங்களால் இத்திட்டம் கைவிடப்பட்டது. கல்முனை-அக்கரைப்பற்றுப் பெருந்தெரு (Main Road) 1916 வரை கரடுமுரடான கற்பாதையாகவே இருந்தது. இப்பாதை 39 ஆம் கட்டைவரை நீடித்திருந்தது. 39 ஆங் கட்டையிலிருந்து பொத்துவில் பாதை மணற்பாதையாகக் கற்கள் பரவாமல் இருந்தது. ஆங்கிலேயராட்சியில் மலைநாட்டில் தேயிலை, றப்பர் பயிரிடவும் கரையோரப்பகுதியில் தென்னை பயிரிடவும் திட்டம் வகுக்கப்பட்டதால் பாதைகளின் அவசியம் உணரப்பட்டது. அதன் பயனாய் பல அரிய பாதைகள் மலைநாட்டிற் போடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால கட்டத்தில் 1916 இல் இப்பிரதான வீதி புனரமைக்கப்பட்டுத் தார் ஊற்றப்பட்டது. இதன் மூலம் அக்கரைப்பற்று, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி, பொத்துவில் ஆகிய ஊர்களில் தென்னந்தோட்டங்களை அபிவிருத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எஸ்.எம்.ஆர். என்பவர் இப்பணிகளை மேற்பார்வை செய்தார். 1935 இல் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாய் அரசினரால் இங்குள்ள மக்களுக்கு நிவாரணமளிக்கப்பட்டது. பஞ்ச நிவாரணப் பணியாக இறக்காமம் வீதி செப்பனிடப்பட்டது. கூலியாக வெள்ளையான சீனச் சம்பா அரிசி வழங்கப்பட்டது. இதற்குப் ''பஞ்ச நிவாரண வீதி'' எனவும் ஒரு பெயர் பதியப்பட்டுள்ளது. சாகாமம் குளம் கட்டுவதற்காக 1872 இல் அக்கரைப்பற்று சாகாமம் வீதி அமைக்கப்பட்டது. கூழாவடி, அளிக்கம்ப வீதி 1943 இல் பெரும் காட்டினூடே அமைக்கப்பட்டது. ஜனாப் கே.எல்.எம். மீராசாகிபு போடியார் இவ்வீதியைப் பொறுப்பேற்றுச் செய்தார் மருதவெட்டுவான் குளத்தருகிலுள்ள ஊர்ப்போடியார்க் கட்டுவீதியும் பஞ்ச நிவாரண வேலையாக 1946 இல் அமைக்கப்பட்டதாகும். 28.12.1981 இல் சாகாமம் பங்களாவரை முதன்முதல் அக்கரைப்பற்று பஸ் டிப்போவிலிருந்து பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

ஆள்பதி றிஜ்வே காலத்தில் மெற்காடவ் மக்கடம், ரெல்போட் என்பவர் காட்டித் தந்த முறைப்படி மட்டக்களப்பு-அக்கரைப்பற்று, அக்கரைப்பற்று-பொத்துவில் பிரதான வீதிக்குக் கற்பதிக்கப்பட்டுத் தாரூற்றப்பட்டது. இந்நூற்றுண்டில் நடுப்பகுதிக்குச் சற்று முன்பே இப்பாதையிற் சீரான போக்குவரவுகள் நடைபெற்றன. மட்டக்களப்பிலிருந்து அரசு அதிபர் குதிரையில் வருகை தந்து இங்குள்ள விவசாயிகளுக்குக் காடுகள் அளந்து கொடுத்து ஊக்கப்படுத்தியுள்ளார். பிறெய்ன் எனும் அரசு அதிபர் பொத்துவில் வரை தம் சேவையைத் திறம்படச் செய்துள்ளார். பொத்துவிலிலுள்ள பிறெய்ன் துரைக் கண்டம் இதற்குச் சான்றாய் உள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு ஆள்மூலம் தபால்கள் அனுப்பப்பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் தபால்களை விநியோகிப்பவர் (Peon) ஒரு மணியை அடித்துக் கொண்டு தொங்கோட்டமாய் ஓடி அஞ்சல்களை விநியோகித்துள்ளார். அவருக்கு ''மணியம்'' என்ற காரணப் பெயர் வழங்கலாயிற்று. அவருக்குப் பின் வந்தவர்களையும் பொதுமக்கள் மணியம் என்றே அழைத்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏயாரெம் சலீம் அவர்களின் உயர் மட்டக் கல்விப் பணியைப் பாராட்டிக் கௌரவிக்கு முகமாக, நடைபெற்ற பெரு விழாவில் ஜனாப் M.I உதுமாலெப்ப அதிபர் (நாடாளுமன்றத்தின் பொத்துவிற் தொகுதி முன்னாள் முதல்வர்) பொன்னாடை போர்த்துகிறார். நடுவில் உப அதிபர் ஜனாப் M.L.M.பஷீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் அதிகாரம்

## தொழில் வாய்ப்புகள்

**01.வணிகம் :** இங்குள்ளோரின் பெரும்பான்மையினர் வேளாண்மைச் செய்கைக்கடுத்த படியாக வணிக (வியாபார)த்தையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இங்கு ஏறத்தாழத் 90 வருடங்களாக ஒரு பொதுச் சந்தை இயங்கி வருகின்றது. பொத்துவில், கல்முனை, அம்பாறை, சாகாமம் ஆகிய இடங்களிலிருந்து வரும் பிரதான நான்கு வீதிகளும் அக்கரைப்பற்றுச் சந்தைச் சந்தியில் இணைவதால் இச்சந்தை ஒரு முக்கிய கேந்திர நிலையமாக விளங்குகின்றது. ஆரம்ப காலத்தில் இங்கு ஒரு கொட்டில் கூட இருக்கவில்லை.

*01. அ.சந்தை ஆரம்பம் :* முதன்முதல் இச்சந்தையில் புளுவர்ர பக்கீர் என்பவர் வியாபாரஞ் செய்து வந்தார். இரண்டாவதாக மீசைக்காரர் என்பவரும் அதையடுத்து சாவல்ல மகன் என்பவரும் பொருள்களை விற்று வந்தனர். கல்முனைச் சந்தையில் சாமான்களைக் கொள்முதல் பண்ணி காவி வந்து சிறு, சிறு பன் உமல்களில் உப்பு, கறிச்சரக்கு, கருவாடு மற்றும் பொருள்களை வைத்து விற்பர். மாலையானதும் மிகுதிச் சாமான்களுடன் வீடேகுவர். மருதமுனை மதார்கான் என்பவர் பொட்டணி வியாபாரியாய் இங்கு வந்த இங்கிருந்த வம்மியடிக்குக் கீழ்ப் புடைவைகளை வைத்து விற்பது வழக்கம்.

*01. ஆ. கொட்டிலமைப்பு :* அதன்பின்பே படிப்படியாய்ச் சில வியாபாரக் கொட்டில்கள், பந்தல்கள் தோன்றின. தற்போது UPM கட்டடம் அமைந்திருக்கும் இடத்தில் சவரக்குடில்கள் காணப்பட்டன. லங்கா ஸ்ரோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பகுதியில் உஸ்தாமாமா சிலர் குடிசைகளமைத்துச் சவரஞ் செய்தனர். படிப்படியாகச் சந்தை சனச் செறிவுக்கும் புழக்கத்துக்குமேற்ப விரிவாக்கப்பட்டது. மீன், மரக்கறி, தேங்காய், மிட்டாய், வெற்றிலை, அரிசி, கிழங்கு, வாழைப்பழம், கருவாடு முதலிய பொருட்கள் தனித்தனிச் சந்தைக்கூறுகளாயின. உதாரணமாக மீன்சந்தையில் மீன் மாத்திரமும் கிழங்குச் சந்தையில் கிழங்கு மட்டும் விற்கப்பட்டன. சந்தையைச் சுற்றிக் கம்பி வேலி அமைக்கப்பட்டது. அக்கம்பிகளில் பறவைகளை வேட்டையாடித் தொங்க வைத்திருப்பார்கள். ஒரு வெள்ளைக் கொக்கு 10 சதம், ஒரு காஞன் ஐந்து சதம், பத்துக்கிச்சான்களைக் கொண்ட ஒரு கற்றை 10 சதம், ஒருசாம்பல் நாரை 15 சதம் என்ற விகிதத்தில் அவை விற்கப்பட்டன.

முஸ்லிம் வியாபாரிகள் எண்ணிக்கையிற் கூடுதலாய் இருந்தனர். அதற்கடுத்துத் தமிழ் மக்களிற் பலர் வியாபாரஞ் செய்தனர். சிங்கள வியாபாரிகளும் காணப்பட்டனர். யூ.கே.எம். அபூபக்கர் (தம்பிக்காக்கா) யூ.கே.எம். அப்துல்காதர், ஏ.எம். அசனர், முகம்மதலியார், வை.ஜீ. ஹின்னி அப்புஹாமி, டீ.பீ. உபாசப்பு, எஸ்.எச். விக்றச் சில்வா, ஜீ.எம். சைமன் டீ சில்வா, எலியாஸ் ஆகியோரின் பலசரக்குக் கடைகள் அந்நேரம் பெரிய கடைகளாகக் காணப்பட்டன. இ.க. முகம்மதிஸ்மாயில், சா.ம.மு.முஹ்சின், சாரு ஆகியோரின் தேநீர்க்கடைகள் பிரசித்தமானவை. கணக்குப்பிள்ளை, வன்ன மணிமாஸ்ரர் முதலியவர்கள் குறிப்பிடத்தக்க புடைவைக் கடைகளை வைத்திருந்தனர். சந்தையின் வளர்ச்சியின் தேவைக்கேற்ப நிரந்தரமான கடைகள் கட்டப்பட்டன. சந்தைச் சதுக்கத்தையிணைக்கும் நான்கு வீதிகளிலும் காலத்துக்குக் காலம் மாடிக்கட்டடம், மத்தியதரக்கட்டடம், தொடரறைகள் மற்றும் தனியறைகள் கட்டப்பட்டு வியாபார விசாலிப்பும் காணப்பட்டது.

திருவாளர்களான T.கறுப்பையா, E.A.K.கோபால பிள்ளை, T.S.சபாபதி, M.நாகமணி, V.கணபதிப்பிள்ளை, காளிமுத்து, S.சம்புநாதன், M.சாமித்தம்பி, E.சித்திரவேல், கேசவன், சுந்தரம், கந்தசாமி முதலியோர் பழைய சந்தையில் வியாபாரஞ் செய்தனர்.

சண்முகநாதன் ஸ்ரோர்ஸ் மிகநீண்ட காலமாக இயங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. இ. விசாலிப்பும் நிருவாகமும் : இச்சந்தை தினமும் காலை ஏழு மணியிலிருந்து இரவு 10 மணி வரைக்கும் பெரும்பாலும் திறந்திருக்கும். வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும். சகல வசதிகளையும் பொருள்களையும் கொண்டதாக இது உள்ளது. மீன் சந்தையில் ஏராளமான கடல்மீன், ஆற்று மீன், குளத்து மீன்கள் குவிக்கப்பட்டிருக்கும். ஒரு பெரிய கை (கயல்) மீன் அல்லது மணலை ஒரு ரூபாவுக்கு விலை போகும். கைமீன் சினைச் சோடிகள் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். ஒரு சினைச்சோடி ஐந்து அல்லது 10 சதமாகும். ஏனைய மீன் கோர்வைகள் ஐந்து, 10 சதங்களுக்கு மேல் விற்கப்படுவதில்லை. செழுத்தி, கங்கான் போன்றவை குவியலாக விற்கப்படும். மீனை நிறுத்து விற்பனை செய்யும் வழக்கம் 15 வருடங்களுக்குள் ஏற்பட்டதொன்றாகும். கிழங்கு ஒரு தூக்கு (ஏழு இறுத்தல்) ஐந்து சதமாக இருந்தது. சந்தைக்கு 25 சதம் கொண்டுசெல்லுமொருவர் அன்றைய உணவுக்கான சகல பொருள்களையும் வாங்கக் கூடியதாயிருக்கும். மாரிகாலம் மீன் அதிகமாகப் பிடிக்கப்பட்டால் உற்றார், உறவினருக்கு இனாமாகக் கொடுத்து விடுவதும் நடைமுறையிலிருந்தது.

அக்காலம் சல்லி (அரைச்சதம்) ஒரு சதம் என்பன புழக்கத்திலிருந்தது. ஒரு சல்லிக்குக் கணிசமான அளவு கறிச்சரக்குகளை வாங்கலாம். சுமார் 75 வருடங்களாக இங்குள்ள வணிகர் மொனருகல (முப்பன) தொம்பகஹவெல (தும்பக்காவெளி) ஆகிய ஊர்களுக்குச் சென்று மரக்கறி, பழவகைகளைப் பெற்று வருகின்றனர். பிரதி ஞாயிறு தோறும் திருக்கோவிலில் கூடும் வாரச் சந்தைக்கு இங்கிருந்து வண்டியில் சாமான்களை ஏற்றிச் சென்று விற்பார்கள். 1936 தொடக்கம் அக்கரைப்பற்று மத்திய கிராம சபையின் நிர்வாகத்தின் கீழ் இச்சந்தை கொண்டு வரப்பட்டது. சந்தைக் கொஸ்தாப்பர், சந்தையைத் துப்புரவு செய்யும் தொழிலாளி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஜனாப் எஸ்.யூ.எம். முஹம்மது முஸ்தபா என்பவர் கொஸ்தாப்பராகப் பதவி ஏற்றார். நீண்ட காலமாக இவர் இங்கு கடமையாற்றினார். பிரதி வருடமும் தை மாதம் இச்சந்தை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலத்திற் பெற்றவர் தினமும் வியாபாரிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை அறவிடுவார். அதற்குச் ''சந்தைக்காசு'' என்று பெயர். இறக்காமம் வீதியில் திரு. எம்.எஸ். தருமரத்தினம் எம்.எஸ்.ஸி. அவர்களின் இல்லத்தருகேயுள்ள சந்தியில் ''சின்னச் சந்தை'' என்றொன்று சிலகாலம் இயங்கியது. காலத்துக்குக் காலம் சின்னப் பள்ளியடியிலும் தற்காலிக சந்தை இயங்கி வந்துள்ளது. சந்தைச் சதுக்கத்தில் பேருந்து நிலையம் (Bus Stand) காணப்படுகின்றது. பொத்துவில் வீதியில் பேருந்துச்சாலை (Bus Depot) நிறுவப்பட்டுள்ளது.

01. ஈ. நன்கொடைகள் : இங்குள்ள வியாபாரிகள் சிறந்த பரோபகாரியாய் உள்ளனர். ஏழைகள், அனாதைகள், திக்கற்றோர், வழிப்போக்கர் மற்றும் பலர் இவர்களிடம் உதவிகள் பெற்று வருகின்றனர். கூட்டங்கள், கந்தூரிகள், கோவில், ஆலயம், விகாரை, பள்ளிவாசல்களின் சமயவிழாக்கள், சடங்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோரன்ன நிகழ்ச்சிகளுக்கு அடிக்கடி நன்கொடைகள் அளித்து வருகின்றனர். வர்த்தகர் சங்கம் என்றொரு அமைப்பு இச்சந்தையில் இயங்கி வருகின்றது. அரசியல், பொதுப்பணிகள் ஆகியவற்றிலும் அதிக ஆர்வங்காட்டிச் செயற்படுகின்றனர்.

பொருள்களை ஏற்றி இறக்கல் மூலம் பலர் இங்கு தொழில் வாய்ப்பைப் பெறுகின்றனர். தினக் கூலியடிப்படையில் சில சிற்றூழியர்களுக்கும் வருவாய் கிடைக்கின்றது. இப்படியாகச் சிறப்பும் வளமும் பெற்று ஒரு நூற்றாண்டை எட்டிக் கொண்டிருந்த இப்பொதுச் சந்தை 15-04-1985 இல் உள்ளூர்க் கலவரமொன்றின் காரணியால் சில பொறுப்புணர்ச்சியற்ற நம் சகோதரர்களால் எரியூட்டப்பட்டு அழிந்து கிடக்கின்றது. எச்ச சொச்சங்கள் அகற்றப்பட்டு இன்று வெறும் நிலம் மாத்திரமே அவ்விடத்திற் காணப்படுகின்றது. (பூவோடும் பொட்டோடும் பொலிவுற்றிருந்த பூமகள் எரியுண்ட நிலையில் இதயம் வெந்து கிடக்கின்றாள். என்னே! அவளின் பரிதாபநிலை.)

*1985-04-15 ல் தீக் கொழுத்தப்பட்ட பழைய பொதுச்சந்தை கடைவீதி, பேருந்து நிலையம், சந்தைச் சதுக்கம்,*



*01. உ. எரிப்பும் இடப்பெயர்வும் :* எதிர்பாராத இத்தாக்கத்தினால் பல மில்லியன் ரூபாய் இழப்பேற்பட்டது. தவிர ஏழு மாதகாலம் சந்தையொன்றில்லாது மக்கள் தத்தளித்தனர். வியாபாரிகளினால் உதவிபெற்றுவந்த வறிய மக்கள் பெருந்துன்பத்துக்குள்ளாயினர். இக்காலகட்டத்தில் சாரதா படமாளிகைக் கண்மையில் ஒரு தற்காலிக சந்தை ஏற்படுத்தப்பட்டது. எரியுண்ட சந்தை நிலப்பரப்பிலும் நடமாடும் சந்தையொன்று சமயா சமயம் இயங்கியது. அதன்பின் பொத்துவில் பிரதான பாதையிலுள்ள ஊராட்சி மன்றத்துக்குரிய ஒரு நிலத்திற் பல கொட்டகைகள் அமைக்கப்பட்டு அங்கு 14-11-1985 இல் ஒரு புதிய சந்தை திறந்து வைக்கப்பட்டது. வணிகர்கள் அவரவர் செலவிலேயே அவற்றை நிறுவிக் கொண்டனர். அதுவே இன்றைய் பொதுச்சந்தையாக விளங்குகின்றது. இக்கால கட்டத்தில் சந்தை (Market) க்கென ஒரு வணிக சங்கமும் கடைவீதி (Bazaar) க்கென ஒரு வர்த்தக மன்றமும் இயங்கி வருகின்றது.

*01. ஊ. ஊர்க்கடைகள் :* சந்தையைத் தவிர அனைத்துக் கிராமங்களிலும் பரவலாக ஊர்க்கடைகள் வைக்கப்பட்டன. அவை பெரும்பாலும் அவரவர் வதியும் வீட்டின் அந்தத்திலுள்ள அறையாகவே தென்பட்டன. நாளாந்த தேவைக்குரிய உணவுப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், பீங்கான், கண்ணாடிப் பாத்திரங்கள், காப்பு, மணி போன்ற பொருள்களே இங்கு விற்கப்பட்டன.

02. மீன்பிடித்தல் :இதுவும் இங்குள்ள முக்கிய தொழிலாகும். கணிசமான மீனவர் இதிலீடுபட்டு வருகின்றனர். இவ்வூரின் எல்லைப் பகுதிக்குள் அனேக நீர் நிலைகள் இருப்பதால் அவற்றிலிருந்து அதிக மீன்களைப் பிடிக்கின்றனர். அக்காலத்தில் இங்கு 25 க்கும் மேற்பட்ட புராணக் குளங்களில் ஏராளமான மீன்கள் காணப்பட்டன. வலை, சில்லிவலை, கொண்டோடி அத்தாங்கு, வடிக்கும் அத்தாங்கு, கரப்பு, தூண்டில் முதலிய கருவிகளை இதற்காக உபயோகித்தனர். ஆழம் குறைந்த நீரில் வடித்துப் பிடித்தனர். அதில் வீசுவதைக் ''கால்பாய்ச்சல்'' என்பர். வெள்ள காலத்தில் நீரில் ஓடிவரும் மீன்களை வாளால் வெட்டிப் பிடிப்பர். இரவில் ஓலைப்பந்த வெளிச்சத்தின் உதவியால் மீன்களை வெட்டுவர். இறால் பிடிக்கும் பருவ காலத்தில் ஏராளமான மட்டை இறால், வெள்ளிறால், மணலிறால், முட்டை இறால் என்பன சந்தையிற் குவிக்கப்பட்டிருக்கும். கூனி, சென்னக்கூனி, ஐயா மாசி இனங்களைப் பெண்கள் கூட்டம் சீலையால் வடித்துப் பெறுவர். இறால் மிகுதியாகக் கிடைக்கும் காலத்தில் உல்லாசமாக அங்கு பலர் சென்று இறால்களை அவித்தும், வாட்டியும், பொரித்தும், தேசிக்காய்ச் சொதி காய்ச்சியும், உப்பிறால் சுண்டியும் சோற்றோடு சேர்த்துண்டு மகிழ்வர்.

பெரியகளப்பு, சாகாமக்குளம், சம்புக்களப்பு, நீத்தையாறு முதலியனவற்றில் ஏராளமான மீன்கள் பிடிக்கப்படும். பெரிய களப்பில் சின்ன முகத்துவாரம், பெரிய முகத்துவாரம் என்பன கழிமுகங்களாய் உள்ளன. இக்களப்பு இப்பகுதி மக்களின் மீன் வங்கியும் பண வங்கியுமாகும். (மூன்றும் அதிகாரம் ''நீர் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவியங்கள்'' என்ற உபதலைப்பைப் பாருங்கள்) அண்மைக் காலத்தில் முருவோடையில் நன்னீர் மீன்வளர்ப்பு, களப்பில் இறால் வளர்ப்பு என்பன மீன்பிடித்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. . கடல்மீன், குளத்துமீன், ஆற்றுமீன்கள் கருவாடாக்கப்பட்டுப் பிற இடங்களுக்கு ஏற்றுமதியாகின. வயல் மிதிப்புக் காலங்களில் வரவைகளிலெல்லாம் கணிசமான அளவு மீன்கள் சேற்றிற் புதைந்து கிடக்கும் வயல் வேலை செய்வோர் அம்_ன்களையும் அதை உணக்கிய கருவாடுகளையும் வேளாண்மை செய்யும் காலங்களில் கறி சமைக்க உபயோகப்படுத்திக் கொள்வர். தோணிகளிற் சென்றும் காற் பாய்ச்சலிலுமே இங்கு வலை வீசும் வழக்கம் உண்டு.



மீனவர்கள் கொண்டோடி அத்தாங்குடன் மீன் பிடிக்கச் செல்கின்றனர்.

03. தச்சு மரவேலை : முற்காலத்திலிருந்து தச்சுத் தொழில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. நம் மூதாதையர் காட்டில் வெட்டிய மரத்தைத் தோளிற் சுமந்து வந்து செவ்வையாக்கி இத்தொழிலைச் செய்தனர். வாச்சி எனும் தொழிற் கருவியே அக்காலம் அதிகமாகப் பயன்பட்டுள்ளது. கோடரியினாலேயே மரத்தைத் தறித்தெடுத்துள்ளனர். படிப்படியாகவே ஏனைய கருவிகள் உபயோகிக்கப்பட்டன. வீடு கட்டுவதற்குக் கோப்பிசத்து (கூரை)க்கு சமுளை, முரளை மரங்களும் நிலை, கதவு, ஜன்னல்களுக்குத் தேமல் முதிரை மரங்களும் மாத்திரமே பாவிக்கப்பட்டன. இவற்றிற்கு வேறு மரங்களை உபயோகிக்கமாட்டார்கள். காலஞ் செல்லச் செல்ல இவற்றிற்கு விழினை, கல்லொலிய, பாலை மரங்களும் பாவிக்கப்பட்டன. காடுகள் களனிகளாக்கப்பட்ட பின் நிலைமை தலைகீழாய் மாறிவிட்டது. மரவேலை செய்வோரை இங்கு "ஓடாவி" என்றழைப்பர். கடைச்சற் பொறிகளில்லாத காலங்களிற் கையினாலேயே மரங்களை அழுத்தமாகவும் அழகாகவும் கடைந்தெடுத்துள்ளனர். அக்கால வீடுகள், கட்டடங்கள், பள்ளிவாசல்களிற் பெரும்பாலானவற்றின் தூண்கள், நிலை, கதவு, சன்னல்கள் என்பன கடைச்சல் மரங்களினாலேயே செய்யப்பட்டன. வீடு கட்டுதல், தளபாடங்கள் செய்தல், துலாக்கோல் வீச்சி மரம் பொருத்தல், வயல்களில் வாடிகள், புரைகள் கட்டல், வண்டி, கரத்தைகள் செய்தல், வாசற் படலை, கதவுகள் செய்தல் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்வதில் இங்குள்ள ஓடாவிமார் ஈடுபட்டனர். இவர்களின் தொழில் நிலையங்கள் ஓடாவிக் கம்மாலை, ஓடாவி மால் என அழைக்கப்படும். மக்களின் நாளாந்த வாழ்வில் ஓடாவிமாரின் பணி மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அதன் காரணியால் பொதுமக்களிடம் அவர்களுக்கு நெருக்கமான தொடர்பும் மதிப்பும் என்றும் இருந்து வருகின்றது.

ஒருசிலர் தோணி செய்தல், வண்டிகளின் குத்துக்கால் செய்தல், முதிரை, மருத மரக்குற்றிகளால் உரல் செதுக்கல், உலக்கை சீவல், கோடரி, மண்வெட்டிகளுக்குப் பிடி போடுதல், பலகைக் குத்தி, திருவிலை அரிவாள் (அரவ) மணை, நடைவண்டிகளைச் செய்தல், கட்டைகளுக்குக் கூரடித்து வேலிகட்டிக் கொடுத்தல், பந்தற் போடல் முதலிய பிரத்தியேக வேலைகளைத் தம் ஜீவனோபாயத் தொழிலாகச் செய்து வருகின்றனர். அன்றுட வேலைகளுக்காக் இவர்களைப் பலர் சேர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

அப்போது எவ்வித அனுமதிச் சான்றிதழுமின்றி இவர்கள் தேவையான மரங்களைக் காட்டிலிருந்து வெட்டி எடுத்து வந்தனர். 1860 ஆம் ஆண்டு தொடக்கம் அனுமதிப் பத்திரமுறை அமுலுக்கு வந்ததாகத் தெரிகிறது. ஒரு கன அடி முழுமரத்துக்கு அனுமதிக் கட்டணமாக ஒரு சதம் மாத்திரம் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டியிருந்தது. காட்டுக்குக் காவலர்களை (காடுகாவல்—காடு காவலர்) நியமிக்கும் முறை 1863 இல் ஏற்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*04.* சேனைப்பயிர்ச் செய்கை :மிகத் தொன்மையான தொழில்களில் சேனைச் செய்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. இங்கு குடிவந்த முன்னவர்கள் இதில் மிகக் கரிசனை செலுத்தினர். காடுகளை அழித்து எரித்தபின் மேட்டு நிலங்களில் உணவுப் பயிர்களை உற்பத்தியாக்கினர். பள்ள நிலங்களிற் சிறிதளவு வேளாண்மை செய்யப்பட்டது. சேனைக்குள் வாடிகளமைத்து அதையே வதிவிடமாக்கி வாழ்ந்தனர். தண்ணீர் வசதி இல்லாதவிடத்துப் பெரிய துரவுகள் தோண்டப்பட்டன. மரக்கறி வகைகளான கத்தரி, பீர்க்கு புடோல், நாடை, சுரை, வெண்டி, தக்காளி, பயிற்றை, அவரை, கக்கரி, வத்தகு, வெள்ளரி முதலிய பயிர்களைச் செய்தனர். சிலர் ஒரு பயிருள்ள தனிச்சேனையாக மரவள்ளிச் சேனை, வற்றாளைச் சேனை, சோழச்சேனை, தினைச்சேனை, இறுங்குச் சேனை முதலியவற்றையும் உற்பத்தியாக்கினர். கொச்சிக்காய்ச் சேனையிலும் ஊக்கங்காட்டப்பட்டது. பிற்காலத்தில் நிலக்கடலை (கச்சான்) சேனையிலும் கரிசனை காட்டப்பட்டது.

குடும்பத்தார் அனைவரும் சேனைப்பயிர்களின் சிறந்த விளைச்சலுக்காகப் பல பணிகளைச் செய்வது வழக்கமாகும். பெரியவர்கள் தண்ணீரூற்றும் முயற்சியைச் செய்வார்கள். யானை, மாடு, பன்றி, முயல் ஆகிய மிருகங்களின் அழிவிலிருந்து பயிர்களைக் கடுங்காவல் காக்க வேண்டியிருந்தது. காடுகளின் நடுவண் சேனைகள் அமைந்திருந்ததே அதன் காரணியாகும். கொத்துவேலி, கட்டைவேலி, நிலவேலி என்பவற்றைச் சேனையைச் சுற்றிப் போடுவர். சேனைக்குள்ளேயே சோறு, கறி, மற்றும் உணவுகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

*04. அ.* சேனைகளின் பகுப்பு : சோழச் சேனையிற் கதிர்காலங்களில் பெரிய மிடாப் பானையிற் கதிர்களை அவித்தும் கிழங்குக் காலைகளிற் கிழங்கவித்தும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களோடு அடிக்கடி உண்டு உறவாடி மகிழும் வழக்கம் அக்காலத்தில் அதிகமாகக் காணப்பட்டது. சேனை நிலத்தின் பள்ளச் சாரில் நெற் செய்வதால் அதற்கு நெற் சேனையென்றும், மேட்டுத் தானிய நிலம் பெருஞ்சேனையென்றும், புதிதாகச் செய்வதைப் புதுச்சேனையென்றும், ஒரு இடத்தில் மீண்டும் பயிர் செய்தால் அதைக் கனகு சேனையென்றும் அக்கால மக்கள் பெயர் கொடுத்தழைத்தனர். காடுகளை அழிக்கும் போது இடையிடையே பெரிய மரங்களைத் தறிக்காது விட்டு அம்மரங்களில் அட்டாளை கட்டியும், அவற்றின் கீழ் குடில்கள், வாடிகள் அமைத்தும் வாழ்ந்தனர்.

சேனையில் எரியாது மீந்திருக்கும் அடி மரங்கள் நாட்டுக்கட்டை, கொட்டக்கட்டை, கரிக்கட்டை, அடிக்கட்டை எனப்பல பெயர்களால் அழைக்கப்பட்டன. மிருகங்கள் பறவைகளை தகரச்சகடை அடித்தும், வெடிகொழுத்தியும், தீ மூட்டியும், பெருஞ்சத்தம் போட்டும் விரட்டினர். சேனைச் செய்கையின் மூலம் நல்ல வருவாயும் அலைச்சலில்லாத நிம்மதியான வாழ்வும் அன்றுள்ள மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாயிருந்தது. நல்ல உருசியும் சத்துமுள்ள உணவுகளும் கிடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரச கணக்காளர். பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின், உயர்மட்டத் தேர்வில் சிறப்புச் சித்திபெற்றிய ஜனாப் A.L.M.அமீன் உயரதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெறுகிறார்

05. **களிமண் பாத்திரங்கள் :** இங்கு குயவர்களால் மட்பாண்டங்கள் செய்யப்பட்டன. ரேமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலைச் சூழலிற் குயவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். குடம், சட்டி, பானை, மிடாப்பானை, அரிக்கிமில, அத்திமில (வளந்து) குரச்சி, சிறுச்சட்டி மற்றும் உலமூடி போன்றவைகளை மிகவும் சிறப்பாகச் செய்து வந்தனர். இப்பாத்திரங்கள் அழுத்தமுள்ள மினுமினுப்பானவையாக இருந்தன.

பெண்கள் விடிகாலையிலிருந்தே இவற்றைப் பெற அங்கு திரண்டிருப்பர். குயவர் வட்ட என்ற பெயரில் அப்பகுதி அழைக்கப்பட்டது. பக்கத்தூர்களிலிருந்து வியாபாரிகள் வந்து வண்டியில் மட்பாண்டங்களை வாங்கி ஏற்றிச் செல்வதைக் காணக்கூடியதாய் இருந்தது. குயவர்கள் படிப்படியாக இடம் பெயர்ந்து சென்றதும் இங்குள்ள பெண்கள் அத்தொழிலைச் செய்யத் தலைப்பட்டனர். இதில் நல்ல வருவாய் பெறக்கூடியதாக விருந்தது. பலர் மட்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து வங்கிகளிற் கடன் பெற்றுத் தொழிலை விருத்தியாக்கினர். ஏழாங்குறிச்சிப் பகுதிச் சங்கம் மிகவும் வெற்றிகரமாக இத்தொழிலை நடாத்திவருகின்றது. நவீன முறைப்படி அலங்கார வேலைப்பாடுகளுடனும் பாத்திரங்கள் உற்பத்தியாகின்றன. மகளிருக்கான முழுநேரத் தொழிலாக இது காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்புற் கட்டுகளைச் சுமந்து வரும் பாவையர். கீழே இரு பெண்கள் பன்களை வகைப்படுத்துகிறார்கள்.

06. பன்வேலை : பெண்கள் சிலர் சேர்ந்து போய் இங்குள்ள நீர் நிலையங்களிலுள்ள பன்களைப் பிடுங்கி எடுப்பர். அவைகளைக் பெரிய கட்டாகக் கட்டி வந்து அவற்றினடியைச் சாம்பல் நீரில் அமிழ்த்தி எடுத்துக் காய வைப்பர். பின் பன்கள் வகைப்படுத்தப்பட்டுத் தாருவைகளாகக் கிழித்தெடுக்கப்படும். பன்களப்புகளில் முதலைகளின் நடமாட்டம் அதிகமிருக்கும். அப்படிப்பட்ட இடங்களிற் பன்கள் செழித்து உயரமாக வளர்ந்திருக்கும். சம்புப்பன் அதிகமாகக் கிடைக்கும் களப்பு சம்புக்களப்பு எனக் காரணப் பெயராய் அழைக்கப்படுகிறது.

சம்புப்பன், புற்பன், கிராம்பன், கற்பன் (கல்பன்), பூப்பன், சவரிப்பன், சாம்பற்பன், கொடப்பன், புரிப்பன், ஆடுபன், கொம்புப்பன், கொக்குப்பன், கப்புப்பன் என்னும் பல்வகைப்பன்கள் இங்குண்டு. சிலபன்கள் மிக உயரமாகவும், வேறுசில மத்திய தரமாகவும் இன்னுஞ் சில கட்டையாகவும் பன்னல்லைகளில் வளர்ந்திருக்கும். மருத வெட்டுவான், சம்புக்களப்பு, மோட்டுவெளி, முல்லைத்தீவு, சாம்பமாரி, பட்டிய்டிப்பிட்டி மற்றும் பள்ளவெளி போன்ற இடங்களில் நிறையப் பன்கள் கிடைத்தன. பன்பிடுங்கச் செல்லும் பெண்கள் அதிகாலையில் வெற்றிலை, உமல், கயிறு, கத்தி, நீண்ட தடி ஆகியவற்றுடன் பன்களப்புகளை நோக்கிச் செல்வர். ஒரு முதுமகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டே மற்றவர்கள் செயற்படவேண்டும் என்பது ஒரு மரபாகக் கொள்ளப்பட்டது. நோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விறகுக் கட்டுகளைச் சுமந்து கொண்டு வரும் உழைக்கும் மகளிர்.

மறந்து பணிசெய்யக் கிராமியக் கவிகளைப் பாடிக் கொண்டு தொழிற்படுவர். களப்பில் இறங்கியதும் அம்முதிய பெண் பன்பிடுங்குதலோடு முதலைகளின் நடமாட்டத்தையும் மிக உன்னிப்பாகக் கவனித்து வருவாள். தன்னம்பிக்கையும், துணிவுமே இவர்களின் உந்து சக்தியாக இருக்கும். முதலைகளின் ஊசாட்டமிருந்தால் அப்பெண் ''கட்டு'' என்று சொல்வாள். அதைக் கேட்ட மற்ற மகளிர் உடனே கரையேறிவிடுவர். அதன்பின் அவ்விடத்தை விட்டு வேறிடத்துக்குச் சென்று பன்பிடுங்குவர்.

பன்சோலைக்கிடையில் வரால் மீன்கள் கூடுவைத்துப் படுக்கும். அவ்வரால்களைக் கத்தியால் வெட்டிப் பிடிப்பர். பறவைக்கூடுகளிலுள்ள பறவைகளையும் பிடித்து வருவர். தாருவையாய்க் கிழிக்கப்பட்ட பன்கள் பெரிய பானைகளிற் போடப்பட்டுச் சாயம் போட்டுக் காய்ச்சப்படும். அச்சாயம் சிவப்பு, நீலம், பச்சை நிறமுடையதாகவிருக்கும். இம்மூன்று நிறங்களிலும் தனித்தனியாகப் பன்தாருவைகள் காய்ச்சி நிறமூட்டப்படும்.

அவற்றைக் கொண்டு பாய், தட்டு, பெட்டி, உமல், தடுக்குப் (சிறிய)பாய், பைகள், அசவு முதலியன பின்னப் படும். பெயர், முகவரி, வாழ்க, இன்பக்கனவுகள் போன்ற சொற்களைப் பாய்களிற் பின்னி எடுப்பர். கூறைப்பாய் பின்னும் பெண்கள் கைதேர்ந்த பணியாளராக இருப்பர். ஏழு பாய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறைப்பாய்களாகத் தயார் செய்யப்படும். ஒரு பெரிய அறையின் அளவுக்கேற்றவாறு ஒரேயொரு பாயாக விரிக்கக்கூடிய பெரிய பாய்கள் இழைக்கப்படும்.

நெற்காயப் போடவும் கொச்சிக்காய் மசாலாக்களைக் காயவைத்தெடுக்கவும் "தோட்டுப்பாய்" உபயோகிக்கப்படும். தயிர் போட்டுக் காவி வரப் பிரத்தியேகமான பெரிய உமல்களும் பின்னப்பட்டன. பன்வேலைகளில் நுணுக்கமான விசேட ஆற்றல் உள்ளவர்களின் பன்பொருள்கள் பொறிகளிற் செய்தது போல் மிக அழுத்தமாகவும் கவர்ச்சியாகவும் காணப்படும். பன்வேலைத் தொழிலில் பெண்கள் கணிசமான அளவு ஊதியம் பெற்றுக் கொள்வார்கள்.

07. கிடுகு பின்னல் :காய்ந்த தென்னோலைகளை நீரில் ஊறவைத்து அவற்றின் நடுமட்டையை இரண்டாகப் பிழந்து கிடுகு பின்னும் தொழில் இங்கு பழமையானது. வண்ணான் கேணி, பிரதேச சபைச் செயலகத்துக் கண்மையிலிருக்கும் முச்சந்தி, மன்னன் குளத்தடி, முருவோடை, மருத வெட்டுவான் குளம், சின்னப்புள்ளமும் மாரிக்கட்டு என்பன பிரசித்தி பெற்ற கிடுகுத்துறைகளாகும். லொறிக்கிடுகுகள் வருமுன் பல துறைகளில் இத்தொழில் நடைபெற்று வந்தது. ஆனாலும் லொறிக்கிடுகின் வருகையால் இத்தொழில் பாதிக்கப்படவில்லை. இக்கிடுகுகளில் பெரிய அளவும் பலமான பின்னலும் புதிய

தென்னோலையால் பெண்கள் கிடுகு பின்னுகின்றனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்மையும் கூடிய பாவனைக் காலமும் மேலும் இவற்றின் மவுசைக் கூட்டிக் காட்டின. மண்வீடுகளின் கூரைகள் கிடுகுகளால் வேயப்பட்ட காலகட்டத்தில் கிடுகுத் தேவையைச் சமாளிக்க முடியாது அவை பற்றுக் குறையாய் இருந்தன. மாத்தறை, தங்காலைக் கிடுகுகளைப் பார்க்கிலும் அவை கூடிய விலை பெற்றன. முற்பணம் கொடுத்து நேரகாலத்தோடு ஒழுங்கு செய்தாலன்றி ஊர்க்கிடுகுகளைப் பெறமுடியாதிருந்தது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லோரும் கிடுகிழைத்து அதிக வருவாயைப் பெற்று வந்தனர். கூரைக்குக் கிடுகு கட்டும் பணியாளர் எட்டுப்பத்துப் பேராகச் சேர்ந்து குழுமுறையிற் கிடுகு வேய்ந்து பணம் பெற்றுக் கொள்வார்கள். ஓலை, கிடுகுகளை ஏற்றிவரும் வண்டிக்காரரும் தொழில் வசதியை இதன் மூலம் தேடிக்கொள்ளக் கூடியதாயிருந்தது.

08. பீடி சுற்றல் : இத்தொழிலில் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் என்ற பேதமின்றி எல்லோரும் ஈடுபட்டனர். இது சிறந்த குடிசைத் தொழிலாக இயங்கி வந்தது. மான்பீடி, பைலட் பீடி, கலீல் பீடி, ஸ்பெட் கிளவர் பீடி, லோட்டஸ் பீடி, பாறூக் பீடி, அனிபா பீடி, கரீம் பீடி, நஜீம் பீடி, நயிஸ் பீடி மற்றும் மக்கள் பீடி எனும் நிலையங்கள் இவ்வூரிற் குறிப்பிடக்கூடிய அளவு பணியாளர்களைக் கொண்டிருந்தன. சிலர் பீடி இலை, புகையிலைகளை முதலாளிமாரிடமிருந்து பெற்றுப் போய்த் தத்தமது வீடுகளில் வைத்து பீடி சுற்றிப் பின் அந்த பீடிகளை முதலாளிமாரிடம் ஒப்படைத்துச் சம்பளம் பெறுவர்.



இளைஞர்கள் பீடி தயாரிப்பதிலீடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இத்தொழில் மூலம் முன்னேறிய சிலதொழிலாளர் வீடுகள் கட்டியும், நகைகள், காணிகள் வாங்கியும் முன்மாதிரியாய்த் திகழ்கின்றனர். பீடிக்கட்டுக் கட்டுதல், பண்டல் அடித்தல், லேபல் ஒட்டுதல், சந்தைப்படுத்தல்கள் மூலமும் சிறுவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது.

09. நீறு, சுண்ணாம்பு உற்பத்தி : கடற்கரையிற் காணப்படும் ஊரி, சிப்பிகள், சுண்ணக் கற்கள், சல்லிக்கற்கள், முருகைக் கற்களைச் சேகரித்து அனேகர் இவ்வுற்பத்தியிலீடுபடுகின்றனர். கடந்த பல வருடங்களுக்கு முன்பிருந்தே அக்கரைப்பற்று 2ஆம் 3ஆம் 4ஆம் குறிச்சிகளில் வாழ்ந்த இத்தொழிலாளர் முற்றாக இடம் பெயர்ந்து சென்று அரசினர் வைத்தியசாலைக்கண்மையிலுள்ள 40 ஆம் மைற் கல்லில் வதிவிடங்களையமைத்துள்ளனர். இவர்கள் தாம் சேகரித்த சுண்ணப்பொருள்களைக் காளவாய் (சூளை) நெருப்பிலிட்டுச் சுட்டு நீறு எடுக்கின்றனர். நீறு, சுண்ணாம்பு, கரி என்பவற்றின் மூலமும் வீட்டுச் சுவர்கள், மதில்களுக்குச் சுண்ண வெள்ளை பூசு (அடித்)தல் சுண்ணாம்பு விற்றல் மூலமும் தம் ஜீவனத்துக்கான முக்கிய வருவாயைப் பெற்றுக்கொள்வர். இது சுண்ணத் தொழிலாளருக்குரிய ஒரு தனிப்பட்ட தொழிலாகும். சிப்பி நீறு கெட்டியாகவும் தூய வெண்ணிறமாகவும் இருப்பதால் அதிக விலையில் விற்கப்படும்.

10. அரிசிகுற்றல் : நெற்குற்றும் பொறிகளின் உபயோகத்துக்கு முன்பு நெல்லை உரலிலிட்டுக் கைக்குற்றரிசி எடுத்து விற்பது பல மாதரின் பணியாகக் காணப்பட்டது. நெல்மூடைகளை வாங்கிப் பல பேர் கூட்டாக அவித்துக் காயவைத்து உரலை வட்டமாக வைத்து நெல்லைக் குற்றி அரிசி பெறுவர். அரிசிகள் பனை ஓலைப்பெட்டிகளிற் கொட்டப்பட்டுச் சந்தைக்கு விற்பதற்காகத் தலைச் சுமையாய்க் கொண்டு செல்லப்படும்.


[illegible] இறால் பிடிக்கும் பருவகாலம் (Season) [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தன்னிக்கும்பலாக, வேறு சிலர் தனியாகவும் இப்படிச் செய்வதுண்டு. நெல்லை உரலிலிட்டுத் தட்டைப்பூண் உலக்கையாற் குத்துவார்கள். அது ''நெல்லை மசித்தல்'' எனப்படும். அதை வெளியிலெடுத்துச் சுளகாற்புடைத்து மீண்டும் உரலிற் போட்டுக் குற்றல் ''சொலித்தல்'' எனப்படும். இப்படிச் செய்து மூன்றும் முறை குற்றுவது ''அடுக்கலாக்கல்'' என்பதாகும். இறுதியில் கொத்துப்பூண் உலக்கையாற் குற்றுவது ''தீட்டுதல்'' என்றாகும். சுளகைச் சாய்த்து அரிசியைப் பரவிப்புடைத்தலைக் ''கொளித்தல்'' என்பர்.

தீட்டப்பட்ட அரிசி புடைக்கப்பட்டு உமி, தவிடு குறுணல், வைர அரிசி எனப்பகுக்கப்படும். தவிட்டுப்பற்றில்லாமல், சிலருக்கு வெள்ளை வெளேலென்றிருக்கும் அரிசி நன்றாகத் தீட்டி எடுக்கப்படும். பச்சையரிசி வேறாகக் குற்றப்படும். முளைக்கட்டியபின் முளைத்தது தெரிந்தெடுக்கப்பட்டு முளைக்காமல் கிடக்கும் நெல்லிலிருந்து பெறப்படும் அரிசி வந்தையரிசி என்றும், ஈரம்பட்டுப்பூர்த்துப்போன நெல்லரிசி ''மடியரிசி'' எனவும், இடையிடையே கறுப்புக் கலந்தது ''குருட்டரிசி''யாகவும் கொள்ளப்படும். பூப்போன்றதும் சுவையானதுமான சோறு சமைக்க நெல்லிற் குறைந்த அளவு தண்ணீரூற்றி அவித்து அரிசிகுற்றி யெடுப்பதற்கு ''வெண்புழுங்கல்'' எனப்படும். இவ்வரிசி சற்று விலை கூடியதாகும். பச்சையரிசித் தவிட்டுக் கொழுக்கட்டையைப் பிள்ளைகளுக்குச் சத்துணவாகக் கொடுப்பர்.


நெல்லை உரலிற் குற்றிக் கைக்குற்றரிசி பெறும் பெண்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்களிறால் பாய்கள் இழைக்கப்படுகின்றன.



வண. தம்மரத்ன தேரோ



விஸ்வப் பிரம்மஸ்ரீ ப. தங்கவேல்
ஆச்சாரி காளி கோவில் பூசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாம் அதிகாரம்
## கல்வியின் வளர்ச்சிப் படிமங்கள்

ஆரம்ப நிலை: இலங்கையின் கல்வி நிலைப்பாட்டின் ஆரம்பகாலம் முறைசாரக் கல்வி வடிவத்தையே கொண்டிருந்தது. சிங்கள மக்கள் பிரிவேனாக்கள் மூலமாகப் படித்தனர். தமிழ் முஸ்லிம் மக்கள் குருசிஷ்யமுறை, கேள்விப்புலனறிவு (செவியேறல்) எனும் இயற்கையோடியைந்த வழிகளிற் கற்றனர். கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், விகாரைகள் எனும் வழிபாட்டுத் தலங்களிலிருந்த சமயகுரவர்கள், குருமார்கள், ஆலிம்கள், ஹாமுதுரு ஆகியவர்களாற் சமய அறிவைப் புகட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டு தொடக்கி வைக்கப்பட்ட சிறு போதனா பீடங்களில் படிப்படியாகப் பல்துறை வளர்ச்சிகளுக்கு அத்திவாரமிடப்பட்டது.

1580இல் இங்கு வந்த போர்த்துக்கேய ஆளவான் I ஆம் பிலிப்புவின் காலத்தில் பல அன்னியப் படையெடுப்புகளால் பிரிவேனாக் கல்விமுறையிற் சீரழிவு தொடங்கியது. கல்விவளர்ச்சியில் போர்த்துக்கேயர் அக்கறை காட்டாததனால் நிலைமை மேலும் மோசமடைந்தது. சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டனர். எனினும் வணக்கவழிபாட்டுத் தலங்களின் சுதந்திரமான கல்வியில் எதுவித பின்னடைவும் தென்படவில்லை. இவற்றிற்கென நிரந்தரமான இடமோ, சட்டவரைவுகளோ, பாடத்திட்டங்களோ, குறிப்பிட்ட ஆசிரியர்களோ இருக்கவில்லை.

கல்விப்பயன்பாடுகள் முறை சார்ந்த, முறை சாராத, கேள்வி ஆகியவற்றின் மூலம் வருவன. அவை கிழ்வரும் பிரிவுகளிலடங்கிய பங்களிப்பின் அடைவுகளாகவே அன்று காணப்பட்டன. அவையாவன:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i திண்ணைப் பள்ளிக்கூடங்களின் இலக்கண, இலக்கிய, சமூக அறிவு

ii வணக்க வழிபாட்டுத் தலங்களின் போதனைப்பயன்பாடு, சமய அறிவு, பண்பாடு கலாசார, ஆன்மீக அடைவுகள்

iii புலவர்கள், ஏட்டுச் சுவடிகளின், இயல், இசை, நாடக, வைத்திய, மாந்தரீக அனுபவங்கள்

iv செவியேறல் வாயிலாகப் பெற்ற பல்துறை ஞானம்

v அக்கால மரபுப்படி பிறரின் பாடல்களின் மூலம், அவற்றை மனப்பாடஞ் செய்வதன் வாயிலாகப் பெற்ற கலைக் கருவூலங்களின் ஆற்றல்

vi ஓதற் பள்ளிக் கூடங்களில் (மத்றசா) செயற்படுத்தப்பட்ட போதனை, எழுத்துப் பயிற்சிகள்

vii அறபு, தமிழ்க் கிரந்தங்களின் பாடல், கேட்டல் பாடமிடற் பயிற்சி

viii புராணவிரிவுரைகள், கதாப்பிரசங்கம், புராணக் கவிதைகள், கூத்துக்கள், நாடகங்கள், பக்திப்பாடல்கள், ஹதீஸ் வைபவங்கள், அறபுத்தமிழ் ஏடுகளின் வியாக்கியானங்களின் முதிர்வு.

ix எண்ணெய்ச்சிந்து, தாலாட்டு, ஒப்பாரி, ஊஞ்சல், கும்மி, அஞ்ஞலிமாரிசை, கிராமியக் கவிகள், தனிப்பாடல்கள், ஏசல், அம்மானை, பாறல், ஒப்பாரி முதலியவற்றின் கவர்ச்சியறிவுப் பயன்

x தனிப்பட்ட வீடுகளில் தாய், தந்தையர், மற்றோரால் அளிக்கப்பட்ட சமய சமூக, கலை கலாசார விழுமிய ஆற்றல்

xi மசானி, பத்ஹுத்தையான், புர்தா, வித்ரியா, ஹம்ஸியா, நூல்பாத்திஹா, கஸஸுல் அன்பியா, அறபுத்தமிழ் விரிவுரைகளின் ஏற்பாடு

திருச்சபை (Missionary)ப் பாடசாலைப் போதனை

பாடசாலைகளின் முறை சார்ந்த கல்விப் பயன்பாடுகள்.

பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி, பயிற்சிக் கலாசாலை, கல்விக் கலையகம் ஆகியவற்றின் அமைவும் அடைவுகளும்

xv தனியார் நிறுவனங்களான பாலர் பாடசாலை (Nursery) கல்வி அமைப்புகள் (Private institute) பயிற்சி வகுப்புகள் (Training Class) ஆகியவற்றாலும் வேறு வழிகளாலும் தேடிக்கொண்ட மெய்யறிவு.

மேற்காட்டப்பட்டிருக்கும் பதினைந்து வகுதிகளிலும் பதினோராம் வகுதிவரை அக்கரைப்பற்றுப் பகுதிக்கல்வி முறைசாராக் கல்வி, செவியேறற் கல்வி என்ற இரு கூறுகளில் அடங்கும். ஏனைய நான்கு பிரிவுகளிலும் பதினைந்தாம் பிரிவு தவிர்ந்த ஏனைய மூன்று முறை சார்ந்த கல்விச்சட்ட வரைவுக்குள் ஏனைய மூன்றும் முறைசார்ந்த கல்விச்சட்ட வரைவுக்குள் அரசு கல்வித்திணைக்களத்தால் உட்படுத்தப்பட்டவையாகும். 1869 இல் தொடக்கிவைக்கப்பட்ட கருங்கொடித்தீவு மெதொடிஸ்த மிஷன் பாடசாலையின் ஆரம்பத்திலிருந்தே வரையறுக்கப்பட்ட கல்வி நிபந்தனை வரைவுகள் அமுலில் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் படிப்பகங்களைப் பொறுத்தவரை அவை அவரவரின் தோதுக் கேற்ப அமுல் செய்யப்படுகின்றன. அவைகளில் கட்டுக்கோப்பான ஒருங்கிசைவு பெற்ற ஒரு பொதுக்கல்வி மேம்பாட்டுத் திட்டம் இல்லாததைக் காணலாம். எவினும் பாடத்திட்டம், கால அட்டவணை என்பன நடைமுறையிலுள்ளன.

கல்விமான்கள்:- ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாகக் கருங்கொடித்தீவின் கல்வி கேட்டல், பாடஞ் செய்தல் மூலமாகவே வளர்ந்து வந்துள்ளது. அதன்மூலம் பெரும்புலவர்களாகவும், மேதைகளாகவும் பலர் தேர்ச்சிப்பெற்றுக் காணப்பட்டுள்ளனர். நிகண்டு, நந்நூல், யாப்பெருங்கலக்காரிகை, நைடதம் முதலாம் இலக்கண நூல்களிற் சிலர் பாண்டித்தியம் பெற்றுள்ளனர். கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, சூடாமணி, சீறாப்புராணம், மணமங்களமாலை, முகையதீன்புராணம், புதுகுஷ்ஷாம் முதலிய இலக்கிய நூல்களைக் கற்ற பல இலக்கியச் செல்வர்களும் மக்களுக்குச் சுவையூட்டியுள்ளனர்.

தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள், பெரியபுராணம், திருக்குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், புகாரி, முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா, நஸாஇ போன்ற இமாம்களின் மொழி அறிஞர்களின் அறமொழி, பெரியார்களின் தத்துவ மொழிபோன்றவற்றில் பலபேர் பேரறிவு பெற்றுப் பக்தி நெறிகளையும் சன்மார்க்க தத்துவங்களையும் மக்கள் முன் படைத்துள்ளனர்.

கருங்கக்கூறின் ஆயகலை அறுபத்துநான்கும் அக்காலப் பெரியார்கள், கல்விமான்களால் ஆரம்பகாலந்தொட்டு சிறியதோ பெரியதோ வரையறுக்கப்படாத இயற்கை வழிகளின் மூலம் தடைப்படாது வளர்ந்து வந்திருக்கிறது என்பது உண்மையாகும். அக்கால மக்களின் எழுத்தழகும், இலக்கணவமைதியும், இலக்கியச்சிறப்பும், அறிவுத்திறனும் நம்மை வியப்பிலாழ்த்தும் பெற்றி வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. தவிர மக்களின் கலைக் கருவூலங்கள், கிராமப்புலவர்களின் கீர்த்தி மிக்க சிறப்புப்பாடல்கள், கவிகள் பாடியளித்த மாதர்களின் கவின் மிகு உணர்வோட்டங்கள் போன்றவை மேலும் எமக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளன. இவையெல்லாம் இவ்வூர் அறிவுச் செல்வத்தின் வெளிப்பாடும், பங்களிப்புமாகும்.

கல்வியிற் பின்னடைவுக் காரணிகள்:- குறைந்த ஒரு தொகையினரைத்தவிரப் பெரும்பான்மையோர் கல்வியில் அக்கறையில்லாதிருந்தனர். போத்துக்கேயர் முஸ்லிம்களுக்கு விளைவித்த இன்னல்களும், வேற்று மொழிக்கல்வி சமய சம்பந்தமான கோட்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கலாம் என்ற தவறான எண்ணக்கருக்களும், அக்கால மக்கள் வாழ்ந்த ஊர்மனைகளின் வாழ்க்கை அமைப்பும் அவர்களிடையே கல்விபற்றிய சிந்தனை முனைப்பைத் தூண்டத்தவறின. முக்கியமாகக் கல்வியின் மேம்பாடுபற்றிய விளக்கத்தை அவர்கள் நன்றாக அறிந்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தல், உண்ணல், விளையாடல், உறங்கல் என்ற நிலைப்பாடே அவர்களிடம் ஊறிக்காணப்பட்டது. வேறு தூண்டல்களாலும் அவர்கள் துலங்கிட வாய்ப்பும் இருக்கவில்லை.

**ஒல்லாந்தரும் கல்வியும்:-** ஒல்லாந்தர் ஆட்சியில் சமயத்தைப் பரப்பும் ஊடகமாக புரட்டஸ்தாந்து மதகுருமார் கல்வியைப் பயன்படுத்தினர். போத்துக்கேசர் சைவத்தைச் சிதைத்து அவர்களைக் கத்தோலிக்கராக்கினர். தவிர திருக்கோணமலை, சீதவாக்கை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டிருந்த இந்துக் கோயில்களைத் தரைமட்டமாக்கினர். ஒல்லாந்தரும் இவ்வழி தொடர்ந்தனர்.

இச்செயலையறிந்த பிரித்தானியரின் ஆட்சியில் ஒருமாற்றமுண்டாயிற்று. அவர்கள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயத்தைப்பரப்ப ஆர்வங்காட்டினோராயினும் சைவசமய வளர்ச்சிக்குத்தடையாயிருந்திலர். 1805 இல் ஆள்பதி சேர் தோமஸ் மேயிற்லந்து என்பான் கல்விப் பணியைத்தொடராது இடைநிறுத்துமாறு பணித்தான். பொருளாதார நெருக்கடியால் இந்நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதைக்கண்ணுற்ற கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களான பல மிஷனரிகள் இப்பணியை ஏற்றுச் செயற்பட்டனர்.

கோல்புறூக் ஆணைக் குழுவினர் ஆங்கில மொழிக்கு முக்கிய இடமளித்தனர். இக்குழுவின் விதந்துரைப்படி ஆள்பதி வில்மட் ஹோட்டன் (1831 - 1837) என்பார் 1834 இல் ஒரு கல்விச்சபையை அமைத்தார். பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் ஓர் ஏற்பாடும் செய்யப்பட்டது. கல்வித்திட்டங்களும் ஒருவரையறைக்குள் வகுக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் அன்னிய மொழியான ஆங்கிலமும், மதமான கிறிஸ்தவமும் ஈழத்து சுதேச மக்களிடையே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியது.

பொதுமக்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம் சமயங்கள் இவற்றின் ஆதிக்கத்தால் சர்வமும் கிறிஸ்தவ சமயமாகி விடுமோவென அஞ்சினர். அதன் பலனாகப் பிரதான பட்டணங்களில் பாடசாலைகளை நிறுவித் தத்தம் மதவழிபாட்டைச் சுதந்திரமாய் நடாத்த முனைந்தனர். 1900 ஆம் ஆண்டளவில் (90 வருடங்களுக்குமுன்) 21 இலட்சம் பௌத்தர்களுக்கு மொத்தமாக இலங்கையில் 132 பாடசாலைகள் மாத்திரமே இருந்தன. அதே சமயம் 03 லட்சம் கிறிஸ்தவர்களுக்கு 1117 பாடசாலைகள் இருந்தன. அது அன்றுள்ள அரசு காட்டிய பாரிய அக்கறையையும் கோடிட்டு விளக்குகின்றதெனலாம்.

**மிஷனரிப் பாடசாலைகளும் பணியும்:-** 1819 இல் எட்வர்ட் பாண்ஸ் என்பான் ஏவுநர் முதல்வனாக இங்கு வந்தான். கல்வியின் பெயரால் மாற்றப்படும் சமயப் பரம்பலை அவன் விரும்பினானல்லன். தவிர சுதேசிகளின் கலை, கலாசார, பண்பாடு, பாரம்பரியக் கிரியைகள், நாகரிகம் என்பவற்றில் யாரும் அக்கறை காட்டவேண்டியதில்லை. அது அவரவர் சொந்த விடயம் என்ற மனப்பாங்கைக் காட்டினான். கல்வித்திட்டங்களை அமுல் நடாத்துவதில் பல எதிர் விளைவுகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. நிதிபற்றாக்குறை, பயிற்சிபெற்ற ஆசிரியர் போதாமை, மேற்பார்வை செய்வதிலேற்பட்ட தடங்கல் என்பன கல்வித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தை விழ்த்தத் தொடங்கின. இதனுல் பாடசாலைகள் மிஷனரிமார் பொறுப்பிலும், தனிப்பட்ட கல்விமான்கள், செல்வந்தர் பொறுப்பிலும் ஒப்படைக்கப்பட்டன. 1829 இல் (160 வருடங்களுக்கு முன்) நாடு முழுவதும் 90 அரச பாடசாலைகள் மாத்திரமே இருந்தன. தமிழ் மாநிலங்களில் 04 அரச பாடசாலைகளே காணப்பட்டன. கிறிஸ்தவப் பாடசாலைகள் நிறுவ மிஷனரிமார்களுக்கு நிலமும் நிதியும் வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டது.

மிஷன் பாடசாலைகளில் கற்றவர்கள் ஆங்கில அறிவைப் பெற்றனர். உத்தியோகங்கள் அவர்களுக்கே வழங்கப்பட்டன. சமய அடிப்படையில் இந்துக்கள், இஸ்லாமியர், பௌத்தர் புறக்கணிக்கப்பட்டனர். மேலாதிக்கஞ் செலுத்துவோராக ஆங்கிலம் கற்ற கிறிஸ்தவர்கள் மாத்திரமே உயர்பதவியில் அமர்த்தப்பட்டனர். இக்காலக்கட்டத்தில் அரச, தனியார், மிஷன் என மூன்றுவகையான கல்வி நிறுவனங்கள் இருந்தன. ஆனுல் பௌத்த, இந்து, இஸ்லாமியப் பாடசாலைகள் ஒன்று கூட நிறுவப்பட்டிருக்க வில்லை. அரசு சுதேசிகளுக்கெதிராகப் பாரபட்சம் காட்டியது. மக்களைக் கல்வியில் நாட்டங்கொள்ளாது தடுக்கவும், அவர்களைப் போதைப் பிரியராக்கவும் முனைந்தது. கண்டிப் பிரதேசத்தில் 1848 இல் நான்கு பாடசாலைகள் மாத்திரமே இருந்தன. ஆனுல் மதுபானச் சாலைகள் நூற்று முப்பத்துமூன்று திறக்கப்பட்டிருந்தன..

1812 - 1818 வரை யாழ்நகரில் மிஷனரிப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. அதேசமயம் சைவசமயத்தவர் கல்வியில் ஊக்கங்குன்றியிருந்தனர். சைவமும், தமிழும் தழைக்க வழியில்லாத காலகட்டமது. அதன்பின் 1822-09-18 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களால் வண்ணுர்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாலயம் நிறுவப்பட்டது. 1872 இல் யாழ்ப்பாணத்தில் ஓர் ஆங்கிலப் பாடசாலையும் (Anglo Vernacular School) ஆரம்பிக்கப்பட்டது. 1902 இல் கொழும்பில் விவேகானந்த வித்தியாலயம் தோன்றியது.

முஸ்லிம்கள் 1891 இல் கொழும்பில் ஒரு கல்விச் சங்கத்தை ஆரம்பித்தனர். அதன் முயற்சியால் 1892 இல் மருதானையில் ஸாஹிறுப் பாடசாலை நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து கம்பளை, அளுத்கம, புத்தளம் ஆகிய இடங்களில் முஸ்லிம் பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன. மக்கள் பலர் காலக் கழிவில் ஆங்கில மொழியை அரவணைத்தனராயினும் அவர்களது கலாசார, நாகரிக, பண்பாடுகளையும், ஏதேச்சையான மேலாண்மைத் தனத்தையும் வெறுத் தொதுக்கினர்.

இதுவரை இலங்கை மக்களுக்கு உயர் கல்வி வசதிகள் மறுக்கப்பட்டு வந்தன. அது மேலாதிக்க வர்க்கத்தினரின் முதுசொமாக மாத்திரம் இருந்து வந்தது. இதையுணர்ந்த எட்வர்ட் மக்கலம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையால் 1921 இல் பல்கலைக்கழக கல்லூரி யொன்று தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து அத்தேர்விற் பங்குபற்றச் செய்யும் கலைக்கூடமாகவே செயற்பட்டது.

1814 இல் வண. வில்லியம் ஓல்ட் என்பவரால் மட்டக்களப்பில் முதலாவது ஆங்கிலப் பாடசாலையொன்று மத்திய கல்லூரி (Central College) எனும் பெயரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிக்கப்பட்டது. ஆண்களுக்காக மாத்திரம் இயங்கிய இக்கல்லூரி 1833 இல் கலவன் கல்லூரியாக்கப்பட்டது.

கிழக்கிலங்கையின் முதலாவது தமிழ்ப்பாடசாலை புளியந்தீவிலுள்ள முதலியார் தெருவில் 1838 இல் தொடக்கி வைக்கப்பட்டது. 1845 இல் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக வின்சன்ற் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1851 இல் அங்கு ஒரு கத்தோலிக்கப் பாடசாலை கட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து கல்முனையில் லீஸ் உயர்தர ஆங்கிலப் பாடசாலை (Leese High School) ஸ்தாபிக்கப்பட்டது.

## கருங்கொடித்தீவு - கல்விப் பரம்பல்

1. ஓதற்பள்ளிக் கூடம்: ஆரம்பகாலத்தில் ஓதற் பள்ளிக்கூடம் எனப்படும் குர்ஆன் மத்ரஸாக்களில் இஸ்லாம் சமயக்கல்விப் போதனை நடைபெற்று வந்தது. தமது மத, கலாசார, பண்பாடு முதலிய பாரம்பரிய விழுமியங்களைப் பேணிக்காப்பதில் முஸ்லிம்கள் ஒருமித்து தனித்துவமான கருத்தைக் கொண்டுள்ளனர். அவற்றின் அத்திவாரமே இந்த மத்றஸாக்களாகும். ஒரு முஸ்லிம் கிராமத்தின் கேந்திர நிலையங்கள் பள்ளிவாசல்களாகும். அங்குதான் சமயவழிபாடுகளும், கலாசார நிகழ்வுகளும் நடைபெறும். ஆலிம்கள் உயரிய இடத்தில் வைத்து மதிக்கப்பட்டனர். பள்ளிவாசல்களில் இமாமாகவும், சில சமயங்களில் அவரே மத்ரஸாக்களை நடாத்தும் முஅல்லிமாகவும் தொழிற்படுவதால் ஆலிமின் சொல்லுக்கு அடுத்த சொல் சொல்வார் யாருமிலர். சமய, சமூகச் சடங்குகளை ஆலிம்களே தலைமை தாங்கி நடாத்துவர். ஓதற் பள்ளிக்கூடங்களில் அவர்களின் பங்களிப்பு மிக மகத்தானதாகும். அறபு அட்சரத்திலிருந்து எழுத்துக்கள் அறிமுகஞ் செய்யப்பட்டு எழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படும்.

சமயத்துறை வழிபாடுகளிலும் அவற்றைப் பரப்புவதிலும் தமிழ் நாடு முஸ்லிம்களும் இங்குள்ள முஸ்லிம்களும் நெருங்கிய தொடர்பு கொண்டு வந்துள்ளனர். காயற்பட்டணம், வேலூர், பொதக்குடி, நீடூர் போன்ற ஊர்களிலுள்ள அறபுக் கலாசாலைகளிற் கற்றுப் பட்டம் பெற்ற இந்திய மவ்லவிமார் இங்குள்ள மத்றஸாக்களிலும் கடமையாற்றியதுடன், பள்ளிவாசல் பேஷ்இமாமாகவும், நடத்துநராகவும், பள்ளிவாசல் அமைப்பாளராகவுமிருந்து அருந்தொண்டாற்றியுள்ளனர்.

இவ்வூருக்கு அடிக்கடி கோட்டாறு, காயல்பட்டணம், கீழக்கரை ஆகிய ஊர்களிலிருந்து அறபுமொழிப் பாண்டித்தியம் பெற்றவர்கள் வந்து மார்க்கச் சொற்பொழிவுகளை நடாத்தியதால் இம்மக்கள் நற்பயனடைந்துள்ளனர். இஸ்லாமிய ஞானக் கருவூலங்களைச் சிலர் அறபுத் தமிழில் பெயர்ப்புச் செய்து எழுதிய கையெழுத்துப்பிரதிகள் பெரிய பள்ளி, சின்னப்பள்ளி, புதுப்பள்ளிவாசல்களில் வைக்கப்பட்டிருந்தன.

பெரியபள்ளிப் பிரதி கலந்தர்லெப்பை ஆலிமிடமும், சின்னப்பள்ளிப் பிரதி முஹம்மத் அபூபக்கர் லெப்பை ஆலிமிடமும் இருந்ததாக அறியமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமோக வழிகாட்டிகளாகவும் ஆலிம்கள் உழைத்து வந்ததால் அவர்களின் மதிப்பு உயர்ந்து காணப்பட்டது. பள்ளிவாசலுக்கு அடுத்ததாக மத்றஸாக்கள் மதிக்கப்பட்டன. அவையிரண்டும் பல விடயங்களில் இணைந்து செயற்பட்டதாலும் இவ்வூர்க் கல்வி வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பள்ளி வாயற் பரிபாலனத்தின் கீழும் சில குர்ஆன் மத்றஸாக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர் தாம் கற்றதை மறக்காதிருக்க அடிக்கடி மீட்டு ஓதுவர். வியாழக்கிழமைகள் தோறும் மத்றஸாக்களில் பழைய பாடங்களைப் பாடமாக்கும் ஒழுங்கிருந்தது. மஃறிப் தொழுகைக்குப் பின் இவ்வூர்ப் பிள்ளைகள் குர்ஆன் ஓதும் அழகும் இனிமையும் சிறப்பாக இருக்கும். பெரும்பாலான வீடுகளில் குர்ஆன் ஓதுவதை நாளாந்தக் கடமையாகக் கருதிச் செயற்பட்டனர். மவ்லிது ஓதல், புர்தா, விர்தியா ஓதல் மற்றும் சூறாக்கள் ஓதல்கள் மனப்பாடமாக்கல் என்பன நடைமுறைப் படுத்தப்பட்டன. பெரியவர்களும் மிகப் பக்தியோடு ஓதிவருவர். பெருமானார் (ஸல்) அவர்களுடைய காலத்திலும் ஸஹாபாப் பெருமக்கள் காலத்திலும் தாறுஸ்ஸுப்பான் என்ற திண்ணைப் பள்ளிக்கூடம் மிக வெற்றிகரமாக நடைபெற்று வந்துள்ளது. அதன் மூலம் மார்க்கக் கல்வி ஞானம் பெருக வாய்ப்பேற்பட்டது என்பதை இங்கு குறித்துக் காட்டல் பொருந்துவதாகும்.

**வணக்க வழிபாட்டுத் தலங்களின் கல்வி** :- கோயில்களில் புராண விரிவுரைகள், கதாப்பிரசங்கம், சமயச் சொற்பொழிவுகள் முதலியன நடைபெற்றுள்ளன. தமிழ்ப்பாடங்களும் சொல்லிக்கொடுக்கப்பட்டன. கூட்டுப் பிரார்த்தனை மூலமும் அறிவாற்றல் பெறப்பட்டது. தவிர எண்ணெய்ச்சிந்து, அண்ணாவியார் பாடல், கூத்துப்பாடல், வசந்தனுடல், காவடிச்சிந்து, திருப்பாவை, திருவெம்பாவைக் கீதங்கள் மற்றும் தனிப்பாடல்கள் வாயிலாகவும் கல்விவளர்ச்சி தொடர்ந்தது.

பல்துறை சார்ந்த வகைவகையான மெட்டுகளிலுள்ள பாடல்களை இராகம் தாளத்தோடு இனிமையான குரல் வளமுடைய ஆடவரும் மகளிரும் பாடும் போது அப்பாடலோசை மக்களின் உள்ளத்துக்கு உவகை யூட்டுவனவாய் இருந்தன. அதன் கவர்ச்சியினால் அவற்றைச் செவியேறல் மூலம் மனனஞ் செய்து பலர் அறிவைப் பெருக்கிக் கொண்டனர்.

தேவாலயங்களில் மதபோதனை ஆரம்பிக்கப்பட்டு பின் அது கூட்டு முயற்சியாகத் தொடர்ந்தது. சமய அறிவுவிருத்தியோடு வேறு துறைகளிலும் இதன்மூலம் அறிவுவளர்ச்சியேற்பட வாய்ப்பிருந்தது. இப்படியே கல்வி வளர்ச்சி இவ்வூரிற் தொடர்ந்து வந்துள்ளது.

**முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை** : இவ்வூரிற் சனங்கள் குடிவந்து சுமார் இருநூறு ஆண்டுகள் கடந்தும் முறையான பாடசாலை அமைப்பொன்றிருக்கவில்லை. 1867 இல் மெதொடிஸ்த மிஷனரிமாரால் சமயக் கல்விக்கென சிறிய அளவிலான ஒரு கொட்டகை (தற்போது சண்முகநாதன் ஸ்ரோர் உள்ள வளவில்) கட்டப்பட்டது. அதன்பின் 1869 இல் இம்மத பாடசாலை அரசினர் நன்கொடை பெறும் தமிழ்க் கலவன் பாடசாலையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றப்பட்டது. கருங்கொடித்தீவு மெதொடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையென அதற்குப் பெயரிடப்பட்டது. இதில் இந்து, சிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்தம் ஆகிய நான்கு சமயங்களையும் சேர்ந்த சிறுவர்கள் படித்து வந்தனர். காரைதீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை உபாத்தியாயர் என்பவர் முதற் தலைமையாசிரியராய்க் கடமையேற்றார். மிஷனரி நிர்வாகி (Manager) யால் இந்நியமனஞ் செய்யப்பட்டுள்ளது. அரசு இப்பாடசாலைக்கு நன்கொடையாகப் பணக் கொடுப்பனவு செய்வதும், பாடசாலைப் பரிசோதகர் மூலம் மேற்பார்வை செய்வதும் ஆகியவற்றைத் தவிர மற்றும் முழுப் பொறுப்புகளும் நிர்வாகியின் கட்டுப்பாட்டினுள் இருந்தன.

இவ்வூர்ப் பிறந்தவரான அ.ம. முத்துமீரா லெப்பை என்பவர் ஆறுந்தரக் கல்வியுடன் சட்டம்பியாராக நியமிக்கப்பட்டார். ஒரு உதவியாசிரியரின் பணிகளை இவர் செய்ய வேண்டி இருந்தது. இவரது நியமனம் 1916 ஆம் ஆண்டு நடைபெற்றது. பின் 1935 இல் இவரது சகோதரரான அ.ம. அகமது முகையதீன் என்பவர் சட்டம்பியாராகக் கடமையேற்றார். இவர்கள் பத்து ரூபா மாதக்கொடுப்பனவில் அமர்த்தப்பட்டனர்.

நான்கு சமயத்துக்குமுரிய ஆசிரியர்கள் அங்கு கடமையாற்றினர். எல்லாச் சமயத்துப் பிள்ளைகளும், பெற்றோரும் தோழமையுணர்வுடன் மிக நெருக்கமாய் வாழ்ந்தனர். திருமணம், பெருநாள், விசேடதினம், மற்றும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளில் அனைவரும் ஒருங்கிணைந்து பங்குபற்றுவர். சாதி, சமய வர்க்க பேதங்கள் என்ன வென்று அவர்கள் அறிந்திலர். பிள்ளைகள் செல்லும் வீடுகள் எதுவாயிருந்தாலும் அங்கு உண்டு, உறங்குவது சர்வசாதாரணமாகும்.

அரசு பாடசாலையின் தோற்றம் :- 1941-05-15 இல் முதன் முதல் பெண்களுக்காக கருங்கொடித்தீவு மூன்றாங் குறிச்சியில் ஒரு பாடசாலைஅரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் சிறுமிகளே நூறு வீதமும் இதிற் கற்றனர். திருவாட்டி எம். கே. செல்லையா (கிருபை அக்கா - வெள்ளம்மா) என்பவர் மாத்திரமே நியமனம் பெற்றிருந்தார். 08 (எட்டு) மாணவியரோடு இது தொடங்கியது. திறப்பு விழாவில் வன்னிய முதலியார் டப்ளியு.கே. கனகரெத்தினம், சே.பொ.க. முகம்மது ஷரீபு தலைமைக்காரர் (3 ஆங் குறிச்சி விதானை) அ.ம. அகமது முகையதீன் பதிவுகாரர் ஆகியோர் பங்கேற்றனர்.

இதையடுத்து 1945-07-04 இல் பெண்பாடசாலைக் கண்மையிலுள்ள கட்டடமொன்றில் ஓர் ஆண் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதிலும் நூறு வீதம் முஸ்லிம் சிறுவர்களே கற்றனர். இப்போதுள்ள நிலையில் மூன்று கலவன் பாடசாலைகள், ஒரு பெண் பாடசாலை, ஒரு ஆண் பாடசாலை என ஐந்து பாடசாலைகள் தமிழ் மொழி மூலம் போதிக்கும் கலையகங்களாக இயங்கி வந்தன.

அதன்பின் 1946-06-10 இல் அரசு கனிட்ட ஆங்கிலப் பாடசாலை (Govt Junior English School) என்றொரு ஆங்கில மொழி போதிக்கும் பாடசாலை (உப்புக்குத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவில்) தொடக்கிவைக்கப்பட்டது. தலைமையாசிரியராக எஸ்.ஏ. ஹுஸைன் கடமையேற்றார். பி. சோமசுந்தரம் உதவியாசிரியராயுள்ளார்.

இப்பாடசாலைகளில் தொண்ணூற்றென்பது வீதமானோர் தமிழ் ஆசிரியர்களாக இருந்தனர். சிலர் உரிய தராதரமற்றிருந்தும் திறமைசாலிகளாய்க் காணப்பட்டனர். மாணவரின் முன்னேற்றத்தில் மிகக் கரிசனை காட்டினர். ஒழுங்கின வரவுள்ள பிள்ளைகளின் வீட்டுக்குச் சென்று அவர்களைப் பாடசாலைகளுக்கு வருமாறு ஊக்கப்படுத்தினர். வரவு குறைவாக உள்ள மாணவரின் பெற்றோர் மீது வழக்குத் தொடரப்பட்டுத் தண்டம் விதிக்கப்பட்டது. இதற்கென வரவு அலுவலர் (Attendance officer) நியமிக்கப்பட்டிருந்தார். மிஷனரிமாரின் கல்விப்பணியை நாம் மிகவும் பாராட்டி நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாவோம்.

1947-09-11 இல் ஆங்கிலப் பாடசாலைக்கு ஆர்.ஸி.எம். பாடசாலையிற் கற்ற முஸ்லிம் மாணவர்கள் மாற்றப்பட்டனர். 1948-02-05 இல் தமிழைப் போதனு மொழியாகவும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகவும் கொண்டு இப்பாடசாலையில் வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் மாணவர்கள் பேருக்கத்தோடு கற்று வந்தனர். எனினும் சில நடைமுறைச் சிக்கல்களினுல் 1948-06-15 இல் இவ்வகுப்பு மூடப்பட்டது.

மிஷன் பாடசாலைகளின் சுவீகரிப்பும் கைமாறலும் : இலங்கை அரசு கல்வித்திட்டத்திற் சில மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுத்தது. கல்விப் புனரமைப்பு என்ற ரீதியில் 1961 இன் கல்விச் சட்ட வரைவுக்கமைய 1964-07-24 இல் இங்குள்ள மூன்று மிஷன் பாடசாலைகளும் சுவீகரிக்கப்பட்டன. இப்பாடசாலைகள் மூன்றும் முஸ்லிம் மாணவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டியங்கியதால் அவை முஸ்லிம் பாடசாலைகளாகக் கணிக்கப்பட்டுப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டது.

1. கருங்கொடித்தீவு மெ.மி. பாடசாலை அஸ்-ஸாஹிறு வித்தியாலயம் என்றும்
2. பிளக்கீத் பாடசாலை அல்-முனவ்வரு வித்தியாலயம் என்றும்
3. கருங்கொடித்தீவு ஆர்.சி.ரீ.எம். பாடசாலை அல்-ஹிதாயா வித்தியாலயம் எனவும் பெயர் மாற்றம் பெற்றன.

பாடசாலைகளின் பெருக்கம் : 1936-10-01 இல் பனங்காட்டில் அரசினர் தமிழ்ப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. 1942-02-02 இல் சிங்களத்தைப் போதனுமொழியாகக்கொண்ட சிங்களப் பாடசாலையொன்று பௌத்த விகாரைக் கண்மையிற் திறக்கப்பட்டது. 1869 தொடக்கம் 1936-10-01 வரையிலான 87 வருடக் காலப்பகுதியிலும் ஆறு தமிழ் மொழிப் பாடசாலைகள் மாத்திரமே இயங்கின. எனினும் சன அடர்த்தி காரணமாகப் புதுக்குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப் பெற்றன. ஏற்கனவே உள்ள பாடசாலைகளிலும் இடநெருக்கடி ஏற்பட்டது. இவற்றின் காரணிகளால் பல புதிய பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன. இன்றுள்ள நிலையில் அக்கரைப்பற்றுப் பகுதியில் கீழ்வரும் பாடசாலைகளில் கற்பித்தல் தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கருங்கொடித்தீவு அஸ்-ஸாஹிரு வித்தியாலயம்
2. கருங்கொடித்தீவு அல்-முனவ்வரு வித்தியாலயம்
3. கருங்கொடித்தீவு அல்-ஹிதாயா வித்தியாலயம்
4. அக்கரைப்பற்று ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம்
5. அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம்
6. அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி
7. அக்கரைப்பற்று அஸ்-ஸிறுஜ் வித்தியாலயம்
8. அக்கரைப்பற்று அல்-பாத்திமிய்யா வித்தியாலயம்
9. அக்கரைப்பற்று காதிரிய்யா வித்தியாலயம்
10. அக்கரைப்பற்று முருவோடை கம்சுல்- உலூம் வித்தியாலயம்
11. அக்கரைப்பற்று புட்டம்பை முஸ்லிம் வித்தியாலயம்
12. அக்கரைப்பற்று அல்-பதுர் வித்தியாலயம்
13. அக்கரைப்பற்று ஹிஜ்ரு வித்தியாலயம்
14. அக்கரைப்பற்று 6 ஆங் குறிச்சி முஸ்லிம் வித்தியாலயம்
15. அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அல்-பாயிஸா வித்தியாலயம்
16. அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர்-றஹீமிய்யா வித்தியாலயம்
17. அக்கரைப்பற்று ஆலிம் நகர் அஸ்-ஸிபாயா வித்தியாலயம்
18. அக்கரைப்பற்று இஸங்கணிச்சீமை அல்-கமர் வித்தியாலயம்
19. அக்கரைப்பற்று இலுக்குச்சேனை அல்-ஹுதா வித்தியாலயம்
20. அக்கரைப்பற்று அம்பலத்தாறு ஷெய்க் சிக்கந்தர் வலியுல்லாஹ் வித்தியாலயம்
21. அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவர் வித்தியாலயம்
22. அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம்
23. அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயம்
24. அக்கரைப்பற்று கோளாவில் விநாயகர் வித்தியாலயம்
25. அக்கரைப்பற்று விவேகானந்தர் வித்தியாலயம்
26. அக்கரைப்பற்று கோளாவில் வடக்கு பெருநாவலர் வித்தியாலயம்
27. அக்கரைப்பற்று சென்ற் ஜோன் தமிழ் வித்தியாலயம்
28. அக்கரைப்பற்று கண்ணகிபுரம் கண்ணகி வித்தியாலயம்
29. அக்கரைப்பற்று அளிக்கம்ப தமிழ் வித்தியாலயம்
30. அக்கரைப்பற்று ஸ்ரீ தம்மரத்ன சிங்கள மகா வித்தியாலயம்

ஆங்கில மொழி : இதன்படி இருபத்தொன்பது தமிழ் மொழிப் போதனைப் பாடசாலைகளும், ஒரு சிங்கள மொழிப் போதனைப் பாடசாலையுமாக 30 பாடசாலைகள் உள்ளன. ஆங்கில மொழிப் பாடசாலையில்லாக் குறை பெரிதாக உள்ளது. ஆங்கிலக்கல்விப் போதனை பாடசாலை மட்டத்தில் மிகக்குறைவாக உள்ளன. தனியார் கல்வி நிலையங்களில் ஆங்கிலப் பாடம் எழுத்து, பேச்சு, வாசிப்பு என்ற வரையறைக்குள் நடைபெறுகின்றது. ஆங்கில மொழியறிவு விருத்திக்கு இவை போதியனவாயில்லை. சர்வதேச ரீதியில் ஆங்கிலத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வர்த்தகத்துறை, சுற்றுலாத்துறை, மற்றும் அனேக துறைகளில் தொழில் வாய்ப்பைப் பெற ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றிருப்பது மிக முக்கியமாகும். மிகவும் முக்கியமான கேந்திர நிலையமாய் விளங்கும் இவ்வூரில் அரசாங்கமோ தனியார்களோ தரம் வாய்ந்த ஓர் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தல் மிகவும் வேண்டற்பாலது. எதிர்காலத்தில் விடிகாலை வெளிச்சங் காட்டியாக இம்மொழியறிவு விளங்கப் போகின்ற தென்பதை இங்குக் குறித்துரைக்க வேண்டியுள்ளது.

**சிங்கள மொழியறிவு :** இங்குள்ள சிங்களப் பாடசாலையில் முஸ்லிம் தமிழ்ப் பிள்ளைகள் சேர்ந்து கற்று வருகின்றனர் சிலர் பொதுக்கல்வித் தராதரப்பத்திரத் தேர்விலும் தேறியுள்ளனர். கடந்த பல வருடங்களுக்கு முன் சிங்கள மொழிப் பரிச்சயம் இங்கு அரிதாகவே இருந்தது. தற்போது இப்பாடசாலையிற் கற்பதாலும், உத்தியோக ரீதியில் சிங்கள மொழியறிவு அவசியம் தேவைப்படுவதாலும், உரையாடி உறவாடிச் சிங்கள மக்களோடு தொடர்பு கொள்வதற்குரிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாலும் இம்மொழியைப் பலர் கற்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

**அறபுமொழியின் அவசியம் :** முஸ்லிம் மக்கள் சமய சம்பந்தமான விடயங்களை நன்கு விளங்கிக் கொள்ள அறபு மொழியறிவு அவசியமாகும். தவிர மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பைப் பெற்று இடரின்றிச் செயற்படவும் இது அவசியமாகின்றது. இங்குள்ள மன்பஉல்கைருத் அறபிக் கல்லூரியில் கணிசமான அளவு அறபு மொழிப் போதனை நடைபெற்று வருகின்றது. லெத்தீபிய்யா அறபுக் கல்லூரியும் இவ்விடயத்தில் சிறந்த பங்களிப்பைச் செய்கின்றது. ஆண்களும் பெண்களும் அறபு மொழிக் கல்வியில் முனைந்து கற்பதால் எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியுமெனலாம். சில பாடசாலைகளிலும் அறபு ஆசிரியர் நியமிக்கப்பட்டு அறபு கற்பிக்கப்படுகின்றது. சிலர் தரம் வாய்ந்த உலமாக்களிடம் தனிப்பட்ட முறையிலும் இம்மொழிப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். கொழும்பு, கண்டி, காலி போன்ற இடங்களில் அனேக சிங்கள மக்கள் அறபு கற்று வளைகுடா நாடுகளில் சிறந்த வேலைவாய்ப்பைப் பெறுவது மல்லாமல், சுற்றுலாத்துறை, வணிகத்துறையிலும் மேலாதிக்கம் செலுத்துகின்றனர். நம்மூர் வளரிளவல் மக்களும் இவ்வழி செல்ல அறபு மொழியாற்றலை உயர்த்திக் கொள்ளல் அவசியமாகும்.

**வளர்ச்சி வடிவங்கள் :** இவ்வூரின் ஆரம்பகாலந் தொடக்கம் இதுவரையுள்ள கல்வியின் நிலைப்பாட்டைப் பின்வரும் பெரும் பகுதியில் அடக்கிக் கணிப்பீடு செய்யலாம்.

1. கேள்வி ஞானத்தாற் பெற்ற கல்வி
2. முறைசாராக் கல்வி முறைப்பயிற்சி
3. முறைசார்ந்த பாடசாலைக் கல்வி
4. கலாசாலைக் கல்வி
5. பல்கலைக் கழகத் தொழில் நுட்பக் கல்லூரிக் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி ஞானத்தாற் பெற்ற கல்வி : கண்டது கற்கப் பண்டிதனுவான், குருவித்தை கல்லாப்பாதி, புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? சிறு துளி பெருவெள்ளம், பள்ளிப்படிப்பு புள்ளிக்குதவாது. அநுபவமே சிறந்த ஆசிரியன், இப்படிப்பட்ட பழமொழிகள் படிக்காத மேதைகளை எமக்கு நினைவூட்டுகின்றன. கல்வியின் நோக்கம் பற்றிப் பலவகையாகக் கூறப்படினும் அதன் உண்மையான நோக்கம் மக்களைப் பண்பாட்டிற்குள்ளாக்கி நல்லொழுக்கத்தின் பால் அவனைக் கட்டுப்படுத்தித் தனக்கும், சமூகத்துக்கும் பிரயோசனமான நல்வாழ்வுக்கு அவனை இட்டுச் செல்வதாகும். அந்த வகையில் சிலர் கேள்வி ஞானத்தாற் பெற்ற கல்வி இங்கு நல்ல பயனை அளித்துள்ளது. சிலர் சுயமாகக் கற்றலின் மூலமும் பெறுபேறுகளைப் பெற்று உத்தியோகம் பார்ப்பதும் இங்குள்ள சிறப்பாகும். நம்முன்னோரிற் பெரும்பாலானோர் இந்த வட்டத்துள் வருவது எம்மைச் சிந்திக்க வைக்கின்றது. அவர்களின் அநுபவமும் நுண்ணறிவும் சிறந்த சமுதாயம் ஒன்று உருவாக வழி கோலியுள்ளது.



தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. SJV செல்வநாயகம் கூட்சிக்கூட்டத்தின் போது பேசிக் கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைசார்ந்த பாடசாலைக் கல்வி : 1869 தொடக்கம் இதுவரையிலுமுள்ள 120 வருடகாலங்களும் கல்வி விசாலிப்பின் படிக்கட்டுகளாக அமைந்துள்ளனவெனலாம். ஆரம்பக்கல்வி, கனிட்ட இடைநிலைக் கல்வி, சிரேட்ட தரக்கல்வி என்னும் வகுதிகள் இதிலடங்கும். ஒவ்வொருவரினதும் வாழ்க்கை வசதிகளுக்கும், முயற்சிக்கும், மனோபாவத்துக்குமேற்ப அகலமாகவும் ஆழமாகவும் கல்வியைப் பெற்றுள்ளனர். சிலர் ஆரம்ப தரத்திலேயே கல்வியை இடைநிறுத்திவிட்டுவயது வந்ததும் தொடர்ந்தனர். வேறுசிலர் அப்படியே கைகழுவிவிட்டனர். மற்றுஞ் சிலர் கனிட்ட இடைநிலைப் பருவத்தில் விலகியுள்ளனர். கணிசமான தொகையினர் சிரேட்ட உயர்நிலை வரைக்கும் தொடர்ந்து கற்று முன்னேறியுள்ளனர். சிலர் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரத்தேர்வு, பொதுக்கல்வி தராதரப்பத்திர (சாதாரண) தரத் தேர்வு, உயர்தரத் தேர்வுகளிற் தேறி ஆசிரியர், எழுதுநர், சுகாதாரப் பரிசோதகர், பயிர்ச்செய்கை அலுவலர், கிராம சேவை அலுவலர் போன்ற இன்னோரன்ன துறைகளில் சேவையாற்றுகின்றனர். மத்திய வகுப்பாரில் அதிக எண்ணிக்கையில் உள்ளோர் இப்பணியாளர்களேயாகும் என்று கூறுதல் பொருத்தமானது. பல மகளிர் பணியாளர்களும் இதிலடங்குவர்.

(ஈ) கலாசாலைக் கல்வி :இவ்வகுப்பைப் பொறுத்த வரையில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கே முதலிடம் கொடுக்கவேண்டியுள்ளது. இவ்வூர்க் கல்வி வளர்ச்சிக்கு அச்சாணியாக இருப்பவர்களிற் பெரும்பான்மையோர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களேயாகும். ஆரம்பக்காலத்தில் தகைமை குறைந்தவர்களே ஆசிரியர்களாய்க் கடமையாற்றினர். என்றாலும் அவர்களின் கற்பித்தல் முயற்சி பாராட்டத்தக்க வகையிற் காணப்பட்டது. பின் எஸ்.எஸ்.ஸி., ஜி.ஸி.ஈ. சித்தியடைந்தோர் ஒருசிலர் நியமனம் பெற்றனர். கடந்த 35 வருடங்களுக்குமுன் ஆசிரியர் கலாசாலையிற் சேரவேண்டுமானால் ஆசிரியர் கலாசாலைப் புகுமுகப்பரீட்சை என்றொரு தேர்வுக்குத் தோற்றுவது கல்விச்சட்டவரையில் கட்டாயமாக்கப்பட்டிருந்தது. அதிற் சித்தியடைந்தவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சை யொன்றின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பயிற்சிக்காலம் இரு வருடங்களாகும். 1957 வரை பயிற்சிக் காலங்களில் பயிற்சிபெறும் ஆசிரியர்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளும் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை. பிற்பட்ட காலத்தில் மாதாந்தச் சம்பளத்தோடு ஆசிரியர்கள் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. முஸ்லிம் ஆண்கள் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையிலும் பெண்கள் அளுத்கம ஆசிரியர் கலாசாலையிலும் பயிற்சியை முடித்துக் கொண்டனர்.

அக்கரைப்பற்றின் பயிற்றப்பட்ட முதலாவது ஆசிரியர் என்ற சிறப்பை ஜனாப் எம். முகம்மதுத்தம்பி அவர்கள் பெறுகிறார். 1942 இல் இவருக்கு அக்கரைப்பற்று பிளக்கீத்ஸ் மிஷன் பாடசாலைக்கு நியமனம் கிடைத்தது. 1951 வரை அரசு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலேயே முஸ்லிம் ஆசிரியர்களைத் தெரிவு செய்தது. இதன்படி முழு இலங்கையிலும் அட்டாளைச்சேனைக்கு 13 பேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளுத்கமவுக்கு 24 பேரும் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்நேரம் இலங்கை முழுவதும் முஸ்லிம் ஆசிரியர்களின் தேவைக்காக 541 வெற்றிடங்கள் காலியாக இருந்தன.

1953-01-01 வரை அக்கரைப்பற்றில் மொத்தம் 18 பேரே பயிற்சி பெற்ற ஆசிரியராய் இருந்தனர். முதலாமாசிரியர் தவிர மற்றவர்களின் பெயர்கள் வருமாறு:- ஜனுப்களான எம்.ஐ.எம். நசீம், எம்.ஐ.எம். சரீப், எம்.எம். மக்கீன், எம்.ஏ.எம். முஸ்தபா, எம்.எம். சின்னசுமது லெப்பை, எம்.ஐ. அகமது லெப்பை (ஹனிபா) எம்.ஐ. அபூசாலிஹ் (அலாவுத்தீன்) எம்.எம். மீராலெப்பை (சலாஹுத்தீன்) எம்.எஸ்.ஏ. முஹ்யித்தீன், எம். முஸ்தபாலெப்பை, எம்.ஏ.எம். அப்துல் காதிர், பி.எஸ். மீரா, ஏ. ஆதம் லெப்பை (முஸ்தபா), ஏ.ஆர்.எம். கியாதுத்தீன் (சலீம்), எம் ஏ.எம். முகையதீன் (மஜீத்).

நிலைமை இப்படியிருக்க முஸ்லிம் பிள்ளைகளின் தொகைக்கேற்ப முஸ்லிம் ஆசிரியர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென 1951 ஆவணி மாதம் சேர் ருஸிக் பரீத் தலைமையில் ஒரு தூதுக்குழு கல்வியமைச்சரைக் கண்டு பேசியது. அதற்கமையப் படிப்படியாகப் பயிற்சிபெறும் ஆசிரியர் தொகை கூடிக்கொண்டு வந்ததைக் காணக்கூடியதாயுள்ளது. 1952 ஜனவரியிலிருந்து இது நடைமுறைப்பட்டு வந்துள்ளது. பிரதிவருடமும் நமதூரிலிருந்து கணிசமான அளவு ஆசிரியர்கள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டது மல்லாமல் வீதாசாரத்திலும் கூடுதலாகக் காணப்பட்டனர். இக்காலகட்டம் இவ்வூர்க் கல்வி வரலாற்றில் குறித்துக்காட்டவேண்டியதாகும். ஆசிரியர் அதிகரிப்புக்கேற்பக் கல்வி நிலையிலும் எழுச்சி காணத்தொடங்கியது. அதுதவிர ஊரிலுள்ள முக்கிய பணிகளை ஆசிரியர்கள் ஏற்று நடாத்தினர். பள்ளிவாசல் நிர்வாகம், பொதுக்கூட்டங்களை ஒழுங்குசெய்தல், விழாக்கள், கொண்டாட்டங்களின் அமைப்பு, கலைவிழாக்களை நடாத்துதல் போன்ற பல பொதுப்பணிகளில் ஆசிரியர்களின் பங்களிப்பு விசேட இடத்தைப் பெற்றிருந்தது. சுருங்கக்கூறின் கலியாணச் சந்தையிலும் கூட ஆசிரியரின் இடம் மிகப்பெறுமதியும் மதிப்பும் வாய்ந்ததாகக் காணப்பட்டது எனலாம்.

இவ்வூர் ஆசிரியர்களைப் பொறுத்தவரை மாணவர்களின் கல்வியில் உச்சப்பயனைப் பெறப்பாடசாலை நேரமல்லாத வேளைகளிலும் மிகக் கஷ்டத்தோடும் அக்கறையோடும் கற்பிப்பதில் முன்னணி வகிப்பவர்கள் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். ஆரம்பப்பாடசாலைகள் அமைத்துக் கொடுக்கும் அத்திவாரத்தின் மேல் மகாவித்தியாலயங்கள் மத்திய கல்லூரி என்பன உறுதியான கல்விஞானத்தைக் கட்டி எழுப்பியுள்ளனர். மகாவித்தியாலயம் என்ற அமைப்பு இல்லாத முற்காலத்தில் இச்சிறப்புப்பணியை மற்றப்பாடசாலைகள் கையேற்று நடாத்தின. இவற்றிலிருந்து தான் எஸ்.எஸ்.ஸி., க.பொ.த. சாதாரண தரத் தேர்வுகளில் மாணவர்கள் சித்திபெற்று அரசு பணியாற்றினர் என்பது இனிப்பான செய்தியாகும். பல பெண் ஆசிரியர்களும் இங்கு கடமையாற்றுகின்றனர். தமிழ் மகளிர் ஆசிரியர்கள் பல வருடங்களுக்கு முன்னிருந்தே கல்விச் சேவை செய்து வருகின்றனர். 1953 க்குப் பின் முஸ்லிம் பெண்ணாசிரியர்களின் தொகை குறிப்பிடக்கூடிய அளவு பெருகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக கல்வி : இவ்வூர்ப் பகுதியைச் சேர்ந்த மாணவர் பலர் க.பொ.த. (உயர்தரத்) தேர்விற் சித்தியெய்திய பின் பல்கலைக்கழகஞ் சென்று கற்றுப் பட்டதாரிகளாய் வெளியேறியுள்ளனர். அதன்பலனாய் வைத்தியர் (Doctor), எந்திரி (Engineer), சட்டத்தரணி (Lawer) கள் உட்படக் கலை, வணிக, விஞ்ஞான, விவசாயத்துறைப் பட்டதாரிகளும் வேறு சில துறையிலுள்ளவர்களும் இப்பகுதிக்குக் கிடைத்துள்ளனர். இவர்களிற் சிலர் உயராதிக்க உத்தியோகத்தராய்க் கடமையாற்றுகின்றனர். பலர் கற்பித்தலிற் கரிசனை காட்டுகின்றனர். இவை தவிரப் பலர் தொழில் நுட்பத்துறைப் பயிற்சியை முடித்து அலுவலர்களாகக் கடமையாற்றுகின்றனர். படவரைஞர், நில அளவையியல் அலுவலர் ((Surveyor) களாயும் சிலருளர். மின்னியல், கட்டடக்கலையியல் மற்றும் தொழில் நுட்பவியலாளரும் பணியாற்றுகின்றனர்.

## பொதுக் கணிப்பீடு

கல்வியானது பலம்வாய்ந்த, சத்திமிக்க சாதனங்களில் முதலிடம் வகிப்பதொன்றாகும். இதன் நிலைப்பாட்டை உணர்ந்தே எல்லாச் சமூகத்தினரும் தமது உறுப்பினர்களைக் கல்வியின்பாற் திருப்பிப் பயிற்றுவித்துச் சிறந்த அடைவுகளையுப பெற முயன்றுள்ளனர். ஆளுமை, திறமை, ஒழுக்கம், பண்பாடு மற்றும் அரவணைப்புகளைக் கல்வியின் கட்டுக்கோப்புகளாலேயே கட்டியெழுப்ப முடியும். ஆரம்பத்தில் கல்வியானது வகுப்பறைகளையும் பாடசாலைகளையுங் கொண்ட ஒழுங்கமைப்பில் இருக்கவில்லையென்பதை ஏற்கனவே நாமறிந்தோம். சமூக நிலையிற் பிறழ்வு காணப்படும் போது ஒழுங்கமைப்பான ஒரு கல்விமுறை தேவைப்பட்டது.

அதனால் பல வழிகளில் தோற்றுவிக்கப்பட்டன. கல்வியன் இலக்கும் கற்பித்தல் முறைகளும் சிக்கலுக்குரிய விடயங்களாகத் தென்பட்டன. நெஞ்சு நெகிழ்வுக்கு ஒரு கலை, வாழ்க்கை வசதிகளுக் கொரு கலை என்ற அடிப்படையில் கல்வித் தேவைகள் விரிவடைந்தன. அந்த வகையில் விஞ்ஞான அறிவியல் இந்நூற்றாண்டின் கவர்ச்சி மிக்கப் பயன்பாடாக முன்னணி வகிக்கின்றது. அதன் மூலம் வாழ்க்கை வசதிகள் பெருகியுள்ளன. இலவசக் கல்வியின் அடியொற்றி பாடசாலை, மாணவர், ஆசிரியர், செலவு, மேற்பார்வை, திட்டமிடல் என்பன பெருகிவந்தன. இவற்றின் காரணியால் 1971க்குப் பின் கல்விச் செயற்பாட்டில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டன.

இங்குள்ள மாணவர்களும் இம்மாற்றத்திற் கேற்ப ஆரம்ப, கனிட்ட, இடைநிலை, சிரேட்ட இடைநிலைப் பிரிவிற் கற்கத் தொடங்கினர். அதன் தொடர்ச்சியாகப் பலர் அரச பணியில் அமர்ந்துள்ளனர். ஆசிரியர்கள் அதிக அளவில் உள்ளனர். எதிர்காலத்தில் ஆசிரியத் தொழில் கிடைக்குமென்ற நம்பிக்கையில் பலர் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர். பட்டதாரி ஆசிரியர், பயிற்சி பெற்ற ஆசிரியர் என்ற வகுதிகளில் இவ்வூரிலுள்ளோரிற் கணிசமான அளவினர் தெரிவு செய்யப்பட்டது மிக முக்கியமானதொரு நிகழ்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நேரம் பொருளாதாரச் சிக்கல் காரணமாகப் பலர் தம் பிள்ளைகளைக் கற்பியாதிருப்பதும், வேறுசிர் அறுவடை காலம் போன்ற பருவங்களில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாது தொழில் செய்ய அனுப்பிவைப்பதும் இவ்வூரின் கல்வி வளர்ச்சியில் குறை காட்டுவதாயுள்ளது. இவ்வூரின் கல்வி வீதாசாரம் வருமாருகக் கணிக்கப்படுகின்றது. இக்கணிப்பு அம்பாரை மாவட்ட மக்கள் கொங்கிரஸால் மதிப்பீடு செய்யப்பட்டதாகும். ஆய்வுக்குட்படுத்திய பகுதி உப்புக் கரச்சி, வெள்ளப் பாதுகாப்பு வீதிக்கு அணித்தாயுள்ள பகுதிகள்.

344 பேர் கொண்ட மாதிரித் தொகுதியொன்று எழுமாற்ருக எடுக்கப்பட்டுப் பெறப்பட்ட முடிவுகள் இவையாகும்.

| இல. | | தொகை | நூற்று வீதம் |
|---|---|---|---|
| 1. | கல்வி பெருதோர் | 62 | 18.02 |
| 2. | ஆரம்பக்கல்வி மாத்திரம் கற்றவர்கள் | 187 | 54.36 |
| 3. | 6-9 வரை கற்ருேர் | 52 | 15.12 |
| 4. | 10 ஆந்தரத்திற் சித்தியடைந்தோர் | 32 | 9.3 |
| 5. | 12 ஆம் வகுப்புவரை கற்றவர் | 08 | 2.32 |
| 6. | 12 ஆம் வகுப்புச் சித்தி பெற்ருேர் | 03 | 0.008 |
| | மொத்தம்: | 344 | |

இங்குள்ள முப்பது பாடசாலைகளிலும் சமய அனுட்டானங்கள், பாடசாலைச்சீருடை, ஒழுக்க நெறிப்பயிற்சிகள் சிறந்த முறையிற் செயற்படுகின்றன. இக்காலகட்டம் வேண்டாத சில பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும் நிலையில் இருப்பதால் வளர்ந்த பிள்ளைகளின் ஒழுக்க விடயத்திற் சில பாடசாலைகள் விசேட திட்டங்களை ஆக்கித் தொழிற்படுகின்றன. முஸ்லிம் இளமகளிர் பஞ்சாபி, பர்தா (குப்பாயம்) உடைகளையும் இளம் ஆடவர் தொப்பியும் அணிந்து வரலும் வரவேற்கத்தக்கதாகும் கல்வித் திணைக்களங்கூட 1990 பெப்ரவரியிலிருந்து இலங்கையின் எந்தப்பாடசாலையிலும் கற்கும் முஸ்லிம் மாணவியர் விரும்பிய உடைகளை அணிந்து பாடசாலைக்குச் செல்லலாம் என அனுமதி வழங்கியிருப்பது ஒரு ஆரோக்கியமான முடிவாகும்.

வளர்ந்த இருபாலாரும் ஒரு வகுப்பிற் கற்றல், ஆண் ஆசிரியர் பருவப் பெண்களுக்குக் கற்பித்தல், வயது வந்த மாணவிகள் கலைவிழாக்கள், விளையாட்டுப் போட்டி, பொது நிகழ்ச்சிகளிற் கலத்தல் என்பன போன்ற விடயங்கள் பலவாறு விமர்சிக்கப்பட்டு வந்துள்ளன. சமயங்கள் ஆகாதெனக் கூறிய வற்றை நடைமுறைப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது. அதைச் செய்வதும் பாரிய தவருகும். ஆனல் சமயங்கள் விலக்களிக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் சிலர் காழ்ப்புணர்வால் வேண்டுமென்றே குட்டையைக் குழப்புவது நல்ல செயலாகாதெனக் கொள்ளல் வேண்டும். மத கலாசாரங்களின் பேராற் செய்யப்படும் விதண்டாவாதங்கள் பல, சமயத்தைச் சரிவர அறியாததன் விளைவாக ஏற்படுவனவென்ற உண்மையும் கவனிக்கத் தக்கது.

அக்காலத்தில் ஆங்கிலம் கற்பது இஸ்லாத்துக்கு முரணானது என்ற ஒரு மூடத்தனமான பிரச்சாரம் செய்யப்பட்டது. இன்று விஞ்ஞானம் இஸ்லாத்துக்கு முரணானது என்று ஒருகூப்பாடும் சில அறிவிலிகளாற் கிளப்பப்படுகின்றது. இதற்குச் செவி சாய்க்கும் நிலையில் இன்றைய சமூகம் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்து வருகின்றனர். அக்கரைப்பற்றில் இலங்கையிலேயே சிறந்ததொரு கல்வித்தரம் கட்டியெழுப்பப்படுகின்றது என்ற உண்மை வெளிப்படையானது. விடயம் இவ்வாறிருக்கச் சில பணவசதியுள்ளோர் தம் பிள்ளைகளை அயலூர்களுக்கனுப்பி விஞ்ஞானக் கல்வினையும், மற்றும் வேறு துறைக்கல்வியையும் கற்க வழி செய்கின்றனர். ஆனால் அவை பெரும்பாலும் வெற்றியளிக்காததால் மீண்டும் முந்திய பாடசாலையிற் சேர்க்க அவர்கள் படும் பாடும், அவர்கள் பிள்ளைகளின் திரி சங்கு சுவர்க்க நிலையும் மிகப் பரிதாபத்துக்குரியதாகும்.

இங்கு பலர் விஞ்ஞானக் கல்வியில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். சிலர் தம்பிள்ளைகள் க.பொ.த (உயர்தர) வகுப்பிற் கற்பதற்கு வேண்டிய அடிப்படைத்தகுதியைப் பெருத விடத்தும் டொக்டர், என்ஜினீயர் போன்ற தொழில் மேம்பாட்டு விருப்புக் காரணியாக எப்படியும் தம் பிள்ளைகளை அவ்வகுப்பிற் திணிக்க அவாவுகின்றனர். தம் பிள்ளைகளின் திறன், உளப்பாங்கு, விருப்பு என்பன இதன்மூலம் பின்தள்ளப்படுவதை அவர்கள் உணரார் போலும்.

1946 இல் இருந்து 1968 வரை பொது விஞ்ஞானம் இங்குள்ள பாடசாலைகளிற் கற்பிக்கப்பட்டு வந்தது. 1964 இல் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான கூடம் கட்டப்பட்டது. அக்கரைப்பற்றுக் கல்வி வட்டாரத்திற் கட்டப்பட்ட முதலாவது கூடமும் இதுவேயாகும். இங்கு விஞ்ஞான பாடங்கற்ற முதலாவது குழு 1961-1963 வரை மூன்று வருடங்கள் தொடர்ச்சியாகக் கற்க வேண்டியிருந்தது. சுய பாஷையில் இப்பகுதியிலிருந்து பொதுத் தேர்வுக்குத் தோற்றிய முதலாவது குழுவினர் இவர்களே யாவர். தாவரவியல், விலங்கியல், இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களில் இவர்கள் அமர்வு பெற்றனர். இருவர் பூரண சித்தி பெற்றனர். தொடர்ந்து இவ்வூர் விஞ்ஞானத்துறை துரித வளர்ச்சியடைந்து சிறந்த அடைவுகளைப் பெற்று முன்னேறியது.

கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 1973 இல் தான் விஞ்ஞான உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது மூன்று விஞ்ஞான ஆசிரியர்களும், ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரும் கற்பித்தனர். 1980 இல் இங்குள்ள மகாவித்தியாலயம் மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டதும் விஞ்ஞானக் கல்வி உச்சப்படி நோக்கி முன்னேறிக் கொண்டு வந்தது. மாணவர் தொகை கூடி வரவர ஆசிரியர்களும் அதற்கேற்ப நியமிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் மக்களும், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களும் விஞ்ஞானக் கல்விப் பெறுபேற்றை ஒரு அளவு கோலாகக் கொண்டு பாடசாலைகளின் தரத்தை மட்டிடுவதில் பேருக்கங்காட்டினர். எந்தப் பாடசாலை கூடிய சித்தி பெற்றிருக்கிறதோ அங்கே தம் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளப் பெற்றோர் அவாவி நின்றனர். கல்விப் பகுதியின் முழு ஆதரவும் அப்பாடசாலைக்கே கிடைக்கக் கூடியதாக விருந்தது. தொழிற் கவர்ச்சியின் வெளிப்பாடே இது வென்று கூறமுடியும். ஒரு பாடசாலைக்கு நற்பெயரைச் சூட்டுவதில் விஞ்ஞானம் உயரிடத்தைப் பெறுவதால் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் எல்லோரு மிணைந்த ஒரு இசைவு நிலையில் விஞ்ஞான வளம் பெருகத் தொடங்கியது.

தவிர இலங்கையின் பிற மாகாணங்களிலிருந்து அக்கரைப்பற்று மத்திய கல்லூரியிற் சேர விண்ணப்பங்கள் வந்த வண்ணமிருந்தன. அதனால் இட நெருக்கடி, கருவிகள் பற்றாக்குறை, ஆசிரியர், விடுதிகள் பற்றாக்குறை என்பன ஏற்பட்டன. எது எப்படி இருப்பினும் வெளியூர் மாணவர்களிற் பெரும்பகுதியினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நிர்வாகத்தின் உந்தலால் வாடகை வீடொன்றில் ஒரு மாணவர் விடுதி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாடு பெரும் பண நெருக்கடியை நிர்வாகம் சமாளிக்க வேண்டிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.



மாண்புமிகு கல்வியமைச்சர் கலாநிதி அல்-ஹாஜ் பதி உத்தீன் மஹ்மூத் வரவேற்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராம் அதிகாரம்
## புலவர் பெருமக்கள்

கருங்கொடித்தீவு மண், கலைவளமும், நிலவளமும், கருணைவளமுங்கொண்டது என்பதை முன்னதிகாரங்களில் கண்டோம். அதற்கமைவாக 1962 ஒக்ரோபரில் என்னால் எழுதப்பட்டு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற ஈழத்து முஸ்லிம் புலவர்கள் என்ற நூலின் கண் அடியேன் குறிப்பிட்டெழுதிய என்னுரை என்ற பகுதியிலுள்ள சில வரைவுகளை இங்கு எடுத்துக்காட்டல் மிகப்பொருந்துவதாகுமெனக் கருதுகிறேன்.

நம் மரகத மண்ணிற்றோன்றிய மணியான புலவர் பலர். அவர்கள் இன்பத்தமிழ் மொழிக்கும் இன்சுவை இலக்கியத்திற்கும் அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளனர்.

ஆனால் அவர்களைப்பற்றி மக்கள் பெருமன்றத்தினரான முதியோர், மூத்தோர், இளையோர் ஆகியோர் உரியமுறையில் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. அப்படியான புலவர்கள் இருந்தனர் என்றுகூடப் பலருக்குத் தெரியவராது.

இதை எண்ணுந்தோறும் என் இதயம் வெதும்பியது. அழகுதமிழை அரவணைத்து வளர்த்த புகழ்பூத்த புலவர் பலர் என்முன் நிழலாடினர். அப்போதிருந்தே அவர்களைப்பற்றிய விபரங்களையும், அவர்களாற் பாடப்பட்ட அழகும், சுவையும் மிக்க அழியாக்காவியங்களையும் ஒன்று திரட்ட முயன்றேன்.

புலவர்களின் பாடல்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படாததால் அவைகள் அழிந்தொழிந்து மண்மூடிப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன.

இந்நிலை நீடிக்குமானால் வெண்மதி தவழ்ந்து விளையாடும் விண்வெளியில் காரிருள் சூழ்ந்து விடுவது போன்று கவிச்சுடர் மறைக்கப்படுமென உணர்ந்தேன். இக்காட்சி வளர என் மனம் ஒப்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் முன் வேலையாக மூத்த புலவர் திலகங்களையிட்ட விபரங்களையும் அவர்கள் பாடிமகிழ்ந்த வீரகாவியங்களையும் திரட்டி எடுக்கப் பலகோணங்களிலும் அலைந்தேன்.

புலவர்களின் பாடல்களை மனப் பாடமாக்கியவர்களைத் தேடிப்பிடிப்பதிலும், கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிப்பதிலும் மிக நீண்ட காலத்தைச் செலவிட்டேன்.

பாடல்கள் பலவற்றைச் சேகரித்ததும் அவை ஆதாரபூர்வமானவையா? இடைச் செருகலுண்டா? திரிபுக்குட்பட்டனவா? என்பதை யெல்லாம் மிக நுணுக்கமாக ஆராய்ந்தேன், அலசிப்பார்த்தேன்.

பலரிடமிருந்து உண்மைகளை எடுத்தேன். ஒத்துப் பார்த்துச் சரிகண்டு கொண்டேன். இவற்றிற்காக எதுவிதப் பக்கபலமுமற்ற தனிமனித ஆராய்ச்சி யொன்றையே நடாத்தி முடிக்க வேண்டியதாயிற்று.

எனது இப்பாரிய பணியின் போது புலவர் மணிகளின் இலக்கியப்படையல்களைக் கண்ணுறுந் தோறும் என் நெஞ்செலாம் இன்பஞ் சுரந்தது. அவைகளைப் பாடுந்தோறும் வாயெல்லாம் இனித்தது. என் அணையாத ஆசை நிறைவேறப் போவது போன்ற அழற்சியேற்பட்டது.

இவற்றைத் தமிழ் பேசும் இலக்கிய இதயங்களும் அநுபவித்து ஆனந்திக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அவ்வாசையை அணைத்து விடாமல் இப்பகுதியிலிடம் பெறச் செய்துள்ளேன்.

ஆண்கள் மாத்திர மல்ல, பெண்களும் கருங்கொடியூர்க் கவிவளத்திற் தன்னேரில்லாத் தனியிடத்தைப் பிடித்துள்ளனர்.

இலக்கிய ஆர்வலரின் இதயத்தைக் கவர்ந்த பெருமை இம்மகளிரைச் சார்ந்ததாகும்.

ஒவ்வொரு புலவர்களும் வாழ்ந்த காலத்துக்கும், சூழலுக்குமேற்பக் கவிதைகள் ஊற்றெடுத்துள்ளன. அவர்கள் இயற்கையைப் பாடினர்கள். இறை புகழைப் பாடினர்கள். மக்கள் துயர் கண்டு மனமுருகி அழுதார்கள். தம்மை ஆதரித்த அன்பர்களை அகம் மகிழப் புகழ்ந்தார்கள். இப்படியாக அக்காலத்தில் வாழ்ந்த மாந்தரின் அகநிலை, புற நிலைக்கேற்ப அவர்களின் பாடல்கள் அழகாக உருப்பெற்றுள்ளன.

அப்பாடல்களின் கருக்கள் அம்மணமாகத் தெரியாமல் மானங்காக்கும் மனநிறைவுள்ளனவாக அமைந்திருக்கின்றன. அவற்றின் சொல்லழகும், கருத்தாளமும், வர்ணணையும் அகத்துள்ளிப் போற்றிச் சுவைக்கத் தக்கதாகும். அக்காலத்தில் நெறிப்படுத்திய கல்விமுறை இருக்கவில்லை. என்றாலும் பல புலவர்கள் இலக்கண, இலக்கிய, மரபுவழி, பாடல்முறை ஆகியவற்றில் மிகத்தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்


இனிச்சில புலவர் பெருமக்களின் பாடல்களைக் கவனிப்போம். இவர்களின் பாடல்கள் பல சேகரிக்கப்பட்டன. இங்கு ஒவ்வொருவரினதும் குறிப்பிட்ட ஒரு சில பாடல்களை மாத்திரமே இடம்பெறச் செய்துள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 91. சேகு மதார்
## (1853 - 1940)

இவருக்கு இப்பகுதியிற் தனியான ஒரு மதிப்புண்டு. இவரது தந்தையார் மீராக்குட்டி. சிறுவயதிலேயே இரு கண்களும் பார்வையற்றுப் போயின. குத்பு ஷாஹுல் ஹமீது நாயகம் (றழி) அவர்களின் அடக்கத் தலமான நாகூர் தர்ஹாவுக்குச் சென்று அவர்களின் பேரில் முனாஜாத்துப் பாடி வரம் பெற்றுக் கவிகள் பாடத் தொடங்கினர். குர்ஆன், கிதாபுகளை ஒரு பையனின் உதவியுடன் விற்பனை செய்து வந்தார். மதப்பற்று மிக்க மகானை இவர் தஹஜ்ஜுத் தொழுகையை மிகவும் பேணுதலாகத் தொழுது வந்தார். பல பாமாலை என்னும் ஒரு கவிதை நூல் இவரின் பாடல்களைக் கொண்டு வெளியிடப்பட்டது. அது தவிர ஹக்கு பேரில் முனாஜாத்து, அண்ணல் நபீ (ஸல்) அவர்களின் பேரில் முனாஜாத்து, ஒரு பா ஒருபஃது, குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (றழி) கத்தஸல்லாஹு சிர்றுஹுல் அஸீஸ் அவர்களின் பேரில் முனாஜாத்து, குத்பு ஷாஹுல்ஹமீது ஆண்டகை பேரில் ஒருபாவொருபஃது, இன்னிசை, பதம், சிந்து, நோன்பின் பர்ழு, ஷர்த்து, பித்றுவின் வரிசை அஸ்ஸெய்யித் ஸெய்னுல் ஆபிதீன் வலி பேரில் காவியம் என்பனவும் புகழ்பெற்ற புயற் காவியமும் இவராற் பாடப்பட்டுள்ளன.

இவரது மக்கள் எட்டுப் பேரில் ஹயாத்தும்மா எனும் மகளொருவர் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவவுக்கு மகள், பேர்த்தி, பேர்த்தியின் மகள், பேர்த்தியின் மகளின் மகள் என்ற தலைமுறை யொன்றுள்ளது. மர்ஹூம் லங்கா ஸ்ரோர்ஸ் கலைமாலெப்பை அவர்கள் புலவரின் பேரனாகும். இவரது மகனை அல்ஹாஜ் எஸ்.எல்.எம். முஹ்யித்தீன் இப்பகுதியின் பிரமுகரும், சிறந்த கொடையாளருமாக விளங்குகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிய பள்ளி வாசலின் உடைத்தகற்றப்பட்ட முன்னைய
[illegible]த்தோற்றம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புயல் செய்த பேரழிவு

### விருத்தம்

சொல்லிடு கிறிஸ்தவர் கணக்கிலோர் தொள்ளாயிரத் தேழினில்
தோன்றி வரு பங்குனியில் ஒன்பதாந் திகதியிலே
துதிபரவு ஞாயிறிரவில்
கல்லதிரவே பெரிய புய லொன்றெழுந்ததற் கணக்கிடற் கரிதாகிய
காய் கொண்ட தென்னைபனை மா பலா முந்திரிகை
கதலி எலுமிச்சை பனசம்
பல்லோர்க்கு நிழலுதவு ஆலரசு வம்மிபூ
பலகு நிழல் வாகை மரமும்
பகரரிய இன்னுமனேக வின மரமதனைப்
பதற உதறப் பிடுங்கி
இல்லுகளில் விட்டெறிய அவையை வேய்ந்திடு தென்னை
இலை புல்லு வைக்கலோடு
இருந்தவை கிளம்பிடவே ஒழுகினதினுலாடவரும்
ஏந்திழையுமே பதறியே
இன்னுலில்லாஹி என்றோதியே வலாஹவ்ல
அதனோடு வைத்தோதியே
என் மகனே என் மகளே என்றிரு கரங்களிலே
ஏந்தினர் குழந்தைகளையே
பின்னுல மற்ற சிறுமைந் தரு மரண்டெழவே
பேதலித்தலறி யேங்கிப்
பேரியவா எங்களுக் குறுதுயரகற்றி இப்
புயலகல உதவி புரியென்
றன்னவர் உரைத்தெழவே வருதண்ணீரால்
சுவரதிர்ந்து திடுதிடுவென விழவே
அலுமாரி பெட்டகம் தயிலா முடாப்பானை
அவைகள் மடமடவென உடைய
பொன் வெள்ளி வெங்கல முருப்படிகள் நெல்வைத்த
பொதி சாக்கு உமல்களடையப்
பொறுப்புக்கு நலதென் றெறுப்பாக்கி வைத்த
பல புதையலும் தாண்டதன்றே

## முஹம்மது ருவ்

*(1874 - 1910)*

இப்பெருமகன் செய்கு மதார்ப்புலவரின் புதல்வர். இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றவர். இலக்கிய உரையாடல், நிகண்டு, நந்நூல் வகுப்புகளிற் கற்ற ஐவருள் இவர் மாத்திரமே முஸ்லிம் மாணவராவார். கந்தூரியலைந்த காதை, மெத்தை வீட்டலங்காரம், முகையதீன் ஒப்பாரி, மாங்குயில் மழலைக்கீதம், கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சல் முதலிய பாடல்களை இவர் பாடியதன் மூலம் மக்களிடையே நன்கு மதிக்கப்பட்டார். அனேக தனிப்பாடல்களையும் பாடினார். தாம் வதுவை யேற்று மூன்று வருடங்களுக்குட் காலமானார். இவரது சில பாடல்கள் படிப்பார் நெஞ்சம் பாகாய் உருகுமாறு செய்யும் சிறப்பைக் கொண்டவை

புலவரும் முஹம்மது முஹ்யித்தீன் என்பவரும் பிணக்கில்லாது மிக இணைந்த நண்பராயினர். ஒரு நாள் புலவர் அயலூர் சென்று விட்டார். நோய்வாய்ப்பட்ட நண்பர் புலவர் வீடு திரும்பு முன் காலமாகி விட்டார். இச்செய்தியையறிந்த புலவர் விரைந்து ஊர்வந்து தோழரின் அடக்கத் தலஞ்சென்று அவரின் தலைமாட்டுப் பக்கமிருந்து உள்ளமுருகி ஒப்பாரி பாடிக் கண்ணீர் வடித்தார். கீழே இவ்வொப்பாரி உள்ளது.

## முஹ்யித்தீன் ஒப்பாரி

### விருத்தம்

திருவளரு வானறுஷு குர்ஸி விண்ணுஞ்
செங்கதிரோன் மதியுடுக்கை சிருஷ்டித் தோங்கும்
நரர் மிருக பறவையினம் எலா முண்டாக்கி
நன்றியுடன் இரணம் நீரளிக்குங் கோனே
தரு வளரு கருங் கொடி வாழ் இசுமாலெப்பை
தந்துதவு முஹம்மது முஹ்யித்தீனின் பேரால்
பிரிச தமிழுரையதனால் ஒப்பாரி சொல்வேன்
பெரியவனே நீயதற்குக் காப்புத் தானே

### ஒப்பாரி (இராகம் - முகாரி)

அல்ஹம்து லில்லாஹி அனைத்தையும் படைத்தளிப்போன்
என்னருவே மறையுருவே திருமறை கருவே
குறையற வருளிறையே - எனக்கன்புறவே இன்பமருள் 01

இன்பமருள்வாயிறையே என்னிதய கமலங்குளிர
இந்தா கதிரிடை நந்தா புவி கடலுந் தானறிவொடு
சந்தா பிறையே - மெய்த்தீசன் விசுவாசனல்லோ 02

வாசன் இஸ்மாயீல் லெவ்வை அவர் வஞ்சியுடனே புவியில்
வரமும் அவர்புரி தவமும் உலகினில் நவமும்
நெறிமுறையதுமே கூடிய - வரிசையுடன் மிகப்பிரிசமுமாய் 03

பிரிசமுடனீன்ற சுதன் அவர்பேத மில்லாச் சீதமுகன்
பெரியோரணி குரு தவரு முஹம்மது நெறியோர்
வரவோர் முஹ்யித்தினெனும் - பேரு மிட்டார் வார் சிரோட 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரோனு பாத்தடைந்த செய்தி ஒப்பாரி சொல்ல
சீதன் முஹம்மது ருலி எனக்கருள்புரி நித்தமுமுதவிடு
கர்த்தனே நாளும் - நீ நாடுமிந்த மோடனுக்கு 05

மோடப் பயலொருவன் உன்னை நாடிக் கவியுரைக்கேன்
முத்தொளிரும் நபி வச்சிர்த குருமணி ரத்தினம் மறவேன்
நல்ல மோனமுறை - எனக்கு வேணுமுன்னே 06

முன்னுள் முகமறியேன் உன்முக மனெனும் பேச்சறியேன்
முன்னூலழகிய வன்னூல் ரத்தின நந்நூலெழுதிய
பொன்னூர் புகுந்த - உன்முதன் முடிவும் நானறியேன் 07

நாம் கூடியிருந்ததுவும் நம்முட கூட்டம் பிரிந்ததுவும்
கொள்ளுமோ மனமது விள்ளுவ தரிதரி தெள்ளிய புவிதனில்
உள்ளுவரறிவரோ - உன் கோதையர் பெற்றூரறிவார்
08

பெற்றூர் மறந்தாலும் இந்தப் பேருலகில் நான் மறவேன்
பொன்னே நவமணி மின்னே யுலகினிலுன்னை மறவேன்
என் பொற்கலமே - மணிநற்குலமே 09

குலமே குலவிருதே இளங்கோதையர்கள் மாதகனே
கொன்டேனுனை மையல் விண்டேன் ஒருவரை விண்டாறுவனோ
எங்கள் கோதையர் - குலக்கொழுந்தே 10

கொழுந்தே யமுந்தே கொள்ளுதில்லை என்னிதயம்
குர்ஆன் ஷரீபினிலிறை யோன் மொழிவது அழகாய் முடியுமே
குருகுலமணியே - உந்தன் கொள்கை நினைவுமாறுவேனோ 11

மாறியிருப்பேனோ நேசா உன் மவுத்திடத்திலில்லாத்துயர்
மண்ணறை செல்லினும் விண்ணவர் வருகினும் கண்மணியாகிய
புண்ணியவடிவே - நீமங்காத தீபமல்லோ
12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபப்பிறை முகவே தேனெழுகும் பூமார்பா
திறமும் உனதிடையும் புறமும் வடிவுறுகரமும் படிபடி முடியும்
சடையிலினழகும் - எனக்குச் செப்பரிது இப்புவியில்..13..

(273ம் பக்கம் பார்க்க)

## மொட்டை வேலாப் போடியார்
## (1804-1880)

இவர் கேள்வியறிவின் (செவியேறல்) மூலம் தம் ஆற்றலை விருத்தி செய்தார். வசைக்கவிகள் பாடுவதில் வல்லவர். அக்காலத்தில் இங்குள்ள மருதமரமொன்றின் கீழ் பலர் கூடிக் கதைத்து மகிழ்வதுண்டு. அதன் கதாநாயகனாக இப்புலவர் திகழ்ந்தார். சிறந்த கலையாராய்ச்சித் திறந்த வெளியரங்காக அவ்விடம் காணப்படும்.

ஒழுக்கத்தின் உயர்வை இவர் பலருக்கும் சொல்லி ஒழுக்கமே உயிர் என்பதையும் வற்புறுத்தி வந்தார். போடியாரிடம் கோபமுற்ற ஒரு தனவந்தர் இரகசியமாக ஒருவரைத் தூண்டி இவரது மணல்மேடைக்கு நிழலுதவும் மருதமரத்தின் கிளைகளை வெட்டச் செய்தார். குளிர்மையாகக் குளுகுளு வென்றிருந்த அவரது தமிழரங்கு வெறிச்சோடிக் கிடைப்பதையறிந்த புலவர் இப்படிப் பாடினார்.

''முத்தா பாண்டியர் மூவர் இருக்கின்ற
மத்தியான மருத நிழல்தனைக்
கத்திகொண்டு தன் கந்தற வெட்டினான்
சத்தி வேலவன் தலையற வெட்டுவாய்''

கேள்வியாற் புலமையுள்ளம் படைத்த இவர் கோளாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பிப்போடியார், தெங்காத்தை என்பவர்களின் புதல்வனாய் 1804 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் வேலன் என்பதாகும். இவர் முக்குவர் குலத்தோராகையால் போடி என்ற சொல்லையும் சேர்த்துக் கொண்டார். பிற்பட்ட காலத்தில் தலை வழுக்கையாய் இருந்ததால் இவரை மக்கள் மொட்டை வேலாப் போடியாரென அழைக்கலாயினர். தாம் செவியேறலாய்ப் பெற்ற பள்ளு, அம்மானை, கவி, காவியம், சிந்து என்பவற்றைப் பாடி மகிழ்வதுடன் தாமும் அவை போன்ற பாடல்களை இயற்றிப் பாடி வந்தார். கோளாவிற் கிராமத்தில் இருந்த மூத்தி என்ற மாதொருத்தியோடு சிங்கள நாட்டிலிருந்து இங்கு குடிவந்த வலியன் என்பான் களவாகச் சிநேகஞ் செய்திருந்ததைப் போடியார் அறிந்தாராயினர். வலியன் ஒரு மந்திரவாதி கிரகப் பகைகளுக்கு மன்னுருவஞ் செய்து குறிப்புச் செய்வதில் வல்லவன். அவனைப் பற்றி இப்படிப் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்பது கிரகங்கட்கும் மண்களாலுருவஞ் செய்யும் சிங்கள வலியன் அவன் எங்கடி தொட்டான் மூத்திரவங்கடி தொட்டான்.

வலியன் சிங்களவனுதலால் உரல் எனும் கருத்துப்படும் வங்கடி என்ற சொல் இங்கு சிலேடையாயிற்று. சிறுநீர்க் கழிவையும் குறிக்கத்தக்க ஒரு சொல்லானதால் போடியார் குறித்துரைக்க விரும்பிய விடயத்தை விளக்கிக் காட்டி வலியனை வாடச் செய்து அவன் தலைமறைவாகிவிடக்காரணமாயிருந்தது. இது போன்ற நயந்தரும் ஊஞ்சற்பாடல்களும் அவராற் பாடப்பட்டுள்ளன.

தம்பிலுவில் என்ற ஊரில் இருந்த தகாத காதற் தொடர்பின் நிமிர்த்தம் ஒரு நீர்ப்பாசன அதிகாரி காதறுக்கப்பட்டுத் துரத்தப்பட்டதையும், அவரது இளியாள் அதையறிந்து வருந்திப் பால்மாடுகளை அவருக்குக் கொடுத்தனுப்பியதாகவும் இவர் பாடிய ''தம்பிலுவிற் பள்ளு'' என்ற நூலிற் காணப்படுகிறது.

''காதறுந்த வேதனைக்குப் பால்கறந்து உண்ணவென்று
காரிகையாள் மாடுகன்று தான் கொடுத்தாளாம்
காதறுந்து நாவரண்டு காமவிடாயால் மெலிந்து
காட்டகத்திற் பேயது போல் ஓடலுற்றானும்''

மக்களின் வேண்டு கோட்படி இவர் பல ஊஞ்சற் பாடல்களை அவ்வப்போது பாடியுள்ளார். அவரது கவித்துவ மேன்மையை அப்பாடல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

செம்பவளப் பொருள் திங்கள் முகத்துதி
தேன் மொழியாளுடைய - நல்ல
கும்ப முலைக்கிணை வெங்கட கக்கரிக்
கோடென ஓதிடலாம்.

ஆசைமிகுந்த என் நேசஞ் சிறந்த பெண்
ஆடரவப் பதுமை - நல்ல
மோகந் தணிந்த என் நேசம் மிகுந்தநல்
முலையினில் தேமலுமாம்

தங்கத் தகடும் குவளைக் குழையும்
சரிந்த இளமுலையாள் - அந்த
மங்கைக் கொருவர் வடுவுகள் சொல்ல
மனதில் முடியாதாம்

மின்னற் கொடியிடைக் கன்னித் திருவுரு
மெல்லி நல்லாளுடைய - அந்த
வண்ணத் தொடைக்கிணை கன்னிச் சினையின்
வராலென ஒப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை நரம்பு வெண் பால்முலைக் கோடும்
 பசும் பொன்னரத் தொடையும்
அச்சமில்லாத தோர் நெஞ்சுமுடைய - நல்
 லரிவையும் வந்தனளாம்

வேறு

பாலைப்பழித்த சொல் லாளைச் சிறந்த
 பதியில் மணம் முடித்து
வேலப்பர் தன் திருக் கோயிலிற்பூசை
 விரும்பி நடத்தினராம்

என்ற இப்பாடல்கள் ஒரு பெண்ணின் அங்க அழகுகளைக் கூறி அவளது காதற் கதைகூறும் 'திருக்கோயில் ஊஞ்சல்' என்னும் தொகுதியுள் இடம்பெற்றுள்ளன. இவரது உவமை, உருவக அணியிற் காணப்படும் சொற்கள் இப்பகுதியின் மண்வளச் சொற்களாகும். அவ்வுவமைகளில் கற்பார் நெஞ்சங்கரைந்துருகுமாறு திட்டநுட்பஞ் செறிய அவர் எடுத்துக் காட்டியிருக்கும் ஒட்பம் பேரின்பந் தருவதாய் அமைந்து காணப்படுகின்றது.

## தாண்டவர் வேலன்
## (1854 - 1924)

இவர் மொட்டை வேலாப் போடியாரின் பேரப்பிள்ளையாவார். இவரும் செவியேறல்கள் மூலம் புலமை பெற்றவர். இவர் அகரமுதல் அஃகாரமீறுக உள்ள பதின்மூன்று எழுத்துக்களையும் முறையே முதல் கொண்ட பாடல்களையடக்கிய ''கதிர்காம விருத்தம்'' என்ற நூலையும் எட்டு வெவ்வேறு சந்தப் பாடல்களைக் கொண்ட ''பிச்சை வேலைக்கும்மி'' என்ற நூலையும் 73 சிந்துப் பாக்களைக் கொண்ட ''பாணகை வழி நடைக்கும்மி'' என்ற பிறிதொரு நூலையும் ஆக்கியுள்ளார். இவரது சில பாடல்கள் எதுகைச் சிறப்பைவிட மோனைச் சிறப்பை மிகைகாட்டலாகக் கொண்டுள்ளன. கதிர்காம விருத்தத்துள் இடம்பெற்ற ஒரு பாடலைப் பார்ப்போம்.

''ஊரிலுள்ள பேர்களெலாம் வளைந்திருக்க
 ஒடுங்குகின்ற பிரணவந்தானேங்கி நிற்க
சாடுகின்ற எமதூதர் தலைமேல் நிற்கத்
 தனை மறந்தெனதுயிர்தான் சாகும் போது
ஆதியென்ற அட்சரத்துள் அடங்கி நின்ற
 அறுமுகனே வந்தெனக்கு அபயந் தாதா
தேடி வந்துன் கதிரைமலை தன்னில் வாழும்
 சுவாமி சிவன் மகனே உனைநாளும் தெரிசிப்பேனே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தடி நிழல் தமிழ் மன்றங்கள், இலக்கிய இசை மன்றங்கள் படிப்படியாக மறைந்து வந்தாலும் வேலனைப் போன்ற செவியேறற் புலவர்கள் தம் பாடல்களின்மூலம் அவற்றிற்குச் சிறப்புக் கூட்டி வந்துள்ளனர். அருகி அழிந்து விடுந் தறுவாயிலுள்ள இப்பாடல்களைத் திரட்டி அச்சேற்றுதல் சான்றோர் கடன்.

கோயில் விழாக்கள் சிலவற்றிற் காணப்படும் விண்விரயங்களும், அளவற்ற ஆரவாரங்களும் புலவருக்குப் பிடிப்பதில்லையாம். இதை அவர் கருத்திற் கொண்டு பாடிய பாடல்களிலிருந்து இது இடம் பெற்றுள்ளது.

''கடவுளின் பெயர் சொல்லிக் களியாட்டந்தான் புரியும் கனவான் பல்லோர்
வழிதவறி வரம்பேறி வம்புக்குள் வாழ்வுதனைத் தள்ளி விட்டார்
பெரியார்கள் எனச் சொல்லிப் பேயாட்டம் ஆடுகின்ற பித்தர் கூட்டம்
நெறிப்பட்ட நிலை கொண்டு நிம்மதியாய் மக்கள் குலம் வாழச் செய்யார்.''

## வள்ளி நாயகி
## (1826 - 1890)

இப்புலவருக்குப் பொன்னித் தாய் என்றொரு பெயருமுண்டு. அக்காலத்தில் இடையர் குலத் தெய்வமாகிய வதனமார் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகத் தெரிகிறது. மாட்டுப் பட்டிகளில் ''வதனமார் பொங்கல்'' என்றொரு சடங்கு நடைபெற்று வந்துள்ளதாகவும், சமய சம்பந்தப்பட்ட ஒருபிரச்சினையில் படிப்படியாக இப்பொங்கல் மரபு அருகிவிட்டதாகவும் தெரிய வந்துள்ளது. இப்புலவர் ''வதனமார் காவியம்'', கண்ணகி வழக்குரைப்பாடல் என்பவற்றுடன் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

இவர் ஒருசமயம் காட்டரவத்தால் காட்டுக்குடுப்பு ஆற்றின் பக்கம் நடந்து வரும் போது ஒரு வேங்கைப்புலி அண்மையில் நின்று தன்மேற் பாய்வதற்கு ஆயத்தப்பட்டதாகவும், உடனே புலவர் நெட்டை சொல்லி உறுக்கியதாகவும் அவரைப் பற்றிய குறிப்பேட்டிற் செய்திகள் காணப்படுகின்றன.

வேங்கைக்கு நானல்ல விருந்து
வெடிபட்ட வாய்ச் செந்நீர்
கொடுப்பினுல் வடிய,
வெடிக்கட்டும் வெடி இட்டோம்! ஓம் பிஸ்கிலி.....

இப்படிச் சொல்லி அவர் கையில் வைத்திருந்த மந்திரக் கோலைத் தரையிற் தட்டியதும் வேங்கையின் வாயால் இரத்தங்கக்கி அது இறந்ததாகத் தெரிகிறது. இவரை விவாகம்முடித்திருந்த கோபாலசாமி என்பவர் தனது மனைவியின் கவித்துவம், மந்திரசக்தி ஆகியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டு அவருக்கு எப்போதும் உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார். பாலயோகர் என்பவரிடம் இவர் சில கலைகளைக் கற்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷம்ஸுல் உலமா அல்-ஆலிம் அல்லாமா முஹம்மத் அபூபக்கர் லெப்ப (1834 - 1910)

அக்கரைப்பற்றின் முதல் ஆலிம், உலமாக்களின் சூரியன் எனப்பொருள்படும் ஷம்ஹுல் உலமா என அழைக்கப்பட்டார். சிறந்த கல்விமான். இஸ்லாமிய சட்டக்கலை, மொழியிலும், தமிழிலும் பாடல்கள் இயற்ற வல்லவர்.

ஹதீஸ்கலையில் மேதையாக விளங்கினார். பிற ஊர்களிலிருந்து இவரின் சமயச் சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரண்டு வருவர். சம்மாந்துறை, இறக்காமம், பொத்துவில், கரைவாகு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, மாத்தறை, வெலிகம, காலி, கொழும்பு முதலிய இடங்களிலுள்ள மக்களின் அழைப்பின் பேரில் சமய சேவைக்காகச் செல்வது இவரது வழக்கமாகும். எமன் தேசத்து மகானான அஷ்ஷெய்க் அல்ஹாபிஸ் அப்துஸ்ஸமத் (சின்ன) மௌலானா வலியுள்ளாஹ் அவர்களின் மூத்த புதல்வி றைஹானத்துஸ்ஸ அதியா என்பவரை மணஞ் செய்தார்.

அக்காலத்தில் மவ்லிதுக்களரி, கலியாணவைபவம், ஹதீதுக் களரிகளில் இவரால் இயற்றப்பட்ட பாடல்களே முக்கியமாகப் பாடப்பட்டன. சின்னப்பள்ளி வாசலைக் கட்டி முடிப்பதில் இரவு பகலாய் உழைத்தார். கணீரென்ற அவர் குரல்வளம் ஹதீது வைபவங்களில் மக்களை மிக மகிழ்வூட்டும்.

நமது புலவர் மணி முஹம்மது ஸூபி அவர்கள் இவரின் உடன்பிறந்த சகோதரியின் புத்திரராவார் என்பது இங்குக் குறித்துரைக்க வேண்டியதாகும். கபுறின் (சவக்குழி) வேதனைக்குப் பயந்து அவ்வேதனையிலிருந்து தன்னைக் காப்பாற்றியுதவுமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இப்படி வேண்டுகிறார்.

### மண்ணறை வேதனையணுகாது தன்னைக் காக்குமாறு நபியவர்களிடம் மன்றாடல்

அழுதேன் என்னை ஆதரிப்பீர் நபியே - என்னைத்
தாபரிப்பீர் சபிய்யே!

நாகமுடும்பு நவின்றுரை கூறிய
நாயகமானவரே - நானே
தாகம் வராமலே தாபரிப்பீரெங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஸீமே யாநபிய்யே!
காலனும் வந்து கடுந்தென்னுயிர் தனிற்
கைபோடும் வேளையிலே - என்னைக்
கலிமாவினோடு கரை சேர்க்கவே கடன்
காத்திடுமே யாநபியே!
மன்னறையின் முங்கர் மணலறை வந்தாறு
மசலாவுங் கேட்டிடுவார் - அதை
என்னுளினுலே இயம்ப உதவி செய் திடேற்றும் யா நபிய்யே!
முத்திலுதித்தவர் அப்துல்லா புத்திரர்
முத்திரை பெற்றவராம் - நானே
முஸ்த்தக்கீம் பாலம் கடக்க உதவிடும்
முஸ்தபா யா நபியே!
பாவையர் மீது பகலுமிரவிலும்
பட்சம் வைத்தே திரிந்த - இந்தப்
பாவி முஹம்மத பூபக்கரின் முகம்
பார்த்தாளும் யாநபியே!

இவர் பல்துறை சார்ந்த தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

## முகம்மத் ஹாஷிம் (மூத்த) ஆலிம்
## (1887 - 1956)

இவரை மூத்தாலிம் என்ற பெயராலேயே இப்பகுதி அறியும். முஹம்மதபூபக்கர் லெப்பை ஆலிமின் மக்கள் நால்வரும் ஆலிம்கள். இவரே மூத்தவர். அதனால் இது காரணப் பெயராய் நிலைத்தது. இவரும், சகோதரர் நால்வரும் சபைகளின் முன்னிருந்து செயற்படுவதும், சமய அறிவிற் தேர்ச்சி பெற்றிருப்பதும் இந்நால்வரினதும் சமூக நிலையை உயர்த்திக் காட்டியது. எடுத்துக் காட்டாக ஒரு மௌலிது களரியைச் சிறப்பிக்க வேண்டுமானால் (முஹம்மதபூபக்கர் லெப்பை) ஆலிமின் மக்கள் நால்வரையும் அழைக்க வேண்டுமென்பதை மக்கள் ஒரு மரபாகவே செயற்படுத்தி வந்தனர். அவர்கள் வீற்றிருக்கும் சபை ஓதலாலும், பாட்டாலும் களைகட்டி இருப்பது வழமையான பெருஞ்சிறப்பாகும். இவர் தனது கவித்துவ சக்தியைப் பிற ஊர்களிலும் நிரூபித்துப் பெரும் மதிப்புப் பெற்றுள்ளார்.

சில ஊர்களில் இவரை இவரது தந்தையர் பெயர்கொண்டு ''அபூபக்கர் ஆலிம்'' என்று அழைப்பதும் உண்டு. இவரது வமிச பரம்பரை ஆலிம் என்ற அறிஞர் தொடர்ச்சியொன்றைத் தோற்றுவித்துள்ளது. அதைப் பின்வருமாறு நிரலிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமிசாவழி ஆலிம் பரம்பரை

1. முஹம்மத் அபூபக்கர் லெப்பை (தகப்பன்)
2. முஹம்மத் ஹாஷிம் (மகன்)
3. அப்துஸ்ஸலாம் (மகன்)
4. அப்துஸ்ஸமத் (மகன்)
5. அப்துற்றஷீத் (மகன்)
6. புகாரி (முஹம்மதபூபக்கர்) (மகளின் மகன்)
7. முஹம்மத் மஷ்ஹூர் (மகளின் மகன்)
8. அப்துல் குத்தூஸ் (மகளின் மகன்)

இவர்கள் தந்தை வழியில் ஆலிம்-உலமாப் பரம்பரையும், தாய்வழியில் நஸப் மௌலானா வமிசத்தையும் சேர்ந்தவர்களாய் உள்ளனர்.

மேற்காட்டப்பட்டிருக்கும் 1, 2, 5, 6 ஆம் இலக்கத்தையுடையவர்கள் சிறந்த தமிழ்ப்புலமையுங்கொண்டுள்ளனர்.

நமது புலவர் மூத்த ஆலிம் அவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்கியுள்ளார். கத்முல்குர் ஆன் தமாம் செய்யும் வேளை இறுதி துஆவை ஓதும்பணி இவரிடமே ஒப்படைக்கப்படும். அவர் குர் ஆனைக் கண்ணுக்கு நேரே தூக்கிப் பிடித்து துஆ ஓத ஆரம்பித்தாரானல் சபையோரும், பார்வையாளரும் மெய்மறந்து பக்திப்பரவசத்தில் மூழ்கிவிடுவர். அவரின் வெண் கலக் குரலும், துஆக் கேட்கும் பாணியும் மக்கள் உள்ளத்தை உருக்கி எடுத்து விடும். நகைச் சுவை கலந்த இவரது பல பேச்சுகளில் சமயக்கருத்துகளும், இலக்கிய இன்பமும் இழையோடிக் கொண்டிருக்கும். எந்நேரமும் அவர் பக்கத்தில் ஒரு உலவுதடி இருக்கும். பொதுக் கூட்டங்களுக்குத் தலைவராக இவரே மக்களால் அமர்த்தப்படுவார்.

ஆலிம்கள் பலரணியும் குப்பாயம், சேர்வாணி, நெடிய அங்கி என்பவற்றை இவர் தேவைக்கேற்ப மிக அரிதாகவே அணிவார். சாரம், நீளக்கைச் சட்டை, சால்வை, கறுப்பு ஜின்னுத் தொப்பி இவைகளையே இவரணிவது வழக்கம். ஆஜானுபாகுவான தோற்றமுள்ள இவர் பெரும் மரியாதைக்குரியவராய் மதிக்கப்பட்டு வந்தார்.

பலரும் இவரிடஞ் சென்று பல்வகைத் துறையிலும் பாட்டுகள் எழுதிப் போவார்கள். மிக விரைவாக மனப்பாடமாய் இருந்தவற்றை எழுதுவது போன்று எழுதிக் கொடுப்பார். படல்கும்புறை என்ற இடத்துக்கண்மையிலுள்ள அழுப்பத்த எனுமூரில் அடங்கப்பட்டிருக்கும் அவ்லியாவின் அடக்கத்தலத்துக்கு ஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் வருடா வருடம் கந்தூரி வைபவத்திற்காக மக்கள் கூடுவதுண்டு. அதற்கான பிரயாணப் பாடல்களையும் எழுதியுதவியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான தனிப்பாடல்களையும், சாய்ந்தாட்டுப்பாடல், விருத்தம், சமய எழுச்சிப்பாடல் போன்றவற்றையும் பாடியளித்துள்ளார். அக்கரைப்பற்றுக்கே ஓரணிகலனாயிருந்து, மக்கள் தொண்டனாய், மதத் தலைவராய், பெரும் புலவராய்ப் போற்றப்பட்டுக் கொண்டிருந்த இம்மகான் 1956-10-30 இல் வபாத்தானார். அவரின் சில கவிதைகளைக் கவனிப்போம்.

நபிகளார் பேரிற் றுதி

மாதே மறைமதியே நபி திரு
மலரடி தனைத் துதியே
என்தன்மையனுடன் நவிலும் துய்யஸலாமதனை
வையம் புகழும் நபிக்குய்ய ஸனதுடனே (மாதே)

செந்தாமரை மலரமுதுறை மக்கா தேசத்திலுறை நாதர்/மணக் கந்தர் அப்துல்லா
மகவெனவரும் கருணைசேர் மஹ்மூதர்
திரு செந்தாமலரிணையைத் தந்தென்னையாளுமந்த
கந்தங்கமழு நபிக் கெந்தன் ஸலாமுரைத்து (மாதே)
வல்லோனறிஷேறி இறைவனெதிர் வசனஞ் செய் நபிநாதர்/படைப்பெல்லாம்
படைத்தாளுமிறைவன் சிர்றைப் பகர்ந்தெடுத்துரை போதர்
நம் மனெல்லோரையும் சுவனத்துள்ளாகவே ஷபா அத்
துல்லாசமாய் மன்றுடி நல்லாசை சேர்ப்போரிடம் (மாதே)
கமனல நிறைநந்தாங்கிடு கருங்கொடித்தவதிலுறை வாசன்
குலமன்னரபூபக்கர் லெப்பை ஆலிமின் மகனென வரு நேசன்
குரு தண்மைப் பாவலன் ஹாஷிம் நன்மை பெறவர் முனம்
செம்மையுடன் நடந்தால் நன்மை பெருகுமடி (மாதே).

அழுப்பத்த உலா

வாலை இளங்குயிலே அளி யாடும் வரிக்குயிலே
வேல் விழியாளே நின் தோழியும் நீயும் விடிய முதல்
காலைக்கடன்களை நன்றாய் முடித்துக் கருத்துடனே
ஆலம் புகழும் அழுப்பத்தைக்குப் போவோம் ஆயத்தமோ
அக்கரைப்பற்றார் அதிகம் பேர் போவார் அழுப்பத்தைக்கு
ஆடுகள் சாவல் கோழிகள் தூக்கி அணியணியாய்
தக்க மவுலூதும் கத்தமும் பாத்திஹா ஓதிடவே
தாமதியாமல் போவோமே சுற்றம் தான் சூழ்
ஆண்களரிவையர் சிறியோர் முதியோர் ரென்றில்லாமல்
அனைவரும் கூடியே ஆனந்தமாகப் போவதற்கு
மாண்பு மிகும் பெரியாரடங்கிய மண்ணறைக்கு
மாசகலப் போய் நாம் வருவோம் பெண் மயிலாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊர்வளம்**

புண்டரீக மலர்த்தடத்தில் வாவிசூழப்
புதுவரிகளதிலுறைந்து ராகு பாட
வண்டுமிழ்ந்த அமுதமொரு வாவியாக
வனிதையர்கள் நீராட வமுதுள்ளேக
தண்டமிழோருவமையுரை குய்யம் விம்மச்
சகிக்கவொண்ணு மதப்புறையச் சிசுக்கள் தாவி
அன்டியிரு இதழமதனுல் உறிஞ்சி வாழும்
அருமதலைக் குடிகொள் கருங்கொடியூராமே.

## அப்துற்றஷீத் ஆலிம்
## (1905 - 1976)

இம்மகான் அபூபக்கர் லெப்பை ஆலிமின் நான்காவது புதல்வரும், சின்னமவ்வாஞ (அஷ்ஷெய்க் அப்துஸ்ஸமத் அல்-எமானி) அவர்களின் பேரனுமாவார். இவரோடு பிறந்த மற்றும் மூவரும் ஆலிம்களாவர். காலியிலுள்ள பஹ்ஜியத்துல் இப்ருஹிமிய்யா அறபிக் கல்லூரியிற் பயின்று சனது பெற்ருர். காதிரி... யாத் தரீக்கின் கலீபா (தலைவர்) வாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரது பாட்டனுரின் ''ஸமதிய்யா''ருத்திப் வைபவத்தை மிகப் பக்தி சிரத்தையோடு நடாத்தி வந்தார். இவரது முரீதீன்கள், மு ஹிபீன்கள் சிலர் தற்போதும் வணக்க வழிபாடுகளைச் சிரத்தையோடு மேற்கொண்டு வருகின்றனர். ஹதீஸ் கலையில் நிபுணராக விளங்கினுர். இவர் ஹதீது சொல்வதென்று கேள்வியுற்ற மக்கள் பெருமணிதிரண்டு வருவது வழக்கமாகும். மிக அழகு, இனிமை பொதிந்த ஆழமான கருத்துரைகளும், ஆத்மீகத் தத்துவங்களும் இவரது சொற்பெருக்கின் ஊடகமாக அமைந்திருக்கும் அறபு எழுத்தணிக் கலையில் வல்லவராக விளங்கினுர்.

இவரது அறபு அட்சரங்கள் அச்சுப்போன்ற வடிவில் அமைந்திருக்கும். இசும், அஸ்மாக்கள் எழுதுவதில் கை தேர்ந்தவராவார். ஜின் வாசலாத்து வாணராக மக்களிடம் புகழ்பெற்றிருந்தார். பல சமூகப் பணிகளை நிறைவேற்றினுர். அனுச்சாரங்களையும், ஆகாமரபுகளையும் எதிர்த்துத் திசை திருப்புவதில் வெற்றி கண்டார். இவர் திண்ணைப் பள்ளிக்கூடமாய் நடாத்தி வந்த குர் ஆன் பாடசாலையில் சமயக் கல்வியைக் கற்றுத் தேறியோர் பல்லாயிரக் கணக்கிலிருந்தனர். பலர் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். அக்கரைப்பற்றுச் சின்னப்பள்ளி வாசலில் பல்லாண்டுகள் ''பேஷ் இமாமாக''க் கடமையாற்றினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கைச் சோனகர் சங்கத்தின் ஆயுட்காலத் தலைவராயிருந்த மர்ஹூம் சேர் ருஸிக் பரீத் ஜே.பி.யூ.எம். இவரின் ஒன்றுவிட்ட சகோதரியை மணம் முடித்தார். குடும்ப உறவு நெருக்கங் காரணமாக 1947இல் சேர் ருஸிக் பொத்துவிற் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அபேட்சகராய் நின்று போட்டியிட்ட போது இவரின் வீட்டிலேயே தேர்தல் அலுவலகம் அமைத்துச் செயற்படுத்தப்பட்டது.

கிழக்கு மாகாண அரசு அதிபராய் 1941 இல் கடமையாற்றிய மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் சி.சி.எஸ். அவர்களின் கவிபாவாக இவர் செயற்பட்டதால் அஸீஸ் அவர்கள் இவருக்கு நிலக் கொடை, மற்றும் அன்பளிப்புகளை வழங்கிக் கௌரவித்தார். அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட அறபு ஆசிரியர் பதவியை இவர் ஏற்க மறுத்துவிட்டார். இப்பதவியிலிருந்தால் தீனுடைய சேவை செய்வதிற் தடங்கல்கள் ஏற்படலாம் என்பதே இம்மறுப்புக்குக் காரணம் எனக் கூறி வைத்தார். மாத்தறையில் அடங்கப்பட்டிருக்கும் அல்குத்ப் அல்வலி ஷெய்குல் ஈமானி எஹ்யா மவ்லானா அவர்களின் பேரனை இவர் அவர் பேரில் முனாஜாத் பாடியுள்ளார்.

சிறந்த தமிழ்ப்புலமையுடையவர். அறப், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பாடல்கள் இயற்றும் பெற்றிவாய்ந்தவராயிருந்தார். ஸலவாத்துக் கோவை, ஆத்மீக ஆவலம், பஞ்சாமிர்தக் கீர்த்தனை, முச்சுடர்மாலை என்பவற்றோடு அனேக தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். 1957 இல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் போது இவரது படையல்கள் முற்றுக அழிந்து போயின. சிலரிடம் மனப்பாடமாய் இருந்த பாடல்களே எஞ்சின. என்றாலும் அழிந்தவற்றுட் சிலவற்றை அவர் மீண்டும் எழுதிப் பாதுகாத்தார். இவரது சில ஆக்கங்களைக் கவனிப்போம்.

## பஞ்சாமிர்தக் கீர்த்தனை

ஆரணனே அதி சுடரே அருளுறையோ அனைத்துமுன்னே
காரணனே கருவிலியே உருவிலியே திருவுறைக்குட் கருவே முத்தே
சீரணியே நிர்மலனே நிஷ்களமே சிவனெனவே செப்பியேற்றும்
பூரணனை அயராது அனுதினமும் துதி பகரும் பொருத்தங்காப்பு_தொங்கல்
முந்த நுக்தாகி அலிபுமாகி முச்சுடர் வட்டச் சூட்சமாகி
பிந்த அஹதாகி அஹ்மதாகிப் பிரியாஜாமிஃ இசுமுமாகி
அந்த ஜாமிஃ இஸ்மினுள்ளே அமைந்த கன்ஸெனும் மகுபியாகி
சொந்த அமாதாத்தில் மறைந்திருந்த சூட்ச நூறெனும் முஹம்மதாமே

நூறெனும் தாத்து அஹதுவாகி
நூதனமான சிர்றதற்குள்
நானென்றொரு வொளி வெளியாக்கிட
நாடும் நாட்டத்திற் குன்னென்றோத
மாறுமுஹம்மது ஒளி வெளியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்து யான்சிர் று தாத்து என்றே
சீராயுரைத்தனன் சிர் றதனுல்
சிருஷ்டிப்பனையவும் வெளியானதே

வெளியான றூஹு வகைகளெல்லாம்
வெளிச்சமாம் நூறு ஒளிகளெல்லாம்
தெளிவான தண்ணீர் மண் மனுக்கள்
தேசத்துறு பல படைப்புகளும்
ஒளியான அறுஷும் குர்ஷும்
உரைக்கும் லவ்ஹுடன் கலம் சுவர்க்கம்
நலிவாம் நரகமும் மலக்குகளும்
நாயன் அமைத்தனன் ஒளியா லென்றுர்

என்று நபியுல்லாஹ் ஓர் ஹதீஸில்
இயம்பினுர் ஆதியிறை மிகவே
நன்றியுறு மலக்காஞேர்களை
நாடிப்படைத்தனன் வழிபடவே
கண்டிப்புறு ஷெய்த்தானினங்கள்
கானிலடைத்தனன் மாறு செய்ய
இன்று மனுக்களை ஏன்படைத்தான்
என்று அறிவீர்கள் முஸ்லிம்களே

## ஸலவாத்து

முந்த இருளாக விருந்த முத லோனைப்
போற்றி செய்வோம் வஸல்லிம்
நூறுன் அலா நூருய் இருந்த நல்
நூறினைப் போற்றி செய்வோம் வஸல்லிம்
நா றிலிருந் தொளியாகி வந்த நாம்
நாதரைப்போற்றி செய்வோம் வஸல் லிம்
ஆலமமைக்கு முனமே அமா தாத்தின்
கோலமயில் வடிவாம் வஸல்லிம்
அந்த மயிலின் முன்னே மஹ்ரூ
தெனும் ஒரு கண்ணுடி வஸல்லிம்
கண்ணுடியானதிலே சொரூபத்தைக்
கண்டு களிக்கையிலே வஸல்லிம்
தாத்துல்புஹூத்தினலே மறைந்தவன்
தாத்துல் அஸ்மாஸிபத்தாம் வஸல்லிம்
குன்னென்றசொல்லதிலே படைப்பினம்
குல்லும் வெளிப்படுமாம் வஸல்லிம்
தன்னையறிந்துணர்ந்தால் தலைவனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே யுணர்ந்திடலாம் வஸல்லிம்
தன்விலே தானாக இறைவனும்
தனித்தே யிருந்தானே வஸல்லிம்

## புகாரி ஆலிம்
## (1924 - இற்றைவரை)

இவரின் தாயார் சின்னமவ்லானாவின் பேர்த்தியான உம்முக் குல்ஸூம் (மக்கத்தும்மா) என்பவராவார். தந்தையார் அஹமது லெப்ப (பிரதம) மரைக்காயர் அவர்கள். இவர் அறபு மொழிக்கல்வியில் நிபுணத்துவம் பெற்றவர். தமிழிலும் நிரம்பிய புலமையுடையவர். இருமொழிகளிலும் கவிதைகள் இயற்றும் திறன் வாய்ந்தவர். ஹதீஸ் கலையில் மிகத் தேர்ச்சி பெற்றவர்.

இவரது ஹதீஸ் களரிக்கு மக்கள் சாரி சாரியாகத் திரள்வர். இவரது அறபு இலக்கணப்புலமையை அறிஞருலகம் வெகுவாகப் பாராட்டியுள்ளது. இவர் அறபு மொழியில் உரையாற்றும் போது அம்மொழி அவரது ஆளுமைக்கு வளைந்து கொடுப்பது அன்னாரின் சிறப்பியல்பாகும். அவரது "சில்னஜமீ அன்" என்று தொடங்கும் அறபுப் பாடலொன்று அக்கரைப்பற்று வட்டாரக் கலை விழாப் போட்டியொன்றின் போது தேர்வு செய்யப்பட்டு முதலாமிடத்தைப் பெற்றது. அறபு பைத்துகள், முனாஜாத்துகள், மனாகிபுகளையும் உணர்ச்சி உந்தல்களுடன் பாடியளித்துள்ளார்.

சமயப்பணி, பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்துள்ளார். பத்வா (சமயத் தீர்வு) வழங்கும் தகுதிபெற்ற அறிஞராக மதிக்கப்பட்டு வருகிறார். பல உலமாக்கள் கூட்டங்களிற் தலைமை வகித்துப் பல சிக்கல்களுக்குப் புரிந்துணர்வுடன் கூடிய முடிவுகளை வழங்கி மதிப்புப் பெற்றிருக்கிறார். திருமணத்தின் காரணத்தால் பல வருடங்களுக்கு முன் மருத முனையை வதிவிடமாக்கிக் கொண்டுள்ள இவருக்கு வெளியூர்களிலிருந்த பல தரப்பட்ட அழைப்புகள் வந்து கொண்டிருக்கும். அப்துல் குத்தூஸ் மவ்லவி, எம்.எம். தவ்பீக் (விவாகப் பதிவாளர்) ஆகிய இருவரும் அன்னாருடைய உடன்பிறப்புகளாவர். அறபிக் ஆசிரியராய் கடமையாற்றித் தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

### இணையிலா இறை சக்தி

பரனுக்குத் தான் தெரியும்
இந்தப் பாரதின் நினைவுகள் அனைத்தும்
வேறெவருக்குத்தான் தெரியும்
அதனாரம்பமும் அதன் முடிவும்

அவன் வேடிக்கை தான் இந்த விளைவுகளோ
பல நாளுக்குத்தான் இது நீடிக்குமோ
இது சதியோ அன்றி விதியோ
எமதுணர் விற்கு ஒரு சுவையோ (பரனுக்கு) 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை வாழ்ந்தோம் அமைதியில்லை
இந்த உலகின் அழிவுக்கெல்லையில்லை
பொழுதும் சுடருக்குச் சொந்தமில்லை
அதன் புன்னகை யாருக்கும் அடிமையில்லை (பரனுக்கு) 02

இறைவனின் விதிக்குத் தடைகளில்லை
அதை எதிர்த்தவர் எவரும் ஜெயித்ததில்லை
மறையையறிந்தவர் மருள்வதில்லை
சில மாந்தர் இவற்றை உணர்வதில்லை (பரனுக்கு) 03

மனிதருக்காய் இறை விரைவதில்லை
அவன் வகுத்த எத்தவணைக்கும் மாற்றமில்லை
கனியாப்பழங்கள் விழுவதில்லை
அது கனிந்த பின் மரத்திற் தரிப்பதில்லை (பரனுக்கு) 04

மலையெனத்துன்பம் வந்தாலும்
புவிமாந்தர்கள் எல்லாம் எதிர்த்தாலும்
இறைவன் துணைதான் எமக்கிருந்தால்
ஓரிடரும் எம்மை அணுகாது (பரனுக்கு) 05

(274ம் பக்கம் பார்க்க)

## முஹம்மத் ஹஸன்
## (1874 - 1945)

இவருக்குச் சோக்குப்புலவர் என்றொரு பட்டப்பெயருண்டு. மொழுகர் என்றுஞ் சொல்வர். உதுமாலெப்ப என்பது பதிவுப்பெயருகும். வசைபாடுதல், அறம்பாடுதலில் வல்லவராயிருந்தார். தன்னை உரிய முறையிற் கௌரவிக்காவிட்டால் ஏசல் தொடரும். ஒருநாள் சிலர் புலவரின் காணியைச் செய்வதற்கு விரும்பி அவரிடம் கேட்பதற்குக் குத்தகைக்கா வொன்றுடன் வந்தனர். இவர்கள் சேனைச் செய்கைக் காரரான்கயாற் சேனைப் பொருள்களையே கட்டிக் காவிக்கொண்டு வந்து புலவர் முன்வைத்தனர்.

கண்ணியமான காவொன்றிற் தயிர்ப்பானை, பெரிய கோழிச்சூடான், இதரை வாழைப்பழக் குலைகள் நெற்கூடு (புதிர்க் கோட்டை) என்பன இருக்கும். காவி வந்த பொருள்களை அவதானித்த புலவருக்குக் கோபம் வந்துவிட்டது. அதை இப்படி வெளிப்படுத்துகிறுர்.

அல்லியொரு மதவரும் ஆதமிகமாயிலும்
ஐயிரண்டு பத்துச் சுரைக்காய்முறித்து - அதுவுமொரு காவாம்
புடலையொடு தும்பையும் பொரி பயறு பாவலும்
புட்டு வெள்ளரிக்காயும் புதுக் கக்கரிக்காயும்
கூட்டியே மட்டையில் ஓட்டியே காவென்று
காவிக் கொண்டாடி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிருக்குத் தக்காளி பாலைக்குப் பயற்றவரை
வாழைப்பழக்குலைக்கு வழுதுணங்காய்
தேனுக்குத் தீம் பலாக்காய் நெல்லுக்கு வத்தகக்காய்
தெரியாத வன்பூசை விடியுமட்டும்
தாவென்று கேட்டேனு தரவில்லை யென்றேனு
கொஞ்ச மாகினும் பஞ்சமாபாதகர்
குருவையறியாத மடையர் அம்மமாமுண்டிலே
அருஞ் சிப்பி முத்தாகுமோ
பூனையும் ஆனையாய் போகுமோ பொல்லாத
சிங்கமும் நரியாகுமோ
அசிலும் பிறப்பும் அணுவளவும் மாறுமோ
அருஞ் சுணங்கன் மானுகுமோ
இத்தல மீதிலே தகுதி தராதரம்
இல்லை யென்ருகி விடுமோ
காக் கொண்டு வந்திரா கரிபூச வந்திரா
கலைஞான மில்லாப் பதர்கள்
கடுகளவும் இனிமேலே இங்கு நிற்காது நும்
காக்கைளத் தூக்கித் தோழில்
ஈாவியே போய்விடும் இனிமேல் என்னையே
கடுகளவும் காணவேண்டாம்.

ஒருநாள், புலவர் வீதியால் நடந்து வரும்போது சிலர் வண்டியொன்றிற் பிரயாணம் வந்தனர். புலவர் வண்டியைக் கடக்கும் போது மாதொருத்தியின் நாம்பூலத் தண்ணீர் புலவரை அபிஷேகஞ் செய்து விட்டது. புலவர் துள்ளிக்குதித்தார். ஓடிப்போய் வண்டியை மறித்து நிற்கச் செய்தார். இதைக் கண்டு பீதியுற்ற அப்பெண் செய்வதறியாது தடுமாறிக் கண்ணீர் விட்டாள். புலவரின் வசைமாரி பொழியத் தொடங்கியது.

பெண்ணுக்குப் பேயென்று பெரியோர்கள் சொன்னதில்
பிழைகளுமொன்று மில்லை
பெருத்த தனபாரமது தாங்காது கழுத்தையே
பிடித்திழுத்திருப்பி நீட்டி
வண்டியின் வெளியிலே வாய்ச்சப்பை துப்பவே
வழிகாட்டி நின்ற திமிரே
வதுவை செய்திட்ட உன்னை நான் வழக்காட
வம்புக் கிழுக்கவில்லை
கழிவை நீ துப்பலாம், காறியும் உமிழலாம்
கள்ளப்புருசன் முகத்தில்
கள்ளியே கவனம் நீ கதிர் கொய்யும் வாள் இது
கழுத்தை யரிந்து விடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரின் பாடலைக் கேட்ட பெண் பயத்தால் ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். அங்கு கூடியோர் புலவரின் சினம் மாற்றி வண்டியை விடுவித்தனர் என்ற ஒரு கதை மிகவும் பிரசித்தமானது.

## மு. ஹ. ஷெய்கு இஸ்ஸுத்தீன் (வேதாந்தி)
## ஞானக் கனி சுவைப்போம்

வேதாந்த வித்தின் விரிசுடரிற் சிந்தனையைத்/ தூதாக விட்டுத் துலங்கும் புதுமைகளைக்/கோதி மெருகிட்டுக் கொழுகி மெஞ்ஞானத்தில்/ஆதி யோடந்தம் அண்ட சராசரத்தின்/ஓதியுணர உலகுக் களித்து வரும்/சேதிபல தந்த செய்கு இஸ்ஸுத்தீனின்/தோதான ஞானக் கவிதைக் கனி சுவைப்போம்
(நூலாசிரியர்)

### அடிமை விலங்கை உடைத்தெறி

தன்னலங் கருதாத்
தலைமைகள் தேடிப்
பின்னுள சமூகம்
பிணங்கு கையில்
இந்த நமது
சந்தைச் சமூகத்தில்
இன்னொரு புதுமலர்
பூக்கிறது
கையையும் காலையும்
கழுத்தையும் நாவையும்
மெய்யையு மிறுக்கி
மேன்மையை நசுக்கும்
அடிமைத் தளைகளெம்
ஆபரணங்களோ
நபுஞ்சகத் தனமெம்
நாட்பட்ட புண்ணோ

சரித்திரம் படைத்த
சன்மார்க்க சோதரா
தரித்திரம் போக்கத்
தளைகளை உடைக்க
வீறுகொண்டெழு
நும் விழியாய் இருப்பான்

உன்
வீதியில் முள்ளைப்
போடுவோர் புன்மையைப்
பொறுத்துப் போரிடு
பலனைப் பெறுபவர்
யாராயிருப்பினும்
கடமையைச் செய்யப்
புயலாய்ப் புறப்படு
நானோ இந்த
நலிந்த சமூகத்தின்
அபயக் குரல்
என் பாடல் இங்கே
உறக்கத்தில்
மறந்தவர்களின்
ஆன்மராகம்
என் பாடலில் தேவை நீயே
அதற்கு
உயிரூட்டு
என் கனவுக்கு
அர்த்தம் காண்

இறைவன் மகாக் கருணையாளன்
நேர்வழிக்கு

இவர் வேதாந்தி எனும் புனைப் பெயருட்புகுந்து வீரம், வேதாந்தம், முற்போக்குவாதம், தார்மீக சித்தாந்தம், அரசியலின் அவலம், ஆத்மீக ஈடேற்றம் போன்ற பல்வேறு துறைகளிற் தனது சிந்தனையை அலைபாய விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிக் கவிகளெனும் பல் கோணியின் புதுக் கோணத்தில் ஆரோகணித்துக் கால்பதித்து நிற்பவர். புன்மை கண்டு பொங்கியெழுவதும் அடிமை வாழ்வுகண்டு ஆவேசங் கொண்டெழுவதும் இவரின் உணர்வோட்டமாகும். சட்டத் தரணியான நம் பாவலர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கொங்கிரஸின் தவிசாளராகவும், தமிழ் மாநில (வடக்கு - கிழக்கு மாகாண) அரசு எதிரணித்தலைவராகவும் பதவி வகிக்கின்றார்.

அக்கரைப் பாக்கியன்

சூடும் பூ

அக்கரைப்பற்றன்னையின் அணிகலனாய் நின்று அரிய பலகவிகள் யாத்து அணிகளும் இலக்கண மணிகளும் பதித்தவைகள் அலங்காரமாகத் தோன்றத்தக்க புலமை பெற்று தனித்துவக் கருவிலே தரங்கூட்டிச் சுவையுமூட்டி / தரணிக் களித்திடும் உரமிக்க பாவலன் தனி நடையிற் தாகங் கொண்டோன் பக்கம் பக்கமாகப் பாவினைப் படையலைப் பலபேரும் உண்ணச் செய்த அக்கரைப்பாக்கியன் அறிவில் மலர்ந்த பூ அனைவரும் சூடி மகிழ்வோம்.

(நூலாசிரியர்)

எந்தன் ஆசை

மனைவாழ்வில் சுகந்தேடும் ஆசையில்லை.
மண்மீதும் பொன்மீதும் ஆசையில்லை/பனைபோன்ற புகழுயர ஆசையில்லை
பலபேரும் வாழ்த்திவைக்க ஆசையில்லை
எனைச் சூழும் இன்பத்தில் ஆசையில்லை
இவ்வுலகின் உறவுகளில் ஆசையில்லை
இணையிலா இறையோனின் இருபாதங்கள்
என்றடைவேன் என்பதுதானெந்தன் ஆசை

ஏ. இக்பால்

அணியும் ஆரம்

புணைகட்டித்தெப்பத்தைப் புயற்கடலிற் தள்ளியே புரட்சிகள் செய்து பார்போன் புன்மையைப் போலியைப் பொய்புறம் கூறலைப் பொறுக்காதெதிர் கொள்ளுவோன்/அணைபாய்ந்த வெள்ளமென அநியாயங்கண்டதும் அடலேறுபோலெழுந்து/அவையடங்கவே செய்யும் ஆவேசத்தாற் கவிகள் அதிகம் புனைந்த் திறலோன்/ இணையற்ற சொற்கோவை எழில் சுவை அழுகுவணி இனிமையோடும் கருத்தாளமும்/இலகுவாய் இறுக்கமாய் விளக்கமாய்ச் சில வேளை எல்லாம் குழப்பமாக/துணைபோகும் பாவலன் தூரத்திருப்பவன் துய்யபணி செய்யும் தம்பி இக்பால் தரும் கவிதை மணியாரம ணிந்துநாம் இன்பத்திலே திளைப்போம்.

(நூலாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம

தகைமைக்கு ஏற்ற ஒரு
தராதரந்தான் கேட்டலைந்தேன்
மேலாக ஒன்றும் நான்
மிகைத்திடவே விரும்பவில்லை
நாலாக இருந்தவைகள்
நயந்து பத்தாக் கவில்லை
காலுக்கு ஏற்றனவாய்
கால் வீக்கம் போதுமப்பா
கூலிக்கு வந்தவனைக்
குறைவாகக் கணிப்பதுவா

தகைமைக்கு ஏற்ற ஒரு
தராதரந்தான் கேட்டலைந்தேன்
தூக்கியலைந்தலைந்து
வீக்கந் தலைக்கேறி
வீணாகவலை ஒரு பாரம்

ஆக்க முடிந்த உனை
அணுக சிறு நேரமில்லை
தேக்க மனம் விஞ்சி
தேடிடவும் மனக்குறைவு

தகைமைக்கு ஏற்ற ஒரு
தராதரந்தான் கேட்டலைந்தேன்
வீட்டுக் குறைகளுக்கும்
விருட்சமென நானொருவன்
நாட்டு நிலை கொடிது
நல்லவைக்கு நானொருவன்
தேட்டம் திருப்திபெறத்
தேடுதற்கும் நானொருவன்
பாட்டெழுதிக் குறை கண்டு
பாடிடவும் நானொருவன்

தகைமைக்கு ஏற்ற ஒரு
தராதரந்தான் கேட்டலைந்தேன்
ஏற்ற தொழிலொன்று
எண்ணிச் சுமையிறக்கி
வீற்று மனம் பொரிந்து
வீடு பெற உனை நினைந்து
சாற்றும் நிலைவரட்டும்
சார்ந்து வரேன் அதுவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று அடிக்கிறது
காட்டி விடு தூற்றுகிறேன்

தகைமைக்கு ஏற்ற ஒரு
தராதரந்தான் கேட்டலைந்தேன்
பக்தி நிறைவு பெற
பண்புக் கலைவளர
சக்தியுடையோரைக்
தனிவழியே குத்தி விட்டு
யுக்தி அவனிடத்து
உறைந்து விட்ட காரணத்தால்
முக்தி வழி திருத்த
முடியாது நேரமில்லை
தகைமைக்கு ஏற்ற ஒரு
தராதரந்தான் கேட்டலைந்தேன்

இவ்வூரைச் சேர்ந்த ஜுனூப் ஏ. இக்பால் இல்லற இணைவு காரணமாக நீண்ட காலம் தொடக்கம் தர்ஹா நகரில் வாழ்கிறார். தரமான பாவலர். இயற்கையோடியைந்து சீரிய உணர்வில் பல சீறல்களை ஏற்படுத்தும் போது கொதித்தெழுந்து கூக்குரலிடுவது அவரது ஆழ நோக்கின் அலங்காரமாகும். அவலங்கள் அழுத்தம் பெருது கருவிலே கலைக்கப்பட வேண்டுமென்ற முனைப்பு அவரது கவிதா வடிவங்களில் இனிமையோடி நிற்பதைஅவதானிக்க முடிகிறது. கவிதைகள் தவிர உருவகப் படைப்புகள், திறனாய்வுக்கட்டுரைகள், சமயக் கருத்தாக்கங்கள் முதலானவற்றைச் சுமார் மூன்று தசாப்தங்களாக எழுதுகிறார்.

புனைப் பெயர்களில் மறைந்து இஸ்லாமியக் கட்டுரைகளை முஸ்லிம்களின் வாழ்வோடியைந்த அரசியல் ஆரூடங்களிலே கலக்க விட்டு அவற்றை வெளிச்சங்காட்டி வருகிறார். வானொலியில் கவிதைப் பொழிவுகள் செய்வதுடன் இந்திய இதழ்களிலும் தம் விரல்களை விளையாட விடுகிறார். முஸ்லிம் கலைச் சுடர் மணிகள், மவ்லானா றூமியின் சிந்தனைகள் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

**வ. ஞான (அக்கரை) மாணிக்கம்**
**இதயம் பொங்க இசைப்போம்**

கணபதியும் கலந்தரும் கவிபாடும் கதிசாவும்
கனகம்மா லீலாவதியும் களுபண்டாவு மிணைந்து
இணங்கி நடக்கும் இனிய நல்வளமுள்ள
எழிலூர் அக்கரைப்பற்றதன் பாவலன்
குணநிறை செவ்வைக் கொள்கைப் பிடிப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுதொளிரும் குருகுலத் தோணுய்

மணக்கும்மலராய் மண்வளம் பாடும்

மாணிக்கம் அக்கரை மாணிக்கமளிக்கும்

இணக்கமான இன்சுவைக் கவிதையை

இதயம் பொங்க இசைத்து மகிழ்வோம்

(நூலாசிரியர்)

தாயகச் சிறப்பு

ஆழிதரும் கொண்டல் அதன் அணைப்புக்குள் சுகம் துய்க்கும்
அணிசேர்தெங்கு-சூழவரும் வாவியிலே இறுல் துள்ளும் கயல் நண்டு வரால்
வகைகள் தங்கும்-யாழிசை யோவென ஒலிக்கும் குரவைக் கூத்து நல்ல சுகந்
தருமின்பக்கிராமப் பாடல்-ஆழ் கடலில் குதிக்கும் மீன் அலைவாயில்கமம்
செழிக்கும் அக்கரைப்பற்றே

குலவழியில் கோத்திரத்தில் குடிவைப்பில் பல பட்டும் குணங்குன்றுத்தாய்
மடியினிலே அவளீன்ற மக்களெனப் பார் புகழ் முது சொத்தை நிச்சயிக்கும்
ஓர்கையின் விரல்களன்ன படியோம்பும் படியமைந்த-பண்பாட்டின் சிகரமாம்
அக்கரைப்பற்றே

இவர் தமக் கெனத்துறைகண்டு பாடுபவர். சமுதாய அவலங்களைம் இயற்கை எழில்களையும் கவிதைகளின் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளார். பல செய்தித்தாள்கள் சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. தற்போது அஞ்சலக முதல்வராய்க் கடமையாற்றுகிருர்.

அப்துல்லா ட்றவல் ஏஜன்ஸியின்
செயலதிபர் ஜனாப்
M.S.M. றாஸிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாம் (இறுதி) அதிகாரம்
### தகவற் களஞ்சியம்
### அக்கரைப்பற்று பொது விபரம்.
### 1990.04.01 இல் உள்ளபடி

| | | |
|---|---|---|
| 01. நிலம் நீர்ப்பரப்பு | | 150.2 ச.மீ. |
| 02. சனத்தொகை மொத்தம் | | 47 997 |
| 03. உணவு முத்திரை பெறுவோர் | | 12 988 |
| 04. உதவி அரசு அதிபர் பிரிவு | | 02 |
| 05. கிராம சேவைகள் அலுவலர் பிரிவு. | முஸ்லிம் | 29 |
| | தமிழ் | 20 |
| 06. கிராமங்கள் | | 35 |
| 07. நெற் செய்கைபண்ணும் நிலப்பரப்பு | ஏக்கர்- | 22 757 |
| பெரிய நீர்ப்பாசனச் செய்கை | ஏக்கர் | 17 141 |
| சிறிய நீர்ப் பாசனச்செய்கை | ஏக்கர் | 318 |
| மானாவாரிச் செய்கை | ஏக்கர் | 5 297 |
| 08. குடும்பங்கள் | | 9194 |
| 09. பிரதேச சபைகள் | | 02 |
| 10. காவல் நிலையம் | | 01 |
| 11. மத்திய கல்லூரி | | 01 |
| 12. மகா வித்தியாலயம் | - முஸ்லிம் | 01 |
| | - தமிழ் | 01 |
| | -சிங்களம் | 01 |
| 13. பாடசாலைகள் | - | |
| மொத்தம் | முஸ்லிம் | 20 |
| | தமிழ் | 09 |
| | சிங்களம் | 01 |
| 14. பேருந்துச் சாலை | | 01 |
| 15. மையக்காடு மன்றம் | | 01 |
| 16. பள்ளிவாசல்கள் | | 11 |
| 17. தக்கியாக்கள் (தைக்கா) | | 10 |
| 18. அறபிக் கல்லூரி | | 02 |
| 19. சைவக் கோயில்கள் | | 10 |
| 20. கிறிஸ்தவ ஆலயங்கள். | ரோ.க.மி. | 02 |
| | மெ.மி | 02 |
| 21. பௌத்தவிகாரை | | 01 |
| 22. ப.நோ.கூ.ச. மத்தியநிலையம் | | 01 |
| 23. அஞ்சலகம் | | 01 |
| 24. உப - அஞ்சலகம் | | 08 |
| 25. பொது வைத்தியசாலை | | 01 |
| 26. பொதுச் சந்தை | | 01 |
| 27. சுமநல சேவைமத்திய நிலையம் | | 02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 28. | இளைப்பாறுமகம் (இது தற்போது அழிக்கப்பட்டுள்ளது) | 01 |
| 29. | பெரிய குளங்கள் (இங்கினியாகலை, பன்னலகம, அம்பலம்ஓய) | 03 |
| 30. | பெரிய வாராவதிகள் (பட்டியடிப்பிட்டி, பனங்காடு, தாலிபோட்டாறு) | 03 |
| 31. | பொது மின் நிலையம் | 01 |
| 32. | தொலைபேசி பரிவர்த்தனை மையம் | 01 |
| 33. | (சின்ன) முகத்துவாரம் | 01 |
| 34. | வங்கிகள் (மக்கள்வங்கி, இலங்கைவங்கி) | 02 |
| 35. | நன்னீர் மீன்வளர்ப்பு (முருவோடை நீர்த்தேக்கம் | 01 |
| 36. | அழுத்தகங்கள் (ஆர்ஜே, பாத்திமா, செலக்ஷன், றாபி) | 04 |
| 37. | மரமரியும் ஆலைகள் | 07 |
| 38. | கல்விச் செயலகம் | 01 |
| 39. | வைக்கோல் கொள்வனவு நிலையம் | 01 |
| 40. | பொது நூலகம் | 01 |
| 41. | தனியார் மருந்தகங்கள் | 10 |
| 42. | பொது விளையாட்டுத்திடல் | 02 |
| 43. | மிருகவைத்தியசாலை | 01 |

## கிராமங்கள்

01. சாகாமம்.
02. கவடாப்பிட்டி.
03. அளிக்கம்ப (தேவபுரம்)
04. கண்ணகிபுரம்
05. புட்டம்ப (இது அழிக்கப்பட்டுள்ளது)
06. பனங்காடு
07. நர்ற்பதாம்கட்டை
08. கோளாவில்
09. ஆலையடிவேம்பு
10. பத்ர்நகர்
11. நூறாணியாத் தோட்டம்
12. வடிச்சலடி.
13. கடற்கரைத்தோப்பு
14. முகத்துவாரம்
15. வன்னியனார் தோட்டம்
16. அமரசூரியா தோட்டம்
17. மாரிமுத்துத் தோட்டம்
18. பச்சைப்பள்ளியடி.
19. முறாவோடை
20. மருதவெட்டுவான்
21. பள்ளியடிக்குளம்
22. பட்டியடிப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. பள்ளிக்குடியிருப்பு
24. இசங்கணிச்சீமை
25. ஜமாஅத் ஆலிம்நகர் (முதலைக்கல்)
26. இலுக்குச்சேனை
27. ஏழாம் கட்டை
28. சிறுநீத்தை
29. வேலமரத்துவெளி (அம்பலத்தாறு)
30. உப்புக்கரச்சி
31. காதிரியாத் தோட்டம்
32. அம்பலம்ஓய
33. நொறச்சோலை
34. பறக்கத்நகர் (பனையறுப்பான்கேணி)
35. றகுமத் நகர்

பெரிய நீர்ப்பரப்பு: பெரிய களப்பு, தில்லையாறு, சின்னமுகத்துவாரம், நீத்தையாறு.

குளங்கள்: சாகாமம், இலுக்குச்சேனை, நீத்தை.

குறிச்சிகள்: முஸ்லிம் பகுதி: 06
தமிழ்ப்பகுதி : 03 1988 வரை
சில கிராமங்கள் இப்பிரிவுகளில் அடங்காது தனித்து இயங்குகின்றன. எல்லாச் செயற்பாடுகளும், நிருவாக அமைப்புகளும் கிராம மட்டத்திலேயே நடைபெறுகின்றன. உதாரணம்: கோளாவில், பனங்காடு, இலுக்குச்சேனை, ஜமாஅத் ஆலிம்நகர்.

அம்பாறை மாவட்டத்தில் வதியும் மக்கள் தொகை

| மக்கள் | 1981 | 1971 |
|---|---|---|
| பௌத்தர்கள் | 1,44,779 | 81,762 |
| இந்துக்கள் | 74,328 | 57,346 |
| முஸ்லிம்கள் | 1,61,754 | 1,26,033 |
| கிறிஸ்தவர்கள் | 7,665 | 7,625 |
| ஏனையோர் | 261 | 24 |
| மொத்தம் | 3,88,787 | 2,72,790 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்க வழிபாட்டுத் தலங்கள்

## பெரிய பள்ளிவாசல்

கருங்கொடித் தீவில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிவாசல் இதுவாகும். கருங்கொடிகளை வெட்டி வெளியாக்கியே இதைக் கட்டினர். முதிரை மரங்களில் கவர் வெட்டி நட்டு சிறிய மண்டபம் போன்ற அமைப்பில் இப்பள்ளிவாசல் ஆரம்பிக்கப்பட்டது. இலுக்குப்புல்லைக்கொண்டு கூரை வேயப்பட்டது.

பள்ளிவாசலைச் சுற்றிக் காடுகள் காணப்பட்டன. சில காலத்தின் பின் வைக்கோல் வேயப்பட்டது. பக்கத்திலுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலுக்கும் பள்ளிவாசலுக்கும் கூரை வேய ஒரே சமயத்தில் இரு திறத்தவரும் வண்டிகளில் வைக்கோல் ஏற்றிவந்த வரலாறு பலருக்குத் தெரிந்திருந்தது.



சின்னப்பள்ளி வாயலின் உடைத்தகற்றப்பட்ட பழைமையான கட்டடம், கதவறைக்குள் ஷெய்குல் யமானி அல்வலீ அப்துஸ்ஸமது (சின்ன) மௌலானா அப்பா அவர்களின் ஸியாறம் உள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் கிடுகுகளினால் பள்ளிவாசலின் நாற்புறமும் அரைவாசிக்கு மறைக்கப்பட்டிருந்ததாகவும் அந்நேரம் அமீரலி வலி, ஹயாத்துக் கலந்தர் வலி ஆகியோர் இங்கு வருகை தந்ததாகவும் தெரிகிறது.

இவ்விருவணக்கத் தலங்களினதும் புனரமைப்பு ஒரே நேரத்தில் இருசமூகத்தினரதும் இணைப்பான இசைவுடன் நடைபெற்றுள்ளன. இவற்றில் நிகழும் சமய நிகழ்ச்சிகள், கலாசார விசேடங்கள், கந்தூரி, திருவிழாக்களில் இவர்கள் இனிய உணர்வோடு கலந்து சிறப்பிப்பது ஒரு மரபாக வளர்ந்து வந்துள்ளது.

சுமார் 1850 ஆம் ஆண்டளவில் சின்னப்பள்ளிவாசல் கட்டப்பட்டது. அதுவரை கருங்கொடித்தீவு மக்கள் எல்லோரும் பெரிய பள்ளிவாசலுக்குச் சென்று வழிபாடுகளைச் செய்தும், முக்கிய பல நிகழ்ச்சிகளிற் பங்குகொண்டும் வந்துள்ளனர்.

சின்னப்பள்ளிக்கு மேற்கெல்லையிலிருந்து தெற்கு வரை ஒரே நீர்ப்பரப்பாகக் காணப்பட்டது. வெள்ள காலங்களிற் தோணிகள் மூலம் பெரிய பள்ளிவாசலுக்குச் சென்றுவரல் வழக்கத்திலிருந்துள்ளது. இக்காலத்தில் மோக்கை, தவளைகளின் பேரொலி இப்பகுதியெங்கணும் கேட்டுக்கொண்டே இருக்கும். முதலைகளும் கணிசமான அளவு இவ் வெள்ளப்பிரவாகத்திற் காணப்படும்.

காட்டு மிருகங்கள் தொல்லையும் இருந்துள்ளது. அதற்காக பள்ளிவாசலின் எல்லைகளில் பெரும் நெருப்புக் கிடங்கு எரிக்கப்பட்டுள்ளது. இதுவே அக்கால வெளிச்சமாகும். ஆமணக்குக் கொட்டைகளை ஈர்க்கிலிற் கோர்த்தும் விளக்காக எரித்திருக்கிறார்கள். பள்ளிவாசலின் தொடக்கக் கால விளக்கும் இதுவாகத்தான் இருந்துள்ளது. சுமார் 45 வருடங்களுக்கு முன்பு, முன்பிருந்த பள்ளிவாசல் அமைப்பு நீக்கப்பட்டு வேறு வடிவத்தில் புனரமைக்கப்பட்டது. கல்முனைக்குடி ராசா ஓடாவியாரின் தலைமையிலியங்கிய ஒரு குழுவினரால் இப்பணி நிறைவேற்றப்பட்டது.

கடந்த 32 வருடங்களாக ஜும்ஆ பெரிய பெரியபள்ளிவாசலில் சஹீஹுல் புக்காரி ஹதீஸ் மஜ்லிஸ் கிரமமாக நிகழ்ந்துவருகின்றது. இவ்வருட மஜ்லிஸ் 1990.01.27 இல் ஆரம்பமாகி 1990.02.26 இல் நிறைவுற்றது. பிரதி தினமும் மக்ரிப் தொழுகைக்குப் பின் பயான் ஆரம்பமாகி (07.00-08.00) ஒரு மணித்தியாலம் விளக்கந் தரப்பட்டது.

இப் பள்ளிவாசலில் அஸ்-ஸெய்யித் ஸெய்னுல் ஆபிதீன் வலி (றஹ்) (பீசபீல் அவ்லியா) அடங்கப்பட்டுள்ளார்கள். இப்பெரியாரின் பெயரில் வருடாந்தக் கந்தூரி நடைபெற்று வருகின்றது. 1842ல் இவர் வெட்டுண்டு ஷஹீதானார்.

கருங்கொடித்தீவுக் கவியரசரான சேகுமதாறுப் புலவர் அவர்கள் இவ்வலி அவர்களைப் பற்றி அரியதொரு முனாஜாத்தைப் பாடியுள்ளார். தவிர கருங்கொடித்தீவுப் புலவரான அசனார்லெவ்வை இவ்வலி பேரில் அருமையானதொரு காவியமும் யாத்துள்ளார்.

பெரியபள்ளியில் கந்தூரியொன்று கொடுக்க ஆயத்தஞ் செய்ததாகவும், பின்னாலேற்பட்ட சில அசம்பாவிதம் காரணமாக ஆக்கிய சோறு பகிரப்படாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிகளில் ஏற்றப்பட்டுப் பட்டியடிப்பிட்டியாற்றில் கொட்டப்பட்டதாகவும் அறியக்கூடியதாயுள்ளது.

1947.04.12 இல் பெரியபள்ளிவாசலில் நடைபெற்ற ஒரு விழாவில் இரு குழுவினர்களுக்கிடையிலேற்பட்ட கருத்துமாற்றங் காரணமாகப் பெரிய கைகலப்பொன்று ஏற்பட்டு அது வழக்காடு மன்றம்வரை சென்றுள்ளது.

பர்ஸன் ஜி மவ்லிது ஓதிக்கொண்டிருக்கும் போது இவ்வசம்பாவிதம் ஏற்பட்டதால் அதற்கு ''பர்ஸன்ஜிக் குழப்பம்'' என்ற நாமத்தைப் பொதுமக்கள் சூட்டினர். முக்கிய பிரமுகர்களான டொக்டர் இமாம். சேர் ருசிக்பரீத். ஜனாப் ரி.பி. ஜாயா. ஜனாப் ஏ.எம்.ஏ. அஸீஸ் (ஸி.ஸி.எஸ்.) ஆகியோர் இவ்விழாவிற் கலந்திருந்தனர்

வழக்காளிகள் சார்பில் சட்ட மேலாளர்களான பறிஸ்ரர் வேலுப்பிள்ளை, திரு தவராஜா. திரு. கெனமன் ஆகியோரும் எதிரிகள் சார்பில் திரு. எஸ். சடேசன். திரு. உலகசேகரம் ஆகியோரும் வாதாடினர். மட்டக்களப்பு உயர் வழக்குமன்று இவ்வழக்கை விசாரணை செய்தது. 1948 இல் திர்ப்பு வழங்கப்பட்டது. ஆறு பேருக்கு மறியல், ஏனையோர் 50 ரூபா அபராதத்துடன் கூடிய நன்னடத்தைப் பிணையில் விடப்பட்டனர்.

புதுப்பள்ளி வாசல் கட்டடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையாளர்-மரைக்காயர்மார்கள்

01. அல்-ஹாஜ் எஸ்.எல்.எம். ஹனீபா மவ்லவி, (தலைவர்) பணிவிட்டுக்குடி
02. ஜனாப் எஸ்.எல். பறக்கத்தலி ஆசிரியர், (செயலாளர்) வடக்கனாகுடி.
03. ஜனாப் ஏ.எம். இஸ்மாயில், (பொருளாளர்) ராசாம்பிள்ளை குடி.
04. ஜனாப் எம்.ஐ.ஏ.ஆர். புகாரி, (உபதலைவர்) வட்டுநாச்சிகுடி
05. ஜனாப் எம்.எம். உமறுலெவ்வை, (உபதலைவர்) வெள்ளரசன்குடி
06. ஜனாப் எம். ஹாமீதுலெவ்வை, (ராசாம்பிள்ளைகுடி
07. ஜனாப் யு.எல்.எம். அலியார் மனேஜர், (ராசாம்பிள்ளைகுடி
08. ஜனாப் ஏ.எல். முஹம்மதிஸ்மாயில், (வட்டுநாச்சிக்குடி)
09. ஜனாப் ஏ.எம். ஜஃபர், (டி.ஓ) வட்டுநாச்சிக்குடி
10. அல்-ஹாஜ் கே.எம். லெவ்வைத்தம்பி, வட்டுநாச்சிக்குடி
11. அல்-ஹாஜ் ஏ.எல். உமறுலெவ்வை, (வட்டுநாச்சிக்குடி)
12. அல்-ஹாஜ் எஸ்.எம். மீராமுஹ்யித்தீன், (பணிவிட்டுக்குடி)
13. அல்-ஹாஜ் எம்.என்.எம். மீராசாஹிபு, (பணிவிட்டுக்குடி)
14. ஜனாப் ஏ.எம்.எம். லியாவுத்தீன், (கி.சேவ) பணிவிட்டுக்குடி
15. ஜனாப் கே.எம். முறுசலீன், (வெள்ளரசன்குடி)
16. ஜனாப் ஐ.எம். அபூபக்கர் ஆசிரியர், (வெள்ளரசன்குடி)
17. ஜனாப் ஏ.பி.எம். அபூபக்கர், (வடக்கனாக்குடி)
18. ஜனாப் ஏ. முஹம்மதிபுறாலெவ்வை, (மூத்தநாச்சிக்குடி)
19. ஜனாப் ஏ.எம். அபூபக்கர் (அதிபர்), சுல்த்தான் பிள்ளைகுடி
20. அல்-ஹாஜ் எம்.எம்.ஏ. லத்தீப் மவ்லவி, (சுல்த்தான்பிள்ளைகுடி)
21. ஜனாப் எம்.எல்.எம். இப்றாலெவ்வை, (மாப்பிள்ளைமரைக்கார்குடி)
22. ஜனாப் எஸ்.ஏ.எம். கபூர் (ஆசிரியர்), மாமனாப்பிள்ளைகுடி)
23. ஜனாப் எம்.ஏ. ஷரிபுத்தீன், (அம்மாநாச்சிக்குடி)
24. அல்-ஹாஜ் எஸ்.எம்.அலியார், (தச்சனார்குடி)
25. ஜனாப் ஏ.பி.எம். ஷரிபுத்தீன், (மாந்தறாகுடி)
26. அல்-ஹாஜ் எம்.ஐ. முஸ்தபா, (சங்கரப்பத்தான்குடி)
27. ஜனாப் எஸ்.எம்.ஏ. முஹையதீன், (அதிபர்) காலிங்காகுடி)
28. ஜனாப் எம்.ஏ. ஜஃபர் (கி.சேவா), இரணசிங்கமுதலிகுடி)
29. ஜனாப் யு.கே.எம். சாலித்தம்பி, (எலவக்குடி)
30. ஜனாப் எம்.பி. கதிர்லெவ்வை மனேஜர், (மரைக்காநெய்ந்தகுடி)

கதிப்மார் :- அல்-ஹாஜ் கே. உதுமாலெவ்வை மவ்லவி
ஜனாப் எம்.ஏ.எம். அபூபக்கர்

முஅத்தின்மார் : ஜனாப் யு.எல். முகம்மதிஸ்மாயில்
ஜனாப் எம். கலந்தர்

அதிகாரிமார் :- ஜனாப் யு.எல். முகம்மதிஸ்மாயில்
ஜனாப் எம். கலந்தர்

தகவல் :- ஜனாப் எஸ்.எல். பறக்கத்தலி (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னப் பள்ளிவாசல்

இப்பள்ளிவாசல் அண்ணளவாக 1850 இல் சின்னமவ்லானா எனும் அஷ்ஷெய்க் அல்வலி அப்துஸ்ஸமத் மவ்லானா அவர்களின் முயற்சியால் கட்டப்பட்டது. பெரிய பள்ளிக்கு அடுத்ததாக இப்பள்ளிவாசலே அமைக்கப்பட்டது. சின்னமவ்லானா அவர்களின் வீடு பள்ளியின் எதிர்ப்பக்கத்தில் அமைந்திருந்தது. அன்னாரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினர் 1889 வரை பள்ளிவாசலைப் பரிபாலித்து வந்தனர்.

முதன்முதலில் சின்னமவ்லானா அவர்கள் குத்பாப் பிரசங்கம் நிகழ்த்திப் பள்ளி வாசலைத் திறந்துவைத்தார். அதன்பின் ஷம்சுல் உலமா அல்-ஆலிம் முஹம்மத் அபூபக்கர் லெவ்வை (கலிபத்துல் காதிரி) அவர்கள் பேஷ் இமாமாகக் கடமையாற்றி வந்தார். 1924 இல் இருந்து அன்னாரது நான்காவது புதல்வரான அப்துர்றஷீத் (சீனி) ஆலிம் (கலீபத்துல் காதிரி) அவர்கள் பேஷ் இமாமாக நியமனம் பெற்றார். அன்னாருக்குப் பிறகு இவரது தமையனான முஅல்லம் அப்துஸ்ஸமத் (மக்கத்தார்) ஆலிம் இப்பதவியில் இருத்தப்பட்டார். இவர் மிகக் கூடிய காலம் இப்பதவியிலிருந்தார்.

பிரதி வெள்ளி தோறும் சுபஹ் தொழுகைக்குப் பின் புர்தா ஓதிவரும் ஒரு நடைமுறை இங்கிருந்தது. ஸ்தாபகரான சின்னமவ்லானா வலி (றஹ்) அவர்கள் 1889 இல் வபாத்தான பின் இங்குள்ள அறையொன்றில் அடக்கம் செய்யப்பட்டார். தற்போது திறந்த வெளியறையாக இது விளங்குகிறது.

இவரது கபுறடியில் உண்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. அதிற் சேரும் பணத்தைக் கொண்டு பிரதி வருடமும் பெரிய அளவில் நார்சா வழங்கப்பட்டு கத்முல் குர்ஆன் தமாம் செய்யப்படுகின்றது.


பொதுச் சந்தையில் அரிசி விற்கும் பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பள்ளிவாசல்களிலும் உள்ள நடைமுறைப்படி இங்கும் ஒவ்வொரு குடியிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட மரைக்காயர் சபையால் பள்ளிவாசல் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மரைக்காயர் சபை வக்பு ஆணையாளரினால் நம்பிக்கையாளர் சபை எனச் சிலவருடங்களுக்கு முன் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் நிலத்தின் வடக்கு. தெற்குப் பகுதிகளில் கடை அறைகள் கட்டப்பட்டுச் சுமார் 15 வருடங்களாக வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பள்ளிக்குச் சொந்தமான கட்டடமொன்றில் அதன் பணியகமுள்ளது. ஜனாப் பை.வ.வி. முகம்மதுத்தம்பி வட்டைவிதானை அவர்கள் கடந்த நாற்பது வருடங்களுக்கு முன்

இப்பள்ளிவாசலின் பிரதம மரைக்காயராய் இருந்து அருந்தொண்டாற்றியுள்ளார். அவரது ஆணைக்கு மக்கள் கட்டுப்பட்டு நடந்தனர். அன்னாரது மகளின் புதல்வர் ஜனாப் எம்பிஎம். மக்கின் அதிபர் (ஓய்வு) குவாஸி. ஜே.பி அவர்கள் இதன் நிருவாகச் செயலாளராகப் பணிபுரிகின்றார்.

இப்பள்ளிவாசலில் மூன்று கிழமைக் கொருமுறை முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு முடிவெடுக்கப்படுகின்றன. 1981.10.29 இல் இருந்து கடந்த 09 வருடங்களாக ''ஸஹீஹ் முஸ்லிம்'' பயான் இங்கு நடைபெற்று வருகின்றது. கடந்த வருடம் 1989.08.04 இல் தொடங்கப்பட்ட பயான் (விரிவுரை) 1989.09.02 இல் முடிவுற்றது. அஸர் தொழுகையின் பின் ''முஸ்லிம்'' ஓதப்பட்டு மஃரிப் தொழுகைக்குப் பின் பயான் சொல்லப்படும்.

1955 இல் புதிய பள்ளிவாசற் கட்டடத்துக்கான திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கான செயலவையொன்று பொதுமக்களால் 1961 இல் தெரியப்பட்டது. அதன் தலைவராக ஜனாப் எம்.எஸ்.எம். முஸ்தபா உடையார் அவர்களும் நிறைவேற்றுச் செயலாளராக ஜனாப் ஏ.ஆர்.எம். சலீம் அதிபர் அவர்களும் கடமையேற்றனர். பின் செயலாளரவர்கள் உத்தியோக உயர்வுடன் இடமாற்றஞ் செய்யப்பட்டதும் ஜனாப் எம்.ஏ.எஸ். அகமது அதிபர் அவருக்குப் பதிலாக நியமனம் பெற்றார்.

பள்ளிவாசல் கட்டடத்துக்கான வரைபடம். தொழில்நுட்பத் தொழிற்பாடுகளை சம்மாந்துறையைச் சேர்ந்த ஜனாப் எம்எம். இஸ்மாயில் எந்திரி அவர்கள் கையேற்று நடாத்தினார்.

கட்டட அத்திவாரத்திற்கான கூரான மரக்கட்டைக்கருக்களை நிலத்துள் அடித்து இறுக்கும் கஷ்டமான பணியில் மக்கள் பலர் மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இப்பணி 1963 இல் ஆரம்பிக்கப்பட்டது. கருவடிக்குப் ஒலி மாதக்கணக்கில் ஊரெல்லாம் ஒலித்துக் கொண்டிருந்தது. ஊர்மக்களின் உதவியுடன் இப்பள்ளிவாசற் கட்டடம் மாடிமனையாக எழுப்பப்பட்டுள்ளது. அந்நேரம் போக்குவரத்து, முஸ்லிம் சமய, கலாசார அமைச்சராகவிருந்த அல்-ஹாஜ் எம்எச்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மதவர்கள் மேல்மாடி அமைப்பின்போது ஓரளவு பணம் தந்துதவினார். இங்குள்ள போடிமார், வர்த்தகர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர், நலன்விரும்பியோர் பலரும் பள்ளிவாசற் கட்டடத்துக்கான நன்கொடை வழங்கினர்.

சின்னப்பள்ளிவாசல் என்ற பெயர். 1981 இல் இருந்து பட்டினா ஜும்ஆப் பள்ளிவாசல் என மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

### நம்பிக்கையாளர்-மரைக்காயர்மார்

தலைவர் : அல்-ஹாஜ் ஏ.எல். முகையதீன்பாவா, வ.வி. எலவக்குடி.

நிருவாகச் செயலாளர் : ஜனாப் எம்.பி.எம். மக்கீன், அதிபர் (ஓய்வு) குவாஸி, ஜே.பி. ராசாம்புள்ளகுடி

## உறுப்பினர் :

01. ஜனாப் சி.எம்.எம். இஸ்மாயில் (நெய்னா ஓடாவி குடி)
02. ஜனாப் எம்.எஸ். அபுல்ஹசன் ஆசிரியர் (மாமனாப்புள்ளகுடி)
03. அல்-ஹாஜ் எம்.பி. உதுமாலெவ்வை (ராசாம்புள்ளகுடி)
04. ஜனாப் ஏ.பி.எம். ஹனீபா (மாப்புளமரைக்கார்குடி)
05. அல்-ஹஜ் எஸ்.எல்.எச்.ஏ. கரீம் (எலவக்குடி)
06. ஜனாப் ஐ.எல். ஆதம்லெவ்வை (ராசாம்புள்ளகுடி)
07. ஜனாப் எம்.சி.எச். மீராலெவ்வை (பணியவீட்டுக்குடி)
08. ஜனாப் ஏ.ஏல்.எம். முகையதீன் (பொன்னாச்சிக்குடி)
09. ஜனாப் எஸ்.எல்.எம். அபூபக்கர், அதிபர் (எலவக்குடி)
10. ஜனாப் ஏ.எல். ஆதம்லெவ்வை (ராசாம்புள்ளகுடி)
11. அல்-ஹாஜ் எம்.ஐ. முகம்மதலியார் (படையாண்ட குடி)
12. ஜனாப் ஏ.சி. அப்துல் கபூர் (எலவக்குடி)
13. ஜனாப் எம்.ஐ. சுபைதீன் (ராசாம்புள்ளகுடி)
14. ஜனாப் சி.எம்.எம்.ஏ. றபீக் (தச்சனா ஓடாவிகுடி)
15. ஜனாப் எம்.எம்.ஏ. குத்தூஸ், மவ்லவி (ராசாம்புள்ளகுடி)
16. ஜனாப் எம். இப்றாலெவ்வை (ராசாம்புள்ளகுடி)
17. ஜனாப் ஐ.எல்.எம். இஸ்மாயில் (வடக்கனாகுடி)
18. ஜனாப் எஸ்.எல்.எம். இஸ்மாயில் (வட்டுக்கத்தறக்குடி)

முஅத்தின்மார் : ஜனாப் : ஏ. நாகூர்த்தம்பி. 33 வருட சேவை.
ஜனாப் : ஏ.பி.எம். இஸ்மாயில்

அதிகாரிமார் ஜனாப் : கே.எல்.எம். மீராசாகிப்
ஜனாப் : எம்.பி:எம். ஹனீபா


கதீப்மார் : ஜனாப் :எம்.எல். கலந்தர்லெவ்வை மவ்லவி
அல்-ஹாஜ் அப்துல்கபூர் லெவ்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் இனிய பணியாளன். ஜனாப். ஏ.ஆர்.எம். அபூபக்கர், ரீ.ஏ. இவர் அல்-ஹாஜ். அப்துர்றஹீம் வ.வி. அவர்களின் புதல்வராவார். கல்லோய அபிவிருத்திச் சபை, ஆற்றுப்பள்ளத்தாக்குஅபிவிருத்திச் சபைகளிந் தொழில்நுட்ப அதிகாரியாய்க் கடமையாற்றினார். 1958 இல் கடமையை ஏற்றார். இவரது சேவைக் கலத்தில் அனேக விவசாயிகள் இவரின் வாயிலாக அனேக உதவிகளைப் பெற்றார்.

மிகவும் நெருக்கடியான காலங்களில் மிகவும் புத்தி சாதுரியமாகத் தொழிற்பட்டு இப்பகுதியின் அபிவிருத்திக்குமறக்கொணுப் பணிகளைச் செய்தார். தடுமாறிய விவசாயிகளுக்கு வழிகாட்டியாகவும் உதவி வழங்குநராகவும் இயங்கினார். கருங்கக் கூறின் விவசாயத்துறையைச் சார்ந்த மக்கள் சகல காணி, நீர்ப்பாசனம், விசாவிப்புப் பணி ஆகியவற்றிற்கு அன்னாரின் உதவியையே பெரிதும் நம்பி இருந்தனர். அவரும் மக்கள் தொண்டனாய்ச் சமூகத்தின் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தார்.

அக்கரைப்பற்றுப் பகுதியின் விவசாயப் பிரச்சினைகளை ஆழமாகச் சிந்தித்து அவற்றை நிவர்த்திக்கப் பாரிய திட்டமொன்றைச் செயற்படுத்த ஆவன செய்திருந்தார். எனினும் அவரின் சக்திக்கு மீறிய பாதகமான சூழ்நிலை இத்திட்டத்தைப் பின்னடையச் செய்திருந்தது. அவரது கடமையில்குறுக்கிட்ட வேண்டத் தகாத சில விபரீதங்களால் 1976 இல் தமது பதவியிலிருந்து விலகினார். 1977 இல் நடந்தேறிய பொதுத் தேர்தலின்போது ஏற்பட்ட பாதகமான சூழ்நிலையில் 44 ஆவது வயதில் இனந்தெரியாத சிலரால் சுடப்பட்டு வபாத்தானார். அன்னாரது இழப்பு விவசாயப் பகுதியான இப்பகுதி வாழ் ஏழை மக்களுக்குப் பெருந்தாக்கமாய் அமைந்துள்ளது.



M. I. றுசெய்க் M. I. RUZAICK



A. M. A. ஷபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாப். அலி உதுமான் அவர்களின் அகால மரணம்

வடக்கு - கிழக்கு மாநில சபையின் அம்பாறை மாவட்ட உறுப்பினரான ஜனாப். எம்.ஐ. அலி உதுமான், , , 1989.08.01 இல் விடுதலை இயக்கமொன்றைச் சேர்ந்த இனந்தெரியாத ஒருவரால் சுடப்பட்டு வபாத்தானார். இவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கொங்கிரஸ் உறுப்பினராவார். முன்பு ஆசிரியராகக் கடமையாற்றினார். சமூக உணர்வும், சேவைச் சிறப்பும் கொண்டிருந்த இவர் தன்னலங் கருதாது மக்கள் வாழ்வின் விடிவுக்காக அரும்பாடுபட்டுழைத்தார்.

இவரது வளர்ச்சியை விரும்பாத ஒரு சிலர் இம்முடிவுக்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது. அன்னாரின் நினைவாக அக்கரைப்பற்றுச் சின்னப்பள்ளி வாசல் வடக்கு வீதிக்கு அலி உதுமான் வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவருக்கு வயது 43 ஆகும். இவர் ஒரு கலைமாணிப்பட்டதாரியாவார்.

## உயர்திரு எம்.எஸ். தர்மரத்தினம் எம்.எஸ்.சி (1937-1947)

அக்கரைப்பற்றின் அணிகலனாக இப்பெரியார் திகழ்ந்தார். பெயருக்கேற்ற தருமஞ் செய்யும் ரத்தினமணியாகச் செயற்பட்டார். இனப்பாகுபாடென்பது இவரது ஏட்டில் இல்லை. ஏழைகளின் இனிய தோழன். அரசப் பேரவை உறுப்பினராக 10 வருடங்கள் கடமையாற்றினார். அக்காலம் இவ்வூரின் பொற்காலமாகும். ஆசிரியர் காலாசாலை, பனங்காட்டு மரப் (தில்லையாற்று) பாலம். பட்டியடிப்பிட்டி மரப்பாலம் ஆகியன இவரது பெரும் முயற்சியால் உருவாகின. பல்துறைகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உழைத்தார். பெரும் நிலச்சுவாந்தரான இம்மகான் அவற்றைப் பொதுமக்களின் உபயோகத்துக்காக விட்டிருந்தார்.

தமது வயற்காணிகளைக் குத்தகை பெறாது செய்வதற்குப் பலருக்குக் கொடுத்தார். தோட்டங்கள் சில சனங்களின் குடியிருப்புக்காகப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவர் அரசவை அங்கத்தவராய் இருந்து அவர்களால் பெரிதும் பாராட்டுப் பெற்றார். இப்பெருமகன் இக்கலி யுகத்தில் காண முடியாத ஒப்பற்ற ஒரு திருமகனாவார்.

## ஜனாப் எம்.ஐ.எம். அப்துல் மஜீத், எம்.பி

இவ்வூரின் முதன் முதல் தெரிவான மக்களவை (பாளிமன்ட்) உறுப்பினராக அன்னார் கடமையாற்றினார். அவரது இனிய, எல்லோரிடமும் இசைவு பெற்று, இன்முகம் காட்டும் பண்பினைக் கொண்டிருந்தமைக்காக மக்கள் அவரை 'கவீற்' மஜீத்' என இனிமையாக அழைத்தனர். அன்னாரது சேவைக்காலத்தில் இவ்வூர் பல நன்மைகளை அடைந்தது. அவரது இல்லத்தில் மக்கள் திரண்டு கொண்டிருந்தனர். 1960-1965 வரை எம்.பி யாக இருந்த அன்னார் 1970 இல் வபாத்தானார். இவருக்கென ஒரு தனி இடம் இங்கு எப்போதும் இருந்து கொண்டிருக்கும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்று ஊராட்சி மன்றத் தவிசாளர்கள்

1935 ஜனாப். ப.மு. ஆதம்லெவ்வை உடையார்.
1939 திரு. க.மு. ஞானப்பிரகாசம் (த.ஆ)
1942 திரு. எஸ். மானாகப் போடி.
1945 ஜனாப். அ.ம. முத்து மீராலெவ்வை.
1948 ஜனாப். எம்.வீ.வீ. அகமட்லெவ்வை. (ஆலீம் வட்டான)
1951 ஜனாப். யூ.எல்.எம். ஹாசீம் ஆலிம்.
1954 ஜனாப். அ.ம. முத்து மீராலெவ்வை.
1957 ஜனாப். எம்.எம். முகம்மதபூபக்கர்.
1961 ஜனாப். ஏ.ஆர்.எம். இப்றாஹீம்.
1964 ஜனாப். எம்.எஸ்.எம். முஸ்தபா உடையார்.
1965 ஜனாப். ஏ.ஆர்.எம். இப்றாஹீம்.
1968 திரு. பீ.ஏ.ஜே. காசிநாதர் (நிருவாகி)
1969 திரு. அன்டன் அல்பிரட் (நிருவாகி)
1970 ஜனாப். ஏ.ஆர்.எம். இப்றாஹீம்.

## புகழ்பெற்ற விட வைத்தியர்

அக்கரைப்பற்று கோளாவிலைச் சேர்ந்த வேலன்பரிகாரி காரணி என்னும் பெண்மணி பிரபல விடவைத்தியராவார். தந்தையாரின் ஆசீர்வாதத்துடன் சுமார் 15 வயதில் வைத்தியம் செய்ய ஆரம்பித்தார். இலவசமாகவே சாதி, சமயம், குலபேதம் பாராது தமது பணியைத் தொடர்ந்தார். பணம் பெற்றுச் செய்யும் விட வைத்தியம் பலன்தராது என்ற ஒரு ஐதீகம் உண்டு.

இரவு பகலாகச் சோர்வின்றி இதிலீடுபட்டார். விடமேறியதும் நினைவிழந்து உணர்வின்றிக் கிடந்த பெருந் தொகையான எண்ணிக்கையில் உள்ளவர்களுக்கு நசியமிட்டும், கலிங்கம் இட்டும், வேப்பிலையடித்தும் சிகிச்சை செய்து சுகமாக்கினார். ஒரு சமயம் அம்பாறை மாவட்டக் கச்சேரியில் கடமைசெய்த உதவி அரசாங்க அதிபரான திரு. எம். திஸ்ஸநாயக்கவிடம் தீண்டியதால் உயிருசலாடிக் கொண்டிருந்த வேளை இவரின் கவனிப்பில் உயிர்ப்புப் பெற்றார். இதற்காக அவர் கொடுத்த பெருந்தொகைப் பணத்தைக் காரணியவர்கள் ஏற்கவில்லை.

அதனால் அப்பணத்தைக் கொண்டு நோயாளர் மண்டபமொன்று அமைத்த திஸ்ஸநாயக்க அதை நன்கொடையாக வழங்கித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். எல்லோருக்கும் இனியராகவும், அன்புப் பணிவிடை செய்பவராகவும் பெயர் பெற்றிருந்த அம்மையார் 1989.10.28 ஆந் திகதி காலமானார். அன்னாரது மரணச் செய்தியைக் கேட்ட மக்கள் அலையெனத் திரண்டு இறுதிக் கிரியைகளிற் கலந்து கொண்டனர். இவருக்கான நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பலர் முயன்று வருகின்றனர். இவர் ஜே.பி ஆகவுமிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வெள்ளையன் வைத்தியர் :

இவர் கோளாவியைச் சேர்ந்தவர். அதிகமான வாகடப் பனையோலை ஏடுகளைச் சம காலத்தில் வைத்திருந்தார். மாந்திரீகஞ் செய்து பேயோட்டல், பைத்தியத்திற்கான சிகிச்சை மற்றும் பல வைத்தியங்களிற் பெயர் பெற்றிருந்தார். அவர் வீடு ஒரு கிராம வைத்திய நிலையமாகக் காட்சி தரும். வைத்தியச் சடங்கு முறையில் கண்டிப்பானவர்.

### முறிவு வைத்தியர்கள் :

திரு. த. மயில்வாகனம் (வாழையன்)
ஜனாப். ஏ. எம். இப்றாலெவ்வை

### கிராம சேவகர் பிரிவு :

அக்கரைப்பற்று முஸ்லிம் பகுதியின் 6 குறிச்சிகளுக்கு ஏற்கனவே 4 கிராம சேவகர்கள் கடமையாற்றினர். அவை, 1ஆம் குறிச்சிக்கு 1ம், 2ம் 3ம் குறிச்சிக்கு 1ம், 4ம் 5ம் குறிச்சிக்கு 1ம், 6ம் குறிச்சி, புதுக் குடியிருப்புக்கு 1ம். மொத்தம் 4.

இது 1989.11.01. முதல் 28 பிரிவுகளாக ஜனசக்தித் திட்டத்தின் கீழ் பிரிக்கப் பட்டுள்ளது. முஸ்லிம்கள் 25 955 ஆகும். 9191 குடும்பங்கள் உண்டு தமிழ் மக்கள் குடும்பங்கள் 4 300 ஆகும். குடும்பத்துக்கு சராசரி 5 உறுப்பினர்கள் உளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் ஜனாப் அ.ஸ. அப்துஸ்ஸமத்

இவர் பிரபல எழுத்தாளராகத் திகழ்கின்றார். மதிப்பு மிக்க மௌலானா, உலமாக்களைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையர் ஜனாப் அப்துஸ்ஸலாம் ஆலிம்; தாயார் ஆசியா உம்மா. 7.9.1929 ல் பிறந்த இவர் பயிற்றப்பட்ட ஆசிரியரும் கலைமாணி சிறப்புப்பட்டதாரியுமாவார்.

முஸ்லிம் எழுத்தாளர்களின் முன்னோடிகளில் இவருக்குக் காத்திரமான இடமுண்டு. அனேக சிறுகதைகள், தொடர்கதைகள், விமரிசனக் கட்டுரைகள், இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். கலைமான் பல்கீஸ், சிறா இன்பம், முற்றத்து மல்லிகை (கவிதைத் தொகுப்பு) முதலிய நூல்களையும், இலக்கியப் பொய்கை எனும் 4 தொடக்கம் 8 ஆம் வகுப்பு வரையிலான 5 நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

க.பொ.த. (சா/த) வகுப்பு மாணவர்களின் உபயோகத்துக்காக இஸ்லாம் வழிகாட்டி, தமிழ் இலக்கிய விளக்கத்துணை, தமிழ் இலக்கிய வினா விடை எனும் வெளியீடுகளையும் எழுதினார். 'எனக்கு வயது பதின்மூன்று' எனும் சிறுகதை நூலும் இவருடையது. 1979 இல் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். கணிசமான அளவு நூலாய்வு செய்துள்ளார். பிறைப்பூக்கள் எனும் கதைப் புத்தகமொன்றும் இவரால் வெளியிடப்பட்டது. பல சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளார்.

எழுத்துத் துறையில் மணிவிழாக் கண்ட ஆனாஸானா தமது 60வது வயதில் 7.9.89 இல் ஓய்வு பெற்றுள்ளார். இந்தியாவிலும் இவரது எழுத்துப் பணிக்கு நல்ல வரவேற்புள்ளது. மணிவிழாக் காணும் இவரையிட்டு கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் பாடிய கவிதைகள் அம்பாரை மாவட்ட மக்கள் கொங்கிரஸின் குரலான 'செய்திகளும் நோக்குகளும்' எனும் வெளியீட்டில் வெளிவந்துள்ளது. அதில் சிலதை இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

மணிவிழாக் காணும் நல்ல
மனிதரைப்பாடுகின்றோம்
இனிவிழா வேண்டாமென்று
இவர் சொல்லி மறுத்தபோதும்
தனிவழியமைத்து எழுத்தில்
தகைமையே பெற்றிருந்த
இனியவர் 'அஸ' வை நாம்
இதயத்தால் போற்றுகின்றோம்.
பனிமலர்நாவல் தந்து
பாராட்டும் பரிசும் பெற்றார்
கனவினில் பூக்கள் கண்டு
கனதியாம் கதைகள் தந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுப் பள்ளிவாசல்

இப்பள்ளிவாசல் அக்கரைப்பற்றில் மூன்றாவதாகக் கட்டப்பட்டதாகும் இப்பள்ளிப் பகுதியிலிருந்து பெரியபள்ளிக்குத் தொழுகைக்காகப் போவதிலுள்ள சிரமத்தைக் கருத்திற் கொண்டே இதைக் கட்டினர். 1906 இல் ஜுனியர் போடியாரின் மகன் பக்கீர்ப்போடியார் அன்னாரது புதல்வர் ஆதம்லெவ்வைப் போடியார் (சம்புக்களப்புவட்டான) அவர்களின் பாரிய முயற்சியால் இது நிறுவப்பட்டது.

பள்ளிவாயில் கட்டடம் முடிந்து ஓடு வேயத் தயாரானதும் ஓடு பெறுவதிலேற்பட்ட தாமதங் காரணமாகக் கூரைக்குக் கிடுகு வேயப்பட்டது. சில மாதங்களின் பின் சில எதிராளிகள் இப்பள்ளிக்குத் தீமூட்டினர். இதன்காரணமாக 1909 இல் மக்கா செல்லவிருந்த சம்புக்களப்பு வட்டைவிதானை அவர்களின் பிரயாணம் தடைப்பட்டது.

அதன் பின்னர் 1910 இல் இக் கூரை திருத்தப்பட்டு ஓடு வேயப்பட்டது. இவர் இப்பள்ளிவாசலைக் கட்ட மேற்கொண்ட முயற்சியைச் சிலர் விரும்பவில்லை. அதனால் இதைக் கட்டிமுடிப்பதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. என்றாலும் இவர் தனது முயற்சியை மேலும் வலுப்படுத்திக் கொண்டாரே தவிர இம்மியும் தளரவில்லை.

இறுதியாக இப்பள்ளிக்குரிய நிலம், கட்டடம், தளபாடங்கள், பொருள்கள் மற்றும் ஆவணங்கள் எல்லாம் ஆதம்லெவ்வைப் போடியார் அவர்களால் பொதுவாக ''வக்பு'' செய்யப்பட்டது. இதற்காகச் சில இறைபக்தியுள்ள நேர்மையாளர்களைக் கொண்ட ஒரு செயலவை தெரியப்பட்டு இப்பணி நிறைவேற்றப்பட்டது.

''வக்பு ''வைபவத்தின்போது ஒரு பொதுச்சபை கூட்டப்பட்டு ஆதம் லெவ்வைப் போடியாரால் உருக்கமான வலியுத்துக்களடங்கிய சொற்பொழிவொன்று நிகழ்த்தப்பட்டது. அதில் நம் முதல்வேலை இறைவணக்கமேயென்றும் பெரியபள்ளி வாசலுக்குத் தொழுகைக்காகச் செல்வதிலுள்ள தூர, கால நிலைக் கஷ்டங்கள் பற்றியும் எதிர்காலத்தில் இப்பள்ளிவாசல் பரிபாலம் எப்படியிருக்க வேண்டுமெனவும் தாம் புனித ஹஜ் கடமைக்காக மக்கா செல்லவிருப்பதாகவும் பல்வேறு கருத்துக்கள் இடம்பெற்றிருந்தன.

1910 இல் இவர் மக்கா சென்றார். ''ஷாம் சேவிஸ்'' என்ற கப்பலில் அல்-அக்சா சென்று அங்கிருந்து மக்கா செல்லவிருப்பதாக தம் மனைவிக்குக் கடிதம் அனுப்பினார். அந்நாரின் துணைவியாரான மைமூனா உம்மா தன் கணவரின் கடிதத்தில் கண்ட செய்திகளை கவிவடிவிற் தந்தார். அதிலொரு கவியிதுவாகும்.

''ஷாமுக்குப் போகும் சர்வேசுக் கப்பலிலே
ஏறிநான் போறேன் எண்டு எழுதினார் காகிதத்தில்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அக்கரைப்பற்றிலிருந்து புறப்பட்ட விதம் பற்றியும் கவிதைகளை இப் பெண்மணி பாடினார். இப்படியுமொருகவி அதிற் காணப்படுகின்றது.

''காறில ஏறக் கால்தூக்கும் வேளையில
வாப்பாகா எண்டு என்ர வரிசைமகன் நீ ஏன் அழுகாய்''

அன்றையக் காலகட்டம் ''ஹஜ்ஜுல் அக்பர்'' ஆகும். ஹஜ்ஜுக் கடமைகள் முடிந்ததும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த இருவர் ஊருக்குப் போவது பற்றிக் கேட்டனர். அதற்கவர் தான் ஊருக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாதென்றும் தான் இங்கேயே மவ்த்தானால் இருவரும் சேர்ந்து நல்லடக்கம் செய்யவேண்டுமென்றும் கூறி சில மக்காப் பொருட்களைக் கொடுத்து அவற்றைத் தம் தாயார், மனைவி, மக்களிடம் ஒப்படைக்குமாறும், கடிதமொன்றை மனைவியிடம் கொடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். அவ்விருவரும் மக்கா ஹறம் ஷரீபிற் தங்கியிருந்தனர். அவர் மையித்துக்குரிய சாமான்களை ஒழுங்குசெய்து வைத்திருந்ததுடன் ''ஜென்னத்துல் மஹல்லர்'' என்ற புண்ணிய பூமியில் தனக்கென ஓரிடமும் பெற்றிருந்தார். இவ்விடயங்கள் அங்கு நின்ற நம்மூரவர் இருவருக்கும் விளக்கப்பட்டது.

1910 ஆம் ஆண்டு துல்ஹஜ்ஜு மாதம் இறுதி வெள்ளியன்று நம்மூர்ப் பெருமகனார் சம்புக்களப்பு வட்டவிதானை அவர்கள் புனித மக்கா நகரில் வபாத்தானார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னாயிலைஹி றாஜிஊன்)

அம்மகானின் வசியத்தின்படி இவர்கள் அங்கு அன்னாரை நல்லடக்கம் செய்துவிட்டு இங்கு வந்து உரிய பொருள்கள், கடிதம் ஆகியவற்றை ஒப்படைத்து அங்கு நடந்த விடயங்களை கண்ணீரின் மத்தியில் கூறினர். அவற்றைக்கேட்ட மக்கள் கதறி அழுதனர். அதன்பின் புதுப்பள்ளி ஜமாஅத்தார் கூடி ''பி.பி. ஆதம்லெவ்வை ஹாஜியார் நினைவு மன்றம்'' என்றவொரு அமைப்பை உருவாக்கினர்.

இம்மன்றத்தின் மூலம் அவரது மறைவு தினத்தன்று வருடா வருடம் கத்முல் குர்ஆன் தமாம் செய்யப்பட்டு வருகின்றது. அவருக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாக அன்னாரின் வாரிசுகளிலொருவரை நம்பிக்கையாளர் சபையின் தலைவராக நிரையாய் நியமித்துவருகின்றனர். அந்த மரபிற்கமைய தற்போது அன்னாரது பேரரான ஜனாப் எம்.ஐ. அப்துல்கபூர், ஜே.பி. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பள்ளிவாசல் நிறுவப்பட்டு அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் ''ஜும்ஆ குத்பா'' ஓதும் நடைமுறை இல்லாதிருந்தது. இதைச் சீர்தூக்கி பி.பி. ஆதம்லெவ்வை ஹாஜியார் நினைவு மன்றத்தினரும் பள்ளிவாசல் ஜமாஅத்தினரும் ஒருங்கிணைந்து குத்பா ஓதும் முறையொன்றை ஒதுக்குமாறு உலமா சபையிடமும் பள்ளிவாசல்களின் பரிபாலன சபையிடமும் கேட்டனர். அதற்கமைய புதுப்பள்ளிவாசலுக்கும் ''ஜும்ஆ குத்பா'' முறை அளிக்கப்பட்டு 1963.08.23 தொடக்கம் மூன்று கிழமைகளுக்கொருமுறை ''குத்பா'' ஓதப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஜமாஅத்தாரின் அனுசரணைப்படி பின்வருவோருக்கு நன்றிக்கடன் தெரிவிப்பதற்காக இப்பள்ளிவாசல் எல்லைக்குள் இவர்கள் அடக்கம் செய்யப்பட்டனர்.

01. மர்ஹூம் ஷேய்க் அஹமது - அறபியார்
02. ஜனாபா சித்தி மைமூனா உம்மா ஆதம்லெவ்வைப்போடியார்
03. மர்ஹூம் கே.எல்.எம். இஸ்மாயில் ஆலிம் (உலமாசபைத் தலைவர்)
04. மர்ஹூம் ஆ.ஹா. அப்துல்மஜீத் போடியார்
05. மர்ஹூம் எம்.எச்.எம். இஸ்மாயில் ஆலிம்

இப்பள்ளிவாசற் பகுதி ''புதுப்பள்ளியடி'' என மிகப் பிரபல்யம் பெற்றுள்ளது. அதனண்மையில் புதுப்பள்ளியடி எனும் உப அஞ்சலகம் ஒன்றுள்ளது.

### நம்பிக்கையாளர்-மரைக்காயர்மார்கள்

01. தலைவர்: ஜனாப் எம்.ஐ.ஏ. கபூர், ஜே.பி. (வட்டுநாச்சிக்குடி)
02. செயலாளர்: ஜனாப் எஸ்.எம். மன்சூர் (ராசாம்பிள்ளைகுடி)
03. உப தலைவர்: ஜனாப் கே.எல்.எம். இப்றாகீம் (சுல்தான் பிள்ளைக்குடி)
04. உப செயலாளர்: எம்.சி. ஆதம்லெவ்வை (வடக்கனார்குடி)
05. பொருளாளர்: ஜனாப் எல்.ரி. அலாவுதீன் (பணிவீட்டுக்குடி)


( 275'ம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றிலுள்ள பள்ளிவாசல்கள்

01. பெரியபள்ளிவாசல்
02. பட்டண (சின்ன)ப் பள்ளிவாசல்
03. புதுப்பள்ளிவாசல்
04. காதிரிய்யாப் பள்ளிவாசல்
05. நூறானியாப் பள்ளிவாசல்
06. பத்ர் பள்ளிவாசல்
07. மஹ்ழறத்துல் காதிரிய்யா (ஹல்லாஜ் மகாம்) பள்ளிவாசல்
08. பட்டியடிப்பிட்டிப் பள்ளிவாசல்
09. பள்ளிக்குடியிருப்புப் பள்ளிவாசல்
10. இசங் கணிச்சீமைப் பள்ளிவாசல்
11. ஜமாஅத் ஆலிம் நகர்ப் பள்ளிவாசல்
12. இலுக்குச் சேனைப் பள்ளிவாசல்
13. வேலமரத்துவெளிப் பள்ளிவாசல்
14. புட்டம்பை ஜலாலியாப் பள்ளிவாசல்
15. தக்கியாப் பள்ளிவாசல்

* அம்பாரை மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களின் மொத்தம் 192
* அக்கரைப்பற்றிலுள்ள தொழுவதற்கான தக்கியாக்கள் 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களிமண்ணினால் பல்வகைப் பாத்திரங்கள் வனையப்படுகின்றன.

* புட்டம்பைப் பள்ளிவாசல் : 1985.04.15 இல் ஏற்பட்ட கலவரத்தின்போது அழிக்கப்பட்டுள்ளது. அன்றிலிருந்து மக்களெவரும் அங்கிலர். புட்டம்பை ஊரே புலம் பெயர்ந்துள்ளது.
* இங்குள்ள எல்லாப் பள்ளிவாசல்களும் ஒருங்கிணைந்து ''அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனம்'' எனும் ஒரமைப்பாய் இயங்குகின்றன.

## பள்ளிவாசல்களில் நடைபெறும் பணிகள்

01. ஐந்து வக்து (நேரம்) இமாம்-ஜமாஅத் தொழுகையை நிறைவேற்றல்.
02. வெள்ளிக்கிழமைகள் தோறும் ''குத்பா'' ஓதி தொழுவித்தல்.
03. றம்ழான் மாதம் முழுவதும் இரவில் ''தறாவீஹ்'' தொழுவித்தல்.
04. நோன்புப் பெருநாள் (ஈதுல் பித்ர்), ஹஜ்ஜுப் பெருநாள் (ஈதுல் அழ்ஹா) நாட்களில் குத்பா ஓதித் தொழுவித்தல்.
05. கிரகணத் தொழுகை, மழைவேண்டித் தொழல் போன்ற சமயா சமயத் தொழுகைகளை நடாத்துதல்.
06. சுப்ஹான மவ்லித், முஹியித்தீன் மவ்லித், சாஹுல் ஹமீது ஆண்டகை மவ்லீதுகளை உரிய காலங்களில் ஓதிவரல்.
07. இவற்றிற்கான நார்சா வகைகள் ஏற்பாடு செய்தல்
08. நோன்பு 30 நாட்களும் இப்தார் (நோன்புதிறக்கும்) வேளையில் கஞ்சி வழங்கல்.
09. பெரிய கந்தூரி கொடுத்தல்.
10. திருமணம், மரணம் ஜமாஅத்தாரின் கத்தம், பாத்திஹா, மவ்லிது, சுன்னத் நிகழ்ச்சிகளை நடாத்தி வைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மக்களின் முரண்பாடுகளை விசாரித்து முடிவெடுத்தல்.
12. சில விசேட தினங்களின் மகிமைக்காக பலவகையான அமல்களைச் செய்ய ஏற்பாடு பண்ணல்.
13. அரபுகுர்ஆன் மத்ரசாக்களை நடாத்தல், ஹதிது வைபவங்கள், விசேடச் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல்.
14. பள்ளிவாசல் பிரதிநிதிகளாகப் பல்வேறு சமய, சமூக, அரசியல் அமைப்புகளில் கலந்து கொள்ளல் போன்ற பணிகளைப் பள்ளிவாசல்கள் மேற்கொள்ளுகின்றன.

## அரும்பணிக்கான அமைப்புகள்

அம்பாரை மாவட்ட மக்கள் ஒன்றியம்

இவ்வமைப்பு 1983 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது முழு அம்பாரை மாவட்டத்திற்குமுரியதாகும். கல்வி, கலாசார, சமய, சமூகப் பணிகளின் ஊடகமாக இது திகழ்கின்றது. குடிநீர் வசதிகளுக்குதவல், கிணறுதோண்டி உதவல்களிலும் கருத்தைச் செலுத்துகின்றது. பின்வரும் இடங்களில் பாடசாலைகளை அமைத்து அரசு பாடசாலையாக இயங்க ஆவன செய்துள்ளது. ஜமாஅத் ஆலிம்நகர், பத்ர் நகர், பொத்துவில் ஹிஜ்றா நகர், அட்டாளைச்சேனை பூமரத்தடி, இலுக்குச்சேனை (அல்ஹுதா) அம்பலத்தாறு (செய்க் சிக்கந்தர்வலி) இறக்காமம்-அமீரலிபுரம் ஆகியன.

பல்கலைக் கழகக் கல்வியைத் தொடரவிருக்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவி வருகின்றது. திறமை அடிப்படையில் புலமைப் பரிசில்களும் அளிக்கப்படுகின்றன. பள்ளிவாசல்களோடு சேர்ந்த குர்ஆன் மத்ரசாக்களை இடைநிறுத்திவிடாது தொடர ஊக்குவிப்புக் கொடை தரப்படுகின்றது. விசேடமாக குக்கிராமங்களுக்கே முதலிடமளிக்கப்படுகின்றது. தோதற்ற குடும்பங்களிலுள்ள சிறுவர்களுக்குக் கத்னாச் சடங்கை நடாத்திவைக்கிறது.

அகதிகளில் மிக அவதிப்படுவோருக்கும் அதிக கஷ்டங்களைச் சுமந்து துன்புறுவோருக்கும் ஓரளவு நிவாரணம் வழங்கி வருகின்றது. இவ்வியக்கத்திற்கென சொந்தச் செயலகமும் நூலகமொன்றுமுள்ளது.

செய்திகளும் நோக்குகளும் எனும் காத்திரமான ஒரு தட்டச்சு இதழை மாதந்தோறும் படங்களுடன் வெளியிட்டு வருகின்றது. சந்தடியில்லாமல் அறப்பணியை அமைதியாகப் புரிய வேண்டுமென்ற உளநோக்கு கோங்கிறசின் செயற்பாடுகளில் பிரதிபலிப்பது அவதானிக்கப்பட்டது.

1988 ஒகஸ்டு ''செய்திகளும் நோக்குகளும்'' என்னும் கோங்கிறஸ் மாத வெளியீட்டில் ஆசிரியர் கருத்தின் ஒரு பகுதி : நாம் எங்கு தவறிழைத்தோம்? - இக்காலப்பகுதியில் மனித உயிர்கள் ஒப்பீடு செய்யவியலாத அளவுக்கு மலினப்படுத்தப்பட்டுள்ளன. இன-மொழித் துவேஷங்கள் தலைவிரித்தாடுகின்றன. மனித உயிர்கள், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகள், ஆயுதப்படையினர் எவருடைத்தாயினும் பெறுமதி மிக்கவையே. இந்த மனித உயிர்வாழ்வின் முக்கியத்துவத்தின் அடிப்படையே, உலகின் மற்றெல்லா சமய, கலாசார, பண்பாட்டு முதிசங்களின் தோற்றுவாய்க்கும், கலை விஞ்ஞான இயல்களின் வளர்ச்சிக்கும் ஆதர்சமாகவும், அஸ்திவாரமாகவும் அமைந்தன. இப் பெறுமதிமிக்க உயிர்வாழ்வுக்கான வசதி, பாதுகாப்பு என்பவற்றிற்கு உத்தரவாதம் வழங்கவேண்டியது அரசுகளின் பிரதான கடப்பாடாகும்.

## செயலவையினர்

*செயலாளர்: ஜனாப் எம்.எம். முஹம்மத் ஹாஷிம்*
*உபசெயலாளர்: ஜனாப் கே.எம். நஜ்முதீன்*
*நிதிச் செயலாளர்: ஜனாப் எம்.எஸ். கால்தீன்*

மத்திய குழு உறுப்பினர்:

1. ஜனாப் எம்.எம். ஹனீபா
2. ஜனாப் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. காதர்
3. ஜனாப் எம்.எல்.எம். பாறூக்
4. ஜனாப் எம்.எல்.எச். அஹ்மத் லெப்பை
5. ஜனாப் எஸ்.எச். முஹம்மதலி
6. ஜனாப் ஏ. பீர்முஹம்மத்
7. எஸ்.எம். ஹனீபா
8. எஸ்.எஸ். உதுமாலெவ்வை
9. எஸ்.ஏ. உதுமாலெவ்வை

முகவரி : அம்பாறை மாவட்ட மக்கள் கொங்கிரஸ்,
உடையார் வீதி, அக்கரைப்பற்று 02.

## ஆலையடிவேம்பு பிரதேச சபை - 1989

*விசேட ஆணையாளர்: திரு சி.ஏ. அருளம்பலம்*
*பிரதம எழுதுநர்: திரு எஸ். கோணசிங்கம்*
*எழுதுநர்: திருமதி பி. கிறேசன்*
*தொழில்நுட்ப அலுவலர்: திரு. கே. காந்தநாதன்*
*உதவி நூலகர்: செல்வி கே. கோமதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபை தனது பணியைச் செவ்வனே தொடர்கின்றது. மக்கள் நலனில் அதிக அக்கறைகாட்டும் அலுவலர்கள் பாராட்டுக்குரியவராகின்றனர். உள்ளூராட்சித் திணைக்களம் மாவட்ட மட்டத்தில் பிரதேச சபைகளுக்கிடையே நடாத்திய போட்டியில் முதலாமிடத்தை கருங்கொடித்தீவு பிரதேச சபை பெற்று இரண்டு இலட்சம் ரூபாவையும், மூன்றாமிடத்தை ஆலையடிவேம்பு பிரதேச சபை பெற்று 50 ஆயிரம் ரூபாவையும் பரிசிலாக வென்றன.

## பெரியார், பிரமுகர், திறமைபாளர்

### கல்வி, கலாசாரக் கழகம்

1. தலைவர்: ஜனாப் A.M.M. றிபாய் (Dip-in-agri)
2. உபதலைவர்: ஜனாப் A.B.A. அஸீஸ் B.S.C
3. செயலாளர்: ஜனாப் M.M. ஹரீஸ்
4. உப செயலாளர்: ஜனாப் M.A. முனவ்வர்
5. பொருளாளர்: ஜனாப் M.I. எஹியா
6. காலாசாரப் பொறுப்பு: ஜனாப் A.M. ஹரீஸ்
7. சமூக நலன்: ஜனாப் M.A. பஸீல்

முகவரி: 81, A.V.V. வீதி, அக்கரைப்பற்று-06

### அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் - அம்பாரை மாவட்டம்

அமைப்பாளர்: ஜனாப் M.I. உதுமாலெப்பை J.P., G.S.O
தலைவர்: ஜனாப் A.B.M. ஹாஷிம்
உப தலைவர்: ஜனாப் S.T.K. முஹம்மத்
உப தலைவர்: ஜனாப் M.I.M. ஹாஷிம்
உப தலைவர்: ஜனாப் M.H. அப்துல்வஹாப்
பொதுச் செயலாளர்: ஜனாப் M. ஜிப்ரி
உதவிச் செயலாளர்: ஜனாப் A.T. காலித்
பொருளாளர்: ஜனாப் K.M. அபூபக்கர்
சமூகப்பணி: ஜனாப் M.A. பக்குர்தீன்
அரசியல்: ஜனாப் U.L. அபுல் ஹஸன்
உடல் நலம், விளையாட்டு: ஜனாப் M.A. ஹனிபா
சமயம், கல்வி: ஜனாப் S.A. அபூதாஹிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் முன்னணி

அமைப்பாளர்: ஜனுபா M.A.S.. றஸீனு
சுகாதாரம், விளையாட்டு: ஜனுபா M.I. ஆயிஷாபீவி
சமயம், கல்வி: ஜனுபா M.A. ஜெஸீலா
சமூக அபிவிருத்தி: ஜனுபா S.L. றிபாயா
அரசியல், பொதுப்பணி: ஜனுபா M.P. அஸினு

இச்சம்மேளனம் சிரமதானம், பாடசாலை, குர்ஆன் மத்றஸாக்களை நிறுவல், போக்குவரவு, சமயப்பணிகளைச் செய்தல், இலவச கத்னுச் சடங்கு, தடுப்பு மருந்தேற்றல், காணிப் பகிர்வு ஆகிய பல துறைகளில் பாராட்டத்தக்க சேவைகளைச் செய்துள்ளது.

## Asst. Commissioner/A.G.A Office STAFF

01. Janab. A. Abdulmjeed (B.Com) S.L.A.S.- Asst. Comm/A.G.A.
02. Janab. M.I. Salavutheen- Chief Clark
03. Janab. M.M. Jalaldeen Clark
04. Janab. M.M. Saudeen Clark
05. Janab. M.A. Najmudeen Clark
06. Mrs M.I. Ummu Habira Clark
07. Janab A.K.M.A. Cader- office Servent
08. Janab. M.B. Abdul Rafeek- Office Servent
09. Janab. M.I. Huassain- Watcher

## GRAMA SERVICES OFFICER

10. Janab. M.I. Uthumalebbe- Town - 01
11. Janab. A.H.M. Jabbar- Town - 02
12. Janab. U.L. Abdul Hassan- Town - 03
13. Janab. M.A. Meera Sahibulebbe- Town - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. Janab. M.M. Nizar- Town - 05
15. Janab. U.L. Jamaldeen- Karunkoditeevu - 01
16. Janab. A.L. Muhammad Ismail- Karunkoditeevu - 10
17. Janab. L.M. Ismail- Karunkoditeevu - 12
18. Janab. M.A. Jaufer- Karunkoditeevu - 11
19. Janab. Y.B. Anver ali- Karunkoditeevu - 13
20. Janab. A.L.M. Ismail- Karunkoditeevu - 14
21. Janab. A.L. Ameenudeen- Karunkoditeevu - 15
22. Janab. A.L.M. Cader- Karunkoditeevu - 16
23. Janab. M.A.M Thahaa- Karunkoditeevu - 17
24. Janab. M.A.M. Zakariyaa- Karunkoditeevu - 18
25. Janab. U.L.M. Ismail- Karunkoditeevu - 02
26. Janab. M.C.M. Thahir- Karunkoditeevu - 03
27. Janab. A.L.M. Mubaarack- Karunkoditeevu - 04
28. Janab. M.C. Abul Cassim- Karunkoditeevu - 05
29. Janab. S.L.H. Ghaffoor- Karunkoditeevu - 06
30. Janab. M.B. Uthumalebbe- Karunkoditeevu - 20
31. Janab. A.M. Liyaavudeen- Karunkoditeevu - 19
32. Janab. S.T.M. Anwer- Karunkoditeevu - 21
33. Janab. A.L.N. Meeralebbe- Paddiyadipiddi
34. Janab. S.M. Junlideen- Pallikudiyiruppu - 01
35. Janab. A.B. Zainul Abdeen- Pallikudiyiruppu - 02
36. Janab. A.G.M. Thahir- Issankani Cheemai
37. Janab. M.I.M Saheed- Alim Nagar

LAND DEPARTMENT

38. Janab. S.M.M. Atham Lebbe- C.O/L.C.D
39. Janab. A.B. Dawood- F.I/L.C.D
40. Janab. A.L. Khaleel- F.I/L.C.D.
41. Janab. Y.B. Liyakathali- Sports officer
42. Janab. A.A. Fareed- N.H.D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. Mr. K. Vijaya ratnam (B.A.)-R.D.O
44. Mr. A. Ganesa Moorthy- A.R.D.O.
45. Janab. M.B.M. Hashim (B.A) S.S.O

## முதலிடம் வகிப்போர்

இவ்வூர் மக்களான சில ஆண்களும், பெண்களும் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் முதல் வரிசையில் உள்ளனர். அவர்களைப்பற்றிய சில விபரங்கள் வருமாறுகும்.

* ஜனப் M.M. சின்னகமது லெவ்வை - பகுதி உடையார்
* ஜனுப் M.ஆதம் லெவ்வை (பொத்துவில் உடையார்) - கிராம சபை அக்கிராசனர்.
* ஜனுப் M.T. சகீத் அஹமத் - எந்திரி, கிருஷிகப்பகுதி உதவிப்பணிப்பாளர்.
* ஜனுப் M.I. முஹம்மதபூபக்கர் லெவ்வை - ஷம்சுல் உலமா, மௌலவீ ஆலீம், புலவர்.
* ஜனுப் A.M. மீராலெவ்வை - காடுகாவலர்
* ஜனுப் M.S. அஹமதுலெவ்வை - சந்தைக் கொஸ்தாப்பல்.
* ஜனுப் A.M. முத்துமீராலெவ்வை - பாடசாலைச் சட்டாம்பிள்ளை, A.P.O.
* திரு. K. ஞானப்பிரகாசம் (தலைமையாசிரியர்) கிராம சபை அக்கிராசனர்.
* திருமதி V.P. காரணி (J.P.) - விடவைத்தியர்
* திரு. சங்கரதாஸ் (இரும்பரசன்) - சாண்டோ.
* ஜனுப் K.L.M. இப்ருஹிம் லெவ்வை - குவாஸி, சமாதான நீதிவான்
* ஜனுப் S.U.M. இப்ருஹிம் - பிஸ்கால் உடையார்
* ஜனுப் ஆத்தங்கலியார் - ஜாலவித்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஜனுப் M.B. முகம்மதுத் தம்பி - பயிற்சி பெற்ற ஆசிரியர், அதிபர்.
* M.M. இஸ்மாயில் - உபாத்தியாயர் (வாத்தியார்)
  * திருமதி சலீமா எஸ். மீரா (அதிபர்) பயிற்சி பெற்ற ஆசிரியை
* ஜனுப் S.U. முஹம்மதலியார் - குளம் பாதுகாவலர்
* ஜனுபா ஆசியா அப்துல் ஜப்பார் - (D.O.) கலைமாணிப் பட்டதாரி ஆசிரியை
* ஜனுபா சித்தி ஸரீனு M. அமீன் - வணிகவியல் பட்டதாரி ஆசிரியை
* செல்வி A.H. ஹஜ்ஜி நோனு (B.A.) -சங்கீத ஆசிரியை
* ஜனுப் A.M. இஸ்மாயில், சங்கீத பூஷணம் (Dip-in-Music) - சங்கீத ஆசிரியர்.
* ஜனுபா தையுபா M. நஸீர் (எந்திரி) - டொக்டர் M.B.B.S
* ஜனுப் M.A. றக்கீஸ்து - டொக்டர் M.B.B.S, M.O.H.
* ஜனுபா M.A. லாபிரு - டொக்டர் A.M.P.
* ஜனுப் A.L.M. இஸ்மாயில் (ஜஃபர்) - டொக்டர் M.D.H, D.I.M.S. (U.S)
* ஜனுப் ஹக்கீம் அப்துல் காதிறு - யூனுனிவைத்தியப் பேரவைத் தலைவர்
* ஜனுப் M.B. காதர் மீராசாஹிபு - சுதேச வைத்திய பீட, நிறைவேற்றுச் சபை உறுப்பினர்.
* ஜனுப் அல்-ஹாஜ் மௌலவீ S.L.M. ஹனீபா (நம்பிக்கையாளர் சபைத் தலைவர் (பெரிய பள்ளி வாசல்) B.A, B.Litt, (medina)
* ஜனுப் மௌலவீ M.M. தீன்முஹம்மத் முதுமாணிப்பட்டதாரி, கலாநிதி (அறபிச் சர்வகலாசாலை - எகிப்து)
* ஜனுப் M.B. கிதுறு முஹம்மது - கமத்தொழிற் போதனுசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஜனாப் S.M.M. அப்துல்கபூர் - கலைமாணிப்பட்டதாரி, கல்விப்பணிப்பாளர்
* ஜனாப் M.U. தாஹா ஸெய்னுத்தீன் - சட்டத்தரணி, ஜே.பி.யூ.எம். நொத்தாரிஸ், மாவட்டவழக்கு மன்று - பதில் நீதிபதி
* ஜனாப் H.L.M. ஹாஷிம் - அப்புக்காத்து (சட்டத்தரணி) - பி.எஸ்.ஸி பட்டதாரி ஆசிரியர்
* ஜனாப் A.M. அகமதுமுகையதீன் (சின்னப்பாவாத்தியார்) - பிறப்பு, மரணப் பதிவாளர்.
* ஜனாபா ஹமீதா அப்துஸ்ஸமத் (மௌலவி ஆசிரியர்) பிறப்பு, இறப்புப் பதிவாளர்.
* ஜனாப் A.L.M. அப்துல் கபூர் - தொழினுட்ப உதவியாளர்
* ஜனாப் M.I.M. சல்மான் - நெடுஞ்சாலைப் பராமரிப்பு மேற்பார்வையாளர்.
* ஜனாப் M.I.M. லெத்தீபு- கிராமப் பயிர்ச் செய்கை அலுவலர்
* ஜனாப் S.M.M. ஆதம் லெப்பை- குடியேற்றத்திட்ட அதிகாரி (C.O./ L.C.D)
* ஜனாப் A.L.A. முகையதீன்- வங்கிமுகாமையாளர்
* ஜனாப் M.A. காதர் முகையதீன்- வணிகவியல் பட்டதாரி, Cert-in-Ed. (London)
* ஜனாப் அல்ஹாஜ் M.A. இப்னு சுஊத்- மாவட்ட வனபரிபாலன அதிகாரி
* ஜனாப் M.I.A.R. புகாரி (B.S.C) கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையப் பிராந்திய முகாமையாளர்.
* ஜனாப் A.M.A. குத்தூஸ் (எழுதுநர்)- அஞ்சலக உப அதிபர் (தொட்டம)
* ஜனாப் A. றஊப் காரியப்பர் (B.S.C)- தொழிற்திணைக்கள மாவட்ட அலுவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஜனாப் M.H. ஷெய்கு இஸ்ஸதீன் (சட்டத்தரணி)- வடக்கு-கிழக்கு மாகாணசபையின் எதிரணித் தலைவர்
* ஜனாப்களான M.I. அலி உதுமான் (B.A.) A.L. அதாவுல்லா- வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர்.
* ஜனாப் M.I. அப்துல்மஜீத்- நாடாளுமன்ற உறுப்பினர் (1965-70)
* திரு. M.S. தருமரத்தினம்- அரசு பேரவை உறுப்பினர் (1937-1947)
* ஜனாப் H.L.A. குத்தூஸ் (B.A.) - விலைக் கட்டுப்பாடு அதிகாரி
* ஜனாப் M. ஆதம் லெவ்வை- பாடசாலை மாணவர் வரவு அலுவலர்
* ஜனாப் M.I.M. அப்துல் காதர்- நெற்களஞ்சியக் காப்பாளர்
* ஜனாப் M.A.M. நவாஸ்- பொலிஸ் உதவிப் பரிசோதகர்
* ஜனாப் M.M. முகையதீன் (B.A.)- கமத்தொழிற்றிணைக்களப் பெரும்பாக அலுவலர்.
* ஜனாப் A.R.A. முகையதீன்- கலாற்றிணைக்களப் பரிசோதகர்
* ஜனாப் A. முகையதீன் பாவா- நில அளவையாளர், நில அளவையாளர் நிறுவகத்தின் "பெலோஷிப்" (Fellowship) பெற்றவர், கவுன்ஸிலர்.
* ஜனாப் M.I.M. முஹியத்தீன்- A.S.I. (சிறீலங்கா) M.S.I. (ஸம்பியா) A.M.C.S.I. (லண்டன்)
* ஜனாப் மீராக்குட்டிகேகுமதார்- பெரும்புலவர், வரகவி
* ஜனாப் S.L.A.M. ஹப்புல்லா (B.A)- கலாசார அலுவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஜனாப் A.R.A. பிஷ்றுல்ஹாபி (ஆசிரியர்) உதவிப்பணிப்பாளர் (முஸ்லிம் சமய, பண்பாடு அலுவல்கள் அமைச்சு)
* ஜனாப் S.T.M. அபூதாஹிர்- பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
* திரு V.P. சிவப்பிரகாசம்- பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளின் செய்தியாளர், புகைப்படப் பிடிப்பாளர்.
* திருமதி இரத்தினம் சிவப்பிரகாசம்- பாலர் பாடசாலைஸ்தாபகர், சமாதான நீதிவான்
* ஜனாப் I.L.M. மீராசாகிபு லெப்பை- கல்யாணப் பதிவாளர்
* ஜனாப் A.S.M. அபூபக்கர் (சீனந்தொர)- ''எரிமலை'' மாசிகை ஆசிரியர்
* ஜனாப் A.A. றபீஸ் A. அஸீஸ் (ஜாமி ஆ நழீமிய்யா) அறபு எழுத்தணிக் கலைஞர் மரவேலைப் போதனாசிரியர்.
* ஜனாப் A.G. அப்துல் மஜீத் மௌலானா- மர நுட்பக் கலைவடிவமைப்பு வல்லுநர், (மரவேலைப் போதனாசிரியர்)
* திரு. நாகமணி- பண்டிதர்
* ஜனாப் M.I.M. ஷரீப்- அரசு உதவியதிபர் (A.G.A)
* ஜனாப்களான் M.I. அபூசஹீத்; M.M. உமறு லெவ்வை, M.I.M. சஹீது, U.K.M.ஹாஷிம்- கிராம சேவகர்கள்.
* ஜனாப் A.R.M. சலீம் (அதிபர்)- பிரபல எழுத்தாளர், வானொலிக்கலைஞர், நடாக ஆசிரியர், பண்டையக் கிராமிய இலக்கியக் கருவூலங்கள், வரலாறு, இலக்கியம், மானிடவியற் துறைகளின் திரட்டுநர், ஆய்வாளர், ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஹித்திய மண்டலப்பரிசில் பெற்ற இலங்கையின் முதல் முஸ்லிம் கலைஞர், கவிஞர், பத்திரிகை நிருபர்.

* ஜனாப் **P.C.** பக்கீர் ஜஃபர்:- பட்டமேற்படிப்பு, டிப்ளோமாத் தேர்விற் தங்கப்பதக்கம் பெற்றவர், திறந்த பல்கலைக் கழகக் கல்வி விரிவுரையாளர்.

## பல்துறைத் தகைமையாளர்

மௌலவீ **M.M.** தீன் முஹம்மத்:- எகிப்து அல் அஸ்ஹர் சர்வகலாசாலையின் முது மாணி, கலாநிதிப்பட்டதாரி. சிறந்த பேச்சாளர், விசேட குத்பாப் பிரசங்கி

ஜனாப் **M.S.M.** முஸ்தபா உடையார்:- விதானை, உடையாராகப்பதவி வகித்தார். மக்களின் அபிமானத்தைப் பெற்றவர். ஊர்ப்பற்றும், சமூகநலனில் அக்கறையும் கொண்டவர், கிராம சபை அக்கிராசனராகவும் கடமை செய்தார்.

ஜனாப் **A.** முகையதீன் பாவா:- நில அளவையாளர், நில அளவையாளர் நிறுவகத்தின் ''பெலோஷிப்'' (Fellow of the Survey institute of Sri Lanka) இலங்கை யெங்கும் இந்நிறுவனத்தின் கவுன்ஸிலராக (F.S.I.) முதன் முதல் நியமனம் பெற்ற ஒரேயொரு முஸ்லிம், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரிலொருவர். கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். பொதுப்பணியில் பேரார்வங் கொண்டவர்.

ஜனாப் **A.B.** தாவூத்:- குண்டசாலை டிப்ளோமாப் பெற்று F.I/L.C.Dயாகக் கடமையாற்றுகின்றார். காணியற்ற ஏழைகளுக்கு நிலக்கொடைகளைப் பெற்று உதவியுள்ளார். காணித்திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர், விளையாட்டுக் கழகங்களின் பலமுறைத் தலைவர் மலர் வெளிடக் காலாயிருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய கிராமோதய சபைத் தலைவர் நிரந்தரமான சமாதான நீதிவான். ஊக்கமும், செயற்றிறனுங் கொண்டு அயராது உழைத்து வருமியவர் மக்களின் பேரன்பைப் பெற்றவர்.

ஜனுப் S.M.M. அப்துல்கபூர்:- முதலாவது கலைமாணிப்பட்டதாரி பிரதிக் கல்விப்பணிப்பாளர். கறைபடியாத கரத்தைக் கொண்டு கடமையாற்றியவரென எல்லோராலும் மதிக்கப்பட்டவர். நேர்மையாளர். நிமிர்ந்து நிற்கும் தகைமையாளர்.

ஜனுப் M.I.M. ஷரீப்:- பதில் கல்விப்பணிப்பாளர். கடமையில் கருத்துள்ளவர். கல்வி முன்னேற்றத்தில் அதிக கரிசனை காட்டியவர். தற்போது சம்மாந்துறை அரசு உதவி அதிபராகக் கடமையாற்றுகின்றார். கல்விப்பணியில் ஓய்வு பெற்றபின் இப்பணியைத் தொடர்கின்றார். மாவட்ட அபிவிருத்திச் சபையின் கருங் கொடித்தீவுப் பிரிவு விசேட ஆணையாளராகவும் பணிபுரிந்தார்.

ஜனுப் T. இப்றுலெப்பை:- கலைமாணிப்பட்டதாரி. அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் (மத்திய கல்லூரி) அதிபராயிருந்து கடுமையாக உழைத்துக் கல்வித்துறையில் வெளிச்சம் காட்டினார். தற்போது அக்கரைப்பற்றுக் கோட்டக் கல்விச் செயலகத்தில் தலைமைக் கல்வியதிகாரியாகக் கடமை செய்கின்றார்

ஜனுப் M.A. காதர் முகையதீன்:- வணிகவியல், Cert-in-Ed London பட்டதாரி. அம்பாரை மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய போது, பல சிக்கல்களில் மாட்டிரியிந்த ஓய்வூதியப் பணியை மிகத்திறமையாக மேற் கொண்டு பலருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவினுர். இதன் மூலம் பெரும் பாராட்டையும், மதிப்பையும் பெற்ருர். தற்போது ''இசுருபாய'' கல்வியமைச்சில் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவுக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிகின்ருர்.

ஜனுப் M.B. முஹம்மதுத் தம்பி:- முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியர். 1936 இல் சி.பா.த. பத்திரத்துடன் முதல் நியமனம் பெற்ருர். 1938-41 வரை மட்டக்களப்பு சென். மேரிஸ் கல்லூரியில் பயிற்சிபெற்ருர். கல்வி, பண்பாடு, பொதுத்துறைகளிற் தம் பங்களிப்பைக் கணிசமான அளவு செய்துள்ளார். பலர் உயர் கல்விபெறக் காலாய் இருந்துள்ளார்.

ஜனுப் M.T.S. அஹ்மத்:- முதலர்வது என்ஜினியர், கமநல சேவைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவிருந்தார். சில காலம் லண்டனில் உயர் கல்வியை மேற் கொண்டார். பிரபல பிரமுகர் பை.வ.வி. முகம்மதுத் தம்பி வட்டைவிதானையின் புதல்வர். பம்பலப்பிட்டிய முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முன்னுள் அதிபரான ஜனுபா ஜெஸீமா இஸ்மாயில் அன்னரது மகளாவார்.

ஜனுப் அ.ம. முத்துமீராலெவ்வை:- முதலாவது சட்டாம்பிள்ளையாக 1917 இல் கருங்கொடித்தீவு மெ.மி.பாடசாலையில் 10ரூபா சம்பளத்தில் அமர்த்தப்பட்டார். மத்திய கிராமசபை அக்கிராசனராக, APO வாகக் கடமை செய்தார். கட்டடக் கொந்தருத்துச் செய்பவராகவும் இருந்தார்.

ஜனுப் M.A. உமறு லெப்பை:- கலைமாணிப்பட்டதாரி, தற்போது அக்கரைப் பற்றுக் கோட்டக் கல்விச் செயலகத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப் M.A. முகையதீன் பாவா:- கலைமாணிப்பட்டதாரி. அக்கரைப்பற்று கோட்டைக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாகச் செயற்படுகின்றார்.

ஜனாப் M.A. உதுமாலெவ்வை:- கலைமாணிப்பட்டதாரி, மத்திய கொத்தணி, மத்திய கல்லூரி அதிபர். இக்கல்லூரி தேசிய கல்லூரிகளிலொன்றாகத் தெரிவு செய்யப்பட்டதில் இவரது பங்களிப்புக் கணிசமான அளவு காணப்படுகின்றது. எழுத்துத் துறை, கவிதைத் துறைகளிலும் ஈடுபாடுடையவர். இவரது ஆக்கங்கள் பல பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

திரு. V.P. சிவப்பிரகாசம்:- சிறந்த படப்பிடிப்பாளர், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி (ரூபவாஹினி) செய்தியாளர் தனியார் கல்வி நிறுவனமான "பீற்ரூ"வின் செயலதிபர் தற்போது அம்பாரைக் கச்சேரியில் நிருவாகப் பிரிவில் கடமையாற்றுகின்றார்.

திருமதி இரத்தினம் சிவப்பிரகாசம்:- இப்பகுதிச் சிறுவர் பாடசாலையின் முன்னோடி, ஸ்தாபகர். தமிழ், சிங்கள, மொழிக் கல்வி இவரது முயற்சியால் முன்னேற்றங்கண்டுள்ளது. சமாதான நீதிவானாகக் கௌரவம் பெற்றுள்ளார்.

திரு. C. மானாகப் போடி:- சிறந்த பிரமுகர். கோயில் பணி, பொதுப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். மத்திய கிராம சபை அக்கிராசனராகவும், அரச எழுதுநராகவும் கடமையாற்றினார். தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபடுபவர். தற்போது அமைதியாக விருந்து முன்னேற்றகரமான சேவைகளைச் செய்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. த. சம்புநாதப் போடி:- ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வண்ணக்கர் சமாதான நீதிவான். ஊரறிந்த பிரமுகர். காணி உறுதிகளின் எழுதுநர். கோயில் நலனுக்காக உழைத்து வருகிறார்.

P.C. பக்கீர் ஜஃபர்:- பட்டமேற்படிப்பு, டிப்ளோமா தேர்வில், அதியுயர்ந்த சித்தியைப் பெற்றுள்ளார். கொழும்பு சர்வகலாசாலை மும்மொழிகளிலும் நடாத்திய இப்போட்டித் தேர்வில் குறிப்பிட்ட எல்லைப்புள்ளிகளிலும் பார்க்க மேலதிகமாகப் பெற்றுச் சாதனை மட்டத்தைத் தாண்டியதற்காக-பொதுப்பட்டமளிப்பு விழாவிற் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். இவ்விடம் பெற்ற ஒரேயொரு முஸ்லிம் இவரேயாகும். நாவல-நுகேகொட திறந்த பல்கலைக் கழகத்தில் கல்வி விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். தக்கியாப்பள்ளி பக்கீர் ஜமா அத்தின் சர் கலீபாவெனும் தலைமைப் பீடத்திலும் அமர்ந்துள்ளார்.

செல்வன் N.M. சிறாஜ்:- கடந்த வருடம் நடை பெற்ற க.பொ.த. (சா/த) தேர்வில் வரைதல் உட்பட, 8 பாடங்களிலும் அதிவிசேட சித்தியெய்தி, கல்முனைக் கல்வி மாவட்டத்தில் அரிய சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார். புல பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் அநேக தடவை 1 ஆம் இடம் பெற்று பரிசில்கள், பாராட்டுகள், பதக்கம், கேடயங்களை வென்றுள்ளார். இவர் பிரபலமார்க்க அறிஞரும், ஹதீஸ் கலையில் வல்லவருமான மௌலவி A.R.M. நூர்தீன் (மஷ்ஹூர்)-(பஹ்ஜி))- அவர்களின் மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. K.P.பியசிறி:- நாணயமான பிரமுகர். மக்கள் பணியாளன். பௌத்த விகாரையின் நலனில் அக்கறை காட்டி உழைத்தார்.

திரு. அல்பர்ட் சரணபால:- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளரில் ஒருவர். மக்கள் தொண்டனுகச் சுறுசுறுப்புடன் பணிசெய்தார். ஸ்ரீபத்திரகாளியம்மன் கோயிற் சுற்ருடலில் உள்ள தோட்டத்தில், பல சிங்கள மக்களைக் குடியேற்றினுர். அப்பகுதி ''சரணபாலபுர'' என அழைக்கப்பட்டது. சில நாட்களின் பின், பல வசதியீனங்களையும் முன்னிட்டு அம்மக்கள் வாழ்விடங்களை விற்றுவிட்டு வேறிடமேகினர். தற்போது முஸ்லிம்களின் வதிவிடமாக அது காட்சியளிக்கின்றது. அவ்விடம் ''பத்ர் நகர்'' என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

திரு. Y.G. எட்வர்ட்:- வர்த்தகப்பிரமுகரான Y.G. ஹின்னி அப்புஹாமியின் புதல்வர். தமிழ்ப் பெண் ஒருவரை மணந்துள்ளார். தற்போது தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் வாழைச் சேனை ஆலையின் மேலாளராகக் கடமையாற்றுகின்ருர்.

திரு. க. குருநாத பிள்ளை:- பனங்காட்டைச் சேர்ந்தவர். பட்டிநகர் ஸ்ரீகண்ணகியம்மன் கோயில் வளர்ச்சிக்காக வழக்காடு மன்று வரை சென்று வாதாடியவர். பிறப்பு, மரணப் பதிவாளராகக் கடமையாற்றினுர்.

திரு. வேலுப்பிள்ளை:- தலைசிறந்த அண்ணுவியார்: நாடகம், கூத்துகளை இப்பகுதியில் பிரபல்யப்படுத்தியவர். வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் சில நுணுக்கங்களைக் கையாண்டார். ஆசிரியராகவும் கடமையாற்றினுர். அன்னுரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையைக் கௌரவித்து பாராட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டுப் பொன்னுடை போர்த்தப்பட்டது.

திரு. **K.V.** சோமசுந்தரம்:- நாடறிந்த பிரமுகர். நிலச் சுவாந்தர். கிருஷிகப் பகுதிப் போதனாசிரியராக விருந்து, அப்பதவியைத் துறந்து பொதுப் பணியிலீடுபட்டுழைத்தார். மன்னன் குளம் எஸ்டேட்டில் தனிப்பட்ட வணிக நிலையங்களை நிறுவி விவசாய விசாலிப்புக்கு அரிய தொண்டாற்றினார். இவர் இப்பகுதியின் பெருந்தலைவரான திரு. M.S. தருமரத்தினம் (M.S.C.) அவர்களின் மகளை வதுவை செய்துள்ளார். சிறந்த கொடை வள்ளலுமாவார்.

**Dr. P.** அருணகுலசிங்கம்:- மக்கள் மத்தியில் மதிப்பு பெற்றவர். கைராசிக்காரரர் எனப் புகழப்பட்டவர். இன, குல பேதமின்றி எல்லோருக்கும் இன்முகங்காட்டி இவர் சேவை செய்வதால் மக்கள் கூட்டம் எந்நேரமும் திரண்டிருக்கும். சமாதான நீதிவான்.

திரு. **T.** பாக்கிய நாயகம்:- பிரபல எழுத்தாளர். நகைச்சுவைக்கட்டுரைகளில் வல்லவர். திருமணத்தின் காரணியாய் மட்டக்களப்பில் வசிக்கிறார். தம்பாப்பிள்ளை உபதேசியாரின் புதல்வர். இவர் அங்குள்ள கச்சேரியில் பொறுப்பு மிக்க பதவிகளைவகுத்துள்ளார் தற்போது இலக்கிய, சமய, சமூக, கல்விப்பணிகளில் அயராது உழைத்து வருகிறார்.

ஜனாப் **M.I.** உதுமாலெப்பை:- வணிகவியல் பட்டதாரி, அக்கரைப்பற்று மத்திய மகாவித்தியாலய அதிபராயிருந்து, அப்பாடசாலை வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு காத்திரமான பங்களிப்பைச் செய்தார். இவரது சேவைக்காலம் அவ்வித்தியாலயத்தின் பொன்னான காலமாகும். மாவட்ட அபிவிருத்திச் சபையின் கருங்கொடித்தீவுப்பணி மனையில் விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாளராகக்கடமையாற்றினர். நாடாளு மன்றத்தின் பொத்துவிற்றெகுதி முதல்வராகச் சுமார் ஐந்து வருடங்கள் பதவி வகித்தார். அரசு ஒழுங்கு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிலிடம் பெற்று, வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளார். இவரது அந்தரங்கச் செயலாளராக ஜனப் M.A.M. இப்ருஹிம் ஆசிரியர் கடமையாற்றினர்.

ஜனப் **A.L.M.** அமீன்:- அரசுகணக்காளர் பட்டய. முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் (charted institute of managiment Accountant) இறுதித் தேர்விற் சித்தியடைந்துதேசிய நீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபை (National water supply and drainage Board) யில் பொறுப்பு வாய்ந்த கணக்காளராகப் பணியாற்றுகின்றார்.

ஜனப் **A.G.** அப்துல் மஜீத் மௌலானா:- மரவேலை வடிவமைப்புகளை உயர்மட்டக்கலைநுணுக்கத்தோடு செய்துவருகிறார். செயற்கைக் கைகளைச் செய்து பொருத்தியுள்ளார், அல்ஹாஜ் பதீ உத்தீன் மஹ்மூத் கல்வியமைச்சராய் அக்கரைப்பற்றுக்கு வருகை தந்து போது. மிக நுண்ணிய வேலைப்பாடுள்ள கலையம்சத்தைத் கொண்ட ''காரை (car) உள்ளடக்கிய என்ஜின் போட்'' ஒன்றை மரத்தாற்செய்ததுடன், அபூர்வமான மரப்பைல் (File) ஒன்றையுஞ் செய்து பாராட்டுப் பெற்றார். இவற்றின் விளைவாக இவருக்கு மரவேலை ஆசிரியர் நியமனங் கிடைத்தது.

செல்வன் **M.I.** றுசெய்க்:- கொழும்பு சாரணர் தலைமைப் பீடத்தால் சிறந்த சாரணராகத் தெரிவு செய்யப்பட்டு, பாக்கிஸ்தானில் நடைபெற்ற சாரணர் கொண்டாட்டத்தில் (Scout Jamboree) கலந்து கொள்ள அனுப்பப்பட்டார். பல பரிசில்களை வென்றார். இவர் ஜனப் M.A.M. இப்ருஹிம் ஆசிரியரின் புதல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் M.A. சாக்கிர்:- 1987இல் "Womens Chamber of Industry & Commerce" நிறுவகத்தால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்டகட்டுரைப் போட்டியில் 1 ஆம் இடத்தைப்பெற்று ரூ. 5000/- மும், சான்றிதழையும் பெற்ருர். கல்வியமைச்சுவால் ஒழுங்கு செய்யப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2 ஆம் இடம் பெற்ருர். இவர் ஜனப் A.L.M. அபுசாலிஹ் அதிபரின் மகன்.

செல்வன் M.A. முனவ்வர்:- பண்டார நாயக்க நினைவுக் கல்வி நிலையத்தினுல் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 1986 இல் 2 ஆம் இடத்தையும் 1981 இல் முஸ்லிம் டைம்ஸ் பத்திரிகை நடாத்திய கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடத்தையும் பெற்ருர். இவரும் மேற்குறிப்பிடப்பட்ட அதிபரின் புதல்வர்.

செல்வன் A.M.M. றியால்:-JICA/AA. அமைப்பால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 1 ஆம் இடம் பெற்று தங்கப்பதக்கத்தையும், ரூபா 5000/- ரொக்கத்தையும் வென்ருர். இவர் M.A. மஜீத் (எழுதுநர்) அவர்களின் புதல்வர்.

செல்வன் A.M. அஹமத் ஷபீ:- 1988இல் 6 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசிற்றேர்வில், கல்முனைக்கல்வி மாட்டத்தில் ஆகக்கூடிய 181 புள்ளிகளைப் பெற்ருர். தேசிய ரீதியில் 10 ஆம் இடம் பெற்று ஜப்பான் தேசத்துக்குச் சுற்றுலாவுக்காக அனுப்பப்பட்டார். இவர் ஒருவரே முஸ்லிம் பிள்ளை. இவர் ஜனுப் M.முஹ்யத்தீன் ஆசிரியரின் புதல்வர்

M.S.அப்துல் ருவுபி: ஜேர்மன் மொழியில் "டிப்ளோமா" பட்டம் பெற்றவர், ஈரான் பிரான்ஸ், ஒஸ்றியா, ஜேர்மனி முதலிய வெளி நாடுகளில் சுற்றுலாச் சென்று, அங்குள்ள மக்களின் கலாசார மேம்பாட்டை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்றுறைகளில் ஆர்வங்கொண்டு, இந்நாடுகளின் தொழில் நுட்பங்களைக் கையாண்டு வெற்றிபெற்றவர். முற்போக்குவாதி, சமூகப்பணிகளில் ஈடுபட்டு உழைத்து வருகின்றார்.

H.L.M.மஹ்ரூப்: ஆண்தாதி, மத்திய கிழக்குப் பகுதி மருத்துவ மனைகளிலும் கடமையாற்றியுள்ளார்.

(216ம் பக்கத் தொடர்)

இப்புவியில் நாள்தோறும உனை எணணி யெண்ணியே புலம்பி_ஈரற்கருகுது நாறில்துளிரென வேகுற்றனவே கிறிச்சில மொழி வாருத்துயரெனக் - கின்பமுடன் நீ சொன்னீரல்லோ 14

சொன்னேன் நான் போறே னென்று இதுதோ தாகா தேகாதென் றீர்_துரையே அது சரி நிரையே துயர்களை யறையக் கரையிலி லுரையே தேது - என் சுந்தரனே நான் நொந்தழுதேன் 15

அழுதேன் விழுதேன் ஆதியிறையைத் தொழுதேன்_அன்பே எனதிடை கொம்பே தறிவுடை நண்பநேசா உன்னை அந்தி சந்தி - நான் வேண்டி நின்றேன் 16

வேண்டித்துதித்து உன்னிட வெஞ்சமெலாம் என் நெஞ்சிலெண்ணி_விதியே செய்திடும் கதியோ நிகரினையெதுவோ துயர்பட நினைந்துருகுவனே - விசனமற நான் அசருவனே 17

அசருவனே நேசா என் அன்புநிறை பூவாசா_என்னறிவே மதியொளிர் குருவே நறை கமழ் கனியே மறையுறை மணியே - எனக்கான மொழி நீரென்ன சொன்னீர் 18

கன்னியிளங்காளை கதலி வருக்கைப்பருவம்_காணுதுனதெழில் வாணுளனதிடம் வீணுயலைந்திடத் தோணுதிருக்குமோர் - கர்த்தன் திருக்கற்பனையோ 19

கற்பனைக்கு நான் பொருந்திக் கழாவிது வென்றே உணர்ந்தேன்_உலக்கிடை நடையுரமும் வடிவுறு கரமும் சடையினதழகும் படிதனிலென்றுமே - என்கண்ணெதிரே என்றும் நண்ணுதல்லோ 20

நண்ணுவதை எண்ணி யெண்ணி என்ர நாட்ட மெலாம் வாட்ட முற்று_என் விழியே இருள் நடுவொளியே தரிசனை தரவே வருகுதலழகே உன துரு நிலவே - நீ நற்றவத்தின் புத்திரனே 21

புத்தளத்தில் நாவிருந்தேன் நீ இப்புவியிழந்து போனதினம்_புரவதி நிரமும் விரகதி தரமும் குறுகின மவுத்தும் நான் படுத்து றங்கும் - நடுத்தலத்தில் 22

நடுவுற்ற சாமம் என்விட நன்றிப் பல்லில் ஒன்றுமுவும்_நன்பொடு எனதிட கொம்புறு முடியிலோர் பங்கது கரமோடு வம்புற வரவும் - நான் அன்றிரவு கனவிடைவல்லோ 23

நான் கண்ட கனவும் உன்னிட காலம் முடிஞ்சதுவும்_காலமெலாம் மலையாகிலும் வாலிபகாரனே சீலனே வருகுவதுண்டோ - நீ கங்குல் கரி திங்களல்லோ 24

திங்களீரைந்தும் - உனைத்தின மறவே சுமந்து_மதிமுகமழ கொளிரும் மன மதுகுளிரும் இனியவை மொழியும்-சதியெனும் சீரிய - உன் தாய் சகிப்பதெந்நாளோ 25

என்னுளென்னுளும் உனை எண்ணி யெண்ணியே கலங்கி_இரவலர் நிதியோடு வரு மிசுமாயில் லெப்ப [illegible]யுண்டோ - இந்த யுகமழியும் நாளுமுண்டோ 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(228ம் பக்கத் தொடர்)

கீழுள்ள அறபுப் பாடல் பரிசிலும், பாராட்டும் பெற்றதாகும்.

பிரார்த்தனை

சில்னஜமீ அன் மில்ன யமீனன் தும்ம சிமாலன் உல்ன உலா அன் குல்ன பசீஹன்

அகவாத்திஹு அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் லினபிய்யிஹு
யாஇலாஹி யாதஹுயீ யாமுரூதீ யாஹவாயீ
தலீலுன் லி முஹுயிஹு இலாஹீ ஜலீலுன் அன்தறப்புஹு
இலாஹீ ஜலீலுன் அ்ன்த றப்புஹு (சில்ன ஜமீ அன்) 01

தஹ்றிபன்த றப்பஹு மூமாயிற அல்பாபிஹு தர்ஹமன்வதஃபிறன் இலாஹீ ஹு

தஸ்ம அன் ஹனீன கல்பிஹு
தஸ்ம அன் ஹனீன கல்பிஹு - (சில்ன ஜமீ அன்) 02

யா அலீமன் முன்மலீமன் ஜாஹலீமா முஸ்த ஈனன்
தாஹ கல்பன் மின் ஜமாலிக்கா
இலாஹீ மாலஹு சிவா லிக்கா இக்கா - இலாஹீ
மாலஹு சிவா லிக்கா இக்கா (சில்ன ஜமீ அன்) 03

தாலமா அசாபஹு மினல் பலா இ வல் அஹுயி
மாலஹு சிவாக்க முஈஹு
இலாஹீ ஹால னன் முறன் பஜூத்லஹு - இலாஹீ
ஹால னன் முறன் பஜூத்லஹு (சில்னஜமீ அன்) 04

இன்னஹு லமுஃமினூன இன்னஹு லமுஸ்பிக்கூன
அஇன்ல்ஹு பி இப்தஹிலிஹு இலாஹீ
வசுன்லஹு பி இன்தி சாறிஹு - இலாஹீ
வசுன்லஹு பி இன்திசாறிஹு (சில்ன ஜமீ அன்) 05

யாம ஆஷிறுல் கிரும் அலைக்குன் மின்ஸ்ஸலாம்
ஹாமிலீ லிவா அதீனிஹு இலாஹீ
யா முஜீப் ஹஸ்ஸில் முருதஹு - இலாஹீ
யா முஜீப் ஹஸ்ஸில் முருதஹு (சில்ன ஜமீ அன்) 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(252ம் பக்கத் தொடர்)

உறுப்பினர்கள்.

01. ஜனாப். ஏஎல். அப்துல்மஜீத். (வட்டு நாச்சிக்குடி)
02. ஜனாப். ஏஎல். அப்துல்கபூர். (ராசாம்பிள்ளை குடி)
03. ஜனாப். எம்எம். அபூபக்கர். (பணிவீட்டுக்குடி)
04. ஜனாப். எம்ஏஎம். இப்றாகிம். (வடக்கனாகுடி)
05. ஜனாப். ஏஎல். ஆபிதீன். (சுல்த்தான்பிள்ளைகுடி)
06. ஜனாப். எம்பி. உதுமாலெவ்வை. (மூத்தநெயிந்த குடி)
07. ஜனாப். எஸ்எல். நாசூர்த்தம்பி. (முதலிகுடி)
08. ஜனாப். ஏஎல். ஹயாத்துமுகம்மது. (சங்கரப்பத்தான்குடி
09. ஜனாப். ஏஎம். ஹாஷிம். (ஓடாவிகுடி)
10. ஜனாப். ஏஎம்எம். நயீம். (அம்மாநாச்சிகுடி)
11. ஜனாப். ஐஎல். றசீன். (மாமனாப்புள்ளகுடி)
12. ஜனாப். ஏ. சீனிமுகம்மது. (காலிங்காகுடி)
13. ஜனாப். எம். யூனுஸ். (யாவுகுடி)
14. ஜனாப். எம்ஏஎம். ஹனீபா. (மாப்பிள்ளை மரைக்கார் குடி)
15. எம்எம். அபூபக்கர். (பணியவீட்டுக்குடி)

கதீப்மார்:- ஜனாப். ஐஎம். அபூபக்கர் மவ்லவி.
உதவி :- ஜனாப். எம்ஏ. ஆதம்பாவா மவ்லவி.
முஅத்தின் :- ஜனாப். எம்எஏ. சுலைமாலெவ்வை.
அதிகாரி:- ஜனாப். எம்எச். அப்துல்கரீம்.

விபரங்கள்:- ஜனாப். எம்ஐஏ. கபூர், ஜேபீ தலைவர் (ந.ச.)
தொகுத்தளித்தவர்: ஜனாப். ஏஎம்ஏ. குத்தூஸ், அக்கரைப்பற்று-05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்பஉல் கைறாத் அறபுக் கல்லூரி

# MANBA-UL-KHAIRATH ARABIC COLLEGE



இக்கல்லூரி புகாரித் தைக்கா (தக்கியா) என்ற பெயரில் 1967இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு மகளிரின் தொழுகை. றாத் திப் மஜ்லிஸ் என்பன நடைபெற்றன.

சில காலத்தின் பின் பிற்பகலில் பாடசாலை மாணவர்களுக்கான அறபுமொழிப் பாடம் நிகழ்ந்தது.

இதன் ஆரம்பப்பெயர் ''மத்றஸத்துல் மன்பஉல் கைறாத்'' என்பதாகும். பின் ''குல்லியத்து மன்பஉல் கைறாத்'' எனப்புதியபெயர் சூட்டப்பட்டது.

1982 இல் முழுநேர அறபுக்கல்லூரியாகத் தற்போதையச் செயலவையினர் மாற்றியமைத்தனர். உள்ளூர், வெளியூர் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர், விடுதிவசதியும் ஏற்படுத்தப்பட்டது.

பின்னர் மாணவர்களின் நலன்கருதி நிலப்பரப்பு விரிவாக்கப்பட்டது. மாணவர்கள் தங்ககம், நூலகம், காரியாலயமும் சமையல்கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. அதன்செயற்பாட்டைத் தொடர்ந்து அக்கரைப்பற்று சின்ன (பட்டணப்)ப் பள்ளிவாசலில் இயங்கிவந்த ஹிப்ழுல் குர்ஆன் மத்ரஸா (குர்ஆனை மனனமிடும் பாடசாலை) 04.04.1990 இல் இக்கல்லூரியோடு இணைக்கப்பட்டது. தற்போது 16 மாணவர்கள் குர்ஆனை மனப்பாடஞ் செய்யும் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். (இவர்கள் சிறந்த ஹாபிஸ்களாய்த் திகழ. அல்லாஹ் அருள்வானாக)

55 மாணவர்கள் உள்ளூர், பிறஊர்களிலிருந்து இங்கு சேர்ந்து விடுதி மாணவர்களாய் உள்ளனர். இதன் வளர்ச்சிக்காகப் பல கொடைவள்ளல்கள் வாரிவழங்கியுள்ளனர். ஊர் மக்களின் கவனம் இதன்வளர்ச்சியின் பால் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளது.

கல்லூரி ஆளுநர் சபை இதன் எதிர்கால உயர்ச்சிக்காகப் பல செயற்பாடுகளைச் செய்து வருவது, இங்கு குறித்துரைக்க வேண்டிய விடயமாகும். இதன் வெள்ளிவிழா, கட்டடத்தொகுதித் திறப்புவிழா, மௌலவீ பட்டமளிப்புவிழா ஆகியனவற்றை நடாத்திவைக்க நிருவாகம் செயற்படுகின்றது.

கடந்த சிலகாலமாக அல்ஹாஜ் அபுல்கலாம் பழீல் மௌலானா ஜே.பி. வட்டாரக் க்ல்வியதிகாரி (ஓய்வு) நிருவாகச் செயலாளராக, விரிவுரையாளராகக் கடமை செய்தார்.

இலங்கையில் முழுமையான ஓர் அறபுப் பல்கலைக் கழகம், பன்மொழிப் பயிற்சியை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட வேண்டுமென்ற முஸ்லிம்களின் தாகத்தை இயன்றவரை தீர்த்து வைக்க வேண்டுமென்ற ஒரு நிலைப்பாட்டை இக்கல்லூரியின் பொறுப்பவை கொண்டுள்ளதைச் செயற்பாட்டில் காணமுடிகின்றது.

இம்முயற்சி, அறபுக் கலையின் ஆரோக்கியமான ஓர் எதிர்காலத்தை உருவாக்க அடித்தளமாக அமைந்திருப்பது, அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்திகதி : 17.01.1967
இடம் :- புகாரித் தக்கியா, அக்கரைப்பற்று - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1990 ஆம் ஆண்டின், கல்லூரி ஆளுநர் பேரவை :-*

## COMMITTEE MEMBERS

01. Al-haj S.L.M. HANEEFA Mowlavi, B.A, B. Litt-President
*02 Janab A.M. YOOSUF Teacher Secretary*
*03 Al-haj M.S.M. MEERASAHIBU Treasurer*

## *MEMBERS:-*

| | |
|---|---|
| *04 Al-haj M.M.A.A. LATHEEF* | *(mowlavi)* |
| *05 Al-haj I.L.A. RASHEED* | *(mowlavi)* |
| *06 Janab P.S. MEERA* | *(Principal)* |
| *07 Janab A.M. ISMAIL* | *(Teacher)* |
| *08 Al-haj M.A.M. MUSTAPHA* | *(Principal)* |
| *09 Janab A.M. MOHIDEEN* | *(D.O)* |
| *10 Al-haj A.M. YASEENBAWA* | *Marakkar* |
| *11 Janab H.C.M. IBRAHIM* | *(Teacher)* |
| *12 Al-haj M.A. PAKURDEEN* | |
| *13 Al-haj C.M.M. RAFEEK* | |
| *14 Al-haj A.L.A. NOORDEEN* | |
| *15 Janab A.M.A. CADER* | *A.I* |
| *16 Janab A.M. MOHIDEEN* | *Teacher* |
| *17 Janab M.T. KARIAPPER* | |
| *18 Janab A.M. NAFEEL* | *Teacher* |
| *19 Janab K.L.M. SALITHAMBY* | |

## *ACADEMY STAFF (Present)*

| | |
|---|---|
| *01 mowlavi U.L. ASHRAFFALI* | *(Bakavi)* |
| *02 mowlavi G.S. ANWER* | *(Kasimi)* |
| *03 mowlavi M.I. RIYAS* | *(Manbayi)* |
| *04 mowlavi S.M. JUNAIDEEN* | *(Naleemi)* |
| *05 mowlavi al-haj S.M.L. SATHIK* | |
| *06 mowlavi al-haj M.M.A.A. LATHEEF* | |
| *07 mowlavi al-haj S.L.M. HANEEFA (B.A.B. lit)* | |
| *08 al-haj ABULKALAMFALEELMOWLANA (JP, C. E. O (Retd)* | |

*18.11.1987இல் முதன்முதலாக இக்கல்லூரியில் மௌலவித் தராதரப் பத்திரத் தேர்வு நடைபெற்றது. பின்வருவோர் சித்திபெற்றுள்ளனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 ஜனாப் ஏ.எம். அப்துல் றாஸிக்
மௌலவீ, அக்கரைப்பற்று 6

02 ஜனாப் எஸ். சஹுர்தீன்,
மௌலவீ சிப்பிக்குளம், நிம்மாந்தோட்ட.

03 ஜனாப் எம்.ஐ.எம். நியாஸ்
மௌலவீ அக்கரைப்பற்று 6

04 ஜனாப் எச். ஜமாலுத்தின், மௌலவீ
சில்மியாபுரம், வெலிமட

05 ஜனாப் எச்.எம்.எம். புகாரி,
மௌலவீ வாழைச்சேனை

06 ஜனாப் எம். எஸ். நௌபுத்தின், மௌலவி மலேகொலனி,
அம்பலாந்தோட்ட

இரண்டாம் முறை நிகழ்ந்த இறுதித் தேர்வில் சித்தியடைந்தோர்.

01 ஜனாப் எஸ்.எல். நின்ஷரீப் மௌலவீ நிந்தவூர்

02 ஜனாப் ஏ.எச்.எம். றஷீத், மௌலவீ
வரிப்பத்தஞ்சேனை

03 ஜனாப் எம்.ஐ. நியாஸ், மௌலவீ
அக்கரைப்பற்று

1987 இல் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அல்-ஆலிம் தகைமைச் சான்றிதழ்த் தேர்வில் இக்கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் திறமைச்சித்தியெய்தியுள்ளனர்.

இங்கு கற்றுத்தேறிய மௌலவீ ஏ. எம். றாஸீக் மன்பயீ மௌலவீ எம்.ஐ.எம். நியாஸ் மன்பயீ ஆகிய இருவரும் 19.11.88 முதல் ஈறாக் தேச அரசுவின் புலமைப் பரிசில்களைப் பெற்று, பக்தாத் நகரிலுள்ள சதாம் ஹுஸைன் பல்கலைக் கழகத்தில் 4 வருடங்களுக்குரிய உயர் மட்டக் கற்கை நெறியை மேற்கொண்டு, சிறப்புப்பட்டதாரி வகுதியில் பயிற்சி பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரிப் பதிவெண் :- 13/1/ஏ.ச./06
இலங்கை வங்கிக் கணக்கிலக்கம் :- P.B. NO. 1
தொலை பன்னி இல :-067-7207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம்

அக்கரைப்பற்று மக்களின் சமூக, பொருளாதார, சமய கல்வி கலாசார பண்பாட்டுத் துறைகளின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பல தசாப்த காலங்களாக உழைத்து வரும் பல இயக்கங்களும், ஸ்தாபனங்களும் இன்றும் செயற்பட்டு வருகின்றன. இருந்தும் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் ஆற்றி வரும் சேவை அளவிட முடியாததொன்றாகும்.

இவ்விஸ்தாபனம் சில முன்னோடிகளின் சிந்தனையில் கருக்கொண்டு உருவாவதற்கு, சில முக்கிய காரணிகள் உள்ளன. அவற்றுள் முதன்மையானதும் வலுவானதும் ''அக்கரைப் பற்றை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு அமைப்பு வேண்டும்'' என்பதே ஆகும்; அதன் பிரகாரம் அக்கரைப்பற்றில் உள்ள அனைத்துப்பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும், அக்கரைப்பற்றின் பிரமுகர்களும், ''அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம்'' என்ற பெயரில் இவ்வமைப்பை உருவாக்கினார்கள். இவ்வமைப்பின் நோக்கங்கள் பின்வருமாறு :-

அ. இச்சம்மேளனத்தின் தீர்மானங்களை இதில் அங்கம் வகிக்கும் பள்ளிவாசல்கள் தத்தமது ஜமாஅத்தாரிடையே நடைமுறைப்படுத்துவது அப்பள்ளி வாசல்களின் கடமையாகும்.

ஆ. அனைத்துப் பள்ளிவாசல்களின் நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்துதல்

இ. அனைத்து ஜமாஅத்தாரினதும் பொது விடயங்களில் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் எடுத்தல்.

ஈ. சகல பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்கும் உழைத்தல்.

உ. தேவையான இடங்களில் புதிய பள்ளிவாசல்களை அமைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. சம்மேளனத்தின் பொதுத்தீர்மானங்களை செயற்படுத்துதல்.

எ. மார்க்கப் பிரச்சினைகள் சம்மேளனத்திற்கு வரும்போது அக்கரைப்பற்று ஜம்இய்யத்துல் உலமா சபையின் ஆலோசனைகளைப் பெற்றுத் தீர்மானித்தல் என்பனவாகும்.

அங்கத்துவமும் பொதுச் சபையும்

அக்கரைப்பற்றின் முப்பெரும் பள்ளிவாசல்களான அக்கரைப்பற்று ஜு¬ம்ஆப் பெரிய பள்ளிவாசல், பட்டின ஜு¬ம்ஆப் பள்ளி வாசல், ஜு¬ம்ஆப் புதுப்பள்ளிவாசல் ஆகிய வற்றின் நம்பிக்கையாளர் சபையிலிருந்து தலா 5 பேர் வீதம் 15 பேரும் ஏனைய 10 பள்ளிவாசல்களில் இருந்து தலா ஒருவர் வீதம் 10 பேரும் பொதுச்சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

நிருவாகக் குழு

பொதுச்சபையிலிருந்து தலைவர், செயலாளர் தனாதிகாரி, உபதலைவர் இருவர், உபசெயலாளர் ஒருவராக 6 பேரும் இவர்களுடன் மூன்று பிரதான பள்ளிவாசல்களிடமிருந்து தலா ஒருவர் வீதம் மூவருமாக 9 பேர் நிருவாகக் குழுவில் அங்கம் வகிப்பர்.


பெரிய பள்ளி வாசலின் முன்னைய முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர் தெரிவு

ஒவ்வொரு வருடமும் முஹர்ரம் மாதம் புதிய உத்தியோகத்தர் தெரிவு பதவி ஏற்பு நடைபெறும். எல்லாப் பள்ளிவாசல்களுக்கும் வாய்ப்புக் கொடுப்பதற்காக ஒரு பதவியை ஒருவர் தொடர்ந்து வகிக்க முடியாதவாறு பதவி வகிப்பு முறை பின்வருமாறு ஒரு சுழற்சி முறையில் அமைக்கப்பட்டுள்ளது அது வருமாறு :

| பதவி | 1ம் வருடம் |
|---|---|
| 1) தலைவர் | ஜும்ஆப்பெரியபள்ளிவாசல் |
| 2) செயலாளர் | பட்டின ஜும்ஆப் பள்ளிவாசல் |
| 3) தனாதிகாரி | ஜும்ஆப் புதுப்பள்ளிவாசல் |
| 4) உபதலைவர் 1 | முல்லைத்தீவு ஜும்ஆப்பள்ளிவாசல் |
| 5) உபதலைவர் 2 | காதிரிய்யா ஜும் ஆப்பள்ளிவாசல் |
| 6) உபசெயலாளர் | பள்ளிக்குடியிருப்பு ஜும்ஆப்பள்ளிவாசல் |

| 2ம் வருடம் | 3ம் வருடம் |
|---|---|
| பட்டிணஜும் ஆப்பள்ளி வாசல் | ஜும் ஆ புதுப்பள்ளி வாசல் |
| ஜும்ஆப்புதுப்பள்ளி வாசல் | ஜும்ஆப்பெரிய பள்ளி வாசல் |
| ஜும்ஆப்பெரிய பள்ளிவாசல் | பட்டின ஜும்ஆப் பள்ளிவாசல் |
| வேல மரத்து வெளி ஜும்ஆப்பள்ளி | இசங்கனிச்சீமை ஜும் ஆப் பள்ளிவாசல் |
| பட்டியடிப்பிட்டி ஜும்ஆப்பள்ளிவாசல் | நூறானியா ஜும் ஆப்பள்ளிவாசல் |
| பதுர் ஜும்ஆப்பள்ளிவாசல் | ஆலிம்நகர் ஜும்ஆப் |

இச்சம்மேளனத்தின் நடவடிக்கைகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஆலோசனை சபை என்ற ஓர் அமைப்பும் அமைக்கப்பட்டுள்ளது அக்கரைப்பற்றில் பல்வேறு துறைசார்ந்த அனுபவம் வாய்ந்த பிரமுகர்களும், கழகங்களின் இயக்கங்களின், பிரதிநிதிகளும்! அங்கம் வகிப்பர். இச் சபையானது தேவை ஏற்படும் போது சம்மேளனத்திற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி உதவும். அக்கரைப்பற்றின் எல்லா அமைப்புக்களையும் இச்சம்மேளனம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அமைப்பாக இருப்பதால், இதனால் முன்மொழியப்படும் ஆலோசனைகள் உள்ளூரிலும் வெளியூரிலும் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கப்படுகின்றன. பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இதுவோர்களமாக அமைகின்றது. அண்மையில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு, இச் சம்மேளனம் காலாகாலத்தில் ஆற்றிய சேவைகள் மிகவும் பாராட்டத் தக்கவைகளாகும். பயங்கரமான வேளைகளிலும் மிகவும் காத்திரமான முறையில் விழிப்பாக இந்திய அமைதிகாக்கும் படையினரிடமும், இலங்கை இராணுவத்திடமும் L.T.T.E, E.P.R.L.F., E.N.D.L.F. ஆகிய தமிழ்ப் போராளிக் குழுக்களுடனும், மற்றும் அரசியல் கட்சி ஆதரவாளர்களுடனும் நல்லுறவைப் பேணுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் அனந்தம் இச் சம்மேளனத்தின் பாதை செம்மையானதல்ல; கற்களும் முட்களும் நிறைந்த ஒரு கடினமாக பாதையில் சம்மேளனம் இப்போது சென்று கொண்டிருக்கின்றது - இது அடிபெயர்ந்து சாய்ந்து விடக் கூடிய பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் சிந்திக்கக் கூடிய பலர் இதில் இருப்பதால் இது சரிந்து விழாமல் பாதுகாக்கப்பட்டது. நடப்பு வருட சம்மேளனப் பொதுச்சபை உறுப்பினர்களாக பின்வருவோர் கடமை புரிகின்றனர்.


கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்றுப் பிரதேச சபைக் கட்டடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைவர் - அல் ஹாஜ் S.L.M. ஹனிபா (மௌலவி) B.A. Blitt. அவர்கள்

செயலாளர் - ஜனாப் M.S. அபுல் ஹஸன் - அதிபர் அவர்கள்

பொருளாளர், ஜனாப் M.I. அப்துல் கபூர் (J.P) அவர்கள்

உபதலைவர்கள் - ஜனாப் S.T அப்துல் அஸீஸ் அவர்கள்.
ஜனாப் I.L.M சாலி அவர்கள்.

உபசெயலாளர்கள் - ஜனாப் மௌலவி அஷ்ரப் (B.A) அவர்கள்

ஏனைய உறுப்பினர்கள் :

ஜனாப் A.M. இஸ்மாயில் ஆசிரியர் அவர்கள்.
ஜனாப் M.M உமாலெப்பை G.S.O. அவர்கள்
ஜனாப் அல்ஹாஜ்S.L. பறக்கத் அலி ஆசிரியர் அவர்கள்
ஜனாப் M.I.A.R. புகாரி RMCWE அவர்கள்
ஜனாப் M.B. மக்கீன் (J.P) அதிபர் அவர்கள்
மௌலவி ஜனாப் M.A.M. இஸ்மாயில் அவர்கள்
அல்-ஹாஜ் M.A.C றபீக் அவர்கள்
அல்-ஹாஜ் மௌலவி A.L.M. சரிப் அவர்கள்



பெரிய களப்பில் துவ்வயில் மீன்பிடிக்கும் சிறுவர் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப் K.U.M. இப்ராகிம் அவர்கள்
ஜனாப் S.M. மர்ஸூக் அவர்கள்
ஜனாப் L.T. அலாவுதீன் அவர்கள்
ஜனாப் M.C ஆதம்லெப்பை அவர்கள்
ஜனாப் M.A.M. முஸ்தபா அவர்கள்
ஜனாப் M.A மாக்கான் அவர்கள்
ஜனாப் M.A. ஹச்சிமுஹம்மது அவர்கள்
அல்-ஹாஜ் M. A. ஹனிபா அவர்கள்
ஜனாப் M. நாகூர்த்தம்பி அவர்கள்
ஜனாப் M. மீராசாகிப் அவர்கள்
ஜனாப் M.I. கமால்தீன் (அதிபர்) அவர்கள்
ஜனாப் A.C.A. கபூர் (அதிபர்) அவர்கள்

ஆலோசனை சபை உறுப்பினர்களாக பின்வருவோர் அங்கம் வகிக்கின்றனர்.

அல்-ஹாஜ் M.A.A. லெத்தீப் மௌலவி அவர்கள்
அல்-ஹாஜ் M.M. உதுமாலெப்பை மௌலவி அவர்கள்
ஜனாப் I.M. அபூப்க்கர் மௌலவி அவர்கள்
ஜனாப் S.M.M. முகிதீன் (சட்டத்தரணி) அவர்கள்
ஜனாப் S.M. ஆதம்லெப்பை (C.O) அவர்கள்
அல்-ஹாஜ் O.M.இஸ்மாயில் அவர்கள்
ஜனாப் M.A. உதுமாலெப்பை
அல்-ஹாஜ் M.M.M. ஹாசிம் (பொதுச் செயலாளர் மக்கள் காங்கிரஸ்) அவர்கள்
அல் ஹாஜ் M.M. இப்ராகிம் மௌலவி
ஜனாப் M.I.M. செயின் (அதிபர்)
ஜனாப் P.S. மீரா (அதிபர்) சமாதான குழுத்தலைவர்
ஜனாப் A.L.M. இப்ராகீம் (அதிபர்)
ஜனாப் M.S.A. மஜீத் (செயலாளர் வர்த்தக சங்கம்)
ஜனாப் A. ஆதம்லெப்பை (அதிபர்)
ஜனாப் M.H.A. சம்சும் மக்கீன்
ஜனாப் றஊப் காரியப்பர் (தலைவர் வர்த்தக சங்கம்)
ஜனாப் M.A.சகீது (J.P)

இவ்விரு சபைகளும் அக்கரைப்பற்று முஸ்லிம்களின் நலன்களைப் பேணிக்காப்பதில் பெரும் அக்கறை கொண்டு உழைக்கின்றன என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல் - ஸாஹிறு வித்தியாலயம்** **ஆரம்பம்:- 1869 ஆம் ஆண்டு**

*அதிபர்: ஜனாப் M.A.S. அகமது*

*ஆசிரியர் குழுவினர் :*

2. ஜனாப் .எம்.ஏ.எம். ஹனீபா
3. ஜனாப் ஏ. அகமது முகைய தீன்
4. ஜனாப் ஏ.எல்.எம். காஸிம்
5. ஜனாப் மௌலவி எம்.எம்.ஏ. குத்தூஸ்
6. ஜனாபா ஏ.எம். சித்தி றஸீநா உம்மா
7. ஜனாப் எம்.எச். அப்துஸ்ஸத்
8. ஜனாப் எம்.ஐ. முஹம்மத் ஹிலால்
9. ஏ. சித்தி சபீனா
10. செல்வி யூ.எல். உம்முல் முஹாபிறா

மாணவர் தொகை : ஆண்கள் : 134
பெண்கள் : 115



அக்கரைப்பற்றுப் பொது நூலகக் கட்டடம் M.I. உதுமாலெப்பை (பொத்துவில் முதல்வர்) அவர்களின் முயற்சியால் உருப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலை கருங்கொடித்திவு மெதடிஸ்த மிஷன் பாடசாலையென்ற பெயரில் இவ்வூரில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டதாகும். சந்தையருகில் இது இருந்ததால் சந்தைப் பள்ளிக்கூடமெனவும் பெயர் பெற்றது. இங்கு தமிழ். முஸ்லிம். சிங்கள மாணவர்கள் இணைந்து கற்றனர். 1985.04.15 இல் ஏற்பட்ட கலவரத்தின்போது இப்பாடசாலைக் கட்டடங்கள் எரியூட்டப்பட்டதாலும் வேறு சில காரணிகளாலும் இது முற்றாக நிரந்தர இடமாற்றஞ் செய்யப்பட்டு அக்கரைப்பற்றிலுள்ள உப்புக் கரச்சியில் நிறுவப்பட்டிருக்கும் கட்டடங்களில் நடைபெறுகின்றது. இங்கு 1929 இல் இருந்து தலைமையாசிரியராகக் கடமையாற்றிய வந்தாறு மூலையைச் சேர்ந்த திரு கே.எஸ். ஆறுமுகம், சிங்கள இனத்திற் பிறந்தும் தமிழ் மொழியைக் கற்றுத் தேறி இங்கு தமிழிற் கற்பித்த திரு. எம்.திசஹாமி திரு. வி.எஸ். பவளசிங்கம் திருமதி சோதி பவளசிங்கம், செல்வி எஸ். பாக்கியம் ஆகிய ஆசிரியப் பெருந்தகைகளின் அரிய பணி என்றும் நெஞ்சகளில் நிறைந்திருக்கக் கூடியதாகும்.

அம்பாரை மாவட்டத்தில் ஒரு கலந்துரையாடலின் போது, நாடாளுமன்றத்தின் திகாமடுள்ள உறுப்பினர்களான கௌரவ M.H.M. அஷ்றப் (தலைவர், முஸ்லிம் கொங்கிரஸ்) கௌரவ J. திவ்வியநாதன் ஆகியோர். இராஜாங்க அமைச்சர் சுவிந்ரா ரணசிங்ஹவும் காணப்படுகிறார்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புட்டம்பை முஸ்லிம் வித்தியாலயம்

ஆரம்பம்: 1956

அலுவலர்கள்
1. ஜனாப் எஸ்.எல்.எம். அபூபக்கர் (அதிபர்)
2. ஜனாப் ஏ.எம். இஸ்மாலெவ்வை
3. ஜனாப் எம்.ஐ.எம். ஜமால்தீன்
4. ஜனாப் எம்.ஐ.எம். ஸியாவுதீன்
5. ஜனாப் ஏ.எம். முஸ்தபா
6. ஜனாப் ஏ. கமால்

மாணவர் : ஆண்கள் 37
பெண்கள் 44

---

பட்டியடிப்பிட்டி அர்-றஹீமிய்யா
வித்தியாலயம்
ஆரம்பம் : 01-07-1963
அதிபர் : ஜனாப் A.M. முஹம்மது சாலிமு
ஆசிரியர் குழுவினர்:
ஜனாப்: மௌலவி A. றபீஉத்தீன்
ஜனாப்: A.Z. முஹம்மது ஹாஷிம்
ஜனாப்: A. A. A. றிபாஸ் அஸீஸ்

மாணவர் தொகை: 174

---

ஜனாப் A.K. முஹம்மதிஸ்மாயீல் லெவ்வை:- கியூபா நாட்டிலிருந்து வந்த முதுகுடியினரின் பரம்பரையாளர். கூவார் (கியூபார்) எனவழைக்கப்பட்டார். முற்றாகப் பார்வையையிழந்தவர். குர் ஆன், ஹதீஸ்களை மனனஞ் செய்தார். ஊசியில் நூலைத்தாமாகவே கோர்ப்பார். மணிக்கூடுகளின் உறுப்புகளை வேறாக்கி மீண்டும் பொருத்தித் திருத்துவார். இவர் ஜனாப் M.I.M. யூசுப் ஆசிரியரின் தந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாப் சு.லெ. சேகு இப்றாஹிம்
## (உதவி அரசு அதிபர்)
## Janab S.L. SEGU IBRAHIM
## (Asst. Govt agent)

அக்கரைப்பற்றில் முதன் முதலாக இலங்கை நிருவாக சேவை (Sri Lanka Administrative Service) த் தேர்வில் சித்தியடைந்து, உதவியரசு அதிபராக இவ்வூரிலேயே நியமனம் பெற்றவர் என்ற மகிமைக் குரியவராக இவர் விளங்குகின்றார். இந்நியமனத்தின் வாயிலாக, இம்மண் இதயக் களிப்புடன் பூரித்து நிற்கின்றது என்பதனை பல செயற்பாடுகள் நிரூபித்து நிற்கின்றன. 350 வருடச் சரித்திரப் . பின்னணியில், இவ்வூர் பெற்ற பெரும் பாக்கியங்களில் இவரது நியமனம் காத்திரமான ஓரிடத்தைப் பிடித்துள்ளது. தாயார் ஜனாபா சிக்கந்தர் லெப்பை அவ்வாக்குட்டி. தந்தையர் ஜனாப் அபூபக்கர்லெப்பை சுலைமா லெப்பை. பிறந்த நாள்: 20.03.1961 - திருமணத்தை இன்னும் மருவாதவர். உடன் பிறப்புகள் : ஜனாப்களான முஹம்மது முஸ்தபா, முஹம்மது ஹனிபா, முஹம்மது அஸீஸ், முஹம்மது உவைஸ், முஹம்மது பைறூஸ், அலி முபாரக், ஜனாபாக்களான பத்றுந் நிஸா, சஹறாப் நிஸா, ஹில்முந் நிஸா

வதிவிடமுகவரி : இல, 87, முதலியார் வீதி, அக்கரைப் பற்று - 04.

கற்ற கலையகங்கள் : அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம், முஸ்லிம் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் (திரு நெல்வேலி) இலங்கைப் பல்கலைக் கழகம் மற்றும் திறந்தவெளிப் பல்கலைக் கழகம் ஆகியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்த கலா நிலையங்கள் : ஹம்பாந்தோட்ட ஸாஹிறாக் கல்லூரி, அட்டாளைச் சேனை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று ஆயிஷா மகளிர் (பாலிகா) மகா வித்தியாலயம் ஆகியவற்றில் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக, ஹம்பாந் தோட்ட மாவட்டத் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் **(I.S.A.)** சேவைக் காலப் பயிற்சி ஆலோசகராகக் கடமை செய்தார்.

கல்வித் தகைமைகள் : இலங்கை நிருவாக சேவைத சான்றிதழ், விஞ்ஞான மாணிப்பட்டம், பட்ட மேற் கற்கை நெறி திப்ளோமா, உயர்கல்வித் தேர்வுச் சான்றிதழ், இத்தேர்வில் அதி திறமைச் சித்தி பெற்றமைக்காக, கல்வியமைச்சால் வழங்கப்பட்ட புலமைப் பரிசிற் தொகை பல்கலைக் கழகத்தின் இறுதித் தேர்வு வரை, தொடர்ந்த பணக்கொடையாக நீடிக்கப்பட்டது ஒரு விசேட அம்சமாகும்.

உயர் நிலை : இலங்கை நிருவாக சேவைத் தேர்வில், கிழக்கு மாநிலத்திலேயே ஆகக்கூடிய உச்சப்புள்ளியைப் பெற்றுக் கல்விச் சாதனையொன்றைப் படைத்தவர்.




கண்ணியமிக்க. திரு. J. திவ்வியநாதன் M.P. (அம்பாறை மாவட்டம்) பொது மக்கள் அளித்த வரவேற்பின் போது உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


கருங்கொடித்தீவு பிரதேசச் செயலகத்தில் தற்போது உதவி அரசாங்க அதிபராகச் சேவையாற்றும் ஜனாப் சேகு இப்றாஹிம் தமது நடை, உடை, பாவனைகளின் செயலாற்றல் மூலம், மக்களுக்கு முன் மாதிரியாய்த் திகழ்கின்றார். கல்வித் திறமையோடு கூடிய மார்க்க அனுட்டானங்கள், இனிய, எளிய வாழ்வமைப்பு என்பன வாயிலாக இவருக்குச் சமூகத்தின் மத்தியில் ஒருயர்வான மதிப்பும், மரியாதையும் கிடைத்து வருவதை இங்கு குறிப்பிட்டாதல் வேண்டும்.

அக்கரைப்பற்று மண்ணின் மைந்தனான இவருக்கு, ''ஏஸ் விளையாட்டுக் கழகம்'' அளித்த பாராட்டு நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட பத்திரத்தில், காணப்படும் பாராட்டுச் சரத்தின் சில அடிகள் வருமாறாகும் :-

ஏஜண்டுத் துரையான இம் மண்ணின் முதல் மைந்தன்
இப்றாஹிம்.
ஏஜண்டுத்துரையானான் இவ்வன்னை பெற்ற மகன்
பாசத்தோடன்னவனைப் பாராட்டிக் கௌரவிக்க
''ஏஸ்'' கழகம் முன்னிற்கும் இதுவோர் முதற் தடயம்
''ஏஸ்'' என்றால் முதன்மை இதிலும் அது முதன்மை
சேகு இப்றாஹிம் சிறப்பை அவன் உயர்வை ''தாய்
அவ்வா'' கேட்டுத் தான் குளிர்வாள் இங்கின்று.



செவ்வன் M. A. [illegible]



...ப் M.A. காதர் முகையதீன் - (முஸ்லிம் பாடசாலைக்
...் கல்விப் பணிப்பாளர், தலைவர் - கல்வி அமைச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயப் பெற்றோர், ஆசிரியர், மாணவர், நலன்விரும்பிகள் குழுவினரால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவின் போது வழங்கப் பெற்ற பாராட்டு மடலின் சிலவரிகள் :-

அறியாதார் குறை களைந்த ஆசானாய்ப் பணிசெய்தாய்
நெறி பிறழா வாழ்விற்கு நிலைக் களனாய் நீ நின்றாய்
முறிவில்லா மார்க்க நெறி முனைத்தேற நீ வந்தாய்
குறியுனது மக்கள் பணி கொள்கையுயர் குணவாளா!

.................................................................

இப்படியாகப் பல பாராட்டுகளைப் பெற்ற ஜனாப் சேகு இப்றாஹிம், உதவி அரசாங்க அதிபர் அவர்கள், சொந்த ஊராகிய, தமது மண்ணுக்குச் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறார்.


கிராம மக்கள் குட்டைகளிலிருந்து தண்ணீர் பெறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்று - எம். பௌஸர்

இவ்வூர் புதுக் கவிதைகளின் முன்னோடி சமுதாய அவலங்கள், பாட்டாளிகளின்பசிக் கொடுமை, உயர் மட்டப் போலிக் கனவான்களின் சமுதாயச் சவாரி, திருட்டுக் கூட்டங்கள், திருகு தாளங்களின் தெப்பிராட்டியத் தனங்கள் போன்ற இன்னோரன்ன கருக்களின் அடிமட்டத்திலிருந்து, தனது புதுக் கவிதைச் சுருதியை மீட்டிவருவதை, இவரது கவிதைகள் உள்ளோட்டமாகக் கொண்டுள்ளன.

அப்துல் றகுமானின் கவிதைகள் பற்றி அண்மையில் ஓர் அரிய விமரிசனக் கட்டுரையைத் தினகரனில் எழுதியதன் மூலம், இவரது புலமையின் ஊடகம் காத்திரமான கண்ணோட்டத்தின் பாதை நோக்கிச் செல்வதைக் காணலாம்.

''இன்றைய வானம் பாடிகள் குழு'' என்ற ஓரமைப்பில் இணைந்தும், பத்திரிகை யாசிரியர் மையத்தில் உறுப்பாகியும் கலைப் பணி செய்து வருகிறார். மிகவும் முற்போக்கான துடிப்புள்ள இளைஞர். தற்போது ''தடம்'' எனும் முற்போக்கு இலக்கிய சஞ்சிகையை, உயிர்ப்பான கலை இதழாக அச்சில் கொணர, வானம்பாடிகளுடன் அயராது செயற்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் பத்திரிகை வாயிலாக 1986களில் இருந்து எழுத்துலகுக்கு அறிமுகமாகியுள்ள பௌஸரின் 50க்கும் மேற்பட்ட கவிதைகள், பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. 1969-03-15இல் பிறந்தவர். தேசிய இதழான தினகரனில் கீழ் வரும் கவிதை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## வாழ்வுக்காக ஒரு தரிசனம்

வா
வாழ்க்கையைக் காட்டுகி
றேன்.
மனித வாழ்க்கையென்ன
லேசுப்பட்டதா?

●●

ஏதோ
மானசீகமான
தேடலின் முடிவில்
நீயும் நானும்
சேர்ந்திருக்கிறோம்
பிரிவென்பது
உன்னைப் பொறுத்தே

A. M. M. றியால்



●

உடர் காதலும் நீயும்
பரிசுத்த மானதென்றால்
என் கைகளைப் பிடித்த
படி
என்னுடன் வா
வாழ்வின்
மறு பக்கத்தைக்
காட்டுகின்றேன்.

●●

உனக்குத் தெரிந்ததெல்
லாம்
மகான்கள்
மன்னர்கள்
அரண்மனைகள்
அந்தப்புரங்கள் தான்

●●

வா
நான் தந்த
காதலினூடே
என் ஏழ்மையின்
ஜன்னலின் வழியே
பகலிலோர் இரவைப் பார்
நட்சத்திரங்களும்
மேகமுமில்லாத
வானத்தைப் பார்

●●

உனக்குத் தெரிவதென்ன?
மகான்களா?
மன்னர்களா?
அரண்மனைகளா?
அந்தப்புறங்களா?
கோட்டைகளா?
கொடி மரங்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ
என்னிடம்
எதை எதிர்பார்த்திருப்
பாய்?
நான் தந்த காதலினூடே

மாறாக
என் ஏழ்மையில
ஜன்னலினூடே
இப்போது
எதைக் காண்கிறாய்?

●●

ஏழ்மை
ஏழைகளின் கண்ணீர்
மூச்சைத் திணறடிக்கும்
பசி
குடிசை
குச்சி விளக்கு
இவைகள்தான்
எங்கள் வாழ்வின்
கருமைகள்
புயலடித்தாலும்
வெள்ளம் வந்தாலும்
கரைந்து,
கலைந்து போகாத
நரகின் சுவர்கள்தான்
இவை

●●

இதனுள்
உன் ஆயுளை
அடக்கிக் கொள்ளலா
மென்றால்
என்னுடன் சங்கமித்து
என்னை நேசி
மாறாக
மூச்சுத் திணறி
செத்துப் போய் விடுவோ
மென
நினைத்தால்
போய்விடு

●●

மனித வாழ்க்கையென்ன
அப்படி
லேசுப்பட்டதா?



பெருவெள்ளத்தின் போது முதலைகளை வேட்டையாடுதல் வழக்கம். இங்கு வேட்டையாடப்பட்ட முதலையொன்றும், அதைச் சுட்டவரும் காணப்படுகின்றார்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் வெளியிட்ட நூல்கள் :-

1. ஈழத்து முஸ்லிம் புலவர்கள் (ஸ்ரீ லங்கா சாஹித்திய மண்டலப் பரிசில் பெற்றது)
2. புயல் செய்த பேரழிவு (கவிதை)
3. அஷ்ஷெய்க் அப்துஸ்ஸமத் (சின்ன) மௌலானா வலீ சரிதை
4. அக்கரைப்பற்று வரலாறு

வெளிவரவிருக்கும் நூல்களிற் சில :

1. கருங்கொடித்தீவு மான்மியம்
2. கிராமிய இலக்கியக் கருவூலம்
3. கிராமியக் கலைக் களஞ்சியம்
4. கிழக்கு மாகாண மண்வளச் சொற்கள்
5. நாட்டார் கவிகளின் நவரசம்
6. அக்கரைப்பற்றின் கலை வளம்
7. இலங்கையில் முஸ்லிம்களின் குடிவரவு முதலியன.



சாகமம் குளத்தில் காணப்படும் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்கொடித்தீவு மான்மியம்

ஹிறா பப்ளிகேஷன்ஸ் நிறுவகம் வெளியிடவிருக்கும் இந்நூலில் இடம்பெறும் விடயங்கள் வருமாறாகும். அவை :-

* பொது விளக்கம், புதிய கண்ணோட்டம்
* சனப்பரம்பல், வாழ்விடவமைவு, வளப்பம்
* சடங்குகள், பரம்பரைச் செயற்பாடுகள்
* கலியாணச் சம்பிரதாயங்கள், சபலங்கள். சலிப்புகள்
* புதினெட்டுக்குடிகளின், வரலாறும், வழக்காறும்
* பள்ளிவாசல்-கோயில்-தேவாலயம்-விகாரைகளின் குறிப்புகள்
* கல்வி, கலை வளர்ச்சி, பரம்பல், பண்பாடு
* மகளிர் கல்வியின் பங்களிப்பும், பரிதாபமும்
* புலவர்கள், கவிஞர், பாவலர்
* கவி மலர் சொரியும் காரிகையர், கன்னி மகளிர்
* கிராமியக் கலை வடிவங்கள், களங்கங்கள்
* மண்வளச் சொற்கள், மணியான பழமொழிகள்
* பழையகாலப் பட்டப் பெயர்கள், பரம்பரைச் சிறப்புகள்
* பொதுப்பணிக்கான மையங்கள், மனிதவளம்
* தீரர், திறமையாளர், மதிப்பிற்குரியோர்
* பட்டம் பெற்றோர், படியேறியோர்
* பாடசாலைகளின் வளர்ச்சி, மறுமலர்ச்சி
* பல்துறைத் தகவல்கள், தகுதிகள், தரமிறக்கம்
* முற்கால, இடைக்கால, தற்கால நிலைப்பாடு
* ஊர்முன்னேற்றமும்-முறிவுகளும் முனைப்புகளும்
* வேறும் பல தரப்பட்ட சுவையான - சூடான - அவலமான - ஆனந்தமான - சரிவான - சங்கடமான - புதுமையான - பூரிப்பான சம்பவங்கள் அனேக புகைப்படங்கள், புள்ளி விபரங்களைக் கொண்டிருக்கும்.



இளம் சமூக சேவையாளரும், மருதுவெட்டுவான் வாசிகசாலை, பாலர் பாடசாலைகளின் அமைப்பாளருமான திரு A. Bஅதாவுர் றஹ்மான் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரும்பரசன் - சங்கரதாஸ் சாண்டோ - வீரச் சிருடையுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைராசிக்காரி சிறந்த மருத்துவச்சி
திருமதி சின்னமுத்து



M. A. சாக்கிர்

தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் கௌரவ A. அமிர்தலிங்கமும் துணைவியார் மங்கையர்க்கரசியும் வரவேற்கப்படுகின்றனர். இடதுபுறம் அறப்போர் முன்னணித் தலைவர் திரு. W. அரியநாயகம் மாலையுடன் காணப்படுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒப்பிலாச் சட்டமேதையும், தமிழ்க்கொங்கிரஸ் தலைவருமான கொரவ G.G. பொன்னம்பலம் ஒரு கூட்டத்தின் போது, மங்கள விளக்கேற்றுகிறார்., வலது கோடியில் மக்கள் தொண்டரும், பிரமுகருமான திரு நடராசா தர்மலிங்கம் வரவேற்கப்படுகிறார்.

டொக்டர் P. அருணகுலசிங்கம் J P பட்டம் பெற்றகாலை மேலதிக அரசு அதிபர் திரு M. சிவானந்தன் தலைமையில் வரவேற்புக் கூட்டம், வலது கோடியில் பிரமுகரான திரு K. V. சோமசுந்தரம் காணப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் உற்சவமொன்றின் போது பக்தர்கள் காவடியாட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

வர்த்தகப் பிரமுகரான திரு எல். எச். விக்றர் சில்வா அரசு வைத்திய சாலையிலுள்ள நோயாளருக்கு உணவுப் பொட்டலங்களை வழங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரோமன் கதலிக் திருச்சபைக்கான பணிகள், பொதுப் பணிகள் ஆகியவற்றிற்காக தம் உடல், பொருள் ஆவிகளை அர்ப்பணித்துக் கொண்டிருந்த ஞக் சுவாமிகள்

பொது நூலகம்
31 AUG 1992
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுக்குட்படுத்திய நூல்கள்

உவைஸ். M.M.- இஸ்லாமியத் தென்றல்
கந்தையாV.C.- மட்டக்களப்புத தமிழகம்
கமாலுத்தீன் S.M.- பர்பரீன்
கலைக்கதிர் (1967)- தமிழ்நாடு
நடராசா F.X.C.மட்டக்களப்பு மான்மியம்
பக்கீர் ஜஃபர். P.C.-அ.ப. கல்வி வட்டாரத்தில் விஞ்ஞானக் கல்வி விருத்தி
பக்கீர் மெஹ்தாபலிஷாகலீபா- பக்கீர் மிஸ்கீனலிஷா மாபூத் (வலி) தர்ஹா சரித்திரம்.
வடலங்கா புத்தகசாலை- சமூகக் கல்வி
சிங்கார வேலு முதலியார்.A.-அபிதான சிந்தா மணி
புலியூர்க் கேசிகன் உரை- கலித் தொகை
முஹியத்தீன். M.I.M.-இலங்கையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப் படுகின்றனர்
மெண்டிஸ். G.C.- நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்
கொடிறிங்ரன்.H.W.- இலங்கையின் சுருக்க வரலாறு.

Baron umar rolf Ehrenfels "Mother right in India" Edgar Thuriston "Castes and Tribes of Southern India" Kailasapathi. K-Tamil Heroic Poetry-oxford university. Trubner "India" - oriental Service.

### கட்டுரைகள்

ஜெமீல். S.H.M.- மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் கல்வி (கலையமுது). 1988)
அ.ப. கோட்டக்கல்விச் செயலகம்- கல்வித்தினச் சிறப்பு மலர். (1988)
அ.ப. பொதுசன நூலகம்- சிறப்பு மலர் (22.03.1987)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவேடுகளின் தரவுகள்

மட்டக்களப்பு, கண்டி, பதுளை, அம்பாரக்கச்சேரிகள்- பல்வகைப்பதிவுகள்
குடிசனமதிப்புத் திணைக்களம் - புள்ளிவிபரம்
நில அளவையாளர் திணைக்களம் - சில பதிவுகள்

## செவ்வித் தகவல்கள்

ஐம்பதுக்கும் மேற்பட்ட பெரியார், பிரமுகர், மூத்தோர் பெண் கவிதாமணிகள், கலைஞர், மற்றுட் தகவலாளர்களிடம் பெறப்பட்ட பல்வகைத் துறை சார்ந்த காத்திரமான சம்பவங்கள், பாடல்கள் முதலியன இந்நூற்றயாரிப்புக்குதவின்.

## கையேடுகள்

காசிம் மரைக்காயர் M.M. (பொலொன்னறுவ)- வதனமார்காவியம்
காரியப்பர் M.S.சரித்திரக்குறிப்பு
சம்புநாதப் போடி. T.- முக்குவர் கட்டுப்பாடு
பூபாலபிள்ளை (உதயகவி) அ- சடங்குவகைகள்
நீலாவ்ணன் கவிஞர். - தமிழ்க்குடிகளின் சம்பிரதாயங்கள்
முஹம்மதபூபக்கர் M.V.V.- பொலிப்பாடல்கள்

*எல்லாம் இனிதே நிறைக.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PLAN OF AKKARAI PATTU

அக்கரைப்பற்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITHDRAWN
PUBLIC
DATE: 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org